ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

கீதா வ்யாக்யானம்

(பதின்மூன்று, பதினான்கு, பதினைந்தாம் அத்தியாயங்கள்)

[ப4க3வத்3 கீ3தையும், அதற்கு ஸ்ரீராமாநுஜ பா4ஷ்யமும், ஆளவந்தார் அருளிய கீ3தார்த்த2 ஸங்க்3ரஹமும், வாதி3கேசரி ஜீயர் அருளிய பகவத்கீதை வெண்பாவும், ஸ்ரீவேதா3ந்த தே3சிகர் அருளிய கீதார்த்தசங்கிரகமும், 'ஸுத3ர்ஶனம்' ஆசிரியர் இயற்றிய கீ3தார்த்த2 விவரணம் என்னும் தமிழ் வியாக்கியானமும், கீ3தாஶ்லோகார்த்த2ச் சுருக்கமும் அடங்கியது.]

கிடைக்குமிடம்

S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் (ஸுதர்சனர்),
'ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்' ஆசிரியர்,
3B, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி–620 017.

ஸ்ரீ. ரா. ஸ்ரீ. கி. ஸ்ரீநிவாஸய்யங்கார் குடும்ப தர்ம சொத்துக்களின் ஆதரவில் வெளியிடப்பெற்றது.

விலை ரூ. 20-00] 1990 [தபாற்கூலி ரூ 2-00

ஸ்ரீநிவாஸம் பிரஸ், 8, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-17.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

உலகிலுள்ள மத நூல்களில் மிகவும் புகழ்பெற்று விளங்குவது ப₄க₃வத்₃கீ₃தையாகும். அந்நாள் தொடங்கி இந்நாள் வரையிலும் இதற்கு நம் நாட்டில் எழுதப் பட்டிருக்கும் பாஷ்யங்களும், வியாக்கியானங்களும் கணக்கில் அடங்காதவை. இந்த நூற்றாண்டில் இந்த பகவத் கீதை உலகிலுள்ள பெரும்பாலான பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பண்டைக் காலத்தி லிருந்தே "கீதோபநிஷத்" என்று இது உபநிஷத்துக்கு ஸமமாகச் சான்றோர்களால் வழங்கப்பட்டது. நம் நாட்டில் பலபல மதங்களைப் பரப்பிய வைதிக மதா சார்யர்கள் அனைவரும் உபநிஷத்துக்கள் ப்₃ரஹ்ம ஸூத்ரம், கீ₃தை ஆகிய மூன்றுக்கும் ப₄ாஷ்யம் எழுதி, தங்கள் மதத்தை நிலைநாட்டுவதைக் கடமையாகக் கொண்டனர். அதனால் இம்மூன்றும் "ப்ரஸ்த₂ாந த்ரயம்" (வைதிகமதத்துக்கு முக்கிய ஆத₄ாரமான மூன்று க்₃ரந்த₂ங்கள்) என்று வழங்கப்பட்டன. நெடுங் காலமாகவே மற்ற இரு ப்ரஸ்த₂ானங்களைக் காட்டிலும் அதிகமான ப₄ாஷ்யங்கள் இந்த கீதைக்கே அமைந்தன. சரம ஸ்லோக கீ₃தாப₄ாஷ்ய தாத்பர்ய சந்த்₃ரிகையின் கடைசியில் "பலபல மதங்களைப் பின்பற்றும் நூற்றுக் கணக்கானவர்கள் கீ₃தைக்கு ப₄ாஷ்யம் இட்டிருக் கிறார்கள்" என்று ஸ்ரீவேதாந்ததேசிகர் அருளிச் செய்வ திலிருந்து இதை உணரலாம்.

இப்படிப் பல பாஷ்யங்கள் அமைந்திருந்தபோதிலும் கீ₃தைக்கு சங்கரரும், ஸ்ரீராமாநுஜரும், மத்₄வரும் செய்த ப₄ாஷ்யங்கள் இன்று நம் நாட்டில் மிகுந்த ப்ரசாரத் திலுள்ளன. வடமொழியறிவும் சாஸ்திரஞானமும் மிகவும் குறைந்து வருகையால், கீ₃தைக்கு ஸ்ரீராமாநுஜர் அருளிய ப₄ாஷ்யத்தைத் தழுவி, அந்த ப₄ாஷ்யத்துக்கு ஸ்ரீவேத₃ாந்த தேசிகர் அருளிய டீகையான தாத்பர்ய சந்த்₃ரிகையின் அர்த்த₂த்தையும் உள்ளடக்கித் தமிழில் விரிவாக ஓர் வியாக்கியானம் எழுத வேண்டும் என்னும் எண்ணத்தாலே "ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்"

பத்திரிகையில் சார்வரி–ஸ்ரீ மார்கழி மாதம் முதல், மாதம் எட்டு பக்கங்கள் கொண்ட ஒரு பாரமாகத் தொடர்ந்து அச்சிட்டு வெளியிடலானேன். ஆளவந்தார் அருளிய கீ₃தார்த₂ஸங்க்₃ரஹம், வாதி₃கேஸரி ஜீயர் அருளிய பகவத்கீதை வெண்பா, வேதா₃ந்த தே₃சிகர் அருளிய கீதார்த்தசங்கிரகம் ஆகியவையும் பதவுரையோடு அதில் இணைக்கப் பெற்றன. இந்த வ்யாக்₂யானத்தில் முதல் ஷட்கம் (முதல் ஆறு அத்தியாயங்கள்) சுமார் ஆயிரம் பக்கங்கள் கொண்டதாக, பிரமாதீச சித்திரை ரேவதியில் (1—5—73) வெளியிடப்பெற்றது. இரண்டாவது ஷட்கத்தில் ஏழு, எட்டு அத்தியாயங்களின் வியாக்கியானம், கைவல்யத்தைப் பற்றிய பல பக்ஷங்களை ஆராய்ந்து ஶ்ருதி ஸ்ம்ருதிகளுக்கும், ஆழ்வார்களின் ஸ்ரீஸூக்திகளுக்கும், ஸ்ரீப₄ாஷ்ய கீ₃தாப₄ாஷ்யாதி₃களுக்கும், தி₃வ்ய ப்ரப₃ந்த₄ வியாக்கியானங்களுக்கும் பொருந்திய பக்ஷம் எது என்று நிர்ணயிக்கும் "கைவல்ய ஸித்₃த₄ாஞ்ஜனம்" என்னும் நூலோடு கூட, காளயுக்தி பங்குனி மாதம்(23—3—79)இல் வெளியிடப்பட்டது. இரண்டாவது ஷட்கத்தின் எஞ்சிய பகுதி குரோதன ஐப்பசித் திருமூலத்தில் (15—11—85) வெளியிடப்பட்டது.

மூன்றாவது ஷட்கத்தில் 'சித், அசித். ஈஶ்வரன்' என்னும் மூன்று தத்துவங்களைப் பற்றிய பல விஷயங்களைச் சொல்லும் முதல் மூன்று அத்தியாயங் களின் வியாக்கியானம் பிரமோதூத–ஸ்ரீ சித்திரைப் பௌர்ணமியில் (9—5—90) வெளியிடப்படுகிறது. கர்ம ஜ்ஞான ப₄க்தியோக₃ங்களைப் பற்றிய பல விஷயங்களைக் கூறும் கீ₃தாசாஸ்திரத்தின் கடைசி மூன்று அத்தியா யங்களின் வியாக்கியானம் எம்பெருமானுடைய அருளாலும் எம்பெருமானாருடைய அருளாலும் சில வருஷங்களில் நிறைவடைய வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம்.
ஸ்ரீவைஷ்ணவ தாஸன்,
S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,
(ஸுதர்சனர்)
ஸ்ரீவைஷ்ணவஸுதர்சனம் ஆசிரியர்.

பிரமோதூத
சித்திரைப்பௌர்ணமி
9—5—'90

ஸ்ரீ:

ஆளவந்தார் அருளிய
கீ₃தார்த்த₂ ஸங்க்₃ரஹம்
[பதின்மூன்றுவது அத்தியாயத்தின் சுருக்கம்]

देहस्वरूपमात्माप्तिहेतुरात्मविशोधनम् ।
बन्धहेतुर्विवेकश्च त्रयोदश उदीर्यते ॥ १७ ॥

17. தே₃ஹஸ்வரூபமாத்மாப்திஹேதுராத்மவிஶோத₄நம் ।
ப₃ந்த₄ஹேதுர்விவேகஶ்ச த்ரயோத₃ஶ உதீ₃ர்யதே ॥

தே₃ஹஸ்வரூபம் — தே₃ஹத்தின் ஸ்வரூபமும், **ஆத்மாப்திஹேது:** — ஜீவாத்ம ஸ்வருபத்தை அடைவதற்கு உபாயமும், **ஆத்மவிஶோத₄நம்**—ஆத்மாவை ஆராய்ந்தறிதலும், **ப₃ந்த₄ஹேது:**—(ஆத்மாவுக்கு அசித்தோடு) தொடர்பு ஏற்படுவதற்குக் காரணமும், **விவேக: ச**—(ஆத்மாவை அசித்திலிருந்து) பிரித்தனுஸந்தி₄க்கும் முறையும், **த்ரயோத₃ஶே**—பதின்மூன்றுவது அத்தியாயத்தில், **உதீ₃ர்யதே**—சொல்லப்படுகிறது.

வாதிகேஸரி ஜீயர் அருளிய
பகவத்கீதை வெண்பா—அத்தியாயம் 13
க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞ விபாகயோகம்
மூன்று ஷட்கங்களின் ஸாரப்பொருள்

கன்ம முயிருணர்வாற் கட்டவரு முன்னாறு
நன்மையிறை பத்தி நடுவாறு—தன்மையுடன்
காயமுயி ரீசன் கருமமறி வன்புவகை
யேயவமைந் தேலுமீ றாறு.

முன் ஆறு—முதல் ஆறு அத்தியாயங்கள், *கட்டவரும்*—முயற்சி செய்ய உண்டாகும், *கன்மம் உயிருணர்வால்*—கர்ம ஜ்ஞான யோக₃ங்களால், *ஏய அமைந்து ஏலும்* — பொருந்தி விளங்கி நிற்கும், *நடு ஆறு*—நடுவிலுள்ள ஆறு அத்தியாயங்கள், *நன்மை இறை பத்தி* — சிறப்புமிக்க பரமாத்ம ப₄க்தியோக₃த்தால், *ஏய அமைந்து ஏலும்*—பொருந்தி விளங்கி நிற்கும், *ஈறு ஆறு*—கடைசியிலுள்ள ஆறு அத்தியாயங்கள், *காயம் உயிர் ஈசன் கருமம் அறிவு அன்பு வகை*—உடல், உயிர், ஈச்வரன், கர்ம ஜ்ஞான ப₄க்தியோக₃ங்கள், *தன்மையுடன்*—இவற்றின் தன்மைகளோடு, *ஏய அமைந்து ஏலும்*—பொருந்தி விளங்கி நிற்கும்.

श्रीः

अथ त्रयोदशोऽध्यायः

॥ भा ॥ पूर्वस्मिन् षट्के परमप्राप्यस्य परस्य ब्रह्मणो भगवतो वासुदेवस्य प्राप्त्युपायभूतभक्तिरूपभगवदुपासनाङ्गभूतं प्राप्तुः प्रत्यगात्मनो याथात्म्यदर्शनं ज्ञानयोगकर्मयोगलक्षणनिष्ठाद्वयसाध्यमुक्तम् ।

பதின்மூன்றுமத்தியாயத்தின் பொருள்

ஈங்கு முதலாகி யேய்ந்தபதின் மூன்றுமோத்
தாங்குடல மாருயி ராப்புறுத—னீங்குநெறி
தன்மையுடன் மற்றுந் தகைமைபெறச் சோதித்து
நன்மையுடன் சொல்லு நயந்து.

ஈங்கு—இந்த கடைசி ஷட்கத்தில், *முதல் ஆகி ஏய்ந்த பதின்மூன்றும் ஒத்து* — முதலாவதாகப் பொருந்தியிருக்கும் பதின்மூன்றும் அத்தியாயம், *ஆங்கு* — இந்த ஸம்ஸாரத்தில், *ஆர் உயிர் உடலம் ஆப்பு உறுதல்*—ஜீவாத்மாவானது உடலிலே கட்டுப்படுவதையும், *நீங்கு நெறி* — அதிலிருந்து விடுபட வழியையும், *தன்மையுடன்*—அந்த தே₃ஹாத்மாக்களின் ஸ்வரூபத்தோடு *மற்றும் தகைமை பெற* — மற்றுமுள்ள ஸ்வப₄ாவங்களையும், *சோதித்து*—ஆராய்ந்து, *நன்மையுடன் நயந்து சொல்லும்*—சிறப்பாக விருப்பத்தோடு கூறும்.

ஸ்ரீக்ருஷ்ணஸ்வாமி தா₃ஸன் இயற்றிய கீ₃தார்த்த₂ விவரணம்—பதின்மூன்றும் அத்தியாயம்

ஷட்கத் தொடர்பும், அத்தியாயத் தொடர்பும்.

கீ₃தையின் முதல் ஆறு அத்₄யாயங்களாகிற ப்ரத₂மஷட்கத்தின் தாத்பர்யம் "ஜ்ஞாநகர்மாதமிகே நிஷ்டே₂ யோக₃லக்ஷ்யே ஸுஸம்ஸ்க்ருதே । ஆத்மாநுபூ₄திஸித்₃த₄யர்ததே₂ பூர்வஷட்கேண சோதி₃தே ॥" என்று கீ₃தார்த்த₂ ஸங்க்₃ரஹத்தில் (ஸ்லோகம் 2) கூறப்பட்டது. இதிலிருந்து பரமப்ராப்யனும் பரப்₃ரஹ்மமாய் ப₄க₃வானுன வாஸுதே₃வனை அடைவதற்கு உபாயமாயிருக்கும் ப₄க்தியோக₃ம் எனப்படும் ப₄க₃வது₃பாஸனத்திற்கு அங்க₃மாயிருப்பது ப்ராப்தாவான (அடைபவனுன) ஜீவாத்மாவை உள்ளபடி அறிவது என்றும், அந்த ஆத்ம

मध्यमे च परमप्राप्यभूतभगवत्तत्त्वयाथात्म्यतन्माहात्म्यज्ञानपूर्वकैकान्तिकात्यन्तिकभक्तियोगनिष्ठा प्रतिपादिता। अतिशयितैश्वर्यापेक्षाणामात्मकैवल्यमात्रापेक्षाणां च भक्तियोगस्तत्तदपेक्षितसाधनमिति चोक्तम्। इदानीमुपरितने षट्के प्रकृतिपुरुषतत्संसर्गरूपप्रपञ्चेश्वरतद्याथात्म्यकर्मज्ञानभक्तिस्वरूपतदुपादानप्रकाराश्च षट्कद्वयोदिता विशोध्यन्ते। तत्र

ஸாக்ஷாத்காரத்தை ஜ்ஞானயோக3ம் கர்மயோகம் எனப்படும் இரண்டு உபாயங்களையும் பரிபூர்ணமாக அனுஷ்டி2ப்பதனால் பெறலாம் என்றும், இவ்விரு உபாயங்களால் ஆத்ம மாத்ரானுப4வ ரூபமான கைவல்ய மோக்ஷத்தையும் பெறலாம் என்றும் விளங்குகிறது. கீ3தையின் நடு ஆறு அத்4யாயங்களாகிற மத்4யம ஷட்கத்தின் தாத்பர்யம் "மத்4யமே ப4க3வத்தத்வயாதா2த்ம்யாவாப்திஸித்3த4யே। ஜ்ஞாநகர்மாபி4நிர்வர்த்யோ ப4க்தியோக3: ப்ரகீர்த்தித:॥" என்று கீ3தார்த்த2 ஸங்க்3ரஹத்தில் (ஶ்லோகம் 3) சொல்லப்பட்டது. இதிலிருந்து பரமப்ராப்யனை ப4க3வானைப்பற்றிய உண்மை அறிவையும், அவனது பெருமையையும் முன்னிட்டுக்கொண்டு, வேறு பயன் கருதாததாய் இடைவிடாது செய்யப்படுவதான ப4க்தியோக3ம் கர்மஜ்ஞானயோக3ங்களால் உண்டாகிறது என்றும், ப4க3வத3னுப4வத்தை விளைக்கிறது என்றும் விளங்குகிறது. அத்துடன்— மிகச் சிறந்த ஐஶ்வர்யத்தை விரும்புகிறவர்களுக்கும் ப4க3வத3னுப4வமும், அசித3னுப4வமுமற்ற ஆத்மமாத்ரானுப4வமாகிற கைவல்யமோக்ஷத்தை விரும்புகிறவர்களுக்கும் ப4க்தியோக3மானது அவரவர் விரும்பும் பயனுக்கு ஸாத4னமாகிறது என்னும் விஷயமும் இந்த மத்4யம ஷட்கத்தில் கூறப்பட்டது. இவ்விஷயம் கீ3தார்த்த2 ஸங்க்3ரஹத்திலும் "ப4க்தியோக3ஸ்தத3ர்த்தீ2 சேத் ஸமக்3ரைஶ்வர்யஸாத4நம்। ஆத்மார்த்தி2 சேத் த்ரயோப்யேதே தத்கைவல்யஸ்ய ஸாத4கா:॥" (ஶ்லோகம் 7) [தலைசிறந்த ஐஶ்வர்யத்தை விரும்புகிறவனாகில் ப4க்தியோக3ம் அதை ஸாதி4த்துக்கொடுக்கும். ஆத்மமாத்ரானுப4வமாகிற கைவல்யமோக்ஷத்தைப்பெற விரும்புகிறவனாகில் கர்ம ஜ்ஞான ப4க்தியோக3ங்களாகிற மூன்றில் ஒவ்வொன்றுமே அதை ஸாதி4த்துக்கொடுக்கும்] என்றுசொல்லப்பட்டது. இனி, கடைசி ஆறு அத்தியாயங்களாகிற இந்த மூன்றாவது ஷட்கத்தின் தாத்பர்யம் "ப்ரதா4நபுருஷவ்யக்தஸர்வேஶ்வர விவேசநம்। கர்மதீ4ர்ப4க்திரித்யாதி3: பூர்வஶேஷோऽந்திமோதி3த:॥" [ஶ்லோகம்4] என்று கீ3தார்த்த2ஸங்க்3ரஹத்தில் சொல்லப்பட்டது. இதிலிருந்து மூலப்ரக்ருதி, ஜீவாத்மதத்வம் இவையிரண்டும்

तावत् त्रयोदशे—देहात्मनोस्स्वरूपम्, देहयाथात्म्यशोधनम्, देहवियुक्तात्मप्राप्त्युपायः, विविक्तात्मस्वरूपसंशोधनम्, तथाविधस्यात्मनश्चाचित्संबन्धहेतुः, ततो विवेकानुसन्धानप्रकारश्चोच्यते।

கூடியிருக்கும் ஸ்தூ2ல உலகம், ஸர்வேஶ்வரன் இவற்றைப்பற்றிய உண்மையறிவு, கர்மயோக3ம், ஜ்ஞானயோக3ம், ப4க்தியோக3ம் ஆகியவற்றின் ஸ்வரூபம், அவற்றைக் கைக்கொள்ளும் வகைகள் ஆகியவைபற்றி முன்னிரண்டு ஷட்கங்களிலும் சொன்ன விஷயங்கள் மேலும் ஆராய்ந்து ஐயம் திரிபற இந்த ஷட்கத்தில் விளக்கப்படு கின்றன என்று விளங்குகிறது.

இனி, இந்தப் பதின்மூன்றாவது அத்4யாயத்தின் தாத்பர்யம் "தே3ஹஸ்வரூபம், ஆத்மாப்திஹேது:, ஆதமவிஶோத4நம் / ப3ந்த4 ஹேது: விவேகஶ்ச த்ரயோத3ஶ உதீ3ர்யதே //" [ஶ்லோகம் 17] என்று கீ3தார்த்த2 ஸங்க்3ரஹத்தில் விளக்கப்பட்டது. இதிலிருந்து—தே3ஹம் ஆத்மா ஆகியவற்றின் ஸ்வரூபமும், தே3ஹம் ஆத்மா ஆகிய இரண்டின் உண்மையான தன்மைகள் பற்றிய ஆராய்ச்சியுடன் கூடிய விளக்கமும், தே3ஹத்தினின்று அடியோடு நீங்கிய ஆத்மாவையடை வதற்கு உபாயமும், ஆத்மா அநாதி3காலமாக அசித்தோடு கட்டப் பட்டிருப்பதற்குக் காரணமும், ஆத்மாவை அசித்திலிருந்து பிரித்து அநுஸந்தி4க்கும் முறையும் இப்பதின்மூன்றாம் அத்4யாயத்தில் கூறப் பட்டது என்று விளங்குகிறது

இவ்விடத்தில் மூன்று ஷட்கங்களிலுமுள்ள அத்4யாயங்களுக் கிடையேயுள்ள ஸங்க3தியும் (தொடர்பும்) அறியத்தக்கது. அதா வது:— (1) முதல் ஷட்கம் இரண்டு பிரிவு கொண்டது. அதில் ஶாஸ்த்ரம் தொடங்குவதற்குரிய அவதாரிகையும், ஶாஸ்த்ரம் அவதரிப்ப தற்குக் காரணமாயிருந்த அர்ஜுனனுடைய மோகத்தை நீக்குவதற் காக உபதே3ஶிக்கப்பட்ட ஆத்மஸ்வரூபவிளக்கமுமடங்கிய முதல் இரண்டு அத்4யாயம் ஒருபிரிவு. அந்த ஆத்மஸாக்ஷாத்காரத்துக்கு ஸாத4னத்தை உபதே3ஶிக்கும் மேல் நாலு அத்4யாயங்கள் இரண்டா வது பிரிவு. (2) இரண்டாவது ஷட்கமும் இரண்டு பிரிவுகொண்டது. அதாவது—ஸாத4னம், அதி4காரி, ப2லம் முதலான பரிகரங்களோடு கூடிய ப4க்தியோக3 ஸ்வரூபத்தை விளக்கும் ஏழு, எட்டு, ஒன்பதா வது அத்4யாயங்கள் முதல் பிரிவு. அந்த ப4க்தியோக3ம் உண்டா வதையும் வளர்வதையும் விளக்கும் மேல் மூன்று (10, 11, 12) அத்4யா

யங்கள் இரண்டாவது பிரிவு. (3) அவ்வண்ணமே மூன்றுவது ஷட்கமும் இரண்டு பிரிவு கொண்டது. அதாவது:— ப்ரக்ருதி, புருஷன், ஸ்தூ2ல உலகம், ஸர்வேஶ்வரன் ஆகிய தத்துவங்களை விளக்கும் 13, 14, 15 அத்4யாயங்கள் முதல் பிரிவு. செய்யவேண்டியவற்றை விளக்கும் மேல் மூன்று (16, 17, 18) அத்4யாயங்கள் இரண்டாவது பிரிவு. இவற்றில் ப்ராஸங்கி3கமாக முதல் பிரிவில் செய்யவேண்டியவற்றின் விளக்கமும், இரண்டாவது பிரிவில் தத்துவவிளக்கமும் சிறிது கலந்திருப்பதுமுண்டு. பதினாறும் அத்4யாயத்தின் கடைசியில் ஶாஸ்த்ரப்ராமாண்யத்தைப் பேசியிருப்பதும் செய்யவேண்டியவற்றை ஶாஸ்த்ரங்கொண்டே அறியவேண்டும் என்று காட்டுவதற்காக. இந்த ஷட்கத்திற்குரிய கீ3தார்த்த2 ஸங்க்3ரஹத்திலும் "ப்ரத4ாந புருஷ வ்யக்த ஸர்வேஶ்வர விவேசநம்" என்னும் பகுதியாலே கடைசி ஷட்கத்தில் தத்துவங்களை விளக்கும் முதல் பிரிவின் அர்த்த2ம் சுருக்கிக் கூறப்பட்டது. "கர்மதீ4ர்ப4க்திரித்யாதி3:" என்று செய்யவேண்டியவற்றை விளக்கும் இரண்டாவது பிரிவின் அர்த்த2ம் சுருக்கிக் காட்டப்பட்டது. 16வது அத்4யாயத் தொடக்கத்தில் கீ3தாப4ாஷ்யத்திலும் இவ்விரண்டு பிரிவுகள் காட்டப்பட்டன. இத்தால் "பதினைந்தாவது அத்4யாயத்துடன் கீ3தாஶாஸ்த்ரம் முடிந்தது, மேலுள்ள கி2லமான மூன்று அத்4யாயங்களாலே எஞ்சிநிற்கும் பலவித4மான த4ர்மங்கள் நிருபிக்கப்பட்டன" என்று யாத2வப்ரகாஶர் கல்பிப்பது பொருந்தாது என விளங்குகிறது. இந்த மூன்றுவது ஷட்கம்—முதல் இரண்டு ஷட்கங்களில் சொல்லப்பட்ட அர்த்த2ங்களின் விளக்கமே என்று கீ3தார்த்த2 ஸங்க்3ரஹத்தில் சொன்னது இனி நிருபிக்கப்படுகிறது. "க3தாஸூந் அக3தாஸூம்ஶ்ச" [2-11] என்று தொடங்கி முதல் ஷட்கத்தில் தே3ஹாத்ம ஸ்வரூபங்கள் முதலானவற்றை விளக்கிய க்ரமத்தில், அவற்றுக்கு உறுப்பான தே3ஹாத்மாக்களைப் பற்றிய உண்மையறிவு, ஆத்மா தே3ஹத்தில் கட்டுப்பட்டிருப்பதால் அதற்கு ஏற்படும் ஸம்ஸார ப3ந்த4ம், அது நீங்குதல், அதை நீக்குவது எது முதலான விஷயங்களை இந்தப் பதின்மூன்று பதினாலு அத்4யாயங்கள் விளக்கிக் கூறுகின்றன. இரண்டாம் ஷட்கத்தின் தொடக்கத்தில் சொல்லப்பட்ட அசேதனமும் ஜீவனுமான இரண்டு ப்ரக்ருதிகளுக்கும் (ப்ரகாரங்களுக்கும்) ஸ்வாமியாயிருப்பவனாய், ஆர்த்தன், ஜிஜ்ஞாஸு, அர்த்தா2ர்த்தி2, ஜ்ஞானி எனப்படும் நாலுவகை அதி4காரிகளால் ப4க்தி செய்யப்படுபவனான பரமபுருஷனைப் பற்றிய ஆராய்ச்சியுடன் கூடிய விளக்கம் பதினைந்தாம் அத்4யாயத்தில் செய்யப்படுகிறது. முதல் இரண்டு ஷட்கங்களில் சொல்லப்பட்ட கர்ம ஜ்ஞான ப4க்தியோக3ங்களின் விளக்கம் பதினாறு, பதினேழு, பதினெட்டு அத்4யாயங்களில்

श्रीभगवानुवाच—

इदं शरीरं कौन्तेय क्षेत्रमित्यभिधीयते।
एतद्यो वेत्ति तं प्राहुः क्षेत्रज्ञ इति तद्विदः॥ १ ॥

ஸ்ரீப₄க₃வாநுவாச—

1. இத₃ம் ஶரீரம் கௌந்தேய க்ஷேத்ரமித்யபி₄தீ₃யதே।
ஏதத்₃யோ வேத்தி தம் ப்ராஹு: க்ஷேத்ரஜ்ஞ இதி
தத்₃வித₃:॥

ஸ்ரீப₄க₃வாந் உவாச—ப₄க₃வான் கூறுகிறார்—**கௌந்தேய**—அர்ஜுநா! **இத₃ம் ஶரீரம்**—இந்த தே₃ஹம், **க்ஷேத்ரமிதி**—(ஆத்மாவின் போ₄க₃த்திற்கு) விளைநிலமென்று, **அபி₄தீ₄யதே**—சொல்லப்படுகிறது. **ஏதத் ய: வேத்தி**—இந்த ஶரீரத்தை எவன் அறிகிறானோ, **தம்**—அவனை, **தத்₃வித₃:**—ஆத்மஜ்ஞானிகள், **க்ஷேத்ரஜ்ஞ: இதி ப்ராஹு:**—க்ஷேத்ரஜ்ஞன் என்று கூறுகிறார்கள்.

**1. இந்தச் சரீர மிகல்விசயா கேத்திரமென்
றந்தப் பரிசறிவா ராய்ந்துரைப்பார்—முந்திதனை
யீங்கறிவான் கேத்திரஞ்ஞ னென்னுமுயி ரென்றவனை
யாங்கறிவார் சொல்வா ரமைந்து.**

இகல் விசயா—வெற்றியுடைய அர்ஜுநா! **இந்த சரீரம்**—இந்த உடல், **கேத்திரம் என்று**—(ஆத்மாவின் அனுப₄வத்திற்கு) விளைநிலம் என்று, **அந்த பரிசு அறிவார்**—அந்த ஶரீரத்தின் தன்மையை அறிபவர்கள், **ஆய்ந்து உரைப்பார்**—ஆராய்ந்து கூறுவார்கள், **இதனை**—இந்த ஶரீரத்தை, **ஈங்கு**—இந்த லீலாவிபூ₄தியில், **முந்து**

செய்யப்பட்டது, இதைக்கொண்டே கீ₃தார்த்த₂ ஸங்க்₃ரஹத்தில் "பூர்வஶேஷாऽந்திமோதி₃த:" என்று ஆளவந்தாரால் அருளிச்செய்யப்பட்டது.

॥भा॥ इदं शरीरम्—देवोऽहम्, मनुष्योऽहम्, स्थूलोऽहम्, कृशोऽहमित्यात्मना भोक्त्रा सह सामानाधिकरण्येन प्रतीयमानं भोक्तु-

---

அறிவான்—அநாதிகாலமாக அறிகிறவன், **க்ஷேத்திரஜ்ஞன் என்னும் உயிர் என்று**—க்ஷேத்ரஜ்ஞன் என்னும் ஜீவாத்மா என்று, **அவனை ஆங்கு அறிவார்**—அவனுடைய தன்மைகளை அறிபவர்கள், **அமைந்து சொல்வார்** — பொருத்தமாகச் சொல்லுவார்கள்.

---

1. "க₃தா ஸூந் அக₃தா ஸூம்ஶ்ச" [2-11] [உயிரற்ற தே₃ஹத்தையும், உயிருள்ள ஆத்மாவையும்] என்று ஶாஸ்த்ரத் தொடக்கத்திலும் "அபரேயமிதஸ்த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்₃தி₄ மே பராம் ஜீவபூ₄தாம்" [7-5] [இந்த அசேதனப் பொருள் என்னுடைய தாழ்ந்த ப்ரகாரம்; இதைக்காட்டிலும் வேறுபட்ட ஜீவன் எனது உயர்ந்த ப்ரகாரம் என்று அறிவாய்] என்று ஏழாமத்யாயத் தொடக்கத்திலும் சொன்ன க்ரமத்தில் அசேதனமான ஶரீரத்தையும் சேதனனை ஜீவனையும் பற்றி விளக்கவேண்டிய ஸமயம் வந்துவிட்டதாகையாலே, அர்ஜுனன் கேளாமலிருக்கச் செய்தே அவற்றை விளக்கத் தொடங்குகிறான் கண்ணன். (இத₃ம் ஶரீரம்) 'நான் தே₃வன்', 'நான் மனிதன்' முதலான ஜாதியையிட்டுக் கணக்கற்ற வேற்றுமைகளையுடையதாய், 'நான் பருத்தவன்' 'நான் மெலிந்தவன்' முதலான கு₃ணங்களையிட்டும் கணக்கற்ற வேற்றுமைகளையுடையதாய் 'நான் போகிறேன்' 'நான் வருகிறேன்' முதலான செயல்களையிட்டும் கணக்கற்ற வேற்றுமைகளையுடையதான உடல்களை 'இத₃ம் ஶரீரம்' என்னும் பத₃ம் குறிக்கிறது. இந்த வழக்குகள், அனுப₄விப்பவனாகிய ஆத்மாவையும் அவனால் அனுப₄விக்கப்படுவதான ஶரீரத்தையும் ஸம்ஸாரிகள் ஒன்றாக மயங்குவதால் ஏற்படுமவை. உண்மையில் அனுப₄விப்பவனான ஜீவனைக் காட்டிலும் அனுப₄விக்கப்படும் ஶரீரம் வேறானதேயாகும். (க்ஷேத்ரம் இதி அபி₄தீ₄யதே) இந்த ஶரீரம் ஆத்மாவுக்குக் கர்மம் காரணமாக ஏற்படும் போ₄க₃ங்களின் விளைநிலமாயிருப்பதையிட்டு ஶரீரத்தின் உண்மையை அறிந்தவர்களால் 'க்ஷேத்ரம்' (விளைநிலம்) என்று சொல்லப்படுகிறது. இதிலிருந்தே க்ஷேத்ரமான இந்த ஶரீரம் அனுப₄விக்கப்படுவது என்றும், இதையுடையவனான ஆத்மா இதை அனுப₄விப்பவனாயிருக்கையாலே இதைக் காட்டிலும் வேறுபட்டவன் என்றும் விளங்குகிறது. க்ஷேத்ரஶப்₃த₃த்துக்கு க்ஷதத்ராணம் (தீங்கிலிருந்து காப்

रात्मनोऽर्थान्तरभू[तं तस्य]तस्य भोगक्षेत्रमिति शरीरयाथात्म्यविद्भिरभि-धीयते। एतत् अवयवशस्संघातरूपेण च, इदमहं वेद्मीति यो वेत्ति, तं वेद्यभूतादस्माद्वेदितृत्वेनार्थान्तरभूतम्, क्षेत्रज्ञ इति तद्विदः —

பாற்றுவது), க்ஷயம் (இருக்குமிடம்), க்ஷரணம் (அழிவது) முதலான பொருள்கள் உண்டாயினும் அவை அப்ரஸித்₃த₄மாகையாலும் சொல்லை நலிந்து பொருள்கொள்ளவேண்டியிருக்கையாலும் அப்பொருள்களைக் கொள்ளாமல் ப்ரஸித்₃த₄மான விளை நிலமென்னும் பொருளையே கொண்டு கர்மமாகிற விதையின் ப₂லம் விளையும் நிலம் என்று பொருள் கொள்ளப்பட்டது. "சொல்லப்படுகிறது" என்று எழுவாயில்லாமல் கூறுகையால் "தே₃ஹத்தின் உண்மை அறிந்தவர்களால்" என்று உசிதமான எழுவாய் வருவித்துக்கொள்ளப் பட்டது. அன்றிக்கே, உத்தரார்த்த₄த்தில் உள்ள "தத்₃வித₃:" என்னும் பத₃ம் இங்கு "தத்₃வித்₃பி₄:" என்று வேற்றுமையை மாற்றிச் சேர்த்துக்கொள்ளப்படுகிறது என்றும், இந்தப் பூர்வார்த்த₄ம் க்ஷேத்ரப்ரகரணமாயிருப்பதையொட்டி 'தத்'எனும் ஶப்₃த₃ம் க்ஷேத்ரத்தைக் குறிக்கிறது என்றும் கொண்டு 'ஶரீரத்தின் உண்மையை அறிந்தவர்களால் சொல்லப்படுகிறது' என்று பா₄ஷ்யமிடப்பட்டது என்றும் கொள்ளலாம். (ஏதத் ய: வேத்தி தம் தத்₃வித₃: க்ஷேத்ரஜ்ஞ: இதி ப்ராஹு:) இந்த க்ஷேத்ரத்தை, கை கால் முதலான அவயவங்களையிட்டும் அவயவங்களின் கூட்டமாயிருக்கும் ஸமூஹரூபமான ஶரீரத்தையிட்டும் "இதை நான் அறிகிறேன்" என்று எவன் அறிகிறானோ அவன் அறியப்படுவதான க்ஷேத்ரத்தைக் காட்டிலும் வேறாயிருக்கையாலே, அறிபவனான இவ்வாத்மாவைப் பற்றிய உண்மையறிவுடையவர்கள் அவனை "க்ஷேத்ரஜ்ஞன்" என்று கூறுகிறார்கள். 'இந்த வீட்டை நான் அறிகிறேன்' என்று சொல்லுவதைப் போலே, 'இந்த ஶரீரத்தை அல்லது அவயவத்தை நான் அறிகிறேன்' என்று வழங்குகையாலே 'இத₃ம்' என்று புலன்களுக்குத் தெரியும் புறப்பொருளாயிருக்கும் ஶரீரத்தைக் காட்டிலும், புலன்களுக்குப் புலப்படாத அகப்பொருளாயிருக்கும் ஆத்மா வேறுபட்டது என்று விளங்குகிறது இதற்கு மேல் ஓர் ஆக்ஷேபம் எழுகிறது: "நான் தே₃வன்" "நான் மனிதன்" என்று தே₃ஹத்தையும் ஆத்மாவையும் ஒன்றாகக் கூறும் வழக்கிலிருந்து "நான் இதை அறிகிறேன்" என்னும் வழக்கு மயக்கத்தினால் ஏற்பட்டது என்று விளங்குகிறதே என்பது அவ்வாக்ஷேபம். இது சரியல்ல.

आत्मयाथात्म्यविदः, प्राहुः। यद्यपि देहव्यतिरिक्तघटाद्यर्थानुसन्धानवेलायां देवोऽहम्, मनुष्योऽहं घटादिकं जानामीति देहसामानाधिकरण्येन ज्ञातारमात्मानमनुसन्धत्ते, तथाऽपि देहानुभववेलायां देहमपि

'நான் இதை அறிகிறேன்' என்னும் வழக்கினால் ஏற்படும் தேஹாத்மாக்களின் பேதஜ்ஞானம் ஶாஸ்த்ரங்களுக்கும் யுக்திகளுக்கும் ஒட்டியதாகையாலே வலிமை மிக்கது. "நான் தேவன் முதலான வழக்குகளால் ஏற்படும் தேஹாத்மைக்யஜ்ஞானம் ஶாஸ்த்ரங்களுக்கும் யுக்திகளுக்கும் பொருந்தாதாகையாலே வலிமை குறைந்தது. ஆகையால் முந்திய ஜ்ஞானத்தால் பிந்திய ஜ்ஞானமே தள்ளப்படுமாகையால் முற்கூறிய ஆக்ஷேபம்பொருந்தாது. மேலும், தேஹத்தின் அவயவங்களில் ஒவ்வொன்றும் ஆத்மாவாக முடியாது, அவயவங்களின் சேர்த்தியும் ஆத்மாவாக முடியாது. "என்தலை, என்கை" என்று ஆத்மாவைக் காட்டிலும் ஶரீரத்தின் அவயவங்கள் வேறாகத் தோன்றுகின்றனவேயொழிய "நான் தலை, நான் கை" என்று ஒன்றாகத் தோன்றுவதில்லை. அவயவங்களின் சேர்த்தியும் "என்னுடைய ஶரீரம்" என்று ஆத்மாவைக் காட்டிலும் வேறுபட்டதாகவே தோன்றுகிறது. "ஏதத்யோவேத்தி" என்றதால் இந்த ஶரீரம் அறியப்படுவது என்றும், ஆத்மா அதை அறிபவன் என்றும் சொல்லப்படுகிறதாகையால் இரண்டுக்கும் பேதம் காட்டப்படுகிறது. "**தத்விதஃ**" என்னும் பதம் 'இவ்வாத்மாவை அறிபவர்கள்' என்றே பொருள்படுமாயினும், பொதுவான அறிவு ஆத்மாவைப்பற்றிய நிர்ணயத்துக்கு உதவாதாகையால் இங்கு "ஆத்மாவை உள்ளபடி அறிபவர்கள்" என்றே அப்பதத்துக்குப் பொருள்கொள்ளவேண்டும். இதற்குமேல் இங்கு பின்வருமாறு ஓர் ஆக்ஷேபம் எழுகிறது:—குடம் முதலான புறப்பொருளை மனிதன் காணும்போது "மனிதனான நான் குடத்தை அறிகிறேன்" என்றே அறிவு ஏற்படுகிறது. இங்கு 'அறிகிறேன்' என்றதால் அறிபவனே ஆத்மா என்று தேறுகிறது. அவனை 'மனிதனான நான்' என்று விஶேஷிக்கையாலே மனித ஶரீரமே அவ்வாத்மா என்றும் தேறுகிறது. அதனால் அறிபவன் என்று ஆத்மாவைக்காட்டும் இவ்வறிவு அதே சமயத்தில் அவனை தேஹமாகவும் காட்டுகிறது. இப்படி ப்ரத்யக்ஷத்தால் அறிபவனான ஆத்மாவை தேஹம் என்று அறியாநிற்க, அந்த அறிவுக்கு முரணான யுக்தியையும் ஶாஸ்த்ரங்களையுங்கொண்டு, ஆத்மாவை தேஹத்தைக்காட்டிலும் வேறுபட்டவன் என்று நிர்ணயிப்பது

घटादिकमिव इदमहं वेद्मीति वेद्यतया वेदिताऽनुभवतीति वेदितुरात्मनो वेद्यतया शरीरमपि घटादिवदर्थान्तरभूतम्। तथा घटादेरिव वेद्यभूताच्छरीरादपि वेदिता क्षेत्रज्ञोऽर्थान्तरभूतः। सामानाधिकरण्येन

எப்படிப் பொருந்தும் என்பது அவ்வாக்ஷேபம். இதற்கு பதில் பின்வருமாறு:—அறிபவனுன ஆத்மாவை எப்போதும் தேஹத்தோடு ஒன்ருகவே அறிவதாயிருந்தால் இவ்வாக்ஷேபம் விலைசெல்லும். ஆனல் அப்படி இல்லையே. தேஹத்தையே இவன் குறிப்பிட்டு அறியும்போது "நான் இந்த தேஹத்தை அறிகிறேன்" என்று தேஹத்தைக்காட்டிலும் தன்னை வேறுபட்டவனுகவன்ருே அறிகிருன். ப்ரத்யக்ஷத்தால் பார்க்கும எல்லாவற்றையும் அப்படியே உண்மை என்று கொள்ளமுடியவில்லை. க்ரஹங்களைப் பார்க்குபபோது நீர்க் குமிழியளவே உள்ளவையாகத் தோன்றுகின்றன. நக்ஷத்ரங்களைப் பார்க்கும்போது முத்தைப்போன்ற அளவையுடையனவாகவே தோன்று கின்றன. சந்திரனைப் பார்க்கும்போது மதுக்கிண்ணம் அளவேயுள்ள தாகவே தோன்றுகிறது. ஸூர்யமண்டலத்தைப் பார்க்கும்போது வட்டக்கண்ணுடியின் அளவுள்ளதாகவே காணப்படுகிறது. இவை யெல்லாம் ப்ரத்யக்ஷத்தால் அறியப்பட்டபோதிலும் தவறு என்றும், உண்மையில் க்ரஹம் முதலானவை மிகப்பெரிய அளவையுடையவை என்றும் ஶாஸ்த்ரங்களைக்கொண்டும், யுக்திகளைக்கொண்டும் நிலை நிறுத்தப்படுகிறதன்ருே. அதுபோலே இங்கும் ப்ரத்யக்ஷத்தைக் கொண்டு தேஹமும் ஆத்மாவும் ஒன்ருக அறியப்பட்டபோதிலும் முற்கூறியபடி ஶாஸ்த்ரயுக்திகளைக்கொண்டு ஆத்மா தேஹத்தைக் காட்டிலும வேறுபட்டதென்றே நிர்ணயிக்கப்படுகிறது. இனி மற் ருெரு ஆக்ஷேபம எழுகிறது—எது எதைக்காட்டிலும் வேறுபடுகிறதோ அது அதோடு (ஒன்ருக) ஒரே வேற்றுமையில் படிக்கப்படுவதில்லை. உதாஹரணமாகக் குடமும் வஸ்த்ரமும் ஒரே வேற்றுமையில் படிக்கப் படுவதில்லை, "இந்தக் குடம் மண்" என்பதுபோல், "நான் அந் தணன் கறுப்பானவன் அறிவுள்ளவன்" என்று ஆத்மா தேஹத் தோடு ஒன்ருக வழங்கப்படுகிறது. ஆகவே "இவை வேறுபட்டவை யல்ல. ஒன்ருனவையே" என்று கொள்ளத்தடையில்லை என்பது அவ்வாக்ஷேபம். இதற்குப் பரிஹாரம் பின்வருமாறு:—ஒரே வேற்று மையில் படிப்பதால் மாத்திரம் இரண்டு பொருள்களிடையே வேற்றுமையில்லை என்று கொண்டுவிடமுடியாது. 'இது குடம், கறுப் பானது' முதலான இடங்களில் பொருளையும் அதைக்காட்டிலும் வேறு பட்ட அதினுடைய ஜாதி, குணம் முதலானவற்றையும் ஒரே வேற்று

प्रतीतिस्तु वस्तुतश्शरीरस्य गोत्वादिवदात्मविशेषणतैकस्वभावतया तदपृथक्सिद्धेरुपपन्ना। तत्र वेदितुरसाधारणाकारस्य चक्षुरादिकरणा-

---

மையில் படிக்கிறோமன்றோ. பௌ$_3$ளத்$_3$த$_4$ர்களைப்போலே ஜாதி, கு$_3$ணம் முதலானவை இல்லை என்று சொல்லிவிடவும் முடியாது. குடத்தைக் காண்பதால் அதற்கு உருவம் என்னும் கு$_3$ணம் இருக்கிறது என்றும், தொடுவதால் ஸ்பர்ஶம் என்னும் கு$_3$ணம் இருக்கிறது என்றும், ஒரு பொருளை மற்ற பொருள்களைக் காட்டிலும் வேறுபடுத்தி அறிய உதவும் அமைப்பாகிற ஜாதி இருப்பதால், அவ்வப்பொருள்களுக்கு வெவ்வேறு ஜாதி இருக்கிறதென்றும் ஏற்படும் தள்ளப்படாத அறிவினால் பொருள்களுக்கு அவற்றிலும் வேறுபட்ட ஜாதிகு$_3$ணங்கள் உண்டு என்று நிலைநிறுத்துகிறோமன்றோ. ''பொருள்களுக்கும், ஜாதிகு$_3$ணங்களுக்கும் பே$_4$த$_3$முண்டு. அபே$_3$த$_4$மும் உண்டு'' என்று சிலர் சொல்லுவது முன்னுக்குப்பின் முரணானதாகையாலே பொருந்தாது. ஆகையால் '' ஜாதி, குணம், செயல் முதலானவை பொருளை விட்டுப் பிரியாமலிருக்கையாலேயே பொருளோடு ஒரே வேற்றுமையில் படிக்கப்படுகின்றன '' என்று கொள்வதுபோலே தே$_3$ஹமும் ஆத்மாவை விட்டுப் பிரியாமலிருக்கையாலேயே ஆத்மாவோடு ஒன்றாகப் படிக்கப்படுகிறது என்று கொள்வதே பொருத்தமானது. இனி மற்றோர் ஆக்ஷேபம் எழுகிறது— ''வெள்ளைப்பசு போகின்றது'' முதலான வழக்குகளில் வெண்மை முதலான கு$_3$ணங்கள் 'கோ$_3$த்வம்' முதலான ஜாதிகள் முதலான விட்டுப்பிரியாத தன்மைகளோடு கூடிய மாடாகிற பொருளை அறிகிறோம். '' நான் தே$_3$வன், நான் மனுஷ்யன் '' என்னுமிடத்திலும் தே$_3$வத்வம் மனுஷ்யத்வம் முதலான தன்மைகளோடு கூடிய தே$_3$வர் மனிதர் முதலான ஶரீரங்களை அறிகிறோமேயொழிய '' தே$_3$வ ஶரீரத்தோடு கூடிய நான், மனுஷ்ய ஶரீரத்தோடு கூடிய நான் '' என்று அறிவதில்லை. ஆகையால் க$_4$டம் என்று அறியும்போது க$_4$டத்வத்தோடு கூடிய க$_4$டமாகிற பொருளை அறிவதுபோல் ' நான் தே$_3$வன் நான் மநுஷ்யன் ' என்று அறியும்போது, தே$_3$வத்வம் முதலான ஜாதியோடு கூடிய ஶரீரத்தை அறிவதாகக் காண்கிறோமேயொழிய ஆத்மா என்ற மற்றொன்றுக்கு தே$_3$ஹம் விஶேஷணமாக இருப்பதாக இவ்வழக்கிலிருந்து தெரியவில்லையே என்பது அவ்வாக்ஷேபம். இதற்கு ஸமாத$_4$ானம் பின்வருமாறு— ஆத்மாவினுடைய தனித்தன்மைகளான அறிவாயிருக்கும் தன்மை, நித்யமாயிருக்கும் தன்மை, நுண்ணிய அணுவாயிருக்கும் தன்மை முதலானவை புலன்களால் அறியப்படாதவை என்று கொண்டு இந்த ஆக்ஷேபம் எழுந்துள்ளது.

विषयत्वाद्योगसंस्कृतमनोविषयत्वाच्च प्रकृतिसन्निधानादेव मूढाः प्रकृत्याकारमेव वेदितारं पश्यन्ति; तथा च वक्ष्यति—

இவர்களைக் குறித்து மூன்று கேள்விகள் கேட்கப்படுகின்றன. வெளி இந்த்3ரியங்களால் தே3ஹம் மட்டுமே அறியப்படுகிறது என்று கூறுகிறீர்களா? மனத்தால் மாத்திரம் அவ்வண்ணம அறியப்படு கிறது என்று கூறுகிறீர்களா? அல்லது பரிஶுத்3த4மான மனஸ் ஸால் அவ்வண்ணம் அறியப்படுகின்றது என்று கூறுகிறீர்களா? என்பவை அம்மூன்று கேள்விகள். முதல் கேள்வியில் சொன்னபடி ஒப்புக்கொண்டார்களாகில் கண் முதலானவற்றுக்கு ஆத்மாவை அறிவதற்கு ஶக்தி இல்லாமையால் தம்மால் அறிய இயலாதவற்றையே அவை அறியவில்லையாகையால், இதனால் 'ஆத்மா இல்லை' என்று ஸித்3தி4த்துவிடாது. இரண்டாவது கேள்வியில் சொன்னபடி அவர்கள் ஒப்புக்கொண்டார்களாகில், மனம் ஆத்மாவை அறியவல்ல தாயினும் ரஜஸ்தமஸ்ஸுக்களாகிற அஶுத்3தி4 கலந்த மனத்துக்கு ஆத்மாவை அறிய ஶக்தியில்லாமையால் இதனாலும் ஆத்மா இல்லை என்று ஸித்3தி4த்துவிடாது. மூன்றாவது கேள்வியில் சொன்னபடி அவர்கள் ஒப்புக்கொண்டார்களாகில், தே3ஹத்தைக் காட்டிலும் வேறு பட்ட ஆத்மாவை அறிவதற்காகவே அஷ்டாங்க3யோக3ம் உபதே3ஶிக் கப்படுகிறதாகையாலும் ஆஹாரநியதி முதலானவற்றால் அஶுத்3தி4 நீங்கப்பெற்ற மனமுடைய யோகி3கள் அஷ்டாங்க3யோக3த்தாலே ஆத்மாவை நேரே கண்டிருக்கிறார்கள் என்பதற்குப் பல சான்றுகள் உளதாகையாலும் பரிஶுத்3த4மான மனத்தால் ஆத்மாவை அறிய முடியாது என்று சொன்னது சரியல்ல. இங்கு ஒரு த்3ருஷ்டாந்தம் காணத்தக்கது. ஒருபடி பாலில் ஒரு சிறிது நீர் கலந்திருக்கும்போது அதைப் பாலென்றே அறிகிறோம். அதில் நீர் கலந்திருப்பதை அறியவில்லை. அவ்வண்ணமே ஒருபடி நீரில் சிறிதுபால் கலந்தி ருக்கும்போதும் அதை நீர் என்றே அறிகிறோம். அதில் பால் கலந்திருப்பதை அறியவில்லை. இது காணும் கண்ணில், சுவைக்கும் நாவில் உள்ள குறையால் விளைந்தது. அவ்வண்ணமே கர்மம் காரண மாகப் பலருக்கு ரஜஸ்தமோகு3ணங்கள் நிறைந்திருப்பதால் ஒன்று சேர்ந்திருக்கும் தே3ஹாத்மாக்களில் ஆத்மா புலப்படுவதில்லை. அதனால் தே3ஹத்தையே ஆத்மாவாக அவர்கள் மயங்குகிறார்கள். ரஜஸ்தமோகு3ணங்கள் குறைந்து, ஸத்வம் நிறையப்பெற்ற மனத் தால் யோகி3கள் ஆத்மாவையே நேரே கண்டிருக்கும் உண்மையை இதுகொண்டு தள்ளிவிடமுடியாது. "மோஹத்துக்குக் காரணமான

* उत्क्रामन्तं स्थितं वाऽपि भुञ्जानं वा गुणान्वितम्। विमूढा नानुपश्यन्ति पश्यन्ति ज्ञानचक्षुषः॥ (१५. १०) इति॥ १॥

क्षेत्रज्ञं चापि मां विद्धि सर्वक्षेत्रेषु भारत।
क्षेत्रक्षेत्रज्ञयोर्ज्ञानं यत्तज्ज्ञानं मतं मम॥ २॥

2. **க்ஷேத்ரஜ்ஞம் சாபி மாம் வித்₃தி₄**
ஸர்வக்ஷேத்ரேஷு ப₄ாரத।
க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞயோர்ஜ்ஞாநம்
யத்தஜ்ஜ்ஞாநம் மதம் மம॥

ப₄ாரத—ப₄ரதகுலத்துதித்தவனே! **ஸர்வக்ஷேத்ரேஷு—** (தே₃வர் மனிதர் முதலான) எல்லா ஶரீரங்களிலும், **க்ஷேத்ரஜ்ஞம் ச அபி**—(க்ஷேத்ரம் எனப்படும் ஶரீரத்தைப் போலே) க்ஷேத்ரஜ்ஞன் எனப்படும் ஆத்மாவையும், **மாம் வித்₃தி₄**—என்னை ஆத்மாவாகக் கொண்டவனாக அறிவாய், **க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞயோ: யத் ஜ்ஞானம்**—"ஶரீரமும் ஆத்மாவும் தனிப்பட்டவை, என்னை ஆத்மாவாகக் கொண்டவை" என்னும் அறிவு யாதொன்றுண்டோ, **தத்**—அந்த அறிவே, **ஜ்ஞானம்**—(கைக்கொள்ளத்தக்க) அறிவாக, **மம மதம்**—என் நிர்ணயமாகும்.

ரஜஸ்தமோகு₃ணங்கள் நிறைந்த ஶரீரத்தில் இருக்கும் அறிவிலிகளாயிருக்குமவர்களுக்கு ஆத்மாவை உள்ளபடி காணமுடியாது; யோக₃த்தால் பரிஶுத்₃தி₄யடைந்த மனத்தினலேயே அதைக் காண முடியும்" என்னும் இவ்விஷயம், "உத்க்ராமந்தம் ஸ்தி₂தம் வாபி பு₄ஞ்ஜாநம் வா கு₃ணாந்விதம்। விமூட₄ா நாநுபஶ்யந்தி பஶ்யந்தி ஜ்ஞாநசக்ஷுஷ:॥' [கீ₃தை 15-10] [தே₃ஹத்தையே ஆத்மா என்று மயங்கும் அறிவிலிகள் ஸத்வரஜஸ்தமோகு₃ணங்கள் நிறைந்த ஶரீரத்தோடு கூடியவனுய், மரணகாலத்தில் அந்த ஶரீரத்திலிருந்து வெளிக்கிளம்புகின்றவனுய், உயிர் வாழும் காலத்தில் அதிலேயே இருப்பவனுய், ஸத்வரஜஸ்தமோமயமான விஷயங்களை அனுப₄விப்பவனுன ஆத்மாவை ஶரீரத்தைக்காட்டிலும் வேறுபட்டவனுகவும், ஜ்ஞானமே வடிவெடுத்தவனுகவும் அறிவதில்லை. ஜ்ஞானிகளோவெனில் அவ்வண்ணம் அறிகிருர்கள்] என்று கீ₃தையிலேயே சொல்லப்பட இருக்கிறது. 1.

॥ मा ॥ देवमनुष्यादिसर्वक्षेत्रेषु वेदितृत्वैकाकारं क्षेत्रज्ञं च मां विद्धि—मदात्मकं विद्धि; * क्षेत्रज्ञं चापीत्यपिशब्दात् क्षेत्रमपि मां

2. கேத்திரங்க ளெங்குமமர் கேத்ரஞ்ஞ னாகப்
பார்த்தறிவு மேவுநீ பார்த்தனே- சீர்த்த
விவையிரண்டு மற்றறியு மிந்தவறி விங்கு
நவையிலறி வென்றறிவ னான்.

பார்த்தனே — அர்ஜுனா! **கேத்திரங்கள் எங்கும்**—(தே₃வர் மனிதர் முதலான) எல்லா ஶரீரங்களிலும், **அமர்** — வாழும், **கேத்ரஞ்ஞன்** - ஜீவாத்மாவையும், **நான் ஆகப் பார்த்து** — என்னை ஆத்மாவாகக் கொண்டவனாகக் கண்டு, **நீ அறிவு மேவு**—நீ அறிவாளியாவாய் **சீர்த்த இவை இரண்டும்**—முற்கூறிய சிறப்புக்களைப் பெற்ற ஶரீரமும ஜீவாத்மாவுமாகிற இந்த இரண்டையும், **மற்று அறியும் இந்த அறிவு** — வெவ்வேருகப் பிரித்து அறிவதோடு அவையிரண்டும எனக்கு ஶரீரமாயிருப்பவை என்று அறியும் இந்த அறிவானது, **இங்கு** — இவ்வுலகில், **நவை இல் அறிவு என்று** — குற்றமற்ற அறிவு என்று, **நான் அறிவன்** - நான் முடிவுகட்டியிருப்பேன்.

2. இவ்வண்ணமாக ஒன்றுக்கொன்று நேர்மாறுபட்ட தன்மைகளையுடையவையாக முதல் ஶ்லோகத்தில் குறிக்கப்பட்ட க்ஷேத்ரமாகிற ஶரீரம், க்ஷேத்ரஜ்ஞனுகிற ஜீவாத்மா ஆகிய இரண்டுக்கும் பரமாத்மாவாகிற தன்னைக்காட்டிலும் வேறுபாட்டைக் காட்டுவதற்காக இரண்டுக்கும் பொதுவான ப₄க₃வச்சே₂ஷத்வத்தை உபதே₃ஶித்து, இவ்வண்ணமாக ஶரீரஜீவர்களை உள்ளபடி அறிவதே மயக்கம் நீங்குவதற்குக் காரணமாகிறது என்று விளக்குகிறுன் கண்ணன். (ஸர்வக்ஷேத்ரேஷு க்ஷேத்ரஜ்ஞம் சாபி மாம் வித்₃தி₄)முன் ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட தே₃வர், மனிதர் முதலான அனைத்துஶரீரங்களாகிற க்ஷேத்ரங்களிலும், அறிவைதையே இயல்பாகக் கொண்டவனாய் அதனாலேயே 'க்ஷேத்ரஜ்ஞன்' எனப்பட்டவனான ஜீவாத்மாவையும் நானாக அறிவாய்; அதாவது, என்னை ஆத்மாவாகக்கொண்டவனாக அறிவாய். ஶரீரத்தில் வாழ்பவனாய், அதைக்காட்டிலும் வேறுபட்டவனாய் இருந்தபோதிலும் அதில் கட்டுப்பட்டிருப்பவனான ப₃த்₃த₄ஜீவன் இங்கு க்ஷேத்ரஜ்ஞ

विद्धीत्युक्तमिति गम्यते। यथा क्षेत्रं क्षेत्रज्ञविशेषणैकस्वभावतया तदपृथक्सिद्धेः तत्सामानाधिकरण्येनैव निर्देश्यम्, तथा क्षेत्रं क्षेत्रज्ञं च मद्विशेषणैकस्वभावतया मदपृथक्सिद्धेः मत्सामानाधिकरण्येनैव निर्देश्यौ विद्धि। पृथिव्यादिसंघातरूपस्य क्षेत्रस्य क्षेत्रज्ञस्य च भगवच्छरीरतैक-

---

ஶப்3த3த்தாலே சொல்லப்படுகிருன். அவன் தன் ஶரீரத்தைக் குறித்து ஆத்மாவாயிருந்தபோதிலும் எனனைக் குறித்து ஶரீரமாயிருக்கையாலே என்னுல் 'நான்' என்று ஒரே வேற்றுமையில் குறிக்கத்தக்கவன் என்று கருத்து. இங்கு க்ஷேத்ரஜ்ஞன் என்றது ஜாத்யேக வசனமாகையாலே ப3த்34ஜீவர்கள் அனைவரையும் குறிக்கிறது. சென்ற ஶ்லோகத்தில் சொல்லப்பட்டதோடு கூட்டுவதற்குச் சகாரமேபோதுமாயிருக்க, மேலும் ஒரு அபிஶப்3த3த்தையிடுகையாலே, "முன ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட க்ஷேத்ரத்தையும் நானாக அறி" எனனும் அர்த்த2மும் உணர்த்தப்படுகிறது. க்ஷேத்ரம் எனப்படும் ஶரீரம் க்ஷேத்ரஜ்ஞன் எனும் ஜீவனுக்கு விஶேஷணமாக இருப்பதையே இயல்வாக உடையதாயிருப்பதால் அவனை விட்டுப் பிரியாமலிருப்பதையிட்டு அவனோடு ஒரேவேற்றுமையில் குறிக்கத்தக்கதாக எப்படி ஆகிறதோ, அப்படியே க்ஷேத்ரமும் க்ஷேத்ரஜ்ஞனும் எனக்கு விஶேஷணமாயிருப்பதையே இயல்வாக உடையவையாயிருக்கையால் எனனை விட்டுப்பிரியாமையையிட்டு எனனோடு ஒரேவேறறுமையில் குறிக்கத்தக்கவையாக ஆகின்றன என்று அறிவாய் என்று கருத்து. அபிஶப்3த3த்தாலே ஶரீரத்தையும் தானாகக்குறிக்கையால் ஜீவனை அவனது ஶரீரத்தோடு ஒரேவேற்றுமையில் குறிப்பதற்கு எந்த ஶரீராத்மபா4வம் காரணமாகிறதோ அந்த ஶரீராத்மபா4வம் க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞர்களைக்குறித்து எனக்குமுள்ளது; இப்படி விட்டுப் பிரியாத ஶரீரமாயிருக்கையையிட்டு க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞர்களை என்னோடு ஒரேவேற்றுமையில் குறிப்பது முக்2யமானதே என்றபடி. இங்கு ஓர் ஆக்ஷேபம் எழுகிறது — ஜீவனுக்கு அவனது ஶரீரம் விஶேஷணமாயிருக்கிறது என்பது ப்ரத்யக்ஷத்தால் அறியப்படுகிறது; க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞர்கள் பரமாத்மாவுக்கு விஶேஷணமாயிருப்பதோ. அவ்வண்ணம் அறியப்படவில்லையே. நேர்மாறாக அசேதனப்பொருள்களும் ஜீவஸமூஹமும் ஸ்வதந்த்ரமாகவன்றோ காணப்படுகின்றன. ஆகையால் இங்கு ஒரேவேற்றுமையில் படிப்பது முக்2யம் என்று எப்படிக்கொள்வது? என்பது அவ்வாக்ஷேபம்- விஶேஷ்யமான பரம்பொருள் ப்ரத்யக்ஷத்தால் அறியப்படாமையாலே அப்பரம்பொருளுக்கும் க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞர்களுக்கும் இடையேயுள்ள

स्वरूपतया भगवदात्मकत्वं श्रुतयो वदन्ति *यः पृथिव्यां तिष्ठन् पृथिव्या अन्तरो यं पृथिवी न वेद यस्य पृथिवी शरीरं यः पृथिवीमन्तरो यमयति स त आत्माऽन्तर्याम्यमृतः (बृ. ५. ७. ३) इत्यारभ्य, * य आत्मनि तिष्ठन्नात्मनोऽन्तरो यमात्मा न वेद यस्यात्मा शरीरं य आत्मानमन्तरो यमयति स त आत्माऽन्तर्याम्यमृतः (बृ ५. ७. २२) इत्याद्याः।

ஶரீராத்மத்தன்மை ப்ரத்யக்ஷமாகத் தெரியாவிட்டாலும், பரம்பொருளைத் தெரிவிக்கும் ஶாஸ்த்ரமாகிற ப்ரமாணம் அப்பரப்பொருளைச் சேதனு சேதனங்களுக்கு ஆத்மாவாகவே தெரிவிக்கையால், ஸாமாநாதி$_4$கரண்யம் (ஒரே வேற்றுமையில் குறிப்பது) முக்$_2$யமே என்பதில் தட்டில்லை என்பது இவ்வாக்ஷேபத்திற்கு ஸமாத$_4$ாநம். அதாவது:— "யः ப்ருதி$_2$வ்யாம் திஷ்ட$_2$ந் ப்ருதி$_2$வ்யா அந்தரோ யம் ப்ருதி$_2$வீ ந வேத$_3$ யஸ்ய ப்ருதி$_2$வீ ஶரீரம் யः ப்ருதிவீமந்தரோ யமயதி ஸ த ஆத்மாந்தர்யாம்யம்ருத:" [ப்$_3$ருஹ 5-7-3] [எந்தப் பரமாத்மா பூமியில் உள்ளும் புறமும் வியாபித்திருக்கிறானோ, எவனை பூமி அறிகிறதில்லையோ, எவனுக்கு பூமி ஶரீரமோ, எவன் பூமியை உள்நுழைந்து நியமிக்கிறானோ அவனே உனக்கு அழிவற்ற ஆத்மாவாய அந்தர்யாமியாயிருப்பவன்] என்று தொடங்கி, "ய ஆத்மநி திஷ்ட$_2$ந் ஆத்மனோऽந்தரோ யமாத்மா ந வேத$_3$ யஸ்யாத்மா ஶரீரம் ய ஆத்மாநமந்தரோ யமயதி ஸ த ஆத்மா அந்தர்யாம்யம்ருத:" [ப்$_3$ருஹ 5 7-22] [எவன் ஆத்மாவின் உள்ளும் புறமும் நிறைந்து விளங்குகிறானோ, எவனை ஆத்மா அறிகிறதில்லையோ, எவனுக்கு ஆத்மா ஶரீரமோ, எவன் ஆத்மாவை உள்நுழைந்து நியமிக்கிறானோ அவனே உனக்கு அழிவற்ற ஆத்மாவான அந்தர்யாமி] என்பதீறாகவுள்ள அந்தர்யாமி ப்$_3$ராஹ்மணம் பூ$_4$மி முதலான அசேதனங்களையும், ஜீவாத்மாவையும் பரமாத்மாவுக்கு ஶரீரமாகக் கூறுகின்றது. இதிலிருந்தே பூ$_4$மி முதலானவற்றின் சேர்த்தியாயிருக்கும் ஶரீரமாகிற க்ஷேத்ரமும் பரமாத்மாவுக்கு ஶரீரமென்று தேறுகிறது. இப்படி க்ஷேத்ரமும் க்ஷேத்ரஜ்ஞனும் பரமாத்மாவுக்கு ஶரீரமாயிருப்பதையே இயல்பாகக்கொண்டவையாகையால் அவற்றை ஶாஸ்த்ரம பரமாத்மாவோடு ஒரே வேற்றுமையில் படிப்பது முக்$_2$யமானது என்றும் தேறுகிறது. பூ$_4$மி முதலானவற்றை நாம் பரமாத்மாவின் சரீரமாகக் காண்பதில்லையாகிலும், அந்தர்யாமி ப்$_3$ராஹ்மணம் கூறுகையால், நாம் பூ$_4$மி முதலானவற்றைப் பரமாத்ம சரீரம் என்று ஒப்புக்கொள்ளவேண்டியிருக்கிறது. அதுபோலவே நாம்காணும் சரீரத்தை உடைய ஜீவனையும் அந்தர்யாமி ப்$_3$ராஹ்மணம் கூறுவதைக் கொண்டு பரமாத்ம சரீரம் என்று ஒப்புக் கொண்டே தீரவேண்டும்.

इदमेवान्तर्यामितया सर्वक्षेत्रज्ञानामात्मत्वेनावस्थानं भगवतस्तत्सामानाधिकरण्येन व्यपदेशहे[तु]तुः ; * अहमात्मा गुडाकेश सर्वभूताशयस्थितः (१०. २०) * न तदस्ति विना यत्स्यान्मया भूतं चराचरम् (१०. ३९) * विष्टभ्याहमिदं कृत्स्नमेकांशेन स्थितो जगत् (१०. ४२) इति पुरस्तादुपरिष्टाच्चाभिधाय, मध्ये सामानाधिकरण्येन व्यपदिशति * आदित्यानामहं विष्णुः (१०. २१) इत्यादिना। यदिदं क्षेत्र-

---

இவ்வண்ணமாகப் பரமாத்மாவுக்கும் சேதநாசேதநங்களுக்கும் ஸ்வருபபே₄த₃மும் சரீராத்மத்தன்மையும் தேறியவளவில், வேத₃ வாக்கியங்களில் அவற்றை ஒரே வேற்றுமையில் படிப்பது இந்த சரீராத்மத் தன்மையையிட்டே என்றே கொள்ளவேண்டும். அந்த வேத₃ வாக்கியங்களை விளக்கும் கீதையில், இங்கு தன்னையும் க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞர்களையும் ஒரே வேற்றுமையில் படிப்பதும் தான் அவற்றுக்கு அந்தர்யாமியாய் ஆத்மாவாயிருப்பதையிட்டே என்றே கொள்ள வேண்டும். 'அஹமாத்மா கு₃டா₃கேஶ ஸர்வபூ₄தாஶயஸ்தி₂த:" [10-20] [அர்ஜுநு! எல்லா ஜீவராஶிகளின் ஹ்ருத₃யத்திலுமிருக்கும் ஆத்மா நானே] என்று தான் அனைவருக்கும் அந்தர்யாமியாயிருப்பதைக்கூறி "ந தத₃ஸ்தி விநா யத் ஸ்யாத் மயா பூ₄தம் சராசரம்" [10-39] [அசைவனவும் அசையாதனவுமான பொருள்களில் என்னை விட்டுப் பிரிந்திருப்பது ஒன்றுமேயில்லை] என்று எல்லாப் பொருள்களும் தன்னைவிட்டுப் பிரியாதிருப்பவை என்று கூறி, "விஷ்டப்₄யாஹமித₃ம் க்ருத்ஸ்நமேகாம்ஶேந ஸ்தி₂தோ ஜக₃த்" [10-42] [இந்த எல்லாவுலகையும் நான் எனது ஓர் அம்ஶத்தினல் த₄ரித்து நிற்கிறேன்] என்று தான் அனைத்தையும் த₄ரித்திருப்பதாகக்கூறி, இவ்வண்ணமாக முன்னும் பின்னும் அனைத்துலகும் தன்னால் த₄ரித்து நிற்கப்படுவதாய், தன்னைவிட்டுப் பிரியாததான ஶரீரம் என்று கூறியது காரணமாகவே தன்னை உலகத்தோடு ஒரே வேற்றுமையில் படிக்கலாம் என்பதை முற்கூறிய ப்ரமாணங்களுக்கு நடுவே "ஆதி₃த்யாநாமஹம் விஷ்ணு:" [20-21] என்று தொடங்கி கீ₃தையில் விபூ₄த்யத்₄யாயத்தில் கண்ணன் காட்டினன்றே.

இனி இந்த ஒன்றரை ஶ்லோகங்களில் காட்டப்பட்ட க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்களைப் பற்றிய உண்மையறிவே கைக்கொள்ளத்தக்க

क्षेत्रज्ञयोर्विवेकविषयं तयोर्मदात्मकत्वविषये च ज्ञानमुक्तम्, तदेवोपादेयं ज्ञानमिति मम मतम्। केचिदाहुः —* क्षेत्रज्ञं चापि मां विद्धीति

அறிவு என்பது தன் ஸித்₃த₄ாந்தம் என்று காட்டுகிருன் உத்தரார்த்த₄த்தாலே. (க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞயோ: யத் ஜ்ஞாநம்) க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்களின் வேறுபாட்டைப் பற்றிய யாதொரு அறிவும், அவ்விரண்டுமே என்னை ஆத்மாவாகக் கொண்டவை என்னும் யாதொரு அறிவும் இந்த ஒன்றரை ஶ்லோகங்களில் என்னுல் கூறப் பட்டனவோ. 'யத்' என்னும் ஶப்₃த₃ம் அருகிலுள்ளதையே குறிக்கு மாகையால் முதல் ஒன்றரை ஶ்லோகங்களில் சொல்லப்பட்ட க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்களைப் பற்றிய உண்மை அறிவையே அந்த ஶப்₃த₃ம் குறிப்பதாகக்கொள்ளவேண்டும். பழுக்கக் காய்ச்சிய இரும்புத் துண்டை நெருப்புத் துண்டாக அறிவதுபோல் தே₃ஹத்தையே ஆத்மாவாகவும் ஸ்வதந்த்ரமானதாகவும் அறிவதாகிற பொய்யறிவு பகுத்தறிவற்ற ப்ராணிகளுக்கும் பொதுவானதாகையாலே பகுத்தறிவுள்ள அர்ஜுனனைக் குறித்து அப்பொய்யறிவைப் புகழ்ந்து கூறுவது ஒட்டாதன்றே. (தத் ஜ்ஞாநம் மம மதம்) அந்த உண்மையறிவே கைக்கொள்ளத்தக்க அறிவாகுமென்பது என் ஸித்₃த₄ாந்தம். இங்கு "யத் ஜ்ஞாநம் தத ஜ்ஞாநம் மதம்" என்பதற்கு இந்த அறிவே அறிவெனப்படுகிறது என்று பொதுவாகப் பொருளைக் கூறினுல் புநருக்தி முதலான தோ₃ஷங்கள் உண்டாகின்றன. "மற்ற அறிவுகள் அறிவல்ல" என்று இதற்குக் கருத்துரைத்தால் மற்றும் பல அறிவுகள் இருப்பதோடு முரண்படும். இந்த அறிவை அநுவாத₃ம்செய்து 'மதம்' என்று இது தான் உகந்ததென்று காட்டுவதாகக் கொள்ள லாமேயெனில் அப்பொழுது 'ஜ்ஞாநம்' என்று இரண்டு முறை படிக்கவேண்டிய அவஶ்யமில்லை. "யத் ஜ்ஞாநம் தத் மம மதம்" என்று சொன்னுலே போதும். ஆகையால் இங்கு 'இந்த அறிவே அறிவாகும்' என்றது 'இதுவே கைக்கொள்ளத்தக்க அறிவாகும்' என்று இந்த அறிவைப் புகழ்வதற்காகவே என்று கொள்ளவேண்டும். (மம மதம்) எல்லா ஶாஸ்த்ரார்த்த₂ங்களுக்கும் உதவும் இந்த அறிவு அனைவருக்கும் ஹிதமானதாகையால் கைக்கொள்ளத்தக்கது என்பது எல்லா ஜீவராஶிகளுக்கும் நண்பனுன எனது முடிவாகும் என்று கருத்து.

இந்த ஶ்லோகத்துக்கு இவ்வண்ணமாக வேத₃வாக்யங்களுக்கும், மற்ற ஸ்ம்ருதிகளுக்கும், இதே கீ₃தையில் முன்பின் வாக்யங்களுக்கும்

सामानाधिकरण्येनैकत्वमवगम्यते। ततश्चेश्वरस्यैव सतोऽज्ञानात्क्षेत्रज्ञत्वमिव भवतीत्यभ्युपगन्तव्यम्। तन्निवृत्त्यर्थश्चायमेकत्वोपदेशः। अनेन चाप्र-

பொருந்தும்படியாகப் பொருள்கொள்ள வழியிருக்கையில், ஆராய்ச்சி இல்லாத சிலர் இந்த ஶ்லோகத்துக்குப் பின்வருமாறு பொருள் கூறுகின்ருர்கள்:— "க்ஷேத்ரஜ்ஞம் சாபி மாம் வித்₃தி₄" [ஜீவனையும் நானுகவே அறி] என்று ஜீவனையும் ஈஶ்வரனை தன்னையும் ஒரே வேற்றுமையில் படித்திருப்பதிலிருந்து ஜீவனும் ஈஶ்வரனும் ஒருவரே என்று விளங்குகிறது. "பி₄ந்நப்ரவ்ருத்திநிமித்தாநாம் ஶப்₃த₃நாம் ஏகஸ்மிந் அர்த்தே₂ வ்ருத்தி: ஸாமாநாதி₄கரண்யம்" [வேறுபட்ட தன்மைகளைக் கூறும் பல சொற்கள் அத்தன்மைகளையுடைய ஒரே பொருளைக் குறிக்கும்போது அத்தன்மைகளையும் அப்பொருளையும் குறிக்கும் சொற்களை ஒரே வேற்றுமையில் படிக்கலாம்] என்றல்லவோ ஶாஸ்த்ரகாரர்களால் ஒரே வேற்றுமையில் படிப்பதாகிற ஸாமாநாதி₄கரண்யத்துக்கு லக்ஷணம் சொல்லப்பட்டது. இங்கு எல்லாமறிந்தவனும் எல்லாம் வல்லவனை ஈஶ்வரனுக்கும், அல்பஜ்ஞனும் அல்பஶக்தியான ஜீவனுக்கும் ஐக்யம் எப்படிப்பொருந்தும் என்னும் ஆக்ஷேபம் எழுகிறது. இதற்கு ஸமாத₄ானம் பின்வருமாறு—இங்கு இப்படி இருவரையும் ஒன்ருகப் படித்திருக்கையால் ஸர்வஜ்ஞனும் ஸர்வஶக்தியான ஈஶ்வரனே அஜ்ஞானமெனும் அவித்₃யையால் மறைக்கப்பட்டு ஜீவன்போலே காட்சி அளிக்கிருன் என்று ஒப்புக்கொள்ளவேண்டி வருகிறதாகையாலே முற்கூறிய ஆக்ஷேபத்தில் சொன்னபடி முரண்பாடு ஏதுமில்லை. ஜீவனும் ஈஶ்வரனும் இங்கு ஒன்ருகப் படிக்கப்படுகிருர்கள். அது பொருந்துவதற்காக அர்த்தா₂பத்தி ப்ரமாணத்தின்படி இப்படிக் கற்பிக்கிருேம். ஜீவனுக்கு ஸம்ஸாரமாகிற இவ்வுலக வாழ்க்கை ஒரு காரணத்தால் ஏற்பட்டது என்பது அனைவரும் இசைந்தது. இயல்பாகவே ஈஶ்வரன் ஜீவனுகமுடியாதாயினும் அஜ்ஞானத்தாலே ஜீவனுகத் தோற்றுகிருன் என்று கொள்ளக் குறையில்லை என்பது ஸமாத₄ாநம். இதற்குமேல் மற்றும் ஒரு ஆக்ஷேபம் எழுகிறது. "அஜ்ஞானமாகிற தோ₃ஷத்தாலுங்கூட அஜ்ஞத்வம் ஸர்வஜ்ஞத்வம் முதலான முரண்பாடுகள் ஒருவனுக்கே எப்படிப் பொருந்தும்? தோ₃ஷத்தால் ஒளி இருளாகிவிட முடியாதே. நல்ல நிலமும் நீரும் இருந்தபோதிலும் கல் முளைவிடமுடியாதே" என்பது அவ்வாக்ஷேபம். "இங்கு ஈஶ்வரன் ஜீவனுக ஆகிருன் என்று நாம் ஒப்புக்கொள்ளவில்லை. ஈஶ்வரன் ஜீவன்போலே தோற்றுகிருன் என்றே ஒப்புக்கொள்கிருேமாகையால் முற்கூறிய ஆக்ஷேபம் எழ வழியில்லை.

முரண்பட்ட தன்மைகள் ஒரே இடத்தில் இருப்பதாக ஒப்புக்கொள்ளாமல் கயிற்றைப் பாம்பு என்று எண்ணிக் கலங்குமிடத்திற்போலே முரண்பட்ட தன்மை ஏறிடப்படுகிறது என்றே கொள்ளுகிறோமாகையாலே குறையில்லை. வேறு வழியில்லாமையால் இப்படிக் கொள்ளுகிறோம்'' என்பது ஸமாத₄நம். இனி மற்றோர் ஆக்ஷேபம் வருகிறது. ''உண்மையில் ஈஶ்வரன் ஸம்ஸாரி ஜீவனாகவில்லையானால் ஸம்ஸாரம் போவதற்காக உபதே₃ஶம் முதலானவை செய்வது எதற்காக? உண்மையில் வியாதியில்லாதபோது அதைப் போக்குவதற்கு வைத்₃யம் செய்வதில்லையே'' என்பது அவ்வாக்ஷேபம். இதற்கு ஸமாத₄நம் பின்வருமாறு:— ''ஜீவன் என்னும் மயக்கம் நீங்குவதற்காகவே உபதே₃ஶம் செய்கையாலே குறையில்லை இந்த ஐக்யோபதே₃ஶ வாக்யங்கள் த்₃ருஷ்டி விதி₄ முதலானவைபோலே தாழ்ந்த ப₂லன்களைப் பெறுவதற்காக ஏறிட்டுச் சொல்லும் வாக்யங்கள் அல்லவே. ஆத்மாவின் உண்மையான ஸ்வரூபத்தை அறிவிப்பதற்காக வந்த வாக்யங்கள் என்றல்லவோ அனைவரும் ஒப்புக்கொண்டிருக்கிறோம். கண்ணின் குற்றத்தால் சந்திரனை இரண்டாக எண்ணுபவனை அந்த மயக்கம் தீர்வதற்காக 'சந்த்₃ரன் ஒன்றே; இரண்டாகக் காண்பது உன் கண்ணில் குற்றத்தால் ஏற்பட்டது' என்று ஆப்தன் உபதே₃ஶிப்பது போன்றதல்லவோ இந்த உபதே₃ஶம்'' என்பது ஸமாத₄நம். இனி மற்றொரு ஆக்ஷேபம் எழுகிறது — ''தள்ளப்படாத ப்ரத்யக்ஷத்தின்மூலம் ஜீவனுக்கும் ஈஶ்வரனுக்கும் பே₄த₃ம் அறியப்படுகிறது. அந்த ப்ரத்யக்ஷத்துக்கு முரண்படாமலே ஆப்தோபதே₃ஶம் வரவேண்டும். அப்படி முரண்படாதபடி இந்த ஆப்தோபதே₃ஶத்துக்கு (ஶரீராத்ம பா₄வத்தையிட்டு ஐக்யோபதே₃ஶம் என்று) பொருள்கொள்ள இடமிருக்கிறது. அப்படியிருக்கும்போது இந்த ஆப்தோபதே₃ஶத்தால் முற்கூறிய பே₄த₃ப்ரத்யக்ஷத்தை எப்படித் தள்ளமுடியும்'' என்பது அவ்வாக்ஷேபம். இதற்கு ஸமாத₄நம் பின்வருமாறு:— ''பொதுவாக ஆப்தோபதே₃ஶம் ப்ரத்யக்ஷத்தோடு முரண்படாமலே இருக்குமானாலும் சில இடங்களில் முரண்படுவதுமுண்டு. இப்படிக்கொள்ளாவிட்டால் விளக்குஜ்வாலை ஒன்றாகப் பிரத்யக்ஷத்தால் தோன்றிய போதிலும், ஆப்தர்கள் அனுமானத்தால் அது பல ஜ்வாலைகளின் ஸமூஹமே என்று நிர்ணயிப்பது பொருந்தாமற்போய்விடும். ஆகையால் ப்ரத்யக்ஷமாயிருந்தாலும் அல்லாமலிருந்தாலும் எது தோ₃ஷமற்றதோ அது வலிமைமிக்கது, மற்றது வலிமை குன்றியது என்றே

निवृत्तिवत्क्षेत्रज्ञत्वभ्रमो निवर्तत इति। ते प्रष्टव्याः— अयमुपदेष्टा

கொள்ளவேண்டும். ஒரு மனிதனுடைய உபதே₃ஶ வாக்யத்துக்கு அவனுடைய மயக்கம் வஞ்சனை அறிவின்மை அஶக்தி முதலானவை குறைகளாகலாம். இங்கு ஐக்யோபதே₃ஶத்தைச்செய்யும் வாஸு தே₃வனே மிகவும் ஆப்தனுகையாலே வஞ்சனையின் வாஸனையுமில்லாதவன். ஜ்ஞானம் ஶக்தி முதலான ஆறு கு₃ணங்களும் நிறைந்த ப₄க₃வானுகையாலே மயக்கமோ அறிவின்மையோ அஶக்தியோ அவனுக்கு உண்டு என்று ஐயமுறவும் இடமில்லை. ஆகையால், ப்ரத்யக்ஷத்தால் தோன்றியபோதிலும், ஜீவன் என்னும் மயக்கம் அந்த வாஸுதேவனின் உபதே₃ஶத்தால் கயிற்றைப் பாம்பு என்று எண்ணும் மயக்கம் நீங்குவதுபோலே நீங்கத் தடையில்லை. இவ்வளவும் மாயாவாதி₃களாகிற அத்₃வைதிகளின் வாத₃ம்.

"எல்லாமறிந்த ஈஶ்வரனுக்கு அறியாமையாலே ஜீவன் என்னும் மயக்கம் ஏற்படுகிறது. அந்த ஈஶ்வரனே ஜீவனுக்கு உபதே₃ஶிக்கிருன்" என்று முன்னுக்குப்பின் முரணுகப் பேசும் இந்த மாயாவாதி₃களின் கருத்து விளங்குவதற்காக இரண்டு வகையாக விகல்பித்து அவர்களைக் கேள்விகள் கேட்கவேண்டும். அதாவது— "அர்ஜுனனுக்கு உபதே₃ஶிக்கும் பரமேஶ்வரனுன இந்த ப₄க₃வான் வாஸுதே₃வன் ஆத்மாவைப் பற்றிய உண்மையறிவை நேரே கண்டுவிட்டதால் அஜ்ஞானம் நீங்கப்பெற்றவனு? அல்லது நீங்கப்பெருதவனு?' என்பவவை அக்கேள்விகள். இக்கேள்விகளின் கருத்துக்கள் பின்வருமாறு— 1. உபதே₃ஶம்புரியும் இவன் "ந த்வேவாஹம் ஜாது நாஸம் ந த்வம் நேமே ஜநாதி₄பா:" [2-12] [நானே நீயோ இந்த அரசர்களோ எக்காலத்திலும் இல்லாமலிருந்ததுமில்லை இல்லாமலிருக்கப்போவதுமில்லை] என்று இந்த ஶாஸ்த்ரத்தின் தொடக்கத்தில் எல்லா ஜீவர்களைக் காட்டிலும் தன்னை வேறுபட்டவனுகவே உபதே₃ஶிக்கிருன். மேல் அத்₄யாயங்களிலும் க்ஷரபுருஷன் அக்ஷரபுருஷனுகிய இருவகையான ஜீவர்களைக் காட்டிலும் தன்னை உயர்ந்தவனுகவே கூறிக்கொள்கிருன். இத்தகைய இவனுடைய தெளிவான பேச்சுக்களிலிருந்து இவன் ஜீவர்களைக் காட்டிலும் வேறுபட்டவன் என்றே விளங்குகிறது. இதற்கு முரணில்லாமலே ஜீவர்களைத் தானுகக் கூறியுள்ளதற்குப் பொருள் கூறவேண்டும் என்பது ஒரு கருத்து. 2. உபதே₃ஶிக்கும் இவன் அறிவற்றவனுனல் அர்ஜுனனைப் போலே இவனுக்கும் ஶிஷ்யனுக இருக்கத் தகுதியுண்டேயொழிய உபதே₃ஶிக்கும் ஆசார்யனுயிருக்கத் தகுதியில்லை என்பது மற்றொரு

भगवान् वासुदेवः परमेश्वरः किमात्मयाथात्म्यसाक्षात्कारेण निवृत्ताज्ञानः ? उत न ? इति । निवृत्ताज्ञानश्चेत् ; निर्विशेषचिन्मात्रैकस्वरूपे

கருத்து. 3. இவன் ஜ்ஞானம், ஶக்தி முதலானவற்றாலே நிறைந்தவனாகையாலே ப4க3வான் என்று பெயர்பெற்றவன். ஆகையால் இவன் அறிவற்றவன் என்னும் இரண்டாவது விகல்பம் கைக்கொள்ளத்தகாதது. ஸர்வஜ்ஞனான இவனே அர்ஜுனனின் அஜ்ஞானம் நீங்குவதற்காக உபதே3ஶிக்கிறான் என்னும் முதல் விகல்பமே கைக்கொள்ளத்தக்கது என்பது பிறிதொரு கருத்து. 4. இவன் வாஸுதே3வன் என்று பெயர் பெற்றவன இப்பெயரின் பொருள் '' ஸர்வத்ராஸௌ ஸமஸ்தம் ச வஸத்யத்ர……… '' [வி.பு 1-2-12] [இவன் எல்லாப் பொருள்களிலும் வியாபித்து நிற்கிறானாகையாலும் எல்லாப் பொருள்களும் த4ரிக்கப்பட்டு இவனிடம் இருக்கின்றனவாகையாலும் வாஸுதே3வன் எனப்படுகிறான்] என்று விளக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து இவனுக்கும் மற்ற பொருள்களுக்கும் பே4த3மே தெளிவாகிறது. வஸுதே3வனின் பிள்ளை வாஸுதே3வன் என்று கொண்டாலும் பரவாஸுதேவனே வஸுதே3வனின் பிள்ளையாய் அவதரித்திருப்பதால் முதற்பொருள் இங்கும் பொருந்தும். ஆக, ஜீவர்களோடு பே4த3த்துக்கு முரண்படாமலே இந்த ஶ்லோகத்தில் சொல்லப்படும் அபே4த3த்துக்குப் பொருள் கொள்ளவேண்டும் என்பது வேறொரு கருத்து. 5. ''ஸர்வலோகமஹேஶ்வரம்'' [5-29] ''பி3ப4ர்த்யவ்யய ஈஶ்வர:'' [15-17] முதலான இடங்களில் பரமாத்மாவான தன்னை ஈஶ்வரனாகவும் மஹேஶ்வரனாகவும் குறித்துக்கொண்டிருக்கிறான். '' யஸ்மாத் க்ஷரமதீதோஹம் '' [15-18] என்னும் ஶ்லோகத்தில் எல்லா ஜீவர்களைக் காட்டிலும் உயர்ந்துநிற்கும் புருஷோத்தமனாகத் தன்னை வெளியிட்டுக்கொண்டிருக்கிறான். இந்த ஜீவபே4த3த்துக்கு அனுகு3ணமாகவே இந்த ஶ்லோகத்தில் சொல்லப்படும் ஜீவாபே4த3த்தைக் கொள்ளவேண்டும் என்பது மற்றுமொரு கருத்து. ஈஶ்வரனுக்கு அத்3வைதிகள் அஜ்ஞானத்தை ஒப்புக்கொள்ளுகையால், விஶிஷ்டாத்3வைதிகளைப்போலே, அவனுக்கு எக்காலத்திலும் மயக்கத்துக்குக் காரணமான அஜ்ஞானமில்லை என்று அவர்களால் ஒப்புக்கொள்ளமுடியாது. அப்படி ஒப்புக்கொண்டால் ஈஶ்வரனால் நியமிக்கப்படும் உலகத்தின் தோற்றம் ஏற்படமுடியாது. உலகத்தோற்றமில்லாமையால் அவன் ஈஶ்வரனாகவும் முடியாது. ஆகையால் ஈஶ்வரனுக்கும் ஒரு காலத்தில் அஜ்ஞானம் இருந்தது; அது பிற்காலத்தில்

आत्मन्यनुरूपाध्यासासंभावनया कौन्तेयादिभेददर्शनं, तान् प्रत्युपदेशादिव्यापाराश्च न संभवन्ति। अथात्मसाक्षात्काराभावादनिवृत्ताज्ञानः, न तर्ह्यज्ञत्वादेवात्मज्ञानोपदेशसंभवः ; * उपदेक्ष्यन्ति ते ज्ञानं

ஜ்ஞானத்தால் போக்கடிக்கப்படுகிறது என்று அவர்கள் ஒப்புக்கொண்டே தீரவேண்டும். அதனாலேயே அர்ஜுனனுக்கு உபதேசிக்கும் இந்த நேரத்தில் ஈஸ்வரனான கண்ணனுக்கு அந்த அஜ்ஞானம் போய்விட்டதா? அல்லவா? என்று முற்கூறியபடி இருவகையாக விகல்பித்துக் கேள்வி கேட்கப்படுகிறது. உபதே₃ஶ ஸமயத்தில் அஜ்ஞானம் நீங்கப்பெற்று ஆத்மாவை உள்ளபடி ஸாக்ஷாத்கரிப்பவனாக இந்த ஈஸ்வரனைக்கொண்டால் எவ்விதமான பே₄த₃முமற்றதாய் அறிவு மாத்திரமாயிருக்கும் ஆத்மாவில் அதற்கு எதிர்த்தட்டான தோற்றம் ஏற்பட இடமில்லையாகையால் அர்ஜுனன், த்₄ருதராஷ்ட்ர புத்திரர்கள் முதலானவர்களைத் தன்னைக்காட்டிலும் வேறுபட்டவர்களாகக் காண்பது, அவர்களுக்கு உபதே₃ஶம், ஸாரத்₂யம் முதலான செயல்களைச் செய்வது ஆகியவை பொருந்தமாட்டா. எவ்விதமான பே₄த₃முமற்ற அறிவுமாத்திரமான வஸ்துவில் பொய்த்தோற்றம் ஏற்பட இடமில்லை. அஜ்ஞான ஸம்ப₃ந்த₄த்தால் தோற்றம் ஏற்பட்டது என்று கொண்டாலும் அந்த அஜ்ஞானம் நீங்கியபிறகு அந்தப் பொய்த்தோற்றங்கள் எப்படித் தொடரமுடியும்? கு₃ணங்கள் முதலான விஶேஷங்களை (பே₄த₃ங்களை) உடைய பொருளில் ஒரு தனிக்கு₃ணம் மறைக்கப்பட்டபோது அதற்கு முரண்பட்ட வேறொரு கு₃ணத்தின் தோற்றம் ஏற்படலாம். அதை அறிபவன் ஒருவன் இருந்தால் அப்பொருளைப் பொய்யான ஆகாரத்தோடு அறியலாம், ஒரு கு₃ணமுமற்ற அறிவுமாத்திரமான பொருளில் மறைக்கப்படுமற்று எந்த ஆகாரமுமில்லாமையால் பொய்த்தோற்றம் ஏற்பட இடமேயில்லை. அறிபவன் ஒருவனுமில்லாமையால் பொய்த்தோற்றம் ஏற்பட அடியோடு இடமில்லை. இனி இரண்டாவது விகல்பத்தில் சொன்னபடி உபதே₃ஶ ஸமயத்தில் ஈஸ்வரனான கண்ணனுக்கு ஆத்மஸாக்ஷாத்காரம் ஏற்படாமையால் அஜ்ஞானம் நீங்கவில்லையானால், அறிவற்றவன் என்னும் காரணத்தாலேயே அவன் அர்ஜுனனுக்கு ஆத்மஜ்ஞானத்தை உபதே₃ஶிப்பதற்கு இடமில்லை. இந்த்₃ரியங்கள் அசேதனமாயிருந்தபோதிலும் ஜீவனுக்கு ப்ரத்யக்ஷஜ்ஞானத்தை விளைக்கமுடியும். புகை முதலான அடையாளங்கள் அசேதனமாயிருந்தபோதிலும் சேதனர்களுக்கு அநுமான ஜ்ஞானத்தை விளைக்கமுடியும். ஶப்₃த₃ம் அசேதனமாயிருந்தபோதிலும் சேதனர்க்கு ஶாப்₃த₄

ज्ञानिनस्तत्त्वदर्शिनः (४. ३४) इति ह्युक्तम्। अत एवमादिवादा अनाकलितश्रुतिस्मृतीतिहासपुराणन्यायस्ववाग्विरोधैरज्ञानिभिर्जगन्मोहनाय प्रवर्तिता इत्यनादरणीयाः।

ஜ்ஞானத்தை விளக்கமுடியும். அதுபோலே உபதே₃ஶிக்கும் சேதனன் அறிவிலியாயிருந்தபோதிலும் பிறருக்கு அறிவை விளக்க முடியும் என்று கூறமுடியாதே. அறிவு ஏற்பட்ட பின்பன்றோ உபதே₃ஶம் செய்யத்தகுதியே ஏற்படுகிறது. அறியாததை உபதே₃ஶித்தானாகில் அநாப்தன் (நம்பத்தகாதவன்) என்னும் அபகீர்த்தியன்றோ ஏற்படும். இந்த கீ₃தையில் கண்ணனே உண்மையறிவு உடையவர்களே உபதே₃ஶிக்கத் தகுதியுடையவர்கள் என்பதை "உபதே₃க்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ் தத்த்வத₃ர்ஶிந:" [4-34] [உண்மையைக் கண்ட ஜ்ஞானிகள் உனக்கு ஜ்ஞானத்தை உபதே₃ஶிப்பார்கள்] என்று கூறினான்றோ.

இதுவரை கண்டிக்கப்பட்ட ஶங்கரரின் மாயாவாத₃ மதத்திலும், ப₄ாஸ்கரரின் பே₄த₃ாபே₄த₃ மதத்திலும் யாத₃வப்ரகாஶரின் ப்₃ரஹ்ம பரிணமவாத₃ மதத்திலும் ஶ்ருதிஸ்ம்ருதி ந்யாய விரோத₄ங்கள் முதலிய தோ₃ஷங்கள் பல உள்ளன. ஶங்கரமதத்தில் பே₄த₃ஶ்ருதிகளும், ஸகு₃ணஶ்ருதிகளும், அந்தர்யாமி ஶ்ருதிகளும், ப்ரக்ருதியும் புருஷனும் நித்யம் என்று கூறும் ஶ்ருதிகளும், இப்படியெல்லாம் கூறும் ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களும் விருத்₃த₄ங்களேயாகுமென்பது தெளிவு. ப்₃ரஹ்மத்தையும் ஜீவனையும் ஒன்றாகக்கூறும் அபே₄த₃ஶ்ருதிகளிலும்— ப்₃ரஹ்மத்திடமுள்ள ஸர்வஜ்ஞத்வாதி₃ கு₃ணங்களையும், ஜீவனிடமுள்ள அஜ்ஞத்வாதி₃ கு₃ணங்களையும் தள்ளிவிட்டு, ப்₃ரஹ்மஜீவ வாசக பத₃ங்கள் நிர்விஶேஷசிந்மாத்ரத்தை லக்ஷணையாலே காட்டுகின்றன என்று அவர்களே ஒப்புக்கொள்ளுகையால், அந்த ஶ்ருதிகளும் அவர்களுக்கு முக்₂யார்த்த₂மாகமாட்டா. அபே₄த₃ ஶ்ருதிகளுக்கும் பே₄த₃ஶ்ருதிகளுக்கும் மேலெழத்தோன்றும் விரோத₄த்தை அந்தர்யாமி ஶ்ருதிகளைக்கொண்டும், நிர்க்கு₃ண ஶ்ருதிகளுக்கும் ஸகு₃ண ஶ்ருதிகளுக்கும் மேலெழத்தோன்றும் விரோத₄த்தை முந்தியவை ப்₃ரஹ்மத்திடம் தாழ்ந்த கு₃ணங்கள் இல்லை என்றும், பிந்தியவை கல்யாண கு₃ணங்கள் உண்டு என்றும் கூறுவதாகக் கொண்டும் போக்க இடம் இருக்கும்போது அபே₄த₃ ஶ்ருதிகளும் நிர்க்கு₃ண ஶ்ருதிகளும் முறையே பே₄த₃ஶ்ருதிகளையும் ஸகு₃ண ஶ்ருதிகளையும் தள்ளுகின்றன என்று அவர்கள் ஒப்புக்கொள்ளுகையால் அவர்கள் மதத்தில் ந்யாயவிரோத₄மும் ஏற்படுகிறது.

மேலும், அவர்கள் ப்₃ரஹ்மத்தை நிர்விஶேஷம் என்று ஸாதி₄க்கும் போது ஒரு ஹேதுவைக்கொண்டே ஸாதி₄க்கவேண்டும். அப்போது அந்த ஹேதுவால் சொல்லப்படும் விஶேஷத்தை (தன்மையை) ப்₃ரஹ்மத்திடம் ஒப்புக்கொள்ளவேண்டி வருகிறது. இது 'ப்₃ரஹ்மம் விஶேஷமற்றது' என்று சற்றுமுன் கூறிய தன் வாக்யத்தோடு முரண்படுகிறது. "அநுபூ₄தி (ஜ்ஞானம்) அறியத்தகாதது" என்று கூறும்போது அநுபூ₄தியை அநுபூ₄தி என்னும் ஶப்₃த₃த்தால் அறியத்தக்கதாகவே அவர்கள் கொண்டாக வேண்டுமாகையாலே இங்கும் ஸ்வவாச்ய விரோத₄ம் ஏற்படுகிறது. 'ப்₃ரஹ்மம் ஶப்₃த₃த்தால் அறிவிக்க முடியாதது" என்று அவர்கள் கூறும்போதும் ப்₃ரஹ்மம் ஶப்₃த₃த்தால் அது அறியப்படுவதாகக்கொண்டே தீர வேண்டுமாகையாலே இங்கும் ஸ்வவாக்ய விரோத₄ம் ஏற்படுகிறது. ப₄ாஸ்கரரின் பே₄த₃ாபே₄த₃ மதத்திலும் பே₄த₃ஶ்ருதிகள் அபே₄த₃ஶ்ருதிகள் ஆகிய இரண்டுக்குமே விரோத₄ம் ஏற்படுவது வெளிப்படை விகாரமுள்ள அசித்துக்கு ப்₃ரஹ்மஸ்வரூபத்தோடு ஐக்யத்தை ஒப்புக்கொள்ளுகையால் 'ப்₃ரஹ்மம் விகாரமற்றது' என்னும் ஶ்ருதிகளோடு விரோத₄முமேற்படுகிறது. உபாதி₄யோடு கூடிய ப்₃ரஹ்மமே குறைபாடுகளுள்ள ஜீவனாகிறது என்று ஒப்புக்கொள்ளுகையால் 'ப்₃ரஹ்மம் குறைபாடுகளற்றது' என்று கூறும் ஶ்ருதிகளோடு முரண்படுகிறது. அக₂ண்ட₃மான மஹாகாஶமும் க₄டத்தினுள் அடங்கியுள்ள க₄டாகாஶமும் ஒன்றாயிருப்பதுபோலே அக₂ண்ட₃மான ப்₃ரஹ்மமும் ஶரீரத்துள் அடங்கும்போது ஜீவன் எனப்படுகிறதாகையாலே இரண்டும் ஒன்றே என்று இவர்கள் கொள்ளுகிறார்கள். அளவற்றிருக்கும் மஹாகாஶமும் அளவுடைய க₄டாகாஶமும் ஒன்றாக முடியாது என்பது வெளிப்படை. அது போலவே அளவற்ற ப்₃ரஹ்மமும் ஶரீரத்துக்குள் அடங்கிய ஜீவனும் ஒன்றாக முடியாது என்பது தெளிவு. ஆகையால் அவர்களுடைய மதத்தில் அபே₄த₃ ஶ்ருதிகளும் பெரும்பாலும் முக்₂யார்த்த₂த்தை யுடையவையல்ல. இவ்வண்ணமே "தத் த்வமஸி" முதலான வாக்யங்களில் ஜீவனையும் ஈஶ்வரனையும் ஒரே வேற்றுமையில் படித்திருப்பதும் அவர்களுக்கு ஸ்வரஸமாகாது. ஸர்வஜ்ஞத்வம் (எல்லாமறிந்திருக்கை) முதலான கு₃ணக₃ணங்களோடு கூடியிருக்கும் ப்₃ரஹ்மத்துக்கு எல்லா ஜீவர்களோடும் ஐக்யம் ஒப்புக்கொண்டால் எல்லா ஜீவர்களுடைய து₃:க்க₂த்தையும் ப்₃ரஹ்மம் அறிந்து அனுப₄விக்க வேண்டிவரும் என்னும் தோ₃ஷம் வந்தே தீரும். ஆகையால் ப்₃ரஹ்மம் தோ₃ஷமற்றது என்னும் வேத₃வாக்யங்களோடு ஏற்படும்

விரோத₄த்தைத் தவிர்க்க முடியாதாகையால் இவர்கள் மதத்தில் நியாயவிரோத₄மும் ஏற்படுகிறது. யாத₃வப்ரகாஶமதத்திலோவெனில்; ப்₃ரஹ்மம் இயற்கையாகவே வேறுபட்டும் வேறுபடாமலும் இருக்கும் எல்லா ஜீவர்களாகவும் ஆகிறது என்று ஒப்புக்கொள்ளும் பெருங் குற்றம் காணப்படுகிறது. "க₄டோऽஸதி படோऽஸ்தி" [குடம் இருக்கிறது வஸ்திரம் இருக்கிறது] முதலான வழக்குகளில் அஸ்தி (இருக்கிறது) என்று ஒருபடிப்பட வரும் ஸத்தையே ப்₃ரஹ்மம் என்று அவர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். அப்படியானால் ப்₃ரஹ்மம் கண்ணால் காணத்தக்கதென்றே கொள்ளவேண்டிவருகிறது. இது 'ப்₃ரஹ்மம் கண்ணால் காணத்தகாதது" என்று கூறும் வேத₃வாக்யங்களோடு முரண்படுகிறது. க₄டத்தின் ஸத்தை க₄டத்தைவிட்டுப் பிரியாதபடி கூடியேயிருக்கும் அதன் ஜாதியேயாகையால் இவர்கள் மதத்தில் ப்₃ரஹ்மம் க₄டம் முதலானவற்றின் ஜாதியே என்றும் கொள்ள வேண்டி வருகிறது. இவ்வண்ணமாக மேலும் பல ஶ்ருதி விரோத₄ங்கள் இந்த மதத்தில் ஏற்படுகின்றன. ப₄ாஸ்கர யாத₃வப்ரகாஶ மதங்களில் ப்₃ரஹ்மத்துக்கு உலகத்தோடு பே₄த₃ம் அபே₄த₃ம் என்ற இரண்டையும் ஒப்புக்கொள்ளுகையால்,ப்₃ரஹ்மம் தோ₃ஷமுடையது என்றும் தோ₃ஷமற்றது என்றும் ஒப்புக்கொள்ளவேண்டி வருகிறது. "உலகம் உள்ளதாகவும் இல்லாததாகவுமாகிறது" என்று தொடங்கி ஸப்தப₄ங்கி₃யை ஒப்புக்கொள்ளும் ஜைனமதத்திற்போலே பே₄த₃ாபே₄த₃ங்களை ஒப்புக்கொள்ளும் இவர்கள் மதத்திலும் ஸ்வவசனவிரோத₄ம் வெளிப்படையாகும். இவ்வண்ணமாக இந்த மூன்று மதங்களும் ஶ்ருதி ஸ்ம்ருதீ திஹாஸ புராணவசனங்களையும் ந்யாயங்களையும் ஸ்வவாக்யவிரோத₄ம் வருவதையும் ஆராயாத அறிவிலிகளால் பரப்பப்பட்டு உலகம் மயங்குவதற்குக் காரணமாகின்றனவாகையால் இம்மதங்கள் நல்லோர்களால் ஆத₃ரிக்கத்தக்கவையல்ல.

இதற்குமேல் நம்முடைய விஶிஷ்டாத்₃வைத மதத்தில் பிறர் கூறும் ஶ்ருதிவிரோத₄ம் முதலான குற்றங்கள் களையப்படுகின்றன. அவர்கள் கூறும் தோ₃ஷங்களாவன:— உலகிற்கும் ப்₃ரஹ்மத்திற்கும் அடியோடு பே₄த₃த்தை நீங்கள் ஒப்புக்கொள்ளுகிறீர்களாகில் "தந்நாமரூபாப்₄யாம் வ்யாக்ரியத" [அந்தப் பரம்பொருள் (ஸ்ருஷ்டிகாலத்தில்) நாமரூபங்களை அடைந்தது] என்று காரணமான ப்₃ரஹ்மமே கார்யங்களின் நாமரூபங்களை அடைந்தது என்று கூறும் வேத₃வாக்யம் முரண்படும். ப்₃ரஹ்மம் ஒன்றை அறிந்தால் மற்றதெல்லாவற்றையும் அறிந்ததாகும் என்று வேத₃ம் கூறுவதும் ஒட்டாது. குடம் ஒன்றை அறிந்தால் அதைக் காட்டிலும் மிகவும்

வேறுபட்ட வஸ்த்ரம் முதலானவற்றை அறிந்ததாகாதே. மிகவும்
வேறுபட்ட உலகத்தையும் ப்3ரஹ்மத்தையும் ஒரே வேற்றுமையில்
படிப்பதும் குடத்தையும் படத்தையும் ஒரே வேற்றுமையில் படிப்பது
போல் பொருந்தாது. லக்ஷணையாலே இரண்டையும் ஒரே வேற்று
மையில் படிப்பதாகக் கூறுவீர்களாகில் அதுபோலே லக்ஷணையாலே
நிர்வஹிக்கும் எங்கள் மதத்தின்மேல் நீங்கள் குறைகூறுவதற்கு வழி
யில்லை. காரணமான மண்ணையும் கார்யமான க4டத்தையும்போலே
ப்3ரஹ்மமும் உலகமும் ஒரே த்3ரவ்யமென்று நீங்கள் ஒப்புக்கொள்
ளாமையால் ப்3ரஹ்மம் உலகுக்கு உபாதா3ந காரணம் என்று வேத3ங்
கள் கூறுவது ஒட்டாது. ப்3ரஹ்மம் தன்னிடமில்லாத உலகை உண்
டாக்குகிறது என்று கொண்டால், ஸத்கார்ய வாத3த்தோடு விரோ
தி4க்கும். இனி, வெவ்வேறுபட்ட ப்ரக்ருதி, புருஷன், ஈஶ்வரன்
ஆகியவற்றால் கார்யமான உலகம் ஆரம்பி4க்கப்படுகிறதாகில்,
"அவை ஒன்று சேர்ந்து உலகை ஆரம்பி4க்கின்றனவா?
அல்லது தனித்தனியாயிருந்தே உலகை ஆரம்பி4க்கின்றனவா?"
என்னும் கேள்வி எழுகிறது. ஒன்று சேர்ந்து உலகை ஆரம்பி4க்கின்
றனவாகில், ஒன்றின் ஸ்வபா4வம் மற்றொன்றோடு கலக்குமாகையாலே
யாத3வப்ரகாஶமதம் முதலானவற்றில் சொன்ன தோ3ஷம் உங்களுக்
கும் வரும். தனித்தனியாயிருந்தே உலகை ஆரம்பி4க்கின்றன என்று
கொள்வீர்களாகில் "ஒவ்வொன்றும் தனித்தனிக் கார்யத்தை ஆரம்
பி4க்கின்றனவா, அல்லது ஒரே கார்யத்தை ஆரம்பி4க்கின்றனவா?"
என்னும் கேள்வி எழுகிறது, தனித்தனிக் கார்யத்தை ஆரம்பி4க்
கின்றன என்று கூறுவீர்களாகில், எல்லாவற்றுக்கும் ப்3ரஹ்மம்
காரணம் என்னும் உங்கள் மதம் போய்விடும். ஒரே கார்யத்தை
ஆரம்பி4க்கின்றன என்று கூறுவீர்களாகில், ப்ரக்ருதி, புருஷன், ஈஶ்
வரன் ஆகிய மூன்றின் தன்மைகளும் கலந்துவிடும் என்னும்
தோ3ஷம் கார்ய நிலையில் ஏற்பட்டே தீரும். ப்3ரஹ்மம் ஸ்வரூபத்
தாலே விகாரமற்றது என்று கொள்ளும் உங்களுக்கு ப்3ரஹ்மம் கார்ய
மாகப் பரிணமிக்கிறது என்று கூறும் ஶ்ருதிகளோடு விரோத4ம்
ஏற்படுகிறது. அதற்காக ப்3ரஹ்மம் கார்யமாக விகாரமடைகிறது
என்று கொள்வீர்களாகில் யாத3வ ப்ரகாஶமதம் முதலானவற்றில்
நீங்கள் சொன்னபடி நிர்விகார ஶ்ருதியோடு விரோத4மேற்படும்.
ப்3ரஹ்மம் எப்போதுமே ஸர்வஜ்ஞத்வம் முதலான கல்யாண
கு3ணங்களோடு கூடியிருக்கும் என்று கூறும் உங்கள் மதத்துக்கு
'ப்3ரஹ்மம் கு3ணமற்றது' என்று கூறும் நிர்க்கு3ண ஶ்ருதிகளோடும்
'ப்3ரஹ்மம் ஜ்ஞானமாத்திரம்' என்று கூறும் ஶ்ருதிகளோடும் விரோ
த4ம் ஏற்படுகிறது. 'ப்3ரஹ்மத்துக்கும் உலகுக்கும் எப்போதும்

अत्रेदं तत्त्वम्—अचिद्वस्तुनश्चिद्वस्तुनः परस्य [च] ब्रह्मणो भोग्यत्वेन, भोक्तृत्वेन चेशितृत्वेन च स्वरूपविवेकमाहुः काश्चन श्रुतयः —* अस्मान्मायी सृजते विश्वमेतत्तस्मिंश्चान्यो मायया सन्निरुद्धः

பே4த3த்தை ஒப்புக்கொள்ளும் உங்கள் மதத்துக்கு பே4த3மே யில்லை' என்று கூறும் ஸ்ருதிகளோடும் விரோத4ம் ஏற்படுகிறது. ந்யாயவிரோத4மும் உங்கள் மதத்தில் ஏற்படுகிறது. அதாவது—ப்3ரஹ்மத்திற்கு பே4த3முண்டு கு3ணமுண்டு. ஶரீரமுண்டு என்று சொல்லும் வேத3வாக்யங்களும், ப்3ரஹ்மத்துக்கு இவை யொன்றும் கிடையாது என்று கூறும் வேத3வாக்யங்களும், அர்த்த2ஸ்வபா4வத்தால் முறையே முன் வாக்யங்களும பின் வாக்யங்களுமாவதையிட்டு, 'இல்லை' என்று கூறும் பின் வாக்யங்களால் 'உண்டு' என்று கூறும் முன் வாக்யஙகள் தள்ளப்படுகின் றன என்று நிர்ணயிக்கும் பூர்வமீமாம்ஸையிலுள்ள அபச்சே2த3 ந்யாயத்தோடு விரோத4ம் உங்களுக்கு ஏற்படுகிறது. எல்லாமாயிருக் கும் ப்3ரஹ்மம் எல்லாவற்றைக் காட்டிலும் வேறுபட்டிருப்பதாகவு மிருக்கிறது என்று நீங்கள் கூறுகையால் ஸ்வவசன விரோத4மும் ஏற்படுகிறது. இவ்வளவும் விஶிஷ்டாத்3வைதத்தின்மேல் பிறர்கூறும் ஆக்ஷேபங்கள்.

ஏட்டிக்குப் போட்டியாக, எந்த மதம் உண்மையானது என்று அறியமுடியாதபடி குழப்புவதற்காக, நாயும் பன்றியும் சண்டையிடும் போது கண்ணை மூடிக்கொண்டு கடித்துக் குதறுவதுபோலே செய் யப்படும் சண்டையாக ஆகுமே தவிர, பகுத்தறிவுள்ள மனிதர் கள் செய்யும் விவாத3மாகாது இது என்பதைக் காட்டி, ஶாரீரக மீமாம்ஸையிலுள்ள நல்ல ந்யாயங்களின் துணைகொண்ட எல்லா வேதா3ந்தங்களின் ஸாரார்த்த2த்தையே இந்த கீ3தாஶாஸ்த்ரம் காட்டுகிறது என்பதை ப்ரமாணங்களைக்கொண்டும் யுக்திகளைக் கொண்டும் நிலைநாட்டுவோம் இனி. பற்பல வேத3வாக்கியங்கள் அசேதனப்பொருள்கள் சேதனர்கள் அனுப4விப்பதற்காக ஏற்பட் டவை என்றும், ஜீவர்கள் இவ்வசேதனப் பொருள்களை அனுப4விப்ப வர்கள் என்றும், இவ்விரண்டு பொருள்களையும் நியமிப்பவன் ஈஶ்வரன் என்றும் இந்த தத்வத்ரயங்களையும் பிரித்துக்காட்டி ஒவ்வொன்றுக்கும் மற்றும் பல தன்மைகளையும் காட்டுகின்றன. அவ்வாக்யங்களாவன:—

1. "அஸ்மாந் மாயீ ஸ்ருஜதே விஶ்வமேதத் தஸ்மிம்ஶ்சாந்யோ மாயயா ஸந்நிருத்3த4:" [ஶ்வேதா 4-9] [மாயா எனப்படும் இந்த ப்ரக்ருதியி

(श्वे ४. ९), * मायां तु प्रकृतिं विद्यान्मायिनं तु महेश्वरम् (श्वे. ४. १०), * क्षरं प्रधानममृताक्षरं हरः क्षरात्मानावीशते देव एकः (श्वे. १. १०), * अमृताक्षरं हरः इति भोक्ता निर्दिश्यते ;

லிருந்து. மாயையுடையவனுகையாலே 'மாயன்' எனப்படும் ஸர்வேஶ்வரன் இவ்வுலகைப் படைக்கிருன். அதில் இவ்விரண்டிலும் வேறுபட்டவனுன ஜீவன் மாயையாகிற ப்ரக்ருதியாலே கட்டப்பட்டு நிற்கிருன்] இதில் ப்ரக்ருதியிலிருந்தே உலகைப் படைப்பதாகக் கூறுகையாலே நேரே விகாரத்தை அடைவது அசித்தான ப்ரக்ருதியே என்றும் மாயப்பிரான் விகாரமடைவதில்லை என்றும் காட்டப்படுகிறது. ஆகையால் நிர்விகாரஶ்ருதி விரோத4மில்லை. அசித்திலும் ஈஶ்வரனிலும், வேறுபட்ட ஜீவன் மாயையால் கட்டுப்பட்டிருக்கிருன் என்று இங்கு கூறுகையாலே ப்3ரஹ்மமே ஜீவனுகிறது என்கிற ஶங்கராதி3 மதங்கள் வேரறுக்கப்பட்டன. இங்கு மாயையால் மறைக்கப்பட்டு ப்3ரஹ்மம் வேருன ஜீவனுகத் தோன்றுகிறது என்று கூறவில்லையே. இயற்கையிலே ப்3ரஹ்மத்தைக் காட்டிலும் வேருயிருக்கும் ஜீவன் மாயையில் (ப்ரக்ருதியில்) கட்டுப்பட்டிருக்கிருன் என்றல்லவோ இந்த வாக்கியம் முழங்குகிறது மாயையால் ஜீவன் தனக்கு இயல்வான ஸர்வஜ்ஞத்வம், எல்லையற்ற ஆனந்த3ம் ஆகிய தன் தன்மைகள் வெளிப்படாமலிருக்கிருன் என்றல்லவோ இதற்குப் பொருள். 2. "மாயாம் து ப்ரகருதிம் வித்3யாந்மாயிநம து மஹேஶ்வரம்" [ஶ்வேதா 4-10] [மாயை எனப்படுவது மூலப்ரக்ருதியேயாகும் அந்த மாயையையுடையவனுகையாலே 'மாயீ' (மாயோன) எனப்படுகிறவனே ஈஶ்வரர்களுக்கெல்லாம் ஈஶ்வரனுன மஹேஶ்வரனுவான] இந்த ஶ்ருதியிலிருந்து அத்3வைதிகள் மாயா ஶப்3த3த்துக்குப் 'பொய்' என்ற பொருள் கொண்டது பொருந்தாது என்று காட்டப்பட்டது. மாயீ என்று உபநிஷத் படித்ததையே சங்கநூல்களிலிருந்து தொடங்கி இன்றளவும் "மாயோன், மாயன், மாயப்பிரான், மாயவன்" என்று தமிழர்கள் திருமாலின் பெயராக வழங்கினர். வேறு எந்த தெய்வத்துக்கும் இப்பெயரை அளிக்கவில்லை. இதிலிருந்து தமிழ்ச்சான்றோர்கள் கண்ட பரம்பொருள் திருமாலே என்று விளங்குகிறது. 3 "க்ஷரம் ப்ரதா4நம் அம்ருதாக்ஷரம ஹர: க்ஷராத்மாநாவீஶதே தே3வ ஏக:" [ஶ்வேதா 1-10] [ப்ரதா4நம் எனப்படும் மூலப்ரக்ருதி ஸ்வரூபவிகாரமடையக் கூடியதாகையாலே க்ஷரம் எனப்படுகிறது. போ4க்3யப்பொருளாகப் பரிணமித்திருக்கும் அதைத் தன் பொருட்டு எடுத்துக்கொள்ளுகையாலே 'ஹரன்' எனப்படும் ஜீவாத்மா ஸ்வரூபவிகாரமற்றவனுகையாலே

प्रधानमात्मनो भोग्यत्वेन हरतीति हरः। * स कारणं करणाधिपाधिपो न चास्य कश्चिज्जनिता न चाधिपः (श्वे. ६. ९), * प्रधानक्षेत्रज्ञपतिर्गुणेशः (श्वे. ६. १३), पतिं विश्वस्यात्मेश्वरं शाश्वतं शिवमच्यु-

---

அக்ஷரம் எனப்படுகிறான். இவ்விரண்டையும் மாயோனாகிற ஒரு தேவனே நியமிக்கிறான்] இங்கு 'க்ஷரம் ப்ரதானம்' என்று மூலப்ரக்ருதியையும் 'அம்ருதாக்ஷரம் ஹர:' என்று ஜீவாத்மாவையும் பூர்வார்த்தத்தில் எடுத்து, அடுத்தபடி உத்தரார்த்தத்தில் 'க்ஷராத்மாநௌ' என்று அவ்விரண்டையும் அனுவதிக்கையாலே, ஹரஶப்தத்தை உத்தரார்த்தத்தின் பின்பகுதியிலுள்ள 'தேவ ஏக:' என்பதோடுகூட்டி ருத்ரபரமாகக் கொள்வது பொருந்தாது. ஆகையால் மூலப்ரக்ருதியைத் தனக்கு போக்யமாக ஹரிக்கிறான் (எடுத்துக்கொள்ளுகிறான்) என்னும் வ்யுத்பத்தியாலே இந்த ஹரஶப்தம் ஜீவாத்மாவைக் குறிப்பதாகவே கொள்ளவேண்டும். ஶ்வேதாஶ்வதரோபநிஷத் மாயோனாகிய திருமாலைப் பரம்பொருளாகக் கூறுகிறது. உருத்திரனைப் பரம்பொருளாகக் கூறவில்லை என்று விஷ்ணுசித்த விஜயத்தில் விரிவாக நிரூபித்திருப்பதைக் காணலாம். இங்கு தாத்பர்யசந்த்ரிகையிலும் விரிவான விசாரமுள்ளது. இந்த ஶ்ருதியிலிருந்தும் சிதசிதீஶ்வர தத்வங்கள் வெவ்வேறானவை என்று தெளிவாக விளங்குகிறது. 4. "ஸ காரணம் கரணாதிபாதிப: ந சாஸ்ய கஶ்சிஜ்ஜநிதா ந சாதிப:" [ஶ்வேதா 6-9] [அப்பரமாத்மா அனைவர்க்கும் காரணமாகிறான்; இந்த்ரியங்களுக்குத் தலைவனான ஜீவனுக்கும் அவன் தலைவன்; அவனைப் படைத்தவன் எவனுமில்லை; அவனுக்குத் தலைவனும் எவனுமில்லை] இந்த வாக்யத்திலிருந்தும் ஜீவேஶ்வரபேதமும், ப்ரஹ்மத்தின் காரணத்வம் ஸ்வாமித்வம் முதலான குணங்களும் தெளிவாக விளங்குகின்றன. 5. "ப்ரதாநக்ஷேத்ரஜ்ஞபதிர்குணேஶ:" [ஶ்வேதா 6-13] [மூலப்ரக்ருதிக்கும் ஜீவனுக்கும் தலைவன் பரமாத்மா; கல்யாண குணங்களனைத்தையும் தன்னிடத்தில் கொண்டு ஆள்பவன்] இந்த ஶ்ருதியும் உலகுக்கும் ப்ரஹ்மத்துக்கும் அடியோடு வேறுபாட்டையும், ப்ரஹ்மம் கல்யாணகுணங்களையுடையது என்பதையும் உறுதிப்படுத்துகிறது. 6. "பதிம் விஶ்வஸ்யாத்மேஶ்வரம் ஶாஶ்வதம் ஶிவமச்யுதம்" [தை-நா 11] [உலகனைத்துக்கும் தலைவனாய், தனக்குத் தானே தலைவனாய், என்றுமே மங்களமாயிருப்பவனாய், அடியவரை நழுவவிடாத அச்யுதனாயிருப்பவன் நாராயணன்] நாராயணனே பரப்ரஹ்மம் என்றும், பரதத்வம் என்றும், பரஞ்சோதி என்றும், பரமாத்மா என்றும் முழங்கும் நாராயணாநுவாகத்திலுள்ள இந்த மந்த்ரத்தாலும்

तम् (ना-११), * ज्ञाज्ञौ द्वावजावीशनीशौ (श्वे. १. ९), * नित्यो नित्यानां चेतनश्चेतनानामेको बहूनां यो विदधाति कामान् (श्वे. ६.१३), * भोक्ता भोग्यं प्रेरितारं च मत्वा (श्वे. १. १२), * पृथगात्मानं प्रेरितारं च मत्वा जुष्टस्ततस्तेनामृतत्वमेति (श्वे. १. ६), * तयोरन्यः

உலகத்திற்கும் ப்$_3$ரஹ்மத்திற்கும் மிகவும் வேறுபாடு உண்டு என்று தெளிவாகிறது. 7. "ஜ்ஞாஜ்ஞௌ த்$_3$வாவஜாவீசாநீசௌ" [ஶ்வேதா 1-9] [இருவரும் பிறப்பற்றவர்களாயினும், எல்லாமறிந்த பரமனும் சிற்றறிவினனான ஜீவனும் (முறையே) அனைத்தையும் நியமிக்கும் ஈசனாகவும், எதையும் நியமிக்கமாட்டாத அநீசனாகவும் இருக்கின்றனர்.] இந்த ஶ்ருதியிலிருந்தும் ஜீவனும் பரமாத்மாவும் அநாதி$_3$யாயிருந்த போதிலும், ஈஶ்வரன் அனைத்துமறிந்தவனாய், ஜீவன் சிறிதே அறிந்தவனாய், ஈஶ்வரன் அனைத்தையும் நியமிப்பவனாய், ஜீவன் அவனால் நியமிக்கப்படுபவனாய் இருப்பதைக் கூறுகையால் ஜீவேஶ்வரர்களுடைய அத்யந்தபே$_4$த$_3$ம் நித்யமானது என விளங்குகிறது. தூங்கும்போதும், மூர்ச்சை நிலையிலும், மரண நிலையிலும், ப்ரளயத்தின்போதும் ஜீவன் ஒன்றையும் அறிவதில்லை. விழித்திருக்கும்போதும் ஸ்வப்நத்தின் போதும் சில விஷயங்களையே அறிகிறான். இவன் அறியாத விஷயங்களோ அளவற்றவை. இப்படிப்பட்ட ஜீவனும் ஈஶ்வரனும் எப்படி ஒன்றாக முடியும்? 8. "நித்யோ நித்யாநாம் சேதநஶ்சேதநாநாம் ஏகோ ப$_3$ஹூநாம் யோ வித$_3$த$_4$ாதி காமாந்" [ஶ்வே6-13 கட$_2$2-5-13] [என்றுமிருப்பவனாய், அறிவுள்ளவனாய், ஒருவனாய் இருக்கும் எந்த ஸர்வேஶ்வரன் என்றுமிருப்பவர்களாய், அறிவுள்ளவர்களாய், பலரான ஜீவர்களுக்கு விருப்பங்களை அளிக்கிறானோ] இந்த வாக்யம் ஈஶ்வரனைக்காட்டிலும் ஜீவர்கள் வேறுபட்டவர்கள் என்றும், ஸம்ஸார நிலையோடு மோக்ஷ நிலையோடு வாசியற என்றுமிருப்பவர்கள் என்றும், பலர் என்றும், ஈஶ்வரனைப்போலவே அறிவுக்கு இருப்பிடமாயிருப்பவர்கள் என்றும், ஈஶ்வரன் ஒப்பற்றவன் என்றும், ஜீவர்களுக்கு எல்லாப் ப$_2$லன்களையும் அளிப்பவன் என்றும் முழங்கி ஶங்கராதி$_3$மதங்களைத் தகர்க்கிறது. ஜீவேஶ்வரர்களுக்கு என்றும் அத்யந்தபே$_4$த$_3$த்தை நிலைநாட்டுகிறது. 9. "போ$_4$க்தா போ$_4$க்$_3$யம் ப்ரேரிதாரஞ்ச மத்வா" [ஶ்வேதா 1-12] [அசேதனப்பொருளை அனுப$_4$விக்கும் ஜீவன், அவனால் அனுப$_4$விக்கப்படும் அசேதனப்பொருள், அனைத்தையும் நியமிக்கும் ஈஶ்வரன் எனும் மூவரையும் நினைத்து] 10. "ப்ருத$_2$க$_3$ாத்மாநம் ப்ரேரிதாரஞ்ச மத்வா ஜுஷ்டஸ்ததஸ்தேநாம்ருதத்வமேதி" [ஶ்வேதா 1-6] [தன்னையும், தன்னை நியமிக்கும் ஸர்வேஶ்வரனையும் தனிப்பட்டவர்களாக அறிந்து, அந்த ஸர்வேஶ்வரனால் அருளப்பட்டவனாய், ஜீவன் மோக்ஷமடை

पिप्पलं स्वाद्वत्त्यनश्नन्नन्यो अभिचाकशीति (मु. ३. १. १), *अजामेकां लोहितशुक्लकृष्णां बह्वीं प्रजां जनयन्तीं सरूपाम्। अजो ह्येको जुषमाणोऽनुशेते जहात्येनां भुक्तभोगामजोऽन्यः (श्वे.४.५. ना १२-५),

கிருன்] இவ்வாக்யங்களில் ஜீவேஶ்வரபேதத்தை அறியவேண்டுமென்று வேதமே விதிக்கிறது. இப்படி பேதத்தை அறிந்து எம்பெருமானுடைய அருளுக்கு இலக்கானால்தான் ஜீவனுக்கு மோக்ஷம் கிடைக்கும் என்றும் முழங்குகிறது. வாக்யார்த்தஜ்ஞானத்தால் ஜீவப்ரஹ்மைக்யத்தை அறிந்தவனுக்கே மோக்ஷம் என்று கூறும் அத்வைதமதம் இதனால் தகர்க்கப்பட்டதாகிறது. 11. "த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமானம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே| தயோரன்ய: பிப்பலம் ஸ்வாத்வத்தி அநஶ்நந்நந்யோ அபிசாகஶீதி ||" [முண்டக 3-1-1] [துணையாயிருப்பவைகளாய், அழகிய இறக்கைகளை (ஜ்ஞானத்தை) உடையவைகளாய், ஒத்த தருணத்தையுடைவைகளான இரண்டு பறவைகள் (ஜீவனும் ஈஶ்வரனும்) ஒரே மரத்தில் (ஶரீரத்தில்) வாழ்கின்றன. அவைகளிலொன்று (ஜீவன்) இனிய பழத்தை (கர்மபலத்தை) உண்கிறது. மற்றொரு பறவை (ஈஶ்வரன்) அப்பழத்தை உண்ணாமலிருந்தபோதும் மிக விளங்கி நிற்கிறது] இவ்வாக்யம் ஒரே ஶரீரத்திலிருக்கும் ஜீவேஶ்வரர்களில் ஜீவன் ஜ்ஞானச்சுருக்கத்தையடைந்து கர்மபலத்தைப் புசிக்கையால் வாடி நிற்கிருன் என்றும், ஸர்வேஶ்வரன் அவனை நியமித்துக்கொண்டிருக்கையால் ஒளிபெற்று நிற்கிருன் என்றும் கூறுகையால் ஜீவேஶ்வரர்களின் அத்யந்தபேதம் இதிலிருந்தும் விளங்குகிறது. 12. "அஜாமேகாம் லோஹித ஶுக்ல க்ருஷ்ணாம பஹ்வீம் ப்ரஜாம் ஜநயந்தீம் ஸரூபாம்| அஜோ ஹ்யேகோ ஜுஷமாணோऽநுஶேதே ஜஹாதயேநாம் புக்தபோகாமஜோऽந்ய: ||" [ஶ்வேதா 4-5 தை-நா 12-5] [சிவப்பு (ரஜஸ்) வெளுப்பு (ஸத்வம்) கறுப்பு (தமஸ்) ஆகிய மூன்று நிறங்களையும் (குணங்களையும்) உடையதாய், தன்னையொத்த பல பிரஜைகளை (கார்யங்களைப்) படைப்பதாய், ஒன்றாயிருப்பதாய், பிறப்பற்றதான மூலப்ரக்ருதியைப் பிறப்பற்றவனை ஸம்ஸாரி ஜீவன் உகப்புடன் அனுபவிக்கிருன். இதை முன்னமே அனுபவித்த பிறப்பற்றவனை முக்தஜீவன் இதைக் கைவிட்டுச் செல்கிருன்] இந்த ஶ்ருதியில் ஸத்வரஜஸ்தமோகுணங்களையுடைய ப்ரக்ருதி, புருஷன் இரண்டுமே அநாதியானதென்றும் புருஷனுடைய கர்மானுரூபமாக ப்ரக்ருதி பரிணாமத்தை அடைகிறதென்றும், பத்தஜீவனும் முக்தஜீவனும் வேறு என்றும், பத்தஜீவன் முக்தியடையும்போது ப்ரக்ருதியைவிட்டுச் செல்லுமித்தனையேயுள்ளது என்றும் காட்டப்படுகிறது. ப்ரஹ்மத்தை மாயை மறைக்கிறது என்னும் அத்வைதிகளின் கொள்கைக்கு இது முரண்பட்டது.

/(* गौरनाद्यन्तवती सा जनित्री भूतभाविनी (मं. उ.), * समाने वृक्षे पुरुषो निमग्नोऽनीशया शोचति मुह्यमानः। जुष्टं यदा पश्यत्यन्यमीशमस्य महिमानमिति वीतशोकः (श्वे. ४. ७) इत्याद्याः।)

13 கௌ3ளரனாத்3யந்தவதி ஸா ஜநித்ரீ பூ4தபா4விநீ| ஸிதாஸிதா ச ரக்தா ச ஸர்வகாமது3க4ா விபே4ா: //" [மந்த்ரிகோபநிஷத் 1.5] [ஆதி3யந்தமற்றதாய், மஹான் அஹங்காரம் முதலான (அறிவற்ற) ஸமஷ்டி கார்யப் பொருள்களையும், அண்ட3த்துக்குள்ளிருக்கும் அசேதனப் பொருள்களாகிய வ்யஷ்டிகார்யப் பொருள்களையும் உண்டாக்குவதாய், (ஸத்வம், தமஸ், ரஜஸ் என்னும் முக்குணங்களாகிற) வெளுப்பு, கறுப்பு, சிவப்பு நிறங்களையுடையதாய், ஸர்வேஶ்வரனுக்கு லீலாரஸமான பாலைக் கறப்பதான பசுவாயிருப்பது மூலப்ரக்ருதி] இந்த ஶ்ருதியில் மூலப்ரக்ருதியை ஆதி3யற்றது என்பதோடு நில்லாமல் அந்தமற்றது என்றும் கூறியிருக்கையாலே மோக்ஷமடைந்த பிறகு உலகத்தோற்றம் மறைந்து நிர்விஶேஷசிந்மாத்ரப்3ரஹ்மமே எஞ்சிநிற்கிறது என்னும் அத்3வைதிகளின் மதம் தகர்க்கப்பட்டதாகிறது. எம்பெருமானுக்கு லீலாரஸத்தை விளைக்கும் மூலப்ரக்ருதி என்றுமே உள்ளது உண்மையானது என்ற விஶிஷ்டாத்3வைத மதம் வலியுறுத்தப்பட்டதாகிறது. 14. "ஸமாநே வ்ருக்ஷே புருஷோ நிமக்3நோऽநீஶயா ஶோசதி முஹ்யமாந:| ஜுஷ்டம் யதா3 பஶ்யத்யந்ய மீஶம் அஸ்ய மஹிமாநமிதி வீதஶோக://" [ஶ்வே 4.7] [மரம்போல் அழியக்கூடிய ஒரே ஶரீரத்தில் அழுந்தி ப்ரக்ருதி ஸம்ப3ந்த4த்தாலே மயங்கி, தன் ஸ்வரூபத்தை உணராமல் வருந்துகிறன் ஜீவன். எப்போது அவன் தன்னை த4ரிப்பவனாய், நியமிப்பவனாய் தனக்கு ஸ்வாமியாயிருக்கையாலே வேறுபட்டவனாய், தன் கர்மத்தால் ஆராதி4க்கப்பட்டு உகப்படைபவனான ஸர்வேஶ்வரனையும் அவனுடைய பெருமையையும் காண்கிறனோ அப்போது துன்பம் நீங்கப்பெற்றவனாகிறன்] இந்தஶ்ருதியிலிருந்தும் ஶரீரத்தில் அழுந்தி மயங்கி நிற்கும் ஜீவனைக்காட்டிலும் அவனுக்கு ஸ்வாமியாய் நியாமகனாய் த4ாரகனான ஈஶ்வரன் மிகவும் வேறுபட்டவன் என்றும், ஸர்வேஶ்வரனுடைய உகப்பாலேயே ஜீவன் ஸம்ஸாரம் நீங்கப்பெறுகிறன் என்றும் விளங்குகிறது. இதிலும் இந்த பே4த3ஜ்ஞானமே மோக்ஷகாரணம் என்னும் விஶிஷ்டாத்3வைத ஸித்3த4ாந்தமே வலியுறுத்தப்படுகிறது என்றும், ஜீவப்3ரஹ்ம அபே4த3ஜ்ஞானம் மோக்ஷகாரணம் என்னும் அத்3வைத ஸித்3த4ாந்தம் தள்ளப்படுகிறது என்றும் உணரத்தக்கது.

/ (   ) இவ்வடைப்பினுள்ளிருப்பதற்குத் தாத்பர்ய சந்த்3ரிகையுரையில்லை.

अत्रापि * अहङ्कार इतीयं मे भिन्ना प्रकृतिरष्टधा। अपरेयमितस्त्वन्यां प्रकृतिं विद्धि मे पराम्। जीवभूतां (७. ४), * सर्वभूतानि कौन्तेय प्रकृतिं यान्ति मामिकाम्। कल्पक्षये पुनस्तानि कल्पादौ विसृजाम्यहम्। प्रकृतिं स्वामवष्टभ्य विसृजामि पुनःपुनः। भूतग्राममिमं कृत्स्नमवशं प्रकृतेर्वशात्॥...मयाऽध्यक्षेण प्रकृतिस्सूयते सचराचरम्। हेतुनाऽनेन

வேத₃வாக்யங்களில் இப்படி உள்ளதுபோலவே இந்த கீ₃தை யிலும் பல ப்ரகரணங்களில் சித் அசித் ஈஶ்வரன் ஆகியவர்களுடைய பே₄த₃மே காட்டப்படுகிறது. 1. ''பூ₄மிராபோऽநலோ வாயு: க₂ம் மநோ பு₃த்₃தி₄ரேவ ச / அஹங்கார இதீயம் மே பி₄ந்நா ப்ரக்ருதிரஷ்டதா₄ // அபரேயமிதஸ்த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்₃தி₄ மே பராம் / ஜீவபூ₄தாம் மஹாபா₃ஹோ யயேத₃ம் தா₄ர்யதே ஜக₃த் //''[7-4, 5] [நிலம் நீர் தீ காற்று ஆகாஶம் மனம் (முதலிய இந்திரியங்கள்) மஹான் அஹங்காரம் ஆகிய எட்டுவித₄மாகப் பிரிந்திருக்கும் இந்த ப்ரக்ருதியானது என்னுடையதேயாகும் என்று அறிவாய். தடக் கையனே! இந்த அசேதந ப்ரக்ருதி தாழ்ந்தது; இதைக்காட்டிலும் மிகவும் வேறுபட்டதாய், 'ஜீவன்' என்று பெயர் பெற்றதாய், முற்கூறிய அசேதன ப்ரக்ருதியைக் காட்டிலும் மேலானதான ப்ரக்ருதியையும் என்னுடையது என்று அறிவாயாக; எந்த ஜீவபூ₄தப்ரக்ருதியினாலே இவ்வுலகம் முழுவதும் தா₄ரிக்கப்படுகிறதோ] ப்ரக்ருதிகளைத் தன்னு டையது என்று கூறுவதன்மூலம் ஸர்வேஶ்வரனுக்கும் சேதநாசேதநங் களுக்கும் வேறுபாட்டையே கண்ணன் காட்டுகிறான். அபரா ப்ரக்ருதியான அசேதனமும், பராப்ரக்ருதியான சேதனமும் வேறு பட்டவை என்றும் இங்கு காட்டுகிறான். 2. ''ஸர்வபூ₄தாநி கௌந் தேய ப்ரக்ருதிம் யாந்தி மாமிகாம் / கல்பக்ஷயே புநஸ்தாநி கல்பா தௌ₃ விஸ்ருஜாம்யஹம் // ப்ரக்ருதிம் ஸ்வாமவஷ்டப்₄ய விஸ்ருஜாமி புந:புந: / பூ₄தக்₃ராமமிமம் க்ருத்ஸ்நம் அவஶம் ப்ரக்ருதேர்வஶாத் // மயாத்₄யக்ஷேண ப்ரக்ருதி: ஸூயதே ஸசராசரம் / ஹேதுநாऽநேந கௌந்தேய! ஜக₃த்₃வி₄ பரிவர்த்ததே //'' [9-7, 8, 10] [குந்தீ புத்ரனே! நான்முகனின் ஆயுள் முடிவில் எல்லாப்பொருள்களும் எனக்கு ஶரீரமான மூலப்ரக்ருதியை அடைகின்றன. அவற்றையே நான் ஸ்ருஷ்டிகாலத்தின் தொடக்கத்தில் மறுபடியும் படைக்கிறேன். (பலவித₄மாகப் பரிணமிக்கும்) என்னுடைய மூலப்ரக்ருதியை (எட்டுவித₄மாகப்) பரிணாமமடையச் செய்து (தே₃வர் முதலான நாலு

कौन्तेय जगद्धि परिवर्तते ॥ (९. ७) * प्रकृतिं पुरुषं चैव विद्ध्यनादी उभावपि (१३. १४), * मम योनिर्महद्ब्रह्म तस्मिन् गर्भं दधाम्यहम्। संभवस्सर्वभूतानां ततो भवति भारत ॥ (१४. ३) इति। जगद्योनि-भूतं महद्ब्रह्म मदीयं प्रकृत्याख्यं भूतसूक्ष्ममचिद्वस्तु यत्, तस्मिन्

வகைப்பட்ட) இந்த ஜீவராசிகள் முழுவதையும் மூலப்ரக்ருதிக்கு வசப்பட்டிருப்பதால் தன்வசம் இழந்ததாம்படி மறுபடியும் மறுபடியும் படைக்கிறேன். குந்தீபுத்ரனே! (என்னுடையதான) மூலப்ரக்ருதி தலைவனை என்னால் (தூண்டப்பட்டதாய்) அசைவனவும் அசையாதனவும் அடங்கிய உலகத்தை (ஜீவர்களின் கர்மானுகு3ணமாக) ஸ்ருஷ்டிக்கிறது. (ஜீவர்களின் கர்மானுகு3ணமான என் ஸங்கல்பமாகிற) இந்தக் காரணத்தால் முற்கூறிய உலகம் ஆவதும், வளர்வதும், அழிவதுமாக ஆகிறதன்றோ] இந்த ஶ்லோகங்களிலிருந்து பரமாத்மாவின் ஶரீரமான மூலப்ரக்ருதி ஸூக்ஷ்ம நிலையிலிருந்து ஸ்தூ2ல நிலையை அடைவதே ஸ்ருஷ்டி என்றும், மறுபடியும் ஸூக்ஷ்ம நிலையடைவதே ப்ரளயம் என்றும் விளங்குகிறபடியால்—மாயை மறைக்கையால் ஸ்ருஷ்டி என்றும் அந்த மறைவு நீங்குகையால் ப்ரளயம் என்றும் கூறும் அத்3வைத மதம் தள்ளப்படுகிறது. இங்கும் 'என்னுடைய ப்ரக்ருதி' என்கையால் ப்ரக்ருதிக்கும் ஈஶ்வரனுக்கும் பே4த3ம் தெளிவாகிறது. பரமாத்மா நியமிக்கையாலேயே சராசர ரூபமான உலகம் படைக்கப்படுகிறது என்று கூறுகையால், பரமாத்மாவின் ப்4ரமத்தாலே உலகத்தோற்றம் உண்டாகிறது என்று கூறும் அத்3வைத மதம் தள்ளப்படுகிறது. 3. ''ப்ரக்ருதிம் புருஷம் சைவ வித்3த்4யநாதீ3 உப4ாவபி'' [13-14] [ப்ரக்ருதி புருஷன் ஆகிய இரண்டையும் அநாதி3 என்று அறிவாயாக] ப்ரக்ருதி புருஷர்களை ஒருபடிப்பட அநாதி3யானவை என்று இங்கு கூறுகையால், ப்ரக்ருதி பொய்யானது என்றும், மாயை மறைக்கையால் ப்3ரஹ்மமே ஜீவனாகிறது என்றும் கூறும் அத்3வைத மதம் தகர்க்கப்படுகிறது. 4. ''மம யோநிர்மஹத்3ப்3ரஹ்ம தஸ்மிந் க3ர்ப்ப4ம் த3த4ாம்யஹம் / ஸம்ப4வஸ் ஸர்வ பூ4தாநாம் ததோ ப4வதி ப4ாரத //'' [14-3] [ப4ரதகுலத்தில் உதித்தவனே! பெரிதாய் 'ப்3ரஹ்ம' எனப்படுவதான மூலப்ரக்ருதி இவ்வுலகுக்குக் காரணமாயிருப்பதால் என்னுடையதாகவும் இருக்கிறது. மிக நுண்ணிய அவ்வசித்தில் சேதனனை க3ர்ப்ப4த்தை நான் சேர்க்கிறேன். அதனால் எல்லா பூ4தங்களுடைய உத்பத்தியும் ஏற்படுகிறது] இதிலிருந்து உலகத்தின் ஸ்ருஷ்டியின்போது ப4க3வானுடைய

चेतनाख्यं गर्भं संयोजयामि; ततो मत्सङ्कल्पकृताच्चिदचित्संसर्गादेव देवादिस्थावरान्तानामचिन्मिश्राणां सर्वभूतानां संभवो भवतीत्यर्थः। श्रुतावपि भूतसूक्ष्मं ब्रह्मेति निर्दिष्टं * तस्मादेतद्ब्रह्म नाम रूपमन्नं च जायते (मु. १. १. ९) इति। एवं भोक्तृभोग्यरूपेणावस्थितयोः सर्वावस्थावस्थितयोश्चिदचितोः परमपुरुषशरीरतया तन्नियाम्यत्वेन तद-

---

ஶரீரமான ப்ரக்ருதியே நேரே பரிணாமத்தை அடைகிறதென்றும் ஸ்ருஷ்டிக்குறுப்பான ப்ரக்ருதிபுருஷச்சேர்த்தி எம்பெருமானுடைய ஸங்கல்பத்தால் ஏற்படுகிறது என்றும், அதனாலேயே தே3வ மனுஷ்ய திர்யக் ஸ்தா2வரரூபமான நால்வகையான ஶரீரங்களோடு கூடிய ஜீவர்களின் படைப்பு ஏற்படுகிறது என்றும் விளங்குகையால் சித் அசித் ஈஶ்வரனாகிய மூன்று தத்துவங்களும் வெவ்வேறானவை என்று காட்டப்படுகிறது. மூலப்ரக்ருதியே உலகிலுள்ள அசேதனப்பொருள்களாகப் பரிணமிக்கையாலும், ஈஶ்வரன் அதை அப்படிப் பரிணமிக்கும்படி செய்து ஜீவனை அதோடு சேர்க்கையாலும், மூன்று தத்துவங்களுக்கும் வேறுபாடு தெளிவாக விளங்குகிறது. ப்3ரஹ்மஶப்3த3த்துக்கு மூலப்ரக்ருதி என்று பொருள் கொள்ளலாமோ? எனில் பரப்3ரஹ்மமான தன்னைக் காட்டிலும் வேறுபட்டதாக ப்3ரஹ்மத்தை எடுக்கையாலும், "தஸ்மாதே3தத் ப்3ரஹ்ம நாம ரூபம் அந்நம் ச ஜாயதே" [முண்ட3க 1-1-10] [அந்தப் பரப்3ரஹ்மத்திடமிருந்து ப்3ரஹ்மஶப்3த3த்தால் சொல்லப்படும் மூலப்ரக்ருதியின் கார்யநிலையான அவ்யாக்ருதமும் நாமரூபங்களோடு கூடிய சேதநாசேதனங்களும் உண்டாகின்றன] என்ற இடத்தில் ப்3ரஹ்மஶப்3த3த்தால் மூலப்ரக்ருதியின் நிலையொன்றைக் குறித்திருக்கையாலும் அசித்தான மூலப்ரக்ருதியை ப்3ரஹ்ம ஶப்3த3த்தால் குறிக்கத்தட்டில்லை. ஆக, இதுவரையில் சித், அசித், ஈஶ்வரன் ஆகிய மூன்று தத துவங்களுடைய பே4த3ப வேத3வாக்யங்களைக் கொண்டு நிலைநாட்டப்பட்டது. இந்த பே4த3ம் நையாயிக வைஶேஷிகர்கள் முதலானோராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆனால் நமது மதத்தில் ப்3ரஹ்மத்தையும் உலகத்தையும் ஓ ர வேற்றுமையில் படிக்கும் அபே4த3ஶ்ருதிகளும் முக்2யமாவதற்காக க4டகஶ்ருதிகளைக் கொண்டு உலகிற்கும் ப்3ரஹ்மத்துக்கும் ஶரீராத்மத் தன்மையும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. அந்த க4டகஶ்ருதிகள் காரணநிலையிலும் கார்யநிலையிலும் போ4க்தாவான சேதனனையும் போ4க்3யமான அசேதனத்தையும், பரமபுருஷனுக்கு ஶரீரமாகவும் அவனால் நியமிக்கப்படுவதாகவும் இருக்கையால் அவனைவிட்டுப்பிரியாதவை

पृथक्स्थिति परमपुरुषस्य चात्मत्वमाहुः काश्चन श्रुतयः। * यः पृथिव्यां तिष्ठन् पृथिव्या अन्तरो यं पृथिवी न वेद यस्य पृथिवी शरीरं यः पृथिवीमन्तरो यमयति (बृ ५. ७. ३) इत्यारभ्य * य आत्मनि तिष्ठन्नात्मनोऽन्तरो यमात्मा न वेद यस्यात्मा शरीरं य आत्मानमन्तरो यमयति स त आत्माऽन्तर्याम्यमृतः (बृ. ५.७.२२. मा) इति ; तथा * यः पृथिवीमन्तरे सञ्चरन् यस्य पृथिवी शरीरं यं पृथिवी न वेद इत्यारभ्य, * योऽक्षरमन्तरे सञ्चरन् यस्याक्षरं शरीरं

என்றும், அவன் அவ்விரண்டுக்கும் ஆத்மாவாயிருக்கிறான் என்றும் கூறுகின்றன. உலகுக்கும் ப்$_3$ரஹ்மத்துக்குமுள்ள இந்த ஶரீராத்மத் தன்மை ப்ரத்யக்ஷம் முதலான மற்ற ப்ரமாணங்களால் அறிய முடியாதது; தத்வோபதே$_3$ஶம் செய்யும் அநேக வேத$_3$வாக்யங்கள் ஆத$_3$ரத்துடன் இதை முழங்குகின்றன. ஆகையால் இந்த ஶ்ருதிகள் அபே$_4$த$_3$ ஶ்ருதிகளால் தள்ளப்படுகின்றன என்று ஶங்கிக்கவும் இடமில்லை. ஆகையால் இந்த வேத$_3$வாக்யங்களுக்கு அநுகு$_3$ணமாக ஶரீர லக்ஷணத்தை அமைத்துக்கொள்ளவேண்டும். அந்த க$_4$டகஶ்ருதிகளாவன: 1 "ய: ப்ருதி$_2$வ்யாம் திஷ்ட$_2$ந் ப்ருதி$_2$வ்யா அந்தரோ யம் ப்ருதி$_2$வீ ந வேத$_3$ யஸ்ய ப்ருதி$_2$வீ ஶரீரம் ய: ப்ருதி$_2$வீமந்தரோ யமயதி" [ப்$_3$ருஹ 5. 7. 3] [எவன் பூமியின் வெளியிலும் உள்ளும் வ்யாபித்திருக்கிறானோ, எவனை பூமி அறியமாட்டாதோ, எவனுக்கு பூமி ஶரீரமோ எவன் பூமியை உள்நுழைந்து நியமிக்கிறானோ] என்று தொடங்கி "ய ஆத்மநி திஷ்ட$_2$ந் ஆத்மநோऽந்தர: யமாத்மா ந வேத$_3$ யஸ்யாத்மா ஶரீரம் ய ஆத்மாநமந்தரோ யமயதி ஸ த ஆத்மாந்தர்யாம்யம்ருத:" [ப்$_3$ருஹ 5. 7. 22] [எவன் ஆத்மாவின் வெளியிலும் உள்ளும் வியாபித்திருக்கிறானோ, எவனை ஆத்மா அறியானோ, எவனுக்கு ஆத்மா ஶரீரமோ, எவன் ஆத்மாவை உள் நுழைந்து நியமிக்கிறானோ அழிவற்ற அவனே உனக்கு ஆத்மாவாய் அந்தர்யாமியாயிருப்பவன்.] என்று ப்$_3$ருஹதா$_3$ரண்யகத்தில் அந்தர்யாமி ப்$_3$ராஹ்மணத்தில் காரண நிலையிலும் கார்ய நிலையிலும் உள்ள ப்ரக்ருதி புருஷர்கள் பரமாத்மாவின் ஶரீரமாயிருப்பதில் ஒரு ஸாசியில்லை என்று காட்டப்பட்டது. 2 "ய: ப்ருதி$_2$வீமந்தரே ஸஞ்சரந் யஸ்ய ப்ருதி$_2$வீ ஶரீரம் யம் ப்ருதி$_2$வீ ந வேத$_3$" [எவன் பூமியின் உள்ளே வியாபித்திருக்கிறானோ, எவனுக்கு பூமி ஶரீரமோ, எவனை பூமி அறிய

यमक्षरं न वेद, * यो मृत्युमन्तरे सञ्चरन् यस्य मृत्युश्शरीरं यं मृत्युर्न वेद एष सर्वभूतान्तरात्माऽपहतपाप्मा दिव्यो देव एको नारायणः (सु. ७) अत्र मृत्युशब्देन तमश्शब्दवाच्यं सूक्ष्मावस्थमचिद्वस्त्वभिधीयते, अस्यामेवोपनिषदि * अव्यक्तमक्षरे लीयते अक्षरं तमसि लीयते (सु. २) इति वचनात्; * अन्तः प्रविष्टश्शास्ता जनानां सर्वात्मा (य. आ. ३. ११. २) इति च। एवं सर्वावस्थावस्थितचिदचिद्वस्तु-

---

வில்லையோ] என்று தொடங்கி "யோ Sக்ஷரமந்தரே ஸஞ்சரந் யஸ்யா க்ஷரம் மரீரம் யம்: அக்ஷரம் நவேத₃," [எவன் மூலப்ரக்ருதியின் நிலை யான அக்ஷரத்தினுள்ளே வியாபித்திருக்கிறானோ எவனுக்கு அக்ஷரம் மரீரமோ, எவனை அக்ஷரம் அறியவில்லையோ] "யோ ம்ருத்யுமந்தரே ஸஞ்சரந் யஸ்ய ம்ருத்யுர்மரீரம் யம் ம்ருத்யுர்ந வேத₃ ஏஷ ஸர்வபூ₄தாந்தராத்மா அபஹததபாப்மா தி₃வ்யோ தே₃வ ஏகோ நாராயண:" [ஸுபா₃ல 7] [எவன் ம்ருத்யு எனப்படும் மூலப்ரகருதியினுள்ளே வியாபித்திருக்கிறானோ, எவனுக்கு ம்ருத்யு மரீரமோ, எவனை ம்ருத்யு அறியாதோ இவனே எல்லா பூ₄தங்களுக்கும் அந்தராத்மாவாய், பாபமற்றவனாய், பரமபத₃த்தில் இருப்பவனாய், நாராயணன் எனப்படும் ஒப்பற்ற தே₃வன்] என்று ஸுபா₃லோபநிஷத்தில் அந்தர்யாமி ப்₃ராஹ்மணத்தில் சொன்ன அர்த்த₂த்தையே ஏறக்குறையச் சொல்லி அங்கு சொல்லப்பட்ட அபஹதபாப்மத்வம் (பாபமற்றிருக்கை), ஒப்பற்றிருக்கை முதலான பெருமைகளையுடைய பரப்₃ரஹ்மம் நாராயணனே என்று தெளிவாகக் காட்டிற்று. இங்கு ம்ருத்யு எனப்பட்டது 'தமஸ்' எனப் படும் மிகவும் ஸூக்ஷ்மநிலையிலுள்ள மூலப்ரக்ருதியே என்னும் விஷயம் "அவ்யக்தம் அக்ஷரே லீயதே அக்ஷரம் தமஸி லீயதே" [ஸுபா₃ல 2] [அவ்யக்தம் எனப்படும் ஸூக்ஷ்மமான அசேதனப் பொருள் அக்ஷரம் எனப்படும் அதிஸூக்ஷ்மமான அசேதனப் பொருளில் லயிக்கிறது. அவ்வக்ஷரம் தமஸ் எனப்படும் அத்யந்த ஸூக்ஷ்ம மான மூலப்ரக்ருதியில் லயிக்கிறது] என்று காட்டப்பட்டது. ஆகையால் இங்கு 'தமஸ்' எனப்படுவது ஒளிக்கு எதிர்த்தட்டான இருள் அல்ல என்று விளங்குகிறது. 3. "அந்த: ப்ரவிஷ்டஶ்மாஸ்தா ஜநாநாம் ஸர் வாத்மா" [யஜுர் ஆரண்ய 3.11.2] [எல்லா ஜீவர்களையும் உள் நுழைந்து நியமிக்கையாலே இப்பரப்₃ரஹ்மம் ஸர்வாத்மா ஆகிறது] என்று யஜுர்வேத₃த்திலுள்ள வாக்யம் ஆத்மாவின் லக்ஷணத்தையும் சொல்லிக்கொண்டு பரப்₃ரஹ்மம் அனைவருக்கும் ஆத்மா என்று முழங்கு

शरीरतया तत्प्रकारः परमपुरुष एव कार्यावस्थकारणावस्थजगद्रूपेणावस्थित
इतीममर्थं ज्ञापयितुं काश्चन श्रुतयः कार्यावस्थं कारणावस्थं च जगत्
स एवेत्याहुः ※सदेव सोम्येदमग्र आसीदेकमेवाद्वितीयं (छा. ६.२.१)
※तदैक्षत बहु स्यां प्रजायेयेति तत्तेजोऽसृजत (६.२.३) इत्यारभ्य
※सन्मूलास्सोम्येमास्सर्वाः प्रजास्सदायतनास्सत्प्रतिष्ठाः (६. ८. ६)
※ऐतदात्म्यमिदं सर्वं तत्सत्यं स आत्मा तत्त्वमसि श्वेतकेतो (६. ८. ७)

கிறது. உலகில் அரசனுக்குக் குடிகளைக் குறித்து நியமனம் செய்யும் பெருமையுள்ளது. ஆனால் அவன் அவர்களை வியாபித்திருப்பதில்லை. ஆகாஶம் பல பொருள்களையும் வியாபித்திருக்கிறது. ஆனால் அது அப்பொருள்களை நியமிப்பதில்லை, பரமாத்மாவோவெனில் அனைத்தையும் வியாபிப்பதாகவும் நியமிப்பதாகவும் இருக்கையாலே ஶரீரமான அனைத்துக்கும் ஆத்மாவாகவுமாகிறது என்று கருத்து.

இவ்வண்ணமாகக் காரண நிலையிலும் கார்யநிலையிலும் உள்ள சேதனசேதனப் பொருள்களை ஶரீரமாகக் கொண்டிருக்கையால் அவற்றை ப்ரகாரமாகக்கொண்ட பரமபுருஷனே இருநிலைகளிலுமுள்ள உலகமாக இருக்கிருன் என்னும் இந்த அர்த்த2த்தை நினைவுபடுத்துவதற்காகவே சில வேத3வாக்யங்கள் இருநிலைகளிலும் உள்ள உலகத்தை அப்பரம புருஷனாகவே கூறுகின்றன. அவையாவன:—
1. 'ஸதே3வ ஸோம்ய இத3மக்3ர ஆஸீத் ஏகமேவாத்3விதீயம்" [சா2ந் 6-2-1] [குழந்தாய்! இவ்வுலகம் முதலில் 'ஸத்' எனப்படும் ப்3ரஹ்மமாகவே இருந்தது. ஒன்றாகவே இருந்தது இரண்டற்றதாயிருந்தது] "ததை3க்ஷத ப3ஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி தத்தேஜோऽஸ்ருஜத" [சா2ந் 6-2-1] [அந்தப் பரம்பொருள் "நானே (அண்டத்தினுள்ளிருக்கும்) பல வ்யஷ்டிப் பொருள்களாக ஆகக்கடவேன் (அதற்காக அண்ட3காரணமான) ஸமஷ்டிப் பொருள்களாகவும் ஆகக்கடவேன்" என்று ஸங்கல்பித்தது. அது ஸமஷ்டிப் பொருள்களில் ஒன்றான தேஜஸ்ஸை ஸ்ருஷ்டித்து] என்று தொடங்கி "ஸந்மூலாஸ் ஸோம்ய இமாஸ்ஸர்வா: ப்ரஜாஸ் ஸதா3யதநா: ஸத்ப்ரதிஷ்டா2:" [சா2ந் 6-8-6] [குழந்தாய்! இந்தப் பொருள்களெல்லாம் ஸத்தாகிற பரப்3ரஹ்மத்திடமிருந்து தோன்றியவை. அதையே இருப்பிடமாகக்கொண்டு வாழ்பவை; முடிவில் அதையே அடைபவை] 'ஐதத3ாத்ம்யமித3ம் ஸர்வம் தத்ஸத்யம் ஸ ஆத்மா தத் த்வமஸி ஶ்வேதகேதோ" [சா2ந்

इति । तथा * सोऽकामयत, बहु स्यां प्रजायेयेति, स तपोऽतप्यत, स तपस्तप्त्वा, इदं सर्वमसृजत इत्यारभ्य * सत्यं चानृतं च सत्यमभवत् (आ. ६) इति । अत्रापि श्रुत्यन्तरसिद्धः चिदचितोः परमपुरुषस्य च स्वरूपविवेकः स्मारितः—

6·8-7] [இவ்வுலகமெல்லாம் இந்த ப்₃ரஹ்மமாகவே இருக்கிறது. அந்த ப்₃ரஹ்மம விகாரமற்றதாய் ஆத்மாவாயிருக்கிறது. ஶ்வேதகேதுவே! அந்த ப்₃ரஹ்மம் நீயாகிறாய்] என்று ச₂ாந்தோ₃க்₃யத்தில் இவ்வண்மையே சொல்லப்பட்டிருப்பதைக் காணலாம். இதிலிருந்து பே₄த₃ஶ்ருதிகளுக்கும் க₄டகஶ்ருதிகளுக்கும் அனுகு₃ணமாக இப்படிப் பொருள் கொள்ளும்போது ப்₃ரஹ்மத்தையும் உலகத்தையும் ஒன்றாக (ஒரே வேற்றுமையில்) படிப்பது முக்₂யமானதே என்று விளங்குகிறது. இப்படி ஒன்றாகப்படிக்கும் வேத₃வாக்யங்கள் காரண நிலையிலும் கார்ய நிலையிலும் பரமபுருஷனின் ப்ரகாரமாயிருக்கும் சேதனாசேதன த்₃ரவ்யம் ஒன்றாயிருப்பதே எனும் கருத்துடையவை என்றபடி. இந்த வேத₃வாக்யங்களுக்கு முரணாகவும், ப்ரத்யக்ஷம், அனுமானம், தன் வசனம் ஆகியவற்றுக்கு முரணாகவும் அத்₃வைதிகள் ஜீவப்₃ரஹ்மைக்யத்தைச் சொல்லி 'உலகம் பொய்' என்பது இவற்றால் தள்ளப்பட்டதாயிற்று. ப₄ாஸ்கரயாத₃வப்ரகாஶ மதங்களும் இவற்றுக்கு முரண்பட்டவை என்பது வெளிப்படை. 2 ச₂ாந்தோ₃க்₃யத்தில் சொன்னதுபோலவே ஶரீராத்மபா₄வமே ப்₃ரஹ்மத்தோடு சேதனாசேதனங்களை ஒன்றாக (ஒரே வேற்றுமையில்) படிப்பதற்குக் காரணம் என்று தைத்திரீயோபநிஷத்தும் கூறுகிறது. "ஸோऽகாமயத ப₃ஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி ஸ தபோऽதப்யத ஸதபஸ்தப்த்வா இத₃ம் ஸர்வமஸ்ருஜத" [தை ஆந 6] [அந்தப் பரப்₃ரஹ்மம் "நான் பல வ்யஷ்டிப்பொருள்களாக ஆகக்கடவேன். அதற்காக ஸமஷ்டிப்பொருள்களாகவும் ஆகக்கடவேன்" என்று ஸங்கல்பித்தது. அது ஜ்ஞானமயமான தவத்தைச் செய்தது. அப்படித் தவத்தைச் செய்து இது அனைத்தையும் படைத்தது] என்று தொடங்கி, "ஸத்யஞ்சாந்ருதஞ்ச ஸத்யமப₄வத்" [விகாரமடையாத சேதனமாகவும் விகாரமடையும் அசேதனமாகவும் ஆகி விகாரமடையாமலே இருந்தது] என்று முடிவது அவ்வாக்யம். இங்கு தவம் என்பது காயக்லேஶரூபமான தவமல்ல, "தபஸா சீயதே ப்₃ரஹ்ம" [முண்ட₃க1-1-9] என்று தொடங்கும் ப்ரகரணத்தில் "யஸ்ய ஜ்ஞாநமயம் தப:" என்று வ்யாக்₂யானம் செய்திருக்கையால் ஜ்ஞானமயமான ஆலோசனமே இங்குதவம் எனப்படுகிறது என்று விளங்குகிறது.

* हन्ताहमिमास्तिस्रो देवता अनेन जीवेनात्मनाऽनुप्रविश्य नामरूपे व्याकरवाणि (छा. ६. ३. २), * तत्सृष्ट्वा, तदेवानुप्राविशत्, तदनुप्रविश्य, सच्च त्यच्चाभवत्......विज्ञानं चाविज्ञानं च, सत्यं चानृतं च सत्यमभवत् (आ. ६) इति च। एवंभूतमेव

இந்தச் ச2ாந்தோக்3ய தைத்திரீய ப்ரகரணங்களிலேயே பே4த3ா பே4த3ஶ்ருதிகள் முரண்படாமைக்கு ப்3ரஹ்மம் உலகத்தை அநுப்ரவேஶித்திருப்பதே காரணம் என்று மேலே தெளிவுபடுத்தப்படுகிறது. அந்தர்யாமி ப்3ராஹ்மணம் முதலான வேறு ப்ரகரணங்களிலுள்ள க4டகஶ்ருதிகளைத் தேடிப்போகவேண்டிய அவசியமுமில்லை என்றபடி. அவ்வாக்யங்களாவன :—3. ''ஹந்தாஹமிமாஸ்திஸ்ரோ தே3வதா: அநேந ஜீவேநாத்மநாऽநுப்ரவிஶ்ய நாமரூபே வ்யாகரவாணி'' [ச2ாந் 6-3-2] [நான் தீ, நீர், பூ4மி என்னும் மூன்று தே3வதைகளையும் இந்த ஜீவஸமஷ்டியாகிற என்னால் (என் ஶரீரத்தால்) வ்யாபித்து நாமருபங்களைச் செய்யக்கடவேன் (என்று பரதே3வதை ஸங்கல்பித்தது)] என்பது ச2ாந்தே3ாக்3ய வாக்யம். இங்கு ''அநேந ஜீவேநாத்மநா'' [இந்த ஜீவனாகிற என்னால்] என்றது ''ஸிம்ஹேந பூ4த்வா ப3ஹவோ மயாத்தா:'' [விஷ்ணு த4ர்மம் 98-17] [ஸிம்ஹமான என்னால் பலர் புசிக்கப்பட்டனர்] என்றதுபோன்ற ப்ரயோக3மாகும். 4. ''தத் ஸ்ருஷ்ட்வா தத3ேவாநுப்ராவிஶத் தத3நுப்ரவிஶ்ய ஸச்ச த்யச்சாப4வத்...நிலயநம் ச அநிலயநம் ச ஸத்யம் சாந்ருதம் ச ஸத்யமப4வத்'' [தை ஆந 6] [அந்த ப்3ரஹ்மம் அதைப் படைத்து அதையே உள்நுழைந்தது. அதை உள்நுழைந்து விகாரமற்றதாய் ஜ்ஞானமயமான சேதனமாகவும், விகாரமுள்ளதாய் ஜ்ஞானமற்றதான அசேதனமாகவும் ஆயிற்று. இப்படிச் சேதனாசேதனங்களான பின்பு விகாரமற்றதாகவே இருந்தது.] என்பது தைத்திரீய வாக்யம். ச2ாந்தே3ாக்3ய வாக்யத்தில் அசித்தை வியாபித்திருப்பது தெளிவாகச் சொல்லப்பட்டது. ஜீவன் விஷயத்தில் ஓரே வேற்றுமையில் படிப்பது மட்டுமே காணப்படுகிறது. தைத்திரீய வாக்யத்திலோவெனில், சேதனாசேதனங்களிரண்டிலும் வாசியில்லாமல் ப்3ரஹ்மத்தின் வ்யாப்தி சொல்லப்படுகிறது. இந்த இரு வாக்யங்களினாலும் ஜீவனை ஶரீரமாகக்கொண்ட பரமாத்மாவின் வ்யாப்தியாலே கார்யப்பொருள்களுக்கு நாமருபங்கள் செய்யப்படு

नामरूपव्याकरणं * तद्धेदं तर्ह्यव्याकृतमासीत्तन्नामरूपाभ्यां व्याक्रियत (बृ. ३. ४. ७) इत्यत्राप्युक्तम् । अतः कार्यावस्थः कारणावस्थश्च

கின்றன என்றும், அந்த நாமங்கள் சேதநாசேதனங்களைச் சொல்லுவதோடல்லாமல் பரமபுருஷன் வரையில் சொல்லுகின்றன என்றும், ஆகையால் ஒரே வேற்றுமையில் படிப்பது முக்2யமானதே என்றும் காட்டப்பட்டதாயிற்று. 5. "தத்3தே4த3ம தார்ஹ்யவ்யாகருதமாஸீத் தந்நாமரூபாப்4யாம் வ்யாக்ரியத" [ப்3ருஹ 3 4.7] [அத்தகைய இந்தப் பரம்பொருள் ப்ரளயகாலத்தில் 'அவ்யாக்ருத'மெனப்படும் மூலப்ரக்ருதியாகவே இருந்தது. ஸ்ருஷ்டிகாலத்தில் அந்த ப்3ரஹ்மம் நாமரூபங்களையுடைய வ்யஷ்டிப்பொருளாக ஆயிற்று] என்று ப்3ருஹதா3ரண்யகத்தில் சேதநாசேதனங்களை ப்3ரஹ்மம் வியாபித்திருப்பதைப் பற்றிய பேச்சில்லாமல் நாமரூப வ்யாகரணத்தைச் சொல்லியிருக்குமிடத்திலும் சா2ந்தோ3க்2ய தைத்திரீயங்களில் போலவே ப்3ரஹ்மத்தின் வ்யாப்தியை முன்னிட்ட நாமரூப வ்யாகரணத்தைச் சொல்லுவதாகவே கொள்ளவேண்டும்.

இனி முன் (கீ2தாவ்யாக்2யானம் பக்கம் 26 முதல் 28) நம்முடைய மதத்தின்மேல் பிறர் ஏறிட்ட குற்றங்கள் களையப்படுகின்றன. (1) "காரணமான ப்3ரஹ்மத்தை அறிந்தால் கார்யமான உலகத்தை அறிந்ததாகும்" என்று வேத3வாக்யங்கள் கூறுவது பொருந்தாது என்னும் ஆக்ஷேபம். இவ்வாக்ஷேபம் பொருந்தாது; ஏனெனில்: காரணத்தை அறிந்தால் கார்யத்தையும் அறிந்ததாகையாவது—கார்யஶப்3த3த்தினால் சொல்லப்படும் பொருள்கள் காரணத்தை அறிந்ததனால் அறியப்பட்டதாகையேயாகும். உதா3ஹரணமாக வீற்றிருக்கும் ஒரு மனிதனை முதலில் பார்த்துவிட்டு, அம்மனிதனையே நடந்து செல்லுகையில் பிறகு பார்க்கும்போது "இம்மனிதன் முன்னமே காணப்பட்டவன்" என்னும் வழக்கு ஏற்படுகிறது. அதுபோன்றதே இதுவும். ஆகையால் காரணத்தை அறியும்போது கார்ய நிலை பற்றித் தெரிந்துகொள்ளாவிட்டாலும் இரண்டு நிலையிலும் அறியப்படும் பொருள் ஒன்றேயாகையால் காரணத்தை அறிந்தால் கார்யத்தையும் அறிந்ததாகும் என்பது முக்2யமான வழக்கேயாகும். ப்3ரஹ்ம விஷயத்திலும் ஸூக்ஷ்ம சேதநாசேதனப் பொருள்களை ஶரீரமாகக்கொண்ட பரமபுருஷனே காரணமாகிறான். ஸ்தூ2ல சேதநாசேதனப் பொருள்களை ஶரீரமாகக்கொண்ட அவனே கார்யமாகவும் ஆகிறான். இப்படி இரண்டு நிலையையுமடைவது பரமபுருஷனாகிற ப்3ரஹ்மமேயாகையால், காரணத்தைக் காட்டிலும் கார்யம்

स्थूलसूक्ष्मचिदचिद्वस्तुशरीरः परमपुरुष एवेति, कारणात् कार्यस्यानन्यत्वेन कारणविज्ञानेन कार्यस्य ज्ञाततयैकविज्ञानेन सर्वविज्ञानं च

வேறுபடாமல் இருக்கிறது; அதனுல் காரணத்தை அறிந்தால் கார்யமும் அறியப்பட்டதாகிறது. ஆக ப்₃ரஹ்மம் ஒன்றை அறிந்தால் கார்யப் பொருளான உலகம் முழுவதையும் அறிந்ததாகும் என்று வேத₃ வாக்யம் கூறியது மிகப் பொருந்தியதேயாகும். அத்₃வைத மதத்தில் இவ்வேத₃வாக்யம் அடியோடு பொருந்தாது. ஏனெனில்— ஒன்ருன நிர்விஶேஷ ப்₃ரஹ்மத்தை அறிந்தால் இவ்வுலகிலுள்ள பொருள்கள் எல்லாம் அறிந்ததாகும் என்று இவ்வேத₃வாக்யத்துக்கு அவர்கள் பொருள்கூற வேண்டும். அவர்கள் மதத்தில் ஒன்ருன நிர்விஶேஷமே உண்மையானது. இவ்வுலகிலுள்ள பொருள்கள் பொய்யானவை. உண்மையானதை அறிவதால் பொய்யானதும் அறிந்ததாக வேண்டுமெனில், அவ்விரண்டும் ஒன்ருகவேண்டிவரும். இது எப்படி ஒட்டும்? "ஒன்ருனதை அறிந்தால் மற்றவையெல்லாம் பொய்யானது என்று அறிந்ததாகும்" என்று இவ்வாக்யத்துக்குப் பொருள் கூறுகிருேமெனில் வாக்யத்தில் இல்லாத பலபத₃ங்களை வருவித்துக்கொண்டு பொருள் கூறுகையாகிற குற்றம் வரும். "அவித்₃யையோடுகூடிய ஒன்ருன ப்₃ரஹ்மத்தை அறிவதால் அதன் கார்யமான உலகத்தை அறிந்ததாகும்" என்று பொருள் கூறு கிருேமெனில்:" ஸூக்ஷ்ம சேதனசேதனங்களோடுகூடிய ப்₃ரஹ்மத்தை அறிவதால் அதன் கார்யமான ஸ்தூ₂ல சேதனசேதனங்களோடு கூடிய ப்₃ரஹ்மத்தை அறிந்ததாகும்" என்னும் எங்கள் பக்ஷத்தை நெருங்கியதாகவே ஆகும். ப்₃ரஹ்மம் அவித்₃யையோடு (அஜ்ஞானத் தோடு) கூடியது என்னும் ப்ரமாணவிருத்₃த₄மான கொள்கையை ஒப்புக்கொள்கையாகிற குற்றம் அவர்களுக்குத் தவிர்க்கவொண்ணுதது. ப₄ாஸ்கரயாத₃வப்ரகாஶ மதங்களிலும் ஸூக்ஷ்மமான அசேதன ஶக்தி யோடு கூடியது காரணமான ப்₃ரஹ்மம் என்று ஒப்புக்கொண்டே தீரவேண்டியிருக்கையால் "இந்த விஶிஷ்டமான பொருளை அறிந்தால் அதன் கார்யத்தை அறிந்ததாகும்" என்று நிர்வஹிக்க வேண்டிவரும். அப்போதும் "ப்₃ரஹ்மம் விகாரமற்றது தோ₃ஷ மற்றது" என்று கூறும் ஶ்ருதிவிரோத₄ம் அவர்களுக்கு ஏற்படு மாகையால் அந்த தோ₃ஷமற்ற எங்கள் மதமே பொருந்தியதாகும். (2) உலகுக்கும் ப்₃ரஹ்மத்துக்கும் ஸாமாநாதி₄கரண்யம் (ஒரே வேற்றுமையில் படிப்பது) விஶிஷ்டாத்₃வைத மதத்தில் ஒட்டாது என்னும் ஆக்ஷேபம். இவ்வாக்ஷேபமும் பொருந்தாது ஏனெனில்—

समीहितमुपपन्नतरम् । * हन्ताहमिमास्तिस्रो देवता अनेन जीवेनाऽऽत्मनाऽनुप्रविश्य नामरूपे व्याकरवाणि (छा. ६. ३. २) इति * तिस्रो देवताः इति सर्वमचिद्वस्तु निर्दिश्य तत्र स्वात्मकजीवानुप्रवेशेन नामरूपव्याकरणवचनात् सर्वे वाचकाश्शब्दाः अचिज्जीवविशिष्टपरमात्मन एव वाचका इति कारणावस्थपरमात्मवाचिना शब्देन कार्यवाचिनश्शब्दस्य सामानाधिकरण्यं मुख्यवृत्तम् । अतः स्थूलसूक्ष्मचिदचित्प्रकारं ब्रह्मैव कार्यं कारणं चेति ब्रह्मोपादानं जगत् । सूक्ष्मचिदचिद्वस्तुशरीरं

"ஹந்தாஹமிமாஸ்திஸ்ரோ தே3வதா; அநேந ஜீவேந ஆத்மநா அநுப்ரவிஶ்ய நாமரூபே வ்யாகரவாணி" [சா2ந் 6-3-2] என்று முன் எடுத்த வாக்யத்தில் 'மூன்று தே3வதைகள்' என்று தீ நீர் பூ4மி எனும் த்ரிவ்ருத்கரணம் செய்யப்பட்ட மூன்று பூ4தங்களை எடுத்தது பஞ்சீகரணம் செய்யப்பட்ட ஐந்து பூ4தங்களுக்கும் உபலக்ஷணமாகையாலே இப்பத3ம் அசேதனப் பொருள்கள் முழுவதையும் காட்டுகிறது. அவ்வசேதனப் பொருள்களில் தன்னை அந்தர்யாமியாகக்கொண்ட ஜீவனை வியாபிக்கச் செய்து நாமரூபவ்யாகரணம் செய்யப்படுகிறது என்று இவ்வாக்யத்தில் கூறுகையால், உலகில் அந்தந்தப் பொருள்களைச் சொல்லும் எல்லாச் சொற்களும் அந்தந்த அசேதனப் பொருள்களோடும் அவற்றுக்குள்ளிருக்கும் ஜீவர்களோடும் அந்தர்யாமியாகக் கூடிநிற்கும் பரமாத்மாவையும் சொல்லுகின்றன. இக்காரணத்தாலே காரண நிலையிலிருக்கும் பரமாத்மாவைச் சொல்லும் ஶப்3த3த்தோடு கார்யப்பொருள்களைச் சொல்லும் ஶப்3த3ங்களை ஒரே வேற்றுமையில் படிப்பது முக்2யமானதேயாகும், ஶங்கர பா4ஸ்கர யாத3வப்ரகாஶ மதங்களில் இந்த ஸாமாநாதி4கரண்யத்தை அவர்களே லக்ஷணையாகக் கொள்கிறார்கள். 3- மிகவும் வேறுபட்ட உலகுக்கு விஶிஷ்டாத்3வைத மதத்தில் ப்3ரஹ்மம் உபாதா3நகாரணமாக முடியாது என்னும் ஆக்ஷேபம். இவ்வாக்ஷேபமும் பொருந்தாது. முற்கூறிய நிருபணங்களிலிருந்து ஸூக்ஷ்ம சேதநாசேதனங்களை ப்ரகாரமாகக்கொண்ட ப்3ரஹ்மமே காரணமாகவும், ஸ்தூ2ல சேதநாசேதனங்களை ப்ரகாரமாகக்கொண்ட ப்3ரஹ்மமே கார்யமாகவும் ஆகிறது என்று விளங்குகையால், இவ்வுலகத்துக்கு (ஸ்தூ2லசேதநாசேதனங்களோடு கூடிய ப்3ரஹ்மத்துக்கு) (ஸூக்ஷ்மசேதநாசேதனங்களோடு கூடிய) ப்3ரஹ்மமே உபாதா3நகாரணமாகிறது என்பதும்

ब्रह्मैव कारणमिति जगतो ब्रह्मोपादानत्वेऽपि संघातस्योपादानत्वेन चिदचितोर्ब्रह्मणश्च स्वभावासङ्करोऽप्युपपन्नतरः। यथा शुक्लकृष्णरक्त-तन्तुसंघातोपादानत्वेऽपि चित्रपटस्य तत्तत्तन்तुप्रदेश एव शौक्ल्यादिसंबन्ध इति कार्यावस्थायामपि न सर्वत्र वर्णसङ्करः; तथा चिदचिदीश्वर-

---

தெளிவாகிறது இதனால் (கீ3தை முதலானவற்றில் சொல்லப்பட்ட) "உள்ளபொருள் அழியாது இல்லாதது உண்டாகாது" என்னும் ஸத்கார்யவாத3த்தோடும் நமது மதம் முரண்படாமலிருக்கிறது என்றும் தேறுகிறது. 4 ப்3ரஹ்மமே காரணமும் கார்யமுமாகுமானால் சேதனா சேதனங்களின் ஸ்வப4ாவங்களும் ஈஶ்வரனின் ஸ்வப4ாவமும் ஒன்றோடொன்று கலக்கநேரிடும் என்னும் ஆக்ஷேபம். இவ்வாக்ஷேபமும் பொருந்தாது. நமது மதத்தில் ஸூக்ஷ்ம சேதனாசேதனப்பொருள்களை ஶரீரமாகக்கொண்ட ப்3ரஹ்மமே உலகிற்கு உபாத3ான காரணமாகிறது என்று கொள்ளுகிறோம். அதுவே ஸ்தூ2ல சேதனாசேதனங்களோடுகூடிய ப்3ரஹ்மமாகக் கார்யநிலையில் ஆகிறது என்றபடி. இப்படிச் சித3சிதீ3ஶ்வரர்களின் சேர்த்தியே உபாத3ானகாரணமாகிறபடியால் சித3சிதீ3ஶ்வரர்களின் ஸ்வப4ாவங்கள் ஒன்றோடொன்று கலப்பதில்லை என்பதும் நமது மதத்தில் மிகப்பொருந்தும். உதா3ஹரணமாக சிறுவனாக இருக்கும் ஜீவன் வாலிபனாகிறான். அவ்விடத்தில் சிறுவனின் ஶரீரம், அந்த ஶரீரத்தை அதி4ஷ்டா2த்து நிற்கும் ஜீவனின் ஆத்மா ஆகிய இரண்டின் தன்மையும் ஒன்றோடொன்று கலப்பதில்லையன்றோ. அதுபோலவே இங்கும் என்று கண்டுகொள்வது. காரணநிலையில் ஸ்வப4ாவங்கள் கலப்பதில்லை என்பதை நிரூபித்தோம். கார்யநிலையிலும் ஸ்வப4ாவங்கள் கலப்பதில்லை என்பதற்கு ஓர் உதா3ஹரணம் காணலாம். அதாவது—வெளுப்பு கறுப்பு சிவப்பு நிறங்களுடைய நூல்களைக்கொண்டு நெய்யப்பட்ட பல வர்ண வஸ்த்ரத்தில் அந்தந்த நிறமுடைய நூல்கள் இருக்குமிடத்திலேயே அந்தந்த நிறங்கள் காணப்படுகின்றனவேயொழிய ஒரு நூலின் நிறம் மற்ற நிறமுடைய நூல்களின்மேல் கலப்பதில்லை என்பதைக் காண்கிறோம். அதுபோலவே சித3சிதீ3ஶ்வரர்களின் சேர்த்தியே உபாத3ானமாயிருந்தபோதிலும் கார்யநிலையிலும் சித்தினுடைய போ4க்த்ருத்வம், அசித்தினுடைய போ4க்3யத்வம், ஈஶ்வரனுடைய நியந்த்ருத்வம் முதலான தன்மைகள் ஒன்றோடொன்று கலப்பதில்லை. இதற்குமேல் ஓர் ஆக்ஷேபம் எழுகிறது:— முற்கூறிய பல நிற வஸ்த்ரத்தையும் அதற்குக் காரணமான ஒவ்வொரு நிற

संघातोपादानत्वेऽपि जगतः कार्यावस्थायामपि भोक्तृत्वभोग्यत्वनियन्तृत्वाद्यसङ्करः। तन्तूनां पृथक्स्थितियोग्यानामेव पुरुषेच्छया कदाचित्संहतानां कारणत्वं कार्यत्वं च; इह तु चिदचितोस्सर्वावस्थयोः परमपुरुषशरीरत्वेन तत्प्रकारतयैव पदार्थत्वात् तत्प्रकारः परमपुरुष एव कारणं कार्यं च; स एव सर्वदा सर्वशब्दवाच्य इति विशेषः। स्वभावभेदस्तदसङ्करश्च तत्र चात्र च तुल्यः। एवं च

நூலையும் ஒரே வேற்றுமையில் படிப்பதில்லையே; ''நூல்களே வஸ்த்ரம்'' என்பது வேண்டுமானால் ஒருவாறு பொருந்தலாம். ஒவ்வொரு நூலையும் வஸ்த்ரம் என்று எப்படிக் கூறமுடியும்? இங்கு சேதநாசேதனங்கள் ஒவ்வொன்றும் ப்₃ரஹ்மம் என்று காணப்படும் ஶாஸ்த்ர வழக்கு எப்படி ஒட்டும்? என்பது அவ்வாக்ஷேபம். இதற்கு ஸமாத₄ானம் பின்வருமாறு— நூல்கள் ஒவ்வொன்றும் தனித் தனியாயிருப்பவை. ஒரு ஸமயத்தில் ஒரு மனிதன் அவற்றைச் சேர்க்கும்போதே நூல்களுக்குக் காரணத்வமும் வஸ்த்ரத்துக்குக் கார்யத்வமும் ஏற்படுகிறது. இங்கோவெனில், காரண நிலையிலும் கார்யநிலையிலும் சித₃சித்துக்கள் பரமபுருஷனுடைய ஶரீரமாயுள்ளன. அவனுக்கு ப்ரகாரமாயிருந்துகொண்டே அவை ஸத்தைபெறுகின்றன. அவற்றை ப்ரகாரமாகக் கொண்ட பரமபுருஷனே காரணமாகவும் கார்யமாகவும் ஆகிறான். அதனாலேயே அவனே எப்போதும் தனக்கு ப்ரகாரமான எந்தப்பொருளைக் குறிக்கும் சொல்லாலும் குறிக்கப்படு கிறான் என்னும் சிறப்பு அவனுக்கே உரியதாயுள்ளது. நூல் வஸ்த்ர த்₃ருஷ்டாந்தத்தை எடுத்தது இங்கு எல்லா வகையிலும் ஒற்றுமையைக் கருதியல்ல; வெவ்வேறுபட்ட பொருள்கள் ஒன்று கூடிக் கார்யத்தை உண்டாக்கும்போது கார்யநிலையில் வெவ்வேறான அவற்றின் தன்மை கள் ஒன்றோடொன்று கலப்பதில்லை என்னும் விஷயத்துக்கே த்₃ருஷ் டாந்தம் கூறப்பட்டது. ப்ரகாரப்ரகாரிப₄ாவமுடைய ஈஶ்வரன் விஷயத் திலேயே ஸாமாநாதி₄கரண்ய ப்ரயோக₃ம் [ஒரே வேற்றுமையில் படிப்பது] ஏற்படும். தந்து படங்கள் ப்ரகார ப்ரகாரிப₄ாவமுள்ளவை யன்றாகையால் அவற்றுக்கு அத்தகைய ப்ரயோக₃முண்டாக வழியில்லை. 5. ப்₃ரஹ்மம் உலகமாகப் பரிணமிக்கிறது என்று கொள் ளும் விஶிஷ்டாத்₃வைத மதத்தில் ப்₃ரஹ்மம் விகாரமற்றது என்று கூறும் நிர்விகார ஶ்ருதிவிரோத₄ம் வரும் என்னும் ஆக்ஷேபம். இவ்வாக்ஷேபமும் பொருந்தாது. இப்படி ப்₃ரஹ்மம் கார்யமாகும்

सति परस्य ब्रह्मणः कार्यानुप्रवेशेऽपि स्वरूपान्यथाभावाभावादविकृतत्वमुपपन्नतरम्। स्थूलावस्थस्य नामरूपविभागविभक्तस्य चिदचिद्वस्तुन आत्मतयाऽवस्थानात्कार्यत्वमप्युपपन्नम्। अवस्थान्तरापत्तिरेव हि कार्यता।

போதும் சேதநாசேதனங்களின் ஸ்வபா₄வம் அதற்கு வராது என்று தேறினவளவில் ப்₃ரஹ்மத்தின் ஸ்வரூபம் வேறுபாடடையாமல் நிர்விகாரமாகவே இருக்குமாகையால் நிர்விகார ஶ்ருதி விரோத₄முமில்லை. நாம் ப்₃ரஹ்மஸ்வரூபத்தை மாத்திரம் உபாத₃ானமாகக் கொள்ளவில்லை. ஸூக்ஷ்மசேதநாசேதனங்களோடு கூடிய ப்₃ரஹ்மஸ்வரூபத்தையே உபாத₃ானமாகக் கொள்கிறோம். காரண நிலையோடு கார்ய நிலையோடு வாசியில்லாமல் சேதநாசேதனங்களின் தன்மைகள் ப்₃ரஹ்மத்துக்கு வருவதில்லை என்றும் கொள்கிறோம். நிர்விகாரஶ்ருதி ப்₃ரஹ்மஸ்வரூபம் விகாரமற்றது என்பதையே காட்டுகிறது. சேதநாசேதனங்களோடு கூடிய ப்₃ரஹ்மமே உபாத₃ாந காரணமாகவும் கார்யமாகவுமாகின்றது என்று காரணவாக்யங்கள் காட்டுகின்றன. ஆகையால் இவற்றினிடையே முரண்பாடில்லை. ப்₃ரஹ்மஸ்வரூபமே விகாரமடைகிறது என்னும் யாத₃வப்ரகாஶ மதத்திலேயே நிர்விகார ஶ்ருதி சிறிதும் இடம் பெறாமல் பொருளற்றுப் போகிறது. நமது மதத்திலோவெனில் ப்₃ரஹ்மஸ்வரூபத்தின் எப்பகுதியிலும் விகாரத்தை ஒப்புக்கொள்ளவில்லையாகையால் நிர்விகார ஶ்ருதி மிகப்பொருந்தியதாகிறது. (6) விகாரமற்றதான ப்₃ரஹ்மம் கார்யமாகிறது என்று கூறுவது பொருந்தாது என்னும் ஆக்ஷேபம். இவ்வாக்ஷேபமும் பொருந்தாது. முன் பதிலில் கூறியதுபோலவே ஸூக்ஷ்மசேதநாசேதனங்களோடு கூடிய ப்₃ரஹ்மமே ஸ்தூ₂லசேதநாசேதனங்களோடு கூடியதாகக் கார்யநிலையில் ஆகிறது. விஶேஷணங்களான சேதநாசேதனங்களே ஸ்தூ₂லநிலையில் நாமரூபப்பிரிவையுடையவையாகின்றன. அந்நிலையிலும் ப்₃ரஹ்மம் அவற்றுக்கு ஆத்மாவாகவேயிருக்கையால் ப்₃ரஹ்மமே கார்யமாகிறது என்று கூறுவதிலும் குறையில்லை. ஒருநிலையிலுள்ள ஒரு பொருள் மற்றொரு நிலையையடைவது தானே கார்யத்வம் எனப்படுகிறது. "எப்படிச் சொன்னாலும் விஶேஷணமான சேதநாசேதனங்களுக்குக் கார்யத்வம் வருமேயொழிய விஶேஷ்யமான நிர்விகார ப்₃ரஹ்மத்துக்கு எப்படிக் கார்யத்வம் வரும்? எனில்; ஸ்தூ₂லநிலையிலுள்ள சேதநாசேதனங்களை நியமிப்பது த₄ரிப்பது முதலானவற்றோடு கூடியதாக ப்₃ரஹ்மமும் இந்நிலையில் ஆகிறபடியால், இந்நிலையையுடைத்தாகையாகிற கார்யத்வம் ப்₃ரஹ்மத்துக்குமுண்டு. (7) ப்₃ரஹ்மம் கல்யாண கு₃ணங்களோடு கூடியது என்று

निर्गुणवादाश्च परस्य ब्रह्मणो हेयगुणसंबन्धाभावादुपपद्यन्ते। *अपहतपाप्मा विजरो विमृत्युर्विशोको विजिघत्सोऽपिपासः (छा.८-१-५) इति हेयगुणान् प्रतिषिध्य *सत्यकामस्सत्यसङ्कल्पः इति कल्याणगुणगणान्विदधतीयं श्रुतिरेवान्यत्र सामान्येनावगतं गुणनिषेधं हेयगुणविषयं व्यवस्थापयति।

ஒப்புக்கொள்ளும் விஶிஷ்டாத்₃வைத மதத்தில் ப்₃ரஹ்மம் நிர்கு₃ணம் என்று கூறும் வேத₃வாக்யங்கள் பொருந்தமாட்டா எனனும் ஆக்ஷேபம். இவ்வாக்ஷேபமும் பொருந்தாது. 'ப்₃ரஹ்மம் கு₃ணமற்றது'' என்று பொதுவாக நிர்கு₃ணவாக்யங்கள் கு₃ணத்தைத் தள்ளுகின்றன. மற்ற பல வாக்யங்கள் ''ப்₃ரஹ்மம் ஸர்வஜ்ஞத்வம் (எல்லாமறிந்ததாயிருக்கை) முதலான கல்யாண கு₃ணங்களையுடையது'' என்று விதி₄க்கின்றன. இவ்விரண்டும் ஒன்றோடொன்று முரண்படாமலிருப்பதற்காக உத்ஸர்க்க₃ாபவாத₃ நியாயத்தைக் கொண்டு விதி₄க்கப்பட்ட கல்யாணகு₃ணங்களைக் காட்டிலும் வேறுபட்ட தாழ்ந்த கு₃ணங்களையே நிர்க்கு₃ணஶ்ருதிகள் தள்ளுகின்றன என்று கொள்வதே தக்கதாகும். ''அபஹதபாப்மா விஜர: விம்ருத்யு: விஶோக: விஜிக₄த்ஸ: அபிபாஸ:'' [ச₂ாந் 8-1-5] [ப்₃ரஹ்மம் பாபமற்றது, கிழத்தனமற்றது, மரணமற்றது, வருத்தமற்றது, பசியற்றது, தாகமற்றது] என்று தாழ்ந்த கு₃ணங்கள் ப்₃ரஹ்மத்திடம் இல்லை என்று முழங்கும் வேத₃வாக்யமே அடுத்தபடியாக ''ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப:'' [பழுதுபடாத கல்யாண கு₃ணங்களையும் தடைபடாத ஸங்கல்பத்தையும் உடையது] என்று கல்யாணகு₃ணங்களை விதி₄ப்பது எந்த நியாயத்தையும் எதிர்பாராமல் இவ்விஷயத்தை உறுதிப்படுத்துகிறது. நியாயங்களும் இதையே வலியுறுத்துகின்றன, உத்ஸர்க்க₃ாபவாத₃ந்யாயத்தாலே, விதி₄க்கப்பட்ட கல்யாணகு₃ணங்களைக் காட்டிலும் வேறுபட்ட தாழ்ந்த கு₃ணங்களையே நிர்கு₃ணவாக்யம் தள்ளுகிறது என்று இந்த வேத₃வாக்யமே காட்டித்தருகிறது. மேலும் நிர்கு₃ணவாக்யம் பொதுவாக கு₃ணங்களைத் தள்ளுகிறது. இந்த வேத₃வாக்யத்தின் முற்பகுதி தாழ்ந்த கு₃ணங்களைக் குறிப்பிட்டு எடுத்துத்தள்ளுகிறது. நிர்கு₃ணவாக்யத்தில் பொதுவாகத் தள்ளப்பட்ட கு₃ணங்கள் இந்த வாக்யத்தின் முற்பகுதியில் குறிப்பிட்டுத் தள்ளப்பட்ட தாழ்ந்த கு₃ணங்களேயாகுமென்று ஸாமாந்யவிஶேஷந்யாயத்திலிருந்தும் தேறுகிறது. மேலும், கு₃ணஶப்₃த₃ம் ஶாஸ்த்ரங்களில் ப்ரக்ருதியின் கு₃ணங்களான ஸத்வரஜஸ்தமோ கு₃ணங்களைக் குறிப்பதையும் காண்கிறோம்.

ज्ञानस्वरूपं ब्रह्मेति वादश्च सर्वज्ञस्य सर्वशक्तेर्निखिलहेयप्रत्यनीककल्याण-गुणाकरस्य ब्रह्मणस्स्वरूपं ज्ञानैकनिरूपणीयं स्वप्रकाशतया ज्ञानस्वरूपं चेत्यभ्युपगमादुपपन्नतरः। * यस्सर्वज्ञस्सर्ववित् (मु. १. १. १०) पराऽस्य शक्तिर्विविधैव श्रूयते स्वाभाविकी ज्ञानबलक्रिया च (श्वे. ६.८) * विज्ञातारमरे केन विजानीयात् (बृ. ४. ४. १४) इत्यादिका

நிர்கு3ணவாக்யங்கள் ப்ரக்ருதிகு3ணங்களான ஸத்வரஜஸ்தமோ குணங்கள் ப்3ரஹ்மத்திடம் இல்லை என்று கூறுவதாகக்கொண்டாலும் ஸகு3ண நிர்கு3ண வாக்ய விரோத4ம் இல்லாமல்போகிறது. நிர்கு3ணவாக்யங்கள் பொதுவாகவே கு3ணங்களைத்தள்ளுவதையும், "அபஹதபாப்மா" என்னும் வாக்யம் தாழ்ந்த கு3ணங்களைக் குறிப்பிட்டுத் தள்ளுவதையும், பல வேத3வாக்யங்கள் கல்யாணகு3ணங்களைக் குறிப்பிட்டு விதி4ப்பதையும், எந்த வேத3வாக்யமும் கல்யாண குணங்களைக் குறிப்பிட்டு எடுத்துத்தள்ளாததையும் நோக்கும் நடுநிலையாளருக்கு நாம் கூறியபடி உத்ஸர்க3ாபவாத3ந்யாயத்தைக் கொண்டோ, ஸாமாந்யவிசேஷந்யாயத்தைக் கொண்டோ, நிர்கு3ண வாக்யத்தில் கு3ணசப்3த3ம் ஸத்வரஜஸ்தமோ கு3ணங்களைக் குறிப்பதாகக்கொண்டோ ஸகு3ண நிர்கு3ணவாக்யங்களில் மேலெழத் தோன்றும் விரோத4த்தைத் தவிர்ப்பதே நியாயமானது என்று நன்கு விளங்கும். அத்3வைதிகள் அபச்சே2தந்யாயத்தைக்கொண்டு நிர்குண3வாக்யங்கள் ஸகு3ணவாக்யங்களைத் தள்ளுகின்றன என்று கூறுவது சிறிதும் பொருந்தாது என்று விசிஷ்டாத்3வைத விஜயம் முதல் பாகத்தில் விரிவாக நிருபிக்கப்பட்டது இங்கு அநுஸந்தி4க்கத் தக்கது.

இனி, ப்3ரஹ்மத்தை ஜ்ஞானஸ்வருபம் என்று வேத3வாக்யங்கள் கூறுகையால் அதற்கு ஜ்ஞானம் முதலானவை கு3ணமாகமாட்டா என்று அத்3வைதிகள் உரைப்பதும் பொருந்தாது. ஏனெனில்— 'யஸ்ஸர்வஜ்ஞ: ஸர்வவித்" [முண்ட3 1-1-10] [எவன் எல்லாப் பொருள்களின் ஸ்வரூபஸ்ப4ாவங்களை அறிகிருனோ] "பராஸ்ய சக்திர் விவிதை4வ ச்ருயதே ஸ்வாப4ாவிகீ ஜ்ஞாநப3லக்ரியா ச" [ச்வே 6-8] "[பரமபுருஷனுக்கு மேலானதும், இயல்வானதும், பலவிதமானதுமான சக்தியும், ஜ்ஞானமும், ப3லமும், செயலும் உண்டென்று ஓதப்படுகின்றது] "விஜ்ஞாதாரமரே கேந விஜாநீயாத்" [ப்3ருஹ 4-4-14] [அறிபவனை பரமாத்மாவை எதனல்

ज्ञातृत्वमावेदयन्ति। * सत्यं ज्ञानम् (आ. १) इत्यादिकाश्च ज्ञानैक-निरूपणीयतया स्वप्रकाशतया च ஜ्ञानस्वरूपताम्; * सोऽकामयत,

---

அறியலாம்?] முதலான வேத₃வாக்யங்கள் ப்₃ரஹ்மத்தை ஜ்ஞானம் முதலானவற்றை கு₃ணமாக உடையது என்று முழங்குகையாலே எல்லாமறிந்ததாய், எல்லா ஶக்தியுமுடையதாய், தாழ்வுகளுக்கெல்லாம் எதிர்த்தட்டாயிருப்பதாய், கல்யாணகு₃ணங்களுக்கெல்லாம் கொள் கலமாயிருப்பதான ப்₃ரஹ்மத்தின் ஸ்வரூபம் ஜ்ஞானத்தையிட்டே நிருபிக்கவேண்டும்படியாய், தானே ப்ரகாஶிப்பதாகையாலே ஜ்ஞான ஸ்வரூபமாகவும் இருக்கிறது என்றே "விஜ்ஞாநம் ஆநந்த₃ம் ப்₃ரஹ்ம" "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்₃ரஹ்ம" [தைத்-ஆந] முதலான வாக்யங்கள் கூறுவதாகக்கொண்டு விடலாமாகையாலே அவற்றைக்கொண்டு கு₃ணங்களைத் தள்ளவேண்டிய அவஶ்யமில்லை. ஜ்ஞானம் ஆநந்த₃ம் முதலானவை ப்₃ரஹ்மத்துக்கு ஸ்வரூப நிருப கங்கள் என்பதே அந்த வேத₃வாக்யங்களுக்குக் கருத்தாகும். ஸ்வரூப நிருபக த₄ர்மத்தைச் சொல்லும் ஶப்₃த₃ங்கள் த₄ர்மியையும் காட்ட வல்லவை என்பது 'தத்₃கு₃ணஸாரதவாத்து தத்₃வ்யபதே₃ஶ: ப்ராஜ்ஞவத்" [2-3-29] [ஜ்ஞானகு₃ணத்தை ஸாரமாகக்கொண்டி ருப்பதாகையாலே (ஆத்மா) ஜ்ஞானமென்று கூறப்படுகிறது; ஸர்வ ஜ்ஞனை பரமாத்மா (ஆநந்த₃கு₃ணத்தை ஸாரமாக உடையவனா யிருப்பதால் ஆநந்த₃ம் என்று கூறப்படுவது)போலே.] "யாவதா₃த்ம பா₄விதவாச்ச ந தோ₃ஷ: தத்₃த₃ர்ஶநாத்" [2-3-30] [ஆத்மா இருக்கும் வரையிலும் (நித்யமாக அறிவும்) இருப்பதாலும் (ஆத் மாவை ஜ்ஞானமென்பதில்) குறையில்லை. (நித்யத₄ர்மமான கோ₃த் வாதி₃களையிட்டுப் பசு முதலானவை கோ₃முதலிய ஶப்₃த₃த்தால்) வழங்கப்படுவதைக் காண்கையால்] என்று ப்₃ரஹ்மஸூத்ரங் களிலும் சொல்லப்பட்டது. முன்னெடுத்த 30-வது ஸூத் ரத்தில் உள்ள சகாரம ஆத்மா ஜ்ஞானஸ்வரூபமாயிருப்பதோடல் லாமல் ஜ்ஞானத்தை த₄ர்மமாகவும் (கு₃ணமாகவும்) உடையதாய் இருக்கிறது என்று காட்டுகிறது. ஜீவாத்மபரமாத்மாக்களின் ஸ்வரூபமும். த₄ர்மபூ₄தஜ்ஞானமும் தாமே பிரகாஶிப்பவையாகையாலே இரண்டையும் ஜ்ஞானமென்று வழங்குவது பொருத்தமே என்று கண்டு கொள்வது. அத்₃வைதிகள் ப்₃ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை ஜ்ஞானம் என்று ஒப்புக்கொண்டு அதற்கு ஜ்ஞானமாகிற கு₃ணம் கிடையாது என்கிறார்கள். அவர்களுக்கு ப்₃ரஹ்மத்தை ஜ்ஞானத்தையுடைய தாகக் காட்டும் முற்கூறிய வேத₃வாக்யங்கள் முரண்படுகின்றன.

बहु स्याम् (आ.) * तदैक्षत बहु स्याम् (छा. ६. २. ३) * तन्नामरूपाभ्यां व्याक्रियत (बृ. ३. ४. ७) इति ब्रह्मैव स्वसङ्कल्पाद्विचित्रस्थिरत्रसरूपतया नानाप्रकारमवस्थितमिति तत्प्रत्यनीकाब्रह्मात्मकवस्तुनानात्वमतत्त्वमिति प्रतिषिध्यते * मृत्योस्स मृत्युमाप्नोति य इह नानेव पश्यति, नेह नानास्ति किञ्चन (कठ. ४ १०. ११) * यत्र

நையாயிக வைசேஷிகர்கள் ப்$_3$ரஹ்மத்துக்கு ஜ்ஞானமாகிற த$_4$ர்மத்தை ஒப்புக்கொண்டு அதன் ஸ்வரூபம் கல்போலே ஜட$_3$மானது என்று கொள்ளுகிறார்கள். இவர்களுக்கு ப்$_3$ரஹ்மத்தை ஜ்ஞான ஸ்வரூபமாகக்கூறும் வாக்யங்கள் முரண்படுகின்றன. ப்$_3$ரஹ்மத்தை ஜ்ஞானமயமாகவும், ஜ்ஞானத்தையுடையதாகவும் ஒப்புக்கொள்ளும் நம்முடைய மதத்திலேயே இவ்விரண்டு வகையான வாக்யங்களும் மிகப்பொருந்தி நிற்கின்றன. இனி 'ப்$_3$ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபொருள் கிடையாது' என்று பே$_4$த$_3$த்தை நிஷேதி$_4$க்கும் வாக்யங்களுக்கு, ப்ரஹ்மத்துக்கும் சேதநாசேதனங்களுக்கும் பே$_4$த$_3$த்தை விதி$_4$க்கும் வாக்யங்களோடு முரண்படாமல் பொருள்கொள்ளும் போது, ப்$_3$ரஹ்மத்தைத்தவிர ஸ்வதந்த்ரமான வேறு பொருள் கிடையாது என்றே பொருள் கொள்ளவேண்டும். அதாவது— '[illegible]யத ப$_3$ஹு ஸ்யாம்'' [தை-ஆந] [அந்த ப்$_3$ரஹ்மம் தானே பலவாவதாக ஸங்கல்பித்தது] ''ததை$_3$க்ஷத ப$_3$ஹு ஸ்யாம்'' [சா$_2$ந். 6-2-3] [அந்த ப்$_3$ரஹ்மம் பல பொருள்களாக ஆவதாக ஸங்கல்பித்தது] ''தந்நாமரூபாப்$_4$யாம் வ்யாக்ரியத'' [ப்$_3$ருஹ 3.4.7] [ப்$_3$ரஹ்மம் தனக்குத்தானே நாமங்களையும், ரூபங்களையும் படைத்துக்கொண்டது] முதலான வேதவாக்யங்கள் ப்$_3$ரஹ்மமே தன் ஸங்கல்பத்தால் ஆச்சர்யமான ஸ்த$_2$ாவரஜங்க$_3$மப் பொருள்களாகப் பலவித$_4$மாகத் தன்னை ஆக்கிக்கொண்டது என்று கூறுகின்றன. இதிலிருந்து ப்$_3$ரஹ்மாத்மகமான பல பொருள்கள் உண்டு என்று தேறுகின்றது. இதற்கு விரோத$_4$மில்லாமல் பொருள் கொள்ளும்போது ''ம்ருத்யோஸ்ஸ ம்ருத்யுமாப்னோதி ய இஹ நாநேவ பச்யதி'' [கட$_2$ 4-10] [எவனொருவன் இந்த ப்$_3$ரஹ்மத்திடம் பே$_4$த$_3$த்தைக் காண்கிறானோ அவன் ஸம்ஸாரத்திலும் கொடிய ஸம்ஸாரத்தை அடைகிறான்] ''நேஹ நாநா஽ஸ்தி கிஞ்சந'' [கட$_2$ 4-11] [இந்த ப்$_3$ரஹ்ம விஷயத்தில் சிறிது பே$_4$த$_3$முமில்லை] ''யத்ர ஹி த்$_3$வைதமிவ ப$_4$வதி ததி$_3$தர இதரம் பச்யதி, யத்ர த்வஸ்ய ஸர்வமாத்மைவாபூ$_4$த் தத் கேந கம் பச்யேத்''

हि द्वैतमिव भवति तदितर इतरं पश्यति यत्र त्वस्य सर्वमात्मैवा-भूत्तत्केन कं पश्येत् (बृ. ४. ४. १४) इत्यादिना; न पुनः *बहु स्यां प्रजायेय (आ. ६; छा. ६. २. ३) इत्यादिश्रुतिसिद्धं स्वसङ्कल्पकृतं ब्रह्मणो नानानामरूपभाक्त्वेन नानाप्रकारत्वमपि निषिध्यते। *यत्र त्वस्य सर्वमात्मैवाभूत् (बृ. ६. ४. १५) इति निषेधवाक्यारम्भे च तत्स्थापितं *सर्वं तं परादाद्योऽन्यत्रात्मनस्सर्वं वेद (बृ ४. ४. ६)

[4-4-14] [இரண்டு பொருள்கள் இருந்தால் ஒருவன் மற்றொன்றைப் பார்க்க முடியும். எவனுக்கு எல்லாப்பொருளும் பரமாத்மாவே ஆகிறதோ அவன் எதைக்கொண்டு வேறொரு பொருளைக் காண்பான்] முதலான வாக்யங்களில் ப்3ரஹ்மத்தைத் தவிர வேறு பொருளில்லை என்று கூறுவது, முற்கூறிய வாக்யங்களில் சொன்னபடி ப்3ரஹ்மாத்மகமாயிராமல் ஸ்வதந்த்ரமாக வேறு பொருள் இல்லை என்னும் கருத்துடையதே என்றே கொள்ளவேண்டும். அப்படிக் கொள்ளாமல் ப்3ரஹ்மத்துக்கு கு3ணங்களும், செல்வங்களும், ரூபங்களும் உண்டென்று விதி4க்கும் பல்லாயிரக்கணக்கான வாக்யங்களை இந்த ஒரு சில வாக்யங்களைக்கொண்டு தள்ளுவது எந்த நியாயத்துக்கும் பொருந்ாது. "ப3ஹு ஸ்யாம் ப்ரஜாயேய" [தை ஆ 6. சா2ந் 6-2 3] முதலான முன் எடுத்த ஶ்ருதிகளில் ப்3ரஹ்மம் தன ஸங்கல்பத்தாலே தன்னை ப3ஹுப்ரகாரமாக நாமரூபங்களையுடையதாக ஆக்கிக்கொண்டது என்று கூறியிருக்கும்போது, அவற்றை இந்த வாக்யங்கள் தள்ளுகின்றன என்று கூறுவது எப்படிப்பொருந்தும்? "யத்ர த்வஸ்ய ஸர்வமாத்மைவாபூ4த்" [ப்3ருஹ 4-4-14] என்று பே4த3த்தை நிஷேதி4க்கும் வாக்யத்தின் தொடக்கத்திலேயே 'ஸர்வம் தம் பராதா3த்3யோऽந்யத்ராத்மநஸ் ஸர்வம் வேத3" [ப்3ருஹ 4-4-6] [எவனொருவன் பரமாத்மாவை விட்டுப் பிரிந்தவையாக எல்லாப் பொருள்களையும் காண்கிறானோ, அவனை எல்லாப்பொருள்களும் நிந்திக்கும்] என்னும் வாக்யம் ப்3ரஹ்மத்தைவிட்டுப் பிரிந்து நிற்கும் வேறொரு பொருளில்லை என்பதே பின்னால் வரப்போகும் பே4த3த்தைத் தள்ளும் வாக்யங்களின் கருத்து என்று காட்டுகிறது. உபக்ரமாதி4கரண ந்யாயத்தின்படி ஆரம்ப4த்திலுள்ள இந்த வாக்யத்துக்கு அனுகு3ணமாகவே பின்னால் வரும் பே4த3நிஷேத4க வாக்யங்களுக்குப் பொருள் கூறவேண்டும் என்று தேறுகிறது. "தஸ்ய ஹவா ஏதஸ்ய மஹதோ பூ4தஸ்ய நிஶ்வஸிதமேதத்3யத்3

*तस्य ह वा एतस्य महतो भूतस्य निश्वसितमेतद्यदृग्वेदः (बृ. ४. ४. १०) इत्यादिना। एवं चिदचिदीश्वराणां स्वरूपभेदं स्वभावभेदं च वदन्तीनां कार्यकारणभावं कार्यकारणयोरनन्यत्वं वदन्तीनां च सर्वासां श्रुतीनामविरोधः, (चिदचितोः परमात्मनश्च सर्वदा शरीरात्मभावं शरीरभूतयोः कारणदशायां नामरूपविभागानर्हसूक्ष्म-दशापत्तिं कार्यदशायां च तदर्हस्थूलदशापत्तिं वदन्तीभिः) श्रुतिभिरेव

ருக்3வேத3:" [ப்3ருஹ 4-4-10] [அப்படிப்பட்ட இந்த மஹாபூ4தமான பரமாத்மாவுக்கு ருக்3வேத3ம் முதலானவை மூச்சுக்காற்றுகும்] என்னும் உபக்ரமத்தை அடுத்துள்ள வாக்யத்திலும் பரமாத்மாவுக்கும் மற்ற பொருள்களுக்கும் பே4த3ம் ஸ்த2ாபிக்கப்பட்டது. முன் எடுத்த "ப3ஹுஸ்யாம் ப்ரஜாயேய" [தை ஆ 6, ஆந 6-2-3] என்று பே4த3த்தை ஸ்த2ாபிக்குமிடங்களில் மேலே பே4த3த்தை நிஷேதி4க்கும் வாக்யங்களில்லையாகையால் அவ்விடத்தில் இங்குபோலே "மேலே தள்ளுவதற்காக முன்னம் பே4த3த்தைச் சொல்லுகிறது" என்று குயுக்திவாதம் பண்ணவுமிடமில்லை. இவ்வண்ணமாக சித், அசித், ஈஶ்வரன் என்னும் மூன்று தத்துவங்களும் ஸ்வரூபத்திலும், ஸ்வபா4வத்திலும் வேறுபட்டவை என்று கூறும் பே4த3 ஶ்ருதிகளுக்கும், ப்3ரஹ்மமே காரணமாகவும் கார்யமாகவும் ஆகிறது என்றும், கார்யகாரணங்கள் வேறல்ல என்றும் கூறும் அபே4த3ஶ்ருதிகளுக்கும் மேலெழுந்தோன்றும் விரோத4ம்—சேதநாசேதனங்களுக்கும் பரமாத்மாவுக்கும் எப்போதும் ஶரீராத்மத்தன்மை உள்ளதென்றும், ஶரீரமாயிருக்கும் சேதநாசேதனங்கள் காரணநிலையில் நாமரூபப் பிரிவற்ற ஸூக்ஷ்மநிலையை அடைகின்றன என்றும், அவை கார்யநிலையில் நாமரூபப் பிரிவையுடைய ஸ்தூ2லநிலையை அடைகின்றன என்றும் கூறும் க4டகஶ்ருதிகளாலே நம்முடைய ஸித்3தா3ந்தத்தில் தவிர்க்கப்படுகிறது என்று ஒரு ந்யாயத்தை எதிர்பாராமல் வேத3வாக்யங்களிலிருந்தே தெளிவாக விளங்குகையால் நமது மதமே எல்லா வேத3வாக்யங்களுக்கும் பொருந்திய மதமாகும் எனத் தெளிவாகிறது. மற்ற மதங்களில் சில வேத3வாக்யங்கள் தள்ளப்படுகின்றன. வேத3வாக்யங்களில் சொல்லப்படாத சில விஷயங்கள் கற்பிக்கப்படுகின்றன. ஆகையால் ப்3ரஹ்மத்துக்கு அஜ்ஞானத்தைச் சொல்லும் அத்3வைத மதமும் ப்3ரஹ்மத்துக்கு ஓர் உபாதி4யினாலே பே4த3த்தைச்சொல்லும் பா4ஸ்கர மதமும், ப்3ரஹ்மமே உலகமாகப் பரிணமிக்கிறது என்று

ज्ञायत इति ब्रह्माज्ञानवादस्यौपाधिकब्रह्मभेदवादस्यान्यस्याप्यपन्याय-मूलस्य सकलश्रुतिविरुद्धस्य न कथंचिदप्यवकाशो दृश्यत इत्यलमति विस्तरेण ॥ २ ॥

तत्क्षेत्रं यच्च यादृक्च यद्विकारि यतश्च यत्।
स च यो यत्प्रभावश्च तत्समासेन मे शृणु ॥

3. தத் க்ஷேத்ரம் யச்ச யாத்₃ருக் ச யத்₃விகாரி யதஶ்ச யத்।
ஸ ச யோ யத்ப்ரப₄ாவஶ்ச தத் ஸமாஸேந மே ஶ்ருணு ॥

தத் க்ஷேத்ரம்—முன் இரண்டு ஶ்லோகங்களில் சொல்லப்பட்ட க்ஷேத்ரம் எனப்படும் ஶரீரம், **யத் ச**—எந்த த்₃ரவயத்திஞலானது என்பதையும், **யாத்₃ருக் ச**—எவற்றுக்கு இருப்பிடமாயிருக்கிறது என்பதையும, **யத்₃விகாரி**—எவையாகப் பரிணமிக்கிறது என்பதையும், **யத: ச**—எந்தப் பயனுக்காக இது உண்டாயிருக்கிறது என்பதையும், **யத்**—எந்த ஸ்வரூபத்தையுடையது இது என்பதையும், **ஸ: ச ய:**—முன இருஶ்லோகஙகளில் சொல்லப்பட்டக்ஷேத்ரஜ்ஞன ஜீவன் எந்த ஸ்வரூபத்தை உடையவன் என்பதையும், **யத்ப்ரப₄ாவ: ச**—அவனுடைய பெருமை எத்தகையது என்பதையும, **தத்**-(ஆகிய) இவையனைத்தையும், **ஸமாஸேந**-சுருக்கமாக, **மே ஶ்ருணு**—என்னிடமிருந்து கேட்பாயாக.

கூறும் யாத₃வப்ரகாஶ மதமும், பரமாணுகாரண வாத₃ம் முதலானவற்றைச் செய்யும் நையாயிக மதமும், இதுபோன்ற மற்ற பல மதங்களும், எல்லா வேத₃வாக்யங்களுக்கும் முரண்பட்டவையாகையாலும், தவறான நியாயங்களால் (யுக்திகளால்) எழுந்தவையாகையாலும், நல்லோர்களால் ஒரு சிறிதும் ஏற்றுக்கொள்ளத்தக்கவை அல்ல என விளங்கும். விரிவிற்கஞ்சி இத்துடன் நிறுத்திக்கொள்கிறோம். இதன் விரிவு வேத₃ார்த்த₂ ஸங்க்₃ரஹம், ஸ்ரீப₄ாஷ்யம் முதலானவற்றில் காணத்தக்கது. இங்கு "அத்ரேத₃ம் தத்த்வம்" என்று தொடங்கி, "ந கத₂ஞ்சித₃ப்யவகாஶோ த்₃ருஶ்யதே" என்னுமளவாக உள்ள மஹாவாக்யம் ஸ்ரீப₄ாஷ்யத்தில் ஜிஜ்ஞாஸாதி₄கரணத்தின் இறுதிப் பகுதியில் அதி₄கரணார்த்த₂த்தை விசாரிப்பதற்கு முன்பாக, சிறிது மாறுதல்களுடன் அப்படியே கொடுக்கப்பட்டுள்ளது காணத்தக்கது. 2.

॥ भा ॥ तत्क्षेत्रं यच्च—यद्द्रव्यम्, यादृक्च—येषामाश्रयभूतम्, यद्विकारि—ये चास्य विकाराः, यतश्च—यतो हेतोरिदमुत्पन्नम्,

---

**3. அக்கேத் திரம்யாதா மாங்கெவ்வா றெவ்விகற்பு
மிக்கெதிலா மெம்மயமாய் மேவுமருந்—தக்கவிவன்
றானேவ னெத்தகையோன் சார்ந்தசுருக் கத்ததனை
யானேர்ந்து சொல்லக்கே ளிங்கு.**

அக்கேத்திரம்—முன் இரண்டு ஶ்லோகங்களில் சொல்லப்பட்ட 'க்ஷேத்ரம்' எனப்படும் ஶரீரம், **யாதாம்**—எந்த த்ரவ்யத்தினாலானது, **ஆங்கு எவ்வாறு**—எவற்றுக்கு இருப்பிடமாயிருக்கிறது, **எவ்விகற்பு**—எவையாகப் பரிணமிக்கிறது, **மிக்கு எதிலாம்**—எந்தப் பயனுக்காக இது உண்டாயிருக்கிறது, **எம்மயமாய் மேவும்**—எந்த ஸ்வரூபத்தை உடையது இது, **அரும் தக்க இவன்தான் ஏவன்**—சிறப்பும் தகுதியுமுடையவனாய் முன் இரு ஶ்லோகங்களில் சொல்லப்பட்ட க்ஷேத்ரஜ்ஞனான ஜீவன் எந்த ஸ்வரூபத்தை உடையவன், **எத்தகையோன்** — அவன் எத்தகைய பெருமையையுடையவன், **சார்ந்த**—(ஆகிய இவை) பற்றிய, **சுருக்கத்து அதனை**—சுருக்கம் முழுவதையும், **யான் நேர்ந்து சொல்ல**—நான் முறையாகச் சொல்ல, **இங்கு கேள்**—(நீ) இப்போது கேட்பாயாக.

---

3. முதல் இரண்டு ஶ்லோகங்களில் சொல்லப்பட்ட க்ஷேத்ரமாகிற ஶரீரத்தையும், க்ஷேத்ரஜ்ஞனாகிற ஜீவனையும் பற்றி இவ்வத்யாயம் முழுவதிலும் சொல்லப்போவதை முதலில் சுருக்கமாகச் சொல்லப்போவதாக ப்ரதிஜ்ஞை செய்கிறான் இந்த ஶ்லோகத்தில். (தத் க்ஷேத்ரம்) முன்னிரண்டு ஶ்லோகங்களிலும் க்ஷேத்ரம் என்று சொல்லப்பட்ட ஜீவாத்மஶரீரம். (யச்ச) எந்த த்ரவ்யத்தினாலானது என்பதையும். இவ்விஷயம 5-வது ஶ்லோகத்தின் முன்பாதியாலே சுருக்கமாகச் சொல்லப்படுகிறது. (யாத்ருக் ச) அது எதற்கு இருப்பிடமாயிருக்கிறது என்பதையும். இவ்விஷயம் 5-வது ஶ்லோகத்தில் பின்பாதியாலே சொல்லப்படுகிறது. (யத்விகாரி) இந்த ஶரீரத்தின் பரிணாமங்கள் எவை என்பதையும். இவ்விஷயம் "இச்சாத்வே

यस्मै प्रयोजनायोत्पन्नमित्यर्थः, यत्—यत्स्वरूपं चेदम्, स च यः—स च क्षेत्रज्ञो यः—यत्स्वरूपः, यत्प्रभावश्च—ये चास्य प्रभावाः, तत्सर्वम्, समासेन—संक्षेपेण मत्तः शृणु ॥ ३ ॥

ஷஸ் ஸுகம்2 து3க்கம்2" என்னும் 6-வது ஶ்லோகத்தின் முதல் பாத3த்தாலே சொல்லப்படுகிறது. இப்படி அடுத்தடுத்துத்தொடர்ந்து விவரிக்கையாலே 'யச்ச' 'யாத்3ருக்ச' 'யத்3விகாரி' என்னும் மூன்று தொடர்ச்சியான பத3ங்களுக்கும் இப்படிப் பொருள்கொள்வதே பொருத்தமானது. இனி, இந்த ஶ்லோகத்தின் முற்பாதியில் 'யதஶ்ச', 'யத்' என்னும் இரு பத3ங்கள் உள்ளன. விவரிக்கும் ஆருவது ஶ்லோகத்தின் முற்பாதியில் 'ஸங்க4ாத:' 'சேதநாத்4ருதி:' என்னும் இரு பத3ங்கள் உள்ளன. இவற்றில் எதற்கு எது விவரணம் என்று ஆராய்ந்தால், 'யத்'என்னும் பத3ம் முதலில் சொல்லப்பட்ட 'யத்'என்னும் பத3த்தோடு புநருக்தம் (கூறியது கூறல்) ஆகாமைக்காக, முதலில் சொல்லப்பட்ட 'யத்'என்னும் ஶப்3த3த்தினால் குறிப்பிடப்படும் பஞ்சபூ4தங்கள் முதலானவற்றின் கூட்டே கடைசியிலுள்ள யத்' என்ற ஶப்3த3த்தினால் சொல்லப்படுகிறது என்றும், அதுவே ஆருவது ஶ்லோகத்தில் 'ஸங்க4ாத:' (கூட்டு) என்று விவரிக்கப்படுகிறது என்றும் கொள்வதே பொருத்தம். எஞ்சிநிற்கும் யதஶ்ச'என்னும் பத3ம் பாரிஶேஷ்ய ந்யாயத்தாலே எஞ்சி நிற்கும் 'சேதநாத்4ருதி:' என்னும் பத3த்தால் விவரிக்கப்படுவதாகக் கொண்டே தீரவேண்டும்; ஆகையால், 'சேதநாத்4ருதி:'என்னும் அப்பத3ம் பயனைக்காட்டுவதாகையால் 'யதஶ்ச' என்பதற்கும 'எந்தப் பயனுக்காக இந்த ஶரீரம் உண்டாககப்பட்டது என்பதையும' என்றே பொருள்கொள்ளவேண்டும். 'யதஶ்ச' என்பது 'எந்தக் காரணத்துக்காக இது உண்டாக்கப்பட்டதோ' என்று பொருள்படும். இந்த ஶரீரத்தை உண்டாக்கிய ஈஶ்வரன் எந்தப் பயன் கருதி இதை உண்டாக்கினனே என்றே இதற்குத் தாத்பர்யம் சொல்லவேண்டுமாகையாலே இங்கு சொல்லப்படும் காரணம் ஈஶ்வரன் கருதிய பயனேயாகும். "அத்4யயநேந வஸதி" [வேதா3த்4யயனமாகிற பயன் கருதி வாழ்கிறன்] என்று கூறுமிடத்தில் கருதப்படும் பயனும் வாழ்வதற்குக் காரணமாகச் சொல்லப்படுகிறதன்றே. கடைசியிலுள்ள 'யத்' என்றதற்கு 'யத்ஸ்வரூபம்' என்று பா4ஷ்யம் இடப்பட்டது. இங்கு ஸ்வரூபம் என்பது 'ஸங்க4ாதம்' (கூட்டு) என்னும் பொருளை உடையது. பஞ்சபூ4தங்கள் முதலானவற்றின் கூட்டானதோரமைப்பன்றே ஶரீரம்.

ऋषिभिर्बहुधा गीतं छन्दोभिर्विविधैः पृथक् ।
ब्रह्मसूत्रपदैश्चैव हेतुमद्भिर्विनिश्चितैः ॥

4. ரிஷிபி$_{4}$ர் பஹுதா$_{4}$ கீ$_{3}$தம் ச$_{2}$ந்தோ$_{3}$பி$_{4}$ர்விவிதை$_{4}$: ப்ருத$_{2}$க்|
ப்$_{3}$ரஹ்மஸூத்ரபதை$_{3}$ஶ்சைவ ஹேதுமத்$_{3}$பி$_{4}$ர் விநிஶ்சிதை:||

(நான் கூறவிருக்கும க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்களைப் பற்றிய உண்மை அறிவு) **ரிஷிபி$_{4}$:**—(பராஶரர் முதலான) ரிஷிகளாலே, **ப$_{3}$ஹுதா$_{4}$** — பலவகையாக, **கீ$_{3}$தம்**—பாடப்பட்டது. **விவிதை$_{4}$: ச$_{2}$ந்தோ$_{3}$பி$_{4}$:**—பலவித$_{4}$

முதல் யச்ச$_{2}$ப்$_{3}$த$_{3}$ப்—இந்தஶரீரமானது ஜட$_{3}$த்$_{3}$ரவ்யமா அஜட$_{3}$த்$_{3}$ரவ்யமா என்னும் கேள்வியெழ, ஜட$_{3}$த்$_{3}$ரவ்யமே என்று நிஶ்சயிப்பதற்காக ஏற்பட்டது. ஜட$_{3}$த்$_{3}$ரவ்யம் என்று நிஶ்சயிக்கப்பட்ட பிறகு, ஜட$_{3}$த்$_{3}$ரவ்யங்கள் பலவற்றில் ஏதாவது ஒன்ரு அல்லது அவற்றின் கூட்டா என்னும் ஸந்தே$_{3}$ஹமெழ, அவற்றின் கூட்டே என்று நிஶ்சயிப்பதற்காக ஏற்பட்டது இரண்டாவது யச்ச$_{2}$ப்$_{3}$த$_{3}$ம். இனி,மூன்ருவது பாத$_{3}$த்தாலே க்ஷேத்ரஜ்ஞனுன ஜீவனின் ஸ்வரூபஸ்வப$_{4}$ாவங்களையும் சுருக்கமாகச் சொல்லப்போவதாகக் கூறுகிருன்—(ஸ ச ய:) முன் இரண்டு ஶ்லோகங்களில் சொல்லப்பட்ட க்ஷேத்ரஜ்ஞனுகிற ஜீவன் எந்த ஸ்வரூபத்தை உடையவன் என்பதையும், முன் ஶ்லோகத்தில் 'மாம்' என்று பரமாத்மாவைப் பற்றியும் கூறியிருந்தாலும் இரண்டு ஶ்லோகங்களிலும் ப்ரத$_{4}$ானமாக விவரிக்கப்படுபவன் ஜீவனேயாகையாலும், பன்னிரண்டாவது ஶ்லோகம் தொடங்கி சொல்லப் போவது ஜீவனையேயாகையாலும் 'ஸ:' என்னும் பத$_{3}$த்துக்கு ஜீவனைப் பொருளாகக் கொள்வதே பொருந்தும். (யத்ப்ரப$_{4}$ாவஶ்ச) இந்த ஜீவன் எந்தச் சிறந்த ஸ்வப$_{4}$ாவங்களை (தன்மைகளை) உடையவன் என்பதையும்; ப்ரப$_{4}$ாவமாவது ப்ரக்ருஷ்டஸ்வப$_{4}$ாவம்; அதாவது—சிறந்த தன்மைகள், (தத்) இவையனைத்தையும். (ஸமாஸேந மே ஶ்ருணு) சுருக்கமாக நான் சொல்லப்போவதைக் கேளாய். (ஶ்ருணு) ஏற்கனவே கேட்டுக்கொண்டிருக்கும் அர்ஜுனனை 'கேட்பாயாக' என்று கூறுவது ஶரீராத்ம ப்$_{4}$ரமத்தாலே தகாதவிடத்தில் ஸ்நேஹத்தையும் கருணையையும் காட்டுமிவனுக்கு ஶரீராத்மாக்களைப் பற்றிய இந்த விளக்கம் கவனமாகக் கேட்கத்தக்கது என உணர்த்துவதற்காக. 3.

भा ॥ तदिदं क्षेत्रक्षेत्रज्ञयाथात्म्यम् ऋषिभिः--पराशरादिभिः बहुधा-बहुप्रकारं गीतम्- * अहं त्वं च तथान्ये च भूतैरुह्याम पार्थिव! गुणप्रवाह-

மான வேத₃ங்களாலும். ப்ருத₂க்(கீ₃தம்)—(இந்த தே₃ஹாத்ம ஸ்வரூபம்) தனித்தனியாகப பாடப்பட்டது **ஹேதுமத்₃பி₄:**—யுக்திகளோடு கூடியவையாய், **விநிஶ்சிதை:**—சிறப்பான நிச்சயத்தை உடையவையான, **ப்₃ரஹ்மஸூத்ரபதை₃: ச ஏவ** (பா₃த₃ராயணர் அருளிய) ப₃ரஹ்மஸூத்ரத்திலுள்ள ஸூத்ரங்களாலும், **(ப்ருத₂க்₃ கீ₃தம்)**—(இவ்விஷயம்) தனித்தனியாகப் பாடப்பட்டது.

4. போத முனிவர் புகல்வர் பலவகையே
வேதம் விவிதக்கால் வேறுபட—வோதுமது
வேதாந்த சூத்திரங்கள் வேறுரைக்கு மேதுவுடன்
மீதார்ந்த நிச்சயததான் மிக்கு.

போதமுனிவர் – உண்மையறிவையுடைய (பராஶரர் முதலான, ரிஷிகள், **பலவகையே புகல்வர்** — (இந்த தே₃ஹாத்மஸ்வரூபத்தை) பலவிதமாகக் கூறுவர் **விவிதக் கால் வேதம்**—பலவகைப்பட்ட வேத₃ம, **அது வேறுபட ஓதும்**—அந்த தே₃ஹாத்ம ஸ்வரூபத்தைத் தனித்தனியாக ஓதும் **வேதாந்த சூத்திரங்கள்**—(பா₃த₃ராயணர் அருளிய) ப்₃ரஹ்ம ஸூத்திரத்திலுள்ள ஸூத்ரங்கள், **ஏதுவுடன்**—யுக்திகளோடு, **மீதார்ந்த நிச்சயத்தால்**--சிறப்பான நிஶ்சயத்தோடு, **மிக்கு வேறு உரைக்கும்**—(அந்த தே₃ஹாத்ம ஸ்வரூபத்தை) பலவகையாகவும தனித்தனியாகவும் கூறும்.

4. தன்னால் உபதே₃ஶிக்கப்படவிருக்கும் தே₃ஹாத்ம ஸ்வரூபம்—ரிஷிகளால் இயற்றப்பட்ட இதிஹாஸ புராணங்கள், பா₃த₃ராயணர் அருளிய ப்₃ரஹ்ம ஸூத்ரம் ஆகியவற்றால் விளக்கப்பட்ட பலவகையான வேத₃வாக்யங்களால் தெறிய அர்த்த₂மே என்று கூறுகிறான் (ரிஷிபி₄: ப₃ஹுதா₄ கீ₃தம்) பராஶரர் முதலான ரிஷிகளாலே, நான் கூறவிருக்கும் தே₃ஹாத்மஸ்வரூபம் பலவகையாகக் கூறப்பட்டுள்ளது. ''இதிஹாஸ புராணாப்₄யாம் வேத₃ம் ஸமுபப்₃ரும்ஹ

पतितो भूतवर्गोऽपि यात्ययम् ॥ कर्मवश्या गुणा ह्येते सत्त्वाद्याः पृथिवीपते । अविद्यासञ्चितं कर्म तच्चाशेषेषु जन्तुषु ॥ आत्मा शुद्धोऽक्षरश्शान्तो निर्गुणः प्रकृतेः परः ॥ (वि. २. १३. ६९. ७०. ७१.)

யேத்" [இதிஹாஸ புராணங்களைக்கொண்டே வேத3த்துக்கு விளக்கம் கூற வேண்டும்] எனகிறபடியே தெளிவான பொருளையுடைய இதிஹாஸபுராணங்களைக்கொண்டே தெளிவற்ற பொருளையுடைய மறைகளின் பொருளை அறிய முடியுமாகையால் முதலில் அவற்றைக் கூறுகிறான், "ரிஷிபி4:" என்று பொதுவாகக் கூறப் பட்டபோதிலும் ராஜஸதாமஸ ஸ்ம்ருதி புராணங்களின்மூலம் வேத3ார்த்த2த்தை உள்ளபடி அறியமுடியாதாகையாலே ஸாத்விக ஶாஸ்த்ரங்களை இயற்றிய பராஶரர், வேத3வ்யாஸர், வால்மீகி, மநு, முதலானவர்களே இங்கு ரிஷிஶப்3த3த்தால் கருதப்படுவதாகக் கொள்ள வேண்டும். (ப3ஹுதா4) அர்த்த2ம் ஒன்றாயிருந்த போதிலும் வாக்ய அமைப்புகள் பலவகைப்பட்டிருப்பதைக் கூறுகிறது. "ரத2சக்கரத்தின் நாபி4யின் (குடத்தின்) ஸ்த2ானத்தில் பரமாத்மாவும், ஆரத்தின் ஸ்த2ானத்தில் ஜீவாத்மாவும், நேமி எனப்படும் சக்கரவட்டத்தின் ஸ்த2ானத்தில் அசேதனப் பொருளும் இருந்து கொண்டு முறையே ஒன்றுலொன்று தாங்கப்படுகிறது" முதலான கற்பனைகளால் பலவகைப்பட்டிருப்பதைக் கூறுவதாகவும் கொள்ளலாம். அன்றிக்கே ஒருவர் சுருக்கமாகவும் மற்றொருவர் விரிவாகவும் கூறுவதையிட்டுப் பலவகையாகப் பாடப்பட்டது என்கிறதாகவுமாம். அத்தகைய வேத விளக்கமான ரிஷி வாக்யங்களில் சில பின்வருமாறு;—

1. "அஹம் த்வம் ச ததா2ந்யே ச பூ4தைருஹ்யாம பார்த்தி2வ// கு3ணப்ரவாஹபதிதோ பூ4தவர்க்கோ3஽பி யாத்யயம் // கர்மவஶ்யா கு3ணா ஹ்யேதே ஸத்த்வாத்3யா: ப்ருதி2வீபதே I அவித்3யாஸஞ்சிதம் கர்ம தச்சாஶேஷேஷு ஜந்துஷு // ஆத்மா ஶுத்3தோ4஽க்ஷரஶ் ஶாந்தோ நிர்கு3ண: ப்ரக்ருதே: பர:// [வி. பு 2-13-69, 70, 71] [அரசனே! நானும் நீயும் மற்றவர்களும் (தே3ஹமாகப் பரிணமித்திருக்கும்) பஞ்சபூ4தங்களால் சுமக்கப்படுகிறோம்; (ஒருவரையொருவர் சுமப்பதில்லை) இந்தப் பஞ்சபூ4தங்களும் ஸத்வரஜஸ்தமோகு3ண வெள்ளத்தினால் இழுத்துச் செல்லப்படுகிறது. இந்த ஸத்வாதி3 கு3ணங்களும் கர்மத்துக்கு வஶப்பட்டவை. (தே3ஹத்தை ஆத்மாவாக நினைக்கும்) அஜ்ஞானத்தாலே சேர்த்துவைக்கப்பட்டிருப்பது (புண்யபாபரூப) கர்மம். அக்கர்மம் எல்லா ஜீவர்களிடமுமுள்ளது. (அந்த ஜீவர்களுடைய) ஆத்மாவோவெனில்

तथा * पिण्डः पृथग्यतः पुंसः शिरःपाण्यादिलक्षणः । ततोऽहमिति कुत्रैतां संज्ञां राजन्करोम्यहम् (वि. २. १३. ८९.); तथा [च] * किं त्वमेतच्छिरः किं नु उरस्तव तथोदरम् । किमु पादादिकं त्वं वै तवैतत्किं महीपते ! ॥ समस्तावयवेभ्यस्त्वं पृथग्भूप ! व्यवस्थितः । कोऽहमित्येव निपुणो भूत्वा चिन्तय पार्थिव ! ॥ (वि. २. १३. १०३.)

கர்மம் முதலான தே$_{3}$ாஷங்களற்றது. அழிவற்றது. பசி த$_{3}$ாஹம் முதலான ஆறு ஊர்மிகளுமற்றது ஸத்வம் முதலான கு$_{3}$ணங்களுமற்றது. அசேதனமான ப்ரக்ருதியைக்காட்டிலும் மேலானது] 2 "பிண்ட$_{3}$: ப்ருத$_{2}$க்$_{3}$யத: பும்ஸ: ஶிர:பாண்யாதி$_{3}$லக்ஷண: / ததோऽஹமிதி குத்ரைதாம் ஸம்ஜ்ஞாம் ராஜந் கரோம்யஹம்:" [வி.பு.2-13-89] [அரசனே! தலை, கை, கால் முதலானவற்றின் கூட்டான ஶரீரமும் ஜீவனைக்காட்டிலும் வேறுபட்டதாக இருக்கையால், இந்தத் தலை கை, கால், முதலானவற்றில் எதைக்குறித்து 'நான்' என்கிற சொல்லை நான் வழங்குவேன்.] 3 'கிம் த்வமேதச் சி$_{2}$ர: கிம்நு உரஸ்தவ ததோ$_{2}$த$_{3}$ரம்/ கிமு பாத$_{3}$ாதி$_{3}$கம் த்வம் வை தவைதத் கிம் மஹீபதே// ஸமஸதாவயவேப்$_{4}$யஸ்தவம் ப்ருத$_{2}$க்$_{3}$பூ$_{4}$ப வ்யவஸ்தி$_{2}$த:/ கோऽஹமித்யேவ நிபுணோ பூ$_{4}$த்வா சிந்தய பார்த்தி$_{2}$வ" [வி. பு. 2-13-102 103] [அரசனே! நீ இந்த ஶரீரத்திலுள்ள தலையா, மார்பா, வயிறு அல்லது கால் முதலானவையா? இவையெல்லாம் உன்னோடு என்ன தொடர்புடையவை? இந்த எல்லா அவயவங்களைக்காட்டிலும் நீ வேறானவனாயிருக்கிறாய். ஆராயும் திறமையுள்ளவனாய் 'நான் யார்' என்று ஆராய்வாயாக]. இந்த மூன்று ப்ரமாணங்களும் தான் வீற்றிருந்த பல்லக்கைத்தூக்கிக்கொண்டிருந்த ஜட$_{3}$ப$_{4}$ரதரைப் பார்த்து அரசன் கேட்ட கேள்விகளுக்கு ப$_{4}$ரதர் சொன்ன பதில்களாகும். தே$_{3}$ஹத்தைக் காட்டிலும் வேறுபட்டது ஆத்மா என்று உணராமல் தன்னுடைய பல்லக்கைச்சுமப்பவராக அரசன் தம்மை நினைத்ததை இந்த முதல் ப்ரமாணத்தில் ஜட$_{3}$ப$_{4}$ரதர் ஆக்ஷேபிக்கிறார். அவரை ஜ்ஞானி என்று உணர்ந்த அரசன் 'நீர் யார்' என்று அவரை வினவ அதற்குப் பதிலாக அமைந்தது இரண்டாவது ப்ரமாணம். இதில் தலை, கை, முதலானவற்றில் ஒன்றோ அல்லது எல்லாம் சேர்ந்தோ ஆத்மாவாயிருக்க முடியாது என்று உணர்த்தப்பட்டது, இந்த இரண்டாவது ப்ரமாணத்தில் சொல்லப்பட்ட தே$_{3}$ஹாத்மவிவேகத்தை அரசனும் உணர்ந்து உறுதிப்படுத்திக் கொள்வதற்காக ஜட$_{3}$ப$_{4}$ரதர் அவனைக்குறித்துக் கேட்கும்கேள்விகளாக அமைந்திருப்பது மூன்றாவது

ப்ரமாணம். இந்த மூன்று ப்ரமாணங்களால் இந்த அத்$_4$யாயத்தின் முதல் ஶ்லோகத்தின் பொருள் விளக்கப்பட்டது. இனி, பின்வருமாறு ஓர் ஆக்ஷேபம் வருகிறது—"த்$_3$வா ஸுபர்ணா ஸயுஜா ஸகா$_2$யா ஸமானம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே தயோரன்ய: பிப்பலம் ஸ்வாத்$_3$வத்தி அனஶ்னன் அன்யோ அபி$_4$சாகஶீதி" [முண்ட$_3$க 3-1-1] [ஜ்ஞானமாகிற ஒத்த குணத்தை உடையவர்களாய் துணைவர்களான இருபறவைகள் (பரமாத்மாவும், ஜீவாத்மாவும்) ஒரே மரத்தை (ஶரீரத்தை)ப் பற்றி நிற்கின்றன. அப்பறவைகளில் ஒன்று (ஜீவன்) இனிய பழத்தை (கர்மப$_2$லத்தை) உண்கிறது. மற்றொரு பறவை (பரமாத்மா) உண்ணாதபோதும் பிரகாசிக்கின்றது] என்னும் முண்ட$_3$கோபநிஷத்திலுள்ள மந்திரத்தில் கர்மப$_2$லத்தை அனுப$_4$விப்பவனாக ஜீவன் சொல்லப்படுகிருன்; அதை அனுப$_4$விக்காதவனாகப் பரமாத்மா சொல்லப்படுகிருன். இவ்விஷயம் "கு$_3$ஹாம் ப்ரவிஷ்டாவாத்மானௌ ஹி தத்$_3$த$_3$ர்ஶனாத்" [ப்$_3$ர ஸூ 1-2-11] [இருதயகுஹையில் நுழைந்திருப்பவர்களிருவரும் ஜீவாத்மாவும் பரமாத்மாவுமேயாவர் (ப்ராணஜீவர்களல்லர்;) ஜீவபரமாத்மாக்களுக்கே இருதயகு$_3$ஹையில் நுழைந்திருத்தல் காணப்படுவதால்] 'ஸ்தி$_2$த்யத$_3$னாப்$_4$யாம் ச" [ப்$_3$ர ஸூ. 1-3 6] [(பரமபுருஷனுக்கு சரீரத்தில் இருப்பது மாத்திரத்தையும் (ஜீவனுக்கு) கர்மப$_2$லபோ$_4$க$_3$த்தையும் கூறுகையாலும் (த்$_3$யுப்$_4$வாத்$_3$யாயதநம் பரமபுருஷனே] முதலான ப்$_3$ரஹ்மஸூத்ரங்களிலும் நிலைநிறுத்தப்பட்டது. இந்த முண்ட$_3$கமந்த்ரத்தை விவரிக்கப் புகுந்த பைங்கி$_3$ரஹஸ்யப்$_3$ராஹ்மணம் "தயோரன்ய: பிப்பலம ஸ்வாத$_3$வத்தீதி ஸத்த்வம்" ['தயோரன்ய: பிப்பலம் ஸவாத்$_3$வத்தி' எனனும் வாகயம் ஸத்த்வம் (ஜந்து) எனப்படும் ஜீவனைக்குறிக்கிறது.] என்று மந்த்ரத்தில் மூன்ருவது பாத$_3$த்தை விவரித்து, 'அனஶ்னன்னன்யோऽபி$_4$சாகஶீதீதி க்ஷேத்ரஜ்ஞ: த்$_3$வாவேதௌ ஸத்த்வக்ஷேத்ரஜ்ஞௌ தத$_3$தத் ஸத்தவம் யேந ஸ்வப்நம பஶ்யதி அத$_2$யோऽயம் ஶாரீர உபத$_3$ரஷ்டா ஸ க்ஷேத்ரஜ்ஞ:" [எவனொருவன் ஸ்வப்நம காண்கிருனே அந்த ஜீவனே ஸத்வமெனப்படுகிருன். அவனை ஶரீரமாகக்கொண்டு அனைத்தையும் காணும் பரமாத்மா க்ஷேத்ரஜ்ஞன் எனப்படுகிருன்] என்று நான்காம் பாத$_3$ விவரணத்தில் க்ஷேத்ரஜ்ஞஶப்$_3$த$_3$த்தால் பரமாத்மா குறிக்கப்படுகிருன். இந்தப் பைங்கிரஹஸ்ய ப்$_3$ராஹ்மணத்தில் காணப்படும் க்ஷேத்ரஜ்ஞஶப்$_3$த$_3$மே "தம் ப்ராஹு:, க்ஷேத்ரஜ்ஞ: இதி" என்று முதல் ஶ்லோகத்தில் வழங்கப்பட்டு, அவனைக் குறித்து இங்குள்ள உபத்$_3$ரஷ்டா என்னும் ஶப்$_3$த$_3$ம் "உபத்$_3$ரஷ்டாநுமந்தா" என்று கீ$_3$தையில் 22வது ஶ்லோகத்தில் வழங்கப்பட்டது. இதிலிருந்து பைங்கிரஹஸ்ய ப்ராஹ்மணத்திற்கு விளக்கமாகவே கீ$_3$தை அமைந்

इति । एवं विविक्तयोर्द्वयोर्वासुदेवात्मकत्वं चाहुः * इन्द्रियाणि मनो बुद्धिस्सत्त्वं तेजो बलं धृतिः । वासुदேवात्मकान्याहुः क्षेत्रं क्षेत्रज्ञमेव

துள்ளது என்று விளங்குகிறது. மநுஸ்ம்ருதியிலும் "ஷோஸயாத்மந: காரயிதா தம க்ஷேத்ரஜ்ஞம ப்ரசக்ஷதே / ய: கரோதி து கர்மாணி ஸ பூ$_4$தாத்மோச்யதே பு$_3$தை$_4$: // [மநு 12 12] [எவன் இந்த ஜீவாத்மாவைச் செயல்களைச் செய்யும்படி தூண்டுகிறானோ அந்தப் பரமாத்மாவை "க்ஷேத்ரஜ்ஞன்" என்று அறிவாளிகள் கூறுகிறார்கள். எவன் செயல்களைச் செய்கிறானோ அந்த ஜீவன் "பூ$_4$தாத்மா" என்று அவர்களால் சொல்லப்படுகிறான்] என்று க்ஷேத்ரஜ்ஞ ஶப்$_3$த$_3$தால் பரமாத்மாவே கூறப்பட்டான். அப்படியிருக்கும்போது கீ$_3$தையில் இங்கு க்ஷேத்ரஜ்ஞ ஶப்$_3$த$_3$த்தால் ஜீவன் குறிப்பிடப்படுவதாக பா$_4$ஷ்யமிட்டது எப்படிப்பொருந்தும்? என்னும் ஆக்ஷேபத்தை நீக்குகிறது நாலாவது ப்ரமாணம். அத்துடன் "க்ஷேத்ரஜ்ஞம் சாபி மாம் வித்$_3$தி$_4$" என்னும் இவ்வத்$_4$யாயத்தின் இரண்டாவது ஶ்லோகப் பகுதிக்கு இந்தப் பிரமாணம் விளக்கமாகவுமிருக்கிறது. அதாவது—' இந்த்$_3$ரியாணி மனோபு$_3$த்$_3$தி$_4$: ஸத்த்வம் தேஜோ ப$_3$லம த்$_4$ருதி:/ வாஸுதே$_3$வாத்மகான்யாஹு: க்ஷேத்ரம் க்ஷேத்ரஜ்ஞமேவ ச|| [பா$_4$ர-ஆநு-விஷ்ணுஸஹஸ்ரநாமம்] [இந்திரியங்கள், மனம், பு$_3$த்$_3$தி$_4$, ஸத்வகு$_3$ணம், தேஜஸ், ப$_3$லம், தைரியம், க்ஷேத்ரமாகிற ஶரீரம், க்ஷேத்ரஜ்ஞனாகிற ஜீவன் ஆகிய அனைத்தும் வாஸுதே$_3$வனுக்கு ஶரீரமாகவும் ப்ரகாரமாகவும் உள்ளன என்று ஶாஸ்த்ரங்கள் கூறுகின்றன] என்பது. ஆக இந்த ப்ரமாணத்திலிருந்து க்ஷேத்ரஜ்ஞ ஶப்$_3$த$_3$த்தால் ஜீவனையும் குறிப்பது உண்டு என்றும், அவன் வாஸுதே$_3$வ ஶரீரம் என்றும் விளங்குகையால் பா$_4$ஷ்யத்தில் அருளிய பொருள் பொருத்தமேயாகும். தனித்தனியாகவும் கூட்டாகவும் "இது என்னுடையதலை, இவை என்னுடைய கைகள், இது என் ஶரீரம்" என்று க்ஷேத்ரமாகிற ஶரீரத்தை ஜீவன் அறிகிறானகையாலே அவனை க்ஷேத்ரஜ்ஞன் என்னக் குறையில்லை. பரமாத்மாவோவெனில் 'இந்த ஶரீரம் இந்தக் கர்மத்தைத் தொடங்குவதற்காகவும், இந்தக் கர்மத்தின் ப$_2$லத்தை அனுப$_4$விப்பதற்காகவும் ஏற்பட்டது' என்று ஶரீரத்தைப்பற்றிய உண்மையனைத்தையும் அறிகிறானகையாலே க்ஷேத்ரஜ்ஞன் எனப்படுகிறான். ஜீவனுக்கு 'க்ஷேத்ரஜ்ஞ' ஶப்$_3$த$_3$ம் முற்கூறியபடி க்ஷேத்ரத்தை அறிவதால் வந்தது என்பது இவ்வத்$_4$யாயத்தின் முதல் ஶ்லோக பா$_4$ஷ்யத்தில் காட்டப்பட்டது. க்ஷேத்ரத்தைப்பற்றிய அனைத்தையும் அறிந்தவனாகையாலே பரமாத்மா க்ஷேத்ரஜ்ஞன்

च ॥ (वि. स.) इति । छन्दोभिर्विविधैः पृथक्-पृथग्विविधैश्छन्दोभिः ऋग्यजुस्सामाथर्वभिः देहात्मनोः स्वरूपं पृथग्गीतम् -- * तस्माद्वा एतस्मादात्मन आकाशस्संभूतः । आकाशाद्वायुः । वायोरग्निः । अग्नेरापः । अद्भ्यः पृथिवी । पृथिव्या ओषधयः । ओषधीभ्योऽन्नम् । अन्नात्पुरुषः । स वा एष पुरुषोऽन्नरसमयः (आ. १) इति

எனப்படுகிறான் என்பது முன் எடுத்த மனு வசனத்தில் தெளிவாகக் காட்டப்பட்டது. இவ்வண்ணமே தன் ஶரீரத்தைக் காண்கிறானாகை யாலே ஜீவனையும் உபத்3ரஷ்டா என்று கீ3தையில் குறித்ததில் குறையில்லை. பரமாத்மாவும் எல்லாச் சேதநாசேதநங்களையும் காண்கிறானாகையாலே பைங்கி3ரஹஸ்யத்தில் அவனை உபத்3ரஷ்டா என்று குறித்ததிலும் குறையில்லை. ஆகையால் இங்கு பா4ஷ்யத்திற்கு எந்த ப்ரமாண விரோத4முமில்லை என்று கண்டுகொள்வது. (ச2ந்தோ3பி4ர் விவிதை4: ப்ருத2க) பலவிதமான ருக், யஜுஸ், ஸாம, அத2ர்வ வேத3 வாக்யங்களாலும் தே3ஹாத்மாக்களின் ஸ்வரூபம் தனித் தனியாகப் பாடப்பட்டது. விவித4 ஶப்3த3ம் விளக்கும் வகைகள் பலவகைப்பட்டவை எனக் காட்டுகிறது. ச2ந்த3ஸ் ஶப்3த3த்தை கா3யத்ரீ முதலான ச2ந்த3ஸ்ஸுக்களைக் குறிப்பதாகக் கொள்வதில் இங்கு பொருத்தமில்லாமையால் "சா2த3யதீதி ச2ந்த3:" [பொருளை மறைத்துக் கூறுகையால் 'ச2ந்த3ஸ்' (மறை) எனப்படுகிறது வேதம்] என்னும் வ்யுத்பத்தியாலும் "ஆம்நாயஶ் ச2ந்த3ஸாம் க3ண:" முதலான வழக்குகளையொட்டியும் இங்கு வேத3த்தைக் குறிப்பதாகக் கொள்வதே பொருத்தம். 'ப்ருத2க்' என்னும் ஶப்3த3த்துக்கு 'ரிஷிகளால் சொல்லப்பட்டதைக் காட்டிலும் வேறாக' என்று பொருள் கொள்வது பொருந்தாதாகையால், சில பத3ங்களை வருவித்துக்கொண்டு "தே3ஹாத்மாக்களின் ஸ்வரூபம் தனித் தனியாக விளக்கப்பட்டது" என்று பொருள் கொள்ளப்பட்டது. தே3ஹாத்மாக்கள் ஒன்றுக்கொன்று வேறானவையாகப் பாடப்பட்டன என்று தாத்பர்யம். அப்படிக்காட்டியிருக்கும் வேத3வாக்யங்கள் பின்வருமாறு:-- முதலில் யஜுர் வேத3வாக்யம் ஒன்றைக் காண்போம். "தஸ்மாத்3வா ஏதஸ்மாதா3த்மந ஆகாஶஸ்ஸம்பூ4த:. ஆகாஶாத்3 வாயு:, வாயோரக்3நி:, அக்3நேராப: அத்3ப்4ய: ப்ருதி2வீ ப்ருதி2வ்யா ஓஷத4ய: ஓஷதீ4ப்4யோऽந்நம். அந்நாத் புருஷ:, ஸ வா ஏஷ புருஷோऽந்நரஸமய: [தை ஆந] [அத்தகைய இந்தப் பரமாத்மாவிடமிருந்து ஆகாஶம் உண்டாயிற்று. ஆகாஶத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து அக்3நியும், அக்3நியிலிருந்து ஜலமும், ஜலத்திலிருந்து பூமியும்

शरीरस्वरूपमभिधाय तस्मादन्तरं प्राणमयं तस्माच्चान्तरं मनोमयमभिधाय * तस्माद्वा एतस्मान्मनोमयात्। अन्योऽन्तर आत्मा विज्ञानमयः इति क्षेत्रज्ञस्वरूपमभिधाय * तस्माद्वा एतस्माद्विज्ञानमयात्। अन्योऽन्तर आत्माऽऽनन्दमयः इति क्षेत्रज्ञस्याप्यन्तरात्मतया आनन्दमयःपरमात्माऽभिहितः। एवं ऋक्सामाथर्वसु च तत्र तत्र क्षेत्रक्षेत्रज्ञयोः पृथग्भावः तयोर्ब्रह्मात्मकत्वं च सुस्पष्टं गीतम्।

உண்டாயின. பூ4மியிலிருந்து பயிர்கள் உண்டாயின. பயிர்களிலிருந்து அன்னம் உண்டாயிற்று. அன்னத்திலிருந்து ஜீவசரீரமுண்டாயிற்று. இந்த சரீரத்தோடு கூடிய ஜீவன் அன்னரஸத்திலிருந்து தோன்றியவனன்றோ.] என்று தே3ஹ ஸ்வரூபத்தைச் சொல்லி அதற்குள் இருப்பதாக ப்ராணமயம் எனப்படும் ப்ராணனையும், அதனிலும் ஸூக்ஷ்மமாக மனோமயமெனப்படும் மனத்தையும், சொல்லி தஸ்மாத்3வா ஏதஸ்மாந்மநோமயாத்-அந்யோந்தர ஆத்மா விஜ்ஞானமய:" என்று இந்த மநோமயத்திலும் ஸூக்ஷ்மமான விஜ்ஞானமயனெனப்படும் ஜீவனுடைய ஸ்வரூபத்தைச் சொல்லி, இந்த விஜ்ஞானமயனை ஜீவனுக்கும் அந்தர்யாமியாயிருப்பவனாய் இவனிலும் வேறான ஆனந்த3மயனை பரமாத்மா "த3ஸ்மாத் வா ஏதஸ்மாத் விஜ்ஞானமயாத் அந்யோந்தர ஆத்மா ஆனந்த3மய:" என்று கூறப்பட்டான். இது யஜுர் வேதத்திலுள்ளதொரு மஹாவாக்யம். இவ்வண்ணமே ருக்3வேத3த்திலும் ஸாமவேத3த்திலும் அத2ர்வவேதத்திலும் ஆங்காங்கே ஶரீரமும் ஜீவனும் வேறுபட்டவை என்றும், அவை இரண்டுமே ப்3ரஹ்மஶரீரமென்றும் மிகத் தெளிவாகக் கூறப்பட்டது. அவற்றில் சில பின்வருமாறு:1. "தத்3யதா2 ரத2ஸ்யாரேஷு நேமிரர்ப்பிதா: நாப4ாவரா அர்ப்பிதா: ஏவமேவைதா பூ4த மாத்ரா: ப்ரஜ்ஞாமாத்ராஸ்வர்ப்பிதா ப்ரஜ்ஞாமாத்ரா: ப்ராணேஷ்வர்ப்பிதா:" [கௌஷீதகீ 3.9] [எவ்வண்ணமாகச் சக்ரத்தின் ஆரங்களில் அதன் நேமி (வளையம்) கோக்கப்பட்டிருக்கிறதோ, அதன் ஆரங்கள் அதன் குடத்தில் கோக்கப்பட்டிருக்கிறதோ; அவ்வண்ணமே இந்தப் பஞ்சபூ4தங்களாலான ஶரீரம் ஜ்ஞானமயனை ஜீவாத்மாவிடம் கோக்கப்பட்டிருக்கிறது. அந்த ஜீவன் ப்ராணனெனப்படும் பரமாத்மாவிடம் கோக்கப்பட்டிருக்கிறது.] 2. "ஏஷ ம ஆத்மா அந்தர்ஹ்ருத3யே...... ஏதமித: ப்ரேதய அபி4ஸம்ப4விதாஸ்மி" [சா2ந் 3-14-4] [என்னுடைய ஹ்ருதயத்தினுள் எனக்கு அந்தர்யாமியாயிருப்பவன் இவனே. இவ்வுலகிலிருந்து நீங்கி மோக்ஷமடையும்போது இவனை அடைவேன்]

ब्रह्मसूत्रपदैश्चैव-ब्रह्मप्रतिपादनसूत्राख्यैः पदैः शारीरकसूत्रैः, हेतुमद्भिः-हेतुयुक्तैः, विनिश्चितैः—निर्णयान्तैः ; * न वियदश्रुतेः (२. ३. १)

---

3. "தி₃வ்யோ ஹ்யமூர்த்தஃ புருஷஃ ஸ ப₃ாஹ்யாப்₄யந்தரோ ஹ்யஜஃ / அப்ராணோ ஹ்யமநாஃ ஶுப்₄ரஃ ஹ்யக்ஷராத்பரதஃ பரஃ" [முண்ட₃கம் 2-1-2] [பரமபத₃த்திலிருப்பவனாய், கண்ணால்காணவொண்ணாதவனாய், அனைத்தின் உள்ளும் புறமும் வியாபித்திருப்பவனாய், பிறப்பற்றவனாய், ப்ராணன் மனம் முதலானவையற்றவனாய், ஒளிமிக்கவனாய், மூல ப்ரக்ருதியைக்காட்டிலும் மேலான ஜீவனைக்காட்டிலும் மேலானவனா யிருப்பவன் பரமபுருஷன்.] 4. "ஸ காரணம் கரணாதி₄பாதி₄பஃ" [ஶ்வே. 6-9.] [அந்தப் பரமாத்மா இந்த்₃ரியங்களை நியமிக்கும் ஜீவனுக்கும் தலைவனாய், காரணமாயிருப்பவன்] "போ₄க்தாபோ₄க்₃யம் ப்ரேரிதாரம் ச மத்வா ஜுஷ்டஸ்ததஸ்தேநாம்ருதத்வமேதி" [ஶ்வே. 1-9.] [அனுப₄விக்கப்படுவதான அசேதனத்தையும், அதை அனுப₄விப்பவனான ஜீவனையும், இரண்டையும் நியமிப்பவனான பரமாத்மாவையும் அறிந்து அப்பரமாத்மாவினால் அருளப்பெற்று ஜீவன் மோக்ஷம் அடைகிறான்] என்பவை. ஆக வேத₃ங்களும் அதை விளக்க வந்த ரிஷிகளும் சித₃சித்₃ஶ்வர தத்வத்ரயங்களின் பே₄த₃த்தையே வலியுறுத்தியிருக்கிறார்கள் என்று காட்டப்பட்டதாயிற்று. இனி, ஶ்லோகத்தின் பிற்பாதியாலே ப்₃ரஹ்ம ஸூத்ரத்திலுள்ள ஸூத்ரங்களாலும் இவ்விஷயமே நிர்ணயிக்கப்பட்டது என்று காட்டுகிறான். (ப்₃ரஹ்மஸூத்ர பதை₃ஶ்சைவ) ப்₃ரஹ்மத்தைப்பற்றிக் கூறும் ஸூத்ரங்களாகிற பத₃ங்களாலும் இவ்விஷயமே பலவகையாகக் கூறப்பட்டது. "ஶாரீரகமீமாம்ஸை" என்று ப்ரஸித்₃த₄மான ப்₃ரஹ்மஸூத்ரங்களிலும் இது சொல்லப்பட்டது என்றபடி. இந்த ப்₃ரஹ்ம ஸூத்ரங்கள் எப்படிப்பட்டவை என்பதை இரண்டு பத₃ங்களாலே விளக்குகிறான்—(ஹேதுமத்₃பி₄:) ஹேதுக்களோடு கூடியவைகளாலே. நிர்ணயிக்கும் அர்த்த₂ங்களுக்கு ஹேதுவைக் காட்டுகிறவைகளாலே என்றபடி. (விநிஶ்சிதை:) "விஶேஷதோ நிஶ்சிதம் யேஷாம் தை:" என்னும் வ்யுத்பத்தியாலே சிறப்பான நிர்ணயத்தை உடையவைகளாலே என்று பொருள்படுகிறது. பூர்வ பக்ஷங்களாகிற ஆக்ஷேபங்களை எழுப்பி, ஸித்₃தா₄ந்தங்களாகிற நிர்ணயங்களைச் செய்பவைகளாலே என்றபடி. அவையாவன— 1. (பூ: ஸூ) ந வியத₃ஶ்ருதே: [2-3-1] [ஆகாயம் உற்பத்தியாவதில்லை; (உற்பத்தியை உணர்த்தும்) ஶ்ருதியில்லாமையால்] என்று தொடங்கி,

इत्यारभ्य क्षेत्रप्रकारनिर्णय उक्तः, * नात्मा श्रुतेर्नित्यत्वाच्च ताभ्यः

2, (ஸி. ஸூ) ''அஸ்தி து'' [2-3-2] [ஆகாயத்திற்கு உற்பத்தியுண்டு] 3. (பூ. ஸூ) 'கௌ₃ண்யஸம்ப₄வாத் ஶப்₃த₃ாச்ச''[2-3 3] [(அக்₃னியை முதலில் படைத்ததாகக் கூறியிருப்பது) ஒட்டாதாகையாலும், (விகாரமற்றது ஆகாயம் என்னும்) ஶ்ருதியினாலும் (ஆகாயத்திற்கு உற்பத்தியைக் கூறும் ஶ்ருதி) அமுக்கியமானது] 4. (பூ. ஸூ.) ''ஸ்யாச்சைகஸ்ய ப்₃ரஹ்மஶப்₃த₃வத்'' [2-3-4] (ஆகாயவிஷயத்தில் அமுக்கியமாகப் பிரயோகிக்கப் பெற்ற 'ஸம்பூ₄த:' என்னும் ஶப்₃த₃ம்) ஒன்றுக்கே (அக்₃னிமுதலான விஷயங்களில் அனுஷங்கம் செய்து கொள்ளும்போது முக்கியப்பிரயோகமும்) ஆகலாம்; (ஒரே ப்ரகரணத்தில் அமுக்கியமாகவும் முக்கியமாகவும் பிரயோகிக்கப் படும்.), ப்₃ரஹ்மஶப்₃த₃ம்போலே] 5 (ஸி ஸூ.) '' ப்ரதிஜ்ஞாऽஹானி: அவ்யதிரேகாத்'' [2-3-5] [(ப்₃ரஹ்மத்தை அறிந்தால் எல்லாம் அறியப்பட்டதாகும் என்னும்) ப்ரதிஜ்ஞைக்குக் குறையின்மை (ஆகாயமும் ப்₃ரஹ்மகார்யமாவதற்கு உறுப்பாக ப்₃ரஹ்மத்தைக்காட்டிலும்) வேறுபடாமலிருத்தலாலேயே ஆகும்.] 6. (ஸி. ஸூ) ''ஶப்₃தே₃ப்₄ய:'' [2 3-6] [(ஸ்ருஷ்டிக்கு முன் ப்₃ரஹ்மம் ஒன்றே இருந்தது என்று கூறும்) வேத₃ஶப்₃த₃ங்களாலும் ஆகாயத்துக்கு உற்பத்தி உண்டென விளங்குகிறது] 7. (ஸி ஸூ.) ''யாவத் விகாரம் து விபா₄கோ₃ லோகவத்'' [2-3-7] [(ஆகாயம் முதலான) எல்லாக் கார்யப் பொருள்களுக்கும் உற்பத்தி (ஶ்ருதியில் சொல்லப் பட்டே உள்ளது) (தேஜஸ் முதலிய சிலவற்றைக் குறிப்பிட்டுச் சொன்னது) உலகிற்போலே.] 8. (ஸி. ஸூ) '' ஏதேந மாதரிஶ்வா வ்யாக்₂யாத:'' [2-3-8] [இதனால் காற்றும் (உற்பத்தியுடையதென்று) விவரிக்கப்பட்டதாயிற்று.] 9 (பூ. ஸூ.) ''தேஜோऽதஸ்ததா₂ ஹ்யாஹ'' [2-3.10] [அக்₃னிதத்துவமானது முந்திய வாயுவிலிருந்தே (உண்டாகிறது) (ஶ்ருதி) அப்படியே கூறுகிறதன்றோ.] 10 (பூ. ஸூ.) '' ஆப:'' [2-3.11] [ஜலதத்துவமும் (முந்திய அக்₃னிதத்துவத்திலிருந்தே உண்டாகிறது); (ஶ்ருதி) அப்படியே கூறுகிறதன்றோ.] 11. (பூ ஸூ.) ''ப்ருதி₂வீ'' [2-3-12] [ப்ருதி₂வீதத்துவமும் (முந்திய ஜலதத்துவத்திடமிருந்தே உண்டாகிறது) (ஶ்ருதி அப்படியே கூறுகிறதன்றோ) என்னும் பதினொரு ஸூத்ரங்களாலே க்ஷேத்ரம் எனப்படும் அசித்தின் தன்மைகள் நிர்ணயிக்கப்பட்டன. இந்த ஸூத்ரங்களில் ஆகாஶம முதலானவைற்றின் உற்பத்தியைக் கூறுகையாலே அவற்றின் சேர்த்தியாயிருக்கும் க்ஷேத்ரத்தைப் பற்றிய உண்மை அறிவு கூறப்பட்டதாயிற்று. இனி, 1. (ஸி. ஸூ) 'நாத்மா ஶ்ருதே: நித்யத்வாச்ச தாப்₄ய:''

(२. ३. १८) इत्यारभ्य [* ज्ञोऽत एव (२. ३. १९)

[2-3-18] [ஆத்மாவானது உண்டாவதில்லை. ஶ்ருதி அப்படிக் கூறுகையாலும், அந்த ஶ்ருதிகளிலிருந்தே ஆத்மா நித்யமானது என்று ஏற்படுகிறபடியாலும்] 2. (ஸி. ஸூ) 'ஜ்ஞோऽத ஏவ'' [2-3-19] [ஶ்ருதிகளிலிருந்தே (ஆத்மா) ஜ்ஞானத்தை உடையவனாகவே இருக்கிறான்] 3. (ஸி. ஸூ) 'உத்க்ராந்தி க$_3$த்யாக$_3$தீனாம்'' [2-3-20] [(ஶரீரத்திலிருந்து) வெளியேறுதலும், (லோகாந்தரத்திற்குச் செல்லுதலும் (லோகாந்தரத்திலிருந்து) திரும்பி வருதலும் (ஜீவனுக்கு ஶ்ருதியில்) ஓதப்படுவதால் (ஆத்மா அணுவே)] 4. (ஸி. ஸூ) ''ஸ்வாத்மனா ச உத்தரயோ:'' [2-3-21] [க$_3$தி ஆக$_3$தி ஆகிய பின்னிரண்டும் தன் ஆத்மஸ்வரூபத்தினாலேயே (நடக்கவேண்டியவையாகையால் ஆத்மா அணு என்பது உறுதி)] 5. (ஸி. ஸூ) ''நாணுரதச்ச்$_2$ருதேரிதி சேந்ந இதராதி$_4$காராத'' [2-3-22] [அணுத்வததிலும் வேறுபட்ட விபு$_4$த்வம் ஶ்ருதியில் (ஜீவனுக்குக்) கூறப்படுகையால் (ஜீவன்) அணுவல்லன் எனில், ஜீவனைக்காட்டிலும் வேறுபட்ட பரமாத்மாவைப்பற்றிய ப்ரஸ்தாவமுள்ளதால் அவ்விபு$_4$த்வம் ஜீவனுடையதல்ல.] 6. (ஸி. ஸூ] 'ஸ்வஶப்$_3$தோ$_3$ந்மாநாப்$_4$யாம் ச'' [2-3-23] [(ஜீவனைக் குறித்து) அணுஶப்$_3$த$_3$மும் (அணுவஸ்துவை) எடுத்து அதன் அளவும் (ஶ்ருதியில்) கூறப்படுகையாலும் (ஜீவன் அணுவே)] 7. (ஸி. ஸூ) ''அவிரோத$_4$ஶ்சந்த$_3$நவத்'' [2-3-24] [(தே$_3$ஹத்தின் ஒரு பகுதியிலுள்ள) சந்தனம் (தேஹம் முழுவதும் உணர்ச்சியை விளைப்பது) போலே விரோத$_4$மில்லை.] 8. (ஸி. ஸூ) ''அவஸ்தி$_2$திவைஶேஷ்யாதி$_3$தி சேந்ந அப்$_4$யுபக$_3$மாத் ஹ்ருதி$_3$ ஹி'' [2-3-25] [(சந்தனத்துளி) தே$_3$ஹத்தின் ஒரு பகுதியில் இருப்பதால் (தே$_3$ஹம் முழுவதிலும் இன்பம் விளைக்கக் குறையில்லை; ஜீவன் அப்படியில்லையே) எனில்; இவ்வாக்ஷேபம் பொருந்தாது, (ஜீவனுக்கும் தே$_3$ஹத்தின் ஒரு பகுதியில் இருப்பை) ஒப்புக்கொள்வதால். ஹ்ருத$_3$யத்திலன்றோ (ஜீவனுக்கு இருப்பு ஓதப்படுகிறது)] 9. ஸி.ஸூ) ''கு$_3$ணாத்$_3$வாऽऽலோகவத்'' [2 3-26] [(ஸூர்யன் முதலானவற்றின்) கிரணங்களைப்போலே கு$_3$ணமான அறிவின் மூலம் (தே$_3$ஹம் முழுவதும் பரவுகிறான் ஜீவன்)] 10 (ஸி. ஸூ) ''வ்யதிரேகோ க$_3$ந்த$_4$வத் தத$_2$ா ச த$_3$ர்ஶயதி'' [2-3-27] [மணத்திற்கு (அதையுடைய ப்ருதி$_2$வியைக் காட்டிலும் பே$_4$த$_3$ம் ஸித்$_3$தி$_4$ப்பது) போலே (த$_4$ர்மபூ$_4$த ஜ்ஞானத்துக்கு அதையுடைய ஆத்மாவைக்காட்டிலும்) வேறுபாடு (ஸித்$_3$தி$_4$க்கிறது) (ஶ்ருதியும்) அவ்வண்ணமே காட்டுகிறது.]

इत्यादिभिः] क्षेत्रज्ञयाथात्म्यनिर्णय उक्तः; * परात्तु तच्छ्रुतेः

---

11. (ஸி. ஸூ) "ப்ருத2கு3பதே3ஶாத்' [2-3-28] [(ஆத்மாவைக் காட்டிலும் ஜ்ஞானத்தை) வேருகவே உபதே3ஶிப்பதால் (ஜ்ஞானத்திற்கு ஆத்மாவைக்காட்டிலும் வேறுபாடு ஸித்3த4ம்)] 12. (ஸி. ஸூ) "தத்3கு3ணஸாரத்வாத் து தத்3வ்யபதே3ஶ: ப்ராஜ்ஞவத்" [2-3-29] [ஜ்ஞானகு3ணத்தை ஸாரமாகக்கொண்டிருப்பதாலேயே (ஆத்மா) ஜ்ஞானமென்று கூறப்படுகிறது. ஸர்வஜ்ஞனை பரமாத்மா (ஆனந்த3 கு3ணத்தை ஸாரமாக உடையவனுயிருப்பதால் ஆனந்தம் என்று கூறப்படுவது) போலே.] 13. (ஸி. ஸூ) "யாவதா3த்மபா4வித்வாச்ச ந தோ3ஷ: தத்3த3ர்ஶநாத்" [2-3-30] [ஆத்மா இருக்கும் வரையிலும் (நித்தியமாக அறிவும்) இருப்பதாலும் (ஆத்மாவை ஜ்ஞானமென்பதில்) குற்றமில்லை. (நித்யத4ர்மமான கோ3த்வாதி3களையிட்டு, பசு முதலானவை கோ3 முதலிய ஶப்3த3த்தால்) வழங்கப்படுவதைக் காண்கையால்] 14. (ஸி. ஸூ) "பும்ஸ்த்வாதி3வத் த்வஸ்ய ஸதோऽபி4வ்யக்தி யோகா3த்" [2-3-31] [(எப்போதும் ஆத்மாவில்) உள்ள இந்த த4ர்மபூ4த ஜ்ஞானத்திற்கு ஆண்மை முதலானவை (மனிதனுக்கு ஒருகாலத்தில் வெளிப்படுவது) போலே (விழிப்பு முதலான சிலகாலங்களில்) வெளிச்செறிப்பு ஏற்படுவதாகக் கொள்ளலாமாகையால் (ஆத்மாவுக்கு அறிவு நித்யத4ர்மமாகலாம்.)] 15. (ஸி. ஸூ.) "நித்யோபலப்3த்4யநுபலப்3தி4 ப்ரஸங்கோ3ऽந்யதர நியமோ வாந்யதா2" [2-3-32] [ஆத்மாவை எங்கும் நிறைந்ததாகவும், ஜ்ஞானமாத்ரமாகவும் ஒப்புக்கொள்ளும் பக்ஷத்தில் ஆத்மாவைப்பற்றிய தோற்றமும், தோற்றமின்மையும் எப்போதும் ஏற்படவேண்டிவரும். அல்லது அத்தோற்றம் தோற்றமின்மை எனும் இவ்விரண்டிற்குள் ஏதாவதொன்று எப்போதும் ஏற்படவேண்டிவரும்.] 16. (ஸி. ஸூ.) "கர்த்தா ஶாஸ்த்ரார்த்த2வத்த்வாத்" [2-3-33] [ஶாஸ்த்ரம் பயனுள்ளதாக ஆகவேண்டுமாகையால், ஆத்மா கர்த்தாவாகவும் ஆகிறுன்.] 17. (ஸி. ஸூ) "உபாதா3நாத் விஹாரோபதே3ஶாச்ச" [2-3-34] [(சரீரேந்த்ரியங்களைப்) பற்றிக்கொண்டு (ஜீவன்) ஸஞ்சரிப்பதாக உபதே3ஶிக்கையாலும் (ஜீவனே கர்த்தா)] 18 (ஸி ஸூ) "வ்யபதே3ஶாச்ச க்ரியாயாம் நசேந்நிர்தே3ஶவிபர்யய:" [2-3-35] [(லௌகிக வைதி3க) க்ரியைகளில் (கர்த்தாவாகக்) கூறுகையாலும் (ஜீவனே கர்த்தா) (விஜ்ஞாநஶப்3த3த்தால் ஆத்மாவைக்) கூறவில்லையாகில் (விஜ்ஞாநேந என்று) வேற்றுமை மாறுபாடு ஏற்பட்டிருக்க வேண்டும்.] 19. (ஸி. ஸூ.) "உபலப்3தி4வத3நியம:" [2-3-36] [(முன் அதி4கரணத்தில் கடைசி (2-3-32) ஸூத்ரத்தில்

(२. ३. ४०) इति भगवत्प्रवर्त्यत्वेन भगवदात्मकत्वमुक्तम् । एवं बहुधा गीतं क्षेत्रक्षेत्रज्ञयाथात्म्यं मया संक्षेपेण सुस्पष्टमुच्यमानं शृण्वित्यर्थः ॥ ४ ॥

महाभूतान्यहङ्कारो बुद्धिरव्यक्तमेव च ।
इन्द्रियाणि दशैकं च पञ्च चेन्द्रियगोचराः ॥
इच्छा द्वेषस्सुखं दुःखं संघातश्चेतनाधृतिः ।
एतत् क्षेत्रं समासेन सविकारमुदाहृतम् ॥

5. மஹாபூ4தாந்யஹங்கார: பு3த்3தி4ரவ்யக்தமேவ ச |
இந்த்3ரியாணி த3ஸைகம் ச பஞ்ச சேந்த்3ரியகோ3சரா: ||

சொல்லப்பட்ட) உபலப்3தி4யைப் போலே (கர்மப2லபோ4க3த்தில்) நியமமில்லாமற்போகும்.] 20. (ஸி. ஸூ.) "ஶக்திவிபர்யயாத்" [2-3-37] [(ப்ரக்ருதிக்குக் கர்த்ருத்வத்தை ஒப்புக்கொண்டால் அதற்கே போ4க்த்ருத்வஶக்தியையும் ஒப்புக்கொள்ளவேண்டிவருகையால், ஆத்மாவிற்கு போ4க்த்ருத்வஶக்தி இல்லாமற்போகும்.] 21. (ஸி. ஸூ.) "ஸமாத்4யபா4வாச்ச" [2-3-38] [(மோக்ஷஸாத4னபூ4தமான) ஸமாதி4 பொருந்தாதாகையாலும் (ஆத்மாவே கர்த்தா)] 22. (ஸி. ஸூ.) "யதா2 ச தக்ஷோப4யதா2" [2-3-39] [(ஆத்மா கர்த்தாவாயிருந்தால்தான்) தச்சனைப்போலே (இஷ்டமிருந்தால் வேலைசெய்கிருன்; இஷ்டமில்லையாகுல் வேலைசெய்வதில்லை என்னும்) இருவிதமான வ்யவஸ்தை2யும் (ஒட்டும்)] 23. (ஸி. ஸூ.) "பராத்து தச்ச்2ருதே:" [2-3-40] [(ஜீவனுடைய) அந்தக் கர்த்ருத்வமோவெனில் பரமாத்மாவாலேயே ஏற்படுகிறது ஶ்ருதி அப்படிக் கூறுகிறபடியால்.] ஆகிய 23 ஸூத்ரங்களால் க்ஷேத்ரஜ்ஞனுகிற ஜீவனைப்பற்றிய உண்மையறிவு நிர்ணயிக்கப்பட்டது. "பராத்து தச்ச்2ருதே:" என்னும் ஸூத்ரத்தில் ஜீவன் பரமாத்மாவுக்கு ஶரீரமாய், அந்தர்யாமியான அவனுல் எப்போதும் நியமிக்கப்படுபவனுய் இருப்பவன் என்று காட்டப்பட்டது. இப்படி வேத3ங்களாலும், ரிஷிகளாலும், ப்3ரஹ்மஸூத்ரங்களாலும் க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்களைப் பற்றிய உண்மை அறிவு மிக விரிவாகப் பலவிதமாகப் பாடப்பட்டிருக்கையால் அல்பஜ்ஞானமுடைய உன்னுல் அவற்றைத்தெளிவாக அறிந்துகொள்ள முடியாது. ஆகையால் எல்லாமறிந்த நான் இங்கு அவற்றைப் பற்றிச் சுருக்கமாகவும் மிகத்தெளிவாகவும் கூறப்போவதை நீ கேட்பாயாக என்று முன்ஶ்லோகத்துடன் கூட்டிப் பொருள் கொள்ளவேண்டும். 4.

6. இச்சா2 த்3வேஷ: ஸுக2ம் து3:க்க2ம் ஸங்கா4தஶ்
சேதநாத்4ருதி: |
ஏதத் க்ஷேத்ரம் ஸமாஸேந ஸவிகாரம் உதா3ஹ்ருதம் ||

மஹாபூ4தாநி—பஞ்சபூ4தங்கள், **அஹங்கார:**—(அவற்றுக்குக் காரணமான) பூ4தாதி3, **பு3த்3தி4:**—(அதற்குக் காரணமான) மஹாந், **அவ்யக்தம் ஏவ ச**—(அதற்குக் காரணமான) மூலப்ரக்ருதி, **த3ஶ ஏகம் ச இந்த்3ரியாணி**—ஐந்து ஜ்ஞாநேந்த்3ரியங்களும், ஐந்து கர்மேந்த்3ரியங்களும், இவற்றை நடமிக்கும் மனமும் ஆகப் பதினொரு இந்த்3ரியங்களும், **பஞ்ச இந்த்3ரியகோ3சரா: ச**—ஶப்3த3ஸ்பர்ஶரூபரஸ க3ந்த4ங்களாகிற ஐந்து புலன்களும், **இச்சா2**—விருப்பம், **த்3வேஷ:**—வெறுப்பு, **ஸுக2ம்**—இன்பம், **து3:க்க2ம்**—துன்பம், **சேதநாத்4ருதி: ஸங்கா4த:**—(இன்பதுன்பங்களை அனுப4விப்பதற்கும், போ4க3மோக்ஷங்களை ஸாதி4ப்பதற்கும்) ஜீவனுக்கு ஆதா4ரமாயிருக்கும் பூ4தஸமூஹம், **ஏதத்**—இவை அனைத்தும், **ஸவிகாரம்**—கார்யங்களோடு கூடிய, **க்ஷேத்ரம்**—க்ஷேத்ரம் (என்று) **ஸமாஸேந**—சுருக்கமாக, **உதா3ஹ்ருதம்**—சொல்லப்பட்டது.

---

5. பூதங்கள் பூதாதி புத்தி பிரகிருதி
யோதிந்தி யம்பதினொன் றொண்புலனைந்—தீதில்வரு
மிச்சைசின மின்பதுன்ப மேலுமுடல் சேதனர்தம்
துச்சிருப்பி தாகுஞ் சுருக்கு.

பூதங்கள்—ஐந்து பூ4தங்கள், **பூதாதி**—(அவற்றுக்குக் காரணமான) அஹங்காரம், **புத்தி**—(அதற்குக்காரணமான) மஹான், **பிரகிருதி**—(அதற்குக் காரணமான) மூலப்ரக்ருதி, **ஓது இந்தியம் பதினொன்று**—பதினொன்றாக ஓதப்படும் இந்த்3ரியங்கள், **ஒண்புலன் ஐந்து**—ஒளிபொருந்திய விஷயங்கள் ஐந்து, **ஈதில் வரும்**—இவற்றினால் விளையும், **இச்சை சினம், இன்ப துன்பம்**—விருப்பு வெறுப்பு, ஸுகம் துக்கம், **சேதனர்தம்**—ஜீவர்களுடைய, **துச்சு இருப்பு**—போ4க3த்திற்கு ஆதா4ரமான, **ஏலும் உடல்**—பூ4தங்கள் முதலானவற்றின் கூட்டான உடல், **இது சுருக்கு ஆகும்**—இது (க்ஷேத்ரத்தின) சுருக்கமாகும்.

भा ॥ महाभूतान्यहंकारो बुद्धिरव्यक्तमेव चेति क्षेत्रारम्भकद्रव्याणि ; पृथिव्यप्तेजोवाय्वाकाशा महाभूतानि, अहंकारो भूतादिः, बुद्धिर्महान्, अव्यक्तं प्रकृतिः ; इन्द्रियाणि दशैकं च पञ्च

5, 6. க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்களைப்பற்றிய உண்மையறிவைச் சுருக்கமாகச்சொல்லத் தொடங்கியவனாய், இவ்விரு ஶ்லோகங்களில் க்ஷேத்ரமெனப்படும் அசேதனத்தைப்பற்றிய உண்மையறிவைச் சுருக்கமாகக் கூறுகிறான். (மஹாபூ4தாநி அஹங்கார: பு3த்3தி4: அவ்யக்தம் ஏவ ச) பூ4மி, நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் மஹாபூ4தங்களும், அவற்றுக்குக் காரணமான பூ4தாதி3 எனப்படும் அஹங்காரமும், அதற்குக் காரணமாய், அறிவைப்போஷிக்கையாலே பு3த்3தி4 எனப்படும் மஹானும், அதற்குக்காரணமான அவ்யக்தம் எனப்படும் மூலப்ரக்ருதியும், இத்தால் க்ஷேத்ரம் எனப்படும் ஶரீரத்துக்குக் காரணமான த்3ரவ்யங்கள் எடுக்கப்பட்டன. மூன்ருவது ஶ்லோகத்தில் 'யச்ச' என்று கூறியதின் விவரணமாகும் இது. பூ4தஶப்3த3ம் ஜீவராசிகள் முதலானவற்றையும் குறிக்குமாகுலும், ஶரீரத்துக்குக் காரணமான பொருள்களைக் கூறும் ப்ரகரணமாகையால், ஐம்பெரும் பூ4தங்களையே இங்கு மஹாபூ4தஶப்3த3த்தால் குறிப்பதாகக் கொள்வதே தக்கது. அவ்வண்ணமே அஹங்கார ஶப்3த3மும் தே3ஹாத்மாபி4மானம் முதலானவற்றைக் குறிப்பதாகுலும், ப்ரகரணத்தையொட்டி பூ4தங்களுக்குக் காரணமான அஹங்காரத்தைச் சொல்லுவதாகக்கொள்வதே பொருந்தும். அவ்வஹங்காரத்திலும் ஸாத்விகாஹங்காரம் இந்த்3ரியங்களுக்குக் காரணமாகையாலும், ராஜஸாஹங்காரம் ஸாத்விக தாமஸாஹங்காரங்களிரண்டுக்கும் தத்தம் கார்யோத்பத்தியில் உதவிபுரிவதேயாகையாலும், பஞ்சபூ4தங்களுக்குக் காரணமாய் அதனாலேயே 'பூ4தாதி3' எனப்படும் தாமஸாஹங்காரமே இங்கு அஹங்கார ஶப்3த3த்தால் குறிப்பிடப்படுவதாகக் கொள்வதே தகும். அவ்வண்ணமே பு3த்3தி4 ஶப்3த3மும் உறுதியான அறிவையும் குறிக்குமாயினும் இங்கு ப்ரகரணத்தையொட்டி அவ்வறிவைப் போஷிக்கையாலே 'பு3த்3தி4' எனப்படுவதாய், அஹங்காரத்துக்குக் காரணமானதான 'மஹான்' என்னும் தத்துவத்தையே குறிக்கிறது. 'அவ்யக்த' ஶப்3த3ம் இந்த்3ரியங்களுக்குப் புலனாகாத பல பொருள்களைக் குறிக்குமாயினும், ப்ரகரணத்தையொட்டி இங்கு மஹானுக்குக் காரணமான மூலப்ரக்ருதியைக் குறிக்கிறது. அதிலும், "அவ்யக்தமக்ஷரே லீயதே, அக்ஷரம் தமஸி லீயதே, தம: பரே தே3வ ஏகீப4வதி"

चेन्द्रियगोचरा इति क्षेत्राश्रितानि तत्त्वानि; श्रोत्रत्वक्चक्षुर्जिह्वा-घ्राणानि पञ्च ज्ञानेन्द्रियाणि, वाक्पाणिपादपायूपस्थानि पञ्च कर्मेन्द्रियाणीति, तानि दश, एकमिदि मनः, इन्द्रियगोचराश्च पञ्च--

---

[ஸுபா3ல 2] {மஹானுக்குககாரணமான அவ்யக்தம எனனும் ப்ரக்ருதியின் நிலே அக்ஷரய எனனுய ப்ரக்ருதிநிலேயில் லயிக்கிறது. அவ்வக்ஷரம் தமஸ் என்னும் மூலப்ரகருதியில் லயிக்கிறது} என்கிறபடியே அவ்யக்தம் எனப்படும மூலப்ரக்ருதியின் நிலேயைச் சொன்னுல் அதற்குக் காரணமான அக்ஷரத்தையும் தமஸ்ஸையும் சொல்லவேண்டிவருமாகையால் மூலப்ரகருதியின் கடைசி நிலேயான தமஸ்ஸையே இங்கு அவ்யக்தஶப்3த3ம் குறிக்கிறது என்று கொள்ள வேண்டும். இனி, மூன்ருவது ஶ்லோகத்தில் "யாத்3ருக்ச" என்று கூறப்பட்டதாய், க்ஷேத்ரத்தை இருப்பிடமாகக் கொண்டவையான பொருள்கள் ஶ்லோகத்தின் பிற்பாதியாலே விவரிக்கப்படுகின்றன. (இந்த்3ரியாணி த3ஶ ஏகம் ச பஞ்ச ச இந்த்3ரியகோ3சரா:) ஶப்3த3த்தை உணரும் செவி, ஸ்பர்ஶத்தை உணரும் மெய், ரூபத்தை உணரும் கண், ரஸத்தை உணரும் நா, க3ந்த4த்தை உணரும் மூக்கு என்கிற ஜ்ஞானேந்த்3ரியங்கள் ஐந்தும், பேச உதவும் வாய், தொழில் புரிய உதவும் கை, நடக்க உதவும் கால், மல விஸர்ஜனத்துக்கு உதவும் பாயு, மூத்ரரேதோவிஸர்ஜனத்துக்கு உதவும் உபஸ்த2ம் (ஆண், அல்லது பெண் குறி) ஆகிய கர்மேந்த்3ரியங்கள் ஐந்தும், இந்தப் பத்து இந்த்3ரியங்களேயும் இயக்கும் மனமாகிற இந்த்3ரியமும் "இந்த்3ரியாணி த3ஶ ஏகம் ச" என்று கூறப்படுகின்றன. "த்வக சக்ஷுர் நாஸிகா ஜிஹ்வா ஶ்ரோத்ரமத்ர ச பஞ்சமம் | ஶப்3த3ாதீ3நாம அவாப்த்யர்த்த2ம் பு3த்3தி4யுக்தாநி ச த்3விஜ / பாயூபஸ்தௌ2 கரௌ பாதௌ3 வாக் ச மைத்ரேய பஞ்சமீ / விஸர்க்க3 ஶில்பக3த்யுக்தி கர்ம தேஷாம் ச கத்2ய தே /|" [வி. பு, 1-2-48-49] "ஏகாத3ஶம் மநஶ்சாத்ர" [வி. பு, 1-2-47] [ஶப்3த3ஸ்பர்ஶரூபரஸக3ந்த4ங்களே உணருவதற்காக முறையே ஏற்பட்ட காது, மெய் கண், நா, மூக்கு என்னும் ஐந்தும் ஜ்ஞானேந்த்3ரியங்களாகும். மலத்தை வெளியிட உதவும் பாயு, மூத்ரத்தையும் ரேதஸ்ஸையும் வெளியிட உதவும் உபஸ்த2ம், தொழில் புரிய உதவும் கைகள், நடக்க உதவும் கால்கள், பேச உதவும் வாய் என்னும் ஐந்தும் செயல்களேச் செய்ய உதவும் கர்மேந்த்3ரியங்களாகும். இவற்றை (இயக்கும்) மனம் பதினேராவது இந்த்3ரியமாகும்] என்று பராஶரமஹர்ஷி கூறியது இங்கு அனுஸந்திக்கத்தக்கது.

शब्दस्पर्शरूपरसगन्धाः : इच्छा द्वेषस्सुखं दुःखमिति क्षेत्रकार्याणि

ஜ்ஞானேந்த்ரியங்களால் அறியப்படும் ஶப்₃த₃ம், ஸ்பர்ஶம், ரூபம் ரஸம், க₃ந்த₄ம என்னும் ஐந்து விஷயங்களும் (புலன்களும்) "பஞ்ச இந்த்₃ரிய கோ₃சரா:" என்று கூறப்படுகின்றன. ஆக இந்த ஶ்லோகத்தால் க்ஷேத்ரம் எனப்படும் ஶரீரத்துக்குக் காரணமான த்₃ரவ்யங்களும் அந்த ஶரீரத்தைப் பற்றியிருக்கும் தத்துவங்களும் கூறப்பட்டன. இனி மூன்ருவது ஶ்லோகத்திலுள்ள 'யத்₃விகாரி' என்னும் பத₃ம் - அடுத்த ஶ்லோகத்தில் முதல் பாத₃த்தாலே விவரிக்கப்படுகிறது. 'க்ஷேத்ரம்' எனும் ஶரீரத்தின் விகாரங்கள் கூறப்படுகின்றன என்றபடி. (இச்சா₂ த்₃வேஷ; ஸுக₂ம் து₃:க்க₂ம்) விருப்பு வெறுப்பு, இன்பம் துன்பம். இவ்விடத்தில் ஓர் ஆக்ஷேபம் எழக்கூடும். அதாவது:- "விருப்பு வெறுப்புக்கள், இன்பதுன்பங்கள் ஆகியவை பஞ்சபூ₄தங்களின் கூட்டான ஶரீரத்தின் பரிணுமமாகக் காணப்படவில்லையே; நேர்மாருக ஆத்மாவின் த₄ர்மபூ₄தஜ்ஞானத்தின் பரிணுமமாகவன்ருே அவை காணப்படுகின்றன. அப்படியிருக்கும்போது அவற்றை ஶரீரத்தின் விகாரமென்பது எப்படிப் பொருந்தும்?" என்பது அவ்வாக்ஷேபம். இதற்கு ஸமாத₄ானம் பின்வருமாறு — ஆத்மாவுக்கு இந்த ஶரீர ஸம்ப₃ந்த₄த்திஞலேயே விருப்பு வெறுப்புக்களும், இன்ப துன்பங்களும் ஏற்படுகையால் அதையிட்டு உபசார வழக்காக இவை ஶரீரத்தின விகாரமாகக் கூறப்படுகின்றன. "மநஸா ஹ்யேவ பஶ்யதி மநஸா ஶ்ருணோதி ; காம: ஸங்கல்ப: விசிகித்ஸா ஶ்ரத்₃த₄ா அஶ்ரத்₃த₄ா த்₄ருதி: அத்₄ருதி: ஹ்ரீ: தீ₄: பீ₄: இதயேதத் ஸர்வம் மந ஏவ" [ப்₃ருஹ 3-5-3] [மனத்தாலேயன்ருே (ஜீவன்) காண்கிருன்; மனத்தாலேயே கேட்கிருன். விஷயங்களில் விருப்பம், உறுதி, ஸந்தேஹம், கர்மங்களைச் செய்வதில் ஊற்றம், அதில் ஊற்றமின்மை, ஸுகம், துன்பம், வெட்கம், ப்ரமாணங்களால் மாத்திரம் உண்டாகும் அறிவு, பயம் இவையனைத்தும் மனமே] என்னும் வேத₃வாக்யத்தில் விருப்பம் முதலானவை மனத்தின் விகாரமே என்று கூறியிருக்கையாலும், "பஞ்சவ்ருத்தி: மநோவத்₃ வ்யபதி₃ஶ்யதே" [ப்₃ரஹ்மஸூ 2-4-12] [ஐந்தொழில்களையுடைய ப்ராணனே (பலவித₄மான தொழில்களையுடைய) மனம்போலே ப்ராணன் அபானன் முதலிய ஐந்து பெயர்களால் குறிக்கப்படுகிறது.] என்னும் ஸூத்ரத்தின் பா₄ஷ்யத்தில் "ந காமாதி₃கம் மநஸ: தத்த்வாந்தரம்" [விருப்பம் முதலானவை மனத்தைக்காட்டிலும்

क्षेत्रविकारा उच्यन्ते; यद्यपीच्छाद्वेषसुखदुःखान्यात्मधर्मभूतानि,

வேறுபட்ட பொருள்கள் அல்ல] என்று ப4ாஷ்யமிட்டிருக்கையாலும் இங்கு விருப்பம் முதலானவற்றை த4ர்மபூ4தஜ்ஞானத்தின் பரிணாம மாகக் கூறுவது எப்படிப்பொருந்தும்? எனில்: "கார்யகாரண கர்த்ருத்வே ஹேது: ப்ரக்ருதிருச்யதே / புருஷ: ஸுக2து3:க்கா2னாம போ4க்த்ருத்வே ஹேதுருச்யதே ||" (கீ3தை 13-20) [ஶரீரேந்த்ரி யங்களின் செயல்புரியும் தன்மைக்கு (புருஷனால் அதி4ஷ்டி2க்கப்பட்ட) ஶரீரரூபமான ப்ரக்ருதியே காரணமாகச் சொல்லப்படுகிறது. புருஷன் எனப்படும் ஜீவன் (ஶரீரத்தோடு கூடியிருந்துகொண்டு) இன்பதுன்பங்களை அனுப4விப்பதற்குக் காரணமாகிறான்] என்று இந்த கீ3தையில் "இன்பம் துன்பம் முதலானவற்றுக்கு ஜீவனே இருப்பிடமாயிருக்கிறான்" என்று சொல்லப்படப்போகிறதாகையாலே, இவற்றை ஜீவாத்ம த4ர்மமாகவே கொள்ளவேண்டும். கீ3தையில் ஜீவனை ஸுக2து3:க்கா2னுப4வத்திற்கு ஹேது என்று சொல்லிற்றே யொழிய அவ்வனுப4வத்திற்கு இருப்பிடம் என்று சொல்லவில்லையே; இருப்பிடமாயிராமலே ஹேதுவாயிருக்கலாமே எனில்; ஶ்லோகத்தின் முற்பாதியில் 'ஶரீரம் செயலுக்கு இருப்பிடமாயிருந்துகொண்டே ஹேதுவாகிறது' என்று கூறுகையால் இங்கும் புருஷன் ஸுக2து3:க்க2ங்களுக்கு இருப்பிடமாயிருந்துகொண்டு ஹேதுவாவதாகக் கூறுவதே பொருத்தமாகும். இதற்குமேல் அத்3வைதிகள் கூறுவதாவது: "அந்த:கரணமாகிற மனத்தோடு தொடர்புகொண்ட சைதன்யமே (அறிவே) 'ஜீவன்' என்றும் 'புருஷன்' என்றும் சொல்லப்படுகிறது. ஆகையால் "காம: ஸங்கல்ப:" என்னும் உபநிஷத்3வாக்யத்தை யொட்டி விருப்பம் முதலானவற்றை மனத்திலிருப்பவையாகவேகொண்டு விடலாம். 'புருஷஸ்ஸுக2து3:க்கா2னாம்' என்னும் கீ3தா வாக்யமும் இவ்வர்த்த2த்தையே சொல்லுகிறது" என்பது அத்3வைதிகளின் வாத3ம். இதை ஹூத்தைப்போலே மனமும் ப்ரக்ருதியின் பரிணாமமே யாகையால் இப்படிக் கொள்ளும்போது ஶ்லோகத்தின் முற்பாதியில் கர்த்ருத்வத்துக்குக் காரணமாக ப்ரக்ருதியைச் சொன்னதுபோலே பிற்பாதியில் போ4க்த்ருத்வத்துக்குக் காரணமாகவும் ப்ரக்ருதியையே சொல்லவேண்டிவரும். மனத்துக்குச் சைதன்ய ஸம்ப3ந்த4மிருக்கையால் பிற்பாதியில் 'ஸுக2து3:க்க2ங்களுக்கு இருப்பிடமாயிருப்பது புருஷன்' என்று கூறப்பட்டது. எனில், கர்த்ருத்வத்துக்கு இருப்பிடமாயிருக்கும் ஶரீரத்துக்கும் சைதன்ய ஸம்ப3ந்த4முள்ளதாகையால் முற்பாதியிலும் 'கர்த்ருத்வத்துக்கிருப்பிடமாயிருப்பது புருஷனே'

तथाऽप्यात्मनः क्षेत्रसंबन्धप्रयुक्तानीति क्षेत्रकार्यतया क्षेत्रविकारा उच्यन्ते; तेषां पुरुषधर्मत्वं * पुरुषस्सुखदुःखानां भोक्तृत्वे

என்று கூறவேண்டிவரும். இனி "காம; ஸங்கல்ப:" என்னும் உபநிஷத்3வாக்யத்துக்கும், ப்3ரஹ்மஸூத்ரம் 2-4-12-இல் பா4ஷ்யகாரர் "விருப்பம் முதலானவை மனத்தைக்காட்டிலும் வேறு பொருளல்ல" என்று கூறியிருப்பதற்கும் என்னவழி சொல்லுவது? எனில், "காமம், ஸங்கல்பம் முதலானவையாக த4ர்மபூ4தஜ்ஞானம் பரிணமிப்பதற்குக் காரணமாயிருக்கும் மனோவ்ருத்திகள் (மனத்தின் செயல்கள்) அவற்றின் கார்யமான காமம், ஸங்கல்பம் முதலானவற்றைச் சொல்லும் சொற்களாலேயே சொல்லப்படுபவையாய் மனத்தைக் காட்டிலும் வேறுபடாதவையாய் இருக்கின்றன" என்பதே அவ்வுபநிஷத்3வாக்யத்துக்கும், அந்த பா4ஷ்யத்துக்கும் கருத்தென்று கொண்டுவிடலாம். இனி "வாதி3ப்ரதிவாதி3கள் இருவரும் ஒப்புக்கொள்ளும் மனோவ்ருத்திகளுக்கே விருப்பம் முதலான பெயர்கள் இருப்பதால் எல்லாம் பொருந்தும்போது த4ர்மபூ4தஜ்ஞானத்துக்குப் பரிணாமமாக விருப்பம் முதலானவற்றைக் கற்பிப்பதில் ப்ரமாணமில்லாமையால் அந்த ஶப்3த3ங்கள் மனோவ்ருத்திகளை லக்ஷணையாலே குறிக்கின்றன என்பது பொருந்தாதே" எனில்: "ஸோऽகாமயத" [தை-ஆ.-6] "அத2 புருஷோ ஹவை நாராயணோऽகாமயத" [நாராயணோபநிஷத்] என்று பரமாத்மாவின் ஜக3த்ஸ்ருஷ்டி ஸங்கல்பத்தைச் சொல்லும்போது சில உபநிஷத்3வாக்யங்கள் காமஶப்3த3த்தைப் பிரயோகித்தன. மற்றும் சில உபநிஷத்3வாக்யங்கள் அப்பதத்தின் ஸ்தா2னத்தில் "ததை3க்ஷத" [சா2ந் 6-2-3] "ஸ ஈக்ஷாஞ்சக்ரே" [ப்ரஶ்ந 6-3] என்று அறிவைக் குறிக்கும் 'ஈக்ஷதி'ஶப்3த3த்தைப் படித்தன, ப்ராக்ருதமான மனமற்றதான ஜக3த்காரண விஷயத்தில் இவ்வண்ணமாக 'காம'ஶப்3த3ம் அறிவைக்குறிக்கிறது என்று தேறியவளவில் ஜீவனுக்கும் அப்படியே கொள்வதே நியாயமாகும். மேலும், மற்றொரு வேத3வாக்யத்தில் "ஸ தபோऽதப்யத" [தை-ஆந-6] என்று காமஶப்3த3 ஸ்தா2னத்தில் படிக்கப்பட்ட தபஶ்ஶப்3த3த்துக்கு "யஸ்ய ஜ்ஞாநமயம் தப:" [முண்ட3க 1-1-9] என்று வேறொரு உபநிஷத்3 வாக்யம் ஜ்ஞானம் என்று பொருள் உரைத்தது.

" ஸ யதி3 பித்ருலோக காமோ ப4வதி ஸங்கல்பா-
தே3வாஸ்ய பிதரஸ் ஸமுத்திஷ்ட2ந்தி" [சா2ந் 8-2-1]

हेतुरुच्यते (२०) इति वक्ष्यते । संघातश्चेतनाधृतिः - आधृतिराधारः,

---

[அந்த முக்தன் பித்ருக்களைக்காண விரும்பினானாகில் அவனது ஸங்கல்பத்தாலேயே அவனுடைய (முன்னாள்) பித்ருக்கள் கிளம்பிவருகிறார்கள்] என்று ப்ராக்ருதமான மனமற்ற முக்தர் காமஸங்கல்பங்களுக்கு இருப்பிடமாய் இருப்பதாக மற்றொரு வேத₃வாக்யம் முழங்கிற்று. மேலும் ஸுக₂ஶப்₃த₃த்தோடு ஒரே பொருளையுடைய ஆநந்த₃ஶப்₃த₃த்தால் சொல்லப்படும் ஆனந்தத்தை 'ரஸம ஹ்யேவாயம் லப்₃த்₄வா ஆநந்தீ₃ ப₄வதி'' [தை-ஆந 7] [ரஸமயனான பரமாத்மாவை இந்த முக்தாத்மா அடைந்து ஆனந்த₃முடையவனாகிறான்] ''ஆநந்த₃ம் ப்₃ரஹ்மணோ வித்₃வாந்'' [தை-ஆந-9] [ப்₃ரஹ்மத்தின் ஆனந்த₃த்தை அறிபவன்] என்றும் வேத₃வாக்யங்கள் முறையே முக்தாத்மாவிடமும் ப்₃ரஹ்மத்திடமும் உள்ளதாகப் பேசின. ''அநுகூல ஜ்ஞாநமேவ ஹ்யாநந்த₃:'' [அனுகூலமான அறிவே ஆனந்தமெனப்படுகிறதன்றோ] என்று ப₄ாஷ்யகாரர் அருளிய ரீதியில் ஸுகம் முதலானவை த₄ர்மபூ₄த ஜ்ஞானத்தின் பரிணாமமே என்பது இவ்வாக்யங்களிலிருந்தும் விளங்குகிறது. மேலும்,

''நிரஸ்தாதிஶயாஹ்லாத₃ ஸுக₂ப₄ாவைகலக்ஷணா ।
பே₄ஷஜம் ப₄க₃வத்ப்ராப்தி: ஏகாந்தாத்யந்திகீ மதா'' ॥
[வி-பு-6.5-59]

[தனக்கு மேலில்லாத பெருமையுடைய ஆனந்தரூபமான ஸுக₂மாக இருக்கையையே லக்ஷணமாகக்கொண்டதாய், துன்பம் கலவாததாய், நித்யமானதான ப₄க₃வத₃நுப₄வம் (ஸம்ஸார நோயால் வருந்துமவனுக்கு) மருந்தாக எண்ணப்படுகிறது.] என்று ப₄க₃வத₃நுப₄வமாகிற பேரின்பத்தைப் பராஶரமஹர்ஷி ''ஸுக₂ரூபமானது'' என்று குறிப்பிட்டார். இவற்றிலிருந்து, காமம், ஸங்கல்பம், ஸுக₂ம் முதலானவற்றை த₄ர்மபூ₄த ஜ்ஞானத்தின் பரிணாமமாகவே கொள்ள வேண்டும் என்று விளங்குகிறது. அத்₃வைதிகள் கூறுவதுபோல் மனத்தின் வ்ருத்திகளே (செயல்பாடுகளே) காமம், ஸுக₂ம் முதலானவை என்று கொண்டால், அச்செயல்பாடுகள் அறிவற்ற ஜட₃ப் பொருள்களேயாகையால் மற்றொன்றால் ப்ரகாசிப்பவை என்றே கொள்ளவேண்டிவரும். எது மற்றொன்றால் பிரகாசிப்பதோ, அது பிறிதொன்றைப் பிரகாசிக்கச்செய்ய இயலாது. ஆகையால், காமம் ஸுக₂ம் முதலானவை ஜ்ஞானத்தின் நிலைகளே என்று கொண்டாலொழிய அவை மற்ற பொருள்களைப் பிரகாசிக்கச்செய்வது பொருந்

தாமற் போய்விடும். ஆகையால், அவற்றை ஞானத்தின் நிலைகளென்றே கொள்ளவேண்டும். ஆகையால் அவற்றை மனத்தின் நிலைகளே என்பது லக்ஷணைமுழக்கென்றே கொள்ளவேண்டும். இனி, ''மநோ வ்ருத்திகளுக்கு அறிவின் தொடர்பு இருக்கையால் அவை பொருள்களைப் பிரகாசிக்கச்செய்வது பொருத்தமே எனக் கொள்ளலாமே'' என்று அத்3வைதிகள் கூறுவார்களாகில், எந்த விசேஷமுமற்ற அவ்வறிவு எந்த விஷயத்தையும் அறியமாட்டாதாகையால், அதோடு தொடர்புடையதாயிருப்பதால் மாத்திரம் மநோவ்ருத்திகள் பொருள்களைப் பிரகாசிக்கச்செய்ய இயலமாட்டா. நூறு குருடர்கள் ஒன்று சேர்ந்தாலும் விஷயங்களைப் பார்க்க முடியாதே! நிர்விசேஷமான அறிவே பொருள்களைப் பிரகாசிக்கச் செய்வதெனக்கொண்டால் 'மநோவ்ருத்திகளோடு தொடர்புடைய அவை விஷயங்களை கிரஹிக்கின்றன' என்று கொள்ளவேண்டிய அவசியமில்லை. மேலும், விஷயக்3ராஹகத்வம் என்னும் கு3ணமுடையவையாகத் தேறுகிறபடியால், அவ்வறிவு நிர்க்கு3ணம் என்னும் கொள்கையும் தொலைந்துவிடும். ''ஸம்ஸார நிலையில் அவ்வறிவு ஸங்கோசத்தை அடைந்துள்ளபடியால் விஷயங்களை க்3ரஹிக்கிறது'' என்று கூறினால், ''ப்3ரஹ்மம் விகாரமற்றது, ஸங்கோசமற்றது'' என்றெல்லாம் முழங்கும் வேத3 வாக்யங்கள் முரண்படும். நம்முடைய விசிஷ்டாத்3வைத மதத்தில் ஒப்புக்கொள்ளப்படும் சேதன த4ர்மபூ4தமான அறிவுக்கு ஸங்கோச விகாஸம் ஶ்ருதிகளில் முழங்கப்படுகிறதாகையால் இக்குறை ஏற்படாது. ஆகையால், விருப்புவெறுப்புகள், இன்பதுன்பங்கள் ஆகியவை ஆத்மத4ர்மபூ4த ஜ்ஞானத்தின் விகாரங்களாயிருந்தபோதிலும், சரீரஸம்ப3ந்த4த்தினலேயே அவை விளைவதையிட்டு இங்கு அவை ஶரீர விகாரங்களாகச் சொல்லப்பட்டது பொருத்தமேயாகும். (ஸங்க4ாதஶ்சேதநாத்4ருதி:) ஆத்4ருதிஶப்3த3ம் ஆத4ாரத்தைக் குறிக்கிறது. ஸங்க4ாதஶப்3த3த்தால், இன்பதுன்பங்களை அனுப4விப்பதற்கும், போ4க3மோக்ஷங்களை ஸாதிப்பதற்கும் ஆத4ாரமாகப் படைக்கப்பட்டிருக்கும் பஞ்சபூ4தக்கூட்டு சொல்லப்படுகிறது. 'சேதநா, த்ருதி:' என்று இரு பத3ங்களாகப்பிரித்தால், 'சேதநா' எனப்படும் அறிவு ஶரீரத்தின் விகாரமாயிராமையால், ஶரீரத்தின் விகாரங்களைச் சொல்லும் இந்த ஶ்லோகத்தில் அது இடம்பெற முடியாது; ஒரே

भूतसंघातः; प्रकृत्यादिपृथिव्यन्तद्रव्यारब्धमिन्द्रियाश्रयभूतमिच्छाद्वेष-सुखदुःखविकारि भूतसंघातरूपं चेतनसुखदुःखोपभोगाधारत्वप्रयोजनं क्षेत्रमित्युक्तं भवति; एतत् क्षेत्रं समासेन—संक्षेपेण सविकारं—सकार्यमुदाहृतम् ॥ ५ ॥ ६ ॥

பத₃மாகக்கொண்டாலும், 'சேதநாயா: த்₄ருதி:" என்று பிரிக்கும் போது ஶரீரம் அறிவுக்கு ஆதாரமாயிராமையால் த்₄ருதிஶப்₃த₃த்திற்கு ஆத₄ாரம் என்னும் பொருளும் ஒட்டாது; பே₄ாக₃ஸ்த₂ானம் என்னும் பொருளைக்கொண்டாலும் விஶேஷணமற்ற வெறும் சைதந்யம் பே₄ாக்தாவாக முடியாதாகையால் அப்பொருளும் பொருந்தாது; "ஏஷ ஹி த்₃ரஷ்டா ஶ்ரோதா க்₄ராதா ரஸயிதா மந்தா போ₃த்₃த₄ா கர்த்தா விஜ்ஞாநாத்மா புருஷ:" [ப்ரஶ்ந 4-9] [அறிவுடைய இப்புருஷனை காண்பவனாகவும், கேட்பவனாகவும், முகர்பவனாகவும், சுவைப்பவனாகவும், நினைப்பவனாகவும், அறிபவனாகவும், செயல்புரிபவனாகவுமிருப்பவன்] என்று அறிவுடையவனையன்றோ வேத₃ம் பே₄ாக்தாவாகக் கூறிற்று. ஆகையால், "சேதநஸ்ய ஆத்₄ருதி:" என்று பிரித்து, சேதனனுக்கு பே₄ாக₃ஸ்த₂ானமாயிருக்கும் பஞ்சபூதக்கூட்டு என்று பொருள்கொள்வதே பொருத்தமாகும். சேதந ஶப்₃த₃த்தால் ஸம்ஸாரத்தில் கட்டுப்பட்டிருக்கும் ஜீவாத்மா சொல்லப்படுகிறான். ஆத்₄ருதி ஶப்₃த₃மும் "பூ₄தைருஹ்யாம" [வி-பு 2-3-69] [நாம் அனைவரும் பஞ்சபூ₄தங்களால் சுமக்கப்படுகிறோம்] என்று சொன்னரீதியில் பே₄ாக₃ஸ்த₂ானமான ஆத₄ாரத்தைக் குறிக்கிறது. இக்காரணத்தாலேயே, 'சேதனனால் த₄ரிக்கப்படும் ஆதே₄யமான ஶரீரம் அவனுக்கு எப்படி ஆத₄ாரமாக முடியும்?" என்னும் கேள்விக்கும் இடமில்லை. ஆக, இவ்வளவால், மூன்றாவது ஶ்லோகத்தில் கூறப்பட்ட ஐந்து விஷயங்களைச் சுருக்கமாக விளக்கும் இந்த ஶ்லோகங்களால், க்ஷேத்ரம் எனப்படுவது (1) ப்ரக்ருதிமுதல் ப்ருதி₂வியிறுகவுள்ள த்ரவ்யங்களால் உண்டானது; (2) இந்திரியங்களுக்கு இருப்பிடமாயுள்ளது (3) விருப்புவெறுப்புகள் இன்பதுன்பங்கள் முதலானவையாகப் பரிணமிப்பது; (4) பூ₄தங்களின் கூட்டாயிருப்பது (5) சேதனன் இன்பதுன்பங்களை அநுப₄விப்பதற்கு இருப்பிடமாயிருக்கையைப் பயனாகக்கொண்டது என்று விவரிக்கப்பட்டதாயிற்று 5,6.

भा ॥ अथ क्षेत्रकार्येष्वात्मज्ञानसाधनत्वेनोपादेया गुणाः प्रोच्यन्ते—

अमानित्वमदम्भित्वमहिंसा क्षान्तिरार्जवम् ।
आचार्योपासनं शौचं स्थैर्यमात्मविनिग्रहः ॥ ७ ॥

7. அமாநித்வமத₃ம்பி₄த்வமஹிம்ஸா க்ஷாந்திரார்ஜவம் !
ஆசார்யோபாஸநம் ஶௌசம் ஸ்தை₂ர்யமாத்ம-
விநிக்₃ரஹ: ॥

அமாநித்வம் – உயர்ந்தோரை அவமதிக்காமை, **அத₃ம்பி₄த்வம்**— புகழுக்காக அறஞ்செய்யாமை, **அஹிம்ஸா** — முக்கரணங்களாலும் பிறரைத் துன்புறுத்தாமை, **க்ஷாந்தி:**— பிறரால் துன்புறுத்தப்பட்டபோதிலும் மனவேறுபாடு அடையாமை, **ஆர்ஜவம்**—பிறர் விஷயத்தில் முக்கரணங்களாலும் ஒருபடிப்பட்டிருக்கை, **ஆசார்யோபாஸநம்** — (ஆத்மஜ்ஞானத்தை உபதேசிக்கும்) ஆசார்யன் விஷயத்தில் பணிவிடைபுரிதல், **ஶௌசம்** - (ஆத்மஜ்ஞானத்திற்கும் அதன ஸாத₄னத்திற்கும் உறுப்பான) முக்கரணசுத்தி, **ஸ்தை₂ர்யம்**—(சாஸ்த்ரம் கூறும் அர்த்தத்தில்) உறுதியாய் இருக்கை, **ஆத்மவிநிக்₃ரஹ:** — (ஆத்மஸ்வரூபம் தவிர்ந்த விஷயங்களில் ஈடுபடாமல்) மனத்தை அடக்குதல்.

---

7. **மானமுட னேடம்பம் வன்கொலையின் மாறுநிலை
யானபொறை செவ்வை யமர்குருவின்—பானணுகல்
சுத்தியமர் வுற்ற துணிவுடைமை சூழ்மனத்தைச்
சித்தி யளவுஞ் செறுப்பு.**

மானமுடனே டம்பம் வன்கொலையின் மாறுநிலை — உயர்ந்தோரை அவமதித்தல், புகழுக்காக அறஞ்செய்தல், முக்கரணங்களாலும் பிறரைத்துன்புறுத்தல் ஆகியவையில்லாமலிருக்கை, **ஆனபொறை**— பிறரால் துன்புறுத்தப்பட்டபோதிலும் மனவேறுபாடு அடையாமை, **செவ்வை**—பிறர் விஷயத்தில் முக்கரணங்களாலும் ஒருபடிப்பட்டிருக்கை, **அமர்குருவின்பால் நணுகல்**-(ஆத்மஜ்ஞானத்தை உபதேசிக்கும்) நல்ல ஆசார்யனுக்குப் பணிவிடைபுரிதல், **சுத்தி**—

भा ॥ अमानित्वम् — उत्कृष्टजनेष्ववधीरणारहितत्वम्; अदम्भि-
त्वम्—धार्मिकत्वयशःप्रयोजनतया धर्मानुष्ठानम् दम्भः, तद्रहितत्वम्;

(ஆத்மஜ்ஞானத்திற்கும் அதன் ஸாதனத்திற்கும் உறுப்பான) முக்கரணசுத்தி, அமர்வுற்ற துணிவுடைமை-(சாஸ்த்ரம் கூறும் அர்த்தத்தில்) மிக்க உறுதியுடனிருக்கை, சூழ் மனத்தைச் சித்தியளவுஞ் செறுப்பு — (ஆத்ம ஸ்வரூபம் தவிர்ந்த விஷயங்களில்) பட்டிமேயும மனத்தை ஆத்மஸாக்ஷாத்காரம் பெறும் வரையில் அடக்கிவைத்தல்.

---

7. இனி ஐந்து ஶ்லோகங்களாலே ஆத்மஜ்ஞான ஸாத4னமாகக் கைக்கொள்ளவேண்டிய கு3ணங்களைக் கூறுகிறுன். பனிரண்டாவது ஶ்லோகம் தொடங்கி ஆத்மாவைப்பற்றிக் கூறிய பின்பு ஆத்மஜ்ஞான ஸாத4னமான கு3ணங்களைப்பற்றிச் சொல்லுவதே தக்கதாயினும், அந்த கு3ணங்கள் சென்ற ஶ்லோகததிற் சொல்லப்பட்ட இச்சா2 த்3வேஷங்கள், ஸுக2 து3க்க2ங்கள் ஆகியவற்றைப்போல க்ஷேத்ரமாகிற ஶரீரத்திருல் விளைபவையாகையாலே, க்ஷேத்ரத்தை விளக்கும் போதே அவற்றையும் விவரிக்கிருன். அதில் இந்த ஶ்லோகத்தில் ஒன்பது கு3ணங்களைக் கூறுகிருன். (1) (அமாநித்வம்) உயர்ந்தோரை அவமதிக்காமை, மானமாவது :—

வித்3யாமதோ3 த4நமத3ஸ் த்ருதீயோऽபி4ஜநோ மத3: ।
ஏதே மதா3வலிப்தாநாம் ஏத ஏவ ஸதாம் த3ம: ॥

[மத3ங்கொண்டவர்களுக்கு, வித்3யையும் மத3ஹேதுவாகிறது; த4னமும் மத3ஹேதுவாகிறது; நல்ல குடிப்பிறப்பும் மத3ஹேதுவாகிறது; (வித்3யை, த4னம், குலம் என்னும்) இவையே நல்லோர்களுக்கு த3மத்திற்கு (அடக்கத்திற்கு) ஹேதுவாகிறது.] என்கிறபடியே கல்வி செல்வம் நற்குடிப் பிறப்பு ஆகியவற்றில் மிகுதி காரணமாக (அவற்றில் குறைந்த) சான்றேர்களை அவமதிக்கும் க3ர்வமேயாகும். அதையுடையவன் 'மாநீ' எனப்படுகிருன்; அவனது தன்மை மாநித்வமாகும்; அது இல்லாமையே 'அமாநித்வம்' எனும் கு3ணமாகிறது. அன்றிக்கே, "மாநியைக்காட்டிலும் வேறுபட்டவன் 'அமாநீ' எனப்படுகிருன்; அவனது தன்மை அமாநித்வம்" என்றும் கொள்ளலாம். உயர்ந்தோரை அவமதிக்காமை அமாநித்வம் எனத் தேறுகிறது.

अहिंसा-वाङ्मनःकायैः परपीडारहितत्वम्; क्षान्तिः— परैः पीडयमान·

---

(2) (அத3ம்பி4த்வம்) புகழுக்காக அறஞ்செய்யாமை; த3ம்ப4மாவது:— 'சாஸ்திரங்களில் விதி4க்கப்பட்டதாகையாலே அறம் செய்யத் தக்கது' என்று எண்ணுமல், 'இவர் பெரிய தா4ர்மிகர்' என்னும் புகழை அடைவதற்காக அதைச் செய்தல்; அதையுடையவன் த3ம்பீ4' அவனது தன்மை த3ம்பி4த்வம்; அது இல்லாமை அத3ம்பி4த்வமாகும். அன்றிக்கே ''த3ம்பி4யைக் காட்டிலும் வேறுபட்டவன் அத3ம்பீ4; அவனது தன்மை அத3ம்பி4த்வம்'' என்றும் கொள்ளலாம்; புகழுக்காக அறஞ்செய்யாமை அத3ம்பி4த்வம் எனத்தேறுகிறது. (3) (அஹிம்ஸா) மனோவாக்காயங்களாகிற மூக்கரணங்களாலும் அஸத்துக்களைக்காட்டிலும் வேறுபட்ட எந்த ஜீவராசிக்கும் துன்பம் விளைவிக்காமலிருக்கை; அநர்த்த2த்தையே விளைப்பதாய், பிறர்க்குத் துன்பம் தருவதான செயல் ஹிம்ஸை எனப்படுகிறது. ''வெறுப்பொடு சமணர் முண்டர் விதியில் சாக்கியர்கள் நின்பால் பொறுப்பரியனகள் பேசில்...தலையையறுப்பதே கருமம் கண்டாய்'' [திருமாலை 8] என்று தொண்டரடிப்பொடியாழ்வாராலும், ''யதா2 ஹி சோரः ஸ ததா2ஹி பு3த்3த4:'' [ரா-அ-109-34] [திருடனைப்போலே பௌ3த்3த4ன் தண்டிக்கத்தக்கவன்] என்று ஆழ்வார் அருளிச்செயலுக்கு அடியான ஸ்ரீ ராமாயண வசனத்திலும் கூறப்பட்டபடியே ஶாஸ்த்ர விருத்3த4மான கார்யங்களைச் செய்பவர்களைத் துன்புறுத்துவது நன்மையையே விளைக்குமாகையால் அது ஹிம்ஸையாகாது. அக்3நீஷோமீயயாக3த்தில் செய்யப்படும் பசு ஹிம்ஸை எவர்க்கும் அனர்த்த2த்தை விளைப்பதல்லாமையாலும் ஶாஸ்த்ரத்தில் விதி4க்கப்பட்டதாகையாலும் ஹிம்ஸையாகாது. மேலும் ஹிம்ஸையானது வாக்கு, மனம், சரீரம் என்னும் மூக்கரணங்களாலும் செய்யப்படுகிறது. ஆகையால் பிறர்க்கு அனர்த்த2த்தை விளைக்கும் துன்பத்தைத் தருவதாய், மூக்கரணங்களாலும் செய்யப்படுவதான பரபீடை3யைச் செய்யாமலிருக்கை அஹிம்ஸை என்றதாகிறது. இங்கு பா4ஷ்யத்தில் பரபீடை3 என்றது ஶாஸ்த்ரவிருத்3த4மாகத் தன்னைத்தானே துன்புறுத்திக்கொள்வதற்கும் உபலக்ஷணம். ஶாஸ்த்ர விருத்3த4மாகத் தனக்கோ, பிறர்க்கோ அனர்த்த2த்தை விளைக்கும் துன்பத்தைச் செய்யாமலிருக்கை அஹிம்ஸை என்றதாயிற்று. (4) (க்ஷாந்தி:) பிறரால் துன்புறுத்தப்பட்டாலும் அவர்களைக்குறித்து கோபம் முதலான விகாரமில்லாமலிருக்கையாகிற பொறுமை. (5) (ஆர்ஜவம்) நேர்மை.

स्यापि तान्प्रत्यविकृतचित्तत्वम्; आर्जवम्— परान्प्रति वाङ्मनःकाय-प्रवृत्तीनामेकरूपता; आचार्योपासनम् — आत्मज्ञानप्रदायिन्याचार्ये प्रणिपातपरिप्रश्नसेवादिनिरतत्वम्; शौचम्- आत्मज्ञानतत्साधनयोग्यता मनोवाक्कायगता शास्त्रसिद्धा; स्थैर्यम्-अध्यात्मशास्त्रोदितेऽर्थे निश्च-

---

"மநஸ்யந்யத் வசஸ்யந்யத் கர்மண்யந்யத் து$_3$ராத்மநாம்" [து$_3$ஷ்டர்களுக்கு மனமும், மொழியும், செயலும் வெவ்வேறுபட்டிருக்கின்றன] என்கிற து$_3$ஷ்டலக்ஷணமாகிற கௌடில்யத்திற்கு எதிர்த்தட்டாய், "மநஸ்யேகம் வசஸ்யேகம் கர்மண்யேகம் மஹாத்மநாம்" என்கிற படியே பிறரைக்குறித்து மனம் மொழி மெய்களாலே ஒருபடிப் பட்டிருக்கையாகிற மஹாத்மலக்ஷணத்தை உடைத்தாயிருக்கை ஆர்ஜவம் எனப்படும் நேர்மை. (6) (ஆசார்யோபாஸநம்) ஆத்மஜ்ஞானத்தையளிக்கும் ஆசார்யன் விஷயத்தில் "தத்$_3$வித்$_3$தி$_4$ ப்ரணிபாதேந பரிப்ரஶ்நேந ஸேவயா" [கீ$_3$தை 4-34] [நன்கு வணங்குவதாலும், சூழ்ந்துநின்று கேட்பதாலும், கைங்கர்யத்தினாலும் ஆத்மஜ்ஞானத்தை ஜ்ஞானிகளிடமிருந்து அறிவாயாக] என்று சொல்லப்பட்ட வணக்கம் முதலானவற்றை உடைத்தாயிருக்கை ஆசார்யோபாஸனமாகிறது, (7) (ஶௌசம்), "ஸந்த்$_4$யாஹீநோऽஶுசிர்நித்யம் அநர்ஹஸ் ஸர்வகர்மஸு / யத$_3$ந்யத் குருதே கர்ம ந தஸ்ய ப$_2$லப$_4$ாக$_3$ப$_4$வேத் //" [ஸந்த்$_4$யாவந்த$_3$னம் செய்யாதவன் எப்போதும் அஶுத்$_3$த$_4$மானவன்; மற்ற கர்மங்களைச் செய்வதற்குத் தகுதியற்றவன்; வேறு கர்மம் எதையாவது செய்தாலும் அதன் பயனை அடையமாட்டான்] என்கிற படியே வேறு கர்மங்கள் செய்யத் தகுதியற்றிருக்கை அஶுசித்வமாகும். அப்படியில்லாமல் அதற்குத் தகுதியுடையனாயிருக்கை ஶுசித்வமாகிற ஶௌசம். இங்கு ப்ரகரணத்தையொட்டி ஆத்மஜ்ஞானம், அதற்கு ஸாத$_4$னம் ஆகியவற்றுக்குத் தகுதியுடையவனாயிருக்கை ஶௌசமாகிறது. அஶௌசமும் மனத்திலிருக்கும் பேராசை முதலானவையாகவும், வாக்கிலிருக்கும் பொய்கூறுதல் முதலானவையாகவும், உடலைப்பற்றியிருக்கும் நுஷித்$_3$த$_4$போ$_4$ஜனம் முதலானவையாகவும் மூன்றுபடிப்பட்டிருக்கும். அந்த மூன்றும் ஒழிந்திருக்கை இங்கு ஶௌசஶப்$_3$த$_3$த்தால் கருதப்படுகிறது. குளித்தல் முதலானவற்றால் ப்ரத்யக்ஷமாக ஏற்படும் ஶுத்$_3$தி$_4$மாத்திரம் ஶௌசமாகாது. ப்ரத்யக்ஷம் முதலானவற்றால் அறிந்துகொள்ள முடியாதவையாய், ஶாஸ்த்ரங்கொண்டே அறியவேண்டுமவையான ஶௌசங்களும் இங்கு கருதப்படுகிறது. (8) (ஸ்தை$_2$ர்யம்) அசையாமை. இங்கு ப்ரகரணத்தையொட்டி ஆத்மாவைப்பற்றிய ஶாஸ்த்ரங்களில் கூறிய

लत्वम्; आत्मविनिग्रहः — आत्मस्वरूपव्यतिरिक्तविषयेभ्यो मनसो निवर्तनम् ॥ ७ ॥

इन्द्रियार्थेषु वैराग्यमनहङ्कार एव च ।
जन्ममृत्युजराव्याधिदुःखदोषानुदर्शनम् ॥ ८

8. இந்த்3ரியார்த்தே2ஷு வைராக்3யம் அநஹங்கார ஏவ ச ।
ஜந்மம்ருத்யுஜராவ்யாதி4து3:க்க2தோ3ஷாநுத3ர்ஶநம் ॥

இந்த்3ரியார்த்தே2ஷு வைராக்3யம்—இந்த்3ரியங்களால் அறியப்படும் ஶப்3த3ாதி3 விஷயங்களில் பற்றின்மை. **அநஹங்கார: ஏவ ச**—தே3ஹாத்மாபி4மானமின்மை, **ஜந்மம்ருத்யுஜராவ்யாதி4து3:க்க2தோ3ஷாநுத3ர்ஶநம்** — பிறப்பு, இறப்பு, கிழத்தனம், நோய், துன்பம் ஆகிய தோ3ஷங்களை அநுஸந்தி4ப்பது.

---

8. இந்தியங்கள் சார்பொருளி லென்றுந் துறந்திருத்தல்
வந்தியலு மாங்கார மற்றெழிதல் – புந்தியிறை
சென்ம மரணஞ் செரைநோய்சேர் துக்கமாம்
புன்மை யுணரும் புணர்ப்பு.

விஷயங்களில் அசையாத உறுதியுடையவனயிருக்கையைக் குறிக்கிறது. வேத3த்திற்குப்புறப்பான பௌ3ளத்3த4ம் முதலான பா3ஹ்ய மதங்களிலிருப்பவர்களும், வேத3த்துக்கு அவப்பொருள்கூறும் மாயா வாத3ம், ஶைவம் முதலான குத்3ருஷ்டிமதங்களிலிருப்பவர்களும் எத்தனை விதண்டா3வாத3ங்கள் செய்தாலும் அசையாமல் உறுதியுடனிருக்கை இங்கு ஸ்தை2ர்யமாகிறது. (9) (ஆத்மவிநிக்3ரஹ:) ஆத்மாவை அடக்குதல். தன்னால் அடக்கத்தக்கதாகக் கூறுகையாலே, சரீரத்தோடுகூடிய தன்னைக்காட்டிலும் வேறுபட்ட மனமே இங்கு ஆத்மஶப்3த3த்தால் குறிக்கப்படுவதாகக் கொள்ளவேண்டும். இதனாலேயே சரீரேந்த்3ரியக்கூட்டை ஆத்ம ஶப்3த3த்துக்குப் பொருளாக ஶங்கரர்கொண்டது பொருத்தமற்றது என விளங்கும். அக்கூட்டைக்குறித்து ஆத்ம ஶப்3த3த்தை வழங்குவதும் இல்லையன்றே. விநிக்3ரஹஶப்3த3ம் திருப்புவதைக்குறிக்கும். இங்கு ப்ரகரணத்தை யொட்டி இயற்கையிலேயே எல்லா விஷயங்களிலும் திரியும் மனத்தை ஆத்மஸ்வரூபம் தவிர்ந்த மற்ற ஶப்3த3ாதி3 விஷயங்களில் செல்லாதபடி திருப்புவதைக்குறிக்கும்,

भा ॥ इन्द्रियार्थेषु वैराग्यम्—आत्मव्यतिरिक्तेषु विषयेषु सदोषतानुसंधानेनोद्वेजनम्; अनहंकारः—अनात्मनि देहे आत्माभिमानरहितत्वम्; प्रदर्शनार्थमिदम्; अनात्मीयेष्वात्मीयाभिमानरहितत्वं च विव-

---

இந்தியங்கள் சார்பொருளில் என்றும் துறந்திருத்தல்— இந்த்₃ரியங்களால் அறியப்படும் ஶப்₃த₃ாதி₃விஷயங்களில் எப்போதும் பற்றற்றிருக்கை, **வந்து இயலும் ஆங்காரம் அற்று ஒழிதல்—** இயல்வாக உண்டாகும தேஹாத்மாபி₄மானத்தை அடியோடுவிடுதல். **புந்தியினுல்—** அறிவினுலே, **சென்மம் மரணம் செரை நோய் சேர் துக்கமாம் புன்மை உணரும் புணர்ப்பு—** பிறப்பு, இறப்பு, கிழத்தனம், நோய் இவற்ருல் வரும் துன்பம் ஆகிய தோ₃ஷங்களை அனுஸந்தி₄ப்பது.

8, இந்த ஶ்லோகத்தில் மேலும் மூன்று கு₃ணங்களைக்கூறுகிருன், (10) (இந்த்₃ரியார்த்தே₂ஷு வைராக்₃யம்) ஆத்ம ஸ்வரூபத்தைக் காட்டிலும் வேறுபட்டவையாய், இந்த்₃ரியங்களால் அறியப்படுபவையான ஶப்₃த₃ாதி₃விஷயங்கள் குற்றம் நிறைந்தவை என்று அனுஸந்தி₄ப்பதன் மூலம் அவற்றை அருவருத்து ஒதுக்குதல். இவன் ஆத்மாவிலேயே ஈடுபட வேண்டியவனுகையாலே ஆத்மாவைத் தவிர்த்த மற்ற விஷயங்களில் பற்றற்றவனுயிருக்கவேண்டுமென்பது தெளிவு. "விராக₃ஸ்ய ப₄ாவ: வைராக₃யம்" [பற்றில்லாதவனின் தன்மை வைராக்₃யம்] என்னும் வ்யுத்பத்தியாலே வைராக்₃யஶப்₃த₃ம் பற்றின்மையைக் குறிக்கிறது. அப்பற்றின்மையும் 'இவ்விஷயங்கள் குற்றமுள்ளவை' என்று எப்போதும் அனுஸந்தி₄ப்பதனுல் உண்டாகும் அருவருப்பினுல் விளையும். இவ்விஷயங்களுக்குக் குற்றங்களாவன— வருந்திப் பெறவேண்டியவையாயிருக்கை, பெற்ருலும் துன்பத்தோடு கலந்திருக்கை, அல்பமாயிருக்கை, நிலைநில்லாதவையாயிருக்கை முதலானவை, (11) (அநஹங்கார ஏவ ச) ஆத்மாவல்லாத தேஹத்தில் ஆத்மா என்னும் நினைவு அஹங்காரமாகிறது. அது அற்றிருக்கை அநஹங்காரம். அஹங்காரஶப்₃த₃ம் க₃ர்வத்தைக் குறித்தும் வழங்கப்படுவதுண்டாயினும், அது 'அமாநித்வம்' என்னும் முதல் கு₃ணத்திலேயே தவிர்க்கப்பட்டு விட்டதாகையால் இங்கு தே₃ஹாத்ம மயக்கத்தை அதற்குப் பொருளாகக் கூறுவதே பொருத்தமானது.

क्षितम् । जन्ममृत्युजराव्याधिदुःखदोषानुदर्शनम् —सशरीरत्वे जन्ममृत्युजराव्याधिदुःखरूपस्य दोषस्यावर्जनीयत्वानुसंधानम् ॥ ८ ॥

அநாத்மந்யாத்மபு₃த்₃தி₄ர்யா அஸ்வே ஸ்வமிதி யா மதி: ।
அவித்₃யாதருஸம்பூ₄தி பீ₃ஜ மேதத் த்₃விதா₄ ஸ்தி₂தம் ॥
[வி-பு 6-7-11]

[தான் அல்லாத தே₃ஹத்தில் தான் என்ற நினைவும், தன்னுடைய தல்லாத பொருள்களில் தன்னுடையதென்கிற நினைவும் (ஸம்ஸாரத்தை விளைக்கும்) அவித்₃யையாகிற காம்யகர்மங்களெனும் மரம் வளர் வதற்குறுப்பான இரு பருப்புகளை உடைய விதையாகும்] என்கிற படியே அஹங்காரமாகிற இத்துடன் தன்னுடையதல்லாததைத் தன்னு டையதாக நினைக்கும் மமகாரமும் சேர்ந்தேவருவதாகையாலும், அஹங் காரத்தினுல் விளைவதாகையாலும் இங்கு அதனுடைய இன்மையும் உபலக்ஷணமுறையாலே கூறப்படுவதாகக் கொள்ளவேணும். "ஏவ ச" என்னும் பத₃த்தாலே மற்ற கு₃ணங்களைக் காட்டிலும் இக்கு₃ணத் தின் முக்கியத்துவம் உணர்த்தப்படுகிறது. (12) (ஜந்மம்ருத்யு ஜரா வ்யாதி₄ து₃:க்க₂தோ₃ஷாநுத₃ர்ஶநம்) பிறப்பு, இறப்பு, கிழத் தனம், நோய், துன்பம் ஆகிய தோ₃ஷங்களை அநுஸந்திப்பது.

"அஶரீரம் வாவ ஸந்தம் ந ப்ரியாப்ரியே ஸ்ப்ருஶத:, ந ஹவை ஸஶரீரஸ்ய ஸத: ப்ரியாப்ரியயோரபஹதிரஸ்தி"
[சா₂ந் 8·12·1]

[ஶரீரமற்றிருக்கும் முக்தனை ஸுக₂து₃:க்க₂ங்கள் தொடுவதில்லை; ஶரீரமுள்ளவரையில் இந்த ஜீவனுக்கு இன்பதுன்பங்கள் அழிவ தில்லை] என்கிறபடியே ஶரீரமுள்ளவரையில் பிறப்பு, இறப்பு, கிழத் தனம், நோய் முதலான தோ₃ஷங்கள் தவிர்க்கவொண்ணுதவை யாகையால், ஆத்ம ஜ்ஞானத்தைப் பெறவிரும்பும் இவன் எப்போதும் இவற்றின் தோ₃ஷத்தை அநுஸந்தி₄க்கவேண்டும் என்பது வெளிப் படை. "ஜன்ம ம்ருத்யு ஜரா வ்யாதி₄களால் ஏற்படும் துன்பம் ஜன்ம ம்ருத்யுஜராவ்யாதி₄து₃:க்க₂ம் எனப்படுகிறது; அதுவே தோ₃ஷம்; அதை அநுஸந்தி₄ப்பது" என்றே "ஜன்மம்ருத்யுஜராவ்யாதிகள், அவற்றால் ஏற்படும் துன்பம் ஆகியவை எல்லாமே துன்பத்தில் முடிபவையாகையாலும், மேன்மேலே துன்பத்தை விளைப்பவையாகை யாலும், துன்பமயமாயிருப்பவையாகையாலும் தோ₃ஷமே வடிவெடுத் தவையாயிருப்பவை; இதை அநுஸந்தி₄ப்பது" என்றே பொருள்

असक्तिरनभिष्वङ्गः पुत्रदारगृहादिषु ।
नित्यं च समचित्तत्वमिष्टानिष्टोपपत्तिषु ॥ ९

9. அஸக்திரநபி₄ஷ்வங்க₃: புத்ரதா₃ரக்₃ருஹாதி₃ஷு ।
நித்யம் ச ஸமசித்தத்வம் இஷ்டாநிஷ்டோபபத்திஷு ॥

அஸக்தி:—(ஆத்மாவைத்தவிர்ந்த மற்ற விஷயங்களில்) அபி₄மானமற்றிருக்கை, **புத்ரதா₃ரக்₃ருஹாதி₃ஷு** — மக்கள் மனைவி வீடு முதலானவற்றில், **அநபி₄ஷ்வங்க₃:** — விருப்பமற்றிருக்கை, **இஷ்டாநிஷ்டோபபத்திஷு**—விரும்பியதோ விரும்பாததோ வந்தடையும் போது, **நித்யம்**—எப்போதும், **ஸமசித்தத்வம் ச**—ஆனந்தமோ வெறுப்போ அடையாமல் மனம் ஒருநிலைப்பட்டிருக்கை.

---

9. நின்ற நசையறுநேர்புதல்வர் தாரமனை
யொன்று மனமங் கொழிவித்த—லென்றுஞ்சம
ஞர்ந்தே யிருத்த லுகப்புவெறுப் பாம்பொருள்கள்
சேர்ந்து வரலிற் றெளிந்து.

நின்றநசை அறுதல்—ஆத்மாவைத்தவிர்ந்த மற்ற விஷயங்களில் அபி₄மானமற்றிருக்கை, **நேர் புதல்வர் தாரம் மனை ஒன்றும் மனம் அங்கு ஒழிவித்தல்** — தனக்கு அமைந்திருக்கும் மக்கள், மனைவி, வீடு முதலானவற்றில் விருப்பத்தை விடுதல், **உகப்பு வெறுப்பாம் பொருள்கள் சேர்ந்து வரலில்**—விரும்பியதோ விரும்பாததோ வந்தடையும்போது, **என்றும்**—எப்போதும். **தெளிந்து** — தெளிவுடையவனாய், **சமன் ஆர்ந்தே இருத்தல்**—ஆனந்தமோ வெறுப்போ அடையாமல் மனம் ஒருநிலைப்பட்டிருக்கை.

கொள்ளலாம். உமி யிருக்கும்வரையில் அரிசியை உட்கொள்வது இயலாததுபோலே ஸ்தூ₂ல ஸூக்ஷ்மரூபமான ஶரீரம் இருக்கும் வரையில் தோ₃ஷங்களையும் தவிர்க்கவொண்ணாது. ஆகையால் ஆத்மஜ்ஞானமேற்பட்டு முக்தியடையும்வரை அவற்றை அடிக்கடி அநுஸந்தி₄க்க வேண்டுமென்று கருத்து. 8.

भा ॥ असक्तिः—आत्मव्यतिरिक्तपरिग्रहेषु सङ्गरहितत्वम्; अनभिष्वङ्गः पुत्रदारगृहादिषु—तेषु शास्त्रीयकर्मोपकरणत्वातिरेकेण श्लेषरहितत्वम्; संकल्पप्रभवेष्विष्टानिष्टोपनिपातेषु हर्षोद्वेगरहितत्वम् ॥ ९ ॥

---

9. பேறும் மூன்று கு3ணங்களைக் கூறுகிறது இந்த ஶ்லோகத்தில். சென்ற ஶ்லோகத்தில் 'இந்த்3ரியார்த்தே2ஷு வைராக்3யம்'' என்று மெய் வாய் கண் மூக்கு செவிகளாகிற இந்த்3ரியங்களைத் தொட்டு இன்ப துன்பங்களை விளைவிக்கும் ஸாம்ஸ்பர்ஶிகமான விஷயங்களில் விகாரமின்மை கூறப்பட்டது. இந்த ஶ்லோகத்தில் மனத்தை இன்பமோ அதிர்ச்சியோ அடையச்செய்து விகாரத்தை உண்டாக்கும் ஸாங்கல்பிகமான விஷயங்களில் விகாரமின்மை கூறப்படுகிறது. ஆகையால் புநருக்தியில்லை. 13. (அஸக்தி:) ஆத்மாவைத் தவிர்ந்த செல்வம் முதலானவற்றில் பற்றின்மை. அப்படியானால் க்3ருஹஸ்த2னாயிருந்து மோக்ஷமடைய விரும்புகிறவன் மனைவி மக்கள் வீடு முதலானவற்றை அடியோடு கைவிடவேண்டிவருமாகையால் க்3ருஹஸ்த2த4ர்மத்தையே அனுஷ்டி2க்கமுடியாதே என்னும் கேள்விக்கு பதிலை அளிக்கிறது. அடுத்தபடியாக—14. (புத்ரதா3ரக்3ருஹாதி3ஷு அநபி4ஷ்வங்க3:) ஶாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்ட க்3ருஹஸ்த2த4ர்மத்துக்கு உதவி செய்பவர்கள் என்னுமளவுக்குமேலே மக்கள் மனைவி வீடு முதலானவற்றில் மிகுந்தபற்றாகிற பாசம் (ஈஷணை) இல்லாமலிருக்கை. அவர்களை அடியோடு கைவிடவேண்டும் என்று இங்கு கூறவில்லை. மிகுந்த பற்றுவைக்கக்கூடாது என்றே சொல்லப்படுகிறது. முந்திய பத3ம் க்3ருஹஸ்த2த4ர்மத்துக்கு உதவி புரியாத மிகுந்த செல்வம் முதலானவற்றை அடியோடு கைவிடவேணும் என்று கூறுகிறது, இப்பத3ம் க்3ருஹஸ்த2த4ர்மத்துக்கு உதவிபுரியுமவற்றில் மிகுந்த பற்றுவைக்கக்கூடாது என்று கூறுகிறது. ஆகையாலே புநருக்தியில்லை. 'ந குண்ட்3யாம நோத3கே ஸங்கே3 ந சேலே ந ச விஷ்டரே| நாக3ரே நாஸநே நாந்யே யஸ்ய வை மோக்ஷவித்து ஸ:||'' [எவனுக்குத் தன் கமண்டலத்திலோ, நீரிலோ, வஸ்திரத்திலோ, கூர்மாஸனம் முதலானவற்றிலோ, மட3த்திலோ, மான்தோல் முதலானவற்றிலோ, மற்ற எதிலுமோ பற்றில்லையோ அந்த ஸந்யாஸியே மோக்ஷத்தையடைவான்] என்று ஸந்யாஸிக்கும் கைவிடமுடியாத சில விஷயங்களில் பற்றின்மையே விதிக்கப்பட்டதன்றோ. ''அஸக்தி:'' என்று ஸங்க3மாகிற பற்றின் இல்லாமையைக் குறித்தது, ''ஸங்கா3த் ஸஞ்ஜாயதே காம:'' [கீ3தை 2.62] என்கிறபடியே ஸங்க3மாகிற

मयि चानन्ययोगेन भक्तिरव्यभिचारिणी ।
विविक्तदेशसेवित्वमरतिर्जनसंसदि ॥ १०

10. மயி சாநந்யயோகே₃ந ப₄க்திரவ்யபி₄சாரிணீ ।
விவிக்ததே₃ஶஸேவித்வம் அரதிர்ஜநஸம்ஸதி₃ ॥

மயி—ஸர்வேஶ்வரனை என்னிடத்தில், அநந்யயோகே₃ந—வேறு எவரிடமும் ஈடுபடாமையாலே, அவ்யபி₄சாரிணீ—அசையாத நிலையுடனிருக்கும், ப₄க்திः ச—ப₄க்தி, விவிக்ததே₃ஶஸேவித்வம்—ஜனஸஞ்சாரமில்லாத இடத்தில் வாழ்தல், ஜநஸம்ஸதி₃ அரதிः—ஜனக்கூட்டத்தில் ஈடுபாடு இன்மை.

---

10. என்பா லனன்னியமா யேய்ந்துபுறம் போகாது
வன்பாரும் பத்தி யமர்வுறுத— லின்பார்
தனியிடத்திற் சார்தல் சனங்குழுவு கண்டால்
நனியுகப்புச் சேரா நலம்.

பற்றிலிருந்து காமமாகிற பாசம் விளையும், ஸங்க₃மாகிற காரணமில்லாமையால் அபி₄ஷ்வங்க₃மாகிற பாசத்துக்கு இடமில்லை என்று கருத்து. 15 (இஷ்டாநிஷ்டோபபத்திஷு நித்யம் ஸமசித்தத்வம் ச) மனத்தை விகாரமடையச்செய்யும் இஷ்டாநிஷ்டங்கள் வந்தடையும்போது முறையே ஆனந்தமோ அருவருப்போ அடையாமல் எப்போதும் மனம் ஒருபடிப்பட்டிருக்கை, மழை வெய்யில் தென்றல் முதலான ஸாம்ஸ்பர்ஶிகமான இஷ்டாநிஷ்டங்கள் இவனை வந்து தொடும்போது மனம் ஒருபடிப்பட்டிருப்பது இயலாதாகையாலே இங்கு மனத்தை விகாரமடையச்செய்யும் ஸாங்கல்பிகமான இஷ்டாநிஷ்டங்களையே குறிப்பதாகக் கொள்ளவேண்டும். பூர்வார்த்த₄த்தில் சொல்லப்பட்ட மக்கள் மனைவி வீடு முதலான இஷ்டாநிஷ்டங்கள் வந்தடையும்போது அவற்றில் மனம் எப்போதும் ஒருநிலைப்பட்டிருக்கவேண்டும் என்றதாயிற்று. சகாரம் இக்குணம் முக்கியமானது என்று காட்டுகிறது. 9.

भा मयि-सर्वेश्वरे चैकान्त्ययोगेन स्थिरा भक्तिः ; जनवर्जितदेश-

என்பால்—ஸர்வேஶ்வரனான என்னிடத்தில், **அனன்னியமாய் ஏய்ந்து**—வேறு எவரிடமும் ஈடுபடாமல் இருக்கை யாலே, **புறம்போகாத**—எனக்கே அற்றுத்தீர்ந்த, **வன்பு ஆரும் பத்தி**—நிலையாயிருக்கும் ப₄க்தியை, **அமர்வுறுதல்**—உடையவனாதல், **இன்பு ஆர் தனி இடத்தில் சார்தல்**—இனிமை நிறைந்த தனியான இடத்தில் வாழ்தல், **சனம் குழுவு கண்டால்**—ஜனக்கூட்டத்தைப் பார்த்தால், **நனி உகப்பு சேரா நலம்**-மிகவும் ஈடுபாடுகொள்ளாமல இருக்கும் நன்மையை உடையவனாதல்.

---

10. மேலும் மூன்று கு₃ணங்களைக் கூறுகிறான் இந்த ஶ்லோகத்தில். (16) (மயி அநந்யயோகே₃ந அவ்யபி₄சாரிணீ ப₄க்தி: ச) ஸர்வேஶ்வரனான என்னிடத்தில் வேறெவரிடமும் ஈடுபடாமையாலே அசையாத நிலையுடன் இருக்கும் ப₄க்தியும். இந்த கு₃ணமில்லையேல் மற்ற கு₃ணங்களிருந்து பயனில்லை என்பதை, கடைசியான இந்த சகாரம் காட்டுகிறது. (மயி) ஸர்வேஶ்வரனாகிற என்னிடமும் ப₄க்தி வைத்து, மற்றொருவனிடமும் ப₄க்தி வைப்பது ராஜமஹிஷியானவள் வேலைக்காரனை ஆசைப்படுவதுபோல் கடுமையான குற்றம் என்று கருத்து (அநந்யயோகே₃ந அவ்யபி₄சாரிணீ ப₄க்தி:) வேறு எவரிடமும் ஈடுபடாமை யாலே அசையாத நிலையுடன் இருக்கும் ப₄க்தி. இத்தால் மறந்தும் புறந்தொழாமையாலே இது பாலி பாயாத நிலையான ப₄க்தி என்று உணர்த்தப்படுகிறது. இப்படி முதல் பத₃ம் ஹேதுவையும் இரண்டாவது பத₃ம் நிலையாயிருக்கையாகிற அதன் விளைவையும் காட்டுகையாலே புநருக்தியில்லை 'அநந்யயோகே₃ந' என்னும் பத₃த்துக்கு 'அப்ருத₂க்ஸமாதி₄நா' என்று ஜீவப்₃ரஹ்ம ஐக்ய ஜ்ஞானத்தை ஶங்கரர் பொருளாகக் கொண்டது 'அவ்யபி₄சாரிணீ' என்னும் பத₃த்தோடு பொருந்தாது, அப்பத₃த்திற்கு "நாந்யோ ப₄க₃வதோ வாஸுதே₃வாத் பர: அஸ்தி; அத: ஸ ஏவ ந: க₃தி; இத்யேவம் நிஶ்சிதா பு₃த்₃தி₄:" ['வாஸுதே₃வனைக்காட்டிலும் மேலானவன் ஒருவனில்லை. ஆகையால் அவனே நமக்குத் தஞ்சமாவான்' என்னும் உறுதியான அறிவு] என்று அவரே பா₄ஷ்யம் இட்டிருப்பது குறிக்கொள்ளத்தக்கது.

वासित्वम्, जनसंसदि चाप्रीतिः ॥ १० ॥

கீதையில் மற்றும் பல இடங்களிலும் மற்ற தெய்வங்களிடம் ப4க்தி செலுத்துவதை இகழ்ந்திருக்கையாலே இங்கும் இப்பொருளே பெறுந்தும். (17) (விவிக்ததே3ஶஸேவித்வம்) ஜன நடமாட்டமில்லாத இனிய இடத்தில் வாழ்வது. (18) (ஜநஸம்ஸதி3 அரதி:) ஸம்ஸாரி ஜனக் கூட்டத்தில் ஈடுபாடின்மை. இவ்விரண்டு கு3ணங்களும் இவன் ஆத்ம த்4யானம் செய்வதற்கு இடையூறு இல்லாமலிருப்பதற்காக அவசியமானவை. ஜனக்கூட்டம் என்று பொதுவாகச் சொன்னபோதிலும் ஸாத்விகர்களான நல்லோர்களின் ஸஹவாஸம் த்4யானத்திற்கு இடையூறு விளைக்காதாகையாலே, ரஜஸ்தமோ கு3ணங்களையுடையவர்களான ஸம்ஸாரி ஜனக்கூட்டத்தையே இங்கு சொல்லுகிறது.

"அஹேரிவ க3ணாத்3பீ4த: ஸந்மாநாந் மரணாதி3வ ।
குணபாதி3வ ச ஸ்த்ரீப்4ய: தம் தே3வா ப்3ராஹ்மணம் விது3: ॥
[பா4ரத-ஶாந்தி 251-13]

[ஜனக்கூட்டத்தைக் கண்டால் பாம்பைக் கண்டதுபோலவும், பாராட்டைக்கண்டால் சாவைக் கண்டதுபோலவும், ஸ்த்ரீகளைக் கண்டால் பிணத்தைக் கண்டாற்போலவும் எவன் பயந்து ஒதுங்குகிறானோ, அவனையே தே3வர்கள் ப்3ராஹ்மணன் என்று அறிகிறார்கள்] என்றும்,

"நைதாத்3ருஶம் ப்3ராஹ்மணஸ்யாஸ்தி வித்தம்
யதை2கதா ஸமதா ஸத்யதா ச ।
ஶீலே ஸ்தி2தி: த3ண்ட3நிதா4நமார்ஜவம்
ததஸ்ததஶ்சோபரம: க்ரியாப்4ய: ॥
[பா4ரத-ஶாந்தி 283-38]

[தனித்து வாழ்வது, (அனைவரிடமும்) ஸமமாயிருப்பது, உண்மை பேசுவது, ஒழுக்கத்தில் நிலைநிற்பது, பலாஶ (புரசு) த3ண்ட3த்தைக் கைக்கொள்வது, நேர்மை, ஸாம்ஸாரிகமான அந்தந்தச் செயல்களிலிருந்து நீங்குவது ஆகிய கு3ணங்களைக்காட்டிலும் ப்3ராஹ்மணனுக்கு வேறு செல்வமில்லை] என்று மோக்ஷத4ர்மத்தில் கூறப்பட்டது இங்கு அனுஸந்தி4க்கத்தக்கது.

अध्यात्मज्ञाननित्यत्वं तत्त्वज्ञानार्थचिन्तनम् ।
एतत् ज्ञानमिति प्रोक्तमज्ञानं यदतोऽन्यथा ॥ ११

11. அத்₄யாத்மஜ்ஞாநநித்யத்வம் தத்த்வஜ்ஞாநார்த்த₂
சிந்தநம் ।
ஏதத் ஜ்ஞாநமிதி ப்ரோக்தமஜ்ஞாநம் யத₃தோऽந்யதா₂॥

அத்₄யாதம ஜ்ஞாந நித்யத்வம்—ஆத்மவிஷயமான ஜ்ஞானததில் என்றும் ஈடுபடுகை, **தத்த்வஜ்ஞாநார்த்த₂ சிநதநம்**—உண்மை அறிவு உண்டாவதற்கு உறுப்பான சிந்தனம், **ஏதத்**—இந்த இருபது கு₃ணங்களும், **ஜ்ஞாநம் இதி ப்ரோக்தம்**—ஆத்மஜ்ஞான ஸாத₄நமென்று சொல்லப் படுகிறது. **யத் அத: அந்யதா₂**—இதைக்காட்டிலும் வேறு பட்டதனைத்தும், **அஜ்ஞாநம்**—ஆத்மஜ்ஞானத்துக்கு இடையூறு விளைப்பவை.

---

11. ஆருயிரின் மேலறிவி லாய்ந்தென்று நின்றமர்வு
பேருணர்வாந் தத்துவத்தின் பீடறிவு - சீருடைய
மெய்ஞ்ஞான மாமதென மிக்குரைத்தேன் வேறுளது
பொய்ஞ்ஞான மாகும புறம்.

ஆருயிரின் மேல் அறிவில் ஆய்ந்து என்றும் நின்று அமர்வு—அருமையான ஆத்மாவைப்பற்றியதான அறிவில் ஆராய்ச்சியோடு என்றும் நிலையாயிருத்தல், **தத்துவத்தின் பேருணர்வாம் பீடு அறிவு**—உண்மை அறிவுஉண்டாவதற்கு உறுப்பான சிறந்த சிந்தனை (ஆகிய இவ்விருபது கு₃ணங் களும்) **சீர் உடைய மெய் ஞானம் ஆமது**—சிறப்புடைய ஆத்மஜ்ஞானத்துக்கு ஸாத₄னமாவது. **என**—என்று, **மிக்கு உரைத்தேன்**—உறுதியாசச் சொன்னேன், **புறம் வேறு உளது**-இதற்கு மாருக உள்ளது அனைத்தும். **பொய் ஞானம் ஆகும**—ஆத்மஜ்ஞானத்திற்கு இடையூறு விளைப்பது ஆகும்.

---

11. இந்த ஸ்லோகத்தில் மேலும் இரண்டு கு₃ணங்களைக் கூறி இந்த ப்ரகரணத்தை நிறைவு செய்கிருன். (19) (அத்₄யாத்ம ஜ்ஞாந நித்யத்வம்) ஆத்ம விஷயமான ஜ்ஞானத்தில் என்றும் ஈடு

भ: आत्मनि ज्ञानम्-अध्यात्मज्ञानं तन्निष्ठत्वम्; तत्त्वज्ञानार्थचिन्तनम्-तत्त्वज्ञानप्रयोजनं यच्चिन्तनं तन्निरतत्वमित्यर्थः ; ज्ञायतेऽनेनात्मेति ज्ञानम्, आत्मज्ञानसाधनमित्यर्थः ; क्षेत्रसंबन्धिनः पुरुषस्यामानित्वादिकमुक्तं गुणबृन्दमेवात्मज्ञानोपयोगी, एतद्व्यतिरिक्तं सर्वं क्षेत्रकार्यमात्मज्ञानविरोधीत्यज्ञानम् ॥ ११

பட்டிருக்கை. (20) (தத்த்வ ஜ்ஞாநார்த்த$_2$சிந்தநம்) உண்மையறிவைப் பயனாகக்கொண்ட சிந்தனத்தில் ஈடுபட்டிருக்கை. இப்பத$_3$த்திற்கு "தத்வ ஜ்ஞானத்தினுடைய அர்த்த$_2$சிந்தனை" என்று பொருள் கொள்வது பொருந்தாது. "தத்த்வம் கிமிதி சிந்தநம்" என்றோ, "ததஸ் தத்த்வசிந்தநம்" என்றோ, "தத்வார்த்த$_2$சிந்தநம்" என்றோ இங்கு சொல்லவேண்டியிருக்க, "தத்த்வ ஜ்ஞாநார்த்த$_2$ சிந்தநம்" என்று கூறியது பொருந்தவில்லை அர்த்த$_2$ ஶப்$_3$த$_3$த்துக்கு "விஷயம்" என்றோ, "பயன்" என்றோ பொருள்கொண்டு, தத்த்வ ஜ்ஞானவிஷயமான சிந்தனம் என்றோ தத்த்வஜ்ஞானத்தின் பயனைப் பற்றிய சிந்தனம் என்றோ பொருள்கொள்வதில் சிறந்த அர்த்த$_2$ ஸ்வாரஸ்யமில்லை, ஆகையால் தத்த்வ ஜ்ஞானத்தைப் பயனாகக் கொண்ட சிந்தனம் என்று பொருள்கொள்ளப்படுகிறது. மற்ற சிந்தனங்களின் இல்லாமையும் இவனுக்கு அவசியமாகையால் இந்தச் சிந்தனத்திலேயே ஈடுபட்டிருக்க வேண்டும் என்றும் உணர்த்தப்படுகிறது. "தத்த்வஜ்ஞாநார்த்த$_2$த$_3$ர்ஶநம்" என்று சிலரால் பாட$_2$ம் கொள்ளப்படுகிறது 'சிந்தனம்' என்றே பெரும்பான்மைப் பாட$_2$ம். இனி ஶ்லோகத்தின் பிற்பாதியாலே க்ஷேத்ரகார்யமான (ஶரீர ஸம்ப$_3$ந்த$_4$த்தால் ஏற்படும்) இவ்விருபது கு$_3$ணங்களும் ஆத்மஜ்ஞான ஸாத$_4$னமானவையென்றும், மற்ற கு$_3$ணங்கள் அதற்குத் தடையாயிருப்பவை என்றும் கூறுகிறான். (ஏதத் ஜ்ஞாநமிதி ப்ரோக்தம்) அமாநித்வம் தொடக்கமாக இதுவரையில் சொல்லப்பட்ட இருபது கு$_3$ணங்களும் ஆத்மஜ்ஞான ஸாத$_4$நமாக என்னால் கூறப்பட்டது. இந்த கு$_3$ணங்களனைத்தையும் 'ஜ்ஞானம்' என்று சொல்லுவது பொருந்தாதாகையாலே "ஜ்ஞாயதே அநேந (ஆத்மா) இதி ஜ்ஞாநம்' என்னும் வ்யுத்பத்தியாலே ஜ்ஞானஶப்$_3$த$_3$ம் இங்கு ஜ்ஞான ஸாத$_4$னத்தைச் சொல்லுவதாகக் கொள்ளவேண்டும். ஶரீரத்தோடு கூடியிருக்கும் சேதனனுக்கு இதுவரை சொல்லப்பட்ட அமாநித்வம் முதலான இருபது கு$_3$ணங்களும் ஆத்மஜ்ஞானமுண்டாவதற்கு உதவுபவை

भा-अथ * एतद्यो वेत्तीति वेदितृत्वलक्षणेनोक्तस्य क्षेत्रज्ञस्य स्वरूपं विशोध्यते-

ज्ञेयं यत्तत्प्रवक्ष्यामि यज्ज्ञात्वाऽमृतमश्नुते ।
अनादि मत्परं ब्रह्म न सत्तन्नासदुच्यते ॥ १२

12. ஜ்ஞேயம் யத் தத் ப்ரவக்ஷ்யாமி யஜ்ஜ்ஞாத்வாம்ருத-
மஶ்நுதே ।
அநாதி3 மத்பரம் ப்3ரஹ்ம ந ஸத்தந்நாஸது3ச்யதே॥

யத் ஜ்ஞாத்வா-எதை அறிந்தால, அம்ருதம் அஶ்நுதே-அழியாத ஆத்மாவை அடைகிறானோ, யத் தத் ஜ்ஞேயம்—இத்தகைய ப்ராப்யமான அந்த ஆத்ம ஸ்வரூபத்தைப்பற்றி, ப்ரவக்ஷ்யாமி—நன்கு கூறுகிறேன்; அநாதி3—(இவ்வாத்மா

என்றதாயிற்று. பொதுவாக ஜ்ஞானமென்று குறிக்கப்போதிலும் ப்ரகரணத்தையொட்டி இது ஆத்ம ஜ்ஞானத்தைப்பற்றியது என்று கொள்ளவேண்டும். அதிலும் இவ்வளவு கு3ணங்களால் ஸாதி4க்கப் படவேண்டியது என்று கூறுகையாலே, ஆத்ம ஸாக்ஷாத்காரத்துக்கு இவையனைத்தும் ஸாத4னங்கள் என்று தேறிற்று. ஆத்மாவைப் பற்றிய மேலெழுந்தவாரியான அறிவு இக்கு3ணங்கள் விளைவதற்கு முன்புமுண்டன்றோ. (யத் அத: அந்யதா2 (தத்) அஜ்ஞாநம்) சரீர ஸம்ப3ந்த4த்தினாலுண்டாகும் மற்ற கு3ணங்கள் அனைத்தும் ஆத்ம ஜ்ஞானத்துக்குத் தடையாயிருப்பவையே. அஜ்ஞானம் என்பதில் உள்ள "நஞ்" விரோதி4 என்னும் பொருளையுடையது. இருபது கு3ணங்களை ஜ்ஞான ஸாத4னமாகச் சொல்லி சரீர ஸம்ப3ந்த4த்தால் ஏற்படும் மற்ற கு3ணங்கள் அனைத்தும் அதற்கு மாறானவை எனகையாலே, இவ்விருபது கு3ணங்களுக்கு நேர் எதிர்த்தட்டான மாநித்வம் முதலானவை மாத்திரமல்லாமல், சரீரஸம்ப3ந்த4த்தால் ஏற்படும் மற்ற கு3ணங்கள் எல்லாமே ஆத்மஜ்ஞானத்துக்குத் தடையாயிருப்பவை என்று விளங்குகிறது. ஜ்ஞானஶப்33த்திற்கு ஆத்மஜ்ஞானமென்றே பொருள்கொண்டு அஜ்ஞானஶப்33ம் அதற்கு விரோதி4யைக் குறிப்பதாகக் கொள்ளலாம் அன்றிக்கே "ஏதத் ஜ்ஞாநம்" என்றவிடத்திற்போலே ஜ்ஞானஶப்33ம் ஜ்ஞானஸாத4னத்தைக் குறிப்பதாகக்கொண்டு அஜ்ஞானஶப்33ம் ஜ்ஞானஸாத4னவிரோதி4யைக் குறிப்பதாகக் கொள்ளலாம். அப்போது ஜ்ஞானவிரோதி4 என்பது தாத்பர்யார்த்த2மாகத்தேறும். 11.

வானது) ஆதியற்றது, (அந்தமுமற்றது); **மத்பரம்** - எனக்கு அடிமைப்பட்டிருப்பது; **ப்₄ரஹ்ம** — மிகப்பெரியதாயிருப்பது; **தத்**—அது, **ந ஸத் ந அஸத் உச்யதே**— (கார்யநிலையிலுள்ள ஆத்மாவைக் குறிக்கும்) 'ஸத்' என்னும் ஶப்₃த₃த்தாலும், (காரணநிலையிலுள்ள ஆத்மாவைககுறிக்கும) 'அஸத்' என்னும் ஶப்₃த₃த்தாலும் குறிக்கத்தகாதது.

12. இவ்வறிவா லெய்து முயிர்தன்னை யீங்குரைக்கே
னெவ்வறிவா னல்லமுத மெய்தலாஞ் - செவ்வையதி
லாதியில தெற்பரமா யான்ற பிரமமா
யீதிலதுண் டென்றுரைப்ப தில்.

எவ்வறிவால்—எதை அறிந்தால், **நல் அமுதம் எய்தலாம்**—நன்மைமிக்க அழியாத ஆதமாவை அடையலாமோ, **இவ்வறிவால் எய்தும் உயிர்தன்னை**—அத்தகைய ஜ்ஞான ஸாத₄னங்களால அடையப்படும் ஆத்ம ஸ்வரூபத்தை, **ஈங்கு உரைக்கேன்**—இவ்விடத்தில் கூறுகிறேன் ; **அதில் செவ்வை**—ஆத்மாவின் சிறப்புகளாவன:— **ஆதி இலது**—ஆதியில்லாதது (அந்தமுமில்லாதது) ; **எற்பரமாய்**—எனக்கு ஆட்பட்டதாய், **ஆன்ற பிரமமாய்**—மிகப்பெரியதாய், **ஈது இலது**—இது காரணநிலையிலுள்ள ஆத்மாவைப்போல் 'இலது' என்று சொல்லத்தக்கதாகவோ, (ஈது) **உண்டு என்று உரைப்பது இல்**—இது காரியநிலையிலுள்ள ஆத்மாவைப் போல் உள்ளது என்று சொல்லத்தக்கதாகவோ இராதது இந்த ஆத்மஸ்வரூபம்.

---

12. ஆக இதுவரையில் 'க்ஷேத்ரம்' எனப்படும் ஶரீரமும் அதன் கார்யங்களும் விளக்கப்பட்டன. இனி முதல் ஶ்லோகத்தில் "ஏதத்₃ யோ வேத்தி" என்று அந்த ஶரீரத்தை அறிபவனைச் சொல்லப்பட்ட க்ஷேத்ரஜ்ஞன் எனப்படும் ஜீவனுடைய ஸ்வரூபம் இந்த ஶ்லோகத்திலிருந்து ஆறு ஶ்லோகங்களில் விளக்கப்படுகிறது. (ஜ்ஞேயம் யத் தத் ப்ரவக்ஷ்யாமி) அமாநித்வம் முதலான ஸாத₄னங்களாலே ஸாக்ஷாத்கரிக்கத்தக்கதாய், அடையத்தக்கதான ஆத்மஸ்வருபத்தைப் பற்றிக்கூறுகிறேன். க்ஷேத்ரஜ்ஞன் என்றும், "ஏதத்₃யோ வேத்தி"

भा- अमानित्वादिभिस्साधनैः ज्ञेयं प्राप्यं यत्प्रत्यगात्मस्वरूपं तत्प्रवक्ष्यामि

என்றும் அறிபவனுகச் சொல்லப்பட்டவனையன்றோ "ஸ ச யோ யத்ப்ரபா$_4$வஶ் ச" (3) என்று மேலே விளக்கப்போவதாக ப்ரதிஜ்ஞை செய்யப்பட்டது. அவனைப்பற்றிய விளக்கத்தைத் தொடங்கும்போது ஜ்ஞாதா என்று குறிக்காமல் 'ஜ்ஞேயம்" என்று குறிப்பானேன்? எனில்: ஸாக்ஷாத்கரித்து அடையத்தக்கதான ஆத்மஸ்வரூபத்தின் லக்ஷணமே 'ஏதத்$_3$யோ வேத்தி' முதலான இடங்களில் கூறப்பட்டது. அந்த ஜ்ஞாதாவான ஜீவனே முற்கூறிய அமாநித்வம் முதலான ஸாத$_4$னங்களாலே ஸாக்ஷாத்கரிக்கப்படுகிறுன்; ஆகையால் அவனை இங்கு 'ஜ்ஞேயம்' என்று கூறியதில் குறையில்லை. பரமாத்மஸ்வரூபமும் ஸாக்ஷாத்கரிக்கத்தக்கதானாலும் இந்த ப்ரகரணத்தில் பரமாத்மாவைப் பற்றிய பேச்சு இல்லாமையால் இங்கு ஜ்ஞேயம் எனப்படுவது பரமாத்மாவும் ஆக முடியாது. தொடக்கத்தில் 'க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞயோர் ஜ்ஞாநம்" (2) என்று ஶரீரத்தைப்பற்றியும், ஜீவனைப்பற்றியும் விளக்கப்போவதாகவே ப்ரதிஜ்ஞையுள்ளது; இந்த அத்$_4$யாயத்தின் கடைசி ஶ்லோகத்தில் "க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞயோரேவமந்தரம் ஜ்ஞாநசக்ஷுஷா" (34) என்று க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞர்களே இவ்வத்$_4$யாயத்தில் விளக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. நடுவிலும் 'ப்ரக்ருதிம் புருஷம் சைவ" (19) என்று இவ்விருவரைப்பற்றியே பேசப்படுகிறது, மேலும் இங்கு ஜ்ஞேயமாகச் சொல்லப்பட்டவனுக்கு இந்த்$_3$ரியங்களைக்கொண்டு அநுப$_4$விக்கும் தன்மையும், தே$_3$ஹத்திலிருந்து வெளிச்செல்வதும், கு$_3$ணங்களுக்கு வசப்பட்டிருப்பதும் கூறப்படுகின்றன. ஆகையால் இங்கு ஜ்ஞேய ஶப்$_3$த$_3$த்தால் பரமாத்மா குறிக்கப்படவில்லை என்றும், ஜீவாத்மாவே குறிக்கப்படுகிறுன் என்றும் விளங்குகிறது. 'ஜ்ஞேயம்' என்று நபும்ஸகலிங்க$_3$மாகக் குறித்தது ஜீவாத்மஸ்வரூபத்தைக் கருத்தில்கொண்டு; ஶ்லோகத்தின் பிற்பாதியில் உள்ள ப்$_3$ரஹ்ம ஶப்$_3$த$_3$த்தைக் கருத்தில்கொண்டு என்றும் கொள்ளலாம். அறிபவனுக ஆத்மாவுக்கு ஏற்கனவே லக்ஷணம் சொல்லப்பட்டுவிட்டது. லக்ஷணமாவது மற்ற பொருள்களைக்காட்டிலும் வேறுபாட்டைக்காட்டுவதேயன்றோ. இதற்குமேலும் ஆத்மஸ்வரூபத்தைப்பற்றி விளக்கவேண்டிய அவசியமென்ன? எனில்: லக்ஷணத்தினுல் மற்ற பொருள்களைக் காட்டிலும் வேறுபாடு மாத்திரமே விளங்கும்; அப்பொருளுக்கு உள்ளவையும் இல்லாதவையுமான மற்ற தன்மைகள்

यत् ज्ञात्वा जन्मजरामरणादिप्राकृतधर्मरहितममृतमात्मानं प्राप्नोति ; अनादि — आदिर्यस्य न विद्यते, तदनादि ; अस्य हि प्रत्यगात्मन उत्पत्तिर्न विद्यते ; तत एवान्तो न विद्यते; श्रुतिश्च * न जायते म्रियते वा विपश्चित् (क. २. १८.)इति;

விளங்கமாட்டா. பூ4மிக்கு "க3ந்த4த்தை உடையது ப்ருதி2வீ" என்று லக்ஷணம் கூறினதால் ஜலத்தைக்காட்டிலும் அதற்கு வேறுபாடு ஸித்3தி4க்குமேயொழிய அதற்குப் பாகத்தினால் ஏற்படும் ரூபாதி3களு முண்டு என்பது ஸித்3தி4க்காதே. அதுபோலே இங்கு ஜ்ஞாத்ருத்வத்தை லக்ஷணமாகச் சொன்னாலும் ஜ்ஞாதாவான அவன் கார்யப் பொருளா? அல்லவா? முதலான தெளிவுகள் ஏற்படாது. ஆகையால் அத்தெளிவுகள் ஏற்படுவதற்காக முன் ஶ்லோகங்களில் குறிப்பிடப்பட்ட அமாநித்வம் முதலான ஸாத4னங்களால் அறியத்தக்கதாயிருக்கை, அநாதி3யாயிருக்கை முதலான பல தன்மைகள் அறிபவனான ஆத்மாவுக்கு இனி விளக்கப்படுகின்றன. (ப்ரவக்ஷ்யாமி) சிறப்பாக உள்ளபடி சொல்லுகிறேன். (யத் ஜ்ஞாத்வா அம்ருதம் அஶ்நுதே) எந்த ஆத்ம ஸ்வரூபத்தை அறிந்தால் பிறப்பு, கிழத்தனம், மரணம் முதலான ப்ரக்ருதியின் தன்மைகளில்லாத தனது ஆத்ம ஸ்வரூபத்தை உபாஸகன் அடைகிறானோ அந்த ஆத்ம ஸ்வரூபத்தைப்பற்றிச் சொல்லுகிறேன் என்று முன் பாத3த்தோடு சேர்த்துப் பொருள்கொள்வது. இனி ஆத்மஸ்வரூபத்தின் பெருமைகள் விளக்கப்படுகின்றன— (அநாதி3) எதற்கு ஆதி3(காரணம்) இல்லையோ அது அநாதி3. இந்த ஜீவாத்மா ஒருகாலத்தில் உண்டானதில்லை என்று தாத்பர்யம். இதைச் சொன்னது 'இந்த ஜீவாத்மா ஒருகாலத்தில் அழிவதுமில்லை' என்று முற்பாதியில் அம்ருதஶப்3த3த்தால் சொன்னதற்கும் காரணமாகிறது. ஜீவாத்மாவுக்கு உத்பத்திவிநாஶங்கள் இல்லை என்னும் இவ்விஷயம் "ந ஜாயதே ம்ரியதே வா விபஶ்சித்" [கட2 2-18] [அறிவுடையவனான ஜீவன் ஒரு காலத்தில் உண்டாவதுமில்லை; அழிவதுமில்லை] என்று உபநிஷத்திலும், "நாத்மா ஶ்ருதேர் நித்யத்வாச்ச தாப்4ய:" [ப்3ர-ஸூ 2-3-18] [ஆத்மாவானது உண்டாவதில்லை; ஶ்ருதி அப்படிக் கூறுகையாலும், அந்த ஶ்ருதிகளிலிருந்து ஆத்மா நித்யமானது என்று ஏற்படுகிறபடியாலும்] என்று ப்3ரஹ்மஸூத்ரத்திலும் கூறப்பட்டது.

मत्परम्-अहं परो यस्य तन्मत्परम्, * इतस्त्वन्यां प्रकृतिं विद्धि मे पराम्, जीवभूताम् (७. ५) इति ह्युक्तम् । भगवच्छरीरतया भगवच्छेषत्वैकरसं ह्यात्मस्वरूपम्; तथा च श्रुतिः ·* य आत्मनि तिष्ठन्नात्मनोऽन्तरो यमात्मा न वेद यस्यात्मा शरीरं य आत्मानमन्तरो यमयति (बृ. ५. ७. २२ मा) इति, तथा * स कारणं करणाधिपाधिपो न चास्य कश्चिज्जनिता न चाधिपः (श्वे. ६. ९.) * प्रधान-

---

(மத்பரம்)பரமாத்மாவாகிற என்னைப்பரனுக (தலைவனுக)க் கொண்டது. இக்கீதையிலே ''இதஸ்த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்$_3$தி$_4$ மே பராம் l ஜீவபூ$_4$தாம்'' [7-5] என்று ஜீவாத்ம ஸ்வரூபம் எம்பெருமானுக்கு ப்ரகாரமாய் ஶரீரமாயிருக்கையாலே அவனுக்கு அடிமைப்பட்டிருப்பதையே இயல்பாகக் கொண்டது என்று முழங்கப்பட்டதன்ரே. ஜீவாத்ம ஸ்வரூபம் பரமாத்மாவுக்கு ஶரீரமாயிருப்பது என்பது

''ய ஆத்மநி திஷ்ட$_2$ந் ஆத்மநோऽந்தரோ, யமாத்மா ந வேத$_3$, யஸ்யாத்மா *ஶரீரம்*, ய ஆத்மாநமந்தரோ யமயதி || ''

[ப்$_3$ருஹ 5-7-22, மாத்$_4$யந்தி$_3$நஶாகை$_2$]

[எந்தப் பரமாத்மா ஜீவாத்மாவின் வெளியிலும் உள்ளும் இருக்கிருனே, எவனை ஆத்மா அறியவில்லையோ, எவனுக்கு ஆத்மா ஶரீரமோ, எவன் ஆத்மாவை உள்நுழைந்து நியமிக்கிருனே] என்ற வேத$_3$வாக்யத்திலும், ஜீவாத்மா பரமாத்மாவுக்கு அடிமைப்பட்டிருப்பது என்பது ''ஸ காரணம் கரணாதி$_4$பாதி$_4$போ ந சாஸ்ய கஶ்சித் ஜநிதா ந சாதி$_4$ப:'' [ஶ்வே 6-9] [இந்த்$_3$ரியங்களுக்குத் தலைவனை ஜீவனுக்குத் தலைவனாய், ஜக$_3$த்காரணமாயிருப்பவன் அப்பரமாத்மா, அவனை உண்டாக்கினவனே அவனுக்குத் தலைவனே எவனுமில்லை] ''ப்ரத$_4$ாநக்ஷேத்ரஜ்ஞபதிர் கு$_3$ணேஶ:'' [ஶ்வே 6-16] [மூலப்ரக்ருதி, ஜீவன் ஆகிய இரு தத்துவத்துக்கும் தலைவனாய், கல்யாண கு$_3$ணங்களுக்குக் கொள்கலமாயிருப்பவன்] என்ற வேத$_3$ வாக்யங்களிலும் முழங்கப்பட்டதன்ரே. சிலர் ''அநாதி$_3$மத்'' ''பரம்

क्षेत्रज्ञपतिर्गुणेशः (श्वे. ६. १६) इत्यादिका। ब्रह्म बृहत्त्वगुणयोगि। शरीरादेरर्थान्तरभूतम्, स्वतश्शरीरादिभिः परिच्छेदरहितं क्षेत्रज्ञतत्त्व- मित्यर्थः ; * स चानन्त्याय कल्पते (श्वे. ५ ९) इति हि श्रूयते ;

ப்₃ரஹ்ம" என்று பத₃ம்பிரிக்கிருர்கள். இது ஜீவப்ரகரணமாகை யாலே, 'பரம்ப்₃ரஹ்ம' என்று ஜீவனைக்குறிப்பதில் ஸ்வாரஸ்யமில்லை மேலும் 'அநாதி₃' என்ருலே ஆதியற்றது என்று தேறுகிறபடியால் அதற்கு மேல் மதுப்ப்ரத்யயத்தைக் கொள்வது பயனற்றதாகிறது. ஶங்கரர் " 'மத்பரம்' என்று பதம் பிரிப்பதில் பொருள் பொருந் தாதாகையால் 'அநாதி₃மத்' என்றே பத₃ம்பிரிக்கவேண்டும். மதுப் ப்ரத்யயம் பயனற்றதாயினும் ஶ்லோகத்தை நிரப்புவதற்காக இடப்பட்டது" என்று ப₄ாஷ்யமிட்டார். இங்கு காட்டியபடி 'மத்பரம்' என்பதற்கு மிகப்பொருத்தமான பொருள் தேறுகிறபடியால் மதுப் ப்ரத்யயத்தை ஶ்லோகபூரணமாகக் கொள்ளவேண்டிய அவசியமில்லை. (ப்₃ரஹ்ம) மிகப்பெரிதாயிருப்பது. " 'பரம ப்₃ரஹ்ம' என்னும் ஶப்₃ த₃த்தைப்போலவே ப்₃ரஹ்மஶப்₃த₃மும் பரமாத்மாவிடமே முக்கிய மானதாயிற்றே. அது இங்கு எப்படி ஜீவனைக் குறிக்க முடியும்?" எனில்: ஜீவனுக்கும் ஜ்ஞானகு₃ணத்தாலே பெருமையுண் டாகையாலே அதையிட்டு "ப்₃ரஹ்ம" என்று குறிக்கப்படுகிறது. "அணுஸ்வரூபத்தையுடையதாக வேத₃வாக்யத்திலிருந்து தேறுவதாய் அளவுபட்ட ஜ்ஞானத்தையுடையதான ஜீவாத்மஸ்வரூபத்துக்கு ஜ்ஞானத்தால் பெருமை எப்படிப்பொருந்தும்?" எனில்: இயற்கையில் எங்கும் பரவக்கூடிய ஜ்ஞானத்தையுடைய ஜீவாத்மஸ்வரூபத்துக்கு ஶரீரஸம்ப₃ந்த₄த்தாலேயே ஜ்ஞானம் அளவுபட்டதாகிறது. அந்த ஶரீரஸம்ப₃ந்த₄ம் நீங்கினால் "ஸ சாநந்த்யாய கல்பதே" [ஶ்வே 5.9] [அணுவான அந்த ஜீவன் (முக்தி நிலையில் ஜ்ஞானத்தால்) எங்கும் பரவுகிருன்.] என்கிறபடியே ஜீவன் ஜ்ஞானத்தால் எங்கும் பரவு வதையிட்டு அவனை "ப்₃ரஹ்ம" என்று வழங்கத்தட்டில்லை. "இயற் கையில் எங்கும் பரவும் ஜ்ஞானத்தையுடையவன் ஸம்ஸாரத₃ஶை யில் அளவுபட்ட ஜ்ஞானத்தையுடையவனுயிருப்பது ஒட்டாதாகை யால், 'முக்திநிலையில் இவனுடைய ஜ்ஞானம் விரிவடைவது செயற் கையானது; ஆகவே 'இவன் எங்கும் பரவுகிருன் என்றது உப

शरीरपरिच्छिन्नत्वं चास्य कर्मकृतम्; कर्मबन्धान्मुक्तस्यानन्त्यम् : आत्मन्यपि ब्रह्मशब्दः प्रयुज्यते — * स गुणान् समतीत्यैतान् ब्रह्मभूयाय कल्पते । ब्रह्मणो हि प्रतिष्ठाऽहममृतस्याव्ययस्य च । (गी १४. २६. २७) * ब्रह्मभूतः प्रसन्नात्मा न शोचति न

சார வழக்கே' என்று தோன்றுகிறதே" எனில், கர்மத்தாலே இவனுக்கு உண்டான ஶரீரஸம்ப3ந்த4த்தாலேயே இவனுடைய அறிவு சுருங்குகிறது என்றும், கர்மம் நீங்கியவுடன் அறிவு எங்கும் பரவுகிறது என்றும் வேத3வாக்யங்கள் முழங்குகையாலே விரிவடைந்த ஜ்ஞானம் இயற்கையானது என்றும் சுருங்கிய ஜ்ஞானம் செயற்கையானது என்றும் விளங்குகிறது. கீ3தையிலேயே மற்றும்பல இடங்களில் ஜீவனைக் குறித்து ப்3ரஹ்மஶப்3த3ம் வழங்கப்படுகிறது.

"ஸ கு3ணாந் ஸமதீத்யைதாந் ப்3ரஹ்மபூ4யாய கல்பதே ।
ப்3ரஹ்மணோ ஹி ப்ரதிஷ்டா2ஹம் அம்ருதஸ்யாவ்யயஸ்ய ச ॥

[கீ3தை 14-26, 27]

[அந்த ஜீவன் இந்த ஸத்வம் முதலான கு3ணங்களைக் கடந்து மிகப்பெரியவனாகிறான். பெரியவனாகையாலே ப்3ரஹ்மம் எனத் தக்கவனாய், மரணமற்றவனாய், அழிவற்றவனான அவனுக்கு ஆத4ாரமாய் இருப்பவன் பரப்3ரஹ்மமான நானே] என்னுமிடத்தில் ஜீவன் ப்3ரஹ்மஶப்3த3த்தால் குறிக்கப்படுவதற்குக் காரணத்தையும், அவனுக்கும் ஆத4ாரமாயிருப்பவன் பரப்3ரஹ்மமான தானே என்பதையும் உணர்த்தினான், இங்கு 'ப்3ரஹ்மமாகிறான்' என்று சொன்னபோதிலும் உத்தரார்த்த4த்தோடு முரண்படுகையாலே ப்3ரஹ்மத்தோடு ஸ்வரூபைக்யம் கொள்வது ஒட்டாது. "மம ஸாத4ர்ம்யமாக3தா:" [கீ3தை 14-2] [என்னோடு ஒற்றுமையை அடைகிறார்கள்] என்று இந்த கீ3தையிலேயே முக்திநிலையில் ஜீவனுக்கு ப்3ரஹ்மத்தோடு ஸாம்யம் (ஒற்றுமை) சொல்லப்பட்டதேயொழிய ஸ்வரூபைக்யம் சொல்லப்படவில்லையே.

"ப்3ரஹ்மபூ4த: ப்ரஸந்நாத்மா ந ஶோசதி ந காங்க்ஷதி ।
ஸமஸ்ஸர்வேஷு பூ4தேஷு மத்3ப4க்திம் லப4தே பராம் ॥"

[கீ3தை 18-54]

काङ्क्षति । समस्सर्वेषु भूतेषु मद्भक्तिं लभते पराम् ॥ (गी १८. ५४.) इति । न सत्तन्नासदुच्यते--कार्यकारणरूपावस्थाद्वयरहिततया सदसच्छब्दाभ्यामात्मस्वरूपं नोच्यते, कार्यावस्थायां हि देवादिनामरूप-

---

[ஆத்மஸ்வரூபாவிர்ப$_4$ாவம் பெற்றவனாய், க்லேஶம் காமம் முதலானவற்றால் கலங்காதவனாய், அவன் எதைக்குறித்தும் வருந்துவதில்லை. எதையும் விரும்புவதில்லை. என்னைத்தவிர்ந்த மற்றபொருள்களை புல்லென மதிக்கையாலே பொருட்படுத்தாமையில் அனைத்திலும் ஒத்திருப்பவனாய், என் விஷயமான பரப$_4$க்தியை அடைகிறான்] என்னும் ஶ்லோகத்தில் பரப்$_3$ரஹ்மத்தை அடைவதற்கு ஸாத$_4$னமான ப$_4$க்தியையடைவதற்கு முன்பே இவன் ப்$_3$ரஹ்மமாகிறான் என்கையாலே ஸ்வரூபைக்யம் பொருந்தாது. ஆகவே ஜீவாத்ம விஷயத்திலும் அமுக்$_2$யமான ப்$_3$ரஹ்ம ஶப்$_3$த$_3$ப்ரயோக$_3$ம் உண்டு என்று தேறிற்று. (ந ஸத்தந்நாஸது$_3$ச்யதே) கார்யநிலையில் தே$_3$வாதி$_3$ நாமரூபங்களோடு கூடியிருப்பதையிட்டு 'ஸத்' என்றும், காரண நிலையில் அந்த நாமரூபங்கள் இல்லாமலிருப்பதையிட்டு 'அஸத்' என்றும் ஶாஸ்த்ரங்களில் அந்தந்த நிலைகளிலுள்ள ஆத்மஸ்வரூபம் கூறப்படுவதுபோல், முக்திநிலையிலுள்ள அசித் ஸம்ப$_3$ந்த$_4$ம் நீங்கிய ஆத்மஸ்வரூபம் 'ஸத்' என்னும் ஶப்$_3$த$_3$த்தாலோ, 'அஸத்' என்னும் ஶப்$_3$த$_3$த்தாலோ கூறப்படுவதில்லை. இங்கு இத்தொடருக்கு "உள்ளது என்றோ இல்லாததென்றோ எந்தவிதமாகவும் கூற முடியாதது" என்று பொருள் கொள்வது இந்த ப்ரகரணத்தில் ஆத்மஸ்வரூபத்தைப் பலவிதமாக வர்ணித்திருப்பதோடு முரண்படும். "உள்ளதுமல்ல இல்லாததுமல்ல" என்று பொருள் கொண்டால் "பரஸ்பரவிரோதே$_4$ ஹி ந ப்ரகாராந்தரஸ்தி$_2$தி:" [ஒன்றோடொன்று முரண்பட்ட இரண்டு நிலைகளிலும் சேராததானால் மூன்றாவது நிலையில் அப்பொருள் இருக்க முடியாது] என்னும் நியாயப்படி அப்பொருள் பொருந்தாததாகும். "ஸத் என்றும் அஸத் என்றும் கூறப்படும் ப்ரஸித்$_3$த$_4$மான இரு பொருள்களைக் காட்டிலும் வேறுபட்டது" என்று பொருள்கொள்ளப்பார்த்தால், அப்படி இரு பொருள்கள் இல்லாமையாலே அதுவும் பொருந்தாது. 'ஸத்' என்பதற்கு மங்களமானது என்றும் 'அஸத்' என்பதற்கு அமங்களமானது என்றும் பொருள் கொண்டு 'அவ்விருவகைப்பொருள்களிலும் வேறுபட்டது" என்று பொருள் கொள்ளப்பார்த்தால் பரமமங்க$_3$ளமான ஆத்மாவை மங்க$_3$ளமானதைக் காட்டிலும் வேறுபட்டது

भाक्त्वेन सदित्युच्यते, तदनर्हतया कारणावस्थायामसदित्युच्यते; तथा च श्रुतिः — * असद्वा इदमग्र आसीत्। ततो वै सदजायत (आ. ७.) * तद्धेदं तर्ह्यव्याकृतमासीत्तन्नामरूपाभ्यां व्याक्रियत (बृ. ३. ४. ७) इत्यादिका। कार्यकारणावस्थाद्वयान्वयस्त्वात्मनः कर्मरूपाविद्यावेष्टनकृतः, न स्वरूपकृत इति सदसच्छब्दाभ்யாமாத்மஸ்வரூபं

என்று கூறுவது பொருந்தாது. ஆகையால், இங்கு கூறியபடியே பொருள்கொள்ள வேண்டும். கார்யகாரண நிலைகளில் சேதனு சேதனங்களோடு கூடிய பரமாத்மாவை "அஸத₃வா இத₃மக்₃ர ஆஸீத் ததோ வை ஸத₃ஜாயத" [தை ஆ-7] [இவ்வுலகம் நாமரூபங்களற்ற சேதனுசேதனங்களோடு கூடியதாகையாலே 'அஸத்' எனப்படும் ப்₃ரஹ்மமாகவே முதலிலிருந்தது. அதிலிருந்து, நாம ரூபங்களை உடைய சேதனுசேதனங்களோடு கூடியதாகையாலே 'ஸத்' எனப்படும் கார்யநிலையிலுள்ள ப்₃ரஹ்மம் உண்டாயிற்று] என்று வேதவாக்யம் ஸத் அஸத் என்னும் ஶப்₃த₃ங்களாலே குறிப்பிட்டது.

"தத்₃தே₄த₃ம் தர்ஹ்யவ்யாக்ருதமாஸீத்
தந்நாமரூபாப்₄யாம் வ்யாக்ரியத" [ப்₃ருஹ 3-4.7]

[இவ்வுலகம் ப்ரளயகாலத்தில் நாமரூபங்களற்ற சிதசித்துக்களோடு கூடிய ப்₃ரஹ்மமாகவேயிருந்தது. அது ஸ்ருஷ்டிகாலத்தில் நாம ரூபங்கள் இடப்பெற்ற சித₃சித்துக்களோடு கூடியதாக ஆயிற்று.] என்று ஸ்ருஷ்டி ப்ரகரணத்தில் ஒத்த பொருளையுடைய வேறொரு வேத₃வாக்யத்திலிருந்து, கார்யநிலையில் நாமரூபங்கள் இடப்பட்டதை யிட்டும். காரணநிலையில் அது இல்லாததையிட்டுமே முந்திய வாக்யத்தில் காரண ப்₃ரஹ்மம் 'அஸத'என்றும் கார்ய ப்₃ரஹ்மம் 'ஸத என்றும கூறப்படுகிறது] என்று. விளங்குகிறது. இனி பின்வருமாறு ஓர் ஆக்ஷேபம் எழுகிறது—பரமாத்மாவுக்கு முற்கூறிய வேத₃வாக்யங்களில் வழங்கப்பட்ட 'ஸத், 'அஸத்' என்னும் ஶப்₃த₃ங்கள் ஜீவனுக்கும் உண்டென்றே கொள்ள வேண்டும். இல்லாவிடில் ஜீவன் பரமாத்மாவுக்கு ப்ரகாரம் என்று சொல்லப்பட்டது பொருந்ாது. "தோயேந ஜீவாந் வ்யஸஸர்ஜ பூ₄ம்யாம்" [தை-நா.] [ஸூக்ஷ்ம ஶரீரத்தோடு கூட ஜீவர்களை இந்நிலவுலகில் படைத்தான் எம்பெருமான்] என்னும் வேத₃வாக்யத்திலிருந்தும கார்ய காரண நிலைகளில் ஜீவன் பரமாத்மாவுக்கு ப்ரகாரம் என்று விளங்குகிறது. இப்படியிருக்க இந்த கீ₃தா ஶ்லோகத்தில் ஜீவாத்ம ஸ்வரூபம் "ஸத் என்றோ அஸத்

नोच्यते । यद्यपि * असद्वा इदमग्र आसीदिति कारणावस्थं परं ब्रह्मोच्यते. तथाऽपि नामरूपविभागानर्हसूक्ष्मचिदचिद्वस्तुशरीरं परं ब्रह्म कारणावस्थमिति कारणावस्थायां क्षेत्रक्षेत्रज्ञस्वरूपमप्यसच्छब्द-वाच्यम् । क्षेत्रज्ञस्य साऽवस्था कर्मकृतेति परिशुद्धस्वरूपं न सदसच्छब्दनिर्देश्यम् ॥ १२ ॥

என்றோ சொல்லத்தகாதது" என்று கூறுவது எப்படிப்பொருந்தும்? என்பது அவ்வாக்ஷேபம். இதற்கு ஸமாத4ானமாவது—ஜீவனுக்குக் கார்யநிலையும் காரண நிலையுமாகிற இரு நிலைகளும் அந்த ஜீவன் அவித்யை எனும் கர்மத்தால் மறைக்கப்பட்டிருக்கும்போதே உண்டாகிறது. இயற்கையாக உள்ளதன்று. ஆகையால் ப்ரக்ருதி ஸம்ப3ந்த4 மற்ற ஆத்ம ஸ்வரூபம் ஸத்தென்றோ அஸத் என்றோ சொல்லத்தகாதது என்று கூறியது பொருத்தமேயாகும். இனி மற்றோராக்ஷேபம் பின்வருமாறு எழுகிறது—"காரணத்வேந ச ஆகாஶாதி3ஷு யதா2வ்யபதி3ஷ்டோக்தே:" [ப்ரஹ்மஸூத்ரம் 1-4-14] [ஆகாஶம் முதலான கார்யங்களுக்குக் காரணமாக ஸர்வஜ்ஞத்வம் முதலான பெருமைகளோடு கூடியதாக முன்கூறப்பட்ட ப்3ரஹ்மத்தையே சொல்லுகிறதாகையால் (ப்3ரஹ்மமே ஜக3த் காரணமென்று வேதா3ந்த வாக்யங்கள் கூறுகின்றன)] என்னும் அதி4கரணத்தில் ஸத், அஸத், அவ்யாக்ருதம் முதலான காரண வாக்யங்களிலுள்ள ஶப்3த3ங்கள் அனைத்தும் பரமாத்மாவையே சொல்லும் என்று நிர்ணயிக்கப்பட்டது; அப்படியிருக்கும்போது அச்சொற்கள் கார்யகாரண நிலைகளிலுள்ள ஜீவனைக் குறிப்பதாகக் கூறுவது எப்படிப் பொருந்தும்? என்பது ஆக்ஷேபம். அதற்கு ஸமாத4ானம் பின்வருமாறு;—முன் எடுத்த காரண வாக்யங்களில் காரண நிலையிலுள்ள பரமாத்மாவே அஸத் என்று கூறப்பட்டபோதிலும் நாமரூபப் பிரிவற்ற ஸூக்ஷ்ம சேதநாசேதனங்களை ஶரீரமாகக்கொண்ட பரமாத்மாவே காரண நிலையிலிருப்பதால் அந்நிலையில் அப்பரம்பொருளுக்கு ஶரீரமான சேதநாசேதன ஸ்வரூபங்களும் 'அஸத்' என்னும் ஶப்3த3த்தால் சொல்லப்படுபவையேயாகும். அப்படியானால் ப்ரக்ருதி ஸம்ப3ந்த4மற்ற முக்தி நிலையிலும் கார்ய நிலையிலுள்ள நாமரூபப் பிரிவில்லாமையால் அப்போதும் 'அஸத்' எனும் ஶப்3த3த்தால் பரிஶுத்3த4 ஜீவனைக் குறிக்க வேண்டிவருமேயெனில்: கர்மத்தினால் ஜீவனுக்கு ஏற்பட்ட காரண நிலையோ காரிய நிலையோ பரிஶுத்த நிலையில் இல்லை என்று தடுத்துக் கூறுவதிலேயே நோக்காகையாலே "பரிஶுத்3த4 ஸ்வரூபம் ஸத்தென்றோ அஸத்தென்றோ கூறத்தகாதது" என்று இங்கு கூறியதில் குறையில்லை.
12.

सर्वतःपाणिपादं तत्सर्वतोऽक्षिशिरोमुखम् ।
सर्वतश्श्रुतिमल्लोके सर्वमावृत्य तिष्ठति ॥ १३.

13. **ஸர்வத: பாணிபாதம் தத் ஸர்வதோऽக்ஷிஶிரோமுகம்।**
ஸர்வதஶ்ஶ்ருதிமல்லோகே ஸர்வமாவ்ருத்ய திஷ்டதி॥

தத் — அந்தப்பரிஶுத்தாத்மஸ்வரூபம், **ஸர்வத:பாணிபாதம்**—எல்லாவிடத்திலும் கைகால்கள் செய்யக்கூடிய கார்யங்களைச் செய்யவல்லது, **ஸர்வதோऽக்ஷிஶிரோமுகம்**-எல்லாவிடத்திலும் கண் தலை முகம் ஆகியவை செய்யும் கார்யங்களைச் செய்யவல்லது; **ஸர்வதஶ்ஶ்ருதிமத்**—எல்லா விடத்திலும் காது செய்யும் கார்யத்தைச் செய்யக் கூடியது; **லோகே** - உலகிலுள்ள, **ஸர்வம்**-எல்லாப்பொருள் களையும், **ஆவ்ருத்ய திஷ்டதி**—வியாபித்து நிற்கிறது,

---

13. **எங்குங் கரம்பாத மெங்குங்கண் சென்னிமுக**
மெங்குஞ் செவியா மியல்புடைத்தாய்—இங்குலகி
லெப்பொருளுந் தன்றகவா லேய்ந்து பரந்துநிற்கு
மப்பொருளின் றன்மை யது.

அப்பொருளின் தன்மையது—பரம்பொருளின் தன்மை யுடைய அந்தப் பரிஶுத்தாத்ம ஸ்வரூபம், **எங்கும் கரம் பாதம்**—எல்லாவிடத்திலும் கைகால்கள் செய்யக்கூடிய கார்யத்தையும், **எங்கும் கண் சென்னிமுகம்**—எல்லாவிடத்திலும் கண் தலை முகம் செய்யும் கார்யங்களையும், **எங்கும் செவி** — எல்லாவிடத் திலும் காது செய்யும் கார்யத்தையும, **ஆம் இயல்பு உடைத்தாய்** — செய்யும் வல்லமையுடையதாய், **இங்கு உலகில்** - இவ்வுலகில், **எப்பொருளும்** — எல்லாப் பொருள்களையும், **தன் தகவால்**—தன்னுடைய அறிவால், **ஏய்ந்து**—பொருந்தி, **பரந்துநிற்கும்**—வியாபித்து நிற்கும்.

भा ॥ सर्वतः पाणिपादं तत्—परिशुद्धात्मस्वरूपं सर्वतः पाणिपादकार्यशक्तम्, तथा सर्वतोऽक्षिशिरोमुखं सर्वतश्श्रुतिमत् — सर्वतः चक्षुरादिकार्यकृत्, * अपाणिपादो जवनो ग्रहीता पश्यत्यचक्षुस्स शृणोत्यकर्णः (श्वे. ३, १९.) इति परस्य ब्रह्मणोऽपाणिपादस्यापि सर्वतः पाणिपादादिकार्यकृत्त्वं श्रूयते; प्रत्यगात्मनोऽपि परिशुद्धस्य तत्साम्यापत्त्या सर्वतः पाणिपादादिकार्यकृत्त्वं श्रुतिसिद्धमेव ;

---

13. முக்தி நிலையிலுள்ள ஜீவாத்மாக்கள் கை கால் முதலான வைகளால் ப₃த்₃த₄ ஜீவர்கள் இங்கு செய்யும் காரியங்களை ஸங்கல் பத்தாலேயே அங்கு செய்கிறார்கள் என்றும், எல்லாவிடத்திலும் இப் படிக் காரியம் செய்யலாம்படி உலகிலுள்ள எல்லாப் பொருள்களையும் ஜ்ஞானத்தாலே வியாபித்திருக்கிறார்கள் என்றும் கூறுகிறான். (தத) முன் ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட ப்ரக்ருதியினின்றும் நீங்கிய ஆத்ம ஸ்வரூபம். (ஸர்வத: பாணிபாத₃ம் ஸர்வதோऽக்ஷிஶிரோ முக₂ம் ஸர்வதஶ் ஶ்ருதிமத்) கை, கால், கண், தலை, வாய், காது ஆகிய இந்த்₃ரியங்கள் ப₃த்₃த₄ நிலையில் செய்யும் காரியங்களை அவ்விந்த்₃ ரியங்கள் இல்லாவிடினும் எல்லாவிடத்திலும் தானேசெய்யவல்லது.

"அபாணிபாதோ₃ ஜவநோ க்₃ரஹீதா பஶ்யத்யசக்ஷுஸ்:
ஸ ஶ்ருணோத்யகர்ண:" [ஶ்வே-3-19]

[பரமாத்மா கைகால்கள் இல்லாவிடினும் வேக₃மாக நடக்கக்கூடியது; எதையும் பிடிக்கக்கூடியது. கண் இல்லாவிடினும் காணக்கூடியது- காதில்லாவிடினும் கேட்கக்கூடியது] என்று பரப்₃ரஹ்மத்திற்கு, கை கால் முதலான கர்மேந்த்₃ரியங்களும், கண் காது முதலான ஜ்ஞானே ந்த்₃ரியங்களும் இல்லாவிடினும் அந்தந்த இந்த்₃ரியங்களால் செய்யப் படும் காரியங்களைத் தானே செய்யவல்லது என்று கூறப்பட்ட பெருமை இந்தப் பரப்₃ரஹ்மத்தோடு ஸாம்யம்பெற்று முக்திநிலையிலிருக்கும் பரி ஶுத்₃த₄ாத்ம ஸ்வரூபத்துக்கும் உண்டு என்று இங்கு கூறப்படு கிறது.

* तदा विद्वान् पुण्यपापे विधूय निरञ्जनः परमं साम्यमुपैति (मु, ३. १. ३) इति हि श्रूयते; * इदं ज्ञानमुपाश्रित्य मम साधर्म्यमागताः (१४. २) इति च वक्ष्यते । लोके सर्वमावृत्य तिष्ठति- लोके यद्वस्तुजातं तत्सर्वं व्याप्य तिष्ठति; परिशुद्धस्वरूपं देशादि परिच्छेदरहिततया सर्वगतमित्यर्थः ॥ १३ ॥

"தத$_3$ா வித்$_3$வாந் புண்யபாபே விதூ$_4$ய
நிரஞ்ஜந: பரமம் ஸாம்யம் உபைதி" [முண்ட$_3$ 3-1-3]

[அப்போது அந்த ப்$_3$ரஹ்மஜ்ஞானியானவன் புண்யபாபங்களை விட்டு அஜ்ஞானம் முதலான எந்த தோ$_3$ஷமுமில்லாதவனாய், பரமாத்மாவோடு மேலான ஒற்றுமையை அடைகிறான்] என்று முக்தாத்மா பரமாத்மாவோடு மேலான ஒற்றுமையை அடைகிறான் என்று உபநிஷத்திலும் ஓதப்பட்டதன்றோ. இந்த மேலான ஒற்றுமை ஜக$_3$த்$_3$ வ்யாபாரம் முதலான சில குறிப்பிட்ட விஷயங்கள் தவிர மற்ற எல்லாப் பரமாத்ம ஸ்வபா$_4$வங்கள் விஷயத்திலும் உண்டு என்று ப்$_3$ரஹ்ம ஸூத்ரத்திலும் நாலாமத்தியாயம் நாலாவது பாத$_3$த்தில் நிர்ணயிக்கப்பட்டதன்றோ. இந்த கீ$_3$தையிலும்

"இத$_3$ம் ஜ்ஞாநமுபாஶ்ரித்ய மம ஸாத$_4$ர்ம்யமாக$_3$தா:"
[கீ$_3$தை 14-2]

[இந்த ஜ்ஞானத்தையடைந்து (முக்திநிலையில்) என்னோடு மேலான ஒற்றுமையை (ஜீவர்கள்) அடைகிறார்கள்] என்று இவ்விஷயம் மேலே சொல்லப்பட இருக்கிறதாகையாலே இங்கு பரமாத்மாவின் தன்மைகளை முக்தாத்மாவுக்குச் சொன்னதில் குறையில்லை. (லோகே ஸர்வமாவ்ருத்ய திஷ்ட$_2$தி) இவ்வுலகிலுள்ள எல்லாப் பொருள்களையும் வியாபித்து நிற்கிறது. 'நிற்கிறது' என்றதால் முக்திநிலையில் ஏற்பட்ட வ்யாப்தி பிறகு என்றுமே அழிவதில்லை என்று உணர்த்தப்படுகிறது. இவ்வுலகில் கர்மத்தாலும் ப்ராக்ருத தே$_3$ஹத்தாலும் கட்டுப்பட்டிருக்கும்போது இந்த ஜீவஸ்வரூபம் அனைத்தையும் வியாபிக்கவல்லதல்லதாகிலும், கர்ம ஸம்ப$_3$ந்த$_4$மும் தே$_3$ஹ ஸம்ப$_3$ந்த$_4$மும் விடுபட்ட முக்தாத்மா அனைத்தையும் வியாபிக்கவல்லவனாகிறான் என்று

सर्वेन्द्रियगुणाभासं सर्वेन्द्रियविवर्जितम् ।
असक्तं सर्वभृच्चैव निर्गुणं गुणभोक्तृ च ॥ १४

14. ஸர்வேந்த்₃ரியகு₃ணாப₄ாஸம் ஸர்வேந்த்₃ரிய விவர்ஜிதம் ।
அஸக்தம் ஸர்வப்₄ருச்சைவ நிர்கு₃ணம்
கு₃ணபே₄ாக்த்ரு ச ॥

ஸர்வேந்த்₃ரியகு₃ணாப₄ாஸம் - எல்லா இந்த்₃ரியங்களின் செயல்களாலே விஷயங்களை அறியவல்லது; **ஸர்வேந்த்₃ரிய விவர்ஜிதம்** – (இயல்வான நிலையில்) எல்லா இந்திரியங்களுமில்லாமலே அனைத்தையும அறியவலலது; **அஸக்தம்**- (இயற்கையில்) தே₃வர்கள முதலான தே₃ஹங்களில தொடர்பறறது; **ஸர்வப்₄ருத் ச ஏவ** - தே₃வர் முதலான எல்லா தே₃ஹங்களையும் த₄ரிக்கவல்லதாகவே இருப்பது; **நிர்கு₃ணம்** - (இயற்கையில்) ஸத்வம் முதலான கு₃ணங்களற்றது; **கு₃ணபே₄ாக்த்ரு ச** - ஸத்வம முதலான கு₃ணங்களை அனுப₄விக்கவல்லதாயிருப்பது,

---

கருத்து- அணுவான ஜீவன் முக்தி நிலையில்தான் எப்படி அனைத்தையும் வியாபிக்க முடியுப? எனில்: அணுவான இவனுடைய த₄ர்மபூ₄தஜ்ஞானம் முக்திநிலையில் எங்கும் பரவுகிறதாகையாலே அவ்வறிவைககொண்டு இவன் எங்கும் வியாபிக்கிருன் என்று கருத்து. இவ்விஷயம்

"ப்ரதீ₃பவதா₃வேஶ ஸ ததா₂ஹி த₃ர்ஶயதி"

[ப்₃ரஹ்ம ஸூ 4-4-15]

[விளக்கின் ஒளிபோலே (முக்தனின் அறிவு) வியாபிக்கிறது; வேதம் அப்படியே ஓதுகின்றதன்றே] என்று ப்₃ரஹ்ம ஸூத்ரத்திலும் நிர்ணயிக்கப்பட்டது. ஜீவஸ்வரூபம் அணுவாயிருப்பதையே லக்ஷணமாகக் கொண்டதாகையாலும், அது விகாரமற்றதென்று உபநிஷத்தில் ஓதப்படுகையாலும் ஸ்வரூபம் விபு₄வாகிறது என்று கொள்ளமுடியாது. ஆகையால் தன் அறிவைக்கொண்டே முக்தாத்ம ஸ்வரூபம் எங்கும் வியாபிக்கிறது என்றே கொள்ளவேண்டும். (13)

14. எல்லாப் புலனியல்வு மேய்ந்தே விளங்குமதா
யெல்லாப் புலனியல்வு மில்லையா—யெல்லாந்
தரிக்குமொரு தத்தற்றுச் சார்குணமூன் றின்றி
விரித்ததனைத் துய்க்கும் மிக.

எல்லா புலன் இயல்வும் ஏய்ந்தே விளங்குமதாய் - எல்லா இந்த்₃ரியஙகளின் செயலகளாலே விஷயங்களை அறிய வல்லதாய், **எல்லா புலன் இயல்வும் இல்லையாய்** - (இயல்வான நிலையில்) எல்லா இந்த்₃ரியங்களுமில்லாமலே அனைத்தை யும் அறியவல்லதாய், **ஒரு தத்து அற்று** - (இயற்கையில்) தே₃வர்கள் முதலான தே₃ஹங்களில் தொடர்பற்று, **எல்லாம் தரிக்கும்** - தே₃வர் முதலான தே₃ஹங்களையும் தரிககவல்லது; **சார் குணம் மூன்று இன்றி** - (இயற்கையில்) ப்ரக்ருதியைச சார்ந்திருக்கும் ஸத்வம் முதலான மூன்று கு₃ணமில்லாததாய், **அதனை விரித்து மிக துய்க்கும்** - அம மூனறு கு₃ணங்களையும விரிவாகவும் நன்ருகவும அனுப₄ விககவலலதாயிருப்பது.

---

14. *ஜீவர்கள் ஸம்ஸார நிலையோடு முக்திநிலையோடு வாசியில்லாமல் எல்லா நிலைகளிலும் இந்த்₃ரியங்களின் செயல்களாலே விஷயங்களை அறியவல்லவர்கள் என்றும், தே₃வர் முதலான தே₃ஹங்களை த₃ரிக்கவல்லவர்கள் என்றும், ஸத்வரஜஸ்தமோ கு₃ணங்களை அனுப₄விக்கவல்லவர்கள் என்றும், இயல்பான முக்தி நிலையில் இந்த்₃ரியங்களாலல்லாமல் தாமே அனைத்தையும் அறிபவர்கள் என்றும், தே₃வர் முதலான தே₃ஹங்களோடு தொடர்பற்றவர்கள் என்றும், ஸத்வரஜஸ்தமோகு₃ணங்களற்றவர்கள் என்றும் கூறுகிருன். (ஸர்வேந்த்₃ரியகு₃ணுப₄ாஸம்)*

"ஸர்வேந்த்₃ரியகு₃ணை: ஆப₄ாஸோ யஸ்ய தத்"

[எல்லா இந்த்₃ரியகு₃ணங்களாலும் எதற்கு அறிவு ஏற்படுகிறதோ அது 'ஸர்வேந்த்₃ரிய கு₃ணுப₄ாஸம்' எனப்படுகிறது] என்று விக்₃ரஹம். இங்கு அறிவெனப்படுவது விஷயங்களைப்பற்றிய அறிவே யாகும். இந்த்₃ரியங்களால் அறியப்படுபவை விஷயங்களேயன்றே, விஷயங்கள் இந்த்₃ரியங்களாலே அறியப்படுபவையாயிருக்க.

भा ॥ सर्वेन्द्रियगुणाभासम् - सर्वेन्द्रियगुणैराभासो यस्य तत् सर्वेन्द्रियगुणाभासम्, इन्द्रियगुणा इन्द्रियवृत्तयः, इन्द्रियवृत्तिभिरपि विषयान् ज्ञातुं समर्थमित्यर्थः । स्वभावतस्सर्वेन्द्रियविवर्जितम् विनैव इन्द्रियवृत्तिभिः स्वत एव सर्वं जानातीत्यर्थः । असक्तम्—स्वभावतो देवादिदेहसङ्गरहितम्, सर्वभृच्चैव--देवादिसर्वदेहभरणसमर्थं च, * स

அவற்றின் கு3ணங்களாலே அறியப்படுபவையாக இங்கு கூறுவது எப்படி ஒட்டும்? எனில்; இங்கு கு3ணங்கள் எனப்படுவது இந்த்3ரியங்களின் வ்ருத்திகளாகிற செயல்களேயாகும். ஆக, இந்த்3ரியங்களின் செயல்களாலும் விஷயங்களை அறியவல்லது ஜீவாத்ம ஸ்வரூபம் என்றதாயிற்று. இந்த்3ரியங்களில்லாமல் தானே விஷயங்களை அறியவல்ல முக்திநிலையிலும் இந்த்3ரியங்களைக் கொண்டும் ஆத்மா விஷயங்களை அறியவல்லதாகையாலே இது ஸம்ஸாரநிலை முக்திநிலை ஆகிய இரண்டுக்கும் பொதுவாகும். மேலே 'ஸர்வப்4ருத்' 'கு3ணபோ4க்த்ரு' என்று கூறுமிடங்களிலும் இப்படியே கொள்வது. இதனால் 'ஆத்ம ஸ்வரூபமானது இந்த்3ரிய கு3ணங்களாலே பிரகாசிக்கிறது' என்றும், 'எல்லா இந்த்3ரிய வ்யாபாரங்களிலும் ஈடுபடுவதுபோல் காணப்படுகிறது' என்றும் மூன்னுக்குப்பின் முரணாக ஶங்கரர் பா4ஷ்யமிட்டது ஸ்வரஸமன்று என்று விளங்குகிறது. (ஸர்வேந்த்3ரிய விவர்ஜிதம்) இயல்பான முக்திநிலையில் எல்லா இந்த்3ரியங்களோடும் தொடர்பற்றது. இந்த்3ரியங்களின் செயல்களை எதிர்பாராமல் தானே அனைத்தையும் அறியவல்லது என்று கருத்து. (அஸக்தம்) இயற்கையில் தே3வர் முதலான தே3ஹங்களோடு தொடர்பற்றது. முக்திநிலையில் இது ப2லபர்யந்தமாகிறது. (ஸர்வப்4ருத் ச ஏவ) முக்திநிலையோடு ஸம்ஸார நிலையோடு வாசியற, தே3வர் முதலான எல்லா தே3ஹங்களையும் த4ரிக்கவல்லது. இங்கு ஸர்வ ஶப்3த3ம் எல்லாப் பொருள்களையும் குறிப்பதாகக் கொண்டால் முக்தன் உலகனைத்துக்கும் ஆதா4ரமாயிருப்பவன் என்று பொருள்படும். ஶாஸ்த்ரங்கள் இப்பெருமையைப் பரமாத்மாவுக்குச் சொல்லுகின்றனவேயொழிய முக்தாத்மாவுக்குச் சொல்லுவதில்லை.

एकधा भवति त्रिधा भवति (छा. ७. २६. २) इत्यादिश्रुतेः । निर्गुणम्-तथा स्वभावतस्सत्त्वादिगुणरहितम् । गुणभोक्तृ च — सत्त्वादीनां गुणानां भोगसमर्थं च ॥ १४ ॥

ஆகையால் ஸம்ஸார நிலையில் தே₃வர் முதலான தே₃ஹங்களை ஒவ்வொரு காலத்தில் த₄ரிப்பதுபோலே, முக்திநிலையிலும் அவற்றை த₄ரிக்கவல்லது என்றே பொருள்கொள்ளவேண்டும். இப்படி முக்தனும் பரமாத்மாவின் நினைவையொட்டிப் பல ஶரீரங்களை எடுத்துக்கொள்வதை

"ஸ ஏகதா₄ ப₄வதி த்ரிதா₄ ப₄வதி" [சா₂ந். 7. 26. 2]

[அவன் ஒரு ஶரீரத்தை எடுத்துக்கொள்கிறான். மூன்று ஶரீரங்களை எடுத்துக்கொள்கிறான்] என்று ஶ்ருதியும் ஓதிற்றன்றோ. முக்தனுடைய ஸ்வரூபம் ஒன்றாகவோ மூன்றாகவோ ஆக முடியாதாகையால் அவன் பல ஶரீரங்களை எடுத்துக்கொள்வதன் மூலமாகவே

"ஜக்ஷத் க்ரீட₃ந் ரமமாண:" (சாந். 8, 12, 3)

[முக்தாத்மா உண்டும் விளையாடியும் ஆனந்தி₃க்கிறான்] என்னும் வேத₃வாக்யத்தில் சொல்லப்பட்ட பல காரியங்களைச் செய்கிறான் என்றே கொள்ளவேண்டும். இதனால் "கானல்நீர் போன்ற எல்லாப் பொருள்களின் மயக்கத்துக்கு இருப்பிடமாயிருப்பது" என்று ஶங்கரர் இப்பத₃த்துக்குப் பொருள்கொண்டது பொருந்தாது என்று விளங்குகிறது. (நிர்க்கு₃ணம்) இயற்கையாக ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் பிரகிருதிகு₃ணங்கள் மூன்றும் அற்றது. இம்மூன்று கு₃ணங்களும் தே₃ஹத்தைச் சார்ந்தவையாகையாலே ஸம்ஸார நிலையிலும் முக்திநிலையிலும் ஆத்மா இவற்றோடு தொடர்பற்றது என்று கருத்து. (கு₃ணபோ₄க்த்ரு ச) அந்த மூன்று கு₃ணங்களையும் முற்கூறிய இரு நிலைகளிலும் அனுப₄விக்கவல்லதாகவும் இருப்பது. முக்குணங்களையும் அனுப₄விப்பது ஶரீரஸம்ப₃ந்த₄த்தால் ஸம்ஸார நிலையில் ஏற்படுவது; இயற்கையில் ஆத்மஸ்வருபத்துக்கு அது கிடையாது. அவற்றை அனுப₄விக்கும் வல்லமை ஸம்ஸார நிலையில் போலே முக்திநிலையிலும் உண்டாகையாலே நித்யமானது என்று கருத்து.

बहिरन्तश्च भूतानामचरं चरमेव च ।
सूक्ष्मत्वात्तदविज्ञेयं दूरस्थं चान्तिके च तत् ॥ १५ ॥

15. ப₃ஹிரந்தஶ்ச பூ₄தாநாமசரம் சரமேவ ச ।
ஸூக்ஷ்மத்வாத் தத₃விஜ்ஞேயம் தூ₃ரஸ்த₂ம் சாந்திகே ச தத் ॥

பூ₄தாநாம் ப₃ஹி: அந்த: ச - பூ₄மி முதலான ஐம்பெரும் பூ₄தங்களை விட்டு வெளியே இருப்பதாகவும், அவற்றின் உள்ளே இருப்பதாகவும் உள்ளது; **அசரம் சரம் ஏவ ச** — (இயற்கையில்) அசையாததாய், (தே₃ஹத்தோடு கூடியிருக்கையில்) அசைவதாயிருப்பது; **ஸூக்ஷ்மத்வாத்** - மிகவும் நுண்ணியதாயிருக்கையால், **தத்** - அந்த ஆதம வஸ்து, **அவிஜ்ஞேயம்** - (தம் தே₃ஹத்திலிருந்த போதிலும் அந்த தே₃ஹத்தைக் காட்டிலும் வேறுபட்டதாக ஸம்ஸாரிகளால்) அறியத்தகாதது; **தத்** - அவ்வாதமவஸ்து, **தூ₃ரஸ்த₂ம் ச** — (அமானித்வம் முதலான கு₃ணங்களற்றவர்களுக்கும், அக்கு₃ணங்களுக்கு மாறான கு₃ணங்களை உடையவர்களுக்கும்) தம் தே₃ஹத்திலிருந்தபோதிலும் வெகு தூரத்திலுள்ளது, **தத்** - அதுவே, **அந்திகே ச** — (அமானித்வம் முதலான கு₃ணங்களையுடையவர்களுக்கு) அருகிலேயேயுள்ளது.

---

15. **பூதங்க ளுக்குள் புறம்புமாய்த் தானின்று**
மீதங் கியல்வதுமாய் மேவியே—போதத்து
நுண்ணிமையி னுன்மிகவு நோக்கரிதாய்த் தூரத்து
மண்ணிமையி னலருகு மாம்.

பூதங்களுக்கு உள் புறம்புமாய் - பூ₄மி முதலான ஐம்பெரும் பூ₄தங்களின் உள்ளே இருப்பதாகவும் அவற்றை விட்டு வெளியேயிருப்பதாகவும், **தான் நின்று மீது அங்கு இயல்வதுமாய்**—(இயற்கையில்) அசையாததாய், தே₃ஹத்தோடு கூடியிருக்கையில் அசைவதாய், **நுண்ணிமையினால்**, மிகவும் நுண்ணியதாயிருக்கையால், **மேவியே** - தம் ஶரீரத்

भा ॥ पृथिव्यादीनि भूतानि परित्यज्याशरीरो बहिर्वर्तते; तेषामन्तश्च वर्तते, * जक्षत् क्रीडन् रममाणः स्त्रीभिर्वा

தில் இருந்தபோதிலும், **போதத்து மிகவும் நோக்கரிதாய்** - (ஸம்ஸாரிகளால்) தம் ஶரீரத்தைக்காட்டிலும் வேறுபட்டதாக உள்ளபடி மிகவும் அறியததகாததாய், **தூரத்தும் ஆம்** - (அமாநித்வம் முதலான கு₃ணங்களற்றவர்களுக்கும் அக்கு₃ணங்களுக்கு மாறான கு₃ணங்களையுடையவர்களுக்கும் தம் ஶரீரத்திலிருந்தபோதிலும்) வெகுதூரத்திலுள்ளதாகும்; **அண்ணிமையினுல்** - (அமாநித்வம முதலான கு₃ணங்களையுடையவர்களின்) நெஞ்சுக்குக் காட்சியளிக்கையாலே, **அருகும் ஆம்** - (அவர்களுக்கு) அருகேயும் உள்ளது.

---

15. ஶாஸ்த்₃த₄ாத்மஸ்வரூபமானது பூ₄மி முதலான பூ₄தங்களுக்கு வெளியேயும் உள்ளும் உள்ளது என்றும், அசையாததாகவும அசைவதாகவும் உள்ளது என்றும், மிக நுண்ணியதாகையாலே ஸம்ஸாரிகளால் தே₃ஹத்தைக் காட்டிலும் வேறானதாகக் காணவொண்ணுததுஎன்றும், அமாநித்வம் முதலான குணங்கள் அற்றவர்களுக்கு வெகுதூரத்திலும், அக்குணங்களுள்ளவர்களுக்கு மிக அருகிலும் உள்ளது என்றும் கூறுகிறான், (ப₃ஹிரந்தஶ்ச பூ₄தாநாம்)முக்திநிலையில் ஆத்மஸ்வரூபமானது பூ₄மி முதலான ஐந்து பூ₄தங்களை விட்டு வெளியேறி, அந்த பூ₄தங்களாலான ஶரீரமற்றதாய், ப்ரக்ருதி மண்ட₃லத்துக்கு வெளியே இருக்கிறது. அந்த முக்தாத்மஸ்வரூபமே எம்பெருமானுடைய ஸங்கல்பத்துக்கு அனுகு₃ணமான தன் ஸங்கல்பத்தாலே இவ்வுலகில் ஶரீரங்களை எடுத்துக்கொள்ளும்போது, அந்த பூ₄தங்களுக்கு உள்ளேயும் இருக்கிறது. இப்படி ஶரீரத்தின் உள்ளே இருப்பது கர்மத்தால் ஏற்பட்டதல்ல,

"ஏஷ ஸம்ப்ரஸாத₃: அஸ்மாச்ச₂ரீராத் ஸமுத்த₂ாய பரஞ்ஜ்யோதிருபஸம்பத்₃ய ஸ்வேந ரூபேண அபி₄நிஷ்பத்₃யதே"

[சா₂ந் 8-12-2]

[இந்த ஜீவன் இந்த ஶரீரத்திலிருந்து கிளம்பி, பரஞ்சோதியான பரமாத்மாவை அடைந்து தன் ஸ்வரூபவிளக்கம் பெறுகிறான்] என்றும்,

यानैर्वा (छा. ८, १२. ३) इत्यादिश्रुतिसिद्धस्वच्छन्दवृत्तिषु ।

"ஸ ஸ்வராட்₃ப₄வதி" [சா₂ந்7-25:2]
[அந்த முக்தாத்மா கர்மத்துக்கு வசப்படாத ஸ்வதந்த்ரனாகிறான்] என்றும் கர்மவசப்படாதவனும் ப்ரக்ருதி மண்டலத்தைவிட்டுக் கிளம்பி, பரமபுருஷனையடைந்து ஸ்வரூபவிளக்கம் பெற்ற முக்தனுக்கன்றோ

"ஜக்ஷத் க்ரீட₃ந் ரமமாண: ஸ்த்ரீபி₄ர்வா யாநைர்வா" [சா₂ந். 8, 12, 3]
[முக்தாத்மா உண்பவனாய், ஸ்த்ரீகளைக்கொண்டும் வாஹனங்களைக் கொண்டும் விளையாடி இன்புறுபவனுமிருக்கிறான்] என்றும்,

"ஸ யதி₃ பித்ருலோககாமோ ப₄வதி
ஸங்கல்பாதே₃வாஸ்ய பிதர: ஸமுத்திஷ்ட₂ந்தி" [சா₂ந். 8, 2, 1]
[அந்த முக்தாத்மா பித்ரு ஸமூஹத்தை அடைய விருப்பினனாகில் ஸங்கல்பத்தாலேயே இவனுடைய பித்ருக்கள் மேலே வருகிறார்கள்] என்றும்,

"இமாந் லோகாந் காமாந்நீ காமரூப்யநுஸஞ்சரந்" [தை-ப்₄ருகு₃]
[எம்பெருமானுடைய கு₃ணங்களை உணவாகக்கொண்ட முக்தாத்மா விருப்பிய உருவுடன் இவ்வுலகங்களுக்கு எம்பெருமானைப் பின் தொடர்ந்து வருகிறான்] என்றும்

"ஸ ஏகதா₄ ப₄வதி த்ரிதா₄ ப₄வதி" [சா₂ந். 7, 26, 2]
[அந்த முக்தாத்மா ஒருபடியாகிறான்; மூன்றுபடியாகிறான்] என்றும் பல ஶரீரங்களை எடுத்துக்கொண்டு உப₄ய விபூ₄தியிலும் ஸஞ்சரிக்கும் பெருமை கூறப்படுகிறது. ஸ்வரூபத்தினால் விகாரமற்றிருக்கும் முக்தாத்ம ஸ்வரூபத்துக்கு இந்த ப்ரமாணங்களில் சொல்லப்பட்டபடி பலபடியாவதும், உண்பது முதலானவையும், பித்ரு ஸமூஹத்தை அடைவது முதலானவையும், ஶரீரங்களை எடுத்துக் கொண்டாலல்லது இயலாதன்றோ. இவனுடைய ஶரீரம் இவன் விருப்பப்படி ப்ராக்ருதஶரீரமாகவோ அப்ராக்ருதஶரீரமாகவோ ஆகலாமாகையால் ப்ராக்ருதமான அல்லது அப்ராக்ருதமான பூ₄தங்களின் உள்ளே இவன் இருக்கிறான் என்பதும் பொருந்துகிறது என்று கருத்து.

भा-अचरं चरमेव च-स्वभावतोऽचरं चरं च देहित्वे, सूक्ष्मत्वात् तदविज्ञेयम्-एवं सर्वशक्तियुक्तं सर्वज्ञं तदात्मतत्त्वमस्मिन् क्षेत्रे वर्तमान-मप्यतिसूक्ष्मत्वात् देहात् पृथक्त्वेन संसारिभिरविज्ञेयम्, दूरस्थं चान्तिके

(அசரம் சரமேவ ச) ஜீவாத்ம ஸ்வரூபமானது இயற்கையான முக்தி நிலையில் நடப்பது முதலான செயல்களைச் செய்யாததாகவும், தேஹத்தோடு கூடியிருக்கும் நிலையில் அவற்றைச் செய்வதாகவும் இருப்பது. ஸம்ஸார நிலையில் அசையாதனவும் அசைவனவுமான ஶரீரங்களை உடைத்தாயிருப்பதை இங்கு பொருளாகக்கொண்டால் அது ஶுத்தாத்ம ஸ்வரூபத்தின் தன்மைகளை விவரிக்கும் இந்த ப்ரகரணத்துக்குப் பொருந்தாது. ஆகையால், 'ஆத்ம ஸ்வரூபமானது பூதங்களுக்கு வெளியிலும் உள்ளேயும் இருக்கிறது' என்று முன் சொன்னதின் விளைவை இங்குக் கூறுவதாகக் கொள்ளுவதே பொருத்தம். முக்திநிலையில் ஶரீரமற்றிருக்கும்போது ஶரீரத்தால் ஏற்படும் நடப்பது முதலான செயல்களைச் செய்யாததாகவும், ஶரீரத்தோடு இருக்கும்போது அவற்றைச் செய்வதாகவும் இருக்கிறது என்று கருத்து. ஶரீரமற்றிருக்கும்போதும் ஸங்கல்பத்தால் இவனால் அசையமுடியுமாகையால் இங்கு 'அசரம்' என்று ஶரீரத்தால் செய்யும் நடப்பது முதலான செயல்களைச் செய்யாதது என்றே பொருள் படும். (ஸூக்ஷ்மத்வாத் தத் அவிஜ்ஞேயம்) அந்த ஆத்மவஸ்துவானது இந்த தேஹத்தில் இருந்தபோதிலும் மிக நுண்ணியதாயிருக்கையால் தேஹத்தைக்காட்டிலும் வேறுபடுத்தி ஸம்ஸாரிகளால் அறியத்தகாதது. (தத்) இயல்பான நிலையில் எல்லா ஶக்திகளையுமுடையதாய் எல்லாமறிந்ததான அந்த ஆத்மஸ்வரூபம்.(அவிஜ்ஞேயம்) அறியத்தகாதது. 'நான் நான்' என்று எப்போதுமறியப்படுவதாய், வெகுதூரத்தில் இல்லாமல் இந்த தேஹத்திலேயே இருப்பதான ஆத்ம ஸ்வரூபத்தை அறியத்தகாதது என்பது எப்படிப் பொருந்தும்? எனில்: தேஹத்திலும் வேறுபடுத்தி ஸம்ஸாரிகளால் அறியத்தகாததாயிருக்கையே இங்கு கருதப்படுகிறதாகையால் பொருந்தும். 'அஜ்ஞேயம்' என்று கூறுமல் 'அவிஜ்ஞேயம்' என்று கூறுகையாலே, 'தேஹத்தைக் காட்டிலும் பிரித்து அறியத்தகாதது'

च तत्—अमानित्वाद्युक्तगुणरहितानां विपरीतगुणानां पुंसां स्वदेहे वर्तमानमप्यतिदूरस्थम्, तथा अमानित्वादिगुणोपेतानां तदेवान्तिके वर्तते ॥ १५ ॥

என்னும் பொருள் விளங்குகிறது. இப்படி அறியத்தகாததாயிருக்கைக்குக் காரணத்தைச் சொல்லுகிறது — (ஸூக்ஷ்மத்வாத்) மிக நுண்ணியதாயிருக்கையால். பூ₄மி முதலானவற்றைக்காட்டிலும் நுண்ணியதாயிருந்தபோதிலும் வாயு முதலானவை பூ₄மிமுதலானவற்றிலிருந்து வேறுபடுத்தி அறியப்படுகின்றன. இந்த ஆத்மஸ்வரூபம் வாயு முதலானவற்றைக் காட்டிலும் மிகநுண்ணியதாயிருக்கையாலே தே₃ஹத்தைக்காட்டிலும் வேறுபடுத்தி அறியத்தகாததாயிருக்கிறது என்பதை "அதிஸூக்ஷ்மத்வாத்" என்னும் பா₄ஷ்யம் காட்டுகிறது. முக்தர்கள் ஆத்ம ஸ்வரூபத்தைப் பிரித்தறிய வல்லவர்களாகையால் அனைவராலும் ஆத்மஸ்வரூபம் பிரித்து அறியத்தகாதது என்று பொருள்கொள்ள முடியாது. அப்படிக்கொண்டால் ஆத்ம ஸ்வரூபத்தையறிவதற்கு யோக₃ாப்₄யாஸத்தை ஶாஸ்த்ரம் விதி₄த்திருப்பது பயனற்றதாகிவிடும். அதனாலேயே 'ஸம்ஸாரிகளால் பிரித்தறியத்தகாதது' என்று பா₄ஷ்யத்தில் பொருள்கொள்ளப்பட்டது. யோகி₃களுக்கும் முக்தர்களைப்போலே இடைவிடாமல் எப்போதும் மிகத்தெளிவாகப் பிரித்தறியமுடியாதாகையாலே ஸம்ஸாரிகள் என்னும் பத₃த்தில் அவர்களையும் சேர்க்கலாம்; அல்லது விரைவிலேயே முக்தியை அடையவிருக்கும் யோகி₃கள் முக்தப்ராயர்களேயாகையால் ஸம்ஸாரிபத₃ம் யோகி₃கள் தவிர்ந்த மற்ற ப₃த்₃த₄ர்களைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். (தூ₃ரஸ்த₂ம் ச அந்திகே ச தத்) அமாநித்வம் முதலான முன்சொல்லப்பட்ட ஆத்ம கு₃ணங்கள் இல்லாதவர்களுக்கும், அவற்றுக்கு நேர்மாறான கு₃ணங்களையுடையவர்களுக்கும் தம் தே₃ஹத்தில் இருந்தபோதிலும் இந்த ஆத்ம ஸ்வரூபம் எட்டாததாகையாலே வெகுதூ₃ரத்தில் இருப்பதேயாகும். அமாநித்வம் முதலான கு₃ணங்களையுடையவர்களுக்கு எளிதில் எட்டுவதாகையாலே அந்த ஆத்மஸ்வரூபமே அருகிலுள்ளதுமாகும். 'தூ₃ரத்திலும் இருப்பது அருகிலுமிருப்பது' என்று இது எல்லாவிடத்திலுமிருப்பதைச் சொல்லுவதாகக் கொள்ளலாமேயெனில்:

अविभक्तं च भूतेषु विभक्तमिव च स्थितम् ।
भूतभर्तृ च तज्ज्ञेयं ग्रसिष्णु प्रभविष्णु च ॥ १६

16. அவிப₄க்தம் ச பூ₄தேஷு விப₄க்தமிவ ச ஸ்தி₂தம் ।
பூ₄தப₄ர்த்ரு ச தத் ஜ்ஞேயம் க்₃ரஸிஷ்ணு
ப்ரப₄விஷ்ணு ச॥

தத் - அந்த ஆத்ம ஸ்வரூபம், **பூ₄தேஷு ச** - (தே₃வர் மனிதர் முதலான) எல்லா ஶரீரங்களிலும் (இருந்த போதிலும்), **அவிப₄க்தம்** - (அறிபவனுகவேயிருக்கையால்) வேறுபடாமலிருப்பது; (ஆயினும்), **விப₄க்தம் இவ ச ஸ்தி₂தம்** - (அறிவற்றவர்களுக்கு தே₃வர் முதலான) வேறு பாட்டை உடையது போலவும் இருப்பது; **பூ₄தப₄ர்த்ரு ச** - (தே₃வர் முதலான ஶரீரங்களாகச் சேர்ந்திருக்கும்) பூ₄தங்களை த₄ரிப்பதாகவும், **க்₃ரஸிஷ்ணு (ச)** - (பூ₄தங்களாலான அன்னம் முதலானவற்றை) விழுங்குவதாகவும், **ப்ரப₄விஷ்ணு ச** - (ரேதஸ், க₃ர்ப்ப₄ம் முதலான) பரிணமங்கள் உண்டாவதற்குக் காரணமாகவும், (இருப்பதால்), **ஜ்ஞேயம்** - (பூ₄தங்கள் முதலானவற்றைக் காட்டிலும் வேறுபட்டிருப்பதாக) அறியத்தக்கது.

"ஸர்வமாவ்ருத்ய திஷ்ட₂தி" (13) என்னுமிடத்திலேயே அவ்விஷயம் சொல்லப்பட்டிருக்கிறதாகையாலே அப்பொருள் இங்கு பொருந்தாது. ஆகையால், "மிக நுண்ணியதாகையாலே ஸம்ஸாரிகளால் ஆத்ம ஸ்வரூபம் அறியத்தகாததாயிருக்க, அதை அறியவேண்டும் என்று ஶாஸ்த்ரங்கள் விதி₄ப்பது எப்படிப்பொருந்தும்?" என்று மூன்றுவது பாத₃த்தின்மேல் ஐயமெழ. "முற்கூறிய கு₃ணங்கள் இல்லாத ஸம்ஸாரி களுக்கே அது அடியோடு எட்டாததேயொழிய அக்கு₃ணங்களை உடையவர்களுக்கு அது எட்டக்கூடியதே. அவர்களைக் குறித்து ஶாஸ்த்ரம் விதி₄க்கத்தட்டில்லை" என்று இங்கு ஸமாத₄ானம் கூறுவ தாகக்கொள்வதே பொருந்தும்.

16. **வேறுபா டற்றவது வேற்றுமைசேர் பூதத்து**
வேறுபா டுற்றதுபோன் மிக்கிருக்கும்—கூறுபா
டுற்றபொரு டான்பரிக்கு முண்ணுமுண் டாக்குமென
மற்றறியத் தக்கதது வாய்ந்து.

வேற்றுமைசேர் பூதத்து - (தே3வர் மனிதர் முதலான) வேறுபட்ட எல்லா தே3ஹங்களிலும் (இருந்தபோதிலும்), **வேறுபாடு அற்ற அது** - (அறிபவனுகவேயிருக்கையால்), வேறுபாடு இல்லாமலிருக்கும் அந்த ஆத்ம ஸ்வரூபம், **மிக்கு வேறுபாடு உற்றது போல் இருக்கும்** - (அறிவற்றவர்களுக்கு) தே3வர் முதலான மிகுந்த வேற்றுமைகளை உடையதுபோல இருக்கும; **மற்று** - மேலும், **கூறுபாடு உற்ற பொருள்தான் பரிக்கும் என** - (தே3வர் முதலான) வகைகளை உடைய சரீரங்களைத் தாங்கும் என்னும் காரணத்தாலும், **உண்ணும் என** - (பூ4தங்களாலான உணவு முதலானவற்றை) உண்ணும என்னும் காரணத்தாலும். **உண்டாக்கும் என** - ரேதஸ், க3ர்ப4ம் முதலான பரிணுமங்களை உண்டாக்கும் என்னும் காரணத்தாலும. **அது வாய்ந்து அறியத் தக்கது** - அந்த ஆத்மஸ்வரூபம் (ஶரீரங்கள் முதலானவற்றைக் காட்டிலும்) வேறுபட்டதாக அறியத்தக்கது.

---

16. எல்லா தே3ஹங்களிலும் ஒருபடிப்பட்டிருக்கும் ஆத்ம ஸ்வரூபம் பல காரணங்களால் ஶரீரம் முதலான அறிவற்ற பொருள்களைக் காட்டிலும் வேறுபட்டதாக அறியத்தக்கது என்கிருன். (அவிப4க்தம் ச பூ4தேஷு) பஞ்சபூ4த கார்யங்களான தே3வர் மனிதர் முதலான ஶரீரங்கள் அனைத்திலும் இருந்தபோதிலும், ஆத்ம ஸ்வரூபமானது அறிபவனுகவே இருக்கையால் வேறுபடாமலிருப்பது. தே3வர் முதலான ஶரீரங்களில் வேறுபாடு இருந்தபோதிலும், அந்த ஶரீரங்களிலுள்ள ஆத்மாக்கள் அனைவரும் க்ஷேத்ரமாகிற ஶரீரத்தை அறியும் க்ஷேத்ரஜ்ஞர்களாகவே இருக்கையால். ஒருவரோடொருவர் ஸ்வரூபத்தில் வேறுபாடற்றவர்கள் என்று கருத்து. (விப4க்தம் இவ ச ஸ்தி2தம்) அறிவற்றவர்களுக்குத் தம்

भा-देवमनुष्यादिभूतेषु सर्वत्र स्थितमात्मवस्तु वेदितृत्वैकाकारतया अविभक्तम्; अविदुषां देवाद्याकारेण अयं देवो मनुष्यः इति विभक्तमिव च स्थितम्; देवोऽहम्, मनुष्योऽहमिति देहसामानाधिकरण्येनानुसन्धीयमानमपि वेदितृत्वेन देहादर्थान्तरभूतं ज्ञातुं शक्यमिति आदावुक्तमेव * एतद्यो वेत्ति (१) इति; इदानीं

ஆத்மஸ்வரூபம் தோற்றுமல் ஶரீரமே தோற்றுகையாலே 'நான் தே3வன், நான் மனிதன்' என்று வேறுபாடுள்ளதுபோலே ஆத்மஸ்வரூபம் தோற்றுகிறது. 'இவ'ஶப்3த3த்தாலே இப்படித் தோற்றுவது மயக்கம் என்று உணர்த்தப்படுகிறது. ஆக ஶ்லோகத்தின் முற்பாதியால்

"பண்டி3தா: ஸமத3ர்ஶிந:" [5-18]

என்று முன்னமே அறிவிக்கப்பட்ட பரிஶுத்3த4ாத்மஸ்வரூபங்களின் ஸாம்யம் சொல்லப்பட்டது. இனி பிற்பாதியால் பல காரணங்களால் இந்த ஆத்மஸ்வரூபம் தே3ஹம் முதலான அறிவற்ற பொருள்களைக் காட்டிலும் வேறுபட்டதாக அறியத்தக்கது என்கிறான். இவ்வத்4யாயத்தின் தொடக்கத்தில் "ஏதத்3யோ வேத்தி" என்று 'நான் தே3வன், நான் மனிதன்' என தே3ஹத்தோடு ஒன்றாக அநுஸந்தி4க்கப்பட்ட போதிலும் ஆத்மாவானது இந்த தே3ஹத்தை அறிபவனாகையாலே தே3ஹத்தைக்காட்டிலும் வேறுபட்டவனாக அறியத்தக்கவன் என்று கூறப்பட்டது. இனி இங்கு வேறு சில காரணங்களாலும் தே3ஹத்தைக் காட்டிலும் வேறுபட்டவனாக அறியத்தக்கவன் என்று காட்டுகிறான் (பூ4தப4ர்த்ரு ச தத் ஜ்ஞேயம்) தே3ஹரூபமாகக் கூடியிருக்கும் பூ4மி முதலான பஞ்சபூ4தங்களையும் த4ரிக்கிறதாகையாலே இந்த ஆத்மஸ்வரூபமானது தன்னால் த4ரிக்கப்படும் பூ4தங்களைக் காட்டிலும் வேறுபட்டதாக அறியத்தக்கது. இது ஜீவாத்மஸ்வரூபத்தைப்பற்றிய ப்ரகரணமாகையாலே 'பூ4தப4ர்த்ரு' முதலான பத3ங்கள் பரமாத்மாவைக் குறிக்கமுடியாது. முக்தஸ்வரூபத்திற்கு எல்லாப் பொருள்களையும் த4ரிக்கை முதலான பெருமைகள் இல்லாமையாலே, இங்கு பூ4தஶப்3த3ம் அசித்தான பஞ்சபூ4தங்களை; அதிலும் க்ஷேத்ரப்ரகரணமாகையாலே அவற்றின் விகாரமான

प्रकारान्तरैश्च देहादर्थान्तरत्वेन ज्ञातुं शक्यमित्याह-भूतभर्तृ चेति । भूतानां पृथिव्यादीनां देहरूपेण संहतानां यद्भर्तृ तद्भर्तृभ्यो भूतेभ्योऽर्थान्तरं ज्ञेयम्, अर्थान्तरमिति ज्ञातुं शक्यमित्यर्थः । तथा ग्रसिष्णु—अन्नादीनां भौतिकानां ग्रसिष्णु, ग्रस्यमानेभ्यो भूतेभ्यो ग्रसितृत्वेनार्थान्तरभूतमिति ज्ञातुं शक्यम्, प्रभविष्णु च--प्रभवहेतुश्च, ग्रस्तानामन्नादीनामाकारान्तरेण परिणतानां प्रभवहेतुः, तेभ्योऽर्थान्तरमिति

தே3வர் முதலான தே3ஹங்களைக் குறிக்கிறதென்றே கொள்ள வேண்டும்.

"ஜ்ஞேயம் யத் தத் ப்ரவக்ஷ்யாமி" [12]

என்று ப்ராப்யமான ஆத்ம ஸ்வரூபத்தைச் சொல்லத்தொடங்கி இங்கு அதைச் சொல்லிவருகையில் 'ஜ்ஞேயம்' என்னும் பத3த்தை இடுகையாலே, அதைக்காட்டிலும் இதற்கு வேறுபொருளேயாக வேண்டும். ஆகையால் 'பூ4தங்களை த4ரிக்கும் ஆத்ம ஸ்வரூபம் த4ரிக்கப்படும் பூ4தங்களைக்காட்டிலும் வேறுபட்டதாக அறியத்தக்கது' என்று இங்கு பொருள்கொள்வதே தக்கது. (க்3ரஸிஷ்ணு ச தத் ஜ்ஞேயம்) அவ்வண்ணமே, 'அந்தப் பஞ்சபூ4தங்களிலிருந்து தோன்றிய உணவு நீர் முதலானவற்றை உட்கொள்ளும் அந்த ஆத்ம ஸ்வரூபம், உட்கொள்ளப்படும் அவற்றைக் காட்டிலும் வேறுபட்டதாக அறியத்தக்கது' என்று இங்கு பொருள்கொள்வதே தக்கது. (ப்ரப4விஷ்ணு ச தத் ஜ்ஞேயம்) அவ்வண்ணமே 'உட்கொள்ளப்படும் அந்த நீர் முதலானவற்றின் பரிணாமமான ரேதஸ் (வீர்யம்), க3ர்ப்ப4ம் முதலானவற்றை உண்டாக்கும் அந்த ஆத்மஸ்வரூபம், உண்டாக்கப்படும் அவற்றைக் காட்டிலும் வேறுபட்டதாக அறியத்தக்கது' என்று இங்கு பொருள்கொள்வதே தக்கது. பரிணாமத்தைக் குறிக்கும் ப்ரப4வஶப்3த3ம் இங்கு முற்கூறிய உணவு நீர் முதலானவற்றின் பரிணாமமான ரேதஸ், க3ர்ப்ப4ம், மலம், மூத்ரம் முதலானவற்றைக்குறிக்கிறது; ப்ரப4விஷ்ணு ஶப்3த3ம் 'அப்பரிணாமங்களுக்குக் காரணமாயிருப்பது' என்று பொருள்படுகிறது. ஆத்மஸ்வரூபம்

ज्ञातुं शक्यमित्यर्थः । मृतशरीरे ग्रसनप्रभवादीनामदर्शनाच्च भूतसंघातरूपं क्षेत्रं ग्रसनप्रभवभरणहेतुरिति निश्चीयते ॥ १६ ॥

தே3ஹம் முதலான அசேதனப் பொருள்களைக்காட்டிலும் வேறுபட்டது என்று விளக்கும் ப்ரகரணமாகையாலே 'பூ4தப4ர்த்ரு' முதலான மூன்று பத3ங்களுக்கும் இப்படிப் பொருள்கொள்வதே உசிதம் என்று கண்டுகொள்வது. இங்கு பின்வருமாறு ஓர் ஆக்ஷேபம் எழுகிறது:— "உணவை உட்கொள்ளுதலும், ரேதஸ் முதலான பரிணாமங்களுக்குக் காரணமாயிருப்பதும் ஶரீரம் செய்வதாகவன்றோ காணப்படுகிறது; தே3ஹமும் அதன் அவயவங்களும் இவற்றைச் செய்ய முடியுமேயொழிய அவயவமற்ற ஆத்மா இங்கு பொருள்கொண்டதுபோல் இவற்றைச் செய்யமுடியாதே" என்பது அவ்வாக்ஷேபம். இதற்கு ஸமாதா4னம் பின்வருமாறு:—"உட்கொள்ளுதலைச் செய்வதும் பரிணாமஹேதுவாயிருப்பதுமாகக் காணப்படும் தே3ஹம் ஓராத்மாவுக்கு ஶரீரமாயிருந்துகொண்டு அவற்றைச் செய்கிறதா, அல்லது வெறும் பஞ்சபூ4தங்களின் கூட்டாயிருந்துகொண்டு அவற்றைச் செய்கிறதா என்று ஆராய்ந்தால், செத்துப்போனபின் ஶரீரம் உட்கொள்ளுதல் முதலானவற்றைச் செய்யாமையாலே, வெறும் பஞ்சபூ4தங்களின் கூட்டாயிருந்து கொண்டு ஶரீரம் அவற்றைச் செய்யவில்லையென்றும், ஓர் ஆத்மா தன்னை த4ரித்துக் கொண்டிருக்கும்போதே அவற்றைச் செய்கிறது என்றும் விளங்குகிறது. இப்படி ஆத்மாவை எதிர்பார்த்தே உட்கொள்ளுதல் முதலானவற்றை ஶரீரம் செய்வதையிட்டு இங்கு ஆத்மா அவற்றைச் செய்வதாகக் கூறப்படுகிறது" என்பது ஸமாதா4னம். செத்துப்போன ஶரீரத்திற்கு ஏற்படும் வேறுசில பரிணாமங்களுக்கு ஆத்மா காரணமல்லாவிடினும், ஜீவனுடைய அறிவை எதிர்பார்க்கும் ஶரீரதா4ரணம், உணவு முதலானவற்றை உட்கொள்ளுதல், அவற்றின் பரிணாமமான ரேதஸ் க3ர்ப்ப4ம் முதலானவற்றுக்குக் காரணமாயிருத்தல் முதலானவை செத்துப்போன ஶரீரத்தில் இல்லாமையால், வெறும் பஞ்சபூ4தக்கூட்டான ஶரீரம் இவற்றுக்குக்காரணமல்லவென்றும், ஶரீரத்தை த4ரிக்கும் ஆத்மாவே இவற்றுக்குக் காரணம் என்றும் விளங்குகிறது என்று கருத்து. ஆத்மாவால் த4ரிக்கப்படும் ஶரீரம், செத்துபோன ஶரீரம் ஆகிய இரண்டின் பரிணாமங்களுக்கும் ஈஶ்வரன் பொதுவான காரணம் என்பதும் இங்கு குறிக்கொள்ளத்தக்கது.

ज्योतिषामपि तज्ज्योतिस्तमसः परमुच्यते ।
ज्ञानं ज्ञेयं ज्ञानगम्यं हृदि सर्वस्य विष्ठितम् ॥ १७

17. ஜ்யோதிஷாமபி தத் ஜ்யோதி: தமஸ: பரமுச்யதே ।
ஜ்ஞாநம் ஜ்ஞேயம் ஜ்ஞாநக₃ம்யம் ஹ்ருதி₃ ஸர்வஸ்ய
விஷ்டி₂தம ||

தத் - அத்த ஆத்மா, **ஜ்யோதிஷாம் அபி** - (விளக்கு ஸூர்யன் முதலான) சோதிகளுக்கும், **ஜ்யோதி:** - சோதியாய் (அவற்றை விளங்கச்செய்வதாய்) இருப்பது; **தமஸ:** - மூலப்ரக்ருதிக்கு, **பரம்** - மேலானதாக, **உச்யதே** - (அவ்வாத்மா) சொல்லப்படுகிறது; **ஜ்ஞாநம் ஜ்ஞேயம்** - (அவ்வாத்மா) ஞானத்தையே ஸ்வரூபமாக உடையதாக அறியத் தக்கது. **ஜ்ஞாநக₃ம்யம்** - (அமாநித்வம் முதலான) ஜ்ஞான ஸாத₄நங்களால் அடையப்படுவது; **ஸர்வஸ்ய** - மனிதர் முதலான ஜீவர்களுடைய, **ஹ்ருதி₃** - ஹ்ருத₃யத்தில், **விஷ்டி₂தம்** - இருப்பது.

இப்படி ஜீவேஶ்வரர்கள் அசேதன பரிணாமங்களுக்குக் காரணம் என்று பொருள்கொள்ள இடமிருக்கும்போது "இவை பழுதையைப் பாம்பு என்று நினைப்பதுபோலே பொய்யானவை" என்று ஶங்கரர் பொருள் கொண்டது வேத₃ஶாஸ்த்ரங்களுக்கு முரணான கற்பனையானதையாலே அநாத₃ரிக்கத்தக்கது. ஆக, எல்லா தே₃ஹங்களிலும் ஒருபடிப்பட்டிருக்கும் ஆத்மா தே₃ஹம் முதலான அசேதனப் பொருள்களை த₄ரிப்பதாய், அநுப₄விப்பதாய், விகாரமடையச் செய்வதாயிருக்கையால், த₄ரிக்கப்படுபவையாய், அநுப₄விக்கப்படுபவையாய், விகாரமடைவனவாயிருக்கும் அசேதனப் பொருள்களைக் காட்டிலும் வேறுபட்டது என்று சொல்லப்பட்டதாயிற்று. 16.

**17. சோதிகளின் மிக்கதுதான் சோதியாய்த் தொக்கதமம்
மீதுபர மென்னுமுரை மேவுமதாய்ப்—போதமெனத்
தானறிய லாவறிவாற் சாருமதா யாவர்க்கு
மூனமற வுள்ளிருக்கு முற்று.**

அதுதான் - அந்த ஆத்மா, **சோதிகளின் மிக்க சோதியாய்** - (விளக்கு ஸூர்யன் முதலான) சோதிகளையும் விளங்கச்செய்வதாகையாலே அவற்றிலும் மிக்க சோதியாயிருப்பதாய், **தொக்க தமம் மீது பரம் என்னும் உரை மேவுமதாய்**-எங்கும் வியாபித்துள்ள மூலப்ரக்ருதியைக் காட்டிலும் மேலானதென்று சொல்லப்படுவதாய், **போதம் என தான் அறியலா**-ஞானத்தையே இயல்வாகவுடையது என்று அறியத்தக்கதாய், **அறிவால் சாருமதாய்** - (அமாநித்வம் முதலான) ஜ்ஞானஸாத₄னங்களால் அடையப்படுவதாய். **யாவர்க்கும் உள்** - மனிதர் முதலான ஜீவர்களுடைய ஹ்ருத₃யத்திலே, **ஊனமற உற்று இருக்கும்** - குறைவில்லாமல் பொருந்தி இருக்கும்.

---

17. ஜ்ஞானமொன்றையே ஸ்வரூபமாகக்கொண்ட ஆத்ம ஸ்வரூபம் அசித்தான சோதிகளுக்கும் சோதியாய், மூலப்ரக்ருதியைக் காட்டிலும் வேறுபட்டதாய், ஜ்ஞான ஸாத₄னங்களால் அடையத்தக்கதாய், அசித்தான ஹ்ருத₃யத்தில் இருப்பதாயிருக்கையாலே அசித்தைக் காட்டிலும் வேறுபட்டது என்கிறான்- (தத்) அந்த ஆத்மஸ்வரூபம். (ஜ்யோதிஷாமபி ஜ்யோதி:) மற்ற பொருள்களை வெளிப்படுத்தும் விளக்கு, ஸூர்யன், ரத்னம் முதலான சோதிப் பொருள்களையும் வெளிப்படுத்தும் சோதியாய் இருப்பது. அணுவாய், ஸ்வயம்ப்ரகாஶமாயிருக்கும் ஆத்மஸ்வரூபம் வெளியிலிருக்கும் மற்ற அசேதனப்பொருள்களை எப்படி வெளிப்படுத்தமுடியும்? எனில்: விளக்கு ஸூர்யன் முதலானவை எப்படி வெளியிலிருக்கும் மற்ற பொருள்களோடு தொடர்புகொள்ளும் தம்முடைய ஒளிமயமான கிரணங்க

भा. ज्योतिषाम् — दीपादित्यमणिप्रभृतीनामपि तदेव ज्योतिः- प्रकाशकम्, दीपादित्यादीनामप्यात्मप्रभारूपं ज्ञानमेव प्रकाशकम्, दीपादयस्तु विषयेन्द्रियसन्निकर्षविरोधिसंतमसनिरसनमात्रं कुर्वते;

ளாலே அப்பொருள்களை வெளிப்படுத்துகின்றனவோ, அப்படியே இந்த ஆத்ம ஸ்வரூபமும் தனக்கு த₄ர்மமாயிருக்கும் ஜ்ஞானத்தி னாலே வெளிப்பொருள்களோடு தொடர்புகொண்டு அவற்றை வெளிப்படுத்துகிறது என்று அறியத்தக்கது. உண்மையில் விளக்கு ஸூர்யன் முதலான அசேதனச் சோதிப்பொருள்களையும் ஆத்மா வின் ஜ்ஞான ஒளியாயிருக்கும் த₄ர்மபூ₄த ஜ்ஞானமேயன்றோ வெளிப்படுத்துகிறது. அத்தகைய ப்ரகாஶகத்வம் (வெளிப்படுத்தும் தன்மை) உண்மையில் விளக்கு முதலானவற்றுக்கு இல்லையே. கண் முதலானவை வெளிபபொருள்களைக் காணும் காட்சிக்குத் தடையாயிருக்கும் இருட்டைப் போக்குவதன் மூலமே விளக்கு முத லானவை அப்பொருள்களை வெளிப்படுத்துபவை என்று சொல்லப் படுகின்றன. (தமஸ:பரமுச்யதே) தமஸ் எனப்படும் மூலப்ரக்ருதியைக் காட்டிலும் வேறுபட்டதாக இந்த ஆத்ம ஸ்வரூபம் கூறப்படுகிறது. சோதியைப்பற்றிப் பேசிவிட்டு அடுத்தபடி கூறப்படும் தமஶ்ஶப்₃த₃ம் சோதிக்கு விரோதி₄யாக உலகில் ப்ரஸித்₃த₄மான இருட்டைக் குறிப்பதன்றோ உசிதம்? எனில்: 'இருட்டைக்காட்டிலும் வேறுபட்டது ஆத்மஸ்வரூபம்' என்று இங்கு கூறுவதில் பயனில்லை அசேதனப் பொருள்களுக்கெல்லாம் மூலமான ப்ரக்ருதியைக் காட்டிலும் வேறு பட்டது ஆத்மஸ்வரூபம் என்னும் விஷயம் இங்கு அவஶ்யம் சொல்ல வேண்டியதொன்று. ஆகையாலே ஶ்ருதிஸ்ம்ருதிகளில் தமஶ் ஶப்₃த₃த்தாலே பல இடங்களில் சொல்லப்படும் மூலப்ரக்ருதியை இந்த ஶப்₃த₃ம் குறிக்கிறது என்று கொள்வதே பொருத்தம். ''யஸ்ய தம: ஶரீரம்'' (ப்₃ருஹ 5-7-13) (எந்தப் பரமாத்மாவுக்கு தமஸ் என்னும மூலப்ரக்ருதி ஶரீரமோ) தம ஆஸீத் தமஸா கூ₃ட₄ மக்₃ரே ப்ரகேதம'' [யஜு அஷ்டக 2-8-9-4] [ப்ரளய காலத்தில் தமஸ்ஸெனப்படும் மூலப்ரக்ருதியே இருந்தது. அந்த மூலப்ரக்ருதியால் பரப்பொருள்மறைக்கப்பட்டிருந்தது] ''யதா₃ தம: தந்ந தி₃வா ந ராத்ரி:''. [ஶ்வே 4-18] [எந்த ப்ரளயகாலத்தில் இரவு பகல் முதலான எதுவு

तावन्मात्रेण तेषां प्रकाशकत्वम्। तमसः परमुच्यते — तमश्शब्दः सूक्ष्मावस्थप्रकृतिवचनः; प्रकृतेः परमुच्यत इत्यर्थः। अतो ज्ञानं ज्ञेयम्-

---

மில்லையோ, தமஸ் எனப்படும் மூலப்ரக்ருதிமாத்திரமிருந்ததோ] "தம: பரே தே₃வ ஏகீ ப₄வதி" [ஸுபா₃ால 2] [தமஸ் எனப்படும் மூல ப்ரக்ருதி பரமாத்மாவிடம் ஒன்றுகிறது.] "ஆஸீதி₃த₃ம் தமோபூ₄தம்", [மனு 1-6] [இவ்வுலகனைத்தும் ப்ரளயகாலத்தில் தமஸ் எனப்படும் மூலப்ரக்ருதியாகவே இருந்தது] முதலான ஶ்ருதி ஸ்ம்ருதிகளாலே தமஶ்ஶப்₃த₃த்தாலே மூலப்ரக்ருதி சொல்லப்பட்டதன்றோ. (தமஸ:பரம்) மூலப்ரக்ருதியைக் காட்டிலும் வேறுபட்டது ஆத்மஸ்வரூபம் என்று கருத்து. மூலப்ரக்ருதியை அனுப₄விப்பதாகையாலே அதைக்காட்டிலும் முக்₂யமானது என்றும் பொருள் கொள்ளலாம். "அபரேயம் இதஸ்த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்₃தி₄ மே பராம்" [கீ₃தை-5] என்று மூலப்ரக்ருதியைக் காட்டிலும் ஜீவன் மேலானதாக முன்னமே கூறப்பட்டதன்றோ. (தமஸ:பரம் உச்யதே) "நிர்கு₃ண: ப்ரக்ருதே: பர:" [வி, பு-2-14-29] [ஸத்வ ரஜஸ் தமோகு₃ணங்களற்றதாய், ப்ரக்ருதியைக்காட்டிலும் வேறுபட்டதாயிருப்பது ஆத்மஸ்வரூபம்] முதலான ஶாஸ்த்ரங்களில் இப்படிக் கூறப்படுகிறது என்று கருத்து. ஆக, ஶ்லோகத்தின் முற்பாதியிலே அசேதனமான எல்லாப்பொருள்களைக் காட்டிலும் வேறுபட்டது ஆத்மஸ்வரூபம் என்று கூறப்பட்டதாயிற்று. இனிப் பிற்பாதியாலே அவ்வாத்மஸ்வரூபத்தின் தனிப் பெருமைகள் சிலவற்றைக் காட்டுகிறான். (ஜ்ஞாநம் ஜ்ஞேயம்) இப்படி அசித்தைக்காட்டிலும் வேறுபட்டதாகையாலே ஜ்ஞானத்தையே ஸ்வரூப நிரூபக த₄ர்மமாகக் கொண்டதாக அவ்வாத்ம ஸ்வரூபம் அறியத்தக்கது. சென்ற ஶ்லோகத்திலுள்ள ஜ்ஞேயபத₃ம்போலே இங்குள்ள ஜ்ஞேயபத₃மும் ஆத்மஸ்வரூபம் அசித்தைக் காட்டிலும் வேறுபட்டதாய், ஜ்ஞானஸ்வரூபமாயிருப்பது என்பதைக் கூறுகிறது என்று கண்டுகொள்வது. இல்லாவிடில் "ஜ்ஞேயம் யத் தத் ப்ரவக்ஷ்யாமி" என்று பன்னிரண்டாம் ஶ்லோகத்தில் சொன்ன

ज्ञानैकाकारमिति ज्ञेयम् । तच्च ज्ञानगम्यम् - अमानित्वादिभिर्ज्ञान-साधनैरुक्तैः प्राप्यमित्यर्थः । हृदि सर्वस्य विष्ठितम् - सर्वस्य मनुष्यादेः हृदि विशेषेणावस्थितम् - सन्निहितम् ॥ १७ ॥

தோடு புநருக்தி வரும். (ஜ்ஞாநக$_3$ம்யம்) அவ்வாத்மஸ்வரூபம் ஜ்ஞாநஸாத$_4$நங்களாக முன் கூறப்பட்ட 'அமாநித்வம்' முதலான கு$_3$ணங்களாலே அடையத்தக்கது. "ஜ்ஞாநக$_3$ம்யம்" என்றதற்கு 'ஞானத்தால் அறியத்தக்கது" என்று பொருள் கூறலாமே எனில்: எல்லாப் பதா$_2$ர்த்த$_2$ங்களுக்கும் பொதுவான இவ்வர்த்த$_2$த்தை இங்கு கூறுவதில் சிறப்பான பயனில்லாமையாலும், 'ஜ்ஞேயம்' [ஜ்ஞாநத்தால் அறியத்தக்கது] என்று கூறியதோடு புநருக்தி ஏற்படுகையாலும், "க$_3$ம்யம்" என்னும் பத$_3$த்துக்கு "அறியத்தக்கது" என்னும் பொருளைக் காட்டிலும் "அடையத்தக்கது" என்னும் பொருளிலேயே மிகுந்த ப்ரஸித்$_3$தி$_4$ உள்ளதாகையாலும் பதினேராவது ஶ்லோகத்திற்குப்போலே ஜ்ஞாந ஶப்$_3$த$_3$த்திற்குக் கரணவ்யுத்பத்தியாலே ஜ்ஞாநஸாத$_4$நம் என்று பொருள் கொண்டு, ஜ்ஞாநஸாத$_4$னங்களான 'அமாநித்வம்' முதலான கு$_3$ணங்களால் அடையத்தக்கது என்று பொருள்கொள்வதே தக்கது. (ஹ்ருதி$_3$ ஸர்வஸ்ய விஷ்டி$_2$தம்) மனுஷ்யர் முதலான அனைவரது ஶரீரங்களிலும் ஹ்ருத$_3$யத்திலே சிறப்பாக வஸிக்கிறது. கர்மப$_2$லன்களை அனுப$_4$வித்துக்கொண்டு வஸிப்பதே இங்கு 'விஷ்டி$_2$தம்' என்று சிறப்பான வாஸமாகக் கூறப்படுகிறது. அல்லது 'ஆத்மாவின் அணுஸ்வரூபம் ஹ்ருத$_3$யத்தில் இருக்கிறது; மற்ற அவயவங்களோடு த$_4$ர்மபூ$_4$த ஜ்ஞானத்தாலே ஆத்மா தொடர்புகொள்கிறதேயொழிய நேரே இருப்பதில்லை' என்பதைக்கருதி "ஹ்ருதி$_3$ விஷ்டி$_2$தம்" [ஹ்ருத$_3$யத்தில் சிறப்பாக இருக்கிறது] என்று கூறுவதாகக் கொள்ளலாம். ஸ்தி$_2$திஶப்$_3$த$_3$ம் வஸிப்பதைக் கூறுவதாயினும் ஹ்ருத$_3$யம் ஆத்மாவுக்கு ஆதா$_4$ரமாயில்லாமையால் இங்கு "ஆத்மா ஹ்ருத$_3$யத்தில் உள்ளது" என்றே பொருள் கொள்ளவேண்டும். அனைவருடைய ஹ்ருத$_3$யத்திலும் ஆத்மா உள்ளது என்று இங்கு கூறியது "எல்லா வீடுகளிலும் நெல் உள்ளது" என்னும் ப்ரயோக$_3$ம் போன்றதாகையாலே, அந்தந்த ஆத்மஸ்வரூபம் அந்தந்த உடல்களின் ஹ்ருத$_3$யத்தில் உள்ளது என்றே பொருள்கொள்ள வேண்டும். (17)

इति क्षेत्रं तथा ज्ञानं ज्ञेयं चोक्तं समासतः ।
मद्भक्त एतद्विज्ञाय मद्भावायोपपद्यते ॥ १८

18. **இதி க்ஷேத்ரம் தத₂ா ஜ்ஞாநம் ஜ்ஞேயம் சோக்தம் ஸமாஸத꞉ ।**
மத்₃ப₄க்த ஏதத்₃ விஜ்ஞாய மத்₃ப₄ாவாயோபபத்₃யதே ॥

இதி - இவ்வண்ணமாக, **க்ஷேத்ரம்** - 'க்ஷேத்ரம்' எனப் படும ஶரீரமும், **தத₂ா ஜ்ஞாநம்** - ஆத்ம ஜ்ஞாந ஸாத₄னங் களும், **ஜ்ஞேயம்** - அறியத்தக்கதான ஆத்ம ஸ்வரூபமும், **ஸமாஸத꞉ உக்தம்** - சுருக்கமாகச்சொல்லப்பட்டது. **மத்₃ ப₄க்த꞉** - எனது ப₄க்தன், **ஏதத்** - இம் மூன்றையும், **விஜ் ஞாய** - உள்ளபடி அறிந்து, **மத்₃ப₄ாவாய உபபத்₃யதே** - என்னைப்போல் ஸம்ஸாரத்தோடு தொடர்பற்றவனுவ தற்குத் தகுதிபெறுகிருன்.

---

18. **இப்படியாற் கேத்திரமு ஞானத் தியல்வகையு**
மெய்ப்படியா ஞேய வியப்பதுவுந்—தப்பறவே
யரன்றிரளச் சொன்னேனென் பத்தனு யீதறிந்து
தான்றிகழ்ந் தென்மயனுஞ் சார்ந்து.

இப்படியால் - இவ்வண்ணமாக, **கேத்திரமும்** - க்ஷேத்ரம் என்படும ஶரீரமும், **ஞானத்து இயல் வகையும்** — ஆத்ம ஜ்ஞாந ஸாத₄னங்களும, **மெய்ப்படியாம் ஞேய வியப் பதுவும்** - அறியத்தக்க ஆதமஸ்வரூபத்தின் உண்மையான தனமையும், **தப்பு அறவே** - தவறில்லாமல், **யான்** - நான், **திரளச் சொன்னேன்** - சுருக்கமாகச் சொன்னேன், **என் பத்தனுய்** - எனக்கு ப₄க்தனுயிருப்பவன், **ஈது அறிந்து** - இம் மூன்றின் உண்மையையுமறிந்து, **தான் சார்ந்து திகழ்ந்து என்மயனும்** - என்னைப்போல் தானும் ஸம்ஸாரத் தோடு தொடர்பற்றவனுவதற்குத் தகுதி பெறுகிருன்.

भा- एवं * महाभूतान्यहङ्कारः (५) इत्यादिना * संघात श्चेतनाधृतिरित्यन्तेन क्षेत्रतत्त्वं समासेनोक्तम्। * अमानित्वम् (७) इत्यादिना * तत्त्वज्ञानार्थचिन्तनमित्यन्तेन ज्ञातव्यस्यात्मतत्त्वस्य ज्ञान साधनमुक्तम्। * अनादि मत्परम् (१२) इत्यादिना * हृदि सर्वस्य विष्ठितमित्यन्तेन ज्ञेयस्य क्षेत्रज्ञस्य याथात्म्यं च संक्षेपेणोक्तम्; मद्भक्तः एतत् क्षेत्रयाथात्म्यम्, क्षेत्राद्विविक्तात्मस्वरूपावाप्त्युपाययाथात्म्यम्, क्षेत्रज्ञयाथात्म्यं च विज्ञाय, मद्भावायोपपद्यते मम यो भावः- स्वभावः, असंसारित्वम्; असंसारित्वप्राप्तये उपपन्नोभवतीत्यर्थः ॥१८॥

---

18. "தத் ஸமாஸேந மே ஶ்ருணு" (3) என்று தொடங்கியபடி க்ஷேத்ரத்தையும், ஜ்ஞாநஸாத4னங்களையும், ஆத்மஸ்வரூபத்தையும் பற்றி இதுவரையில் சுருக்கமாகச் சொல்லி முடித்து, இதை அறிந்தவனுக்குப் ப2லம் சொல்லுகிருன் இந்த ஶ்லோகத்தில், (இதி க்ஷேத்ரம் ஸமாஸத: உக்தம்) "மஹாபூ4தாந்யஹங்கார:" என்று தொடங்கி "ஸங்க4ாத: சேதநாத்4ருதி:" என்பதீருக ஐந்தாவது ஶ்லோகத்தில் 'க்ஷேத்ரம்' எனப்படும் ஶரீரத்தைப் பற்றிய உண்மையறிவு சுருக்கமாகச் சொல்லப்பட்டது. (தத2ா ஜ்ஞாநம் ஸமாஸத: உக்தம்) "அமாநித்வம்" (7) என்று தொடங்கி "தத்த்வ ஜ்ஞாநார்த்த2 சிந்தநம்" (11) என்பதீருக அறியத்தக்க ஆத்மதத்வத்தை அடைவதற்கு ஸாத4னமான அமாநித்வம் முதலான கு3ணங்களும் சுருக்கமாகக் கூறப்பட்டன, (ஜ்ஞேயம் ச ஸமாஸத: உக்தம்) "அநாதி3 மத்பரம்" (12) என்று தொடங்கி "ஹ்ருதி3 ஸர்வஸ்ய விஷ்டி2தம்" (17) என்பதீருக அறியத்தக்க ஆத்மஸ்வரூபத்தைப் பற்றிய உண்மையறிவு சுருக்கமாக உரைக்கப்பட்டது, (மத்3ப4க்த ஏதத்3 விஜ்ஞாய) என்னிடம் ப4க்தியுடையவனாய், (1) க்ஷேத்ரத்தைப்பற்றியும், (2) க்ஷேத்ரத்தைக்காட்டிலும் வேறுபட்ட ஆத்மஸ்வரூபத்தை அடைவதற்கு உபாயத்தைப்பற்றியும், (3) க்ஷேத்ரஜ்ஞனகிற ஜீவாத்மாவைப்பற்றியும் என்ருல் இதுவரை கூறப்பட்ட இம்மூன்று உண்மையறிவுகளை அறிந்து, 'ஏதத்' என்னும் ஶப்3த3ம் ஶ்லோகத்தின் முற்பாதியில் சொல்லப்பட்ட இம்மூன்றையே

भा ॥ अथात्यन्तविविक्तस्वभावयोः प्रकृत्यात्मनोस्संसर्गस्याना-दित्व संसृष्टयोर्द्वयोः कार्यभेदस्संसर्गहेतुश्चोच्यते—

प्रकृतिं पुरुषं चैव विद्ध्यनादी उभावपि।
विकारांश्च गुणांश्चैव विद्धि प्रकृतिसंभवान् ॥ १९.

19. ப்ரக்ருதிம் புருஷம் சைவ வித்3த்4யநாதீ3 உப4ாவபி ।
விகாராம்ஶ்ச கு3ணாம்ஶ்சைவ வித்3தி4 ப்ரக்ருதி
ஸம்ப4வாந் ॥

ப்ரக்ருதிம்ச-மூலப்ரகருதியும், **புருஷம் அபி உபௌ4 ஏவ**-ஜீவாத்மாவுமாகிற இரண்டையுமே. **அநாதீ3 வித்3தி4**-அனுதியாய்ச் சேர்ந்திருப்பவை என்று அறிவாயாக, **விகாராந் ச**-(ஸம்ஸாரப3ந்த4ததுக்குக் காரணமான இச்சை, த்3வேஷம முதலான) விகாரங்களும், **கு3ணாந் ச ஏவ** -(மோக்ஷத்திற்குக் காரணமான அமாநித்வம் முதலான) கு3ணங்களும் ஆகிய இரண்டையும், **ப்ரக்ருதி ஸம்ப4வாந் வித்3தி4** - ப்ரக்ருதியினுல் உண்டாமவையாக அறிவாயாக.

குறிக்கும் என்பது வெளிப்படை. 'சதுர்வித4ா ப4ஜந்தே" [கீ3தை 7-16] என்று ஆத்மாவை அடையவிரும்பும் கைவல்யநிஷ்ட2னும் ஸாத4னமாக ப4க்தியை அனுஷ்டி2க்கிருனகையாலே, அவனையும "மத்3ப4க்த:" என்னக் குறையில்லை. (மத்3ப4ாவாய உபபத்3யதே) "மம யோ ப4ாவ: மத்3ப4ாவ:" என்னும் வ்யுத்பத்தியாலே 'மத்3ப4ாவ' ஶப்3த3ம் பரமாத்மாவான கண்ணனின் ஸ்வப4ாவத்தைக்குறிக்கும். பரமாத்ம ஸ்வப4ாவங்களில் நித்யஸித்3த4மான ஜ்ஞானத்தையுடையவனுயிருக்கை முதலானவை ஸம்ஸாரத்தில் கட்டுண்டிருக்கும் ஜீவனுக்குக் கூடாதாகையாலே, ஸம்ஸாரத்தோடு தொடர்பற்றிருக்கையாகிற தன்மையே இஙகு கருதப்படுகிறது என்றுகொள்ள வேண்டும. 'பரமம் ஸாம்யம் உபைதி" என்று ஶ்ருதியிலும் "மம ஸாத4ர்ம்யம் ஆக3தா:" (கீ3தை 14-2) என்று இந்த கீ3தையிலும் சொல்லப்பட்ட ஸாம்யத்தோடு முரண்படுமாகையாலே இங்கு மத்3ப4ாவ ஶப்3த3த்தால் ஐக்யத்தைச் சொல்லுவதாகக் கூறுவது பொருந்தாது. (மத்3ப4ாவாய உபபத்3யதே) இம்மூன்றைப்பற்றிய உண்மையையறிந்தவன் என்னைப்போலே ஸம்ஸாரத்தோடு தொடர்பற்றவனுவதற்குத் தகுதியுடையவனுகிருன்.

19. சித்து மசித்து மநாதியெனச் சிந்திநீ
யத்தில் விகார மணிகுணங்க - ளொத்தெழுந்து
பந்தமுறு வித்தாகும் பந்தமொழி வித்தாகும்
வந்தெனவெண் ணுற்று மதி.

சித்தும் அசித்தும் - மூலப்ரக்ருதியும் ஜீவாத்மாவும், **அநாதி** - அநாதிகாலமாகச் சேர்ந்திருப்பவை, **என நீ சிந்தி**- என்று நீ அறிவாயாக. **அத்தில்** - அந்த ப்ரக்ருதியிலிருந்து. **விகாரம்** - (இச்சை, த்வேஷம முதலான) விகாரங்களும், **அணி குணங்கள்** - (அமானித்வம் முதலிய) நற்குணங்களும், **ஒத்து எழுந்து வந்து**- வாசியில்லாமல் உண்டாகி ஆத்மாவையடைந்து, **பந்தம் உறு வித்தாகும் பந்தம் ஒழி வித்தாகும்**- (முறையே) ஸம்ஸாரபந்தத்தை அடைவதற்குக் காரணமாகவும், அந்தபந்தம் அழிவதற்குக் காரணமாகவும் ஆகின்றன, **என**-என்று, **எண்ணுற்று** - ஆராய்ந்து, **மதி**- அறிவாயாக.

---

19. இதுவரையில் "தேஹஸ்வரூபம், ஆத்மாப்திஹேதுஃ ஆத்மவிசோதநம்" என்று கீதார்த்த ஸங்க்ரஹத்தில் (17) சொல்லப்பட்ட மூன்று விஷயங்கள் விளக்கப்பட்டன. இனி "பந்தஹேதுः" என்று அங்கு சொல்லப்பட்ட அடுத்த விஷயம் இந்த ஸ்லோகம் தொடக்கமாக இருபத்திரண்டாவது ஸ்லோகம் ஈறாகக் கூறப்படுகிறது. அதில் இந்த ஸ்லோகத்திலும் அடுத்த ஸ்லோகத்திலும் "மிகவும் வேறுபட்ட தன்மைகளையுடைய அசேதன ப்ரக்ருதியும் ஜீவாத்மாவும் ஒன்றோடொன்று தொடர்புகொண்டிருப்பது அநாதிகாலமாக" என்றும், அப்படித் தொடர்பு கொண்டிருக்கும் அவ்விரண்டால் உண்டாகும் விளைவுகளும் கூறப்படுகின்றன. மேல் இரண்டு ஸ்லோகங்களில் அவ்விரண்டும் ஒன்றோடொன்று அநாதிகாலமாகத் தொடர்புகொண்டிருப்பதற்குக் காரணம் கூறப்படுகிறது. (ப்ரக்ருதிம் புருஷம் சைவ உபாவபி அநாதீ வித்தி) அசேதனமான மூலப்ரக்ருதியும் புருஷனாகிற ஜீவாத்மாவும் ஒன்றோடொன்று சேர்ந்திருப்பது அநாதிகாலமாக என்று அறிவாயாக.

பா ॥ प्रकृतिपुरुषावुभावन्योन्यसंसृष्टावनादी इति विद्धि; बन्धहेतुभूतान् विकारान्—इच्छाद्वेषादीन्, अमानित्वादिकांश्च गुणान्

'உப₄ாவபி' என்று சொன்னதோடு "ப்ரக்ருதிம் புருஷம் ச" என்று சகாரத்தையும் இட்டிருப்பது "இவையிரண்டும் ஒன்றோடொன்று சேர்ந்தே அநாதிகாலமாக இருக்கின்றன" என்பதைக் காட்டுகிறது சகாரம் இதரேதரயோக₃த்தை (ஒன்றோடொன்று சேர்ந்திருப்பதைக்) காட்டுகிறது. "பரவல்லிங்க₃ம் த்₃வந்த்₃வதத்புருஷயோ:" [அஷ்டாத்₄யாயீ 2—4—26] [த்₃வந்த்₃வஸமாஸத்திலும் தத்புருஷ ஸமாஸத்திலும் ஸமஸ்தபத₃த்தின் லிங்க₃ம் (பால்) பின்பத₃த்தின் லிங்க₃த்தை ஒட்டியிருக்கும்] என்னும் பாணினி ஸூத்ரத்தைக்கருதி "ப்ரக்ருதி புருஷௌ" என்று ப₄ாஷ்யத்தில் த்₃வந்த்₃வஸமாஸம் இடப்பெற்றது. அதற்கு விசேஷணமாயிருப்பதால் "உபெ₄ள அநாதீ₃" என்னும் இருபதங்களும் ஆண்பாலாகவேயுள்ளன. இனி ஶ்லோகத்தின் பிற்பாதியாலே ஸம்ஸார ப₃ந்த₄த்துக்குக் காரணமான இச்ச₂ா த்₃வேஷங்கள் முதலான விகாரங்களும், அந்த ப₃ந்த₄த்திலிருந்து விடுபடுவதற்குக் காரணமான 'அமாநித்வம்' முதலான கு₃ணங்களும் ப்ரக்ருதியின் தொடர்பால் உண்டாகின்றன என்று காட்டுகிறான்:— (விகாராம்ஶ்ச ப்ரக்ருதி ஸம்ப₄வாந் வித்₃தி₄) "இச்ச₂ா த்₃வேஷ: ஸுக₂ம் து₃:க்க₂ம்" என்று ஆறுவது ஶ்லோகத்தில் க்ஷேத்ரமாகிற ஶரீரத்தின் விகாரங்களாகக் கூறப்பட்டவையாய், ஸம்ஸாரப₃ந்த₄த்துக்குக் காரணமானவையான இச்ச₂ாத்₃வேஷங்கள் அதனால் விளையும் இன்பதுன்பங்கள், லாப₄ாலாப₄ மனப்பான்மைகள், வெற்றி தோல்வி மனப்பான்மைகள் முதலான இரட்டைகளும் ப்ரக்ருதியிலிருந்து உண்டாகின்றன என்று அறிவாயாக. 'ப்ரக்ருதிஸம்ப₄வாந் விகாராந்" என்னும் தொடருக்கு ப்ரக்ருதியிலிருந்து உண்டாகும் 'மஹான்' முதலான விகாரங்களைப் பொருளாகக் கொள்ளக்கூடாதோ? எனில்: இந்த ப்ரகரணத்தில் ப்ரக்ருதி விகாரங்களான மஹான் முதலானவற்றைப்பற்றிய பேச்சேயில்லை. ஆகையால், "தத்க்ஷேத்ரம்...யத்₃ விகாரி" என்று மூன்றுவது ஶ்லோகத்தில் ப்ரக்ருதி விகாரங்களாகக் கூறப்பட்டு ஆறுவது ஶ்லோகத்தில் விவரிக்கப்பட்ட இச்ச₂ாத்₃வேஷங்கள் முதலானவற்றை

मोक्षहेतुभूतान् प्रकृतिसंभवान् विद्धि; पुरुषेण संसृष्टेयमनादिकाल-प्रवृत्ता क्षेत्राकारपरिणता प्रकृतिः स्वविकारैरिच्छाद्वेषादिभिः पुरुषस्य बन्धहेतुर्भवति; सैवामानित्वादिभिः स्वविकारैः पुरुषस्यापवर्गहेतुः भवतीत्यर्थः ॥ १९ ॥

விகார ஶப்3த3த்துக்குப் பொருளாகக் கொள்வதே இந்த ப்ரகரணத்துக்குப்பொருந்தும். இங்கு இச்சை2 என்றது அதற்குமுன் உண்டாகும் ஜ்ஞானத்துக்கும், அதற்குப்பின் உண்டாகும் ப்ரயத்னத்துக்கும் உபலக்ஷணம். ஶாஸ்த்ரங்களில் விதி4க்கப்பட்ட ப்ராக்ருத விஷயங்களில் இந்த ஜ்ஞானேச்சா2 ப்ரயத்னங்கள் உண்டாகும்போது இச்சேதனன் புண்யம் செய்தவனாகிறான். ஶாஸ்த்ரங்களில் நிஷேதி4க்கப்பட்ட விஷயங்களில் இந்த ஜ்ஞானேச்சா2 ப்ரயத்னங்கள் ஏற்பட்டால் இச்சேதனன் பாபம் செய்தவனாகிறான். இங்கு 'த்3வேஷம்' என்பது அதற்குமுன் உண்டாகும் ஜ்ஞானத்துக்கும், அதற்குப்பின் விளையும் நிவ்ருத்திக்கும் உபலக்ஷணம், ஶாஸ்த்ரங்களில் விதி4க்கப்பட்ட ப்ராக்ருதவிஷயங்களில் ஜ்ஞானத்3வேஷ நிவ்ருத்திகள் ஏற்பட்டால் இச்சேதனன் பாபம் செய்தவனாகிறான். ஶாஸ்த்ரங்களில் நிஷேதி4க்கப்பட்ட ப்ராக்ருத விஷயங்களில் இவனுக்கு ஜ்ஞானத்3வேஷ நிவ்ருத்திகள் ஏற்பட்டால் இச்சேதனன் புண்யம் செய்தவனாகிறான். புண்யமானது ப்ராக்ருதமான ஸுக2த்தையும். வெற்றியையும், லாப4த்தையும் இவனுக்கு ஏற்படுத்துகிறது, பாபமானது ப்ராக்ருதமான து3:க்க2த்தையும். தோல்வியையும், இழப்பையும் ஏற்படுத்துகிறது. புண்யபாபங்கள் மேலும் மேலும் இவனை ஸுக2து3:க்க2ங்கள் முதலானவற்றால் மயங்கச் செய்து மேலும்மேலும் புண்யபாபங்களை விளைத்து மேலும்மேலும் ஸுக2து3க்க2ங்கள் முதலான இரட்டைகளில் ஆழ்த்தி ஸம்ஸாரத்தில் இவனை உறுதியாகக் கட்டிவிடுகின்றன. இவ்விடத்தில் "இச்சா2 த்3வேஷ ஸமுத்தே2ந" [கீ3தை 7-27] என்னும் ஶ்லோகத்தின் வ்யாக்2யானம் அநுஸந்தி4க்கத்தக்கது. (கு3ணாம்ஶ்சைவ ப்ரக்ருதிஸம்ப4வாந் வித்3தி4) "அமாநித்வம் அத3ம்பி4த்வம்" என்னும் ஏழாவது ஶ்லோகம் தொடங்கிப் பதினோராவது ஶ்லோகம் ஈறாக ஆத்மஜ்ஞான ஸாத4னமாகக் கைக்கொள்ள வேண்டியவையாகக்

कार्यकारणकर्तृत्वे हेतुः प्रकृतिरुच्यते ।
पुरुषस्सुखदुःखानां भोक्तृत्वे हेतुरुच्यते ॥ २०

20. கார்யகாரணகர்த்ருத்வே ஹேதுஃ ப்ரக்ருதிருச்யதே ।
புருஷஸ்ஸுக₂து₃:க்கா₂நாம் போ₄க்த்ருத்வே ஹேது-
ருச்யதே ॥

கார்யகாரணகர்த்ருத்வே — ஶரீரமும் பதிஞெரு இந்த்₃ரியங்களும் செயல் புரியும் விஷயத்தில், **ப்ரக்ருதி:**— (ஜீவனுல் அதி₄ஷ்டி₂க்கப்பட்ட) ப்ரக்ருதியே. **ஹேது:** — காரணமாக, **உச்யதே** — சொல்லப்படுகிறது. **புருஷ:** — ஜீவன், **ஸுக₂து₃:க்கா₂நாம் போ₄க்த்ருத்வே** — இன்ப துனபங்களை அனுப₄விக்கும் விஷயத்தில், **ஹேதுः** — (அவ்வனுப₄வங்களுக்கு இருப்பிடமாயிருந்துகொண்டு) காரணமாகிருன் என்று, **உச்யதே** — சொல்லப்படுகிருன்.

கூறப்பட்ட கு₃ணங்களையும் முற்கூறியபடி ப்ரக்ருதியிலிருந்து உண்டாகின்றவையாகவே அறிவாயாக. ''ப்ரக்ருதிஸம்ப₄வாந் கு₃ணாந்'' என்று கூறியிருக்கையாலே ப்ரக்ருதியின் கு₃ணங்களான ஸத்வ ரஜஸ்தமஸ்ஸுக்களையோ அதன் விகார கு₃ணங்களான ஶப்₃த₃ஸ்பர்ஶாதி₃ கு₃ணங்களையோ கூறலாகாதோ? எனில்: அந்த கு₃ணங்களைப்பற்றி இந்த ப்ரகரணத்தில் பேச்சேயில்லை. ஆத்மஜ்ஞான ஸாத₄னமான அமாநித்வம் முதலான கு₃ணங்களைப்பற்றியே இங்கு ப்ரஸ்தாவம் விளைந்துள்ளது. ஆகையால் இங்கு 'கு₃ணாந்' என்று அவற்றைக் கூறுவதாகக்கொள்வதே உசிதம். இந்த கு₃ணங்கள் ஆத்மஜ்ஞான ஸாத₄னங்களாகையாலே மோக்ஷத்துக்குக் காரணமாகின்றன என்பது தெளிவு (ப்ரக்ருதிஸம்ப₄வாந் வித்₃தி₄) 'ப₃ந்த₄ஹேதுவான முற்கூறிய விகாரங்களும், மோக்ஷஹேதுவான முற்கூறிய கு₃ணங்களும் ப்ரக்ருதியிலிருந்தே உண்டாகின்றவை' என்று அறிவாயாக. ஜீவனேடு அநாதி₃காலமாகச் சேர்ந்து செயல்புரிவதாய், ஶரீரமாகப் பரிணமித்திருப்பதான ப்ரக்ருதி தன் விகாரங்களான இச்சா₂த்₃வேஷங்கள் முதலானவற்ருலே ஜீவன் ஸம்ஸாரத்தில் கட்டுப்படுவதற்குக் காரணமாகிறது. அதே ப்ரக்ருதி தன்னுல் உண்டாகும் அமாநித்வம் முதலான கு₃ணங்களாலே ஜீவனுக்கு மோக்ஷகாரணமுமாகிறது என்றபடி. இந்த ஶரீரமே ப₃ந்த₄ஹேதுவாகும்போது கைவிடத்தக்கதாகவும், மோக்ஷகாரணமாகும்போது கைக்கொள்ளத் தக்கதாகவும் ஆகிறது என்று கருத்து. (19)

20. காரிய காரணங்கள் கர்த்தா வியற்றுமிடத்
தேய பிரகிருதி யேதுவா—மேயசுகந்
துக்கம் புசிக்குந் தொடர்பதனி லேதுவா
யொக்க வரும்புருட னுற்று.

காரியகாரணங்கள் — ஶரீரமும் பதினொரு இந்த்ரியங்களுமு, **கர்த்தா இயற்றுமிடத்து** — ஒரு செயலைச் செய்பவையாகச் செயல் புரியும்போது, **ஏய பிரகிருதி** — (ஜீவனோடு) சேர்ந்திருக்கும் பிரகிருதி, **ஏதுவாம்**—காரணமாகச்சொல்லப் படுகிறது, **மேய சுகம் துக்கம் புசிக்கும் தொடர்பதனில்** — தன்னிடத்திலிருக்கும் இன்பதுனபங்களை அனுப4விக்கும் விஷயத்தில், **புருடன்** — ஜீவன், **உற்று** — (அந்தப் பிரகிருதியோடு) தொடர்புகொண்டு, **ஏதுவாய் ஒக்கவரும்** — எப்போதும் காரணமாயிருப்பான்.

---

20. இனி, ப்ரக்ருதி புருஷர்கள் ஒன்றோடொன்று சேர்ந்திருப்பதால் அவற்றுக்கு உண்டாகும் செயல் வேற்றுமைகள் இந்த ஶ்லோகத்தில் கூறப்படுகின்றன. (கார்ய காரண கர்த்ருத்வே ப்ரக்ருதி: ஹேது: உச்யதே) ஶரீரமும் பதினொரு இந்த்3ரியங்களும் செயல் புரியும் விஷயத்தில் ப்ரக்ருதியே காரணமாகச் சொல்லப்படுகிறது. இங்கு 'கார்யம்' என்று ஶரீரம் சொல்லப்படுகிறது. 'காரணம்' என்று ஜ்ஞானேந்த்3ரியங்கள் ஐந்தும் கர்மேந்த்3ரியங்கள் ஐந்தும் இரண்டையும் நியமிக்கும் மனமும் ஆகப் பதினொரு இந்த்3ரியங்களாகிற கரணங்கள் சொல்லப்படுகின்றன. "இந்த்3ரியாணி த3ஶைகம் ச" என்று ஐந்தாவது ஶ்லோகத்தில் கூறப்பட்டிருக்கையாலும், கரணமென்றும், காரணமென்றும் இந்த்3ரியங்களுக்கு ப்ரஸித்3தி4 உண்டாகையாலும் இங்கு காரணஶப்3த3ப் இந்த்3ரியங்களைக் குறிப்பதே உசிதம். "கார்யகரண கர்த்ருத்வே" என்று ஒரு பாட2முண்டாயினும் அது அப்ரஸித்3த4மாகையாலே 'கார்யகாரணகர்த்ருத்வே' என்ற பாட2மே பா4ஷ்யகாரரால் ஆதரிக்கப்பட்டது. இந்த்3ரியங்களோடு சேர்த்துப்படிக்கையாலே கார்யஶப்3த3ம் ப்ரக்ருதியின் கார்யவிஶேஷமான ஶரீரத்தைக்குறிப்பதே உசிதம், "ஈதஸ்ய கார்யம் கரணம் ச

भा ॥ कार्यं —शरीरम्, कारणानि-ज्ञानकर्मात्मकानि समनस्कानि इन्द्रियाणि, तेषां क्रियाकारित्वे पुरुषाधिष्ठिता प्रकृतिरेव हेतुः; पुरुषाधिष्ठितक्षेत्राकारपरिणतप्रकृत्याश्रया भोगसाधनभूताः क्रिया इत्यर्थः।

வித்₃யதே'' [ஶ்வே. 6-8] [அந்தப் பரமாத்மாவுக்கு (ப்ராக்ருதமான) ஶரீரேந்த்₃ரியங்கள் இல்லை] என்று உபநிஷத்திலும் இப்படியே இவையிரண்டும் படிக்கப்பட்டனவன்ருே. இத்தால் ''ஐந்து பூ₄தங்களும், ஐந்து தந்மாத்ரைகளும ஆகப் பத்துவிதமான ப்ரக்ருதி கார்யங்களும் கார்யஶப்₃த₃த்தால் சொல்லப்படுகின்றன. பு₃த்₃தி₄, அஹங்காரம், பதினொரு இந்த்₃ரியங்கள் ஆகப் பதின்மூன்றும் கரணம் என்று சொல்லப்படுகின்றன. அவை உண்டாவதிலும் ஒவ்வொரு கணமும் பரிணமமடைவதிலும் காரணமாயிருப்பது மூலப்ரக்ருதியே'' என்றும் மற்றும் பலவிதமாகவும் செய்யப்படும் வ்யாக்₂யானங்கள் பொருந்தாதவை என்று தேறிற்று. இங்கு கர்த்ரு ஶப்₃த₃ம முயற்சிக்கு இருப்பிடமானது என்னும் பொருளில் வழங்கப்படவில்லை. அசேதனமான மூலப்ரக்ருதி முயற்சிக்கு இருப்பிடமாகமாட்டாதன்ருே. ஆகையால் செயல்களுக்கு இருப்பிடமாயிருக்கையே இங்கு 'கர்த்ருத்வம்' என்று சொல்லப்படுகிறது என விளங்குகிறது. ஶரீரம் மாத்திரம் செயல் புரியமுடியாதாகையாலே ஜீவனால் அதி₄ஷ்டி₂க்கப்பட்ட ஶரீரமே இங்கு ப்ரக்ருதி ஶப்₃த₃த்தால் சொல்லப்படுகிறது என்று கொள்ளவேண்டும். பு₃த்₃தி₄பூர்வமல்லாத சில இந்த்₃ரிய வ்யாபாரங்கள் ஜீவனுடைய இச்சையினால் ஏற்படாவிட்டாலும் அந்தச் செயல்களின் விளைவுகளையும் அவன் அனுப₄விப்பதற்கு உறுப்பான அவனுடைய ஸாந்நித்₄யம் அவ்விடங்களிலுமுள்ளது. பு₃த்₃தி₄பூர்வமான பெரும்பாலான செயல்களில் அவனுடைய முயற்சிக்குக் காரணமான அதி₄ஷ்டா₂னமே உள்ளது என்பது தெளிவு. ஆக, ஜீவனால் அதி₄ஷ்டி₂க்கப்பட்டதாய், ஶரீரமாகப் பரிணமமடைந்ததான ப்ரக்ருதியிலிருப்பவை ஜீவனுடைய போ₄க₃த்துக்கு ஸாத₄னமாயிருக்கும் செயல்கள் என்று முதல் பாதி ஶ்லோகத்தின் திரண்ட பொருளாகும். (ப்ரக்ருதி: ஹேது: உச்யதே) மேலே ஜீவனை மற்ருென்றுக்கு ஹேதுவாகச் சொல்லுகையாலே இங்கு இவ்விஷயத்தில் ப்ரக்ருதியே காரணமாகக் கூறப்படுகிறது என்று ஏவகாரத்தைக்கூட்டி பா₄ஷ்யத்தில்

पुरुषस्याधिष्ठातृत्वमेव: तदपेक्षया * कर्ता शास्त्रार्थवत्त्वात् (ब्र २-३-३३) इत्यादिकमुक्तम् ; शरीराधिष्ठानप्रयत्नहेतुत्वमेव हि पुरुषस्य

பொருள்கொள்ளப்பட்டது. ப்ரளயத3சையில் ஶரீரேந்த்3ரியங்கள் இல்லாமலிருக்கும் ஸம்ஸாரி ஜீவன் ப்ரக்ருதியை அதி4ஷ்டி2க்க முடியாதாகையாலே ப்ரக்ருதி ஶப்3த3த்தால் இங்கு ப்ரக்ருதியின் பரிணாமமான ஶரீரமே கூறப்படுகிறது என்று கொள்ளவேண்டும். இவ்வண்ணமாக ப்ரக்ருதிக்கே கர்த்ருத்வம் உண்டானால் "கர்த்தா ஶாஸ்த்ரார்த்த2வத்த்வாத்" [ப்3ரஹ்ம ஸூத்ரம் 2-3-33] [ஶாஸ்த்ரம் பயனுள்ளதாக ஆகவேண்டுமாகையால் ஆத்மா கர்த்தாவாகவும் ஆகிறான்] முதலான ஸூத்ரங்களில் ஆத்மாவைக் கர்த்தாவாகச் சொல்லியிருப்பதோடு முரண்படுகிறதே எனில்: ஜீவன் செயல்புரியும் ஶரீரத்தை அதி4ஷ்டி2த்து நிற்பதையே செய்கிறானாகையாலும், அதையிட்டு இந்த ஸூத்ரம் அமைந்ததாகையாலும், செயலுக்கு இருப்பிடமாயிருக்கையாகிற கர்த்ருத்வம் ப்ரக்ருதிக்கே இருப்பதாலும் முரண்பாடு இல்லை, இப்படிக்கொண்டால் புருஷனுடைய கர்த்ருத்வம் ஔபசாரிகம் என்று தேறிவிடுமே எனில்; இந்த ஸூத்ரத்தில் புருஷனுக்கு முயற்சியாலுண்டாகும் செயலுக்கு இருப்பிடமாயிருக்கையாகிற கர்த்ருத்வம் சொல்லப்படவில்லை என்பது உண்மையே. அப்படிச் சொல்லப்படுவதாகக்கொண்டால் ஶாஸ்த்ரம் பயனுடையதாகை என்னும் ஹேது ஶரீரத்திலேயே உள்ளதாகையால் ஆத்மாவுக்குப் பொருந்தாது. ஆகையால் ஶரீரத்தை நியமிக்கும் முயற்சிக்கு இருப்பிடமாயிருப்பவன் ஆத்மா என்றும், இவனுடைய முயற்சியே இவனுக்குள்ள கர்த்ருத்வம் என்றும் கொள்ளவேண்டும். முயற்சியும் க்ருதியும் ஒரே பொருளைக் குறிக்குமாகையால் இவனுடைய கர்த்ருத்வமே முக்2யமானதாகும். அந்த முயற்சியால் ஏற்படும் அசைவுகளை மாத்திரமேயுடைய ஶரீரத்தின் கர்த்ருத்வமே அமுக்2யம் என்று தேறுகிறது. ஆக, ஶ்லோகத்தின் முற்பாதியால் போ4க3 ஸாத4னங்களான செயல்களுக்கு இருப்பிடமாயிருப்பது ப்ரக்ருதி என்று சொல்லப்பட்டது. இனி, பிற்பாதியால் இன்பதுன்பங்களை அனுப4விக்கையாகிற போ4க3ங்களுக்கு இருப்பிடமாயிருப்பவன் புருஷனே என்று கூறப்

कर्तृत्वम्; प्रकृतिसंसृष्टः पुरुषः सुखदुःखानां भोक्तृत्वे हेतुः, सुख-दुःखानुभवाश्रय इत्यर्थः॥ २० ॥

படுகிறது. (புருஷ: ஸுக₂து₃:க்கா₂நாம் போ₄க்த்ருத்வே ஹேது: உச்யதே) முற்கூறிய ப்ரக்ருதியோடு சேர்ந்திருக்கும் புருஷன் இன்பதுன்பங்களை அனுப₄விக்கும் விஷயத்தில் காரணமாகக் கூறப்படுகிறான். 'புருஷனுக்கு இவ்வுலக இன்பதுன்பங்கள் கிடையாதென்றல்லவோ வேத₃வாக்யங்கள் கூறுகின்றன. மோக்ஷத்தில் புருஷனுக்கு இன்பமிருந்தாலும் துன்பமில்லை. அப்படியிருக்கும்போது புருஷனை இன்பதுன்பங்களுக்கு இருப்பிடமானவன் என்று கூறியது எப்படிப் பொருந்தும்?" எனில்: "ந ஹ வை ஸஶரீரஸ்ய ஸத: ப்ரியாப்ரியயோ: அபஹதிரஸ்தி" [சா₂ந் 8-12-1] [சரீரத்தோடு கூடியிருக்கும்வரையில் ஜீவனுக்கு இன்பதுன்பங்களைத் தவிர்க்க முடியாது] என்னும் வேதவாக்யத்தையொட்டி ஶரீரத்தோடுகூடிய ஜீவனுக்கு இன்பதுன்பங்களைக் கூறுகையாலே குறையில்லை. "ஶப்₃தா₃தி₃ விஷயங்களாகவும் இந்த்₃ரியங்களாகவும் பரிணமமடைந்த ப்ரக்ருதியும் இன்பதுன்பங்களை அனுப₄விப்பதற்குக் காரணமாகக் காணப்படுகிறது. அப்படியிருக்க இங்கு புருஷனை மாத்திரம் காரணமாகக் கூறுவது எப்படிப்பொருந்தும்?" எனில்: இன்பதுன்பங்களின் அனுபவத்திற்கு நேரே இருப்பிடமாயிருப்பவனுகையால் ஜீவனே அவ்வனுப₄வத்திற்கு முக்₂யகாரணம் என்பதை யிட்டு இப்படிச் சொல்லப்பட்டது. இத்தால், "விகாரமற்ற புருஷனுடைய ஸந்நிதி₄யாலே ப்ரக்ருதிக்கே இன்பதுன்பங்களை அநுப₄விக்கும் தன்மை ஏற்படுகிறது" என்று கூறும் ஸாங்க்₂யர்களின் மதம் தள்ளப்பட்டதாயிற்று. இப்படிக் கூறுகிற இவர்களை "புருஷோ஽ஸ்தி போ₄க்த்ருபா₄வாத்" [ஸாங்க்₂யதத்வகாரிகை—17] [இன்பதுன்பங்களை அனுப₄விக்கும் தன்மையாலும் புருஷன் இருக்கிறான் என்று தேறுகிறது] "புருஷஸ்ய த₃ர்ஶநார்த்த₂ம் கைவல்யார்த்த₂ம் தத₂ா ப்ரத₄ாநஸ்ய | பங்கு₃வந்த₄வது₃ப₄யோரபி ஸம்யோக₃ஸ் தத்க்ருதஸ்ஸர்க்க₃: ||" [ஸாங்க்₂ய தத்வ காரிகை—21] [நடக்க இயலாத நொண்டி ஒருவன், வழி காண இயலாத

குருடனின் தோளில் ஏறி அமர்ந்து, நொண்டி வழிகாட்ட, குருடன் நடந்து செல்ல இருவரும் சேரவேண்டிய இடத்திற்குச் சென்று பயனடைவதுபோல், பிரகிருதிக்குப (புருஷனுல்) பார்வை ஏற்படுவ தற்காகவும், அவ்வண்ணமே, புருஷனுக்குத் துன்பமற்ற நிலையான மோக்ஷம் ஏற்படுவதற்காகவும பரஸ்பரம் சேர்த்தி உண்டாகிறது; அதனுல் ஜக₃த்ஸ்ருஷ்டி உண்டாகிறது.] என்று கூறுகையாலே அவர்களுக்குத் தம் வசனத்துடன் முரண்பாடு உண்டாகிறது என்பது தெளிவு. மேலும், இந்த ஸாங்க்₂ய மதம் ''ரசனானுப பத்தேஸ்ச நாநுமாநம் ப்ரவ்ருத்தேஸ்ச'' [2-2-1] [(சேதனனுல் அதி₄ஷ்டி₂க்கப்படாவிடில்) உலகை உண்டாக்குவது பொருந்தா தாகையாலும், (சேதனனுல் அதி₄ஷ்டி₂க்கப்பட்டாலேயே) அசேதனப் பொருள்கள் செயல்படுவதைக் காண்கையாலும், அநுமானத்தால் அறியப்படும் மூலப்ரக்ருதி ஜக₃த்காரணமாகாது] என்று தொடங்கி ''விப்ரதிஷேதா₄ச்ச அஸமஞ்ஜஸம'' [2-2-9] [முன்னுக்குப்பின் முரணுகப் பேசுகையாலும் (ஸாங்க்₂ய மதம் பொருந்தாததாகும்)] என்பதீருக ப்₃ரஹ்ம ஸூத்ரத்தில் இரண்டாம் அத்தியாயம் இரண்டாம் பாத₃ம் முதல் அதி₄கரணத்தில் தள்ளப்பட்டது. இந்த ஶ்லோகத்தில் மூலப்ரக்ருதிக்கே போ₄க்த்ருத்வமும் உண்டென்று கண்ணன் கருதியிருந்தால் ''கர்த்ருத்வத்திலும, போ₄க்தருத்வத்திலும் ப்ரக்ருதியே ஹேதுவாகிறது'' என்று சொல்லியிருக்கவேண்டுமே யொழிய 'ப்ரக்ருதி கர்த்ருத்வ விஷயத்திலும், புருஷன் போ₄க்த்ருத்வ விஷயத்திலும் ஹேது' என்று பிரித்துக் கூறியிருப்பது பொருந்தாது. உண்மையில், 'போ₄க்த்ருத்வம்' (இன்பதுன்பங்களை அநுப₄விக்கை) என்பதும் ஒருவகைக் கர்த்ருத்வமேயென்பதையும் ''ஶாஸ்த்ரப₂லம் ப்ரயோக்தரி'' [பூர்வ மீமாம்ஸை 3 7-18] [எவன் சாஸ்திரத்தில் சொல்லியபடி அநுஷ்டி₂க்கிருனே, அவனுக்கே அதன் பயன் விளை கிறது] என்னும் நியாயத்தையும் நோக்கும்போது புருஷனுக்கே முற் கூறியபடி கர்த்ருத்வமும், போ₄க்த்ருத்வமும் முக்கியமானது என்று விளங்கும். ''கர்த்ருத்வம் ப்ரக்ருதிக்கு இயல்வானது; ஆனுல் அதற்குள்ள போ₄க்த்ருத்வத்திற்குப் புருஷன் (தன் ஸந்நிதி₄ மூலம்) காரணமாகிருன். அதையிட்டு இந்த ஶ்லோகம் பிரித்துக் கூறிற்று'' என்று சொல்லுவதும் பொருந் தாது. புருஷனில்லாத கேவல ப்ரக்ருதிக்குக் கர்த்ருத்வத்தைக் காணவில்லையே; எவரும் அதை ஒப்புக்கொள்ளவுமில்லையே.

இப்படிக்கொள்ளாவிடில், "தேந நிவ்ருத்தப்ரஸவாம் அர்த்த₂வ ஶாத் ஸப்தருப விநிவ்ருத்தாம் | ப்ரக்ருதிம் பஶ்யதி புருஷ: ப்ரேக்ஷகவத₃வஸ்தி₂த: ஸ்வச்ச₂:||" [ஸாங்க்₂யதத்வகாரிகை 65] [ஶு₃த்₃த₄மான அறிவுடையவனுய், சபையில் நடப்பதைப் பார்த்துக் கொண்டிருப்பவனைபோலே கிரியையற்றவனுன புருஷன் அந்தத் தத்வஸாக்ஷாத்காரத்தால் பயன்பெற்றுவிட்டபடியால், கிரியையற்றதாய், த₄ர்மம், அத₄ர்மம், அஜ்ஞாநம், வைராக்₃யம், அவைராக்₃யம், ஐஶ்வர்யம், அனைஶ்வர்யம் என்னும் ஏழுவித மான ரூபங்களற்றதாயுமுள்ள ப்ரக்ருதியைப் பார்க்கிருன்] என்று விஶு₃த்₃த₄ கேவலஜ்ஞானமுண்டாகும்போது, ப்ரக்ருதிக்கு ஏழு விதமான ரூபங்கள் நீங்குகின்றன என்று இவர்கள் கூறுவது பொருந்தாமற் போய்விடும். இதை இசைந்தால் முக்தியிலும் ஸம்ஸார நிலையிற்போல ப்ரக்ருதி செயல்புரிய வேண்டிவரும். "ஸங்க₄ாதபரார்த்த₂த்வாத் த்ரிகு₃ணாதி₃விபர்யயாத₃தி₄ஷ்ட₂ா நாத் | புருஷோஸ்தி போ₄க்த்ருப₄ாவாத் கைவல்யார்த்த₂ம் ப்ரவ்ருத்தேஶ்ச || ஜநநமரணகரணாநாம் ப்ரதிநியமாத் அயுக₃ பத் ப்ரவ்ருத்தேஶ்ச | புருஷப₃ஹுத்வம் ஸித்₃த₄ம் த்ரை கு₃ண்யவிபர்யயாச் சைவ||" [ஸாங்க்₂யதத்வகாரிகை 17, 18] [பலவற்றின் சேர்க்கையான (ஸங்க₄ாத ரூபமான) அவ்யக்தம் முதலானவை பிறர்க்கேயாயிருக்கையாலும், அந்தப் பயனடையும் பொருள் முக்குணமுடைய ஸங்க₄ாதப் பொருள்களினின்றும் வேறுபட்டிருக்கவேண்டுகையாலும், (முக்குணமுடைய பொருள்கள்) மற்றொருவனுல் தூண்டப்படுகையாலும், (இன்பதுன்பங்களை ஒவ் வொருவனும் அனுப₄விப்பதிலிருந்து) அநுப₄விப்பவன் ஒருவ னிருக்கவேண்டுகையாலும், துன்பமற்ற நிலையான மோக்ஷ நிலை யின் பொருட்டு (சாஸ்திரங்களும் அறிவாளிகளும்) முயற்சி யெடுப்பதாலும், (அவ்யக்தம் பு₃த்₃தி₄ முதலான முக்குணப்பொருள் களைக் காட்டிலும் வேறுபட்ட) புருஷன் ஒருவனிருக்கிருன் என்று தேறிற்று. ஒவ்வொருவனுக்கும் பிறப்பு, இறப்பு, இந்த்₃ரியங்கள் தனித்தனியாகக் காண்கையாலும், ஒவ்வொருவனும் ஒரே சமயத் தில் முயற்சியுடையவனுயிராததாலும், ஒவ்வொருவனுக்கும் ஸத்வ ரஜஸ் தமோகு₃ணங்களில் ஏற்றத்தாழ்வுகள் இருக்கையாலும் புருஷர்கள் பலர் என்றே தேறுகிறது.] என்று ப்ரக்ருதியை

भा ।। एवमन्योन्यसंसृष्टयोः प्रकृतिपुरुषयोः कार्यभेद उक्तः; पुरुषस्य स्वतस्स्वानुभवैकसुखस्यापि वैषयिकसुखदुःखोपभोगहेतु[त्व]-माह —

पुरुषः प्रकृतिस्थो हि भुङ्क्ते प्रकृतिजान् गुणान् ।

***21. புருஷ: ப்ரக்ருதிஸ்தே₂ா ஹி பு₄ங்க்தே ப்ரக்ருதிஜாந் கு₃ணாந் ।**

ப்ரக்ருதிஸ்த₂: — ப்ரக்ருதிஸம்ப₃ந்த₄முடையவனுன, **புருஷ:** — ஜீவன், **ப்ரக்ருதிஜாந்** — ப்ரகருதிஸம்ப₃ந்த₄த்தினுல் உண்டாகும், **கு₃ணாந்**—(ஸத்வம் முதலான) கு₃ணங்களினுல் ஏற்படும் இன்பதுன்பங்கள் முதலியவற்றை, **பு₄ங்க்தே ஹி** — அனுப₄விக்கிருனன்ரே.

அதி₄ஷ்டி₂ப்பது கொண்டு புருஷனையும், ஒரே சமயத்தில் முயற்சியுடையவராயிராமையைக்கொண்டு புருஷர்கள் பலர் என்பதையும் ஸாதி₄ப்பதிலிருந்து, 'புருஷனையெதிர்பாராத கேவல ப்ரக்ருதிக்குக் கர்த்ருத்வம் உண்டு' என்னும் வாத₃ம் பொருந்தாது என விளங்குகிறது. அந்த வாத₃ம் கீ₃தையில் இந்த ஶ்லோகத்தில் ஆதரிக்கப் பட்டுள்ளது என்று கூறுவது அடுத்த ஶ்லோகத்தில் "ப்ரக்ருதியிலிருக்கும் புருஷன் அந்த ப்ரக்ருதிஸம்ப₃ந்த₄த்தால் உண்டாகும் இன்பதுன்பங்களை அனுப₄விக்கிருன்" என்று கூறியிருப்பதோடு முரண்படும் என்று கண்டுகொள்வது. (20)

*21. முந்திய ஶ்லோகத்தில் ஒன்ருேடொன்று சேர்ந்திருக்கும் ப்ரக்ருதிக்கும் புருஷனுக்கும் (முறையே) உரிய செயலான கர்த்ருத்வமும், போ₄க்த்ருத்வமும் சொல்லப்பட்டது. இதன்மேல் பின் வருமாறு ஓர் ஐயம் ஏற்படுகிறது:— "பரிஶுத்₃த₄னுய், தன் ஸ்வரூபாநுப₄வத்தால் இன்பத்தையே அடையவேண்டியவனுன ஜீவனுக்கு ஶப்₃த₃ாதி₃ விஷயங்களை அநுப₄வித்து இன்பதுன்பங்களை அடைவது உண்மையாயிருக்க முடியாதே; ஆகையால், செம்பருத்திப்பூ அருகிலிருக்கும்போது வெண்மை நிறமுடைய ஸ்ப₂டிக மணியில் சிவப்புநிறம் ஏறிடப்படுவதுபோலே, ப்ரக்ருதி அருகிலிருப்

मा ।' गुणशब्दः स्वकार्येष्वौपचारिकः; स्वतस्स्वानुभवैकसुखः पुरुषः प्रकृतिस्थः — प्रकृतिसंसृष्टः, प्रकृतिजान् गुणान् — प्रकृति-

---

பதால் ஜீவன்மேலே இவ்வனுப$_4$வம் ஏறிடப்பெற்றதாயிருக்குமோ?'' என்பது அவ்வையம். அது இந்த ஶ்லோகத்தின் முற்பாதியாலே தவிர்க்கப்படுகிறது. (ப்ரக்ருதிஸ்த$_2$: புருஷ:) ப்ரக்ருதியோடு சேர்ந்திருக்கும் புருஷன். ப்ரக்ருதிகார்யமான ஶரீரத்தோடு கூடிய புருஷன் என்றபடி. ப்ரக்ருதி புருஷர்களைப்பற்றி விளக்கும் ப்ரகரணமாகையால், 'ப்ரக்ருதிஸ்த$_2$' ஶப்$_3$த$_3$ம் 'தே$_3$ஹாரோக்$_3$யம்' 'மனஶ்ஶாந்தி' முதலானவற்றைக் குறிக்காமல் இப்பொருளையே இங்கு கூறுகிறது. (ப்ரக்ருதிஜாந் கு$_3$ணாந் பு$_4$ங்க்தே) ப்ரக்ருதிஸம்ப$_3$ந்த$_4$ம் காரணமாக ஏற்படும் ஸத்வாதி$_3$கு$_3$ண கார்யமான இன்பதுன்பங்களை அநுப$_4$விக்கிருன். இங்கு கு$_3$ணஶப்$_3$த$_3$ம் ஸத்வாதி$_3$ கு$_3$ணங்களைச்சொல்லி, அக்கு$_3$ணங்களினுல் விளையும் இன்பதுன்பங்கள், இச்ச$_2$ாத்$_3$வேஷங்கள் முதலானவற்றைக் குறிக்கிறது. செயல்களைக்கொண்டு அநுமானித்தறியவேண்டிய ஸத்வாதி$_3$கு$_3$ணங்களை எவனும் அநுப$_4$விக்க முடியாதாகையால், கு$_3$ணஶப்$_3$த$_3$ம் லக்ஷணையாலே அவற்றின் கார்யமாய், முன் ஶ்லோகத்தில் ப்ரஸ்தாபிக்கப்பட்ட இன்பதுன்பங்கள் முதலானவற்றைக் குறிப்பதாகவே கொள்ளவேண்டும். 'ப்ரக்ருதிஜாந் கு$_3$ணாந்' என்னும் பதங்களுக்கு 'ப்ரக்ருதியிலிருக்கும் இன்பதுன்பங்களை' என்று பொருள் கொள்ள முடியாது. உண்மையில் இன்பதுன்பங்கள் ஆத்மாவிடமன்ரே உள்ளன. ஆகையால் "ப்ரக்ருதி ஸம்ப$_3$ந்த$_4$ம் காரணமாக ஏற்படும் இன்பதுன்பங்கள்" என்றே பொருள்கொள்ள வேண்டும். (புருஷ: கு$_3$ணாந் பு$_4$ங்க்தேஹி) இயல்பாகவே தன் ஸ்வரூபாநுப$_4$வத்தால் இன்பத்தையே அடையவேண்டிய புருஷன் அதற்கு நேர்மாருக, கு$_3$ணங்களால் உண்டாகும் இன்பதுன்பங்களை அநுப$_4$விக்கிருனன்ரே என்று வியப்பைக் காட்டுகிருன். கு$_3$ணஶப்$_3$த$_3$த்தாலே நேரே இன்பதுன்பங்களைக் குறிக்கலாமாஞலும், ப்ரக்ருதியைப்பற்றிய ப்ரகரணமாகையாலும் மேலே பலவிடங்களிலும் கு$_3$ணஶப்$_3$த$_3$ம் ப்ரக்ருதிகு$_3$ணங்களையே குறிப்பதைக் காண்கிருேமாகையாலும் இங்கும் ப்ரக்ருதியின் கு$_3$ணங்களாகிற ஸத்வாதி$_3$ கு$_3$ணங்களைக் குறிப்பதாகக்கொண்டு, அவற்ருலுண்டாகும் இன்பதுன்பங்களை ஔபசாரிகமாகச்

संसर्गोपाधिकान् सत्त्वादिगुणकार्यभूतान् सुखदुःखादीन्, भुङ्क्ते—अनुभवति ॥

भा ॥ प्रकृतिसंसर्गहेतुमाह—

कारणं गुणसङ्गोऽस्य सदसद्योनिजन्मसु ॥ २१

21* காரணம் கு3ணஸங்கோ3஽ஸ்ய ஸத3ஸத்3யோநி ஜந்மஸு ॥

அஸ்ய—இந்தப்புருஷனுக்கு, **ஸத3ஸத்3யோநி ஜந்மஸு**—உயர்ந்த (தே3வர் முதலான) யோனிகளிலும், தாழ்ந்த (திர்யக்ஸ்தா2வர) யோனிகளிலும் பிறப்பதற்கு, **காரணம்**—காரணம். **கு3ணஸங்க3:**—ஸத்வாதி3கு3ணங்களினாலுண்டாகும் இன்பதுன்பங்களில் பற்றேயாகும்.

சொல்லுவதாகக் கொள்ளப்பட்டது. "புருஷன் கு3ணங்களை அநுப4விக்கிறானன்றோ" என்னும் வாக்யநடையில் முரண்பாடு தோற்றுகையாலே 'புருஷ' ஶப்3த3த்திற்கு இங்கு 'இயல்வான நிலையில் இன்பத்தையே அடையவேண்டிய புருஷன்' என்று பொருள்கொள்ளப்பட்டது. (பு4ங்க்தே) "பு4ஜோऽநவநே" என்கிற ஸூத்ரத்தின்படி ஆத்மநேபத3மாயிருக்கிறபடியாலும், அர்த்த2மும் பொருந்தாதாகையாலும் இங்கு ரக்ஷிக்கிறான் என்று பொருள்கொள்ள இயலாது. 'உண்கிறான்' என்னும் பொருளும், உணவுண்ணும் ப்ரகரணமல்லாமையால் பொருந்நாது. ஆகையால் 'அநுப4விக்கிறான்' என்றே கொள்ளவேண்டும். "தன்னிடம் நிகழ்காலத்தில் சேர்ந்திருக்கும் இன்பதுன்பங்களை நேரே ஸாக்ஷாத்கரிப்பது (துய்ப்பது) போ4க3ம்" என்பது அநுப4வலக்ஷணமாகும். பரமஞானியான நம்மாழ்வாரிடம் மதுர்கவியாழ்வார் "செத்தத்தின் வயிற்றில் சிறியது பிறந்தால், அது எத்தைத்தின்று எங்கே கிடக்கும்?" [அறிவற்ற அசித்தான தே3ஹத்தோடு அணுவான ஆத்மா சேர்ந்து பிறப்பெடுத்தால், அது எதை அநுப4வித்துக்கொண்டு எங்கேயிருக்கும்?] என்று கேட்க, "அத்தைத்தின்று அங்கே கிடக்கும்" [அந்த சரீரத்தொடர்பினால் உண்டாகும் இன்பதுன்பங்களை அநுப4வித்துக்கொண்டு அந்த சரீரத்திலேயே இருக்கும்] என்று நம்மாழ்வார் உரைத்த பதில் இந்த ஶ்லோகார்த்த4த்தின் ஸாரார்த்த2மேயாகும் என்பது அறிந்து சுவைக்கத்தக்கது. (*21)

21. **வாய்ந்த பிரகிருதி நின்ற புருடனதி
லேய்ந்த குணத்தி னியல்பெய்துந்—தோய்ந்தகுண
சங்கமடி யான சதசத்தாம் யோனிகளிற்
றங்க வவப்பிறப்பிற் சார்ந்து.**

வாய்ந்த பிரகிருதி நின்ற புருடன்–(பொருந்தியிருக்கும்) ப்ரக்ருதிகார்யமான சரீரத்தில் இருக்கும் ஜீவன், **அதில் ஏய்ந்த குணத்தின் இயல்பு** —அந்த ப்ரக்ருதியின் குணங்களால் உண்டாகும் இன்பதுன்பங்களை, **தோய்ந்த குணசங்கம் அடியான**—அந்த இன்பதுன்பங்களைக் காரணமாகக்* கொண்ட, **சதசத்தாம் யோனிகளில் தங்கு அவ் அவ் அப்பிறப்பில் சார்ந்து**—(தே₃வர் முதலான) நல்ல யோனிகளிலும், (திர்யக் முதலான) தாழ்ந்தயோனிகளிலும் தங்கியிருக்கும் அந்தந்த தே₃வமநுஷ்யதிர்யக் ஸ்த₂ாவரப் பிறப்புகளை அடைந்து, **எய்தும்**—அநுப₄விப்பான்.

21* இயல்வான தன் ஸ்வரூபாநுப₄வத்தால் இன்பமே அடைய வேண்டிய புருஷன் ஶப்₃த₃ாதி₃ விஷயங்களை அநுப₄வித்து இன்ப துன்பங்களை அடைவது ப்ரக்ருதிஸம்ப₃ந்த₄த்தாலேயே என்று ஶ்லோகத்தின் முற்பாதியில் கூறப்பட்டது. இனி ஶ்லோகத்தின் பிற்பாதியிலே 'பரிசுத்₃த₄மான ஆத்மஸ்வரூபத்திற்கு அந்த ப்ரக்ருதிஸம்ப₃ந்த₄ம் உண்டாவதற்குக் காரணம் என்ன ?' என்னும் கேள்விக்கு பதில் அளிக்கப்படுகிறது. (அஸ்ய) பரிசுத்₃த₄மான ஸ்வரூபத்தையுடைய இந்தப் புருஷனுக்கு. (ஸத₃ஸத்₃யோநிஜந்மஸு காரணம் கு₃ணஸங்க₃:) தே₃வர் முதலான நல்ல யோனிகளிலும், திர்யக், ஸ்த₂ாவரம் என்னும் தாழ்ந்த யோனிகளிலும் பிறப்பு ஏற்படுவதற்குக் காரணம், முற்கூறிய ஸத்வாதி₃கு₃ணங்களால் உண்டாகும் இன்பதுன்பங்களில் பற்றேயாகும். "இன்பதுன்பங்களை அநுப₄விப்பதற்கு தே₃ஹஸம்ப₃ந்த₄ம் காரணம் என்றும், தே₃ஹஸம்ப₃ந்த₄ம் ஏற்படுவதற்கு இன்பதுன்பங்களில் பற்று காரணம் என்றும் கூறுவதால் அந்யோந்யாஶ்ரயணம் அநவஸ்தை₂ முதலான குற்றங்கள் உண்டாகுமே" எனில்,

भा ॥ पूर्वपूर्वप्रकृतिपरिणामरूपदेवमनुष्यादियोनिविशेषेषु स्थितोऽयं पुरुषः तत्तद्योनिप्रयुक्तसत्त्वादिगुणमयेषु सुखदुःखादिषु सक्तस्तत्साधनभूतेषु पुण्यपापकर्मसु प्रवर्तते; ततस्तत्पुण्यपापफलानु-भवाय सदसद्योनिषु साध्वसाधुषु योनिषु जायते; ततश्च कर्मा-

---

"விதைக்குக் காரணம் மரம்; மரத்திற்குக் காரணம் விதை" என்னும் பீ₃ஜாங்குரந்யாயத்தாலே அநாதி₃காலமாக ப்ரவாஹ ரூபமாக வரும் இவ்விஷயத்தில் அந்யோந்யாஶ்ரயணதோ₃ஷ மில்லை; முடிவில்லாமல் செல்லுகையாகிற அநவஸ்த₂ா தோ₃ஷமு மில்லை என்று கண்டுகொள்வது. அதாவது:— அநாதி₃காலமாக ப்ரக்ருதி பரிணாமமான தே₃வர், மனிதர் முதலான சரீரங்களி லிருக்கும் ஜீவன், அந்தந்த ஶரீரங்களுக்குரிய ஸத்வம் முதலான கு₃ணங்களால் விளையும் இன்பதுன்பங்களில் பற்றுக்கொள்கி றான். அதனால் அவற்றை அடைவதற்குரிய ஸாத₄னங்களான புண்யபாப கர்மங்களில் ஈடுபடுகிறான்; அதற்குப் பின் அந்தப்புண்யபாபங்களின் ப₂லனை அநுப₄ விப்பதற்காக முற்கூறிய தே₃வர் முதலான நல்ல ஶரீரங் களையோ, திர்யக் முதலான தாழ்ந்த ஶரீரங்களையோ அடைகிறான். மறுபடியும் அந்த ஶரீரங்களில் இன்ப துன்பங்களில் பற்றுக் கொண்டு அவற்றை விளைக்கும் புண்ய பாபகர்மங்களைச் செய் கிறான். அதன் ப₂லனை அநுப₄விக்க மறுபடியும் முற்கூறியபடி ஶரீரங்களை எடுக்கிறான். இவ்வண்ணமாக அநாதி₃காலமாக நடந்து வருகையால் இதில் அந்யோந்யாஶ்ரயணம், அநவஸ்தை₂ முத லான தோ₃ஷங்கள் இல்லை என்றபடி. இப்படி இன்பதுன்பங்களில் பற்றாலே புண்யபாபகர்மங்களைச்செய்து, புண்யத்தால் உயர்ந்த பிறப்பையும், பாபத்தால் தாழ்ந்த பிறப்பையும் அடைகிறார்க ளாகையாலே, "ரமணீயசரணா ரமணீயாம் யோநிமாபத்₃ யேரந்... ... ... கபூ₄யசரணா: கபூ₄யாம் யோநிமாபத்₃யேரந்" [சா₂ந் 5—10—7] [புண்ணியம் புரிந்தவர்கள் நல்ல பிறவிகளை அடைகிறார்கள்; பாபம் புரிந்தவர்கள் தாழ்ந்த பிறவிகளை அடை கிறார்கள்] என்னும் ஶ்ருதியில் பிறவிக்குக் காரணமாகப் புண்ய பாப கர்மங்களைச் சொன்னதற்கும், இங்கு இன்பதுன்பங்களில்

रभते; ततो जायते; यावदमानित्वादिकानात्मप्राप्तिसाधनभूतान् गुणान् [न]सेवते, तावदेव संसरति; तदिदमुक्तं * कारणं गुणसङ्गोऽस्य सदसद्योनिजन्मसु इति ॥ २१ ॥

பற்றைக் காரணமாகச் சொன்னதற்கும் முரண்பாடில்லை. ஸத்வாதி₃கு₃ணங்கள் நேரே பற்றை விளைக்க முடியாதாகையால், முற்பாதியிற்போலே இங்கும் கு₃ணஶப்₃த₃ம் கு₃ணகார்யமாய் பற்றை விளைக்கக்கூடிய இன்பதுன்பங்களை ஔபசாரிகமாகக் கூறுகிறது என்று கொள்ளவேண்டும். "இன்பத்தில் பற்று ஏற்படமுடியும்; துன்பத்தில் பற்று விளையுமோ?" எனில்: துன்பத்தையும் இன்பமாக ஜீவன் மயங்குகையாலே அதிலும் பற்று விளையலாம். பெரும் துன்பங்களை விளைக்கும் மது₄பானம் முதலானவற்றால் விளையும் அற்ப இன்பங்கருதி ஸுக₂ஸாத₄னமாக மயங்கி அவற்றில் ஈடுபடுகிறானன்றோ மனிதன். "ப்₄ராந்தி ஜ்ஞாநவதாம் பும்ஸாம் ப்ரஹாரோऽபி ஸுகா₂யதே" [வி.பு. 1-17-61] [மயங்கிய மனிதர்க்குத் (துன்பத்தைத்தரும்) அடியும் இன்பத்தைத்தருகிறது] என்றும் சொல்லப்பட்டதன்றோ. (அஸ்ய ஸத₃ஸத்₃யோநி ஜந்மஸு) சா₂ந்தோ₃க்₃யத்தில் [5-10-7] "ரமணீயாம் யோநிம், கபூயாம் யோநிம்" என்று சொல்லப்பட்டபடி நல்லயோனிகளில் பிறப்பையும், தாழ்ந்த யோனிகளில் பிறப்பையுமே ஸத₃ஸத்₃ யோநி ஜந்ம ஶப்₃த₃த்தால் உணர்த்துகையால், "ஸதூ₃ஸதோர் யோநிஷு ஜந்மஸு" [நல்லதுக்கும், தீயதுக்கும் காரணமான பிறவிகளில்] என்று ஶங்கரர் உரையிட்டது ஸ்வரஸமன்று என்று கண்டுகொள்வது. "ஜந்மஸு" என்னும் பன்மையால், ஒரு புருஷனே அநாதி₃கர்மப்ரவாஹத்தாலே விசித்திரமாய், கணக்கற்றதான ஸத₃ஸத்₃யோனிகள் பலவற்றிலும் பிறக்கிறான் என்று காட்டப்படுகிறது. இப்படி இன்பதுன்பங்களில் பற்றும், அதனால் புண்யபாபங்களைச் செய்வதும், அதனால் ஸத₃ஸத்₃யோநிகளில் பிறப்பும் அநாதி₃காலமாகத் தொடர்ந்து வருவதுபோலே, அநந்தமான வருங்காலத்திலும் இடையறாமல் தொடர்ந்து செல்லுமோ? எனில்: இவ்வத்தியாயத்தில் ஏழாவது ஶ்லோகம் தொடங்கிப் பதினோராவது ஶ்லோகம் ஈறாகச் சொல்லப்பட்ட ஆத்மப்ராப்திஸாத₄னங்களான அமாநித்வம் முதலிய இருபது கு₃ணங்களையும் இவன் பயின்று பெற்றானாகில்

उपद्रष्टाऽनुमन्ता च भर्ता भोक्ता महेश्वरः ।
परमात्मेति चाप्युक्तो देहेऽस्मिन् पुरुषः परः ॥ २२

22. உபத்₃ரஷ்டாऽநுமந்தா ச ப₄ர்த்தா போ₄க்தா மஹேஶ்வர: ।
பரமாத்மேதி சாப்யுக்தோ தே₃ஹேऽஸ்மிந் புருஷ: பர: ॥

அஸ்மிந் தே₃ஹே—இந்த தே₃ஹத்தில (இருக்கும்), **பர: புருஷ:**—(அளவற்ற ஞானசக்திகளை உடையவனுயி யிருககும) பெருமை பெற்ற இந்த ஜீவன், **உபத்₃ரஷ்டா**—(தே₃ஹத்தை) கண்டு செயலபுரிபவனுய், **அநுமந்தா**—(தே₃ஹம் செயல்படுவதை) அநுஸந்தி₄ப்பவனுய், **ப₄ர்த்தா**-தே₃ஹத்தைத் தாங்குபவனுய், **போ₄க்தா**—(தே₃ஹத்தின் செயல்களால் விளையும் இன்பதுன்பங்களை) அநுப₄விப்பவனுய், **மஹேஶ்வர:**—(தே₃ஹம், இந்த்₃ரியம், மனம, ஆகிய வற்றுக்குப்) பெரிய ஈஶ்வரனுய் (நியந்தாவாய்), **பரமாத்மா**—(தே₃ஹம், இந்த்₃ரியம், மனம் ஆகியவற்றைக் காட்டிலும்) பெரிய ஆத்மாவாயிருப்பான், **இதி சாபி உக்த:** — **என்றும்** சொல்லப்படுகிருன்.

இந்த அநாதி₃காலத் தொடர் நீங்கிவிடும், அதுவரையில் இது தொடர்ந்து வரும் என்பதும் இங்கு தாத்பர்யார்த்த₂மாகத் தேறும்; எப்படியெனில்: கு₃ணங்களில் பற்று ப்ரக்ருதிஸம்ப₃ந்த₄த்திற்குக் காரணம் என்று இங்கு சொல்லப்பட்டது. "காரணுபா₄வே கார்யாபா₄வ:" [காரணம் நீங்கிஞல் கார்யம் விளையாது] என்னும் நியாயத்தாலே, அமாநித்வம் முதலான ஆத்மகு₃ணங்களில் பயிற்சியாலே ஸத்வாதி₃கு₃ணங்களில் பற்று நீங்கியவுடன், ஸத₃ஸத்₃யோநி ஜந்மப்ரவாஹமும் தன்னடையே அறுந்துவிடும் என்பது தெளிவு. ஆகையால், நேரே இங்கு சொல்லப்படவில்லையாஞலும் முன்ப்ரகரணத்தையும், மற்ற சாஸ்திரவாக்யங்களையும் பார்க்கும்போது இவ்விஷயம் தாத்பர்யார்த்த₂மாகத் தேறக்குறையில்லை. (21*)

22 இவ்வுடம்பின் மேலாம் புருடன்கண் டேய்ந்திசைவா
னவ்வுடம்பு தாங்கி யதிற்றுய்ப்பான்—செவ்வியதிற்
றங்கியபே ரீசனுய்த் தான்பரம வான்மாவா
யிங்கியம்பப் பட்டா னிவன்.

இவ்வுடம்பில்—இந்த தே₃ஹத்தில் (இருக்கும்), **மேலாம் புருடன் இவன்**—(அளவற்ற ஜ்ஞாநஶக்திகளை உடையவனுயிருக்கும்) பெருமை பெற்ற இந்த ஜீவன், **கண்டு ஏய்ந்து**—தே₃ஹத்தைக் கண்டு செயல் புரிபவனுய், **இசைவான்**—(தே₃ஹம செயல்படுவதை) அநுஸந்திப்பவனுய், **அவ்வுடம்பு தாங்கி**—அந்தவுடம்பைத் தாங்குபவனுய, **அதில் துய்ப்பான்**—தே₃ஹத்தின் செயல்களால் விளையும் இன்ப துன்பங்களை அநுப₄விப்பவனுய், **செவ்வியதில் தங்கிய பேர் ஈசனுய்**—இந்திரியங்கள், மனம் ஆகியவற்ருல் சிறப்புப் பெற்றிருக்கும் அந்த தே₃ஹத்தில் தங்கிய பெரிய ஈஶ்வரனுய் (நியந்தாவாய்), **தான் பரம ஆன்மாவாய்**—(தே₃ஹம், இந்த்₃ரியம், மனம் ஆகியவற்றைக காட்டிலும) தானே பெரிய ஆத்மாவாக, **இங்கு இயம்பப்பட்டான்**—ஆத்ம ஞானிகளின் திரளில் சொல்லப் பட்டான்.

---

22. ஸத₃ஸத்₃யோநி ஜன்மங்களுக்குப் பிறகு உண்டாகும் ஸ்வபா₄வங்களைச் சொல்லுகிறது இந்த ஶ்லோகத்தில். இயற்கை நிலையில் அளவற்ற ஜ்ஞாந ஶக்திகளை உடையவனுயிருக்கும் இவன் முற்கூறிய ஜந்மங்களால் விளையும் ப்ரக்ருதி ஸம்ப₃ந்த₄த்தால் தன் தே₃ஹத்துக்கு மட்டும் மஹேஶ்வரனுய் அதற்குமட்டும் பரமாத்மாவாய் இருக்கிருன் என்கிறது. (உபத்₃ரஷ்டா) 'த்₃ரஷ்டா' என்று ப்ரமாணயுக்திகளைக்கொண்டு காணத்தக்கவற்றை நன்கு காண்பவனைச் சொல்லுகிறது. 'உபத்₃ரஷ்டா' என்று அப்படிக் கண்டதற்கு அநுகு₃ணமாகச் செயல்புரிபவனைச் சொல்லுகிறது. இங்கு தே₃ஹத்திலிருக்கும் புருஷனைப் பற்றிப் பேசுகையாலே தே₃ஹத்தைக்கண்டு அதற்கநுகு₃ணமாகச்

भा ॥ अस्मिन् देहेऽवस्थितोऽयं पुरुषो देहप्रवृत्त्यनुगुणसङ्कल्पादि-रूपेण देहस्योपद्रष्टा अनुमन्ता च भवति ; तथा देहस्य भर्ता च भवति; तथा देहप्रवृत्तिजनितसुखदुःखयोर्भोक्ता च भवति । एवं देहनियमनेन, देहभरणेन, देहशेषित्वेन च देहेन्द्रियमनांसि प्रति

செயல்புரிபவனைக் கூறுகிறது. (அநுமந்தா) இப்பத₃மும் அக் காரணத்தாலேயே தே₃ஹம் செயல்படுவதை அநுஸந்தி₄ப்பவன் என்று பொருள்படுகிறது. ஆக இரண்டு பத₃ங்களாலும் தே₃ஹம் செயல்புரிவதற்கு அநுகு₃ணமாக ஸங்கல்பம் செய்வது, தூண்டு வது ஆகியவற்றைச் செய்துகொண்டு தே₃ஹம் செயல்புரிவதை அநுஸந்தி₄த்துக் கொண்டிருப்பவன் என்றதாயிற்று. அன்றிக்கே, 'அநுமந்தா' என்று செயல்புரியும் தே₃ஹத்தை மேலும் செயல் புரியச் செய்பவன்—என்று கூறுவதாகவும் கொள்ளலாம். இங்குப் படிக்கப்படும் 'உபத்₃ரஷ்டா' முதலான எல்லா ஶப்₃த₃ங்களும் 'இன்னதைக் குறித்து' என்று காட்டாமல் பொதுவாகப் படிக்கப் பட்டிருந்தபோதிலும் இது தே₃ஹத்தையும் ஜீவனையும் பகுத்தறியும் ப்ரகரணமாகையாலும், இந்த ஶ்லோகத்திலேயே பிற்பாதியில் 'அஸ்மிந் தே₃ஹே புருஷ:' என்று 'ஜீவன் இருக்குமிடம் இந்த தே₃ஹம்' என்று கூறுகையாலும், இந்த ஜீவன் 'உபத்₃ரஷ்ட்ருத்வம்' முதலான தன்மைகளை உடையவனுயிருப்பது இந்த தே₃ஹத்தைக் குறித்தே என்று கொள்ளப்படுகிறது. (ப₄ர்த்தா) அவ்வண்ணமே இந்த தே₃ஹத்தை த₄ரிப்பவனுகவும் ஆகிறுன். (போ₄க்தா) அவ்வண்ணமே தே₃ஹம் செயல் புரிவதால் உண்டாகும் இன்பதுன்பங்களை அனுப₄விப்பவனுகவும் ஆகிறுன். இந்த நான்கு பத₃ங்களில் முதலிரண்டாலும தே₃ஹத்தை நியமிப்பவன் என்றும், 'ப₄ர்த்தா' என்னும் மூன்ருவது பத₃த்தால் தே₃ஹத்தை த₄ரிப்பவன் என்றும், 'போ₄க்தா' என் னும் நாலாவது பத₃த்தால் தே₃ஹத்திருல் விளையும் பயன்களை அனுப₄விப்பவன் என்றும் கூறுகையாலே நியமிப்பவனுயிருக்கை, த₄ரிப்பவனுயிருக்கை, பயன்களை அனுப₄விக்கும் ஶேஷியாயிருக்கை என்னும் மூன்றும் ஆத்ம லக்ஷணங்கள் என்றும், நியமிக்கப்படுவதாயிருக்கை,

महेश्वरो भवति तथाच वक्ष्यते * शरीरं यदवाप्नोति यच्चाप्युत्क्रामतीश्वरः। गृहीत्वैतानि संयाति वायुर्गन्धानिवाशयात् ॥ (१५-८) इति । अस्मिन् देहे देहेन्द्रियमनांसि प्रति परमात्मेति चाप्युक्तः । देहे मनसि चात्म-

---

த₄ரிக்கப்படுவதாயிருக்கை, பயன்களை விளைக்கும் ஶேஷப் பொருளாயிருக்கை என்னும் மூன்றும் தே₃ஹலக்ஷணங்கள் என்றும் உணர்த்தப்படுகிறது. இதனாலேயே பா₄ஷ்யகாரர் முதலிரண்டு பத₃ங்களை ஒரு வாக்யத்தாலும், மேல் பத₃ங்களைத் தனித்தனி வாக்யங்களாலும் விவரித்தார். (மஹேஶ்வர:) இவ்வண்ணமாக தே₃ஹத்தை நியமிப்பவனாகவும், தே₃ஹத்தை த₄ரிப்பவனாகவும், தே₃ஹத்துக்கு ஶேஷியாகவும் இருக்கையாலே தே₃ஹத்திற்கும் அதிலடங்கிய ஜ்ஞாந கர்மேந்த்₃ரியங்களுக்கும், மனத்துக்கும் பெரிய ஈஶ்வரனாய் இருப்பவன். கர்மத்துக்கு வஶப்பட்டுப் பிறந் திறந்து தடுமாறுகிற ஜீவனை ஈஶ்வரன் என்னலாமோ? எனில்;

> "ஶரீரம் யத₃வாப்நோதி யச்சாப்யுத்க்ராமதீஶ்வர: |
> க்₃ருஹீத்வைதாநி ஸம்யாதி வாயுர்க₃ந்தா₄நிவாஶயாத்||"
> [15—8]

[இந்த்₃ரியங்களுக்கு ஈஶ்வரனான ஜீவன் யாதொரு ஶரீரத்தைப் பெற்றிருந்து அதிலிருந்து கிளம்புகிறானோ, அப்படிக் கிளம்பும் போது, மணம்மிக்க பொருள்களிலிருந்து காற்றானது மணத்தை எடுத்துச் செல்வதுபோல், அந்த ஶரீரத்திலிருந்து ஸூ₄க்ஷ்மபூதங்களோடு கூடிய இந்த இந்த்ரியங்களை எடுத்துக்கொண்டு செல்கிறான்] என்று தன்னுடைய தே₃ஹேந்த்₃ரிய மனங்களைக் குறித்து ஜீவனை ஈஶ்வரன் என்று வழங்குகையாலே, இங்கும் அவற்றைக் குறித்து 'பெரிய ஈஶ்வரன்' என்று ஜீவனை வழங்கத் தட்டில்லை, (பரமாத்மா இதி சாபி உக்த:) ஆத்மா எனப்படும் தே₃ஹம், இந்த்₃ரியம், மனம் ஆகியவற்றைக் காட்டிலும ஜீவன் பெரிய ஆத்மாவாயிருக்கையாலே அந்த தே₃ஹத்திலிருக்கும் ஜீவன் பரமாத்மா என்றும் சொல்லப்படுகிறான். பரம்பொருளைக் குறிக்கும் பரமாத்மா என்னும் சொல்லை ஜீவனைக்குறித்து வழங்க லாமோ? எனில்: 'அஸ்மிந் தே₃ஹே புருஷ:' என்று இவனை இந்த தே₃ஹத்திலிருப்பவனாகக் கூறுகையாலும், இவனும் தன் னுடைய தே₃ஹேந்த்₃ரியமனங்களை ஜ்ஞாநத்தாலே வியாபித் திருக்கையாலும் இங்கு 'பரமாத்ம' ஶப்₃த₃ம் ஜீவனையே குறிக்

शब्दोऽनन्तरमेव प्रयुज्यते *ध्यानेनात्मनि पश्यन्ति केचिदात्मान-
मात्मना (२४) इति; अपिशब्दान्महेश्वर इत्यप्युक्त इति गम्यते;
पुरुषः परः — * अनादि मत्परम् (१२) इत्यादिनोक्तोऽपरिच्छिन्नज्ञान
शक्तिरयं पुरुषोऽनादिप्रकृतिसंबन्धकृतगुणसङ्गादेतद्देहमात्रमहेश्वरो देह-
मात्रपरमात्मा च भवति ॥ २२ ॥

கிறது என்று கொள்ள வேண்டும். பரமாத்மாவைக் குறிப்பதாகக் கொண்டால் 'அஸ்மிந் தே$_3$ஹே' [இந்த தே$_3$ஹத்தில்] என்று விஶேஷித்திருப்பது ஒட்டாது. "ஜீவாத்மாவைக் காட்டிலும் மேலான ஈஶ்வரனை 'மேலான ஆத்மா' என்பது பொருந்தும்; ஜீவாத்மாவை 'மேலான ஆத்மா' என்பது எப்படிப் பொருந்தும்? அவனைக் காட்டிலும் கீழான ஆத்மாக்கள் எவரும் இருப்பதாகத் தெரியவில்லையே" எனில்: தே$_3$ஹத்தையும் மனத்தையும் ஆத்ம ஶப்$_3$த$_3$த்தாலே ஶாஸ்த்ரங்களிலும் நிக$_4$ண்டுக்களிலும் குறித் திருக்கையாலே, அவற்றைக்காட்டிலும் மேலான ஜீவாத்மாவை மேலான ஆத்மா என்பது பொருந்தும். அடுத்துள்ள இருபத்து நாலாவது ஶ்லோகத்திலேயே "த்$_4$யாநேநாத்மநி பஶ்யந்தி கேசி த$_3$ாத்மாநமாத்மநா" [சிலர் ஶரீரத்தில் உள்ள ஆத்மாவை மனத்தாலே த்$_4$யானத்தின் மூலம் காண்கிறார்கள்] என்று ஶரீரத் தையும் மனத்தையுங்குறித்து ஆத்ம ஶப்$_3$த$_3$ம் வழங்கப்பட்ட தன்றோ. சகாரத்தை இட்டதோடு 'அபி'ஶப்$_3$த$_3$த்தையும் வழங்கு கையாலே 'மஹேஶ்வர' ஶப்$_3$த$_3$மும் இங்கு தே$_3$ஹேந்த்$_3$ரிய மனங்களுக்கு ஈஶ்வரனான ஜீவனையே குறிக்கிறது என்று உணர்த்தப்படுகிறது. 'உக்த:' [சொல்லப்பட்டான்] என்று கூறுகையாலும், பரம்பொருளையே முக்$_2$யமாகக் குறிக்கவல்ல இவ்விரு சொற்களும் ஜீவனைக்குறித்து அமுக்$_2$யமாக வழங்கப்படு கின்றன என்று உணர்த்தப்படுகிறது. (புருஷ: பர:) மேலான புருஷனாகிற இந்த ஜீவன். "அநாதி$_3$மத்பரம்" [13-12] என்று தொடங்கி இந்த ப்ரகரணத்திலேயே பல சிறப்புக்களை உடையவ னாகச் சொல்லப்பட்டவனாய், இயல்பான நிலையில் அளவற்ற ஜ்ஞான ஶக்திகளை உடையவனாயிருக்கும் இந்த ஜீவன் 'அஸ்மிந் தே$_3$ஹே' என்று குறிக்கப்பட்ட அநாதி$_3$ தே$_3$ஹ ஸம்ப$_3$ந்த$_4$த்தில் கட்டுப்பட்டிருக்கையால் உண்டான கு$_3$ணஸங்க$_3$த்தால் இந்த தே$_3$ஹத்துக்கு மட்டும் மஹேஶ்வரனாகவும், இந்த தே$_3$ஹத்துக்கு மட்டும் பரமாத்மாவாகவும் ஆகிறான் என்று கருத்து. 22.

य एनं वेत्ति पुरुषं प्रकृतिं च गुणैस्सह ।
सर्वथा वर्तमानोऽपि न स भूयोऽभिजायते ॥ २३

23 ய ஏநம் வேத்தி புருஷம் ப்ரக்ருதிம் ச கு₃ணைஸ்ஸஹ ।
ஸர்வதா₂ வர்த்தமாநோ ऽபி ந ஸ பூ₄யோ ऽபி₄ஜாயதே ॥

ஏநம் புருஷம் — முற்கூறிய இந்த ஜீவனையும் (ஏநாம்) **ப்ரக்ருதிம் ச** — இந்த ப்ரக்ருதியையும், **கு₃ணை: ஸஹ** — ஸத்வம் முதலான கு₃ணங்களோடு கூட, **ய: வேத்தி** — எவன உள்ளபடி பகுத்தறிகிருனோ, **ஸ:**— அவன், **ஸர்வதா₂ வர்த்தமாந: அபி** — தே₃வர் மனிதர் முதலான எந்த தே₃ஹத்தில் கட்டுண்டிருந்தாலும், **பூ₄ய: ந அபி₄ஜாயதே** — மறுபடியும் பிறவி எடுக்கமாட்டான்.

23. இந்தப் புருடனையு மிந்த வசித்தினையு
மந்தக் குணங்களுட னய்ந்தறிவா—னெந்தவவன்
எவ்வாறு மேவு மியல்பாற் றிரிந்திடினு
மிவ்வா றவன்பிறவா னிங்கு.

இந்தப்புருடனையும் — முற்கூறிய இந்த ஜீவனையும், **இந்த அசித்தினையும்** — இந்த அறிவற்ற ப்ரக்ருதியையும, **அந்த குணங்களுடன்** — அந்த ஸத்வம் முதலான குணங்களோடு கூட, **எந்த அவன் ஆய்ந்து அறிவான்** — எவன் உள்ளபடி பகுத்தறிகிருனோ, **அவன்** — அந்த ஜீவன், **எவ்வாறு மேவும் இயல்பால் திரிந்திடினும்** — தே₃வர் மனிதர் முதலான எந்த தே₃ஹத்தில் கட்டுண்டு திரிந்தாலும, **இங்கு** - இவ்வுலகில, **இவ்வாறு அவன் பிறவான்**— இதுவரை பிறந்ததுபோல அவன் மறுபடியும் பிறவி எடுக்கமாட்டான்.

---

23. இனி முப்பத்துமூன்ருவது ஶ்லோகம் ஈருக 'விவேக:' என்று கீ₃தார்த்த₂ ஸங்க்₃ரஹத்தில் சொல்லப்பட்ட—ஆத்மாவையும் அசித்தையும் பிரித்து அனுஸந்தி₄க்கும் முறை விவரிக்கப்படு

भा ।। एनम्—उक्तस्वभाव पुरुषम् [एनाम्-] उक्तस्वभावां च प्रकृतिं वक्ष्यमाणस्वभावयुक्तैस्सत्त्वादिभिर्गुणैस्सह, यो वेत्ति — यथावद्विवेकेन जानाति, स सर्वथा- देवमनुष्यादिदेहेष्वतिमात्रक्लिष्टप्रकारेण

கிறது. அதில் மிகவும் ஈடுபாடு உண்டாவதற்காக இந்த ஶ்லோகத்தில் அதன் ப$_2$லம் முதலில் காட்டப்படுகிறது. (ஏநம் புருஷம்) 'அநாதி$_3$ மத்பரம்' என்ற ஶ்லோகந் தொடங்கி விவரிக்கப்பட்ட தன்மைகளையுடைய ஜீவனையும். (ப்ரக்ருதிஞ்ச) 'மஹாபூ$_4$தாநி' என்று தொடங்கி இரண்டு ஶ்லோகங்களாலே விவரிக்கப்பட்ட தன்மைகளையுடைய ப்ரக்ருதியையும். 'ஏநம் புருஷம்' என்ற விடத்திலுள்ள ஏதச்ச$_2$ப்$_3$த$_3$த்தைப் பெண்பாலாக்கி 'ஏநாம் ப்ரக்ருதிம்' என்று இங்கும் கூட்டிக்கொள்ள வேணும். புருஷனைப் போலே ப்ரக்ருதியும் முன்பே விளக்கப்பட்டதன்றோ. (கு$_3$ணைஸ் ஸஹ யோ வேத்தி) ஸத்வம் ரஜஸ் தமஸ் என்னும் முக்கு$_3$ணங்களோடுகூட எவன் உள்ளபடி பகுத்தறிகிருனே. இந்த கு$_3$ணங்கள் முன்பே காட்டப்பட்டனவாயினும், அடுத்ததான பதினுன்காம் அத்$_4$யாயத்திலேயே இவை விரிவாக விளக்கப்படப்போகின்றன. ப்ரக்ருதியும புருஷனுமே முக்$_2$யமான தத்துவங்களாகையாலும் ஸத்வாதி$_3$ கு$_3$ணங்கள் அமுக்$_2$யமானவையாகையாலும் "ஸஹ-யுக்தே அப்ரத$_4$ாநே" என்னும் பாணிநி ஸூத்ரத்தை அநுஸரித்து 'கு$_3$ணைஸ்ஸஹ' என்று கு$_3$ணங்களின் அப்ராத$_4$ாந்யம் உணர்த்தப் பட்டது. ப்ரக்ருதிபுருஷர்கள் இருவரையும் எடுத்து அதையொட்டி 'கு$_3$ணைஸ்ஸஹ' என்று படிக்கப்பட்டிருக்கும்போது, இந்த கு$_3$ண ஶப்$_3$த$_3$ம் ப்ரக்ருதி கு$_3$ணங்களை மாத்திரமே சொல்லுகிறது என்று ப$_4$ாஷ்யமிட்டிருப்பதற்குக் காரணமென்ன? எனில்: இன்ன கு$_3$ணமென்று விஶேஷிக்காமல் பொதுவாகப் படிக்கப்படும் கு$_3$ண ஶப்$_3$த$_3$ம் ஶாஸ்த்ரங்களில் பெரும்பாலான இடங்களில் ஸத்வாதி$_3$ கு$_3$ணங்களைக் குறித்தே வழங்கப்படுவதைக் காண்கிருேமாகையாலே அப்படி ப$_4$ாஷ்யமிடப்பட்டது. (யோ வேத்தி) ப்ரக்ருதியையும் அதன் கு$_3$ணங்களையுமறிவது அஸாத்$_3$த$_4$ ஜ்ஞாநமாகையாலே அது மறுபிறவியின்மைக்கு எப்படிக் காரணமாக முடியும்? எனில்: (ஏநாம் ப்ரக்ருதிம்) என்று ப்ரக்ருதியையும் அதன் கு$_3$ணங்களையும் கைவிடத் தக்கவை என்று உள்ளபடி பகுத்து

वर्तमानोऽपि न भूयोऽभिजायते–न भूयः प्रकृत्या संसर्गमर्हति, अपरिच्छिन्नज्ञानलक्षणमपहतपाप्मानमात्मानं तद्देहावसानसमये प्राप्नोतीत्यर्थः ॥ २३ ॥

அறிகையே இங்கு சொல்லப்படுகிறதாகையாலே, அதுவும் மோக்ஷத்திற்குக் காரணமாகும். (ஸர்வதா₂ வர்த்தமாநோऽபி) தே₃வர் மனிதர் முதலான தே₃ஹங்களில் மிகவும் க்லேஶங்களை அநுப₄வித்துக்கொண்டு இருந்தபோதிலும். மனம் போனபடி வாழ்வது மோக்ஷத்திற்குக் காரணமாகாதாகையால் இங்கு 'ஸர்வதா₂ வர்த்தமாநோऽபி' என்றதற்கு 'எப்படி வாழ்ந்தாலும்' என்று பொருள் கொள்வது பொருந்தாது. ஆகையால் 'பலவகைப் பட்ட தே₃ஹங்களில் ஆத்மஸாக்ஷாத்காரத்துக்குத் தடையான விசித்ரமான க்லேஶங்களோடு வாழ்ந்தாலும்' என்றே பொருள் கொள்ளவேண்டும். ஆத்மஜ்ஞாநியானவன் ப்ராரப்₃த₄ கர்ம வஶத்தாலே அவ்வப்போது க்லேஶங்களை அநுப₄வித்தாலும், மற்ற மனிதர்களுக்குப்போல் அவனுக்கு மறுபிறவி ஏற்படாது என்று 'அபி' ஶப்₃த₃த்தோடு கூடிய உத்தரார்த்த₄த்தால் உணர்த்தப் படுகிறது. 'க்லேஶத்தோடு கூடியிருப்பவர்களுக்கும் மறுபிறவி யில்லை' என்று கூறுவதால் ஆத்மஸாக்ஷாத்காரம் கைவரப் பெற்றவர்களாய் க்லேஶமற்றிருப்பவர்களான அதி₄காரிகளுக்கு மறுபிறவியில்லை என்பது சொல்லாமலே விளங்கும். இதையே நம்மாழ்வாரும் 'அற்றது பற்றெனில் உற்றது வீடுயிர்' [திருவாய் 1-2-5] என்று அருளிச்செய்தார். (ஸ: ந பூ₄ய: அபி₄ஜாயதே) அந்த ஜீவன் மறுபடி ப்ரக்ருதி ஸம்ப₃ந்த₄ம் ஏற்படுவதற்குத் தகாதவனாகிவிடுவான்; அளவற்ற ஜ்ஞாநத்தையுடையதாய், பாபங்கள் நீங்கப்பெற்றதான தனது ஆத்மஸ்வருபத்தை அந்த தே₃ஹத்தின் முடிவிலேயே அடைந்துவிடுவான் என்று கருத்து. 'ந ஜாயதே ம்ரியதே' [கீ₃தை. 2-20] என்னும் ஶ்லோகத்தில் 'ஆத்மஸ்வருபம் பிறவாமல் நித்யமாய் இருப்பது' என்று ஆத்ம நித்யத்வம் சொல்லப்பட்டுவிட்டதாகையால், இங்கு அதைச் சொல்லவேண்டிய அவஶ்யமில்லை. மேலும், அப்படிப் பொருள் கொண்டால் 'பூ₄ய:' [மறுபடியும] என்னும் பத₃ம் ஒட்டாது. ஆகையால் 'ஸத₃ஸத்₃யோநிஜந்மஸு' [21] என்று இந்த ப்ரகரணத்தில் சொல்லப்பட்ட தே₃ஹஸம்ப₃ந்த₄ருபமான பிறவி

ध्यानेनात्मनि पश्यन्ति केचिदात्मानमात्मना।
अन्ये साङ्ख्येन योगेन कर्मयोगेन चापरे ॥ २४

24. த்₄யாநேநாத்மநி பஶ்யந்தி கேசிதா₃த்மாநமாத்மநா ।
அந்யே ஸாங்க்₂யேந யோகே₃ந கர்மயோகே₃ந சாபரே ।

கேசித் — (யோக₃ம் கைவந்த) சிலர், **ஆத்மநி** — ஶரீரத்தில் (இருக்கும்), **ஆத்மாநம்** — தமது ஆத்மாவை, **ஆத்மநா**—மனத்தாலே, **த்₄யாநேந** - யோக₃த்தின் மூலம், **பஶ்யந்தி**—காண்கிறூர்கள். **அந்யே** — (யோக₃ம கைவரப் பெருத) சிலா; **ஸாங்க்₂யேந யோகே₃ந**—ஜ்ஞாந யோக₃த்தினுல் (மனத்தை யோக₃த்துக்குத தகுதியுளளதாக்கி முற்கூறியபடி ஆத்மாவைக் காண்கிறூர்கள்); **அபரே ச**— மறறும் சிலர், **கர்மயோகே₃ந** — (ஜ்ஞானத்தை உள்ளடககிய) கர்மயோக₃த்தாலே (மனததை யோக₃த்துக்குத் தகுதி யுள்ளதாக்கி முற்கூறியபடி ஆத்மாவைக் காண்கிறூர்களா.)

24. மிக்கார் சிலர்நெஞ்சால் மெய்ப்பரதி யானத்தாற்
றக்கா ருயிர்காண்பர் தாஞ்சிலர்கள்—எக்கால
சாங்கியயோ கந்தன்னுற் றங்கரும யோகத்தா
லாங்கறிவர் வேறுசில ராய்ந்து.

அவனுக்கு மறுபடியும் ஏற்படுவதில்லே என்று கூறுவதாகவே கொள்ளவேண்டும். ப்ரளய த₃ஶையில் தே₃ஹமே அழிந்தபின்பு இவனுக்குப் பிறவி இல்லாமல் இருந்தாலும், மறுபடியும் ஸ்ருஷ்டி காலத்தில் பிறவி உண்டாவதற்குத் தகுதி இருக்கிறதாகையாலே, 'மறுபடியும் பிறவி ஏற்படுவதற்குத் தகுதியற்றவனுகிருன்' என்று பொருள்கொள்ளப்பட்டது. 'மறுபிறவியில்லே' என்று அநிஷ்ட நிவ்ருத்தியைச் சொன்னதால், அளவற்ற அறிவையுடையதாய், பாபங்கள் நீங்கப்பெற்றதான தன் ஆத்மஸ்வருபத்தை அடைகையாகிற இஷ்டப்ராப்தியும் சொல்லப்பட்டதாகவே ஆகும். 23

भा ।। केचित् - निष्पन्नयोगा आत्मनि—शरीरेऽवस्थितमात्मानम् आत्मना - मनसा ध्यानेन - योगेन पश्यन्ति ; अन्ये च अनिष्पन्न-

---

மிக்கார் சிலர்—யோகமும் கைவந்த சிலர், **மெய்** — ஶரீரத்தில (இருககும்) **ஆருயிர்**—தமது ஆத்மாவை, **நெஞ்சால்** — மனத்தாலே, **தக்கபரதியானத்தால்** — தகுதியும் சிறப்புமுடைய யோகத்தின் மூலம், **தாம் காண்பர்**—தாமே காண்கிறார்கள். **சிலர்கள்** - (யோகமும் கைவரப்பெறாத) சிலர், **எக்கால சாங்கிய யோகந்தன்னால்** — எக்காலத்திலும் அநுஷ்டிக்கப்படும் ஜ்ஞாநயோகத்தாலும், **வேறு சிலர்**—மற்றும் சிலர், **தம் கருமயோகத்தால்** — தாம் அநுஷ்டிக்கும் (ஜ்ஞாநத்தோடு கூடிய) கர்மயோகத்தாலும் (மனத்தை யோகத்துக்குத் தகுதியுடையதாக்கி), **ஆங்கு ஆய்ந்து அறிவர்** — முற்கூறியபடி ஆத்மாவை நன்கு காண்பர்.

---

24. முன் ஶ்லோகத்தில் 'ய ஏநம் வேத்தி புருஷம்' என்று சொல்லப்பட்டதை இரண்டு ஶ்லோகங்களாலே விவரித்துக் கொண்டு, ஆத்ம ஜ்ஞாநத்தின் பல படிகளைக் கூறுகிறான். அதில் முதற்பாதியாலே ஜ்ஞாநகர்மயோகங்கள் நிறைவுற்று யோகநிலை கைவரப்பெற்றவர்களையும், பிற்பாதியாலே யோகமும் கைவரப் பெறாத ஜ்ஞாநயோகநிஷ்டர்களையும் கர்மயோகநிஷ்டர்களையும் கூறுகிறான். (கேசித்) ஜ்ஞாந கர்மயோகங்கள் நிறைவுற்று யோகநிலை கைவரப்பெற்ற சிலர். (ஆத்மநி ஆத்மாநம்) ஆத்ம ஶப்தத்தால் சொல்லப்படும் ஶரீரத்திலிருக்கும் தம்முடைய ஜீவாத்ம ஸ்வரூபத்தை. (ஆத்மநா பஶ்யந்தி) ஆத்மா எனப்படும் மனத்தாலே காண்கிறார்கள். இங்கு 'ஆத்மநி', 'ஆத்மாநம்' 'ஆத்மநா' என்று மூன்று ஆத்ம ஶப்தங்கள் வெவ்வேறு வேற்றுமைகளில் படிக்கப்படுகையால் 'ஆத்மநி' என்று இருப்பிடத்தைச் சொல்லும் ஶப்தத்திற்கு இருப்பிடமான ஶரீரமும், 'ஆத்மாநம்' என்று காணப்படும் விஷயத்தைச் சொல்லும் ஶப்தத்திற்குக் காணப்படும் ஜீவாத்மாவும் 'ஆத்மநா' என்று காண்கைக்கு உபகரணத்தைச் சொல்லும் ஶப்தத்திற்கு உபகரணமான மனமும் பொருளாகக் கொள்ளப்பட்டன. (த்யாநேந

योगाः, साङ्ख्येन योगेन – ज्ञानयोगेन योगयोग्यं मनः कृत्वा आत्मानं पश्यन्ति । अपरे – ज्ञानयोगानधिकारिणः, तदधिकारिणश्च

பஶ்யந்தி) யோக3த்தாலே காண்கிறார்கள். இந்த ஶ்லோகத்தின் பிற்பாதியிலும், அடுத்த ஶ்லோகத்திலும் மேன்மேலே தாழ்ந்த அதி4காரிகள் கூறப்படுவதாக விளங்குகையாலும், பிற்பாதியில் 'ஸாங்க்2யேந யோகே3ந' என்று ஜ்ஞாநயோக3மும், 'கர்ம யோகே3ந' என்று கர்மயோக3மும் சொல்லப்படுகிறதென்று வெளிப்படையாக விளங்குகையாலும் இங்கு த்4யாந ஶப்3த3த்தால் கர்மஜ்ஞாந யோக3ங்களைக் காட்டிலும் உயர்ந்ததாய், நேரே 'யோக3ம' என்று சொல்லத்தக்கதானதொரு நிலை கூறப்படுவ தாகக் கொள்ளப்படுகிறது, இனி, ஶ்லோகத்தின் பிற்பாதியாலே யோக3நிலை கைவரப்பெறாத ஜ்ஞாநயோக3 நிஷ்டா2ர்களும் கர்ம யோக3நிஷ்டா2ர்களும் மனத்தை யோக3நிலைக்குத் தகுதியுள்ள தாக்கி ஆத்மாவைக் காண்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. (அந்யே ஸாங்க்2யேந யோகே3ந) முற்பாதியில் சொல்லப்பட்ட யோக3நிலை கைவரப்பெறாத சிலர் ஜ்ஞாநயோக3த்தாலே மனத்தை யோக3த்துக்குத் தகுதியுள்ளதாக்கி அந்த மனத்தாலே ஶரீரத்தில் இருக்கும் தம் ஆத்ம ஸ்வரூபத்தைக் காண்கிறார்கள். 'ஆத்மநி ஆத்மாநம் ஆத்மநா பஶ்யந்தி' என்னும் பத3ங்களை முற்பாதியி லிருந்து மூன்றாவது நாலாவது பாத3ங்களில் தனித்தனியே கூட்டிப் பொருள்கொள்ள வேண்டும். மேன்மேலே தாழ்ந்த நிலை களைச் சொல்லுவது வெளிப்படையாக விளங்குகையால், முற்பாதி யில் சொல்லப்பட்ட யோக3நிலை கைவரப்பெறாதவர்களே மூன்றா வது நாலாவது பாத3ங்களில் சொல்லப்படுகிறார்கள் என்று விளங்குகிறது. அதில் "ஜ்ஞாநயோகே3ந ஸாங்க்2யாநாம்" [3-3] என்று ஏற்கனவே ஜ்ஞாநயோகி3களை ஸாங்க்2ய ஶப்3த3த்தால் குறித்திருக்கையால் 'ஸாங்க்2யேந யோகே3ந' என்று ஜ்ஞாந யோக3மே சொல்லப்படுவதாக விளங்குகிறது. இவர்கள் தமது ஜ்ஞாநயோக3த்தாலே தம் மனத்தை யோக3நிலைக்குத் தகுதியுள்ள தாக்கி யோக3த்தாலே ஆத்மாவைக் காண்கிறார்கள் என்று கொள்ளவேண்டும். (கர்மயோகே3ந சாபரே) யோக3நிலை

सुकरोपायसक्ताः, व्यपदेश्याश्च, कर्मयोगेनान्तर्गतज्ञानेन मनसो योग-
योग्यतामापाद्यात्मानं पश्यन्ति ॥ २४ ॥

अन्ये त्वेवमजानन्तः श्रुत्वाऽन्येभ्य उपासते ।
तेऽपि चातितरन्त्येव मृत्युं श्रुतिपरायणाः ॥ २५

25. அந்யே த்வேவமஜாநந்த: ஶ்ருத்வாऽந்யேப்4ய
உபாஸதே ।
தேऽபி சாதிதரந்த்யேவ ம்ருத்யும் ஶ்ருதிபராயணா: ॥

ஏவம் அஜாநந்த:—முற்கூறிய ஆத்மத3ர்ஶந ஸாத4நங்களை அறியாத, **அந்யே து** — மற்றும் சிலரோவெனில், **அந்யேப்4ய:** — ஜ்ஞானிகளிடமிருந்து, **ஶ்ருத்வா** — கர்மயோக3ம் முதலானவற்றை உபதே3ஶமூலமாக அறிந்து, **உபாஸதே** — (அவற்றைக்கொண்டு ஆத்மாவை) உபாஸிக்கிருர்கள்; **ஶ்ருதிபராயணா: தே அபிச**—உபதே3ஶம் பெறுவதிலே ஈடுபட்ட அவர்களும், **ம்ருத்யும்**—ஸம்ஸாரத்தை, **அதிதரந்தி ஏவ**—கடக்கவே செய்கிருர்கள்.

கைவரப்பெருத மற்றும் சிலர் முதல் ஷட்கத்தில் சொன்னபடி ஜ்ஞாநத்தை உள்ளடக்கிய கர்மயோக3த்தாலே மனத்தை யோக3 நிலைக்குத் தகுதியுள்ளதாக்கி யோக3த்தாலே ஆத்மாவைக் காண்கிருர்கள். இங்கு "கர்ம யோகே3ந" என்று சொன்னபோதிலும், ஜ்ஞாநத்தை உள்ளடக்காத வெறும் கர்மயோக3ம் ஜ்ஞாநயோக3த்தை இடையிடாமல் யோக3த்தை விளைக்காதாகையாலே, 'ஜ்ஞாநத்தை உள்ளடக்கிய கர்மயோக3ம்' என்று கர்மயோக3 ஶப்3த3த்திற்குப் பொருள் கொள்ளப்பட்டது. முதல் ஷட்கத்தில் சொன்னபடி அஶக்தியினுலே ஜ்ஞாநயோக3த்தில் அதி4காரமில்லாதவர்களாய்க் கர்மயோக3த்தில் இழிந்தவர்களும், அதில் அதி4காரம் இருந்தபோதிலும் எளிய உபாயமான கர்மயோக3த்தில் ஈடுபட்டவர்களும், ஜ்ஞாந யோக3த்தில் அதி4காரம் இருந்தபோதிலும் லோகப்ரஸித்3தி4 பெற்றவர்களாய், அதில் அதி4காரமில்லாதவர்களை ரக்ஷிப்பதற்காகக் கர்மயோக3த்தையே அனுஷ்டி2க்க வேண்டியவர்களும் இங்கு 'அபரே' என்னும் ஶப்3த3த்தால் குறிக்கப்படுகிருர்கள்.

24

25. மற்றிங்கவ் வாறறியார் மன்னறிவார் பாற்கேள்வி
யுற்றன் புடனே யுபாசிப்ப—ற்றமா
வந்த வவரு மரும்பவத்தைத் தாங்கடப்பர்
இந்த மிகக்கேள்வி யேய்ந்து.

மற்று இங்கு அவ்வாறு அறியார் — முற்கூறிய ஆத்ம தர்ஶந ஸாதநங்களை அறியாத மற்றும சிலர், **மன்னறிவார்பால்** — நிலைநின்ற அறிவுடையவர்களிடம், **கேள்வி யுற்று**—(கர்மயோகம முதலானவற்றை) உபதேஶ மூலமாகப்பெற்று. **அன்புடனே உபாசிப்பர்** — (அவற்றைக் கொண்டு ஆத்மாவை) அன்புடன் உபாஸிக்கிறார்கள். **அந்த அவரும்** — அத்தகைய அவர்களும், **இந்த கேள்வி மிக ஏய்ந்து**—இந்த உபதேஶத்தை மிகுதியாகப்பெற்று. **அரும் பவத்தை**— கடக்க அரிதான ஸம்ஸாரத்தை, **அற்றமா**—உறுதியாக, **தாம் கடப்பர்** — தாமே தாண்டுவர்.

---

25. ஜ்ஞாநயோகமும் அல்லது கர்மயோகமும் கைவரப்பெறாதவர்களான முமுக்ஷுக்கள் கைவரப்பெற்றவர்களிடமிருந்து உபதேஶம் பெற்றுக் கர்மயோகத்தைத் தொடங்கும் நிலை இந்த ஶ்லோகத்தில் கூறப்படுகிறது. (அந்யே து) முன் ஶ்லோகத்தில் சொன்னபடி ஆத்மதர்ஶன ஸாதனமான ஜ்ஞாநயோகமோ அல்லது கர்மயோகமோ தொடங்காதவர்கள். 'து' ஶப்தத்தாலும் 'ஏவம் அஜாநந்த:' [முற்கூறியபடி அறியாதவர்கள்] என்னும் தொடராலும், தம் ஆத்மாவைப் பகுத்தறிய ஶக்தியில்லாமையால், ஆத்மதர்ஶந ஸாதனமான கர்மயோகம் முதலானவற்றில் தொடக்கமும் செய்யாதவர்கள் இவர்கள் என்று விளங்குகிறது. (அந்யேப்ய: ஶ்ருத்வா) ஆத்மாவை உள்ளபடி அறிந்த ஞானிகளிடமிருந்து உபதேஶம் பெற்று, "உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ் தத்த்வதர்ஶிந:" [4-24] [ஆத்மாவை உள்ளபடி அறிந்தவர்களான ஞானிகள் உனக்கு ஆத்மாவைப்பற்றிய உண்மையறிவை உபதேஶிப்பார்கள்] என்று முன்னமே சொல்லப்பட்டதாகையாலே, உபதேஶிப்பவர்களைக் காட்டும்

भा॥ अन्ये तु — कर्मयोगादिष्वात्मावलोकनसाधनेष्वनधिकृताः अन्येभ्यः — तत्त्वदर्शिभ्यो ज्ञानिभ्यः श्रुत्वा कर्मयोगादिभिरात्मानमुपासते; तेऽप्यात्मदर्शनेन मृत्युमतितरन्ति; ये श्रुतिपरायणाः — श्रवणमात्रनिष्ठाः, ते च श्रवणनिष्ठाः पूतपापाः क्रमेण कर्मयोगादिकमारभ्यातितरन्त्येव मृत्युम्; अपिशब्दाच्च पर्वभेदोऽवगम्यते ॥ २५ ॥

'அந்யேப்$_4$ய:' என்னும் பத$_3$ம் ஆத்மதத்வத$_3$ர்ஶிகளான ஞானிகளையே குறிக்கும். (உபாஸதே) அவ்வுபதே$_3$ஶத்தாலே கர்மயோக$_3$ம் முதலானவற்றை அறிந்து அவற்றைக்கொண்டு ஆத்மாவை உபாஸிக்கிறார்கள். (ஶ்ருதிபராயணா: தேऽபி ம்ருத்யும் அதிதரந்த்யேவ) உபதே$_3$ஶம் பெறுவதில் ஈடுபட்ட அவர்களும் முற்கூறியபடி கர்மயோக$_3$ம் முதலானவற்றாலே ஆத்மாவைக்கண்டு ஸம்ஸாரத்தைத் தாண்டவே செய்கிறார்கள். அன்றிக்கே, 'ஶ்ருத்வா உபாஸதே' என்று சொன்னதோடு புநருக்தி ஏற்படாமைக்காக, 'ஶ்ருதி பராயணா:' என்னும் பத$_3$ம் உபதே$_3$ஶம்பெற்று உபாஸிக்கும் முற்கூறியவர்களைக் காட்டிலும் தாழ்ந்த ஶ்ரவணமாத்ரநிஷ்ட$_2$ர்களைக் கூறுவதாகவும் கொள்ளலாம். இப்போது, "(யே) ஶ்ருதிபராயணா:" என்னும் தொடரோடு "தேऽபி ம்ருத்யும் அதிதரந்த்யேவ" என்னும் தொடரை மறுபடியும் கூட்டிப் பொருள்கொள்ளவேண்டும். உபதே$_3$ஶம்பெற்றுக் கர்மயோக$_3$த்தாலே ஆத்மாவை உபாஸிக்கத் தொடங்காமல், இவர்கள் பல ஞானிகளிடம் கேட்பதிலேயே ஈடுபட்டிருப்பார்கள். இவர்களும் அந்த ஶ்ரவணநிஷ்டையாலேயே உபதே$_3$ஶம் பெறுவதற்குத் தடையாயிருந்த பாபம் நீங்கப்பெற்றுக் கிரமமாக உபதே$_3$ஶம் பெற்றுக் கர்மயோக$_3$ம் முதலியவற்றை அறிந்து அவற்றைத் தொடங்கி ஆத்மாவை உபாஸிக்கும் முற்கூறிய அதி$_4$காரிகளாகி ஸம்ஸாரத்தைத் தாண்டுகிறார்கள் என்று கருத்து. "தேऽபி" என்னும் ஶப்$_3$த$_3$த்தாலே "மிகத்தாழ்ந்த இந்த அதி$_4$காரிகளே ஸம்ஸாரக்கடலைத் தாண்டும்போது, முற்பட்டவர்கள் ஸம்ஸாரக் கடலைத் தாண்டுவதற்குச் சொல்லவும் வேண்டுமோ?" என்னும் கருத்து தோன்றுகையாலே, இவ்விரு ஶ்லோகங்களிலும் முன்னவர்களைக் காட்டிலும் படிப்படியாகத் தாழ்ந்த படியிலுள்ள அதி$_4$காரிகளே குறிக்கப்படுகிறார்கள் என விளங்குகிறது.

भा ॥ अथ प्रकृतिसंसृष्टस्यात्मनो विवेकानुसन्धानप्रकारं वक्तुं सर्वं स्थावरं जङ्गमं च सत्त्वं चिदचित्संसर्गजमित्याह—

यावत्संजायते किञ्चित्सत्त्वं स्थावरजङ्गमम् ।
क्षेत्रक्षेत्रज्ञसंयोगात्तद्विद्धि भरतर्षभ ॥ २६

26 யாவத் ஸஞ்ஜாயதே கிஞ்சித் ஸத்த்வம் ஸ்தா$_2$வர
ஜங்க$_3$மம் ।
க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞ ஸம்யோக$_3$ாத் தத்$_3$வித்$_3$தி$_4$
ப$_4$ரதர்ஷப$_4$ ॥

ப$_4$ரதர்ஷப$_4$—ப$_4$ரதகுலத்தலைவனே! **கிஞ்சித் ஸ்தா$_2$வர ஜங்க$_3$மம்**—அசையாததொரு ஸ்தா$_2$வரமாகவோ, அசையும் ஒரு ஜங்க$_3$மமாகவோ, **யாவத் ஸத்த்வம் ஸஞ்ஜாயதே**-எவ்வளவு ஜந்து பிறக்கின்றதோ, **தத்**—(அவ்வளவு ஜந்துவின்) அப்பிறப்பு அனைத்தும், **க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞ ஸம்யோக$_3$ாத்**—க்ஷேத்ரம் (சரீரம்) க்ஷேத்ரஜ்ஞன் (ஜீவன்) ஆகிய இரு தத்துவங்களின் சேர்த்தியாலேயே (உண்டாகிறது என்று) **வித்$_3$தி$_4$**—அறிவாய்.

26. எவ்வளவு நின்றியலு மிந்தப் பொருளுண்டா
மவ்வளவு தன்னை யடல்விசயா—இவ்வகையே
சித்து மசித்துஞ் சிறந்த புணர்ப்பதனு
லொத்தியல்வ தென்றே யுணர்.

---

26. சென்ற மூன்று ஶ்லோகங்களில் ஆத்மாவையும், அசித்தையும் பிரித்தறியும் முறையாகிற விவேகத்தினால் விளையும் ப$_2$லனும், பிரித்தறிபவர்கள் தங்கள் பக்குவத்திற்கேற்பப் பல படிகளில் உள்ளனர் என்பதும் விளக்கப்பட்டது; அடுத்த ஶ்லோகத்திலிருந்து பிரித்து அநுஸந்தி$_4$க்கும் முறையாகிற விவேகம் விளக்கப்படவுள்ளது, இப்படிப்பிரித்தறிவது மிகவும் அரிதாயிருப்பதற்குக் காரணம்-அசைவனவும் அசையாதனவுமான எல்லா ஜீவ ராசிகளும் கர்மப$_2$லனை அநுப$_4$விக்கிற சித்தாகிற தம் ஆத்மாவும்,

भा ॥ यावत् स्थावरजङ्गमात्मना सत्त्वं जायते, तावत् क्षेत्रक्षेत्रज्ञयोरितरेतरसंयोगादेव जायते - संयुक्तमेव जायते, न त्वितरेतरवियुक्तमित्यर्थः ॥ २६ ॥

அடல் **விசயா**—போரில் வல்ல விஜயனே! **நின்று இயலும் இந்த பொருள்** — அசையாது நிற்கும் ஸ்த$_2$ாவரமாகவும அசையும் ஜங்க$_3$மமாகவும் உள்ள இந்த ஜீவ ராசி, **எவ்வளவு உண்டாம்** — எத்தனை உள்ளதோ, **அவ்வளவு தன்னை**— அத்தனை பொருளையும், **இவ்வகையே**—முற்கூறிய படி, **சித்தும் அசித்தும் சிறந்த புணர்ப்பதனால் ஒத்து இயல்வது என்றே**—சரீரமும் ஜீவனும் சிறப்பாகச் சேர்ந்திருப்பதால் ஒன்றுபட்டுச் செயல்படுவது என்றே, **உணர்**— அறிவாய்.

அதை அநுப$_4$விக்குமிடமாய், அசித்தாகிற தே$_3$ஹமும் பிறக்கும் போதிலிருந்தே (கர்மமாகிற கயிற்றுல்) அழுந்தக்கட்டப்பட்டிருப்பதேயாகும் என்கிறது இந்த ஶ்லோகம், (கிஞ்சித் ஸ்த$_2$ாவர ஜங்க$_3$மம் யாவத் ஸத்த்வம் ஸஞ்ஜாயதே) அசையாததொரு ஸ்த$_2$ாவரமாகவோ, அசையும் ஒரு ஜங்க$_3$மமாகவோ எவ்வளவு ஜீவராசி பிறக்கிறதோ. "யாவத் தாவத் ஸாகல்யே" என்னும் வழக்கையொட்டி இங்கு 'யாவத்' என்னும் ஶப்$_3$த$_3$ம் 'எவ்வளவுண்டோ அவ்வளவும்' என்னும் பொருளைக்காட்டுகிறது, யாவச்ச$_2$ப்$_3$த$_3$த்தை யச்ச$_2$ப்$_3$த$_3$பர்யாயமாக ஶங்க$_3$ரர் ப$_4$ாஷ்யமிட்டிருப்பது நலிந்து பொருள்கொள்வதாகையாலும், பயனற்றதாகையாலும் சிறப்புடைத்தன்று. 'ஸத்த்வ' ஶப்$_3$த$_3$ம் இங்கு ப்ரகரணப$_3$லத்தாலே ஜீவராஶியைக் குறிக்கிறது. "த்$_3$ரவ்யாஸுவ்யவஸாயேஷு ஸத்த்வமஸ்த்ரீ து ஜந்துஷு" [நாமலிங்கா$_3$நுஶாஸநம் 3] என்று அமரகோஶம் ஸத்வஶப்$_3$த$_3$த்தை ஜந்துவாசகமாகப்படித்திருப்பதைக் காணலாம், ஸ்த$_2$ாவரத்தையும் ஜந்துவாகக் குறித்திருப்பதால் மரம் செடி கொடிகள் அறிவை வெளிப்படுத்தாமையால் அசேதனப் பொருள்களே என்னும் ஜைநபக்ஷம் தள்ளப்படுகிறது. (தத்) அவ்வளவு ஜந்துவின் அப்பிறப்பு அனைத்தும்.

समं सर्वेषु भूतेषु तिष्ठन्तं परमेश्वरम् ।
विनश्यत्स्वविनश्यन्तं यः पश्यति स पश्यति ॥ २७

27. ஸமம் ஸர்வேஷு பூ₄தேஷு திஷ்ட₂ந்தம் பரமேஶ்வரம் ।
விநஶ்யத்ஸ்வவிநஶ்யந்தம் ய: பஶ்யதி ஸ பஶ்யதி ॥

ஸர்வேஷு பூ₄தேஷு—(தே₃வர் முதலான) எல்லா ஜீவ ராசியிலும், **ஸமம்**—ஒருப்படிப்பட்டவனும், **பரமேஶ்வரம் திஷ்ட₂ந்தம்** — (அநந்த தே₃ஹம, இந்த்₃ரியங்கள், மனம் முதலானவற்றைக் குறித்து) மேலான ஈஶ்வரனாய் நிற்பவனும, **விநஶ்யத்ஸு**—அந்த தே₃ஹம முதலானவை அழியும் போதும், **அவிநஶ்யந்தம்**— தான் அழியாமலிருப்பவனுமான ஆத்மாவை, **ய: பஶ்யதி**—எவன் காண்கிறானோ, **ஸ: பஶ்யதி**-அவனே ஆத்மாவை உள்ளபடி அறிகிறான்.

27. ஒத்துப் பொருளனைத்தி லுள்ளே யமரவிருந்
தத்துப் பரமேச ஞகியே—தத்துவங்கள்
மாயு மளவதிலு மாயா தவனைக்கண்
டாயுமவன் கண்டா னமைந்து. 27

(க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞ ஸம்யோகா₃த் [இதி] வித்₃தி₄) க்ஷேத்ர மாகிற ஶரீரமும் க்ஷேத்ரஜ்ஞனுகிற ஜீவனும் ஒன்றோடொன்று சேர்ந்ததினுலேயே உண்டாகிறது என்று அறிவாயாக. இவ்விரண் டோடு மூன்றுவதொன்றும் சேர்ந்து உண்டாவதில்லை என்றும், மாதாபிதாக்களின் சேர்த்தியாலே பிள்ளை உண்டாவதுபோலே, இவ்விரண்டின் சேர்த்தியால் மூன்றுவதான ஒரு தத்துவம் உண்டாவதில்லை என்றும், தனித்தனியேயிருக்கும் இவ்விரண்டின் ஸம்யோக₃மாத்ரத்தாலல்லாமல்,கர்மமாகிற வலிய கயிற்றால் எளி தில் பிரித்தறிய முடியாதபடி அழுந்தக்கட்டப்பட்டிருக்கும் சேர்த் தியாலே உண்டாகிறது என்றும் தாத்பர்யவிஷயமாக₄மாகக் கிடைக் கிறது. (ப₄ரதர்ஷப₄) புல்லறிவாளர்களுக்கு இவற்றைப் பிரித்தறி வது அரிதாயினும், ப₄ரதகுலத்துதித்த பேரறிவாளனான உனக்கு இவற்றைப் பிரித்து அறிவது எளிதல்லவோ என்று கருத்து. 26.

பொருள் அனைத்தில் — (தே3வர் முதலான) எல்லா ஜீவராசியிலும், **ஒத்து** — ஒருபடிப்பட்டவனும், **உள்ளே அமர இருந்து**-(அந்த சரீரங்களின்) உள்ளே (அவற்றிலும்) வேறாக இருப்பவனும், **அத்து பரமேசன் ஆகியே**— அந்தந்த தே3ஹம் இந்த்ரியங்கள் மனம் முதலானவற்றைக் குறித்து மேலான ஈஶ்வரனாயிருப்பவனும், **தத்துவங்கள் மாயும் அளவதிலும்** — அந்த தே3ஹம் முதலானவை அழியும்போதும், **மாயாதவனை** — தான் அழியாமலிருப்பவனுமான ஆத்மாவை, **கண்டு**-கண்டு, **ஆயுமவன்**—(தே3ஹத்தையும் ஆத்மாவையும்) பிரித்து அறிபவனே, **அமைந்து கண்டான்**— உள்ளபடி ஆத்மாவைக் கண்டவனாவான்.

---

27. இந்த ஶ்லோகம் முதலாக அத்4யாயத்தின் இறுதி வரையில் ஆத்மாவையும் அசித்தையும் பிரித்தறியும் முறையாகிற விவேகம் விளக்கப்படுகிறது. அதில் இந்த ஶ்லோகத்தில் ஆத்மாவும் அசித்தும் முறையே ஸமமாகவும் விஷமமாகவும், நியமிப்பதாகவும் நியமிக்கப்படுவதாகவும், நித்யமாகவும் அநித்யமாகவும் இருப்பவை என்று உணர்த்தி, இவ்விஷயத்தை உறுதியாக அறிபவனுக்கு மோக்ஷமாகிற ப2லத்தையும் கூறுகிறான். "க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞஸம்யோக3ாத்" என்று சென்ற ஶ்லோகத்தில் உள்ளதையும் இந்த ஶ்லோகத்தையும் விவரிக்கும்போது, "க்ஷேத்ரஜ்ஞனாகிற ஆத்மாவானது அவயவமற்றதாகையாலே அவயவமுடைய க்ஷேத்ரத்தோடு அதற்கு ஸம்யோக3ம் பொருந்தாது; க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்கள் முறையே கார்யமாகவும் காரணமாகவும் இல்லாமையாலே, ஸமவாயரூபமான ஸம்ப3ந்த4மும் பொருந்தாது, ஆகையால் ஜ்ஞானமாத்திரமான ஆத்மாவுக்கும் அந்த ஜ்ஞானத்தில் தோன்றும் க்ஷேத்ரத்துக்கும் ஒன்றினுடைய தன்மை மற்றொன்றில் ஏறிடப்படுகையாகிற அத்4யாஸமே ஸம்யோக3ம் எனப்படுகிறது என்று கொள்ளவேண்டும். அந்த அத்4யாஸத்தைப் போக்கடிக்கும் ஸம்யக்3த3ர்ஶநம் (நல்லகாட்சி) 'ஸமம் ஸர்வேஷு' என்று தொடங்கும் ஶ்லோகத்தில் விளக்கப்படுகிறது" என்று ஶங்கரர் பா4ஷ்யமிட்டது சிறுபிள்ளைப் பேச்சைப் போன்றது. அவயவமற்ற ஆகாஶம் முதலானவற்றுக்கும் அவயவம் உள்ள அல்லது அவயவமில்லாத மற்ற பொருள்க

भा॥ एवमितरेतरयुक्तेषु सर्वेषु भूतेषु देवादिविषमाकारात् विविक्तं तत्रतत्र तत्तद्देहेन्द्रियमनांसि प्रति परमेश्वरत्वेन स्थितमात्मानं

ளோடு ஸம்யோக₃ம் ஏற்படுவது பொருத்தமேயாகும். "தனித்திருக்கும் இரண்டு பொருள்கள் ஒன்றேடொன்று தொடர்பு கொள்வது ஸம்யோக₃ம்" என்றல்லவோ ஸம்யோக₃லக்ஷணம் சொல்லப்படுகிறது. அந்த ஸம்யோக₃ம் அவயவமற்ற பொருள்கள் அவயவமுள்ள பொருள்கள் என்ற வாசியில்லாமல் எந்த இரண்டு பொருள்களிடையேயும் ஏற்படலாமல்லவோ. மேலும் சித₃சித்துக்களில் ஒன்றின் தன்மை மற்றென்றில் ஏறிடப்படுகையாகிற அத்₄யாஸம் அடியோடு பொருந்தாது என்பது முன்னமே விளக்கப்பட்டது. ஸ்ரீ ப₄ாஷ்யத்திலும் நிலைநாட்டப்பட்டது. ஆகையால் இங்கு ப₄ாஷ்யத்தில் காட்டப்பட்டதே பொருந்திய பொருளாகும். (ஸமம் ஸர்வேஷு பூ₄தேஷு) க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்களின் ஸம்யோக₃த்தாலுண்டான தே₃வர், மனிதர் முதலான எல்லா ஜீவ ராசிகளிலும், அந்த ஶரீரங்களிலுள்ள வைஷம்யங்கள் (வேறுபாடுகள்) அற்றவனாய் ஒருபடிப்பட்டவனாயிருக்கும் ஆத்மாவை என்று கருத்து. மண் பாத்திரத்திலோ அல்லது பொன் பாத்திரத்திலோ எடுக்கப்பட்ட கங்காஜலம் அவ்வப்பாத்திரங்களில் இருந்தபோதிலும் மண்ணாகவோ பொன்னாகவோ ஆகாததுபோல், ஆத்மாவும் தே₃வர், மனிதர் முதலான ஶரீரங்களில் இருந்த போதிலும், அவற்றின் வேறுபாடுகளை அடைவதில்லை; உப்புச் சுரங்கத்தில் இடப்பட்ட கட்டை சிறிது காலத்தில் உப்புக் கட்டியாவதுபோல் ஆத்மா தே₃வர் முதலான ஶரீரங்களிலிருக்கும் போதும் அவற்றின் வேறுபாடுகளை அடைவதில்லை என்றபடி. "திஷ்ட₂ந்தம்" என்னும் பத₃த்தை "ஸர்வேஷு பூ₄தேஷு ஸமம் திஷ்ட₂ந்தம்" என்று முன்பதங்களோடு கூட்டி "எல்லா ஜீவராசிகளிலும் அவற்றின் வேறுபாடுகளற்று ஒருபடிப்பட்டவனாய் நிற்பவனை" என்றும் பொருள் சொல்லலாம். "பரமேஶ்வரம் திஷ்ட₂ந்தம்" என்று பின்பதத்தோடு கூட்டியும் பொருள்கொள்ளலாம். (பரமேஶ்வரம் திஷ்ட₂ந்தம்) அந்தந்த தே₃ஹங்களில் அந்தந்த தே₃ஹம், இந்த்₃ரியங்கள், மனம் ஆகியவற்றைக் குறித்து மேலான ஈஶ்வரனாய் நிற்கும் ஆத்மாவை. ஈஶ்வரனல்லாதவனாய் அல்ப ஶக்தியுடையவனான ஜீவனைப் பரமேஶ்வரன் என்பது 22வது

ज्ञातृत्वेन समानाकारं तेषु देहादिषु विनश्यत्सु विनाशानर्ह-स्वभावेनाविनश्यन्तं यः पश्यति, स पश्यति — स आत्मानं यथा-

ஶலோகத்தில் "மஹேஶ்வரன்" என்றவிடத்திற்போலே, தன் தே₃ஹேந்த்₃ரிய மனங்களை நியமிப்பவனுயிருப்பதையிட்டே என்று கொள்ளவேண்டும். "22வது ஶ்லோகத்தில் ஜீவனைச் சொன்ன போதிலும், இங்கு 'பரமேஶ்வரன்' என்று பரமாத்மவையே சொல்லு வதாகக் கொள்ளலாகாதோ?" எனில்: மேலே "அழியும் தே₃ஹங் களில் அழியாமலிருப்பவன்" என்று சொல்லியிருப்பதனுல் இங்கும் ஜீவனைச் சொல்லுவதாகக்கொள்வதே பொருந்தும். தே₃ஹாத்மாபி₄ மானிகள் தே₃ஹமழிவதால் ஆத்மா அழிவதாக நினைக்கிருர்களே யொழிய, தம்மால் அறியப்படாத பரமாத்மா அழிவதாக நினைப் பதில்லையே. ஆகையால் 'தே₃ஹம் அழியும்போது அழியாதவன்' என்று அடுத்தபடி சொல்லுவது ஜீவாத்மாவேயாகமுடியுமாகை யால் அவனேடு ஒரே வேற்றுமையில் படிக்கப்படும் பரமேஶ் வரனும் 22-வது ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட ஜீவனேயாக வேண்டும். (ஸமம் ய: பஶ்யதி) "தே₃ஹங்களிலுள்ள வேறுபாடு களில்லாதவனுயிருப்பதோடன்றியில் ஜ்ஞாத்ருத்வம் [அறிபவனு யிருக்கை] ஜ்ஞான ஸ்வரூபத்வம் [அறிவையே ஸ்வரூபமாக உடையவனுயிருக்கை] முதலான தன்மைகளால் ஒருபடிப்பட்டவ னுகவும் இருப்பவனுக எவன் அறிகிருனே என்று கருத்து. 'ஏதத்₃யோ வேத்தி' [13-1] 'ஜ்ஞாநம் ஜ்ஞேயம்' [13-17] முதலான இடங்களில் ஆத்மாக்களனைவரும் ஜ்ஞாத்ருத்வம் ஜ்ஞானத்வம் முதலான கு₃ணங்களையுடையவராயிருப்பர் என்று சொல்லப்பட்டதன்ருே. இவ்விடத்தில். "க₃வாமநேகவர்ணுநாம் க்ஷீரஸ்ய த்வேகவர்ணதா| க்ஷீரவத் பஶ்யதே ஜ்ஞாநம் லிங்கி₃-நஸ் து க₃வாம் யதா₂ ||" [அம்ருதபி₃ந்தூ₃பநிஷத்] [பல நிறங்க ளுடைய பசுக்களின் பால் ஒரே நிறமுடையதாயிருக்கிறது; அது போல் பலவகைப்பட்ட ஶரீரங்களிலுள்ள ஜ்ஞானமயமான ஆத்மாவை ஜ்ஞானி ஒருபடிப்பட்டதாகக் காண்கிருன்] என்ற வேத₃வாக்யம் அனுஸந்தி₄க்கத்தக்கது. (விநஶ்யத்ஸு அவிநஶ்யந்தம் ய: பஶ்யதி) அழியும் ஶரீரங்களில், அழிவுக்குத் தகுதியில்லாத தன்மைகளையுடையவனுகையாலே அழியாதவனுக எவன் காண்கிருனே. "யேந ஸர்வமித₃ம் ததம்" [கீ₃தை 2-17] முதலானவிடங்களில் விளக்கப்பட்டபடி அழிவுக்கு இடமேயில்

वद्वस्थितं पश्यति ; यस्तु देवादिविषमाकारेणात्मानमपि विषमाकारं जन्मविनाशादियुक्तं च पश्यति, स नित्यमेव संसरतीत्यभिप्रायः ॥ २७ ॥

லாத ஜீவாத்மாவை எவன் காண்கிருனே என்று கருத்து. "ஸமம் ய: பஶ்யதி" என்றதால் க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞ தத்துவங்களை முறையே வேறுபாடுள்ளதாகவும் ஒருபடிப்பட்டதாகவும், "பரமேஶ்வரம் ய: பஶ்யதி" என்றதால் முறையே நியமிக்கப்படுவதாகவும் நியமிப்பதாகவும், "அவிநஶ்யந்தம் ய: பஶ்யதி" என்றதால் முறையே அழிவதாகவும் அழிவற்றதாகவும் பகுத்தறியவேண்டும் என்றுவிவேகப்ரகாரம் சொல்லப்பட்டதாயிற்று. (ய: பஶ்யதி ஸ பஶ்யதி)'எவன் காண்கிருனே அவனே காண்கிருன்' என்று பொருள் படுகிறது. "இதில் முற்பகுதிக்கும் பிற்பகுதிக்கும் பொருள் வேற்றுமையில்லாமையாலே பொருளற்ற வாக்யம்போல் தோன்றுகிறது. 'எவன் காண்கிருனே' என்று ஒன்றையெடுத்து அதைக்குறித்து வேருென்றை விதி$_4$க்க வேண்டியவிடத்தில் 'அவன் காண்கிருன்' என்று எடுத்ததையே விதி$_4$த்திருப்பதும் பொருந்தவில்லை" என்னும் ஐயங்கள் இங்கு ஏற்படுகின்றன. இவற்றைத் தவிர்ப்பதற்காகவே ப்ரகரணத்தையொட்டி "எவன் இவ்வண்ணம் ஆத்மாவை ப்ரக்ருதியிலிருந்து விவேகித்தறிகிருனே அவனே ஆத்மாவை உள்ளபடி அறிகிருன்" என்றே பொருள் கொள்ளவேண்டும். இப்படி உள்ளபடி அறியாமல், கண்ணில் காமாலை நோயாலே சங்கை மஞ்சள் நிறமுடையதாக அறிபவர்களைப்போலே, ஆத்மாவை அசித்தாகவே அறிபவர்கள் கண்டபோதிலும் காணுதவர்களே என்று கருத்து. "எல்லா வாக்யங்களும் ஏகாரத்தை உள்ளடக்கியவை" என்னும் நியாயத்தாலே "ஸ பஶ்யதி" என்பதற்கு 'அவனே காண்கிருன்' என்று பொருள் கொள்ளவேண்டும். இப்படி இவ்வதி$_4$காரியைப் புகழ்கையாலே "ஆத்மாவை அசித்தைப்போலே வேறுபாடுள்ளதாகவும் தோன்றி அழிவடைவதாகவும் எவன் காண்கிருனே அவன் எப்போதுமே ஸம்ஸாரச் சுழலில் அகப்பட்டு உழல்கின்ருன்" என்று விபரீதமான அதி$_4$காரியைப்பற்றிய இகழ்வும் தாத்பர்யார்த்த$_2$மாகத் தேறுகிறது. 27.

समं पश्यन् हि सर्वत्र समवस्थितमीश्वरम् ।
न हिनस्त्यात्मनाऽऽत्मानं ततो याति परां गतिम् ॥ २८

28 ஸமம் பஶ்யந் ஹி ஸர்வத்ர ஸமவஸ்தி₂தமீஶ்வரம் ।
ந ஹிநஸ்த்யாத்மநாத்மாநம் ததோ யாதி பராம்
க₃திம் ॥

ஸர்வத்ர — (தே₃வர் முதலான) எல்லா ஶரீரங்களிலும், **ஸமவஸ்தி₂தம் ஈஶ்வரம்**—(அந்தந்த தே₃ஹங்களுக்கு) ஸ்வாமியாகவும், ஆதா₄ரமாகவும், நியமிப்பவனுகவும் இருக்கும் ஆத்மாவை. **ஸமம் பஶ்யந்** — (முற்கூறியபடி) ஒருபடிப்பட்டவனுகக் காண்பவன். **ஆத்மநா** — தன் நெஞ்சால், **ஆத்மாநம்** — தன்னை, **ந ஹிநஸ்தி ஹி** — அழிக்காமல் ரக்ஷிக்கிறுன்ன்றே, **தத:** — இந்த ஸமத₃ர்ஶநத்தால், **பராம் க₃திம்** — மேலான ப்ராப்யமான தன ஆத்மாவை, **யாதி ஹி** — அடைகிறுன்ன்றே.

---

28. **எவ்விடத்துந் தானிறையா யேய்ந்திருக்கு மிவ்வுயிர்தா
னவ்விடத்தி லொத்தியல்வ தாவறிவா— னிவ்விடத்திற்
றன்னைத்தன் னெஞ்சதனுற் றுனலியான் றுனடையும்
பின்னைப் பரகதியாம் பேறு.**

எவ்விடத்தும் — (தே₃வர் முதலான) எல்லா ஶரீரங்களிலும், **தான் இறையாய் ஏய்ந்திருக்கும் இவ்வுயிர்தான்** — (அந்தந்த தே₃ஹங்களுக்கு) ஸ்வாமியாகவும், ஆதாரமாகவும், நியமிப்பவனுகவும பொருந்தியிருக்கும இந்த ஆத்மா, **அவ்விடத்தில் ஒத்து இயல்வதா அறிவான்** — (முற்கூறியபடி எல்லா ஶரீரங்களிலும் ஒருபடிப்பட்டதாயுள்ளதாக அறிபவன், **இவ்விடத்தில்** — இவ்வுலகில், **தன்னை** — தன் ஆத்மாவை, **தன் நெஞ்சதனுல்**—தன்னுடைய நெஞ்சாலே, **தான் நலியான்** — அழிக்காமல் ரக்ஷிக்கிறுன்ன்றே, **பின்னை** — அப்படி ஒருபடிப்பட்டவனுகக் கண்டபின்பு, **பரகதியாம் பேறு**— மேலான ப்ராப்யமான தன் ஆத்மாவை அடைவதாகிறபயனை, **தான் அடையும்** — தானே அடைகிறுன்ன்றே.

भा ॥ सर्वत्र—देवादिशरीरेषु तत्तच्छेषित्वेनाधारतया नियन्तृतया च स्थितमीश्वरम् — आत्मानं देवादिविषमाकारवियुक्त ज्ञानैकाकारतया समं पश्यन् आत्मना – मनसा, स्वम् आत्मानं,

---

28. முன் ஶ்லோகத்தில் சொன்ன ஸமத3ர்ஶனத்துக்கு ஆத்ம ப்ராப்தியே பயனாகக்கிடைக்கிறது என்று புகழ்வதன் மூலம் முன் ஶ்லோகத்தை விளக்குகிறான், "ஹி" என்னும் பத3ம முன் ஶ்லோகத்தில் சொன்ன அர்த்த2த்துக்கு ஹேதுவைக் காட்டுகிறது இந்த ஶ்லோகம் என்று உணர்த்துகிறது, (ஸர்வத்ர) "ஸர்வத்ரா வஸ்தி2தோ தே3ஹே தத2ாத்மா" என்று 32 வது ஶ்லோகத்தில் சொல்லப்போகிறதாகையால், "தே3வர், மனிதர் முதலான எல்லா ஶரீரங்களிலும்" என்று இங்கு இப்பத3த்திற்குப் பொருள்கொள்வதே பொருத்தம். (ஸமவஸ்தி2தம்) "ப4ர்த்தா போ4க்தா மஹேஶ்வர:" என்று முன் சொன்னரீதியில் அந்தந்த தே3ஹங்களுக்கு ஸ்வாமியாகவும், ஆத4ாரமாகவும், நியமிப்பவனாகவும் இருப்பவன் என்பது 'ஸம்' என்னும் உபஸர்க்க3த்திலிருந்து தேறுகிறது. (ஈஶ்வரம்) இந்த ஶப்3த3த்தாலும் தே3ஹத்துக்கு ஸ்வாமியாகவும் நியமிப்பவனாகவும் இருப்பவன் என்று தேறுகிறது, முன் ஶ்லோகங்களிலுள்ள மஹேஶ்வர பரமேஶ்வர ஶப்3த3ங்களைப்போலே இந்த ஈஶ்வர ஶப்3த3மும் தனது தே3ஹம் முதலானவற்றை நியமிக்கும் ஜீவன் என்றே பொருள்படுகிறது. (ஸமம் பஶ்யந்) தே3ஹாத்மாபி4மானத்தினால் ஆத்மாவுக்குத் தோன்றும் தே3வர். மனிதர் முதலான வேறுபாடுகள் இல்லாதவனாய், ஜ்ஞானத்தையே இயல்வாகக் கொண்டவனாயிருக்கையாலே எல்லா தே3ஹங்களிலும் ஒருபடிப்பட்டவனாகக் காண்பவன். "க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞஸம்யோக3ாத்" [26] "யத3ா பூ4தப்ருத2க்3ப4ாவம் [30] என்று இப்பிரகரணத்தில் முன்னும் பின்னும் தே3ஹ ஸம்ப3ந்த4த்தினால் ஸித்3தி4ப்பதாகச் சொல்லப்பட்ட வேறுபாடுகளற்றவனாய், ஸ்வரூபத்தில் ஜ்ஞானத்தையே வடிவாகக்கொண்டவனாகத் தன் ஆத்மாவைக் காண்பவன் என்று கருத்து. இவனுக்கு உண்டாகும் ப2லனைப் பிற்பாதியிலே கூறுகிறான் — (ஆத்மநா ஆத்மாநம் ந ஹிநஸ்தி) மனத்தாலே தன் ஆத்மாவை

न हिनस्ति —रक्षति, संसारान्मोचयति; ततः-तस्मात् ज्ञातृतया सर्वत्र समानाकारदर्शनात्, परां गतिं याति ; गम्यत इति गतिः; परं

ஹிம்ஸிக்காதவனாகிறான்; அதாவது — ஆத்மாவை ஸம்ஸாரத்தி லிருந்து விடுவித்து ரக்ஷிக்கிறான் என்று கருத்து. 'ஆத்மநா' என்று மூன்றாவது வேற்றுமையில் படிக்கப்படுகையாலே இது கரணமான மனத்தைக் குறிப்பது உசிதம், 'ஆத்மாநம்' என்று இரண்டாவது வேற்றுமையில் படிக்கப்பட்ட ஆத்மாவை ஹிம் ஸிக்காதவனாகிறான் என்கையாலே இது ஸம்ஸாரியான தன் ஆத்மாவைக் குறிப்பது உசிதம். உலகில் மாஸ்த்ரத்தால் விதிக் கப்படாமலும் நிஷேதிக்கப்படாமலும் இருக்கும் கார்யங்களைச்செய் பவனும் ஆத்மாவுக்கு ஹிம்ஸையைச் செய்வதில்லை. அதாவது-தீங்கு செய்வதில்லை. இங்கு இத்தகையவனைக் காட்டிலும் சிறந்த ஸமதர்ம கனுக்குப் பலமாகக் கூறுகையாலே "ந ஹிநஸ்தி" என்பது தீங்கு செய்யாமைக்கு மேற்பட்டதொருபொருளைக் கூறவேண்டும், ஆத்மா நித்யமாகையாலே விஷமதர்மியும் அதற்கு நேரே ஹிம்ஸையைச் செய்யமுடியாது. ஆகையால் இங்கு ஸமதர்மி அந்த ஸமதர்ம நத்தாலே தான் விரும்பும் ஆத்ம ரக்ஷணத்தைச் செய்கிறான் என்றே பொருள்கொள்ள வேண்டும். ப்ரகரணத்தைக்கொண்டும் நாலா வதுபாதத்தை ஒட்டியும் பார்க்கும்போது இங்கு சொல்லப்படும் ரக்ஷணம் ஸம்ஸாரத்திலிருந்து விடுதலைபெறுவதேயாகும் என்று விளங்குகிறது. (ததோ யாதி பராம் கதிம்) "ஸமம் பஶ்யந்" என்று சொல்லப்பட்ட ஸமதர்மனத்தாலேயே பரமப்ராப்யமான முக்தாத்ம ஸ்வரூபத்தையடைகிறான். முன்பாதத்தில் சொன்னபடி அநிஷ்டமான ஸம்ஸாரத்திலிருந்து விடுதலைபெறுவதோடல்லாமல் இஷ்டமான ஆத்மாவையும் அடைகிறான் என்று கருத்து, 'ததः' என்னும் பதம் முன்சொன்னதைக் காரணமாகக் காட்டுகிறது; முன்பாதத்தில் சொன்ன அநிஷ்ட நிவ்ருத்தியும் தானே பலமா யிருக்கையாலே அதை இஷ்ட ப்ராப்திக்குக் காரணமாகக் காட்டு வது உசிதமன்று. ஆகையால், அநிஷ்ட நிவ்ருத்திக்குக் காரண மாகச் சொல்லப்பட்ட ஸமதர்மனமே இப்பதத்தால் இஷ்ட ப்ராப்திக்கும் காரணமாகக் காட்டப்படுகிறது என்று கொள்ள வேண்டும். 'பராம் கதிம்' என்று இவனுக்கு மேலான ப்ராப்ய

गन्तव्यं यथावदवस्थितमात्मानं प्राप्नोति; देवाद्याकारयुक्ततया सर्वत्र विषम[ाकार]मात्मानं पश्यन् आत्मानं हिनस्ति — भवजलधिमध्ये प्रक्षिपति ॥ २८ ॥

மான இஷ்ட ப்ராப்தியைச் சொல்லவேண்டிய ப்ரகரணமாகையாலே மேலான க₃மனத்தையடைகிறுன் என்று பொருள்கொள்வது சுவையுடையதன்று. ஆகையால் "க₃ம்யதே இதிக₃தி:" என்னும் வ்யுத்பத்தியாலே மேலான ப்ராப்யமான தனது ஶுத்₃த₄ாத்மாவையடைகிறுன் என்றே பொருள்கொள்ளவேண்டும். ஆகவே ஶ்லோகத்தின் பிற்பாதியால், ப்ரக்ருதி ஸம்ப₃ந்த₄ம் நீங்கி, அதாவது ஸூக்ஷ்ம ஶரீரமும் கழியப்பெற்று, தனது ஶுத்₃த₄ாத்ம ஸ்வரூபத்தை அனுப₄விக்கையாகிற கைவல்ய மோக்ஷத்தையடைகிறுன் என்றபடி: இந்த ப்ரகரணம் ஜீவவிஷயமாகையாலும் "அவ்யக்தோSக்ஷர இத்யுக்தஸ் தமாஹு: பரமாம் க₃திம்" [கீ₃தை 8-21] என்று ஜீவனைப் பரமப்ராப்யமென்று முன்னமே சொல்லியிருக்கையாலும், இங்கு பரக₃தி ஶப்₃த₃த்தாலே தன்னைச் சொல்லுவதாகக் கொள்வதே உசிதம். 'நஹிநஸ்தி' என்று இங்கு ஸமத₃ர்ஶிக்குப் ப₂லனைச் சொன்னது — "விஶேஷநிஷேத₄: ஶேஷாப்₄யநுஜ்ஞார்த்த₂:" [ஒன்றை நிஷேதி₄ப்பது மற்றொன்றின் அனுமதியை உணர்த்தும்] என்னும் நியாயத்தாலே "ஆத்மாவை தே₃வர் முதலான வேறுபாடுகளையுடையதாக எல்லாவிடத்திலும் காண்பவன் ஆத்மாவை அழியச் செய்கிறுன், அதாவது ஸம்ஸாரக் கடலில் ஆழ்த்துவதன் மூலம் ஆத்மஸ்வரூபநாஶத்தை விளைக்கிறுன்" என்பதையும் உணர்த்துகிறது.. "கம் க₄ாதயதி ஹந்தி கம்" [கீ₃தை 2-21] என்று முன் சொன்ன ரீதியில் நித்யமான ஆத்மஸ்வரூபத்துக்கு அழிவில்லாமையாலே ஸம்ஸாரத்தில் ஆழ்த்துவதையே இங்கு நாஶமாகச் சொல்லுவதாகக் கொள்ளவேண்டும். இந்த ஶ்லோகத்திலும் 'ப்ரக்ருதியை அறிவது ஸம்ஸாரஹேதுவாகிறது' என்றும், 'ஆத்மாவை அறிவது மோக்ஷஹேதுவாகிறது' என்றும் ப்ரக்ருதி புருஷ விவேகம் உணர்த்தப்பட்டிருப்பது காணத்தக்கது. 28.

प्रकृत्यैव च कर्माणि क्रियमाणानि सर्वशः ।
यः पश्यति तथाऽऽत्मानमकर्तारं स पश्यति ॥ २९

29. ப்ரக்ருத்யைவ ச கர்மாணி க்ரியமாணுநி ஸர்வஶ: ।
ய: பஶ்யதி தத₂ாத்மாநம் அகர்த்தாரம் ஸ பஶ்யதி ॥

ஸர்வஶ: கர்மாணி — எல்லாக் கர்மங்களேயும், **ப்ரக்ருத்யா ஏவ க்ரியமாணுநி**-ப்ரக்ருதி கார்யமான ஶரீரத்தாலேயே செய்யப்படுபவை என்றும், **தத₂ா** — அவ்வண்ணமே, **ஆத்மாநம்** — ஆத்மாவை. **அகர்த்தாரம் ச** — அச்செயல்களேச் செய்யாதவன் என்றும், **ய: பஶ்யதி** — எவன் காண்கிருனே, **ஸ: பஶ்யதி** — அவனே (ஆத்மாவை உள்ளபடி) காண்கிருன்.

29. ஏய்ந்த பிரகிருதி யித்தாற் கருமமெல்லாம்
வாய்ந்தியலு மென்றறிந்து மன்னுயிரை—யாய்ந்தவ
கத்தா விவனென்று காண்பா னெவனவனே
சத்தா முணர்வுடையான் ருன். 29

கருமம் எல்லாம் — எல்லாச்செயல்களேயும், **ஏய்ந்த பிரகிருதி இத்தால் வாய்ந்து இயலும் என்று அறிந்து** — (உயிரோடு) பொருந்தியிருக்கும் இந்தப் பிரக்ருதியினுலுண்டான ஶரீரத்தாலேயே செய்யப்படுபவை என்று அறிந்து, **ஆய்ந்த மன் உயிரை** — ஶரீரத்திலும் வேறுபட்ட நிலேயான ஆத்மாவை, **அகத்தா இவன் என்று காண்பான் எவன்** — அச்செயல்களேப் புரியாதவன் என்று எவன் காண்கிருனே, **அவனேதான்** — அந்த மனிதனே, **சத்தாம் உணர்வுடையான்** — நல்லறிவுடையவனுகிருன்.

---

29. இந்த ஶ்லோகத்திலும் அடுத்த ஶ்லோகத்திலும் கிரியைகளுக்கு இருப்பிடமாயிருப்பது ப்ரக்ருதி என்றும், அவற்றுக்கு இருப்பிடமாயிராதது ஆத்மா என்றும் இரு தத்துவங்களேப்

भा ।। सर्वाणि कर्माणि * कार्यकारणकर्तृत्वे हेतुः प्रकृति-रुच्यते (२०) इति पूर्वोक्तरीत्या प्रकृत्या क्रियमाणानीति यः पश्यति, तथा आत्मानं ज्ञानाकारमकर्तारं च यः पश्यति, तस्य प्रकृतिसंयोगस्तदधिष्ठानं तज्जन्यसुखदुःखानुभवश्च कर्मरूपाज्ञानकृतानीति च यः पश्यति, स आत्मानं यथावदवस्थितं पश्यति ।। २९ ।।

பற்றிய விவேகம் விவரிக்கப்படுகிறது. (ஸர்வஶ: கர்மாணி) கால், கை முந்தலானவற்றை நீட்டுவது முடக்குவது முதலான எல்லாச் செயல்களும். (ப்ரக்ருத்யைவ க்ரியமாணாநி ய: பஶ்யதி) "கார்யகாரணகர்த்ருத்வே ஹேது: ப்ரக்ருதிருச்யதே" என்று இருபதாவது ஶ்லோகத்தில் சொன்னபடியே ப்ரக்ருதியின் கார்யப் பொருளான ஶரீரத்தால் செய்யப்படுபவை என்று எவன் காண் கிருனே. ஸம்ஸாரிகள், ஜ்ஞானிகளாகிற இருவருமே ஶரீரம் இச் செயல்களைச் செய்வதாயிருப்பதைக் காண்கிருர்கள். ஜ்ஞானியோ வெனில் ஶரீரமே இச்செயல்களுக்கு இருப்பிடமாயிருக்கிறதேயொழிய ஆத்மாவல்ல என்றும் உணர்கிருன் என்று கண்டுகொள்வது. இதை மேலே விவரிக்கிருன்-(தத$_2$ா ஆத்மாநம் அகர்த்தாரம் ச ய; பஶ்யதி) அவ்வண்ணமே ஜ்ஞானமே வடிவான ஆத்மா இச்செயல்களுக்கு இருப்பிடமாயிருப்பதல்ல என்று எவன் காண்கிருனே. "ஜ்ஞாநா காரம்" என்று ப$_4$ாஷ்யத்தில் விவரித்திருப்பது 'ஶுத்$_3$த$_4$ாத்ம ஸ்வருபத்துக்கே அகர்த்ருத்வமாகிற இப்பெருமை' என்று காட்டு கிறது. 'ஜ்ஞாதாகாரம்' என்றும் பாடம் இருப்பதாகத் தாத்பர்ய சந்த்ரிகை. அப்பாடத்தில் ஏற்கனவே அறிவே வடிவாகவும் அறிபவனுகவும் அறியப்பட்ட ஆத்மஸ்வருபத்துக்கே இப்பெருமை என்றதாகிறது. இப்படி ஆத்மா அகர்த்தாவாயிருந்தால் மனிதன் ஶாஸ்த்ரவிதி$_4$ நிஷேத$_4$ங்களுக்கு வஶப்பட்டு நடப்பதும், அப்படி நடப்பதாலும் நடக்காமலிருப்பதாலும் இன்பதுன்பங்களை அனுப விப்பதும் எப்படிப் பொருந்தும்? எனில்: ஆத்மாவுக்கு ஶரீரத் தோடு சேர்த்தியும், அதைத் தாங்கி நிற்பதும், அதனுல் ஏற்படும் இன்பதுன்பங்களின் அனுபவமும் கர்மம் காரணமாக உண்டா கையாலே பொருந்தும் என்று கண்டுகொள்வது. "அவித்$_3$யா

यदा भूतपृथग्भावमेकस्थमनुपश्यति।
तत एव च विस्तारं ब्रह्म संपद्यते तदा ॥ ३०

30. யத₃ா பூ₄தப்ருத₂க்₃ப₄ாவம் ஏகஸ்த₂மநுபஶ்யதி ।
தத ஏவ ச விஸ்தாரம் ப்₃ரஹ்ம ஸம்பத்₃யதே தத₃ா ॥

பூ₄தப்ருத₂க்₃ப₄ாவம் — ப்ரக்ருதி புருஷர்கள் ஒன்றோடொன்று சேர்ந்திருக்கும் தே₃வர் முதலான ஜீவர்களில் (தே₃வத்தன்மை மநுஷ்யத் தன்மை, குட்டையாயிருக்கை நெட்டையாயிருக்கை முதலான) வேறுபாடுகளை; **ஏகஸ்த₂ம்**- (ப்ரக்ருதியாகிற) ஒரே தத்துவத்தில் இருப்பதாக, **யத₃ா அநுபஶ்யதி** — எப்போது காண்கிறானோ, **தத: ஏவ** — அந்த ப்ரக்ருதியிலிருந்தே, **விஸ்தாரம் ச** — (பிள்ளை பேரன் முதலான வேறுபாடுகளின்) விரிவையும் (எப்போது காண்கிறானோ). **தத₃ா** — அப்பொழுது, **ப்₃ரஹ்ம** — இயல்வான ஸ்வரூபத்தையுடைய தன் ஆத்மாவை. **ஸம்பத்₃யதே** — அடைகிறான்.

கர்மஸம்ஜ்ஞாந்யா த்ருதீயா ஶக்திரிஷ்யதே । யயா க்ஷேத்ரஜ்ஞ ஶக்திஸ்ஸா வேஷ்டிதா ந்ருப! ஸர்வக₃ா" [வி.பு. 6-7-61] [வித்₃யை எனப்படும் ஜ்ஞானத்தைக் காட்டிலும் வேறுபட்ட (யாக₃ாதி₃) கர்மமானது (ஈச ஜீவர்களாகிற இரண்டு ஶக்திகளுக்கு மேலே) மூன்றுவது ஶக்தியாகக் கொள்ளப்படுகிறது. அந்தக்கர்மத்தால் ஜீவனாகிற ஶக்தி சூழப்பட்டிருக்கிறது] என்று ஸ்ரீ பராஶரமஹர்ஷி கூறியது இங்கு அநுஸந்தி₄க்கத் தக்கது. (ஸ பஶ்யதி) இப்படி ஶரீரமே கிரியைகளுக்கு இருப்பிடம் என்றும், ஆத்மா அப்படியல்லாதது என்றும், ஶரீராத்மச்சேர்த்தி ஶரீரத்தை ஆத்மா தாங்கி நிற்பது, அதனால் இன்ப துன்பங்கள் ஏற்படுவது ஆகியவை கர்மத்தால் சுழன்று சுழன்று வருபவை என்றும் எவன் காண்கிறானோ அவனே இயல்வான நிலையிலுள்ள ஆத்மாவைக் காண்கிறான். ஆக இந்த ஶ்லோகத்தால் க்ரியைகளுக்கு நேரே இருப்பிடமாயிருப்பது ஶரீரமென்றும் அப்படியல்லாதது ஆத்மா என்றும் ப்ரக்ருத்யாத்ம விவேகம் விளக்கப் பட்டது.

30. எப்போது பூதத் தியல்வேறு பாட்டினையு
மொப்பொருவா வொன்றி லுறுவகையுந்—துப்போடார்
பந்தப் பரப்புமுணர் பாங்கனப் போதுயிரா
மந்தப் பிரமமடைந் தாம்.

பூதத்து இயல் வேறுபாட்டினையும் — ப்ரக்ருதி புருஷர்கள் ஒன்றோடொன்று சேர்ந்திருக்கும் தே$_3$வர் முதலான ஜீவர்களில். (தே$_3$வத்தன்மை மநுஷ்யத்தன்மை, குட்டையாயிருக்கை நெட்டையாயிருக்கை முதலான) வேறுபாடுகளை, **ஒப்பு ஒருவா ஒன்றில் உறுவகையும்** — தனக்கு ஒப்பில்லாத (ப்ரக்ருதியாகிற) ஒரே தத்துவத்தில் இருக்கும வகையையும், **துப்போடு ஆர்பந்தப் பரப்பும்** — வலிமைமிக்கு விளங்கும் (பிள்ளை பேரன் முதலான) ப்ரக்ருதி ப$_3$ந்த$_4$ங்களின் விரிவையும், **எப்போது உணர்பாங்கன்** — எப்போது உணரும் பக்குவத்தை அடைகிறானோ, **அப்போது** — அந்தககாலத்தில் **உயிராம் அந்த பிரமம்** — பெரிதாகையாலே பிரம்மம் எனப்படும அத்தகைய தன் உயிரை. **அடைந்து ஆம்** — அடைந்தவனாவான்.

---

30. இந்த ஶ்லோகத்தில் ப்ரக்ருதியானது பரிணமிக்கக் கூடியது என்றும், புருஷன் பரிணாமமற்றவன் என்றும் பாகுபாடு உணர்த்தப்படுகிறது. (பூ$_4$தப்ருத$_2$க்$_3$பா$_4$வம்) ப்ரக்ருதி புருஷ தத்துவங்கள் எள்ளும் எண்ணெயும் போலே ஒன்றோடொன்று பிணைந்திருக்கும் தே$_3$வர் மனிதர் முதலான எல்லா ஜீவராசிகளிலும் காணப்படும் தே$_3$வத்தன்மை மனிதத்தன்மை, குட்டையாயிருக்கை நெட்டையாயிருக்கை முதலான வேறுபாடுகளை. மேலே 'ஏக'ஶப்$_3$த$_3$த்தால் ப்ரகரணத்தில் உள்ள ப்ரக்ருதி புருஷர்களில் ஒன்றையெடுக்கையாலே இங்கு 'பூ$_4$த' ஶப்$_3$த$_3$ம் ப்ரக்ருதி புருஷர்களின் சேர்த்தியான ஜீவராஶிகளைக் குறிப்பதாகக் கொள்வதே உசிதம், 'ப்ருத$_2$க்$_3$பா$_4$வம்' என்னும் பத$_3$த்தால் அந்த ஜீவராஶிகளிலுள்ள தேவர் மனிதர் முதலான ஜாதிபே$_4$த$_3$ங்களும், குட்டையாயிருக்கை நெட்டையாயிருக்கை முதலான கு$_3$ணபே$_4$த$_3$ங்களும் வாசியற எடுக்கப்படுவதாகக் கொள்வதே உசிதம். இந்த வேறுபாடுகள் அனைத்துமே ப்ரக்ருதியின் பல பரிணாம நிலைகளே

भा ।।प्रकृतिपुरुषतत्त्वद्वयात्मकेषु देवादिषु सर्वेषु भूतेषु सत्सु तेषां देवत्वमनुष्यत्वह्रस्वत्वदीर्घत्वादिपृथग्भावमेकस्थम् — एकतत्त्वस्थम् प्रकृतिस्थं यदा पश्यति, नात्मस्थम्, तत एव-प्रकृतित एवोत्तरोत्तर-

---

யாகையால் பரிணாமமற்ற புருஷனைக்காட்டிலும் ப்ரக்ருதிக்குள்ள வேறுபாடு இப்பத₃த்தால் உணர்த்தப்படுகிறது, (ஏகஸ்த₂ம் யதா₃ அநுபஶ்யதி) இவ்விரண்டு தத்துவங்களில் ஒன்றான ப்ரக்ருதியிலிருப்பதாக எப்போது காண்கிறானோ. இந்த ப்ரகணத்தில் உள்ள ப்ரக்ருதி புருஷர்களில் ஒன்றே இங்கு ஏகஶப்₃த₃த்தால் எடுக்கப் படவேண்டும், "ஸமம் பஶ்யந்" [28] என்று இந்த ப்ரகரணத்திலும், "பண்டி₃தா: ஸமத₃ர்ஶிந:" [5-18] என்று ப்ரகரணாந்தரத்திலும ஆத்மாவானது வேறுபாடற்றது என்று நிரூபிக்கப்பட்டிருக்கையால், அவற்றோடு முரண்படாமைக்காக இங்கு வேறுபாடு உடையதாகக் கூறப்படும் தத்துவம் ப்ரக்ருதியேயொழிய ஆத்மாவல்ல என்று நிர்ணயிக்கப்படுகிறது, 'ஏகஸ்த₂ம்' என்னும் பத₃த்துக்கு "ஸந்மாத்ரமான ஒரே ப்₃ரஹ்மத்திடம் எல்லாவேறுபாடுகளும், எல்லாப்பரிணாமங்களும் உள்ளன" என்று உரையிட்ட யாத₃வப்ரகாஶாதி₃பக்ஷங்கள் ப்ரமாணவிருத்₃த₄மானவை என்று முன்னமே தள்ளப்பட்டதாகையாலே, இங்கு கூறியதே சரியான பொருளாகும். (தத: ஏவ ச விஸ்தாரம்) அந்த ப்ரக்ருதியிலிருந்தே மேன்மேலே பிள்ளை பேரன் முதலான வேறுபாடுகளின் விரிவு உண்டாவதாகவும் எப்போது காண்கிறானோ. 'யதா₃ அநுபஶ்யதி' என்பதை இங்கேயும் கூட்டிக்கொள்வது. "ஆத்மா வை புத்ரநாமாஸி" [யஜுர்-மந்த்ரப்ரஶ்நம் 2-12] முதலான வேத₃வாக்யங்களில் தானே புத்ரன் முதலானவர்களாகப் பரிணமிப்பதாகக் கூறியதும் "அங்கா₃த₃ங்கா₃த் ஸம்ப₄வஸி" [ஷை] [என்னுடைய ஒவ்வொரு அவயவத்திலிருந்தும பிறந்திருக்கிறாய்] என்று அந்த மந்திரத்தில் கூறியபடியே ப்ரக்ருத்யம்ஶத்தின் பரிணாமமே என்று விளங்குகிறதன்றோ. இந்த வேத₃வாக்யத்தையொட்டியே 'தத ஏவ' என்பதற்கு 'ப்ரக்ருதியிலிருந்தே' என்றும், 'விஸ்தாரம்' என்பதற்கு 'பிள்ளை பேரன் முதலான வேறுபாடுகளின் விரிவு' என்றும் பொருள்கொள்ளப்பட்டது. ஏவகாரத்தாலே "ப்ரக்ருதி தத்துவமானது முதலில் தேவர் மனிதர் முதலான பரிணாமத்தையும், பிறகு பிள்ளை பேரன் முதலான பரிணா

पुत्रपौत्रादिभेदविस्तारं च यदा पश्यति, तदैव ब्रह्म संपद्यते — अनवच्छिन्नं ज्ञानैकाकारमात्मानं प्राप्नोतीत्यर्थः ॥

अनादित्वान्निर्गुणत्वात्परमात्मायमव्ययः ।
शरीरस्थोऽपि कौन्तेय न करोति न लिप्यते ॥ ३१

31. அநாதி3த்வாந்நிர்கு3ணத்வாத் பரமாத்மாயமவ்யய: ।
ஶரீரஸ்தோ2ऽபி கௌந்தேய! ந கரோதி ந லிப்யதே ॥

கௌந்தேய — குந்தீ புத்ரனே! **அயம் பரமாத்மா** — (தே3ஹத்தைக் காட்டிலும்) மேலான இந்த ஜீவன். **ஶரீரஸ்த2: அபி**—ஶரீரத்திலிருந்தபோதிலும்; **அநாதி3த்வாத்**— (ஒரு காலத்தில்) உண்டாக்கப்படாத அநாதி3ப்பொருளாகையாலே, **அவ்யய:** — அழிவற்றவன்; **நிர்கு3ணத்வாத்** —

மங்களையும் அடையும்போது, போ4க்தாவான புருஷன் ஸுக2து3:க்க2ாநுப4வத்திற்காக அந்த ப்ரக்ருதியோடு இணைந்திருக்கிறானே யொழிய, இன்பதுன்பங்களை அநுப4விக்குமிடமான ப்ரக்ருதியிலுள்ள விகாரங்களை அடைவதில்லை'' என்று உணர்த்தப்படுகிறது. (தத3ா ப்3ரஹ்ம ஸம்பத்3யதே) அப்போதே தே3ஹஸம்ப3ந்த4ம் அற்றதாய் அறிவையே வடிவாகக்கொண்ட ஆத்மாவை அடைகிறான். 'ப்3ரஹ்ம ஸம்பத்3யதே' என்று இங்கு கூறியதற்கு 'பரமாத்மாவாக ஆகிறான்' என்று பொருள் கொள்வது ப்ரமாண விருத்3த4மாகையாலே, ப்3ரஹ்ம ஶப்3த3ம் பரமாத்மாவைச் சொல்லமுடியாது. அப்பதம் ஜீவாத்மாவைக் குறிப்பதாகக் கொள்ளும்போதும், ஜீவாத்மாவாயிருப்பது என்றுமே புருஷனுக்கு நித்யமாகையால், "அப்போது ஜீவாத்மாவாகிறான்'' என்பது ஒட்டாது. ஆகையால், ப்3ரஹ்ம ஶப்3த3ம் பரமாத்மாவைக் குறிக்கும்போது, "பரமம் ஸாம்ய முபைதி'' [முண்ட3க 3-1-3] "மம ஸாத4ர்ம்யமாக3தா:'' [கீ3தை 14-2] என்று ப்ரமாணங்களில் கூறியபடியே ப்3ரஹ்மத்தோடு மேலான ஒற்றுமையையடைகிறான் என்றே பொருள்கொள்ளவேண்டும். அன்றிக்கே, ப்3ரஹ்ம ஶப்3த3த்தால் ஜீவாத்மாவைக் குறிப்பதாகக் கொண்டு 'ஸம்பத்3யதே' என்று முக்தி நிலையில் ப3ந்த4மற்ற தன் ஆத்மாவின் அநுப4வத்தைப் பெறுகிறான் என்று கூறுவதாகவும் கொள்ளலாம். 30

ஸத்வம் முதலான குணங்கள் அற்றிருக்கையாலே, **ந கரோதி** — (தேஹத்தைப்போலே) கிரியைக்கு இருப்பிடமாவதில்லை; **ந லிப்யதே** — தேஹத்தின் தன்மைகளோடு ஒட்டுவதில்லை.

31. இங்கணையு மாதி யிலனுற் குணமிலனுற்
பங்கமிலோ னிந்தப் பரமான்மா—தங்கியுடல்
நின்றிடினுங் கௌந்தேயா நேரொன்றுந் தான்செய்யான்
என்றுமதிற் ருேய்விலனு மேய்ந்து.

கௌந்தேயா—குந்தீ புத்ரனே! **இங்கு அணையும் இந்த பரமான்மா** — இந்த ஶரீரத்தோடு சேர்ந்திருப்பவனுய் இதைக்காட்டிலும் மேலானவனுன இந்த ஜீவன், **உடல் தங்கி நின்றிடினும்** — உடலிலே தங்கியிருந்தபோதிலும், **ஆதி இலனுல்**—(ஒரு காலத்தில்) உண்டாக்கப்படாத அனுதிப்பொருளாகையாலே, **பங்கம் இலோன்** — அழிவில்லாதவன்; **குணமிலனுல்** — **ஸத்வம்** முதலான குணங்களில்லாமையால், **நேர் ஒன்றும் தான் செய்யான்**—ஶரீரம செய்யும் காரியங்களை நேரே தான் செய்வதில்லை; **என்றும்**-எப்போதும், **அதில்** — **ஶரீரத்தின்** தன்மைகளில், **ஏய்ந்து** — பொருந்தி, **தோய்விலனும்** — ஒட்டுவதில்லை.

---

31. ஆத்மா நித்யமாகையாலும், செயலுக்கு இருப்பிடமாயிராமையாலும், பரிணுமமற்றிருக்கையாலும் ஶரீரத்தைக் காட்டிலும் வேறுபட்டது என்று முன் ஶ்லோகங்களில் சொன்ன அர்த்தத்தை, காரணங்காட்டி வலியுறுத்துகிருன். (அயம் பரமாத்மா) தேஹத்தைக்காட்டிலும் வேறுபடுத்தி நித்யத்வம் முதலான தன்மைகளுடையவனுக முன் ஶ்லோகங்களில் நிரூபிக்கப்பட்ட இயல்பான நிலையிலுள்ள ஜீவாத்மா. (ஶரீரஸ்தோऽபி அநாதித்வாத் அவ்யய:) உண்டாக்கப்படாத அனுதிப் பொருளாகையாலே ஶரீரத்தில்

ஸா ॥ अयं परमात्मा देहान्विकृत्य स्वस्वभावेन निरूपितः, शरीरस्थोऽपि अनादित्वात् अनारम्भत्वात् अव्ययः-व्ययरहितः, निर्गुणत्वात्-सत्त्वादिगुणरहितत्वात्, न करोति, न लिप्यते देहस्वभावैर्न लिप्यते ॥

கட்டுண்டிருந்தபோதிலும் அழிவற்றவன். உலகில் உண்டான பொருள்களையன்றோ அழிபவையாகக் காண்கிறோம். இவ்வுலகில் கர்மத்தினால் உண்டான ஶரீரப$_3$ந்த$_4$த்தாலேயே இவனுக்கு ஜ்ஞானத்தில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுகின்றன; இயற்கையில் இவன் ஸ்வரூபத்திலும் ஜ்ஞானத்திலும் அழிவற்றவனே என்று கருத்து. (நிர்கு$_3$ணத்வாத் ந கரோதி) ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் மூன்று கு$_3$ணங்களும் இல்லாதவனாகையாலே அவற்றையுடைய ஶரீரத்தைப்போலே அந்த ஶரீரத்திலிருக்கும் இவன் செயலுக்கு இருப்பிடமாவதில்லை. இங்கு 'குணமற்றவன்' என்று பொதுவாகச் சொல்லியிருந்தபோதிலும் "ஜ்ஞானம் முதலான எல்லாகு$_3$ணங்களுமில்லாதவன்" என்று பொருள் கொள்வது ப்ரமாணவிருத்$_3$த$_4$மாகையாலே 'ப்ரக்ருதிக்கேயுள்ள ஸத்வாதி$_3$கு$_3$ணங்களற்றவன்' என்று பொருள் கொள்ளப்பட்டது. (நிர்கு$_3$ணத்வாத் ந லிப்யதே) ஸத்வாதி$_3$கு$_3$ணங்களற்றவனாகையாலே தே$_3$ஹஸ்வப$_4$ாவங்களாலே தொடப்படுவதில்லை. ஸத்வாதி$_3$கு$_3$ணமயமான ஶரீரத்தில் இருக்கையாலே, சேற்றால் அழுக்கடையும் வஸ்த்ரத்தைப் போலே "தத் ஸப்ததா$_4$து த்ரிமலம் த்$_3$வியோநி சதுர்வித$_4$ஹாரமயம் ஶரீரம்" [அந்த ஶரீரம் ஏழு தா$_4$துக்களையுடையதாய், வாதபித்தகப$_2$ங்களாகிற மூன்று தோ$_3$ஷங்களையுடையதாய், ஆணும் பெண்ணுமான இருவர் சேர்க்கையினால் உண்டானதாய், பல்லால் கடிப்பது, உதட்டால் உறிஞ்சுவது, நாவால் சுவைப்பது, வாயால்பருகுவது என்று நாலுவகைப்பட்ட ஆஹாரங்களின் பரிணாமமாயிருப்பது] என்று ஓதப்பட்ட ஶரீரத்தின் தன்மைகளாலே ஆத்மா தொடப்படுமோ என்னும் ஐயம் விளைந்தபோதிலும், ஶரீரகு$_3$ணங்களான ஸத்வம் முதலானவை இல்லாமையாலே ஆத்மா ஶரீரத்தின் தன்மைகளாலே தொடப்படுவதில்லை என்று கருத்து. (கௌந்தேய) "கண்ணா! உன்னை நாங்கள் எப்போதும் நினைத்துக்கொண்டிருக்கலாம்படி, எங்களுக்கு விபத்துக்கள் எப்போதும் ஏற்படட்டும்" என்று வேண்டிய தே$_3$ஹாத்ம விவேகமுடைய குந்தியின் பிள்ளையான நீ அவளைப்போலவே விவேகமுடையவனாக வேண்டாவோ? என்று கருத்து. 31.

भा ॥ यद्यपि निर्गुणत्वान्न करोति, नित्यसंयुक्तो देहस्वभावैः कथं न लिप्यत इत्यत्राह—

यथा सर्वगतं सौक्ष्म्यादाकाशं नोपलिप्यते ।
सर्वत्रावस्थितो देहे तथाऽऽत्मा नोपलिप्यते ॥ ३२

32. யதா₂ ஸர்வக₃தம் ஸௌக்ஷ்ம்யாத்
ஆகாஶம் நோபலிப்யதே ।
ஸர்வத்ராவஸ்தி₂தோ தே₃ஹே
ததா₂த்மா நோபலிப்யதே ॥

32. சென்ற ஶ்லோகத்தில் 'ஆத்மாவானது தே₃ஹம் செய்யும் செயல்களுக்கு இருப்பிடமாவதில்லை' என்றும், 'தே₃ஹத்தின் தன்மைகளோடு ஒட்டுவதில்லை' என்றும் கூறப்பட்டது. "ஸத்வாதி₃ கு₃ணமற்றிருக்கையால் செயல்களுக்கு இருப்பிடமாவதில்லை என்று கூறியது முன்பே விளக்கப்பட்டுள்ளது. அடுத்த அத்தியாயத்திலும் விளக்கப்படப்போகிறது. இதை ஒப்புக்கொண்டாலும், 'ஶரீரத்திலிருந்தபோதிலும் அதன் தன்மைகளோடு ஒட்டுவதில்லை' என்று கூறியது பொருத்தமாகத்தோன்றவில்லை. உப்புச் சுரங்கத்தில் இடப்பட்ட மரக்கட்டை உப்பின் தன்மைகளை உடையதாவதுபோலே தே₃ஹத்தோடு என்றும் பிணைந்திருக்கும் ஆத்மாவும் தேஹத்தின் தன்மைகளையுடையதாகும் என்று தோன்றுகிறதே" என்னும் ஆக்ஷேபத்திற்கு த்₃ருஷ்டாந்தம் காட்டி பதில் கூறுகிறது இந்த ஶ்லோகம். "ஸம்ஸர்க₃ஜா தே₃ாஷகு₃ணா ப₄வந்தி" [தோ₃ஷங்களும் கு₃ணங்களும்(அவற்றையுடைய வேறு பொருளோடு) சேர்த்தியாலுண்டாகின்றன] "ஶுஷ்கேணார்த்₃ரம் த₃ஹ்யதே மிஶ்ரபா₄வாத்" [பா₄-ரா-73-23] [காய்ந்தவிறகோடு சேர்ந்த ஈரவிறகும், சேர்ந்திருக்கையாலே எரிகிறது] என்று ப்ரஸித்₃தி₄யுள்ளது. சிறிதுகாலம் சேர்ந்திருக்கும் ஸாமான்யமான பொருள்களுக்கே இந்நிலை என்றால், "யம் ப்ராப்யாதிபவித்ராணி வஸ்த்ராண்யாப₄ரணாநி ச| அஶுசித்வம் க்ஷணாத் யாந்தி கிமந்யத₃ஶுசிஸ்ததः ||" [மிகப் பரிஶுத்₃த₄மான வஸ்த்ரங்களும் ஆப₄ரணங்களும் எந்த ஶரீரத்தோடு ஒருகணநேரம் தொடர்பு ஏற்பட்டாலே அபரிசுத்தமாகின்

ஆகாஶம் — ஆகாஶமானது, **ஸர்வக₃தம்** — எல்லாப் பொருள்களோடும் சேர்ந்திருந்தபோதிலும், **ஸௌக்ஷ்ம்யாத்** — நுண்ணியதாயிருக்கையாலே, **யதா₂ ந உபலிப்யதே** — அந்த எல்லாப்பொருள்களின் தன்மைகளோடு எப்படி ஒட்டாமலிருக்கின்றதோ, **ததா₂** — அப்படியே, **ஆத்மா** — ஜீவாத்மாவும், **ஸர்வத்ர தே₃ஹே அவஸ்தி₂த:** — தே₃வர் மனிதர் முதலான அனைத்து தே₃ஹங்களிலும் இருந்தபோதிலும், (**ஸௌக்ஷ்ம்யாத்**—மிக நுண்ணியதாயிருக்கையாலே) **ந உபலிப்யதே** — அந்தந்த தே₃ஹத்தின் **தன்**மைகளோடு ஒட்டுவதில்லை,

32. ஓங்குவிசும் பெங்கு முளதாயு நுட்பத்தா
லாங்கதனிற் றோயா ததுபோலத்—தாங்குடல
மேதிலுநின் றாலு மிலகுமுயி ரவ்வண்ண
மாதியல்வாற் றோயாது மங்கு.

ஓங்கு விசும்பு—சிறப்புள்ள ஆகாஶம், **எங்கும் உளதாயும்**-எல்லாப்பொருள்களோடும் சேர்ந்திருந்தபோதிலும், **நுட்பத்தால்** — நுண்ணியதாயிருக்கையால், **ஆங்கு அதனில் தோயாதது போல** — அந்த எல்லாப்பொருள்களின் தன்மைகளோடு ஒட்டாமலிருப்பதுபோல, **இலகும் உயிர்**—(மிக நுண்ணியதாய்) விளங்கும் ஜீவாத்மாவும், **தாங்கு உடலம் ஏதிலும் நின்றாலும்**-தான் தாங்கி நிற்கும் **தே₃**வர், மனிதர் முதலான எந்த உடலில் இருந்தபோதிலும், **அங்கு ஆதியல்வால்**—அந்தந்த தே₃ஹத்தில் அதின் **தன்**மைகளோடு, **அவ்வண்ணம் தோயாதும்** — ஆகாஶத்தைப் போலவே ஒட்டாமலிருக்கிறான்.

றனவோ அதைக்காட்டிலும் ஶுத்₃தி₄யில்லாத வேறொரு பொருள் என்ன இருக்கிறது?] என்கிறபடியே மிகத் தாழ்ந்ததான இந்த ஶரீரத்தோடு என்றும் சேர்ந்திருக்கும் ஆத்மாவுக்கு ஶரீரத்தின் தோ₃ஷங்கள் எப்படி வராமலிருக்க முடியும்? என்பது ஆக்ஷேபத்தின் கருத்து. இக்கருத்து "சேர்த்தியாலே ஒன்றின் கு₃ணம்

भा ।। यथा आकाशं सर्वगतमपि सर्वैर्वस्तुभिस्संयुक्तमपि सौक्ष्म्यात् सर्ववस्तुस्वभावैर्न लिप्यते, तथा आत्मा अतिसौक्ष्म्यात्सर्वत्र— देव-मनुष्यादौ देहेऽवस्थितोऽपि तत्तद्देहस्वभावैर्न लिप்यते ।। ३२ ।।

மற்றொன்றுக்கு ஏறுவது என்பது எல்லாவிடங்களிலும் காணப்படுவதொன்றல்ல என்பதை ஆகாஶத்ருஷ்டாந்தத்தின் மூலம் காணலாம்" என்னும் யுக்தியாலே தள்ளப்படுகிறது. இந்த ஶ்லோகத்தில், (ஆகாஶம் ஸர்வகதம்) ஆகாயமானது எல்லாப் பொருள்களோடும் சேர்ந்திருந்தபோதிலும். "சேர்ந்திருப்பவற்றில் ஒன்றின் குணம மற்றொன்றில் ஏறுகிறது" என்னும் ஆக்ஷேபத்துக்குப் பதிலுரைப்பதாக இந்த ஶ்லோகம் அமைந்திருப்பதால் 'சேர்ந்திருந்தாலும் ஒன்றின் குணம் மற்றொன்றில் எல்லா இடங்களிலும் ஏறுவதில்லை' என்னும் பொருள் தொனிக்கும்படி 'ஸர்வகதம்' என்னும் பதத்தோடும், பிற்பாதியில் 'அவஸ்தித:' என்னும் பதத்தோடும் 'அபி' (போதிலும்) என்னும் பதத்தைச் சேர்த்துக்கொண்டே பொருள்கொள்ளவேண்டும். ஒன்றோடொன்று சேர்ந்திருப்பதால் மாத்திரம் ஒன்றின் குணம் மற்றொன்றில் ஏறிவிடும என்றுகொண்டால், ஒன்றுக்கொன்று முரண்பட்ட குணங்களையுடைய கணக்கற்ற பொருள்களோடு சேர்ந்திருக்கும் ஆகாயத்திற்கு முரண்பட்ட கணக்கற்ற குணங்கள் ஏற்பட வேண்டிவரும் என்று கருத்து. சேர்ந்திருந்தபோதிலும் குணங்கள் ஒட்டாமலிருப்பதற்குக் காரணமென்ன? எனில்: (ஸௌக்ஷ்ம்யாத்) தன்னோடு சேர்ந்திருக்கும் பொருள்களைக் காட்டிலும் நுண்ணியதாயிருக்கையால், ஆகாயம் அவற்றோடு சேர்ந்திருந்தபோதிலும் அவற்றின் தன்மைகளோடு ஒட்டுவதில்லை என்று கருத்து. (ஸௌக்ஷ்ம்யாத் யதா ஆகாஶம் ந உபலிப்யதே ததா ஸர்வத்ர தேஹே அவஸ்திதோ(ऽபி) ஆத்மா ந உபலிப்யதே) சேர்ந்திருக்கும் மற்ற பொருள்களைக் காட்டிலும் நுண்ணியதாயிருக்கையால் ஆகாஶம் அப்பொருள்களின் தன்மைகளோடு எப்படி ஒட்டுவதில்லையோ அப்படியே அவ்வாகாயத்தைக் காட்டிலும் மிக நுண்ணியதாயிருக்கையால் ஆத்மா தேவர் மனிதர் முதலான எல்லா தேஹங்களோடு சேர்ந்திருந்தபோதிலும் அவற்றின் தன்மைகளோடு ஒட்டுவதில்லை என்று கருத்து. 'ததா' என்னும் ஶப்தத்தால் முற்பாதியிலுள்ள "ஸௌக்ஷ்ம்யாத்" என்னும்

यथा प्रकाशयत्येकः कृत्स्नं लोकमिमं रविः ।
क्षेत्रं क्षेत्री तथा कृत्स्नं प्रकाशयति भारत! ॥ ३३.

33. யத₂ா ப்ரகாஶயத்யேக: க்ருத்ஸ்நம் லோகமிமம் ரவி: |
க்ஷேத்ரம் க்ஷேத்ரீ தத₂ா க்ருத்ஸ்நம் ப்ரகாஶயதி ப₄ாரத !||

ப₄ாரத—ப₄ரதகுலத்துதித்தவனே! **ஏக: ரவி:**—ஒருவனான ஸூர்யன், **இமம் க்ருத்ஸ்நம் லோகம்** - இவ்வுலகனைத்தையும், **யத₂ா ப்ரகாஶயதி**—எப்படி (தன் ஒளியினால்) விளங்கச் செய்கிறானோ, **தத₂ா**—அப்படியே, **க்ஷேத்ரீ** — ஶரீரத்தை உடையவனான ஜீவன், **க்ஷேத்ரம்**— (தன்) ஶரீரத்தை, **க்ருத்ஸ்நம்**— உள்ளும் புறமும் காலிலிருந்து தலைவரையிலும், **ப்ரகாஶயதி**—(தன் ஜ்ஞானத்தால) விளங்கச்செயகிறான்.

33. எவ்வா றிரவிதா னிந்த வுலகனைத்து
மிவ்வா றெழில்விளக்க மெய்துவிக்கு—மவ்வாறு
பாரதனே யிவ்வுடல மெல்லாம் பரந்துயிர்தான்
சீரதனாற் றன்விளக்குஞ் சேர்ந்து

பாரதனே — பரதகுலத்துதித்தவனே!, **ரவிதான்** — ஸூர்யன் ஒருவனே, **இந்த உலகு அனைத்தும்** — காணப்படும் உலகங்கள் எல்லாவற்றையும், **இவ்வாறு** — நாம் காண்பதுபோலே, **எழில் விளக்கம் எவ்வாறு எய்துவிக்கும்**—

ஹேதுவும் எடுக்கப்படுவதாகக் கொள்ளவேண்டும். த்₃ருஷ்டாந்தத்தில் 'ஸர்வக₃தம்' என்றும், தா₃ர்ஷ்டாந்திகத்தில் 'ஸர்வத்ர தே₃ஹே அவஸ்தி₂த;' என்றும் ஸர்வ ஶப்₃த₃த்தை இட்டிருப்பதின் கருத்து என்ன? எனில், "பருத்தியைப் பயிரிடும் போது எரு நீர் முதலானவற்றில் அஞ்ஜனத்தை (மையை)ச் சேர்ப்பதன்மூலம் அப்பருத்தியில் மையின் கருநிறம் ஏறுவதில்லை; அவற்றில் அரக்கு ரஸத்தைச் சேர்ப்பதன்மூலம் பருத்தியில் சிவப்புநிறம் ஏறுகிறது. இங்கும் அதுபோல் சில பொருள்களோடு சேரும்போது அவற்றின் தன்மை ஒட்டாவிடிலும் மற்றும் சில பொருள்களோடு சேரும்போது அவற்றின் கு₃ணங்கள் ஒட்டக் கூடுமோ?" என்னும் ஐயத்தைத் தவிர்ப்பதற்காக இரண்டிடத்திலும் ஸர்வஶப்₃த₃ம் இடப்பட்டுள்ளது. 32.

भा ॥ यथैक आदित्यः स्वया प्रभया कृत्स्नमिमं लोकं प्रकाश-यति, तथा क्षेत्रमपि क्षेत्री, ममेदं क्षेत्रमीदृशम् इति कृत्स्नम् — बहि-

---

எப்படி அழகாக விளங்கச்செய்கிருனே, **அவ்வாறு** — அப்படியே, **உயிர்தான்** — ஒருவனுன ஜீவன். **இவ்வுடலம் எல்லாம்** — தனது இந்த உடம்பை உள்ளும் புறமும் காலி லிருந்து தலைவரையிலும். **சீர் அதனுல்தான் சேர்ந்து பரந்து** — தனது ஜ்ஞானத்தாலே (உடலுடன்) சேர்ந்து அலைத வ்யாபித்து, **விளக்கும்** — (அதை) விளங்கச்செய்யும்.

---

33. இவ்வத்தியாயத்தின் ஆரம்பத்தில் 'ஏதத்₃யோ வேத்தி தம் ப்ராஹு:; க்ஷேத்ரஜ்ஞ இதி தத் வித₃:'' [1] என்று க்ஷேத்ரஜ்ஞனை ஜீவன் அறிபவன் என்றும், க்ஷேத்ரம் (ஶரீரம்) அவனுல் அறியப்படுவது என்றும் சொல்லுவதன் மூலம், ஶரீரம் அவயவங்களின் கூட்டாயிருப்பதால் பலவாயிருப்பது என்றும், ஜீவன் அவயவமற்றிருப்பதால் ஒருவனுயிருப்பவன் என்றும் இரு தத்துவங்களுக்கும் வேறுபாடு உணர்த்தப்பட்டது. அது இந்த ஶ்லோகத்தில் நிலைநிறுத்தப்படுகிறது. (ஏக: ரவி: யதா₂ க்ருத்ஸ்நம் இமம் லோகம் ப்ரகாஶயதி) ஒருவனுன ஸூர்யன் இவ்வுலகம் முழுவதையும் தனது ஒளியால் எப்படி விளங்கச் செய்கிருனே. ஒருவனுன ஜீவன் தன் ஶரீரம் முழுவதையும் விளங்கச் செய்வதற்கு இது த்₃ருஷ்டாந்தம். ஒளிமயமான ஸூர்யன் தனக்கு கு₃ணமாயிருக்கும் ஒளிமயமான கிரணங்களால் உலகத்தை விளங்கச்செய்வது போலே ஜ்ஞானமயமான ஜீவனும் தனக்கு கு₃ணமான ஜ்ஞானத்தாலே இந்த ஶரீரம் முழுவதையும் விளங்கச் செய்கிருன் என்னும் அர்த்த₂ம் இந்த த்₃ருஷ்டாந்தத்தால் தேறுகிறது. (தத₂ா க்ருத்ஸ்நம் க்ஷேத்ரம் க்ஷேத்ரீ ப்ரகாஶயதி) அவ்வண்ணமே ஒருவனுய் ஜ்ஞானமயமான ஜீவன் தன் ஶரீரத்தை உள்ளும்புறமும் தலையிலிருந்து கால் வரையிலும் தனக்கு கு₃ணமாயிருக்கும் ஜ்ஞானத்தால் 'என்னுடையதான இந்த உடல் இத்தகையது' என்று விளங்கச் செய்கிருன். 'க்ருத்ஸ்நம் க்ஷேத்ரம்' என்பதால் எல்லா

रन्तश्चापादतलमस्तकं स्वकीयेन ज्ञानेन प्रकाशयति; अतः प्रकाश्याल्लोकात् प्रकाशकादित्यवद्वेदितृत्वेन वेद्यभूतादस्मात् क्षेत्रादत्यन्तविलक्षणोऽयमुक्तलक्षण आत्मेत्यर्थः ॥ ३३ ॥

ஶரீரங்களையும் எடுப்பதாகத் தோன்றக்கூடும். ஶங்கரரும் "ரவித்3ருஷ்டாந்தோऽத்ர ரவிவத் ஸர்வ க்ஷேத்ரேஷு ஏக ஆத்மா அலேபகஶ்ச இதி ஜ்ஞாபநார்த்த2:" [ஸூர்யனை இங்கு த்3ருஷ்டாந்தமாக எடுத்தது ஸூர்யன்போலே எல்லா உடல்களிலும் ஒரே ஆத்மாவே ஒட்டாமல் விளங்குகிறான் என்று அறிவிப்பதற்காக] என்று பா4ஷ்யமிட்டார். ஓர் உடலில் இருக்கும் ஜீவன் அந்த உடலையே விளங்கச் செய்கிறானேயொழிய உலகிலுள்ள எல்லா உடல்களையும் விளங்கச்செய்வதில்லையாகையால் ஒவ்வோருடலிலும் தனித்தனி ஆத்மா இருப்பதாகத் தேறுகையால் இவ்வர்த்த2ம் பொருந்தாது. "க்ஷேத்ரீ" என்று ஆத்ம ஜாதி முழுவதையும் குறிப்பதாகக்கொண்டால் ஒருவனை ஸூர்யனை த்3ருஷ்டாந்தமாக எடுத்திருப்பது ஒட்டாது. ஆகையால் "க்ருத்ஸ்நம் க்ஷேத்ரம்" என்று உடலில் வெளியிலுள்ள தோல் முதலானவற்றையும் உள்ளேயுள்ள மாம்ஸம் முதலானவற்றையும் தலையிலிருந்து கால்வரையுள்ள எல்லா அவயவங்களையும் குறிப்பதாகவே கொள்ளவேண்டும். க்ருத்ஸ்நஶப்3த3ம் ஒவ்வொரு ஶரீரமும் பல அவயவங்களையுடைத்தாயிருக்கையால் பலவாயிருந்துகொண்டு ஒன்றான ஆத்மாவைக்காட்டிலும் வேறுபட்டதாயுள்ளது என்றும், உடலில் அவயவங்களில் எதுவும் அறிபவனை ஜீவனாக முடியாது என்றும் காட்டுகிறது. ஆக, பல அவயவங்களின் கூட்டாயிருக்கும் ஶரீரத்தைக்காட்டிலும் அந்த அவயவங்கள் அனைத்தையும் அறிபவனாக அறியப்படும் ஒருவனான ஆத்மா வேறுபட்டவன் என்று ப்ரத்யக்ஷப்ரமாணத்தால் ஸித்3தி4க்கிறது என்று இந்த ஶ்லோகத்தால் சொல்லப்பட்டதாயிற்று. இந்த ஶ்லோகத்தில் த்3ருஷ்டாந்ததா3ர்ஷ்டாந்திகங்களைப் பார்க்கும்போது "'ஸூர்யன் உலகத்தை விளங்கச் செய்வதுபோலே ஜீவன் உடலை விளங்கச் செய்கிறான்' என்று மாத்திரம் சொல்லவந்ததல்ல இந்த ஶ்லோகம்; இதிலிருந்து தேறுவதான 'விளங்கச் செய்யப்படும் உலகத்தைக்காட்டிலும் விளங்கச் செய்யும் ஸூர்யனைப்போலே, அறியப்படும் இவ்வுடலைக் காட்டிலும் அறிபவனான ஜீவன் மிகவும் வேறுபட்டவன்' என்னும் பொருளையும் சொல்லவந்தது" என்று

क्षेत्रक्षेत्रज्ञयोरेवमन्तरं ज्ञानचक्षुषा ।
भूतप्रकृतिमोक्षं च ये विदुर्यान्ति ते परम् ॥ ३४.

34. க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞயோரேவமந்தரம் ஜ்ஞாநசக்ஷுஷா |
பூ₄தப்ரக்ருதிமோக்ஷம் ச யே விது₃ர்யாந்தி தே பரம் ||

इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु क्षेत्रक्षेत्रज्ञविभागयोगो नाम त्रयोदशोऽध्यायः ॥ १३ ॥

ஏவம்—இவ்வத்தியாயத்தில் சொன்ன முறையில், **க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞயோ: அந்தரம்**— க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்களாகிற இரு தத்துவங்களின் வேறுபாட்டையும், **பூ₄தப்ரக்ருதிமோக்ஷம் ச** — பூ₄தங்களாகப் பரிணமித்திருக்கும் ப்ரக்ருதியிலிருந்து விடுபடுவதற்கு ஸாத₄னமான அமாநித்வம் முதலான கு₃ணங்களையும், **ஜ்ஞாநசக்ஷுஷா**—(க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்களைப்பகுத்தறியும்) ஜ்ஞானமாகிற கண்ணால், **யே விது₃:**—எவர்கள் அறிகிறார்களோ, **தே** — அவர்கள், **பரம் யாந்தி**—(ஸம்ஸாரப₃ந்த₄மற்றதாகையாலே) மேலான தம் ஆத்மாவை அடைகிறார்கள்.

34, காய முயிரிவற்றின் கண்ணார் பிரிவிவ்வா
றேய வறிவா மெழிற்கண்ணான்—மேயவுடல்
வீடமர்வு தானு மிகவுணர்வார் தாம்பரமாம்
பீடமர்வர் தன்மையினைப் பெற்று.

காயம் உயிர் இவற்றின் கண் ஆர் பிரிவு — க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்களாகிற இரு தத்துவங்களின் பலவகைப்பட்ட வேறுபாடுகளையும், **மேய உடல் வீடு அமர்வு தானும்** — ப்ரக்ருதி பரிணாமமான உடலிலிருந்து விடுபடுவதற்குக்

விளங்குகிறது. அத்தியாயத்தின் முதல் ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட அர்த்த₂மே இவ்வண்ணமாக இந்த ஶ்லோகத்தில் நிலை நிறுத்தப்பட்டதாயிற்று. (ப₄ாரத) ப₄ரதகுலத்துதித்த உன் முன்னோர்களான அரசர்களனைவரும் இந்த தே₃ஹாத்ம விவேகமுடையவர்களாய் யுத்₃த₄மாகிற ஸ்வத₄ர்மத்தைச் செய்திருக்கும்போது, அக்குலத்துதித்த நீ தே₃ஹத்தையே ஆத்மாவாக மயங்கிப் போர் புரிய மறுக்கலாமோ? என்று கருத்து. 33.

भा ॥ एवम्-उक्तेन प्रकारेण क्षेत्रक्षेत्रज्ञयोरन्तरं - विशेषं विवेकविषयज्ञानाख्येन चक्षुषा ये विदुः भूतप्रकृतिमोक्षं च, ते परं यान्ति-

---

காரணமான அமாநித்வம முதலான கு3ணங்களையும். இவ்வாறு-இந்த அத்தியாயத்தில சொன்னமுறையில், ஏய அறிவாம் எழில் கண்ணால் — (க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்களைப்) பகுத்தறியும் அறிவாகிற அழகிய கண்ணாலே, மிக உணர்வார் தாம்—நன்றாக அறிபவர்கள், பரமாம் தன்மையினைப் பெற்று வீடு அமர்வர் — ஸம்ஸார ப3ந்த4மற்ற தம் ஆத்மாவை அடைவதாகிற செல்வத்தைப் பெறுவர்.

---

34. இவ்வத்தியாயத்தின் கடைசி ஶ்லோகமான இதில் இவ்வத்தியாயத்தில் முக்கியமாகச் சொல்லப்பட்டதான "'க்ஷேத்ரம்' எனப்படும் உடல் தாழ்ந்ததாகையாலே கைவிடத்தக்கது, 'க்ஷேத்ரஜ்ஞன்' எனப்படும் ஆத்மஸ்வரூபம் உயர்ந்ததாகையாலே கைக்கொள்ளத்தக்கது" என்னும் ஜ்ஞானத்தினால் விளையும் ப2லம் கூறப்படுகிறது. (ஏவம்) இதுவரையில் சொல்லப்பட்ட முறையில்; உடல் அறிவற்றதாய், த4ரிக்கப்படுவதாய், உடைமைப் பொருளாயிருக்கிறது என்றும். ஆத்மா அறிபவனாய், (உடலை) த4ரிப்பவனாய், (அதை) உடையவனாய் இருக்கிறான் என்றும் இவ்வத்தியாயத்தில் சொல்லப்பட்ட முறையில். (க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞயோ: அந்தரம்) உடல் ஆத்மா ஆகிய தத்துவங்களின் வேறுபாட்டை. "அந்தரமவகாஶாவதி4 பரிதா4நாந்தர்தி4பே4த3தாத3ர்த்2யே" [நாமலிங்க-ஶாநா-187] என்று அந்தரஶப்3த3த்துக்கு உள்ள பல பொருள்களில் பே4த3ம் (வேறுபாடு) என்னும் பொருளே இங்கு ப்ரகரணத்திற்குப் பொருத்தமானது. (ஜ்ஞாந சக்ஷுஷா யே விது3;) இவ்விரு தத்துவங்களின் தனித்தன்மைகளைப் பற்றிய ஜ்ஞானமாகிற கண்ணால் எவர்கள் அறிகிறார்களோ; "தி3வ்யம் த3தா3மி தே சக்ஷு:" [கீ3தை-11-8] முதலான இடங்களிற்போலே, தி3வ்ய ஜ்ஞானத்தைப் பொருளாகக் கொள்வது பொருந்தாதாகையாலே, இந்த ப்ரகரணத்துக்குப் பொருத்தமாக முற்கூறிய தனித்தன்மைகளைப் பற்றிய உபதேஶத்தால் உண்டாகும் ஜ்ஞானமே பொருளாகக் கொள்ளப்படுகிறது, உபதேஶத்தால் பெறப்பட்ட இந்த அறிவு ஆத்மாவை நேரே காண்பதற்கு உறுப்பாகையாலே 'ஜ்ஞானமாகிற கண்' என்று கண்ணாக உருவகப்படுத்தப்படுகிறது. "விவிச்யதே அநேந இதி விவேக:" என்னும் வ்யுத்பத்தியாலே, பா4ஷ்யத்தில் விவேகஶப்3த3ம் வேறுபாட்டைக் காட்டித் தரும்க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞர்களின் தனித்தன்மைகளைக் குறிக்கும்.

निर्मुक्तबन्धमात्मानं प्राप्नुवन्ति। मोक्ष्यतेऽनेनेति मोक्षः, अमानित्वादिकं [उक्तं] मोक्षसाधनमित्यर्थः; क्षेत्रक्षेत्रज्ञयोर्विवेकविषयेनोक्तेन ज्ञानेन तयोर्विवेकं विदित्वा भूताकारपरिणतप्रकृतिमोक्षोपायं अमानित्वादिकं चावगम्य य आचरन्ति, ते निर्मुक्तबन्धाः स्वेन रूपेणावस्थितमनवच्छिन्नज्ञानलक्षणमात्मानं प्राप्नुवन्तीत्यर्थः ॥ ३४ ॥

॥ इति श्रीभगवद्रामानुजविरचिते श्रीमद्गीताभाष्ये त्रयोदशोऽध्यायः ॥१३

(பூ4தப்ரக்ருதி மோக்ஷம் ச யே விது3:) பஞ்சபூ4த ரூபமாகப் பரிணமித்திருக்கும் ப்ரக்ருதியிலிருந்து விடுபடுவதற்குக் காரணமான அமாநித்வம் முதலான கு3ணங்களையும் எவர்கள் அறிந்து அனுஷ்டி2க்கிருர்களோ. பூ4தஶப்3த3ம் ஜீவர்களைக் குறிப்பதாய், ஜீவர்களுக்கு ப்ரக்ருதியிலிருந்து விடுபடுவதற்குக் காரணமான முற்கூறிய கு3ணங்களைக் கூறுவதாகவும் கொள்ளலாம். இந்த அத்4யாயத்தின் தொடக்கத்தில் முதலில் க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்களை விவரித்து, அதற்குப்பின் பரிஶுத்3த4ாத்மாவை அடைவதற்குப் பரம்பரயா உபாயமான அமாநித்வாதி3கு3ணங்கள் விவரிக்கப்பட்டன. இங்கு முடிவிலும் முதல் பாத3த்தில் க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞர்களைக் கூறி, மூன்ருவது பாத3த்தில் ‘பூ4த ப்ரக்ருதிமோக்ஷம்’ என்று கூறியது. அந்த கு3ணங்களைக் கூறுவதாகக்கொள்வதே உசிதம். ஆகையால் “மோக்ஷ்யதே அநேநேதி மோக்ஷ:” என்னும் வ்யுத்பத்தியாலே மோக்ஷ ஶப்3த3ம் மோக்ஷ ஸாத4னமான அந்த கு3ணங்களைக் குறிக்கிறது என்று கொள்ளப்படுகிறது. “பூ4தங்களுக்கு ப்ரக்ருதியான (காரணமான) அவ்யக்தமெனப்படும் மூல ப்ரக்ருதியை இல்லாமல் செய்வதே பூ4தப்ரக்ருதிமோக்ஷம்” என்று ஶங்கரர் பொருள்கொண்டார். “கௌ3ராநாத்3யந்தவதீ” என்று மந்த்ரிகோபநிஷத்தில் மூல ப்ரக்ருதியை அந்தமும் ஆதி3யுமற்றது என்று கூறியிருப்பதோடு முரண்படுகையாலே இப்பொருள் ஆதரிக்கத்தக்கதல்ல. (தே பரம் யாந்தி) அவர்கள் ஸம்ஸாரப3ந்த4த்திலிருந்து விடுபட்டு, தன் இயல்வான நிலையிலிருக்கும் அளவற்ற ஜ்ஞானத்தையுடைய ஆத்மாவை அடைகிருர்கள். தனது ஜீவாத்ம ஸ்வரூபத்தை அறிந்ததற்குப் ப2லத்தைக் கூறும் ப்ரகரணமாகையாலே பரஶப்3த3ம் இங்கு பரிஶுத்3த4 ஜீவ ஸ்வரூபத்தையே குறிக்கும். ஸம்ஸாரி நிலையிலிருக்கும்போது சுருங்கிய ஜ்ஞானத்தோடு

பகவத் கீதை வெண்பா

(பதின்மூன்றும் அத்தியாயத்தின் ஸாரத்தைக் கூறும் பாசுரம்)

இத்தன்மை யாலுடலு மிவ்வுயிருஞ் சேர்ந்தியலு
மத்தன்மை யாமாப் பவிழ்விரகு—மெய்ததன்மை
யோர்ந்த பதின்மூன்ரு மோத்திங் குரைத்து முடித்
தாய்ந்தபொரு ளாய்ந்தோ மறிந்து.

வாதிகேஸரி ஜீயர் அருளிய பகவத்கீதை வெண்பாவில்
பதின்மூன்றும் அத்தியாயம் முற்றிற்று,

இத்தன்மையால்—இவ்வண்ணமாக, **உடலும் இவ்வுயிரும் சேர்ந்து இயலும் அத்தன்மையாம்** — இந்த உடலும் ஜீவாத்மாவும் ஒன்ருேடொன்று (கர்மத்தால்) சேர்ந்து செயல் புரியும் அந்நிலையாகிற, **ஆப்பு**—ஸம்ஸாரபந்தம்.

இருந்தவன் இப்போது எங்கும் பரவிய ஜ்ஞானத்தையுடையவனையே பரத்வம் என்று கொள்ளவேண்டும். 'யே விது₃:' என்று அறிவதை மாத்திரம் சொன்னபோதிலும் வாக்யார்த்த₂ ஜ்ஞான மாத்ரம் நேரே மோக்ஷ ஸாத₄னமாகாதாகையாலே, 'அறிந்து அனுஷ்டி₂க்கிருர்களோ' என்று அனுஷ்ட₂ான பர்யந்தமாகப் பொருள் கொள்ளப்பட்டது. பூ₄தப்ரக்ருதிமோக்ஷ மப்₃த₃த்தாலே இவனுக்கு அநிஷ்டமான ஸம்ஸாரம் நீங்குகிறது என்றும், "பரம் யாந்தி" என்றதால் இவனுக்கு இஷ்டமான ஆத்மாநுப₄வம் கிடைக்கிறது என்றும் உணர்த்தப் படுகிறது. ஆக, "க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்களைப் பற்றிய தனித்தன்மைகளை அறிவதன்மூலம் அவ்விரு தத்துவங்களையும் பிரித்தறிந்து, ப்ரக்ருதியிலிருந்து விடுபடுவதற்கு உபாயமான அமாநித்வம் முதலான இருபது கு₃ணங்களையுமறிந்து எவர்கள் அனுஷ்ட₂ானத்திற்குக் கொண்டு வருகிருர்களோ அவர்கள் ஸம்ஸாரப₃ந்த₄ம் நீங்கப்பெற்று எல்லையற்ற ஜ்ஞானத்தையுடைய தமது பரிஶுத்₃த₄ாத்மாவின் அனுப₄வத்தைப் பெறுகிருர்கள்" என்னும் இந்த அத்தியாயத்தின் ஸாரார்த்த₂த்தைக்கூறி அத்தியாயம் நிறைவுறுத்தப்பட்டதாயிற்று. 34

ஸ்ரீ க்ருஷ்ணஸ்வாமிதாஸன் இயற்றிய கீ₃தார்த்த₂ விவரணத்தில்
பதின்மூன்றும் அத்தியாயம் நிறைவுற்றது.

அவிழ் விரகு—போவதற்கு உபாயமான, **மெய்த்தன்மை**—மெய்யான ஜீவஸ்வரூப ஜ்ஞானத்தையும், அமாநித்வாதி குணங்களையும், **ஓர்ந்த**—ஆராய்ந்த, **பதின்மூன்றும் ஒத்து**—பதின்மூன்றும அத்தியாயம், **இங்கு உரைத்து முடித்து ஆய்ந்த பொருள்**—இங்கு சொல்லிமுடித்து விசாரித்த அர்த்தங்களை **அறிந்து ஆய்ந்தோம்** — ஆராய்ந்து அறிந்தோம்.

கீதார்த்த சங்கிரகம்

(ஸ்ரீ வேதாந்த தேசிகர் அருளியது)
பதின்மூன்றும் அத்தியாயத்தின் ஸாரப்பொருள்

ஊனின் படியு முயிரின் பிரிவு முயிர்பெறுவார்
ஞானம் பெறுவகை யுஞ்ஞான மீன்ற வுயிர்ப்பயனு
மூனின் றதற்கடி யும்முயிர் வேறிடு முள்விரகுந்
தேனின்ற பாதன் றெளிவித் தனன்சிலைப் பார்த்தனுக்கே.

தேன் நின்ற பாதன் — தேன் தங்குகின்ற திருவடி (த்தாமரை)யையுடைய கண்ணன், **சிலைப்பார்த்தனுக்கு**—வில்லைத் தாங்கும் அர்ஜுநனுக்கு, **ஊனின் படியும்**—சரீரத்தினுடைய ஸ்வரூபமும், **உயிரின் பிரிவும்** — ஜீவாத்மா (சரீரத்தைக் காட்டிலும) பிரிந்து நிற்குந்தனமையும், **உயிர் பெறுவார்**—ஆத்மாவை அடையவிருமபுகிறவர், **ஞானம் பெறுவகையும்**— அந்த ஆத்மஜ்ஞானத்தைப் பெறுவதற்கு வேண்டிய அமாநித்வம் முதலிய குணங்களாகிற உபாயங்களும், **ஞானம் ஈன்ற**-ஆத்மாவை அறியச் சாதனமான அந்த குணங்களால் அடையப்படுகின்ற, **உயிர்ப் பயனும்**—ஆத்மாநுபவமாகிய பலனும், **ஊன் நின்றதற்கு** —சரீரம் ஸம்ஸாரத்தில நின்று செயல்படுவதற்கு, **அடியும்** —காரணமும், **உயிர் வேறிடும்** — ஆத்மாவை (ச் சரீரத்தினின்று) வேறுபடக் காணபதற்கு வேண்டிய, **உள் விரகும்**—மனத் தெளிவும் (ஆகிய இவற்றை), **தெளிவித்தனன்**—விளக்கியருளினன்.

கீ₃தாஶ்லோகார்த்த₂ச் சுருக்கம்
பதின்மூன்றும் அத்தியாயம்

ஶ்லோ.	அர்த்த₂ம்
1.	ஶரீரமே க்ஷேத்ரம் எனப்படும்; அதை அறியும் ஜீவனே க்ஷேத்ரஜ்ஞன் எனப்படுவான்,
2.	இரண்டுமே ஸர்வேஶ்வரனுக்கு ஶேஷமானவை என அறிவதே உண்மையறிவு.
3.	இரண்டைப்பற்றியும் சுருக்கமாகச் சொல்லப்போவதாக ப்ரதிஜ்ஞை.
4.	இவ்வறிவு ஸகல ப்ரமாண ஸித்₃த₄ம்.
5. 6.	க்ஷேத்ரத்தைப்பற்றிய உண்மையறிவைச் சுருங்கக் கூறல்.
7-11.	ஆத்ம ஜ்ஞாந ஸாத₄னமான அமாநித்வம் முதலான இருபது கு₃ணங்களைக் கூறுதல். இது க்ஷேத்ரத்தினுல் விளையும் கார்யத்தின் விளக்கமுமாகும்.
12-17.	க்ஷேத்ரஜ்ஞன் எனப்படும் ஜீவனின் ஸ்வரூபத்தின் விளக்கம்.
18.	கார்யத்தோடுகூடிய க்ஷேத்ரத்தையும், க்ஷேத்ரஜ்ஞனையும் அறிவதின் ப₂லம்.
19-22.	ஆத்மா ஶரீரத்தில் கட்டுப்பட்டிருப்பதற்குக் காரணம் ஸத்வாதி₃கு₃ணங்களால் உண்டாகும் இன்பதுன்பங்களில் பற்றேயாகும்.
23.	ப்ரக்ருதி புருஷர்களைப் பிரித்தறியும் விவேக ஜ்ஞானத்தின் ப₂லம் பிறவி நீங்குதலே.
24-25.	பிரித்தறியும் விவேகிகளின் பல படிகள்.
26.	தே₃ஹமும் ஆத்மாவும் பிறவியிலிருந்தே அழுந்தக் கட்டப்பட்டிருப்பதால், அவற்றைப் பிரித்தறிவது அரிது.
27-33.	தே₃ஹாத்மாக்களைப் பிரித்தறியும் முறையாகிற விவேகத்தை விளக்குதல்.
34.	க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்களைப் பிரித்தறியும் ஞானத்தின் ப₂லம் ஆத்மப்ராப்தி எனக்கூறி அத்தியாயத்தை நிறைவுறுத்தல்.

பதின்மூன்றும் அத்தியாயத்தின் கீ₃தா ஶ்லோகார்த்த₂ச் சுருக்கம் நிறைவுற்றது.

ஆளவந்தார் அருளிய
கீ₃தார்த்த₂ ஸங்க்₃ரஹம்.
[பதினுலாம் அத்தியாயத்தின் சுருக்கம்.]

गुणबन्धविधा तेषां कर्तृत्वं तन्निवर्तनम् ।
गतित्रयस्वमूलत्वं चतुर्दश उदीर्यते ॥ १८ ॥

18. கு₃ணப₃ந்த₄வித₄ா தேஷாம் கர்த்ருத்வம் தந்நிவர்த்த
கூ₃தித்ரயஸ்வமூலத்வம் சதுர்த₃ஶ உதீ₃ர்யதே ‖ [நம் ‖

கு₃ணப₃ந்த₄வித₄ா—(ஸத்வம முதலான மூன்று கு₃ணங்கள்) ஸம்ஸாரப₃ந்த₄த்துக்குக் காரணமாகும் முறையும், **தேஷாம் கர்த்ருத்வம்** — அந்த கு₃ணங்கள் செயலுக்குக் காரணமாயிருக்கும் தன்மையும், **தந்நிவர்த்தநம்** — அந்த கு₃ணங்களை நீக்கும் முறையும், **க₃தித்ரயஸ்வமூலத்வம்** — (சிறந்த ஐஶ்வர்யம், கைவல்யம், ப₄க₃வத்ப்ராப்தி என்னும்) மூனறு ப்ராப்யங்களுேம தன்னிடமிருந்தே கிடைக்கின்றன என்பதும், **சதுர்த₃ஶே**—(கீ₃தையின்) பதினுலாமத்தியாயத்தில, **உதீ₃ர்யதே**—சொல்லப்படுகிறது.

வாதிகேஸரி ஜீயர் அருளிய
ப₄க₃வத்₃கீ₃தை வெண்பா—அத்தியாயம்-14.
கு₃ணத்ரய விப₄ாக₃யோக₃ம்
அத்தியாயப்பொருளின் சுருக்கம்

முக்குணங்கள் பந்தத்து மூட்டுகின்ற நேர்பதுவு
மக்குணங்க ணீங்குவிக்கு மவ்விரகு — மிக்குயர்ந்த
கீதை பதினுலா மோதத்துக் கிளர்ந்துரைக்கும்
போதத் தியல்பாற் புரிந்து.

மிக்கு உயர்ந்த கீதை பதினுலாம் ஓத்து—மிகச்சிறந்த கீ₃தையின பதினுலாம அத்தியாயம் **முக்குணங்கள் பந்தத்து மூட்டுகின்ற நேர்பு அதுவும்** — (ஸத்வம் முதலிய) மூன்று

ஸ்ரீ:

॥ अथ चतुर्दशोऽध्यायः ॥

भा ॥ त्रयोदशे प्रकृतिपुरुषयोरन्योन्यसंसृष्टयोः स्वरूपयाथात्म्यं विज्ञायामानित्वादिभिर्भगवद्भक्त्यनुगृहीतैर्बन्धान्मुच्यत इत्युक्तम् । तत्र बन्धहेतुः पूर्वपूर्वसत्त्वादिगुणमयसुखादिसङ्ग इति चाभिहितं * कारणं गुणसङ्गोऽस्य सदसद्योनिजन्मसु (२१) इति । अथेदानीं गुणानां बन्धहेतुताप्रकारो गुणनिवर्तनप्रकारश्चोच्यते ।

கு3ணங்கள் ஸம்ஸார ப3ந்த4த்தில (தாமே செயலுக்குக் காரணமாயிருந்து) நன்றாகக் கட்டிவிடுகின்ற முறையையும், **அக்குணங்கள் நீங்குவிக்கும் அவ்விரகும்**—அந்த கு3ணங்களை நீங்கச்செய்யும் முறையையும், **போதத்து இயல்பால்**—அறிவிக்கவேண்டிய முறையில், **புரிந்து**—விருப்பத்தோடு, **கிளர்ந்து உரைக்கும்**—உறுதியாகக்கூறும.

ஸ்ரீக்ருஷ்ண ஸ்வாமித3ாஸன் இயற்றிய

கீ3தார்த்த2 விவரணம்

பதினாலாம் அத்தியாயம

முன் அத்தியாயத்தோடு ஸங்க3தியும், இவ்வத்தியாயார்த்த2ச் சுருக்கமும்.

சென்ற அத்தியாயத்தின் தொடக்கத்திலிருந்து பதினெட்டாவது ஸ்லோகமீறாக ஒன்றோடொன்று சேர்ந்திருக்கும் ப்ரக்ருதி புருஷர்களைப்பற்றிய உண்மையறிவு விளக்கப்பட்டது. இதனிடையே ஏழுமுதல் பதினோராவது ஸ்லோகமீறாக க்ஷேத்ரகார்யமாய், ஆத்மப்ராப்திக்குப் பரம்பரயா காரணமான அமாநித்வம் முதலான இருபது கு3ணங்கள் விளக்கப்பட்டன. அத்தியாயம் முழுவதிலும், 'முற்கூறிய ப்ரக்ருதி புருஷர்களைப் பகுத்தறிந்து ப4க்தி யோக3த்தால் அநுக்3ரஹிக்கப்பெற்ற முற்கூறிய கு3ணங்களாலே ஸம்ஸாரப3ந்த4ம் நீங்கப்பெற்று ஆத்மாவை அடைகிறான்' என்று கூறப்பட்டது. இடையே பத்தொன்பது முதல் இருபத்து மூன்றாவது ஸ்லோகம் ஈறாக "ஆத்மா ஶரீரத்தில் கட்டுப்பட்டிருப்பதற்குக் காரணம் மேன்மேலே ஸத்வாதி3 கு3ணங்களால் உண்டாகும் இன்பதுன்பங்களில் பற்றே" என்றும் உணர்த்

श्रीभगवानुवाच —

परं भूयः प्रवक्ष्यामि ज्ञानानां ज्ञानमुत्तमम् ।
यज्ज्ञात्वा मुनयस्सर्वे परां सिद्धिमितो गताः ॥ १-

ஸ்ரீப₄க₃வாநுவாச-

1. பரம் பூ₄ய: ப்ரவக்ஷ்யாமி ஜ்ஞாநாநாம் ஜ்ஞாநமுத்தமம் |
யத் ஜ்ஞாத்வா முநய: ஸர்வே பராம் ஸித்₃தி₄மிதோ க₃தா: ||

பரம் — (முன்சொன்னதைக் காட்டிலும்) வேருன தொனறை, **பூ₄ய: ப்ரவக்ஷ்யாமி**—(முன் சொன்னதின் விளக்கமாக) மறுபடியும் சொல்லுகிறேன்; **யத் ஜ்ஞாத்வா**— எந்த அறிவை அடைந்து, **ஸர்வே முநய:** — அதை மனனம் செய்யும் அனைவரும், **இத:**—இந்த ஸம்ஸாரமண்ட₃லத்திலிருந்து, **பராம் ஸித்₃தி₄ம க₃தா:** — (தம்) பரிஶுத்₃த₄ாத்ம ஸ்வரூபத்தை அடைவதாகிற மேலான பேற்றைப் பெற்றனரோ, (அது) **ஜ்ஞாநாநாம் உத்தமம் ஜ்ஞாநம்** — (ப்ரக்ருதி புருஷர்களைப்பற்றிய) அறிவுகளில் மேலான அறிவு;

1. மற்றுமுனக் கன்ன மனனறிவின் மேலறிவை
யுற்றுணரும் வண்ண முரைக்கின்றே—னற்றமறை
யாதறிந்து மாமுனிவ ரிப்பவம்விட் டெய்தினர்
மீதமருந் தன்மையினை மிக்கு.

அற்றம் அறை யாது அறிந்து—உண்மையை உரைக்கும் எதை அறிந்து, **மாமுனிவர்**—அதை மனனம் செய்யும் சிறந்த யோகிகள, **இப்பவம் விட்டு** — இந்த ஸம்ஸார மண்ட₃லத்தை விட்டு, **மீது அமரும் தன்மையினை** — பரிஶுத்₃த₄ாத்ம ஸ்வரூபத்தை அடைவதாகிற மேலான பேற்றை, **மிக்கு எய்தினர்**—சிறப்புடன் அடைந்தனரோ, **அன்ன** - அத்தன்மையதாய், **மனன் அறிவின் மேல் அறிவை**—

தப்பட்டது. இவ்வத்தியாயத்தில் அதற்கு விளக்கமாக, முற்கூறிய மூன்று கு₃ணங்கள் ஸம்ஸார ப₃ந்த₄த்தில் மூட்டும் முறையும், அவற்றை எப்படி நீக்குவது என்பதும் முக்கியமாகக் கூறப்படுகின்றன. ப்ராஸங்கி₃கமாக, ஸத்வாதி₃கு₃ணங்கள் செயலுக்குக் காரணமாயிருக்கும் தன்மையும், ஐஶ்வர்ய கைவல்ய ப₄க₃வத் ப்ராப்திகளாகிற மூன்று ப்ராப்யங்களும் தன்னைத் தஞ்சமாகப்பற்றியவர்களுக்கே ஸித்₃தி₄க்கும் என்பதும் காட்டப்பட்டது.

भा ॥ परम्-पूर्वोक्तादन्यत् प्रकृतिपुरुषान्तर्गतमेव सत्त्वादिगुण-विषयं ज्ञानं भूयः प्रवक्ष्यामि । तच्च ज्ञानं सर्वेषां प्रकृतिपुरुषविषयज्ञानानां

(ப்ரக்ருதி புருஷர்களைப் பற்றிய) மனத்தால அறியும் அறிவுகளுக்குள மேலான அறிவை, **மற்றும்** — மறுபடியும், **உனக்கு** — உனக்கு, **உற்றுணரும் வண்ணம் உரைக்கின்றேன்** — நன்கு அறியலாம்படி கூறுகின்றேன்.

---

1. முன் அத்தியாயத்தில் சுருக்கமாகச் சொல்லப்பட்ட ஆத்ம ப்ராப்தி காரணமான ஒரு விஷயத்தையே இவ்வத்தியாயத்தில் விளக்கமாகக் கூறப்போவதாகச் சொல்லுகிறான் கண்ணன். (பரம் ப்ரவக்ஷ்யாமி) முன்சொன்னதைக் காட்டிலும் வேறொன்றைக் கூறுகிறேன். 'உத்தமம்' என்று அடுத்த பாத₃த்திலுள்ள சொல்லோடு புநருக்தி வராமலிருப்பதற்காக, 'பரம்' என்பதற்கு, 'மேலானதை' என்று பொருள்கொள்ளாமல் 'வேறொன்றை' என்று பொருள் கொள்ளப்பட்டது. (பூ₄ய; ப்ரவக்ஷ்யாமி) மறுபடியும் சொல்லுகிறேன். 'வேறொன்று' என்பதும் 'மறுபடியும்' என்பதும் முரண்படுகிறதே எனில்: சென்ற அத்தியாயத்தில் "ஸத்வாதி₃ கு₃ணங்கள் ஸம்ஸார ப₃ந்த₄த்துக்குக் காரணமாகின்றன" என்று சுருங்கக் கூறியதையே இவ்வத்தியாயத்தில் விரிவாக விளக்கப் போகிறானாகையால், 'வேறொன்று' என்றதற்கும் 'மறுபடியும்' என்றதற்கும் முரண்பாடு இல்லை. (தத் ஜ்ஞாநாநாம் உத்தமம் ஜ்ஞாநம்) ஶ்லோகத்தின் பிற்பாதியில் 'யத்' என்று உள்ளதாகையாலே இங்கு 'தத்' என்று சேர்த்துக்கொள்ளப்படுகிறது. அது ப்ரக்ருதி புருஷர்களைப்பற்றிய எல்லா அறிவுகளைக்காட்டிலும் மேலான அறிவாகும். "ஜ்ஞாநாநாம் உத்தமம் ஜ்ஞாநம் பூ₄ய: ப்ரவக்ஷ்யாமி" என்று முதலிரண்டு பாத₃ங்களையும் ஒரே வாக்யமாக அந்வயித்துப் பொருள்கொள்ளலாமாயினும், 'அந்த அறிவு அவசியம் அறிய வேண்டியது' என்று ஸித்₃தி₄ப்பதற்காக, "தத் ஜ்ஞாநாநாம் உத்தமம் ஜ்ஞாநம்" என்று இரண்டாவது பாத₃த்தைத் தனி வாக்யமாகப் பிரித்து, ஜ்ஞானத்தின் சிறப்பை விதி₄ப்பதாகப் பொருள்கொள்ளப்பட்டது. 'ஜ்ஞாநாநாம்' என்று பொதுவாக எல்லா அறிவுகளையும் காட்டுமானாலும், ப₄க₃வத்₃விஷய ஜ்ஞானத்தைக் காட்டிலும் மேலான அறிவு ஒன்று இல்லாமையாலே, அதை நீக்கி "ப்ரக்ருதி புருஷர்களைப்பற்றிய எல்லா அறிவுகளைக் காட்டிலும் சிறந்த அறிவு" என்று பொருள்கொள்ளப்பட்டது.

उत्तमम् । यज्ज्ञानं ज्ञात्वा सर्वे मुनयस्तन्मननशीलाः इतः—संसार-[बन्धात्] मण्डलात्परां सिद्धिं गताः— परां—परिशुद्धात्मस्वरूपप्राप्ति-रूपां सिद्धिमवाप्ताः ॥ १ ॥

இனி ஶ்லோகத்தின் பிற்பாதியாலே, இந்த ஜ்ஞானத்தினால் கிடைக்கும் இஷ்டப்ராப்தி ரூபமான ப₂லனைக் கூறுகிறான்: (யத் ஜ்ஞாத்வா) எந்த ஜ்ஞானத்தை அறிந்து. (ஸர்வே முநய:) அவ்வறிவை எப்போதும் மனனம் செய்யும் அனைவரும். இந்த ஞானத்தைப்பற்றி அறிவதால்மட்டும் மேலான ஸித்₃தி₄ கிடைத்து விடாதாகையாலும், இவ்வறிவைப்பெற்று அதை மனனம் செய்ப வர்களுக்கே மேலான ஸித்₃தி₄ கிடைக்குமாகையாலும், "எந்த ஞானத்தைப்பற்றி அறிந்த முனிவர் அனைவரும்" என்று பொருள் கொள்ளாமல், "எந்த அறிவை அறிந்து அதை மனனம் செய்யும் அனைவரும்" என்று பொருள்கொள்ளப்பட்டது, (இத: பராம்) இந்த ஸம்ஸாரமண்ட₃லத்திற்கு மேலான. 'இத:' என்பதற்கு 'இந்த ஜ்ஞானத்தினால்' என்று பொருள்கொண்டு, கிடைக்க விருக்கும் மேலான ஸித்₃தி₄க்கு இந்த ஜ்ஞானம் காரணம் என்று இப்பத₃ம் காட்டுவதாகக் கொள்ளக் கூடாதோ? எனில்: இப் பத₃ம் இல்லாவிடிலும் "யத் ஜ்ஞாத்வா பராம் ஸித்₃தி₄ம் க₃தா:" என்று முற்பட்டதான ஞானத்தையும், பிற்பட்டதான பரஸித்₃தி₄ ப்ராப்தியையும் சேர்த்துப்படிப்பதாலேயே (பூ₄தப₄வ்ய ஸமுச் சார ந்யாயத்தாலே), முற்பட்டது பிற்பட்டதற்குக் காரணம் என்று ஸித்திக்குமாகையாலும், அடுத்து, 'மேலான ஸித்₃தி₄' என்று உள்ளவிடத்தில், 'எதற்கு மேலான?' என்னும் கேள்வி எழுகை யாலும், இப்பத₃ம் ஹேதுவைக்காட்டுவதென்று கொள்ளாமல், 'இத: பராம்' என்னும் தொடருக்கு 'இந்த ஸம்ஸார மண்ட₃லத் திற்கு மேலான' என்று பொருள் கொள்ளப்பட்டது. (பராம் ஸித்₃ தி₄ம் க₃தா:) பரிஶுத்₃த₄ாத்ம ஸ்வரூபத்தை அடைவதாகிற மேலான ஸித்₃தி₄யை அடைந்தார்களோ. ப₄க்தியோக₃த்தா லேயே கிடைக்கக்கூடிய ப₄க₃வத் ப்ராப்தி—மேல் சொல்லப் போகும் ப்ரக்ருதிபுருஷ விவேக ஜ்ஞானத்தாலும், 'ஸத்வம் முத லான முக்குணங்கள் ஸம்ஸார ப₃ந்த₄த்திற்குக் காரணம்' என்று அறிவதாலும் கிடைக்காதாகையால், 'பராம் ஸித்₃தி₄ம்' என்பதற்கு இவ்வறிவுகளால் கிடைக்கக்கூடிய பரிஶுத்₃த₄ாத்ம ப்ராப்தியே பொருளாகக்கொள்ளப்பட்டது. ஆக, "ஜீவன் ஸம்ஸார மண்ட₃

भा ।। पुनरपि तज्ज्ञानं फलेन विशिनष्टि-
इदं ज्ञान[म]मुपाश्रित्य मम साधर्म्यमागताः ।
सर्गेऽपि नोपजायन्ते प्रलये न व्यथन्ति च ।। २

2. இத₃ம் ஜ்ஞாந(ம)முபாஶ்ரித்ய மம ஸாத₄ர்ம்ய மாக₃தா: ।
ஸர்க்கே₃ऽபி நோபஜாயந்தே ப்ரளயே ந வ்யத₂ந்தி ச ।।

இத₃ம் ஜ்ஞாநம்—(சொல்லப்போகும்) இந்த அறிவை, **உபாஶ்ரித்ய**—அடைந்து, **மம ஸாத₄ர்ம்யம்**—என்னோடு ஸாம்யத்தை, **ஆக₃தா:** — அடைந்தவர்களாய், **ஸர்க்கே₃ அபி ந உபஜாயந்தே**—(அவர்கள்) இங்கு படைக்கவும் படுவதில்லை; **ப்ரளயே ந வ்யத₂ந்தி ச**— அழிக்கவும் படுவதில்லை,

2 இந்த வறிவை யினிதார்ந்திங் கென்னொப்பா
மந்த வுயர்வை யடைந்தவர்கள்- பந்தமுடன்
சற்கத்தி லும்பிறவார் தாந்துயரஞ் சாரார்க
ளொற்கப் பிரளயத்தி னுள்.

இந்த அறிவை—(சொல்லப்போகும்) இந்த ஞானத்தை, **இனிது ஆர்ந்து** — இனிதாகப்பெற்று, **இங்கு என் ஒப்பாம் அந்த உயர்வை அடைந்தவர்கள்**—இத்தேரில வீற்றிருக்கும் என்னோடு ஒத்திருக்கும அத்தகைய பெருமையைப் பெற்றவர்களாய், **சற்கத்திலும் பந்தமுடன் பிறவார்**—(அவர்கள்) ஸம்ஸாரத்தில் கட்டுப்பட்டுப் பிறப்பை அடைவதில்லை; **ஒற்கப்பிரளயத்தினுள் தாம் துயரம் சாரார்கள்**—மரணமாகிற துன்பத்தையும் அடைவதில்லை.

லத்தில் கட்டுப்படுவதற்கு ஸத்வாதி₃கு₃ணங்கள் காரணமாகின்றன; அந்தக்கட்டிலிருந்து நீங்குவதற்கு வழி யாது என்று மேலே சொல்லவிருக்கிற விஷயங்களைப்பற்றிய அறிவு, அதை மனனம் செய்யும் ஜீவனை இந்த ஸம்ஸார மண்ட₃லத்திலிருந்து விடுவித்து அவனுக்குத் தனது ஆத்ம ஸ்வரூபத்தை என்றும் அநுப₄விப்பதாகிற மேலான பயனை அளித்துவிடும்'' என்று சொல்லிற்றாயிற்று. 1.

भा ॥ इदम्--वक्ष्यमाणं ज्ञानमुपाश्रित्य मम साधर्म्यमागताः— मत्साम्यं प्राप्ताः, सर्गेऽपि नोपजायन्ते- न सृजिकर्मतां भजन्ते; प्रलये न व्यथन्ति च न च संहृतिकर्मताम् [भजन्ते] ॥ २ ॥

---

2. இவ்வத்தியாயத்தில் சொல்லப்போகும் அறிவை மனனம் செய்பவர்கள் தம் ஆத்மாநுப₄வமாகிற இஷ்ட ப்ராப்தியைப் பெறுவார்கள் என்றது சென்ற ஶ்லோகத்தில்; பிறப்பு இறப்பு முதலான அநிஷ்டங்களும் நீங்கப்பெறுவார்கள் என்கிறான் இந்த ஶ்லோகத்தில், (இத₃ம் ஜ்ஞாநம் உபாஶ்ரித்ய) இவ்வத்தியாயத்தில் மேலே சொல்லப்போகும் இந்த ஜ்ஞாநத்தை அடைந்து; 'அபாஶ்ரித்ய' என்று பாட₂மானபோது 'பற்றுசாகக்கொண்டு' என்று பொருள்படுகிறது. "ஜ்ஞாநம் ப்ரவக்ஷ்யாமி" என்று இவ்வத்தியாயத்தில் மேலே சொல்லப்போவதாகச் சென்ற ஶ்லோகத்தில் எடுக்கப்பட்டதையே இங்கு "இத₃ம் ஜ்ஞாநம்" என்று அநுவாத₃ம் செய்கிறுனுகையால், 'சொல்லப்பட்ட ஞானம்' என்று பொருள் கொள்ளாமல், 'சொல்லப்போகிற ஞானம்' என்று பொருள்கொள்ளப்பட்டது. (மம ஸாத₄ர்ம்யம் ஆக₃தா:) என்னோடு ஸாம்யத்தை அடைந்தவர்களாய், "அபஹதபாப்மா" முதலான எட்டு கு₃ணங்களின் ஆவிர்ப்ப₄ாவமே இந்த ஸாம்யம். இந்த ஸாம்யம் எத்தகையது என்பதை, "நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி" [முண்ட₃க 3-1-3] [ஸம்ஸார ஸம்ப₃ந்த₄மற்றவனுய் (முக்தாத்மா) என்னோடு மேலான ஒற்றுமையை அடைகிறுன்] என்று ஶ்ருதியிலும் ஓதப்பட்டது. இதிலிருந்து முக்தியில் பரமனுக்கும் ஜீவனுக்கும் ஸ்வரூபைக்யம் ஏற்படுகிறது என்னும் அத்₃வைதபக்ஷம் தள்ளப்படுகிறது. இந்த வேத₃வாக்யத்தையும் "மம ஸாத₄ர்ம்யமாக₃தா:" என்னும் இப்பாத₃த்தையும் [கீ₃தை 12—3, 4, 5] ப₄ாஷ்யத்தில் கைவல்யநிஷ்ட₂ன் விஷயமாக எடுக்கையாலே, இங்கு சொல்லப்படுபவனும் கைவல்யநிஷ்ட₂னே என்றும், மறுபடியும் ஸம்ஸார ப்ராப்தியோ ப₄க₃வத் ப்ராப்தியோ இல்லாத தாழ்ந்த மோக்ஷமே கைவல்யாநுப₄வம் என்றும் கீ₃தாசார்யனுக்கும் ப₄ாஷ்யகாரருக்கும் திருவுள்ளம் எனத் தெளிவாக விளங்குகிறது. எட்டாவது அத்தியாயத்தின் வியாக்கியானத்தின் இறுதியில் இணைக்கப்பட்ட கைவல்ய வித்₃த₄ாஞ்ஜநத்தில் இது அசைக்க முடியாதபடி நிலைநாட்டப்பெற்றது.

भा॥ अथ प्राकृतानां गुणानां बन्धहेतुताप्रकारं वक्तुं सर्वस्य भूतजातस्य प्रकृतिपुरुषसंसर्गजत्वं * यावत्संजायते किञ्चित् (१३-२६) इत्यनेनोक्तं भगवता स्वेनैव कृतमित्याह-

मम योनिर्महद्ब्रह्म तस्मिन् गर्भं दधाम्यहम् ।
संभवस्सर्वभूतानां ततो भवति भारत ॥ ३

3. மம யோநிர் மஹத்$_3$ ப்$_3$ரஹ்ம தஸ்மிந் க$_3$ர்ப்ப$_4$ம்
த$_3$தா$_4$ம்யஹம் ।
ஸம்ப$_4$வ: ஸர்வபூ$_4$தாநாம ததோ ப$_4$வதி பா$_4$ரத ॥

பா$_4$ரத — ப$_4$ரதகுலத்துதித்தவனே! **யோநி:** — (உலகனைத்துக்கும்) காரணமாய், **மம** என்னுடையதாய் **மஹத்** — பெரிதாயிருப்பதாய், **ப்$_3$ரஹ்ம யத்** — 'ப்$_3$ரஹ்மம' எனப்படும் மூலப்ரகருதி யாதொன்றுண்டோ. **தஸ்மிந்** — அதில், **க$_3$ர்ப்ப$_4$ம்** — (சேதனஸமஷ்டிரூபமான) க$_3$ர்ப்ப$_4$த்தை, **அஹம் த$_3$தா$_4$மி** — நான் த$_4$ரிக்கச்செய்கிறேன்; **தத:** — இப்படி இரண்டையும் சேர்ப்பதால், **ஸர்வபூ$_4$தாநாம்** — (பிரமன் முதல் புலனருகவுள்ள) எல்லா ஜீவராசிகளின், **ஸம்ப$_4$வ:** — பிறப்பும், **ப$_4$வதி** — உண்டாகிறது.

சென்ற ஶ்லோகத்தில் "பராம் ஸித்$_3$தி$_4$ம்" என்றதின் விவரணமான கு$_3$ணாஷ்டகத்தின் ஆவிர்பா$_4$வத்தை ஶ்லோகத்தின் முதற்பாதியிலே சொல்லி, "இத: பராம்" என்றதின் விவரணமான ஸம்ஸார மோசனமாகிற அநிஷ்டநிவ்ருத்தியைப் பிற்பாதியிலே விளக்குகிறுன்—(ஸர்க்கே$_3$ऽபி நோபஜாயந்தே) ஸம்ஸார மண்ட$_3$லத்தில் ஸ்ருஷ்டிக்கு விஷயமாகிப் பிறப்பதில்லை. (ப்ரளயே ந வ்யத$_2$ந்தி ச) ப்ரளயம் எனப்படும் ஸம்ஹாரத்திற்கு விஷயமாகி மரணத்துன்பத்தை அநுப$_4$விப்பதுமில்லை. 'ப்ரளயத்தில் துன்புறுவதில்லை' என்று ஶப்$_3$த$_3$ார்த்த$_2$மாயிருந்தபோதிலும், 'ஸ்ருஷ்டிக்கு விஷயமாகிப் பிறப்பதில்லை' என்று மூன்றும் பாத$_3$த்தில் சொன்னதையொட்டி, 'ஸம்ஹாரத்திற்கு விஷயமாகி மரணத்துன்பத்தை அடைவதில்லை' என்று பொருள் கொள்ளப்பட்டது. ஆக, முதலிரண்டு ஶ்லோகங்களாலும் இவ்வத்தியாயத்தில் சொல்லப்போகும் அறிவினுல் விளையும் பயன் விளக்கப்பட்டதாயிற்று. 2

**3 மிக்க பிரமம் விறல்யோனி யென்றுரைக்கத்
தக்க தெனதசித்திற் சார்வுபெறத்—தொக்கவுயிர்
கெற்பத்தை யான்சேர்ப்பன் கேழ்கிளரும் பூதங்க
ளுற்பத்தி சேருமிதி லுற்று.**

மிக்க பிரமம்—பெரிதான ப்3ரஹ்மம், **விறல் யோனி**-உலகனைத்துக்கும் காரணம், **என்று உரைக்கத்தக்கது** — என்று சொல்லத்தக்கதாய், **எனது அசித்தில்**—என்னுடையதான அசேதன மூலப்ரக்ருதியில், **சார்வுபெற**—பொருந்தியிருக்கும்படி, **தொக்க உயிர் கெற்பத்தை** — சேதன ஸமஷ்டி ரூபமான க3ர்ப்ப4த்தை, **யான்**—நான், **சேர்ப்பன்**— சேரச் செய்கிறேன்; **இதில் உற்று**—இந்தச் சேர்த்தியினால், **கேழ் கிளரும்**—பிரமன் முதல் புல ஈருகப் பலவகையாகப் படரும், **பூதங்கள் உற்பத்தி**—எல்லா ஜீவர்களின் பிறப்பும், **சேரும்**— உண்டாகிறது.

---

3. ஸத்வம் முதலான முக்கு3ணங்கள் ஜீவனை ஸம்ஸாரத்தில் கட்டிவைக்கும் முறையை ஐந்தாவது ஶ்லோகம் முதலாகக்கூறி, அத்4யாயத்தின் இறுதியில் இந்த ப3ந்த4த்திலிருந்து விடுபடும் வழியைக் கூறுவதற்குமுன், "யாவத் ஸஞ்ஜாயதே கிஞ்சித்" [13-26] என்று 'எல்லா ஜீவராசிகளும் ப்ரக்ருதி புருஷர்களின் சேர்த்தியால் உண்டானவை' என்று சென்ற அத்தியாயத்தில் கூறப்பட்ட ப்ரக்ருதி புருஷஸம்யோக3ம் ப4க3வானை தன்னாலேயே செய்யப்பட்டது என்று இந்த ஶ்லோகத்திலும், அடுத்த ஶ்லோகத்திலும் கூறுகிறான். இதன்மூலம் மேலே சொல்லவிருக்கும் கு3ணங்களைக்கொண்டு ஜீவனை ஸம்ஸாரத்தில் கட்டிவைப்பதும் தன்னால் செய்யப்படுவதே என்று உணர்த்துகிறான். (மம யோநிர் மஹத்3ப்3ரஹ்ம யத்) என்னுடையதாய், உலகனைத்துக்கும் காரணமாய், பெரியதாயிருப்பதாய், அதனாலேயே 'ப்3ரஹ்ம' எனப்படுவதான மூலப்ரக்ருதி யாதொன்று உண்டோ. 'தஸ்மிந்' [அதில்] என்று மேலே வருவதால், அதற்கு ப்ரதிகோடியாக 'யத்' என்னும் பத3ம் வருவித்துக்கொள்ளப்பட்டது. 'மம யோநி:' [எனக்குக் காரணமானது] என்று கூட்டிப்பொருள்கொண்டால், "அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜக3த: ப்ரப4வ: ப்ரலயஸ்ததா2| மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சித3ஸ்தி த4நஞ்ஜய.||" [7-6] [அர்ஜுனா!

मा ॥ कृत्स्नस्य जगतो योनिभूतं मम महद्ब्रह्म यत्, तस्मिन् गर्भं दधाम्यहम्; * भूमिरापोऽनलो वायुः खं मनो बुद्धिरेव च ।

நான் எல்லாவுலகிற்கும் உத்பத்திலய காரணமாயிருக்கிறேன்; என்னைக்காட்டிலும் மேலானது எதுவுமில்லை] என்று கீ3தையில் சொல்லியிருப்பதோடு முரண்படும்; தனக்குக் காரணமானதில் தான் க3ர்ப்ப4த்தை அளிப்பதும் பொருந்தாது; அடுத்த ச்லோகத்தில் "தாஸாம் ப்3ரஹ்ம மஹத்3யோநி: அஹம் பீ3ஜப்ரத3: பிதா" [அந்தந்த உருவங்களுக்கு 'ப்3ரஹ்ம' எனப்படும் மூல ப்ரக்ருதி மேலான காரணமாயிருக்கிறது. நான் அதில் சேதன ஸமூஹமாகிற பீ3ஜத்தை அளிக்கும் தந்தையாயிருக்கிறேன்] என்று கூறியிருப்பதும் விரஸமாகிவிடும். ஆகையால் உலகிற்குப் பிதாவான தான் உலகமாகிற க3ர்ப்ப4த்தை அளிக்கத்தகுந்த விகாரமடையும் பொருள் ஒன்றே இங்கு 'யோநி' ஶப்3த3த்தால் குறிக்கப்படுவதாகக் கொள்ளவேண்டும். அது மஹான் அஹங்காரம் முதலாக உலகங்களீருகவுள்ள விகாரப்பொருள்கள் அனைத்துக்கும் காரணமான மூலப்ரக்ருதியே என்று கொள்வதே பொருத்தம். இவ்விடத்தில் பின்வருமாறு ஓராக்ஷேபம் எழுகிறது:— உலகிற்குக் காரணமான "பெரிய ப்3ரஹ்மம்" எனத்தக்கவன் பரமாத்மாவேயொழிய மூலப்ரக்ருதி ஆகாதே; "வாஸுதே3வ: பரா ப்ரக்ருதி:" [ஏகாயநஶாகை] [வாஸுதே3வனே மேலான ஜக3த்காரணம்] "யத்3பூ4தயோநிம்" [முண்ட3 1-1-6] [பூ4தங்களனைத்துக்கும் காரணம் பரமாத்மாவே] "கர்த்தாரமீஶம் புருஷம் ப்3ரஹ்மயோநிம்" [முண்ட3 3-1-3] [உலகைப்படைத்த நிமித்தகாரணனுய், உபாத3ான காரணமுமாய் 'ப்3ரஹ்ம' எனப்படும் நியாமகனுன பரமபுருஷனை] முதலானவிடங்களில் அவனேயன்றே ஜக3த் காரணனுக ஓதப்படுகிருன்; அப்படியிருக்க, "மம யோநி:" என்று அவனை ஜக3த்காரணத்தைக் காட்டிலும் வேருக இங்கு எப்படிப் படிக்கமுடியும்? மேலும் 'ப்3ரஹ்ம' என்னும் சொல்லே ப்ரக்ருதியைச் சொல்லமாட்டாதது; அப்படியிருக்க, "மஹத் ப்3ரஹ்ம" என்று ப்ரக்ருதியைக் கூறுவதாகச் சொல்லுவது சிறிதும் பொருந்தாதே; ஆகையால், "ப்3ரஹ்மபுச்ச2ம் ப்ரதிஷ்ட2ா" [தைத் — ஆநந்தவல்லீ-5] முதலானவிடங்களிற்போலே ப்3ரஹ்ம ஸ்வரூபமே இங்கும் "மம யோநி:" [என்னுடைய ஜக3த்காரணமான ஸ்வரூபம்] என்று வேறுபட்டதுபோல ஔபசாரிகமாக

अहङ्कार इतीयं मे भिन्ना प्रकृतिरष्टधा ॥ अपरेयम् (७ ४) इति निर्दिष्ट अचेतनप्रकृतिर्महदहङ्कारादिविकाराणां कारणतया महद्ब्रह्मेत्युच्यते । अन्यत्रापि क्वचित्प्रकृतिरपि ब्रह्मेति निर्दिश्यते * यस्सर्वज्ञस्सर्वविद्यस्य ज्ञान

வழங்கப்படுகிறது என்றே கொள்ளவேண்டும்—என்பது அவ்வாக்ஷேபம். இதற்கு ஸமாத4ானம் பின்வருமாறு;— முன் இரண்டு ஷட்கங்களில் சொல்லப்பட்ட அர்த்த2ங்களை விளக்குவதற்காகவே எழுந்தது இந்த மூன்றாவது ஷட்கம். அதில் "பூ4மிராபோऽநலோ வாயு: க2ம் மநோ பு3த்3தி4ரேவ ச | அஹங்கார இதீயம் மே பி4ந்நா ப்ரக்ருதிரஷ்டதா4 || அபரேயம்" [கீ3தை 7—4] என்னுமிடத்தில் தனக்கு ஶேஷபூ4தமாகச் சொல்லப்பட்ட அசேதன மூலப்ரக்ருதியே இங்கு ப்ரக்ருதி ஶப்3த3த்தோடு ஒரே பொருளை உடைய 'யோநி' ஶப்3த3த்தால் சொல்லப்படுகிறது என்றும், அங்கு "இதஸ்த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்3தி4 மே பராம்| ஜீவபூ4தாம்" [கீ3தை 7-5] என்று அந்தத் தாழ்ந்த அசேதந ப்ரக்ருதியை த4ரிப்பதாகக் கூறப்பட்ட மேலான ப்ரக்ருதியான ஜீவஸமூஹமே இங்கு அசேதன ப்ரக்ருதியாகிற யோநியில் கர்மாநுப4வத்திற்காகச் சேர்க்கப்படும் க3ர்ப்ப4ம் என்று கூறப்படுகிறது என்றும் கொள்வதே பொருத்தமானது. "ஏதத்3யோநீநி" [கீ3தை 7-6] என்று அங்கும் ப்ரக்ருதியைக் குறித்து யோநிஶப்3த3ம் வழங்கப்பட்டதும் குறிக்கொள்ளத் தக்கது. அந்த மூலப்ரக்ருதி பெரிதான பஞ்சபூ4தங்களுக்கும், அவற்றுக்குக் காரணமான அஹங்காரத்திற்கும், அதற்குக் காரணமான 'மஹான்' என்னும் தத்துவத்திற்கும் காரணமாயிருந்துகொண்டு அந்தந்தக் கார்யப்பொருள்களைக் காட்டிலும் மிகப்பெரிதாயிருக்கையால் அதை "மஹத் ப்3ரஹ்ம" என்று குறிப்பதும் பொருத்தமே. ப்3ரஹ்ம ஶப்3த3மும் காரணத்வத்தையிட்டும், பெரிதாயிருப்பதையிட்டும் பரப்3ரஹ்மமல்லாத மூலப்ரக்ருதிவிஷயமாகவும் ஜீவவிஷயமாகவும் ஶாஸ்த்ரங்களில் வழங்கப்படுவதைக் காண்கிறோம். "யஸ்ஸர்வஜ்ஞ: ஸர்வவித் யஸ்ய ஜ்ஞாநமயம் தப: | தஸ்மாதே3தத்3ப்3ரஹ்ம நாம ரூபமந்நம் ச ஜாயதே ||" [முண்ட3க 1-1-10] [எவனொருவன் எல்லாப் பொருள்களின் ஸ்வரூப ஸ்வபா4வங்களை அறிகிறானோ, (உலகைப் படைப்பதற்கு) ஞானமயமான ஸங்கல்பத்தை எவன் செய்கிறானோ,

मयं तपः । तस्मादेतद्ब्रह्म नाम रूपमन्नं च जायते ॥ (मु. १.१.१०) इति ‡
※ इतस्त्वन्यां प्रकृतिं विद्धि मे पराम् । जीवभूताम् (७ ५) इति चेतन-
पुञ्जरूपा या परा प्रकृतिर्निर्दिष्टा सेह सकलप्राणिबीजतया गर्भशब्देनोच्यते।

அவனிடமிருந்து, மஹதா3தி3களுக்குக் காரணமாகவும் பெரிதாகவு மிருக்கையாலே 'ப்3ரஹ்ம' எனப்படும் மூலப்ரக்ருதி நாமரூபங்களையுடையதாய், பூ4மி முதலானவைகளாகப் பிறக்கிறது] என்னும் வேத3 வாக்யத்தில் மூலப்ரக்ருதி ப்3ரஹ்ம ஶப்3த3த்தால் குறிக்கப்படுவதைக் காணலாம். இப்படி மூலப்ரக்ருதியை ஜக3த்காரணமாகக் கொள்வது, பரமாத்மாவை உலகிற்கு உபாதா3னகாரணமாகக் கொள்வதோடு ஒத்திருப்பதேயொழிய முரண்பட்டதல்ல; விகாரமற்றவனான பரமாத்மாவுக்கு மூலப்ரக்ருதியை ஶரீரமாகக் கொண்டிருக்கையையிட்டன்றோ ஜக3து3பாதா3நகாரணத்வம் ஒப்புக்கொள்ளப்படுகிறது. அதனாலன்றோ ஏழாம் அத்தியாயத்திலும் "ஏதத்3 யோநீநி பூ4தாநி" என்று சேதநாசேதனங்களை உபாதா3னமாகக் கூறி, உடனே "அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜக3த: ப்ரப4வ:ப்ரலயஸ் தத2ா" [7—6] என்று தன்னையே உலகனைத்துக்கும் உத்பத்தி லயகாரணமான உபாதா3னமாகக் கூறிக்கொண்டான் கண்ணன். ஆகையால், முற்கூறிய ஆக்ஷேபம் பொருந்தாது. (தஸ்மிந் க3ர்ப்ப4ம் த3தா4ம்யஹம்) மூலப்ரக்ருதியாகிற அந்தத் தாழ்ந்த ப்ரக்ருதியில், "இதஸ் த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்3தி4 மே பராம் | ஜீவபூ4தாம்" [7-5] [இந்த அசேதன ப்ரக்ருதியைக் காட்டிலும் வேறுபட்டதாய், மேலான ப்ரக்ருதியான ஜீவ ஸமூஹத்தையும் என்னுடையதென்று அறிவாயாக] என்று கூறப்பட்ட மேலான ப்ரக்ருதியான ஜீவஸமூஹமாகிற க3ர்ப்ப4த்தை நான் த4ரிக்கச் செய்கிறேன். "மம யோநி:" என்று அசேதநப்ரக்ருதி நினைவுறுத்தப்படுகையால், அதில் சேர்க்கப்படும் 'க3ர்ப்ப4ம்' அதைக்காட்டிலும் மேலானதாக முன் [7–5-ல்] படிக்கப்பட்ட சேதனப்ரக்ருதியாகவே இருக்கவேண்டும்; இந்த ஶ்லோகத்தின் பிற்பாதியில் "எல்லா ஜீவராசிகளின் பிறப்பு இதனால் உண்டாகிறது" என்று கூறியிருப்பதும் இதை வலியுறுத்துகிறது; ஆகையால் 'க3ர்ப்ப4' ஶப்3த3ம் ஜாத்யேகவசநமாய், ஸகல ப்ராணிகளுக்கும் பீ3ஜமாய் (காரணமாய்) இருக்கையையிட்டு ஜீவஸமூஹத்தைக் குறிக்கிறது என்றே கொள்ள வேண்டும்;

तस्मिन्नचेतने योनिभूते महति ब्रह्मणि चेतनपुञ्जरूपं गर्भं दधामि, अचेतनप्रकृत्या भोगक्षेत्रभूतया भोक्तृवर्गपुञ्जभूतां चेतनप्रकृतिं संयो-

"அசேதனப் பொருள்களுக்கெல்லாம் காரணமாய், அதனுலேயே 'மஹத் ப்₃ரஹ்ம' என்று அழைக்கப்படும் மூலப்ரக்ருதியாகிற க₃ர்ப்ப₄ப்பையில் சேதன ஸமூஹமாகிற க₃ர்ப்ப₄த்தை நான் த₄ரிக்கச் செய்கிறேன்" என்பது ஶ்லோகத்தின் முற்பாதியின் திரண்ட பொருள். இங்கு ஒரு கேள்வி எழுகிறது. "'யயேத₃ம் த₄ார்யதே ஜக₃த்' [7-5] என்று முன் அத்தியாயத்தில் மேலான ப்ரக்ருதியான சேதன ஸமூஹம் தாழ்ந்த ப்ரக்ருதியான அசேதன மூலப்ரக்ருதியை த₄ரிக்கிறது என்று சொல்லப்பட்டது அப்படியிருக்க, 'தஸ்மிந் க₃ர்ப்ப₄ம் த₃த₄ாம்யஹம்' என்று அசேதன மூலப்ரக்ருதியை த₄ரிக்கும் க₃ர்ப்ப₄ப்பையாகவும், சேதனப்ரக்ருதியை த₄ரிக்கப் படும் க₃ர்ப்ப₄மாகவும் சொன்னது எப்படிப் பொருந்தும்?" என்பது அவ்வாக்ஷேபம். இதற்கு ஸமாத₄ானம் பின்வருமாறு: க₃ர்ப்ப₄ப்பை த₄ரிப்பதாகவும் க₃ர்ப்ப₄ம் அதற்குள் அடங்கி அதனுல் த₄ரிக்கப்படுவதாகவும் இருக்கும் ஆகாரத்தையிட்டு இங்கு இந்த த்₃ருஷ்டாந்தம் சொல்லப்படவில்லை. க₃ர்ப்ப₄ப் பையும் க₃ர்ப்ப₄மும் க₃ர்ப்ப₄ ஶப்₃த₃த்தால் வழங்கலாம்படி ஒன்று சேர்ந்திருப்பதுபோலே, அசேதனமான ஶரீரத்தில் சேதன வஸ்து ஒன்று சேர்ந்திருக்கிறது என்னும் ஆகாரத்தையிட்டும், க₃ர்ப்ப₄த்தை க₃ர்ப்ப₄ப்பையில் சேர்ப்பதற்கு, கர்மத்திற்கு வசப் பட்ட ஜீவர்களுடைய கர்மாநுப₄வம் மூக்₂ய ப்ரயோஜனமாயிருப் பதுபோலே தே₃ஹத்தில் ஜீவனைச் சேர்ப்பதற்கும் அவனுடைய கர்மாநுப₄வமே முக்₂யப்ரயோஜனம் என்னும் ஆகாரத்தையிட் டுமே இந்த த்₃ருஷ்டாந்தம் சொல்லப்படுகிறது என்று ஸமா த₄ானம் கண்டுகொள்வது. இனி, பிற்பாதியாலே இந்தச் சேதன சேதனச் சேர்த்தியாலேயே எல்லா ஜீவராசிகளின் பிறப்பும் ஏற் படுகிறது என்று கூறுகிருன். மூலப்ரக்ருதியாகிற க₃ர்ப்ப₄ப் பையில் அண்டத்தில் படைக்கப்படும் எல்லா ஜீவர்களையும் தன் ஶரீரத்தில்கொண்ட ஸமஷ்டிபுருஷனை பிரமனை க₃ர்ப்ப₄ம்போலே சேர்த்ததை முற்பாதியில் கூறுகிறது என்றும், அந்தப் பிரமனுல் அந்தந்த ஸ்ருஷ்டி காலங்களில் செய்யப்படும் நாலுவகை யான யோனிகளின் பிறப்பும் பிற்பாதியில் கூறப்படுகிறது என்

जयामीत्यर्थः । ततस्तस्मात्प्रकृतिद्वयसंयोगान्मत्संकल्पकृतात्सर्वभूतानां ब्रह्मादिस्तम्बपर्यन्तानां संभवो भवति ॥ ३ ॥

றும் கண்டுகொள்வது. (தத:) முற்கூறிய சேதநாசேதனச் சேர்த்தியாலே, 'தத:' என்னும் பத3த்திற்கு, 'பிறகு' என்றும் பொருள் கொள்ளலாமாயினும் அப்பொருளில் பயன் அதிகமாக இல்லை. 'பிறகு ஏற்படுவது' என்பதால் முந்தியது காரணம், பிந்தியது அதன் விளைவு என்று தாத்பர்யார்த்த2ம் சொல்வதே பயனுடையது. அதைவிட 'தத்' என்பதற்கு 'அதுகாரணமாக' என்று பொருள் கொண்டுவிட்டால் இந்தத் தாத்பர்யார்த்த2ம் நேரே ஶப்3த3ார்த்த2மாகவே ஸித்3தி4த்துவிடும். ஆகையாலே, அப்பொருள் கொள்ளப்பட்டது. "க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞஸம்யோக3ாத்" [13-26] என்னுமிடத்தில் இந்த ஹேது காட்டப்பட்டுமிருக்கிறது. அங்கு 'சேதநாசேதன ஸம்யோக3ம் மாத்திரம் சொல்லப்படுகையாலே, அந்த ஸம்யோக3ம் ஸாங்க்2யமதரீதியில் தானே விளைகிறதோ' என்னும் ஐயம் ஏற்படும். இங்கு "தஸ்மிந் க3ர்ப்ப4ம் த3த4ாமி" என்று கூறுவதன்மூலம் அந்த ஸம்யோக3ம் ஸர்வேஶ்வரனுன தன்னால் விளைகிறது என்று காட்டப்பட்டு, முற்கூறிய ஐயம் தவிர்க்கப்படுகிறது. (தத: ஸர்வபூ4தாநாம் ஸம்ப4வ: ப4வதி) முற்பாதியில் கூறப்பட்ட என் ஸங்கல்பத்தால் உண்டான சேதநாசேதனச் சேர்த்தியாலே பிரமன் முதல் புல் ஈறுகவுள்ள எல்லா ஜீவராசிகளின் பிறப்பும் ஏற்படுகிறது. முற்கூறியபடி மூல ப்ரக்ருதியோடு சேதன ஸமூஹத்தின் சேர்த்திக்குப் பிறகு மஹான் முதலான தத்துவங்களின் பிறப்பும் உண்டாகிறது. ஆனாலும் அந்தத் தத்துவங்களை பூ4த ஶப்3த3த்தால் சொல்லுவதில்லையாகையால் அப்பொருள் இங்கு பொருந்தாது. பூ4தஶப்3த3ம் பஞ்ச பூ4தங்களைக் குறிப்பதாகக் கொண்டாலும், ஜீவர்களின் ப3ந்த4த்திற்கு ஹேதுவைக்காட்டும் இந்த ப்ரகரணத்திற்கு அப்பொருள் பொருந்தாது. ஆகையால், பூ4தஶப்3த3ம் அசேதன தே3ஹத்தில் கட்டுப்பட்டிருக்கும் ஜீவராசிகளைக் குறிப்பதாகவே கொள்ள வேண்டும். பிரமன் முதல் புல்லீருக எல்லா ஜீவராசிகளுமே கர்மத்தால் உண்டான ஸம்ஸாரப3ந்த4த்தில் கட்டுப்பட்டிருப்பவர்களாகையாலே ஸர்வபூ4தஶப்3த3ம் பிரமன் உருத்திரன் முதலான தே3வர்கள் தொடங்கிப் புல் ஈறான தாவரங்கள் வரையிலுள்ள எல்லா ஜீவராசிகளையும் குறிக்கிறது என்று கொள்வதே பொருந்தும். பிரமன் உருத்திரன் முதலானவர்களும் ஸம்ஸார ப3ந்த4த்தில்

मा ॥ कार्यावस्थोऽपि चिदचित्प्रकृतिसंसर्गो मयैव कृत इत्याह—

सर्वयोनिषु कौन्तेय! मूर्तयस्संभवन्ति याः ।
तासां ब्रह्म महद्योनिरहं बीजप्रदः पिता ॥ ४

4. ஸர்வயோநிஷு கௌந்தேய மூர்த்தய: ஸம்ப₄வந்தி யா:।
தாஸாம் ப்₃ரஹ்ம மஹத்₃யோநி: அஹம் பீ₃ஜப்ரத₃:
பிதா ॥

கௌந்தேய! — குந்தீ புத்ரனே! ஸர்வயோநிஷு — தே₃வர் முதலான எல்லாவகையான பிறவிகளிலும், யா:

கட்டுப்பட்டவர்களே என்னும் விஷயம் "ஆப்₃ரஹ்மஸ்தம்ப₃ பர்யந்தா ஜக₃த₃ந்தர்வ்யவஸ்தி₂தா: । ப்ராணிந: கர்மஜநித ஸம்ஸாரவஶவர்த்திந: ॥ [விஷ்ணுத₄ர்மம் 104–23] [இந்த லீலா விபூ₄தியின் உள்ளேயிருக்கும் பிரமன் முதல் புல் ஈருகவுள்ள எல்லா ஜீவர்களும் கர்மத்தாலுண்டான ஸம்ஸாரப₃ந்த₄த்துக்கு வஶப்பட்டவர்கள்] என்றும், "ப்₃ரஹ்மாத்₃யா: ஸகலா தே₃வா: மநுஷ்யா: பஶவஸ்ததா₂ । விஷ்ணுமாயா மஹாவர்த்த மோஹாந்த₄ தமஸாSSவ்ருதா: ॥" [வி.பு. 5-30-17] [பிரமன் முதலான எல்லா தே₃வர்களும், மனிதர்களும், விலங்குகளும் விஷ்ணுவின் மாயையாகிற மூலப்ரக்ருதி என்னும் பெரிய சுழலினுல் உண்டான மயக்கமாகிற காரிருளாலே சூழப்பட்டவர்கள்] என்றும், "ஹிரண்யக₃ர்ப்பே₄ா ப₄க₃வாந்" [வி.பு. 6-7-56] என்று தொடங்கிப் பல ஶ்லோகங்களிலும் இவ்விஷயம் கூறப்பட்டது இங்கு அநுஸந்தி₄க்கத்தக்கது. "அபு₃த்₃தி₄பூர்வகஸ்ஸர்க்க₃: ப்ராது₃ர்பூ₄தஸ்தமோமய:" [வி. பு. 1-5-4] என்று தொடங்கி, பிரமன் தன் நினைவில்லாமலே தாவரங்கள் முதலானவற்றைப் படைத்ததாகக் கூறுகையால், பிரமனைப்போலவே அவனுல் ஸ்ருஷ்டிக்கப்பட்ட புல் ஈருன தாவரங்களும் எம்பெருமானுல் படைக்கப்பட்டவையே என்று விளங்குகிறது. (ப₄ாரத) தே₃ஹாத்ம விவேகமுடைய பல ஞானிகள் வாழ்ந்த ப₄ரதகுலத்தில் பிறந்த நீ இவவறிவைப் பெற வேண்டாவோ என்று கருத்து. ஆக, இந்த ஶ்லோகத்தால் ப்ராக்ருத நைமித்திக ப்ரளயங்களுக்குப் பிறகு ஏற்படுகிற ஸ்ருஷ்டிகளில் பிரமனைப்படைத்து அவன் மூலமாக நாலுவகை யோனிகளாயிருக்கும் எல்லா ஜீவராசிகளையும் படைப்பவன் தானே என்று காட்டப்பட்டதாயிற்று. ३

भा ॥ सर्वासु देवगन्धर्वयक्षराक्षसमनुष्यपशुमृगपक्षिसरीसृपादिषु योनिषु तत्तन्मूर्तयो याः संभवन्ति - जायन्ते, तासां ब्रह्म महद्

மூர்த்தய: — எந்த சில ஶரீரங்களை, ஸம்ப₄வந்தி — உண்டாகின்றனவோ. **தாஸாம்** — அந்த ஶரீரங்களுக்கு, **மஹத் ப்₃ரஹ்ம** — (சேதனர்களோடு கூடிய கார்யநிலையிலுள்ள) மூலப்ரக்ருதி, **யோநி:** — காரணம். **அஹம்** — நான் **பீ₃ஜப்ரத₃:** - (அவரவர்கர்மாநுகு₃ணமாக) சேதனவர்க்க₃த்தைச்சேர்க்கும், **பிதா** — தந்தையாகிறேன்.

4. இங்குலகில் யோனிகளா மெத்திறத்து மூர்த்திகளா
யங்குதயஞ் செய்யு மவைதமக்குப்— பங்கமிலா
விந்தப் பிரமமே யோனி கருவளிக்கு
மந்தப் பிதாநானே யாங்கு.

இங்கு உலகில் யோனிகளாம் — இவ்வுலகிலுள்ள தே₃வர் முதலான பிறவிகளில் சேர்ந்த, **எத்திறத்து மூர்த்திகளாய்** - எந்தவகையான ஶரீரங்களாகவும், **அங்கு உதயம் செய்யும் அவை தமக்கு** — ஆங்காங்கு பிறக்கின்ற அந்த ஶரீரங்களுக்கு **பங்கமிலா இந்த பிரமமே** — (சேதனர்களோடு கூடிய கார்யநிலையிலுள்ள) அழிவில்லாத இந்த மூலப்ரக்ருதியே, **யோனி** — காரணம், **ஆங்கு** — அவை விஷயத்தில, **கரு அளிக்கும் அந்த பிதா** — (அவரவர் கர்மாநுகு₃ணமாகச்) சேதனவர்க்க₃மாகிற க₃ர்ப்ப₄த்தைச் சேர்க்கும் தந்தை, **நானே** — நானேயாவேன்.

---

4. இனி, கார்ய நிலையில் ஒவ்வொரு **ஜீவனாலும்** செய்யப்படும் **தேஹாத்மச்** சேர்த்தியாகிற நித்யஸ்ருஷ்டியும் தன்னால் செய்யப்படுவதே என்று கூறுகிறான் இந்த ஶ்லோகத்தில். இக்காரணத்தாலேயே ப்ராக்ருத நைமித்திக ஸ்ருஷ்டிகளைச் சொன்ன சென்ற ஶ்லோகத்துக்கும் நித்யஸ்ருஷ்டியைச் சொல்லும் இந்த ஶ்லோகத்துக்கும் புநருக்தியில்லை. (ஸர்வயோநிஷு) பிரமன் செய்யும் தே₃வ மநுஷ்ய திர்யக் ஸ்த₂ாவர ரூபமான நாலு வகை ஸ்ருஷ்டிக்குப் பிறகு உண்டான தேவர்கள், க₃ந்த₄ர்வர்கள், யக்ஷர்கள், ராக்ஷ

योनिः — कारणम्; मया संयोजितचेतनवर्गा महदादिविशेषान्तावस्था प्रकृतिः कारणमित्यर्थः । अहं बीजप्रदः पिता — तत्रतत्र च तत्तत्कर्मानुगुण्येन चेतनवर्गस्य संयोजकश्चाहमित्यर्थः ॥ ४ ॥

ஸர்கள், மனுஷ்யர்கள், பலவகை விலங்குகள், பறவைகள், பாம்புகள் முதலான எல்லாப் பிறப்புக்களிலும். பிரமனுடைய படைப்புக்குப் பிறகு பிரளய காலம் வரையில் மிகப்புல்லிய ஜீவராசிகளிடமும் தினந்தோறும் உண்டாகும் ஸந்ததிகள் விஷயத்திலும் ஸர்வேஶ்வரன் தான் உதா₃ஸீனனாயிருந்து அவர்களைக்கொண்டு பிறப்பிக்கிறான் என்பதில்லை. அந்த ஸந்ததிகளையும் அவற்றை உண்டாக்கும் அவர்களுக்கு அந்தர்யாமியாயிருந்து அவனே பிறப்பிக்கிறான் என்று கருத்து. (யா: மூர்த்தய: ஸம்ப₄வந்தி) அதிவிசித்ரமான எந்தெந்த ஶரீரங்கள் உண்டாகின்றனவோ. உண்டாகும் ஒவ்வொரு பொருளும் ஒன்றைப்போல் ஒன்று இல்லாமல் அதிவிசித்ரமானவையாக உண்டாவதிலிருந்தே விசித்ரஶக்தியையுடைய ஸர்வேஶ்வரனால் இவை படைக்கப்பட்டவையேயொழிய அல்பஶக்தியுடைய ஒரு க்ஷுத்₃ர ஜந்துவால் படைக்கப்பட்டவையல்ல என்று விளங்கும் என்று கருத்து. "ஸம்ப₄வந்தி" என்றதற்கு 'உண்டாகக்கூடுமோ' என்று பொருள் கொள்ளலாமாயினும், உபாதா₃ன காரணத்தைப்பற்றிக்கூறும் இப்ரகரணத்துக்கு அப்பொருள் பொருந்தாதாகையாலே, "உண்டாகின்றனவோ" என்று பொருள் கொள்ளப்பட்டது. (தாஸாம் மஹத் ப்₃ரஹ்ம யோநி:) அந்த ஶரீரங்களுக்கு முன் ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட பெரிதான மூல ப்ரக்ருதி காரணமாகும். மூலப்ரக்ருதி ஶரீரங்களுக்கு நேரே உபாத₃ாநகாரணமாயிராமையால், பூ₄ாஷ்யத்தில் உபாத₃ான காரணம் என்று பத₃மிடாமல் 'காரணம்' என்று பதமிடப்பட்டது. சேதனவர்க்க₃த்தோடு சேர்க்கப்படாமலும், ஸர்வேஶ்வரனால் அதி₄ஷ்டி₂க்கப்படாமலுமிருந்தால் மூலப்ரக்ருதிமாத்ரம் காரணமாக மாட்டாதாகையாலே "என்னால் சேர்க்கப்பட்ட சேதனவர்க்க₃த்தையுடையதாய், மஹான் தொடக்கமாகப் பஞ்சபூ₄தங்கள் ஈருகவுள்ள கார்யநிலைகளையுடையதான மூலப்ரக்ருதி காரணம்" என்று பொருள் கொள்ள வேண்டும். (அஹம் பீ₃ஜப்ரத₃: பிதா) மூலப்ரக்ருதியாகிற தாயிடம் சேதனஸமூஹமாகிற பீ₃ஜத்தை அளிக்கும் தந்தையாயிருப்பவன் நானே, இங்கு சில கேள்விகள் பின்வருமாறு எழுகின்றன:— (1 இங்கு பீ₃ஜம் எனப்படுவது யாது? (2) தன்னைத்தந்தை என்று சொல்லலாம்படி அந்த பீ₃ஜத்தை

भा॥ एवं सर्गादौ प्राचीनकर्मवशादचित्संसर्गेण देवादियोनिषु जातानां पुनःपुनर्देवादिभावेन जन्महेतुमाह—

सत्त्वं रजस्तम इति गुणाः प्रकृतिसंभवाः ।
निबध्नन्ति महाबाहो देहे देहिनमव्ययम् ॥

அளிப்பது என்பது என்ன? (3) மூலப்ரக்ருதியைக் காரணமான தாயாகவும், தன்னைத் தந்தையாகவும் குறிப்பிடுவது "மூல ப்ரக்ருதியே உபாத$_3$ான காரணம்; ஈச்வரன் நிமித்த காரணமாக மாத்திரம் இருப்பவன்" என்னும் ஸேஶ்வரஸாங்க்$_2$ய மதத்தைக் கூறுவது போலிருக்கிறதே; ஈஶ்வரனே உபாத$_3$ான நிமித்த காரணங்கள் இரண்டுமாக இருப்பவன் என்று கூறும் ஶ்ருதிக்கு இது விருத்$_4$த$_4$மல்லவா?, (4) காரணமான தாயும் ஒன்றுயிருக்கையில், பக்ஷபாத மற்ற தந்தையும் ஒருவனுயிருக்கையில், பிறக்கும் குழந்தைகள் மிகவும் ஏற்றத்தாழ்வுடையவர்களாயிருப்பதற்குக் காரணமென்ன? இக்கேள்விகளுக்கு முறையே பதில்கள் பின்வருமாறு:— (1) முன் ஶலோகத்தில் 'மஹத் ப்$_3$ரஹ்ம யோநி:' என்று எடுக்கப்பட்ட மூலப்ரக்ருதியே இங்கும் அதே ஶப்$_3$த$_3$த்தால் எடுக்கப்படுகிறதாகையாலே, அங்கு அந்த மூலப்ரக்ருதியில் சேர்க்கப்படுவதாகச் சொன்ன க$_3$ர்ப்ப$_4$மாகிற சேதனஸமூஹமே இங்கு பீ$_3$ஜஶப்$_3$த$_3$த்தால் சொல்லப்படுகிறது என்று விளங்குகிறது. அந்தச் சேதனஸமூஹமே ஶரீரத்தோடு படைக்கப்படும் ஜீவராஶியாயிருப்பதும் இதை வலியுறுத்துகிறது. (2) சென்ற ஶ்லோகத்தில் கூறியபடி சேதன ஸமூஹத்தை அசேதனமான ஶரீரத்தில் சேர்ப்பதே இங்கு 'பீ$_3$ஜத்தை அளித்தல்' எனப்படுகிறது. (3) சென்ற ஶ்லோகத்திலேயே 'மமயோநி:' என்று மூலப்ரக்ருதி தனக்கு ஶரீரமாயிருக்கிறது என்று சொல்லப்பட்டுள்ளதாகையாலே "மூலப்ரக்ருதி விஶிஷ்டனை எம்பெருமானே உபாத$_3$ான காரணம்" என்று ஸித்$_3$தி$_4$க்கும். ஆகையால், ஶ்ருதிவிருத்$_3$த$_4$மான ஸேஶ்வர ஸாங்க்$_2$ய மதம் இங்கு ஆதரிக்கப்படவில்லை. (4) தாயும், பக்ஷபாத மற்ற தந்தையும் ஒன்றுயிருந்தபோதிலும் அந்தந்தச் சேதனர்களுடைய கர்மாநுகு$_3$ணமாகவே அவர்களுக்கு ஏற்றத்தாழ்வுள்ள ஶரீரச்சேர்த்தி ஏற்படுகிறது. (கௌந்தேய!) பரமஜ்ஞானியான குந்திதேவியின் பிள்ளையான நீ 'ஸர்வேஶ்வரனே எல்லா ஜீவராசிகளுக்கும் காரணமாயிருப்பவன்' என்னும் ஜ்ஞானத்தைப்பெற வேண்டாவோ? என்று கருத்து. 4

5. ஸத்வம் ரஜஸ்தம இதி கு₃ணா: ப்ரக்ருதிஸம்ப₄வா: ।
நிப₃த்₄நந்தி மஹாபா₃ஹோ! தே₃ஹே தே₃ஹிநமவ்யயம் ॥

மஹாபா₃ஹோ—தடக்கையனான அர்ஜுநனே!, **ஸத்வம் ரஜ: தம: இதி கு₃ணா:** — ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் மூன்று குணங்களும், **ப்ரக்ருதிஸம்ப₄வா:** — ப்ரக்ருதியில் என்றும் சேர்ந்திருப்பவையாய், **அவ்யயம்**—(இயற்கையில்) கு₃ணத்தொடர்பினால் வரும தாழ்வில்லாதவனான, **தே₃ஹிநம்** — தே₃ஹத்திலிருக்கும் ஜீவாத்மாவை, **தே₃ஹே**—அவனது தே₃ஹத்தில், **நிப₃த்₄நந்தி**—கட்டி வைக்கின்றன.

5. **சத்துவ ரசோ தமமாய்ச் சாருங் குணமூன்று**
மொய்த்த பிரகிருதி யுள்ளவையா—மித்தகைய
வாருயிரைத் தேகத் தமரப் பிணிக்குமே
சீருயருந் தோளாய் செறுத்து.

சீர் உயரும் தோளாய்!—சிறப்புகள் மிக்க தோள்களை யுடைய அர்ஜுநனே! **மொய்த்த பிரகிருதி உள்ளவையாம்** — சரீரத்திற்குக் காரணமாயிருக்கும் மூலப்ரக்ருதியில் இயல்வாகச்சேர்ந்திருக்கும், **சத்துவரசோதமமாய் சாரும் குணம் மூன்றும்**— ஸத்வம், ரஜஸ, தமஸ் என்னும் ஒன்றோடொன்று சேர்ந்த மூன்று கு₃ணங்களும், **இத்தகைய ஆருயிரை**— இயல்வாக அந்த கு₃ணங்களோடு தொடர்பற்றவனாய் தே₃ஹத்தில் இருக்கும ஜீவனை, **செறுத்து** — அவனது இயல்வான பெருமையை அடக்கி, **தேஹத்து அமர பிணிக்குமே**—தே₃ஹத்தோடு பொருந்தி இருக்கும்படி கட்டி வைக்கின்றன.

---

5. "மூன்றாவது ச்லோகத்தில் சொன்னபடி ப்ராக்ருத நைமித்திக ஸ்ருஷ்டிகளில் ஜீவர்களுடைய முன்வினைகளுக்கு அனுகு₃ணமாகப் பரமபுருஷனுடைய ஸங்கல்பத்தாலே அசேதனமான சரீரத்தோடு தொடர்பு ஏற்பட்டு ஜீவன் பிறப்பது பொருந்துகிறது; அந்த முன்வினைகள் சரீரமாகிற பலனைக் கொடுப்பதன் மூலம் கழிந்துவிடுகின்றன. அந்தக்கர்மம் முடிந்தவுடன் அந்த சரீரம் அழிந்துவிடும்; ஜீவன் இயற்கையில் பரிசுத்₃த₄னானவன். அப்படி

भा ॥ सत्त्वरजस्तमांसि त्रयो गुणाः प्रकृतेः स्वरूपानुबन्धिनः स्वभावविशेषाः प्रकाशादिकार्यैकनिरूपणीयाः

யிருக்க, நாலாவது ஸ்லோகத்தில் சொன்னபடி மறுபடியும் நித்ய ஸ்ருஷ்டிக்கு விஷயமாக இவன் எப்படிப் பிறக்க முடியும்?" என்னும் கேள்வி எழ, "முன் ஸ்லோகங்களில் சொன்னபடி ஸ்ருஷ்டியின் தொடக்கத்தில் முன்வினைப்பயனால் உண்டாகும் அசித் ஸம்ப3ந்த4த்தால் தே3வர் முதலான பிறவிகளில் பிறந்தவர்களுக்கு மறுபடியும் மறுபடியும் அத்தகைய பிறவிகளே ஏற்படுவதற்குக் காரணம் ஸத்வரஜஸ்தமஸ்ஸுக்களாகிற ப்ரக்ருதியின் கு3ணங்களே" என்று பதிலுரைக்கிறான் இனி. (ஸத்வம் ரஜஸ் தம இதி கு3ணா: ப்ரக்ருதி ஸம்ப4வா:) ப்ரக்ருதியின் இயல்வான கு3ணங்களான ஸத்வரஜஸ்தமஸ்ஸுக்களாகிற மூன்று கு3ணங்கள். இந்த மூன்று கு3ணங்களும் ப்ரக்ருதியைவிட்டு என்றும் பிரியாமல் இயல்வாயிருக்கும் ஸ்வரூபநிருபக கு3ணங்களாகையாலே 'ப்ரக்ருதி ஸம்ப4வா:' என்றதற்கு 'ப்ரக்ருதியிலிருந்து உண்டானவை' என்று பொருள்கொள்ள முடியாது. ஆகையால், கார்யநிலையில் இந்த கு3ணங்கள் ஏற்றத்தாழ்வுடையவையாக ஆவதையிட்டே 'ப்ரக்ருதி ஸம்ப4வா:' என்று சொல்லப்படுகின்றன என்று கொள்ளவேண்டும். "ஸத்வம் ரஜ: தம: இதி கு3ணா:" என்று 'இதி' ஶப்3த3த்தையிட்டது கார்யநிலையிலிருக்கும் ப்ரக்ருதியின் கு3ணங்களான ஶப்3த3ஸ்பர்ஶ ரூபரஸக3ந்த4ங்களைக் காட்டிலும் முக்குணங்களின் சிறப்பைத் தெரிவிப்பதற்காக. நிரூபிதஸ்வரூப விஶேஷணமாய், அநித்யமாய், வந்தேறியாயிருக்கும் ஶப்3த3ாதி3களைக் காட்டிலும், ஸ்வரூப நிருபகமாயிருக்கை, நித்யமாயிருக்கை, இயல்வாயிருக்கை ஆகிய சிறப்புக்களைப் பெற்று விளங்குபவையன்றோ ஸத்வாதி3 கு3ணங்கள். 'ஸத்வம் முதலான முக்குணங்களே ப்ரக்ருதி த்3ரவ்யம்' என்னும் ஸாங்க்2யமதத்தைத் தள்ளி, முக்குணங்கள் ப்ரக்ருதியின் தனித்தன்மைகளே என்று காட்டுவதற்காக, பா4ஷ்யத்தில் 'ஸ்வப4ாவ விஶேஷா:' என்னும் பத3ம் இடப்பட்டது. சேதனனுடைய தனித்தன்மைகளாயிருந்தபோதிலும் இன்ப துன்பங்கள் அசித் ஸம்ப3ந்த4த்தாலே வந்தேறியாயிருக்கும்; அவைபோலல்லாமல் அசித்தின் தனித்தன்மைகளான இந்த ஸத்வாதி3 கு3ணங்கள் இயல்வாயிருப்பவை என்று காட்டுவதற்காக பா4ஷ்யத்தில் 'ஸ்வரூபாநுப3ந்தி4ந:' என்னும் பதம் இடப்பட்டது. அசித்துக்கு இயல்வாயிருந்தபோதிலும் சித3சித்துக்களுக்குப் பொதுவாயிருக்கும் த்3ரவ்யத்வம் முதலானவை போலல்லாமல் ஸத்வாதி3கு3ணங்கள் அசித்துக்கே உரியவை என்பதைக் காட்டுவதற்காக பா4ஷ்யத்தில் 'ஸ்வப4ாவ விஶேஷா:' என்னும் பத3ம் இடப்பட்டது.

இதனால் "குணா: இதி பாரிபாஷிக: ஶப்தா:, ந ரூபாதிவத் த்ரவ்யாஶ்ரிதா: குணா:; ந குணகுணிநோ: அந்யத்வம் அத்ர விவக்ஷிதம் |" [இங்கு குணங்கள் என்றது (ஸாங்க்யர்களுடைய) வழக்குச் சொல்லாகும். ரூபம் முதலான குணங்கள் ஒரு த்ரவ்யத்தை ஆஶ்ரயித்திருப்பதுபோலே இந்த ஸத்வாதிகுணங்கள் ஒரு த்ரவ்யத்தை ஆஶ்ரயித்திருப்பவையல்ல; ஸத்வாதிகுணங்களும் மூலப்ரக்ருதியும் வேறு என்று இங்கு கருதப்படவில்லை] என்று ஶங்கரர் பாஷ்யமிட்டது குண ஶப்தருடிக்குப் பொருந்தாது என்பது தெளிவு. இங்கு பின்வருமாறு ஓர் ஆக்ஷேபம் எழுகிறது:—"ஶப்தம் முதலான குணங்களைப்போலே ஸத்வ ரஜஸ் தமோகுணங்கள் ப்ரத்யக்ஷமாகக் காணப்படவில்லையே; அனுமானத்தைக்கொண்டு அதை ஸாதிக்கிறோம் என்று கூறினால், எப்போதுமே இந்த்ரியங்களுக்குப் புலப்படாத விஷயத்தில் அனுமானம் செயல்படாது என்று ப்ரஹ்ம ஸூத்ரத்தில் நிலைநாட்டப்பட்டுள்ளது. மேலும், என்றும் காணப்படாத காக்கையின் பற்களைப்பற்றிய உபதேஶம்போலே, என்றும் காணப்படாத இந்த முக்குணங்களைப் பற்றிய உபதேஶமும் பயனற்றதாகும்" என்பது அவ்வாக்ஷேபம். இதைப் பரிஹரிப்பதற்காகவே பாஷ்யத்தில் "ப்ரகாஶாதி கார்யைக நிரூபணீயா:" என்னும் பதம் இடப்பட்டது. இதன் கருத்து வருமாறு:—"ஸத்வரஜஸ்தமோ குணங்கள் ப்ரத்யக்ஷமாயிராவிடினும், முறையே அவற்றின் கார்யங்களான ப்ரகாஶம், ப்ரவ்ருத்தி, மோஹம் ஆகியவை ப்ரத்யக்ஷமாகத் தெரிகின்றன; இந்தக் கார்யங்களுக்குச் சில காரணங்கள் இருக்கவேண்டும் என்று நாம் பொதுவாக அனுமானம் செய்யலாம். காரணமில்லாமல் கார்யமுண்டாகாதன்றோ. இந்த மூன்று கார்யங்களுக்கு முறையே ஸத்வரஜஸ்தமோ குணங்களே காரணமென்பது ஶாஸ்த்ரங்களிலிருந்து ஸித்திக்கிறது. புலன்களுக்குப் புலப்படாததைப்பற்றிய உபதேஶம் பயனற்றது என்று கூறியதும் சரியல்ல. விஷம் மரணத்தை விளைக்கக்கூடியது என்பதும், மருந்து உயிரைக் காப்பாற்றக்கூடியது என்பதும் புலன்களுக்குப் புலப்படாவிடினும், அவற்றின் தன்மையறிந்தவர்களின் உபதேஶத்தைக்கேட்டு மற்றவர்கள் விஷத்தை விலக்குவதையும் மருந்தை ஏற்பதையும் காண்கிறோம். அதுபோல் இங்கும் முக்குணங்களைப் பற்றிய உபதேஶம் பயனுடையதேயாகும்" என்று கருத்து. இங்கு பின்வருமாறு மற்றொரு ஆக்ஷேபம் ஏற்படுகிறது:—"ப்ரகாஶம் முத

प्रकृत्यवस्थायामनुद्भूतास्तद्विकारेषु महदादिषूद्भूता महदादिविशेषान्तैरारब्धदेवमनुष्यादिदेहसंबन्धिनमेनं देहिनमव्ययम् — स्वतो गुणसंबन्धानर्हं देहे वर्तमानं निबध्नन्ति; देहे वर्तमानत्वोपाधिना निबध्नन्तीत्यर्थः ॥५

லான கார்யங்களைக்கொண்டே ஸத்வாதி$_3$ கு$_3$ணங்களை நிரூபிக்க வேண்டும் என்றால் ப்ரளய நிலையில் இன்பதுன்பங்கள் முதலான கார்யங்கள் இல்லாமையாலே அந்நிலையில் ஸத்வாதி$_3$கு$_3$ணங்களும் இல்லையென்று ஏற்படுமே; ஆகையால் இக்குணங்கள் ப்ரக்ருதிக்கு இயல்வானது என்று சொன்னது எப்படிப் பொருந்தும்?" என்பது அவ்வாக்ஷேபம். "ப்ரளயநிலையில் இக்குணங்கள் வெளிப் படாமல் உள்ளடங்கியிருக்கையாலே இன்பதுன்பங்கள் முதலான கார்யங்கள் அந்நிலையில் ஏற்படுவதில்லை. ப்ரக்ருதியின் கார்ய மான 'மஹாந்' முதலானவற்றில் இவை வெளிப்படுகையாலே கார்யங்கள் விளைகின்றன" என்பது இதற்கு ஸமாதானம். இதுவே பா$_4$ஷ்யத்தில் "ப்ரக்ருத்யவஸ்தா$_2$யாம் அநுத்$_3$பூ$_4$தா: தத்$_3$விகா ரேஷு மஹதா$_3$திஷு உத்$_3$பூ$_4$தா:" என்னும் தொடரால் உணர்த் தப்பட்டது. "புஷ்பம் பழம் முதலானவற்றில் பிஞ்சு நிலையில் வெளிப்படாத மணம் சுவை முதலானவை பக்குவமடைந்த நிலையில் வெளிப்படுவதைக் காண்கிறோமன்றோ, அதுபோலவே இங்கும் கொள்ளவேண்டும்" என்று கருத்து. (அவ்யயம் தே$_3$ஹிநம் தே$_3$ஹே நிப$_3$த்$_4$நந்தி) இயற்கையில் இந்த முக்குணங்களோடு தொடர்புகொள்ளத் தகாதவனாயினும், மஹாந் தொடக்கமாகப்பஞ்ச பூ$_4$தங்கள் ஈறாக உள்ள தத்துவங்களின் கூட்டாலே அமைந்த தே$_3$வர் மனிதர் முதலான தே$_3$ஹங்களில் இருக்கும் இந்த ஜீவனை இம்முக்குணங்கள் அந்த தே$_3$ஹத்திலேயே கட்டிவைக்கின்றன. (அவ்யயம்) இயல்வாக அறிவில் ஏற்றத்தாழ்வுகள் இல்லாத இவனை கு$_3$ணஸம்ப$_3$ந்த$_4$ம் அறிவில் ஏற்றத்தாழ்வுடையவனாக ஆக்கிவிடுகிறது என்று கருத்து. (தே$_3$ஹிநம் தே$_3$ஹே நிப$_3$த்$_4$நந்தி) "ஶரீரஸ்தோ$_2$ऽபி கௌந்தேய! ந கரோதி ந லிப்யதே" [கீ$_3$தை 13-31] என்று சொன்ன ரீதியில் இயல்வான நிலையில் தே$_3$ஹத்தில் கட்டுப்படத்தகாத இவனை, மோக்ஷமடையும்வரையில் இடையறாது தே$_3$ஹஸம்ப$_3$ந்த$_4$த்தை உடையவனாயிருப்பது காரணமாக இம்முக்குணங்கள் தே$_3$ஹத்தில் கட்டிவைக்கின்றன என்று கருத்து. "தே$_3$ஹே நிப$_3$த்$_4$நந்தி" என்று "முக்குணங்கள்

भा ॥ सत्त्वरजस्तमसामाकारं बन्धप्रकारं चाह-

तत्र सत्त्वं निर्मलत्वात्प्रकाशकमनामयम् ।
सुखसङ्गेन बध्नाति ज्ञानसङ्गेन चानघ! ॥ ६

6, **தத்ர ஸத்த்வம் நிர்மலத்வாத் ப்ரகாஶகமநாமயம் ।
ஸுக2ஸங்கே3ந ப3த்4நாதி ஜ்ஞாநஸங்கே3ந சாநக4 ॥**

அநக4—குற்றமற்றவனே! **தத்ர** — ஸத்வரஜஸ்தமோ கு3ணங்களுக்குள், **ஸத்த்வம்**—ஸத்வ கு3ணம், **நிர்மலத்வாத்**- (ஆத்மாவின் அறிவையும் இன்பத்தையும்) மறைக்காமல் வெளிப்படுத்துவதையே இயல்வாகக் கொண்டதாகையால், **ப்ரகாஶகம்**—(ஆத்மாவுக்கு) உண்மையறிவை விளைப்பது; **அநாமயம்**—நோயற்ற வாழ்வை அளிப்பது. (அது), **ஸுக2ஸங்கே3ந**—இன்பத்தில் பற்றை விளைத்தும்,

---

ஜீவனை தே3ஹத்தில் நன்கு கட்டிவைக்கின்றன" என்று இந்த ஶ்லோகத்தில் தெளிவாகச் சொல்லியிருக்க, "க்ஷேத்ரஜ்ஞும் ப3த்4நந்தீவ; தம் ஆஸ்பதீ3க்ருத்ய ஆத்மாநம் ப்ரதிலப4ந்தே" [ஜீவனை முக்குணங்கள் கட்டுவதுபோல் தோன்றுகின்றன; அவனை விஷயமாகக்கொண்டு தாங்கள் ஸத்தை பெறுகின்றன] என்று ஶங்கரர் உரையிட்டிருப்பது மூலத்துக்குச் சிறிதும் பொருந்தாது என்பது வெளிப்படை. (மஹாபா3ஹோ) தடக்கையனே! இந்த கு3ணப3ந்த4த்தை உனது பா3ஹு ப3லத்தைக்கொண்டு அடக்கமுடியாது, பு3த்3தி4ப3லத்தைக்கொண்டே அடக்கவேண்டும் என்று கருத்து. "தீ3ர்க்கெ4ள பு3த்3தி4மதோ பா3ஹூ யாப்4யாம் ஹிம்ஸதி ஹிம்ஸித:" [பு3த்3தி4யுடையவனின் அறிவுக்கைகள் தே3ஹத்தின் கைகளைக் காட்டிலும் மிகுந்த வலிமைமிக்கவை; தே3ஹப3லத்தினாலே தன்னை ஹிம்ஸித்தவனையும் பு3த்3தி4ப3லமுடையவன் தனது அறிவுக்கைகளாலே ஹிம்ஸிக்கிறானன்றோ] என்று சொல்லப்பட்டதன்றோ. (மஹாபா3ஹோ) உன்னுடைய பா3ஹுப3லத்தாலே நீ எதிரிகளைக் கட்டுவதுபோலே இந்த முக்குணங்கள் ஜீவனை தே3ஹத்தில் கட்டிவைக்கின்றன என்றும் கருத்துரைக்கலாம். 5

भा ॥ तत्र सत्त्वरजस्तमस्सु सत्त्वस्य स्वरूपमीदृशम्-निर्मलत्वात् प्रकाशकम् । प्रकाशसुखावरणस्वभावरहितता निर्मलत्वम्; प्रकाशसुखजन-

---

ஜ்ஞாந ஸங்கே₃ந ச—ஞானத்தில் பற்றை விளைத்தும், ப₃த்₄நாதி—(தே₃ஹத்திலிருக்கும ஜீவனை) மேனமேலே கட்டுப் படுத்துகிறது.

6, ஆங்கவற்றிற் சத்துவந்தா னன்றமுக்கற் றார்தலினு
லீங்கொளிசெய்வதுநோ யீடழித்துப்—பாங்கில்
வருஞ்சுகத்தில் மற்றறிவின் மன்னுநசை தன்னுற்
பொருந்துயிரைக் கட்டும் புணர்ந்து

ஆங்கு அவற்றில்—அந்த ஸத்வ ரஜஸ்தமோகு₃ணங் களுக்குள், சத்துவந்தான்—ஸத்வகு₃ணமானது, ஆன்று அழுக்கற்று ஆர்தலினுல—(ஆதமாவின் அறிவையும இன பத்தையும்) மறைக்காமல் நன்கு வெளிப்படுத்துவதையே இயல்வாகக் கொண்டதாகையால், ஈங்கு—இவ்வுலகில், நோய் ஈடு அழித்து—நோய்கள் இல்லாமல் செய்து, ஒளிசெய்வது—(ஆத்மாவுக்கு) உண்மை அறிவை விளைப் பது; பாங்கில் வரும் சுகத்தில—நல்ல முறையில் வரும இன்பத்திலும், மற்று அறிவில— நல்ல அறிவிலும். மன்னும்—பொருந்தி கிற்கும, நசைதன்னுல்—பற்றை விளைத்து, பொருந்து உயிரை—தே₃ஹத்தில் உளள ஜீவனே, புணர்ந்து கட்டும்—மேன்மேலே கட்டுப்படுததுகிறது.

---

6. ஸத்வரஜஸ்தமோ கு₃ணங்களின் தனி இயல்வையும், அவை ஜீவனைக்கட்டும் வழியையும் மூன்று ஶ்லோகங்களில் விவ ரிக்கத்தொடங்கி, முதல் ஶ்லோகத்தில் ஸத்வகு₃ணத்தின் தனித் தன்மையையும், அது ஜீவனைக்கட்டும் முறையையும் கூறுகிருன். (தத்ர) முன் ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட ஸத்வம் ரஜஸ் தமஸ் என்னும் மூன்று கு₃ணங்களுக்குள். (நிர்மலத்வாத்) ஆத்மாவின் அறிவையும் இன்பத்தையும் மறைக்காமல் வெளிப்படுத்துவதையே

नैकान्तस्वभावतया प्रकाशसुखहेतुभूतमित्यर्थः । प्रकाशो-वस्तुयाथात्म्यावबोधः । अनामयम्— आमयाख्यकार्यं न विद्यत इत्यनामयम्, अरोगताहेतुरित्यर्थः । एष सत्त्वाख्यो गुणो देहिनमेनं सुखसङ्गेन ज्ञानसङ्गेन च

இயல்வாகக்கொண்டதாகையால். "யதா₂ ந க்ரியதே ஜ்யோத்ஸ்நா மலப்ரக்ஷாளநாந்மணே:...ஸதே₃வ நியதே வ்யக்திம்" [ரத்தினத்தில் உள்ள மலம் (அழுக்கு) கழுவப்பட்டால் புதிதாக ஒளி உண்டாகாமல், அதில் உள்ள ஒளியே வெளிப்படுவதுபோல்] முதலான இடங்களிற்போலே, இங்கு மலஶப்₃த₃ம் ஆத்மாவின் தன்மையான ஒளி இன்பம் முதலானவற்றை மறைக்கும் இயல்வைக் குறிக்கிறது, 'நிர்மலத்வாத்' என்றது 'தமோகு₃ணத்திற்குள்ள அத்தகைய மறைக்கும் இயல்பு இல்லாதிருக்கையால்' என்று பொருள்படுகிறது, 'ப்ரகாஶகம்' என்று இத்தன்மை உண்மையறிவை விளைப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால், மறைக்கும் இயல்பு இல்லாத ஆகாயம், வாயு முதலானவை உண்மையறிவை விளைப்பதைக் காண்கிறோமல்லோம்; ஆகையால், 'நிர்மலத்வாத்' என்றதற்கு உண்மையறிவையும் இன்பத்தையும் விளைப்பதையே இயல்வாகக் கொண்டதாகையால்' என்று தாத்பர்யார்த்த₂ம் கொள்ளவேண்டும், (ப்ரகாஶகம்) இத்தகைய இயல்பை உடையதாகையால், உண்மையறிவுக்கும், இன்பத்திற்கும் காரணமாயிருப்பது. இங்கு ப்ரகாஶத்தை மட்டும் கூறியிருந்த போதிலும், ஶ்லோகத்தின் பிற்பாதியில் 'ஸுக₂ ஸங்கே₃ந' 'ஜ்ஞாநஸங்கே₃ந' என்று ஸுக₂ஜ்ஞாநங்களிரண்டையும் ஸத்வகு₃ணத்தின் விளைவாகக் கூறியிருக்கையால், ப்ரகாஶ ஶப்₃த₃த்தை ஸுக₂த்திற்கும் உபலக்ஷணமாகக்கொண்டு 'உண்மையறிவுக்கும் இன்பத்திற்கும் காரணமாயிருப்பது' என்று பொருள்கொள்ள வேண்டும். "ஸத்வத்தோடு ரஜஸ்தமஸ்ஸுக்கள் கலந்திருக்கும் போது அவற்றின் விளைவாக 'ப்₄ரமம' எனப்படும மயக்கமும் ஏற்படுவதைக் காண்கிறோமே. அப்போது ஸத்வத்தின் இத்தன்மை என்னாகிறது?" எனில்; ரஜஸ்தமஸ்ஸுக்களின் விளைவாக மயக்கம் ஏற்படுமிடங்களிலும் மயக்கத்திற்கு அதி₄ஷ்டா₂நமான (இருப்பிடமான) பொருளின் அறிவு விளைகிறது; இது அவ்விரு கு₃ணங்களோடு கலந்திருக்கும் ஸத்வகு₃ணத்தினால் விளைவது என்று கண்டுகொள்வது. (அநாமயம்) நோயற்ற வாழ்வை அளிப்பது. ரஜஸ்தமஸ்ஸுக்களால் விளையும் நோய்கள் இல்லாத வாழ்வை அளிப்பது ஸத்வகு₃ணம் என்று கருத்து. இந்த ஸத்வ கு₃ணம் ஜீவனைக்கட்டும் வழி ஶ்லோகத்தின் பிற்பாதியாலே கூறப்படுகிறது; ரஜஸ்தமஸ்ஸுக்களைப்பற்றிய மேல் இரண்டு ஶ்லோ

बध्नाति– पुरुषस्य सुखसङ्ग ज्ञानसङ्गं च जनयतीत्यर्थः । ज्ञानसुखयोः सङ्गे हि जाते तत्साधनेषु लौकिकवैदिकेषु प्रवर्तते; ततश्च तत्फलानुभवसाधनभूतासु योनिषु जायत इति सत्त्वं सुखज्ञानसङ्गद्वारेण पुरुषं बध्नाति । ज्ञानसुखजननं पुनरपि तयोस्सङ्गजननं च सत्त्वमित्युक्तं भवति ॥ ६ ॥

கங்களிலும் பிற்பாதிகள் "தந்நிப3த்4நாதி" என்று தனி வாக்யமாய் அமைந்திருப்பதுபோலே, இங்கும் 'இந்த ஸத்வகு3ணம்' என்பதை வருவித்துக்கொண்டு பிற்பாதியைத் தனிவாக்யமாகக் கொள்வது பொருத்தம். அடுத்த ஶ்லோகத்திலிருந்து 'தே3ஹிநம்' என்னும் பதத்தையும் இங்கு வருவித்துக்கொள்ளவேண்டும். (தே3ஹிநம் ஸுக2ஸங்கே3ந ஜ்ஞாநஸங்கே3ந ச ப3த்4நாதி) முற்பாதியில் சொல்லப்பட்ட ஸத்வகு3ணம் இந்த தே3ஹத்தில் உள்ள ஜீவனை ஸுக2த்தில் பற்றினாலும் ஞானத்தில் பற்றினாலும் கட்டுகிறது. ஜீவனுக்கு ஸுக2ஜ்ஞானங்களில் பற்றை விளைக்கிறது என்று கருத்து. "'ப3த்4நாதி' என்னும் பத3த்தால் சொல்லப்பட்ட கட்டு, கர்மப2லாநுப4வத்திற்காக ஏற்பட்ட தே3ஹ ஸம்ப3ந்த4மேயாகும். அதற்குக் காரணம் கர்மமே. அப்படியிருக்க, ஸுக2ஜ்ஞாநங்களில் பற்றைக் கட்டுக்குக் காரணமாகக் கூறுவது எப்படி?" எனில்: ஜ்ஞாநஸுக2ங்களில் பற்று விளைந்தவுடன் அவ்விரண்டையும் ஸாதி4ப்பதற்கு லௌகிக வைதி3க ஸாத4நங்களில் ஜீவன் முயற்சி எடுக்கிறான்; அதனால் அந்த ஸாத4னங்களின் ப2லனை அநுப4விப்பதற்கு உறுப்பான பிறவிகளில் பிறக்கிறான்; இவ்வண்ணமாக ஸத்வகு3ணம் ஸுக2ஜ்ஞானங்களில் பற்றை விளைப்பதன் மூலம் புருஷனுக்கு தே3ஹஸம்ப3ந்த4ங்களை மேன்மேலே உண்டாக்கி அவனைக்கட்டுகிறது என்று கண்டுகொள்வது. இங்கு ஓர் ஆக்ஷேபம் எழுகிறது:—"வைதி3க (வேத3த்தில் சொல்லப்பட்ட) ஸாத4னங்களின் ப2லனை அனுபவிப்பதற்குப் பிறவி எடுக்க வேண்டியது நியாயம்; லௌகிக ஸாத4னங்களின் ப2லனை இப்பிறவியிலேயே அநுப4வித்துவிடலாமாகையாலே வேறு பிறவி எடுக்கவேண்டியதில்லையே; அப்படியிருக்கும்போது பா4ஷ்யத்தில் லௌகிக ஸாத4னங்களின் ப2லனும் பிறவிக்குக்காரணம் என்றது எப்படிப்பொருந்தும்?" என்பது ஆக்ஷேபம். இதற்கு ஸமாதா4னமாவது:— இங்கு பா4ஷ்யத்தில் "லௌகிக" ஶப்3த3ம் "ஸ்ம்ருதியில் சொல்லப்பட்டது" என்றோ, "நிஷித்3த4கர்மம்" என்றோ பொருள் படுகிறதாகையால் பிறவிக்குக் காரணம் என்றது பொருந்தும்–என்பது. "லோகே வேதே3 ச" [கீதை15-18] முதலான இடங்

रजो रागात्मकं विद्धि तृष्णासङ्गसमुद्भवम् ।
तन्निबध्नाति कौन्तेय! कर्मसङ्गेन देहिनम् ॥ ७

**7. ரஜோ ராக₃ாத்மகம் வித்₃தி₄ த்ருஷ்ணாஸங்க₃ ஸமுத்₃-
ப₄வம் I
தந்நிப₃த்₄நாதி கௌந்தேய! கர்மஸங்கே₃ந தே₃ஹிநம் II**

கௌந்தேய—குந்தீபுத்திரனே! **ரஜः**—ரஜோகு₃ணம் **ராக₃ாத்மகம**—(ஆணுக்கும் பெண்ணுக்குமிடையிலான) ஆசையை விளைப்பது என்றும், **த்ருஷ்ணாஸங்க₃ஸமுத்₃ப₄வம்**-ஶப்₃த₃ாதி₃ விஷயங்களில் ஆசையையும், புத்திரன் மித்திரன் முதலானோரிடத்தில பாசத்தையும் விளைப்பது என்றும், **வித்₃தி₄**—அறிவாயாக; **தத்**—அந்த ரஜோகு₃ணம், **தே₃ஹிநம்**—தே₃ஹத்திலிருக்கும் ஜீவனை, **கர்மஸங்கே₃ந**—செயல்களில் ஆசையை விளைத்து, **ப₃த்₄நாதி**—கட்டுகிறது,

**7. ராகமதின் தன்மை ராசதமாங் கௌந்தேயா
தாகமுடன் சங்கந் தனைவிளக்கு—மாகநினை
மற்றதுதான் கன்மத்தில் வன்னசையாற் றேகிதனை
யுற்றமரக் கட்டு முறைத்து.**

களில் லோகஶப்₃த₃ம் 'ஸ்ம்ருதி' என்று பொருள் கொள்ளப்பட்டதைக்காணலாம். நிஷித்₃த₄கர்மமான ஹிம்ஸை இம்மையில் ஸுக₂ ஸாத₄னமாயிருந்தபோதிலும். மறுமையில் தாழ்ந்தபிறவி எடுக்கவும் காரணமாகிறதன்றோ. அடுத்த ஶ்லோக பா₄ஷ்யத்திலும் "தாஶ்ச புண்யபாப ரூபா:" என்று இவ்விஷயம் விளக்கப்பட்டது. இனி "ஸத்வகு₃ணமானது இவ்வண்ணமாக ஸுகத்தையும், ப்ரகாஶத்தையும் உண்டாக்குமானால், அதனால் பற்று எப்படிவிளையும்?" என்னும் கேள்வி எழுகிறது, "ஜ்ஞானஸுகங்களை உண்டாக்கும் ஸத்வம், மேன்மேலே அவற்றைப்பெறவேண்டும் என்னும் விருப்பத்தையும் விளைத்து, பீ₃ஜாங்குர (விதையும் முளையும் மாறிமாறி உண்டாகும்) நியாயத்தாலே பற்றுக்குக்காரணமாகிறது" என்பது இதற்கு பதில். (அநக₄) "ந காங்க்ஷே விஜயம்" [1—32] [நான் வெற்றியை விரும்பவில்லை] என்று கூறும் உன் விஷயத்தில் ஸத்வகு₃ணமும் பற்றை விளைக்காதாகையால், நீ கலங்க வேண்டியதில்லை என்று கருத்து.

भा ॥ रजो रागात्मकम् — रागहेतुभूतम् । रागो योषित्पुरुषयोः अन्योन्यस्पृहा । तृष्णासङ्गसमुद्भवम् — तृष्णासङ्गयोरुद्भवस्थानम्.

கௌந்தேயா—குந்தீபுத்திரனே! **ராகமதினை தன்மை ராசதமாம்**—ரஜோகுணம (ஆணுக்கும் பெண்ணுக்குமிடையிலான) ஆசையை விளைப்பது என்றும், **தாகமுடனே**—ஶப்₃தம் முதலான விஷயங்களில ஆசையோடு, **சங்கம் தனை விளைக்கும் ஆசுநினை**—புத்திரன் மித்திரன் முதலானோரிடத்தில் பாசத்தையும் உண்டாக்குமென்றும் அறிவாய், **மற்று அதுதான்**—மேலும் அந்த ரஜோகுணம், **தேகிதனை**—தே₃ஹததிலிருக்கும் ஜீவனை, **கன்மத்தில் வன்னசையால்**—செயல்களில் வலிய ஆசையை உண்டாக்கி, **உரைத்து உற்று அமரக்கட்டும்**—உறைப்புடன் தே₃ஹத்திலேயே பொருந்தியிருக்கும்படி கட்டிவிடும்.

---

7. இந்த ஶ்லோகத்தில் ரஜோகுணத்தின் தனித்தன்மையையும், அது ஜீவனைக்கட்டும் முறையையும் கூறுகிருன். (ரஜோ ராக₃ாத்மகம் வித்₃தி₄) ரஜோகு₃ணம் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையிலான காமத்தை விளைப்பது என்று அறிவாய். இங்கு 'ராக₃ாத்மகம்' என்று ரஜோ கு₃ணம் ராக₃ஸ்வரூபமானது என்று கூறியிருந்தபோதிலும், ராக₃ஶப்₃த₃ம் ராக₃த்தின் காரணத்தை உபசார வழக்காலோ, "ரஜ்யதே அநேந இதி ராக₃:" [எது ராக₃த்திற்குக் காரணமோ அது ராக₃ம்] என்னும் வ்யுத்பத்தியாலோ குறிப்பதாகக் கொள்ளவேண்டும்; ஏனெனில்: முன் ஶ்லோகத்தில் "ப்ரகாஶகம்" என்று ஸத்வகு₃ணத்தை ப்ரகாஶத்திற்குக் காரணமாகவும், அடுத்த ஶ்லோகத்தில் "மோஹநம்" என்று தமோகு₃ணத்தை மயக்கத்திற்குக் காரணமாகவும் கூறுவதையொட்டி, இங்கும் ரஜோகு₃ணத்தை ராக₃த்திற்குக்காரணம் என்று கொள்வதே பொருந்தியிருக்கும். மேலே, "ரஜஸோ லோப₄ ஏவ ச" (17) என்று ரஜோகு₃ணத்தினுல் காமத்தோடு சேர்ந்தேயிருக்கும் லோப₄மும் உண்டாவதாகக் கூறியிருப்பதும் இதை வலியுறுத்துகிறது. ராக₃ஶப்₃த₃ம் ஆசையைக் குறிக்கும்; இரண்டாம் பாத₃த்திலுள்ள 'த்ருஷ்ணு' ஶப்₃த₃மும் ஆசையைக் குறிக்கும்; இவையிரண்டுக்கும் புநருக்தி ஏற்படாமைக்காகவும், உலகில் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையிலான காமத்தைக் குறித்தே ராக₃ஶப்₃த₃ம் பெரும்பாலும் வழங்கப்படுகையாலும், இங்கும் ராக₃பத₃ம் அதைக் குறிப்பதாகக் கொள்வது பொருத்தமானது,

तृष्णासङ्गहेतुभूतमित्यर्थः । तृष्णा-शब्दादिसर्वविषयस्पृहा; सङ्गः-पुत्रमित्रादिषु संबन्धिषु संश्लेषस्पृहा । तथा देहिनं कर्मसु-क्रियासु

(த்ருஷ்ணு ஸங்க₃ஸமுத்₃ப₄வம்) ஶப்₃த₃ ஸ்பர்ஶ ரூப ரஸ க₃ந்த₄ங்களாகிற ஐந்து விஷயங்களிலும் ஆசையாகிற த்ருஷ்ணைக்கும், புத்திரன், மித்திரன் முதலான உற்றுர் உறவினரிடம் கலந்து பரிமாறவேண்டும் என்னும் பாசமாகிற ஸங்க₃த்திற்கும் உத்பத்தி ஸ்த₂ானமாய் (காரணமாய்) இருப்பது. "த்ருஷ்ணுஸங்க₃ஸமுத்₃ப₄வம்" என்றதற்கு த்ருஷ்ணுஸங்க₃ங்களால் ரஜோகு₃ணம் விளைவதாகக் கூறுவது பயனற்றது. ரஜோகு₃ணம் த்ருஷ்ணு ஸங்க₃ங்களுக்குக் காரணமாயிருந்து ஜீவனைக் கட்டுகிறது என்று கூறுவது பயனுடையது. ஆகையால், அப்படியே பொருள் கொள்ளப்பட்டது. த்ருஷ்ணுஸங்க₃ங்கள் உண்டாகுமிடமாயிருப் பது த₄ர்மபூ₄தஜ்ஞானமேயாகையால், ரஜோகு₃ணம் அவை உண்டாகக் காரணமாயிருப்பது என்றே கொள்ளவேண்டும். "க்ஷுத்த்ருஷ்ணுேபஶமம்" [வி.பு. 1-17-60] முதலானவிடங்களில் த்ருஷ்ணுஶப்₃த₃ம் நீர்பருகவேண்டும் என்னும் ஆசையாகிற தாகத்தைக் குறிப்பதுண்டாயினும், ஸம்ஸாரத்தில் ஆத்மாவைக் கட்டுவதற்குக் காரணத்தைக் கூறும் இப்ரகரணத்தில் தாகத்தை மாத்திரம் குறிப்பது போதாது; "விஷயத்ருஷ்ணை" என்றும், "விஷயவைத்ருஷ்ண்யம்" என்றும் ஶப்₃த₃ஸ்பர்ஶரூபரஸக₃ந்த₄ங் களாகிற ஐந்து விஷயங்களிலும் உண்டாகும் ஆசையைக் குறித்தும் த்ருஷ்ணுஶப்₃த₃ம் வழங்கப்படுவதைக் காண்கிறேம். ஆகையால் இங்கு த்ருஷ்ணுஶப்₃த₃ம் இவ்வைந்து விஷயங்களிலு முள்ள ஆசையைக் குறிப்பதாகக் கொள்வதே பொருந்தும்; புலன் களாகிற இந்திரியங்களின் ஸ்பர்ஶத்திஞல் விளையும் (ஸாம்ஸ்பர் ஶிகமான) எல்லா ஆசையையும் த்ருஷ்ணுஶப்₃த₃ம் குறிக்கிறது என்றபடி; ஆகையால் ஸங்க₃ஶப்₃த₃ம் உலக வழக்கை ஒட்டி முற் கூறிய இந்திரியங்களை நியமிக்கும் மனத்தின் அபி₄மானத்தால் விளையும் உற்றுர் உறவினரிடமுள்ள பாசத்தைக் குறிக்கிறது என்று கொள்வதே பொருத்தமானது. 'த்ருஷ்ணு' என்று புலன் களின் தொடர்பால் ஏற்படும் (ஸாம்ஸ்பர்ஶிகமான) பற்றுக் களையும். 'ஸங்க₃:' என்று மனத்தின் அபி₄மானத்தால் விளையும்

स्पृहाजननद्वारेण निबध्नाति; क्रियासु हि स्पृहया याः क्रिया आरभते देही, ताश्च पुण्यपापरूपा इति तत्फलानुभवसाधनभूतासु योनिषु जन्महेतवो भवन्ति । अतः कर्मसङ्गद्वारेण रजो देहिनं निबध्नाति । तदेवं रजो रागतृष्णासङ्गहेतुः कर्मसङ्गहेतुश्चेत्युक्तं भवति ॥ ७ ॥

(ஆபி₄மானிகமான) பற்றுக்களையும் குறிக்கையாலே, இப்பத₃ங்களிடையே புநருக்தியில்லை. இனி, ஶ்லோகத்தின் பிற்பாதியால் ரஜோகு₃ணம் ஜீவனை ஸம்ஸாரத்தில் கட்டும் முறையை விளக்குகிறுன் — (தத்) அந்த ரஜோகு₃ணம். (கர்மஸங்கே₃ந தே₃ஹிநம் ப₃த்₄நாதி) செயல் புரிவதில் ஆசையை விளைத்து தே₃ஹத்தோடு கூடிய ஜீவனைக் கட்டுகிறது. காமம் முதலானவற்றுல் விளைவதாய், அவற்றை அடைவதற்கு உபாயமாயிருக்கும் செயல்களில் ஆசையே இங்கு கர்மஸங்க₃ம் எனப்படுகிறது. இங்கு பின்வருமாறு ஒரு கேள்வி எழுகிறது:—“ராக₃ம் எனப்படும் காமம், த்ருஷ்ணை எனப்படும் ஶப்₃த₃ாதி₃ விஷயங்களில் ஆசை, ஸங்க₃ம் எனப்படும் புத்ரமித்ராதி₃களிடம் பாசம் ஆகியவையும் ஒவ்வொரு ஸுக₂த்தில் பற்றுகவே காணப்படுகின்றன; நூல்களிலும் கூறப்படுகின்றன; சென்ற ஶ்லோகத்தின் பா₄ஷ்யத்தில் ‘ஜ்ஞான ஸுக₂ங்களில் பற்று விளைந்தவுடன் அவற்றின் ஸாத₄னங்களில் ஸத்வகு₃ணம் ஈடுபடுத்துகிறது’ என்று சொல்லப்பட்டது. இப்படி ஸத்வகு₃ணமும் ஸுக₂ஸாத₄னமான கர்மங்களில் பற்றை விளைக்கும்போது, இங்கு ரஜோகு₃ணத்தை மாத்திரம் கர்மத்தில் பற்றை விளைக்கிறது என்று கூறுவது எப்படிப் பொருந்தும்?” என்பது அக்கேள்வி. இதற்கு பதில் பின்வருமாறு:—“ஸத்வகு₃ணம் ஸுக₂த்தை முக்கியமாகக்கொண்டு அதற்காக ஸாத₄நானுஷ்டானங்களில் ஜீவனை ஈடுபடுத்துகிறது. ‘ப்ரயோஜநேஷு ஸஜ்ஜந்தே ந விஶேஷேஷு பண்டி₃தா:’ [ஸத்வகு₃ணம் மிக்க அறிவாளிகள் பயனுகிற ஸுக₂த்தில் ஈடுபடுகிறுர்களேயொழிய அதன் ஸாத₄னங்களில் பற்று வைப்பதில்லை] என்று இவ்விஷயம் சொல்லப்பட்டது. ரஜோகு₃ணமோவெனில், ஸுக₂ம் அல்பமாகக் கிடைக்கிறதா மிகுதியாகக் கிடைக்கிறதா? ஸுக₂த்தோடு து₃:க்க₂மும் சேர்ந்து வருகிறதா? என்பதை ஆராயாமல் தாம் விரும்பும் ஸுக₂த்தின் ஸாத₄னங்களிலேயே மிகுதியாகப் பற்றுவைக்கச் செய்கிறது.

तमस्त्वज्ञानजं विद्धि मोहनं सर्वदेहिनाम् ।
प्रमादालस्यनिद्राभिस्तन्निबध्नाति भारत ॥ ८

8. தமஸ்த்வஜ்ஞாநஜம் வித்₃தி₄ மோஹநம் ஸர்வதே₃ஹி நாம்।
ப்ரமாத₃ாலஸ்யநித்₃ராபி₄: தந்நிப₃த்₄நாதி ப₄ாரத ॥

ப₄ாரத! — ப₄ரதகுலத்துதித்தவனே, தம: து — தமோ கு₃ணமோவெனில், அஜ்ஞாநஜம்—பொருள்களை மாறுபட அறிவதால் விளைவது (என்றும்), ஸர்வதே₃ஹிநாம்—

அதனாலேயே ரஜோகு₃ணம் கர்ம ஸங்க₃த்தை விளைப்பதாகக் கூறப்பட்டது. அரசனின் மனைவியை ஆசைப்படுவது, தீய புத்திரர் களிடம் பாசம்வைத்து அவர்களை ரக்ஷிப்பது முதலானவற்றை ரஜோகு₃ணமே விளைக்கிறது. இவ்விடங்களில் ஸுக₂ம் அல்பமாய் து₃:க்க₂த்தோடு கலந்ததாயிருப்பதையும், இவற்றைப்பெற இவன் விரும்பிப்புரியும் முயற்சிகளே மிகுதியாக இருப்பதையும் காண லாம்" என்பது பதில். கர்மஸங்க₃ம் எப்படி ஸம்ஸாரக் கட்டுக்குக் காரணமாகிறது? எனில்: முற்கூறிய ஸுக₂ ஸாத₄ன கர்மங்களில் ஆசையாலே தே₃ஹமுடையவர்கள் தொடங்கும் கர்மங்கள் புண்யபாபரூபங்களாகவே உள்ளனவாகையால், அப்புண்யபாப ப₂லன்களை அநுப₄விப்பதற்கு உறுப்பான பிறவிகளுக்குக் காரண மாகின்றன. ஆகையால் ரஜோகு₃ணம் கர்மஸங்க₃த்தை விளைத்து தே₃ஹமுடைய ஜீவனை ஸம்ஸாரத்தில் கட்டிவைக்கிறது என்பது பொருத்தமே. (கௌந்தேய) பரமஜ்ஞானியான குந்தியின் புத்திர னான நீ ஸத்வகு₃ணத்தால் ஏற்படும் கர்மஸங்க₃த்துக்கும் ரஜோகு₃ணத்தால் ஏற்படும் கர்மஸங்க₃த்திற்குமுள்ள வாசி யறிந்து ஸ்வத₄ர்மமாகையாலே ஸாத்விக கர்மஸங்க₃மான யுத்₃த₄த்தில் ஈடுபடவேண்டும் என்று கருத்து. ஆக, இந்த ஶ்லோகத்தால் "ரஜோகு₃ணம் ஸ்த்ரீகளிடம் காமத்தையும், ஶப்₃த₃ாதி₃ விஷயங்களில் ஆசையையும், புத்திரர் மித்திரர் முத லானோரிடம் பாசத்தையும் விளைத்து, அது காரணமாகக் கர்ம ஸங்க₃த்தையும் விளைத்து ஜீவனை ஸம்ஸாரத்தில் கட்டுப்படுத்து கிறது. இதுவே ஸத்வ தமோ கு₃ணங்களைக்காட்டிலும் ரஜோ கு₃ணத்தின் தனித்தன்மை" என்று சொல்லப்பட்டதாயிற்று. 7

भा ।। ज्ञानादन्यदिहाज्ञानमभिप्रेतम् । ज्ञानं वस्तुयाथात्म्याव-बोधः ; तस्मादन्यत् तद्विपर्ययज्ञानम् । तमस्तु वस्तुयाथात्म्यविपरीत·

தே₃ஹத்தையுடைய ஜீவர்கள் அனைவர்க்கும், மோஹநம் — த₄ர்மத்துக்குப்புறம்பான அறிவை விளைவிப்பது (என்றும்) வித்₃தி₃—அறிவாய், தத்–அது, ப்ரமாத₃ாலஸ்யநித்₃ராபி₄:— கவனமின்மை, சோம்பல், தூக்கம் ஆகியவற்றை விளைத்து, நிப₃த்₄நாதி— ஜீவனைக் கட்டுகிறது.

8. தம்மறிவு கேடுதருந் தானறிநீ மோக
மமருயிர்கட் கெல்லா மளிக்குந்—தமமென்ப
தோராமை சோம்ப லுறக்கத்தாற் பார்த்தனே
சோராமற் கட்டுந் துணிந்து.

பார்த்தனே—அர்ஜுனா! தமம் என்பது—தமோ கு₃ணம் என்னும் கு₃ணம், தம் அறிவுகேடுதரும்-பொருள்களைப்பற்றிய மாறுபட்ட அறிவைத் தமக்கு விளைக்கும் (என்றும்), அமர் உயிர்கட்கு எல்லாம் — தே₃ஹத்திலிருக்கும் எல்லா ஜீவர்களுக்கும், மோகம் அளிக்கும் — அறத்திற்குப்புறம்பான அறிவை விளைக்கும்(என்றும்), நீதான் அறி—நீ அறிவாயாக; (மேலும் அது) ஓராமை சோம்பல் உறக்கத்தால்-கவனமின்மை, சோம்பல், தூக்கம் ஆகியவற்றால், சோராமல் துணிந்து கட்டும் — (ஸம்ஸாரத்தில்) தப்பாதபடி உறுதியாகக் கட்டிவிடும்.

---

8. இந்த ஶ்லோகத்தில் தமோ கு₃ணத்தின் தனித்தன்மையையும், அது ஜீவனைக் கட்டும் முறையையும் கூறுகிறான். (தம. து) தமோகு₃ணமோவெனில். துகாரத்தாலே இந்தத் தமோ கு₃ணம் மிகவும் விலக்கத்தக்கது என்று மற்ற இரு கு₃ணங்களைக்காட்டிலும் இதற்குள்ள வேறுபாடு உணர்த்தப் படுகிறது. (அஜ்ஞாநஜம் வித்₃தி₄) பொருள்களை விபரீதமாக (உள்ள நிலைக்கு மாறாக) அறிவதாலுண்டாவது என்று அறிவாய். பொருள்களை உள்ளபடி அறிவது ஜ்ஞானமாகும். அதைக்காட்

विषयज्ञानजम् । मोहनं सर्वदेहिनाम् — मोहो विपर्ययज्ञानम्; विपर्यय-ज्ञानहेतुरित्यर्थः । तत्-तमः प्रमादालस्यनिद्राहेतुतया तद्द्वारेण देहिनं निबध्नाति प्रमादः-कर्तव्यात्कर्मणोऽन्यत्र प्रवृत्तिहेतुभूतमनवधानम्; आलस्यम्-कर्मस्वनारम्भस्वभावः, स्तब्धतेति यावत्; पुरुषस्येन्द्रिय-

---

டிலும் வேறுபட்ட விபரீத ஜ்ஞானம் இங்கு அஜ்ஞானம் எனப் படுகிறது. புண்யபாப கர்மங்களும், ஜ்ஞானமின்மையும் அஜ்ஞான ஶப்₃த₃த்தால் சொல்லப்படுவது உண்டாயினும், இங்கு இந்த அஜ்ஞானம் மோஹத்தை உண்டாக்குவதாகக் கூறுகையால், அதை விளைக்கும் விபரீத ஜ்ஞானத்தையே பொருளாகக்கொள்ள வேண்டும். இங்கு ஜ்ஞானமாவது—பொருள்களை உள்ளபடி அறிவது: அதைக்காட்டிலும் வேறுபட்டது பொருள்களை உள்ள நிலைக்கு நேர்மாறாக அறியும் விபரீத ஜ்ஞானமேயாகும். (தமஸ்து அஜ்ஞாநஜம் வித்₃தி₄) தமோகு₃ணம் இந்த விபரீத ஜ்ஞானத் தால் விளைவது என்று அறிவாய். அசேதன ப்ரக்ருதி கார்யமான ஶரீரத்திலிருக்கும் தமோகு₃ணம் விபரீத ஜ்ஞானத்தால் எப்படி விளையமுடியும்? எனில்: விபரீத ஜ்ஞானம் ஜீவனைப் பாபங் களைச் செய்யும்படி தூண்டும். அதனால் ஶரீரத்தில் ஸத்வகு₃ணம் குறைந்து தமோகு₃ணம் மிகுதியாகிவிடும். இவ்வண்ணமாகவே விபரீத ஜ்ஞானத்தால் தமோகு₃ணம் வளர்கிறது என்று கண்டு கொள்வது, (மோஹநம் ஸர்வதே₃ஹிநாம் வித்₃தி₄) அந்தத் தமோ கு₃ணம் ஶரீரத்தோடு கூடிய எல்லா ஜீவர்களுக்கும் த₄ர்மத் துக்குப் புறம்பான அறிவை விளைத்துவிடும் என்றும் அறிவாய். "மோஹநம்" என்றது மோஹத்திற்குக் காரணம் என்றபடி. தமோ கு₃ணத்தைக் காரணமாகக்கொண்ட மோஹம் த₄ர்மத்திற்குப் புறம்பான அறிவு என்று கொள்வதே பொருத்தமாகும். ஆக, விபரீதஜ்ஞானத்தால் விளையும் தமோகு₃ணம் த₄ர்மத்திற்குப் புறம்பான அறிவை விளைக்கிறது என்று தமோகு₃ணத்தின் தனித் தன்மை கூறப்பட்டது. இனி ஶ்லோகத்தின் பிற்பாதியால் அந்த தமோகு₃ணம் ஜீவனை ஸம்ஸாரத்தில் கட்டும் முறையைக் காட்டுகிறான். (தத்) அந்தத் தமோகு₃ணம். (ப்ரமாத₃ாலஸ்ய நித்₃

प्रवर्तनश्रान्त्या सर्वेन्द्रियप्रवर्तनोपरतिर्निद्रा ; तत्र बाह्येन्द्रियप्रवर्तनोपरमः स्वप्नः ; मनसोऽप्युपरतिः सुषुप्तिः ॥ ८ ॥

ராபி₄: தே₃ஹிநம் நிப₃த்₄நாதி) கவனமின்மை, சோம்பல், தூக்கம் ஆகியவற்றை விளைத்து, அதன் மூலம் ஶரீரமுடைய ஜீவனை ஸம்ஸாரத்தில் கட்டிவிடும். 'ப்ரமாத₃' ஶப்₃த₃ம் கவனமின்மையைக் குறிக்கிறது. அது செய்யத்தக்க கர்மங்களைக் காட்டிலும் வேறுபட்ட கர்மங்களில் ஈடுபடச் செய்யும். செய்யவேண்டிய கர்மங்களைச் செய்யாமலிருக்கச் செய்யும் பாபங்களை விளைத்து, அதன் விளைவான தாழ்ந்த பிறவிகளைக் கொடுத்துவிடும்.

"அகுர்வந் விஹிதம் கர்ம நிந்தி₃தம் ச ஸமாசரந்|
ப்ரஸஜ்ஜம்ஶ்சேந்த்₃ரியார்த்தே₂ஷு ப்ராயஶ்சித்தீயதே நர:||"
[மனு 11—44]

[செய்யவேண்டிய கர்மத்தைச் செய்யாமலிருப்பதாலும், செய்யத்தகாத கர்மத்தைச் செய்வதாலும், இந்த்₃ரியங்களை ஶப்₃த₃ாதி₃ விஷயங்களில் இஷ்டப்படி மேய விடுவதாலும் மனிதன் பாபியாய் ப்ராயஶ்சித்தம் செய்யவேண்டியவனுகிறுன்] என்று மனுஸ்ம்ருதியிலும் கூறப்பட்டதன்றே, ஆக, கவனமின்மை மேன்மேலே தாழ்ந்த பிறவிகளைக் கொடுத்து ஸம்ஸாரத்தில் ஜீவனைக் கட்டிவிடுகிறது என விளங்கும். 'ஆலஸ்ய' ஶப்₃த₃ம் சோம்பலைக்குறிக்கும். பயனுடைய விஷயங்களிலும் செயல்புரியாமலிருக்கும் செயலற்ற நிலையே சோம்பல் எனப்படுகிறது; இதுவும் பாபத்தை விளைப்பதன் மூலம் தாழ்ந்த பிறவிகளை விளைத்து ஜீவனை ஸம்ஸாரத்தில் கட்டிவிடும் என்பது வெளிப்படை. 'நித்₃ரா' ஶப்₃த₃ம் தூக்கத்தைக் குறிக்கும், தமோகு₃ணம் ஜீவனுடைய சரீரத்தில் எப்போதும் இருந்தபோதிலும் இந்த்₃ரியங்கள் மிகுதியாகச் செயல் புரிந்து களைப்படையும்போதே அவற்றின் செயலற்ற நிலையாகிற தூக்கம் தமோகு₃ணத்தின் விளைவாக உண்டாகிறது. அதில் மனத்தைத்தவிர மற்ற இந்த்ரியங்கள் மாத்திரம் செயலற்றுப்போகும்போது 'ஸ்வப்நம்' எனப்படும் கனவு ஏற்படுகிறது. மனமும் செயலற்றுப்போகும் போது 'ஸுஷுப்தி' எனப்படும் தூக்கம் ஏற்படுகிறது. இங்கு நித்₃ராஶப்₃த₃ம் இவ்விரண்டை

भा ।। सत्त्वादीनां बन्धद्वारभूतेषु प्रधानान्याह-

सत्त्वं सुखे संजयति रजः कर्मणि भारत ।

ज्ञानमावृत्य तु तमः प्रमादे संजयत्युत ॥ ९

9, ஸத்த்வம் ஸுகே₂ ஸஞ்ஜயதி ரஜ: கர்மணி ப₄ாரத ।
ஜ்ஞாநமாவ்ருத்ய து தம: ப்ரமாதே₃ ஸஞ்ஜயத்யுத॥

ப₄ாரத-ப₄ரதகுலத்திலுதித்தவனே! ஸத்த்வம்-ஸத்வகு₃ணம், ஸுகே₂ ஸஞ்ஜயதி—ஸுக₂த்தில் (முக்கியமாகப்) பற்றை விளைக்கிறது; ரஜ:-ரஜோகு₃ணம், கர்மணி (ஸஞ்ஜயதி)—கர்மத்தில் (முக்கியமாகப்) பற்றை விளைக்கிறது; தம: து-தமோகு₃ணமோவெனில், ஜ்ஞாநம் ஆவ்ருத்ய—பொருள்களை உள்ளபடி அறியும் அறிவை மறைத்து,ப்ரமாதே₃ ஸஞ்ஜயதி உத-கவனமின்மையால் (விபரீத ஜ்ஞானத்தை விளைத்து) செய்யத்தகாத கர்மங்களில் ஈடுபடுத்துவதில் (முக்கியமாகப்) பற்றை விளைக்கிறதன்றோ.

யுமே குறிக்கிறது. தூக்கம் ஶாஸ்திரங்களில் விதி₄க்கப்பட்ட கர்மங்களை அநுஷ்டி₂க்க முடியாதபடி செய்வதன் மூலமும், அநுஷ்டி₂த்தாலும் காலத்தில் அநுஷ்டி₂க்காதபடியும் காலமல்லாத காலத்தில் அநுஷ்டி₂க்கும்படியும் செய்வதன் மூலமும் பாபங்களை விளைத்து, தாழ்ந்த பிறவிகளைக் கொடுப்பதன்மூலம் ஜீவனை ஸம்ஸாரத்தில் கட்டிவிடுகிறது. தீய கனவுகளும் பாபத்தை விளைத்து, தாழ்ந்த பிறவிகளை அளிப்பதன் மூலம் ஜீவனை ஸம்ஸாரத்தில் கட்டிவிடுகின்றன, இதனாலேயே, "யுக்த ஸ்வப்நாவபோ₃த₄ஸ்ய யோகோ₃ ப₄வதி து₃:க்க₂ஹா" [கீ₃தை 6—17] [அளவான தூக்கத்தையும் விழிப்பையும் உடையவனுக்கு எல்லாத் துன்பங்களையும் போக்கும் யோகா₃ப்₄யாஸம் உண்டாகும்] என்று கீ₃தையில் கண்ணன் முன்னமே சொன்னான். (ப₄ாரத) ப₄ரத குலத்தில் உதித்த நீ இந்தத் தமோகுணத்தின் காரியமான செயலற்ற நிலையை அடைந்து போர்புரியாமலிருக்கக் கூடாதென்று கருத்து.

भा ॥ सत्त्वं सुखसङ्गप्रधानं ; रजः कर्मसङ्गप्रधानम्; तमस्तु वस्तुयाथात्म्यज्ञानमावृत्य विपरीतज्ञानहेतुतया कर्तव्यविपरीतप्रवृत्ति-सङ्गप्रधानम् ॥ ९ ॥

9. சத்துவ மதின்பந் தனிற்றுவக்குந் தானிரசம்
தொத்தியலுங் கன்மந் துவக்குவிக்கு—மைத்தும்
மன்னறிவு தன்னை மறைத்திட்டோர்ப் பின்மையினிற்
றுன்னமிகத் தான்றுவக்குஞ் சூழ்ந்து.

சத்துவமது-(முற்கூறிய மூன்றுகுணங்களில்) அந்த ஸத்வகுணமானது, இன்பம் தனில் துவக்கும்-சுகத்தில் (முக்கியமாகப்) பற்றைவிளைக்கிறது; தொத்து இயலும்-முயற்சியை விளைக்கும், இரசம் தான்-ரஜோகுணமானது, கன்மம் துவக்குவிக்கும்-கர்மத்தில் (முக்கியமாகப்)பற்றைவிளைக்கிறது; மைத்தும் தான் —(உள்ளிருளை விளைக்கும்) தமோகுணமானது, மன் அறிவுதன்னை மறைத்திட்டு—பொருள்களை உள்ளபடி அறியும் அறிவை மறைத்து, சூழ்ந்து—(ஜீவனைச் சூழ்ந்து நின்று), துன்னம் மிக ஓர்ப்பின்மையினில்—மிகுதியான கவனமின்மையில், துவக்கும்—(முக்கியமாகப்) பற்றை விளைக்கும்.

9. சென்ற மூன்று ஸ்லோகங்களில் முறையே ஸத்வரஜஸ் தமோகுணங்கள் ஸம்ஸாரத்தில் ஜீவனைக் கட்டுவதற்குக் காரணமாயிருப்பவற்றைக் கூறினன். இந்த ஸ்லோகத்தில் அவற்றில் முறையே முக்கியமானது எது என்று காட்டுகிறான். (ஸத்த்வம் ஸுகே ஸஞ்ஜயதி) ஸத்வகுணம் ஸுகத்தில் பற்றைவிளைக்கிறது. ஆறும் ஸ்லோகத்தில் ஸத்வகுணம் ஜ்ஞாந ஸுகங்கள் இரண்டிலும் பற்றை விளைத்து ஜீவனை ஸம்ஸாரத்தில் கட்டுகிறது என்று சொல்லப்பட்டது. ஜ்ஞானத்தில் பற்றும் ஸுகத்தின் பொருட்டேயாகையால், இங்கு ஸுகத்தில் பற்றே முக்கியமானது எனக் காட்டுகிறான். (ரஜ: கர்மணி ஸஞ்ஜயதி) ரஜோகுணம் கர்மத்தில் பற்றை விளைக்கிறது; ஏழாம் ஸ்லோகத்தில் ரஜோகுணம் ராக த்ருஷ்ணா ஸங்கங்களை விளைத்து, அவை காரணமாக விளையும் கர்மத்தில் பற்றினாலே ஜீவனை ஸம்ஸாரத்தில் கட்டுகிறது என்று கூறினன். ராக த்ருஷ்ணா ஸங்கங்களும கர்மத்தில் பற்றை விளைப்பதற்கே உறுப்பாகின்றனவாகையாலே, இங்கு கர்ம ஸங்கமே முக்கியமானது எனக் காட்டுகிறான்.

भा ॥ देहाकारपरिणतायाः प्रकृतेः स्वरूपानुबन्धिनस्सत्त्वादयो गुणाः ; ते च स्वरूपानुबन्धित्वेन सर्वदा सर्वे वर्तन्त इति परस्परविरुद्धं कार्यं कथं जनयन्तीत्यत्राह–

रजस्तमश्चाभिभूय सत्त्वं भवति भारत ।
रजस्सत्त्वं तमश्चैव तमस्सत्त्वं रजस्तथा ॥ १०

(தம: து ஜ்ஞாநமாவ்ருத்ய ப்ரமாதே₃ ஸஞ்ஜயதி உத) தமோ கு₃ணமோவெனில் பொருள்களை உள்ளபடி அறியும் அறிவை மறைத்து, கவனமின்மையை விளைத்து, அதனால் விபரீத ஜ்ஞானத்தை விளைத்து, செய்யத்தகாத கர்மங்களில் ஈடுபடுத்துவதன் மூலம் கவனமின்மையினுல் ஜீவனை ஸம்ஸாரத்தில் முக்கியமாகக் கட்டுகிறது. எட்டாம் ஶ்லோகத்தில் கவனமின்மை, சோம்பல், தூக்கம் ஆகிய மூன்றுலும் தமோகு₃ணம் ஜீவனை ஸம்ஸாரத்தில் கட்டுகிறது என்று காட்டினுன். இம்மூன்றில் கவனமின்மையாலேயே விபரீத ஜ்ஞாநம் விளைந்து ஸம்ஸாரப₃ந்த₄ம் மிகுதியாக விளைகிறதாகையாலே அதுவே முக்கியமானது எனக் காட்டுகிருன். "ஜ்ஞாநமாவ்ருத்ய" என்றதற்கு அறிவு முழுவதையும் மறைப்பதாகப் பொருள்கொண்டால் தூக்கநிலை ஏற்படுமேயொழிய, ப்ரமாத₃ம் (கவனமின்மை) எனும் நிலை ஏற்படாதாகையால், "பொருள்களை உள்ளபடி அறியும் அறிவை மறைத்து" என்று பொருள்கொள்ளப்பட்டது. (ப₄ாரத) ப₄ரதன் முதலான ஞானிகளின் வம்சத்தில் வந்த நீ இந்த முக்குணங்களைப்பற்றிய தெளிந்த அறிவைப் பெறவேண்டுமென்று கருத்து. 9

10. "தே₃ஹமாகப் பரிணமமடைந்திருக்கும் மூலப்ரக்ருதியின் ஸ்வரூபத்தோடு எப்போதும் சேர்ந்திருப்பவை ஸத்வ ரஜஸ் தமோகு₃ணங்கள்; அவை எல்லா தே₃ஹங்களிலும், எல்லாக்காலத்திலும் சேர்ந்தேயிருக்கின்றன. அப்படியிருக்கும்போது ஸத்வகு₃ணம் உண்மையறிவையும், ஸுகத்தில் பற்றையும், மற்ற கு₃ணங்கள் பொய்கலந்த அறிவையும், துன்பத்தில் பற்றையும், மற்றும் இவைபோலே ஒன்றுக்கொன்று முரண்பட்ட விளைவுகளையும் உண்டாக்குகின்றன என்று முன் ஶ்லோகங்களில் கூறினது எப்படிப் பொருந்தும்?" என்னும் கேள்வியெழ,

10\. ரஜஸ்தமஶ்சாபி₄பூ₄ய ஸத்த்வம் ப₄வதி பா₄ரத |
ரஜஸ்ஸத்த்வம் தமஶ் சைவ தமஸ்ஸத்த்வம் ரஜஸ்ததா₂ ||

பா₄ரத—ப₄ரதகுலத்துதித்தவனே!, (தேஹத்திலுள்ள முக்குணங்களுக்குள்) **ரஜ: தம: ச அபி₄பூ₄ய**–ரஜோகு₃ணத்தையும், தமோகு₃ணத்தையும் அடக்கி, **ஸத்த்வம் ப₄வதி**—(சிலசமயம் ஸத்வகு₃ணம் மேலோங்கி நிற்கிறது; **ஸத்த்வம் தம: ச (அபி₄பூ₄ய)**—ஸத்வகு₃ணத்தையும், தமோகு₃ணத்தையும் அடக்கி, **ரஜ: ஏவ(ப₄வதி)**–(சிலசமயம்) ரஜோகு₃ணமே மேலோங்கி நிற்கிறது. **ரஜ: ஸத்த்வம் ததா₂ (அபி₄பூ₄ய)**— ரஜோகு₃ணத்தையும், ஸத்வ கு₃ணத்தையும் அவ்வண்ணமே அடக்கி, **தம: ப₄வதி**–(சிலசமயம்) தமோகு₃ணம் மேலோங்கி நிற்கிறது.

10\. முக்குணங்க டம்மின் முதற்குணந்தான் மற்றிரண்டு
மொக்க வமுக்கி யுறுமேலா—மிக்க
விடைக்குணந்தான் பார்த்தனே மற்றிரண்டு மிங்கே
கடைக்குணமு மவ்வாறு காண்.

பார்த்தனே—அர்ஜுநு!, **இங்கே**—இவ்வுலகில், **முக்குணங்கள் தம்மில்**—ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் இந்த முக்குணங்களில், **முதல் குணம்**—முதலாவதான ஸத்வகு₃ணமானது, **மற்று இரண்டும் ஒக்க அமுக்கி**-மற்ற இரு குணங்களான ரஜஸ்ஸையும், தமஸ்ஸையும் ஒருபடிப்பட அடக்கி, **தான் மேலா உறும்**—(சிலசமயம்) தான் மேலோங்கி நிற்கும்; **மிக்க இடை குணம்**—மிகுந்திருக்கும் நடுக்குணமான ரஜோகு₃ணம், **மற்று இரண்டும் (ஒக்க அமுக்கி)**—மற்ற இரு கு₃ணங்களான ஸத்வகு₃ணத்தையும், தமோகு₃ணத்தையும் ஒருபடிப்பட அமுக்கி, **தான் (மேலா உறும்)**—(சிலசமயம்) தான் மேலோங்கி நிற்கும்; **கடைக்குணமும்**—கடைசிகு₃ணமான தமோகு₃ணமும், **அவ்வாறு காண்**—அவ்வண்ணமே மற்ற இரு குணங்களான ரஜோகு₃ணத்தையும், ஸத்வகு₃ணத்தையும் ஒருபடிப்பட அமுக்கி (சிலசமயம்) தான் மேலோங்கி நிற்கும் என்று அறிவாய்.

"ஸத்வம் முதலான முக்குணங்களும் ப்ராக்ருதமான தே₃ஹத்தோடுகூடிய ஜீவனோடு எப்போதும் சேர்ந்தேயிருந்தபோதிலும், ப்ராசீந புண்யகர்மத்தால் விளையும ப₄க₃வத₃நுக்₃ரஹத்தாலும்,

भा ॥ यद्यपि सत्त्वादयस्त्रयः प्रकृतिसंसृष्टात्मस्वरूपानुबन्धिनः, तथाऽपि प्राचीनकर्मवशाद्देहाप्यायनभूताहारवैषम्याच्च सत्त्वादयः परस्परसमुद्भवाभिभवरूपेण वर्तन्ते । रजस्तमसी कदाचिदभिभूय

ஸாத்விகமான ஆஹாரத்தை உட்கொள்வதாலும் சிலசமயம் தேஹத்தில் ஸத்வகுணம் மிகுந்து, மற்ற இரு குணங்களும் அடங்கிநிற்கும், பாபகர்மத்தால் விளையும் பகவானுடைய நிக்ரஹத்தாலும், ராஜஸ தாமஸாஹாரங்களை உட்கொள்வதாலும் சில சமயம் தேஹத்தில் மற்ற இரு குணங்களில் ஒவ்வொன்று மிகுந்து மற்ற குணங்கள் அடங்கிநிற்கும்; எந்த சமயத்தில் எந்த குணம் மிகுந்திருக்கிறதோ அந்த சமயத்தில் அந்த குணத்தின் விளைவே ஏற்படுகையால் முரண்பட்ட விளைவுகள் உண்டாகமாட்டா'' என்று பதிலுரைக்கிறது இந்த ஶ்லோகம். (ரஜஸ் தமஶ் சாபிபூய ஸத்வம் பவதி) ப்ராசீநபுண்யம் மிக்கிருக்கும் சமயத்தில், அதனாலுண்டான பகவானுடைய அநுக்ரஹத்தாலும், ஸாத்விகமான ஆஹாரங்களை உட்கொள்ளுவதாலும் ஸத்வகுணம் மிகுதியாக உண்டாகி, ரஜஸ்தமோ குணங்களை அடக்கி நிற்கும் என்று கருத்து.

''ரஸாஸ்ருங்மாம்ஸமேதோऽஸ்தி, மஜ்ஜா ஶுக்ராணி
தாதவ: |
ஸப்த தூஷ்யா மலா மூத்ர ஶக்ருத் ஸ்வேதாதயோபி ச ||
வ்ருத்தி: ஸமாநை: ஸர்வேஷாம் விபரீதைர் விபர்யய: ||''
[அஷ்டாங்கஹ்ருதயம்—ஆயுஷ்காமீயம் 1-13,14]

[ரஸம், ரத்தம், மாம்ஸம், மேதஸ், எலும்பு, மஜ்ஜை, ஶுக்லம் (வெள்ளைரத்தம்) ஆகிய ஏழும் ஶரீரத்தில் இருக்க வேண்டிய தாதுக்கள்; மூத்திரம், மலம், வியர்வை முதலியவை ஶரீரத்திலிருந்து விலக்கத்தக்க மலங்கள். வாதம், பித்தம் கபம் (ஶ்லேஷ்மம்) ஆகியவற்றை வளர்க்கும் ஆஹாரம் ஒத்திருக்கும்போது, வாத பித்த ஶ்லேஷ்மங்கள் மூன்றும் ஸமமாயிருக்கையாலே எல்லா தாதுக்களும் விருத்தியடைகின்றன. (மலங்கள் அடங்கியுள்ளன); ஒவ்வொன்று விஞ்சியிருக்கும் போது வாதம் முதலான மூன்றில் ஏற்றத்தாழ்வு ஏற்பட்டு

सत्त्वमुद्रिक्ते वर्तते । तथा तमस्सत्त्वे अभिभूय रजः कदाचित् । कदाचिच्च रजस्सत्त्वे अभिभूय तमः ॥

த₄ாதுக்கள் குறைவுபட்டு, மலங்கள் விஞ்சுகின்றன] என்று வாக்₃ப₄டரின் அஷ்டாங்கஹ்ருத₃யம் எனும் ஆயுர்வேதநூலில் வாதம், பித்தம், கப₂ம் ஆகியவற்றை வளர்க்கும் ஆஹாரங்களில் ஒவ்வொன்று விஞ்சியிருக்கும்போது, வாதம் முதலானவை வளர்வதாகக் கூறியதுபோல், இங்கும் ஸத்வம் முதலானவற்றை வளர்ப்பவையாகப் பின்னுல் சொல்லப்போகும் ஆஹாரங்களால் ஸத்வம் முதலானவை வளர்வதாகக் கொள்ளவேண்டும். "ஆஹாரஶுத்₃தௌ₄ ஸத்வஶுத்₃தி₄:" [ச₂ாந் 7-26-2] [ஆஹாரத்தில் (ஸத்வகு₃ணம் மிகுந்திருக்கையாகிற) ஶுத்₃தி₄யிருந்தால் மனம் (ஸத்வகு₃ணம் மிகுந்து) ஶுத்₃த₄மாகிறது] என்று உபநிஷத்திலும் ஓதப்பட்டதன்றே. "ததோ தே₃வா அப₄வந் பராஸுரா:" [யஜுர்-காண்ட₃ம் 5-3-3-11] [அச்சமயத்தில் அஸுரர்களை எதிரிகளாகக்கொண்ட தே₃வர்கள் மேலோங்கியிருந்தனர்] என்கிற வேத₃வாக்யத்தில் "அப₄வந்" என்னும் வினைச்சொல் மேலோங்கி நிற்பதைக் கூறியதைப்போலே, இங்கும் "ப₄வதி" என்னும் வினைச்சொல் மேலோங்கி நிற்பதைக் கூறுகிறது. (ரஜ: ஸத்வம் தமஶ் சைவ) "அபி₄பூ₄ய ப₄வதி" என்பதை முற்பாதியிலிருந்து சேர்த்துக்கொள்ள வேண்டும். இவ்வண்ணமே (தம: ஸத்வம் ரஜஸ்தத₂ா) என்றவிடத்திலும் சேர்த்துக்கொள்ள வேண்டும். "ப்ராசீனபாபம் சிறிது ஓங்கியிருக்கும்போது அதனுல் உண்டான சிறிய ப₄க₃வந் நிக்₃ரஹத்தாலும, ராஜஸாஹாரங்களை உட்கொள்வதாலும் ரஜோகு₃ணம் மிகுதியாக உண்டாகி ஸத்வதமோகு₃ணங்களை அடக்கிநிற்கும்" என்றும், "ப்ராசீநபாபம் மிகவும் ஓங்கியிருக்கும்போது அதனுல் உண்டான மிகுந்த ப₄க₃வந்நிக்₃ரஹத்தாலும், தாமஸாஹாரங்களை உட்கொள்வதாலும் தமோகு₃ணம் மிகுதியாக உண்டாகி ஸத்வரஜோகு₃ணங்களை அடக்கிநிற்கும்" என்றும் கருத்து (பா₄ரத) ஸத்வகு₃ணம் மிக்கவர்கள் நிறைந்த பா₄ரதகுலத்தில் உதித்த நீயும் ப₄க₃வதநுக்₃ரஹத்திற்குப் பாத்திரமாவதன் மூலமும் ஸாத்விகாஹாரங்களை உட்கொள்வதன் மூலமும், ராஜஸதாமஸாஹாரங்களை விலக்குவதன்மூலமும் அவர்களைப்போலே எப்போதும் ரஜஸ்தமோகு₃ணங்களை அடக்கி ஸத்வகு₃ணம் மிகுந்தவனுக விளங்க வேண்டும் என்று கருத்து.

भा ॥ तच्च कार्योपलम्भेनैवावगच्छेदित्याह —

सर्वद्वारेषु देहेऽस्मिन् प्रकाश उपजायते ।
ज्ञानं यदा तदा विद्यात् विवृद्धं सत्त्वमित्युत ॥ ११

11. ஸர்வத்₃வாரேஷு தே₃ஹேऽஸ்மிந் ப்ரகாஶ உபஜாயதே।
ஜ்ஞாநம் யதா₃ ததா₃ வித்₃யாத் விவ்ருத்₃த₄ம் ஸத்வ-
மித்யுத ॥

அஸ்மிந் தே₃ஹே — இந்த (ப்ராக்ருத) தே₃ஹத்தில், ஸர்வத்₃வாரேஷு — கண் முதலான ஞானம் வெளிப்படும் இந்திரியங்களாகிற எல்லா வாசல்களிலும், **ப்ரகாஶே ஜ்ஞாநம்** — பொருள்கள் உள்ளபடி பிரகாசிப்பதற்கு உறுப்பான அறிவு, **யதா₃ உபஜாயதே** — எப்போது உண்டாகிறதோ, **ததா₃** — அப்பொழுது, ஸத்த்வம் விவ்ருத்₃த₄ம் இதி — ஸத்வகு₃ணமே (ரஜஸ் தமஸ்ஸுகளைக் காட்டிலும்) மேலோங்கி நிற்கிறது என்று, வித்₃யாத் உத — (ஜீவன்) அறியக்கடவன்.

11. பொறிவாயி லெங்கும் புணரு மொளியா
மறிவான தெப்பொழுதுண் டாகும் — குறியாலே
மன்னுடம்பி லப்பொழுது வாய்ந்துயருஞ் சத்துவமா
மென்னுமது தானறிவா னிங்கு.

---

11. "எந்தசமயத்தில் எந்த கு₃ணம் மேலோங்கி நிற்கிறது என்று அறிந்தாலன்றோ நாம் ரஜஸ் தமோகு₃ணங்கள் அடங்கி ஸத்வகு₃ணம் மேலோங்கி நிற்கும்படி பார்த்துக்கொள்ளமுடியும்; மேலோங்கிநிற்பது எந்த கு₃ணம் என்பதை எப்படி அறிவது?" என்னும் கேள்வியெழ, மூன்று ஶ்லோகங்களாலே முறையே ஸத்வரஜஸ்தமோ கு₃ணங்கள் மேலோங்கிநிற்பதை அவற்றின் கார்யங்களின்மூலம் அறியும் வழியைக்காட்டுகிறான். இந்த ஶ்லோகத்தில் ஸத்வகு₃ணம் மேலோங்கிநிற்பதை அதன் கார்யங்கொண்டு அறியலாம் என்கிறான். (ஸர்வத்₃வாரேஷு) மெய், வாய், கண், மூக்கு, செவி, மனம் என்னும் ஞானம் வெளிப்படும்

भा ।। सर्वेषु चक्षुरादिषु ज्ञानद्वारेषु यदा वस्तुयाथात्म्यप्रकाशो ज्ञानमुपजायते. तदा तस्मिन् देहे सत्त्वं प्रवृद्धमिति विद्यात् ।।

இங்கு–இவ்வுலகில், மன்னு உடம்பில் — (ஜீவனோடு) பொருந்தியிருக்கும் உடலில், பொறி வாயில் எங்கும்— (கண் முதலிய) ஞானம் வெளிப்படும் இந்திரியங்களாகிற வாசல்கள் அனைத்திலும், புணரும் ஒளியாம் அறிவானது-பொருள்கள் உள்ளபடி பிரகாஶிப்பதற்கு உறுப்பான அறிவானது, எப்பொழுது உண்டாகும்-எந்த சமயத்தில் உண்டாகிறதோ, அப்பொழுது-அந்த சமயத்தில்,குறியாலே-அந்த அடையாளத்தாலே, சத்துவம் வாய்ந்து உயருமாம் என்னுமது தான்—ஸத்வகு3ணமே (ரஜஸ் தமஸ்ஸுக்களைக் காட்டிலும்) மேலோங்கி நிற்கிறது என்பதை, அறிவான்-(ஜீவன்) அறியக் கடவன்.

ஆறு வழிகளிலும். இங்கு ஸர்வ த்3வாரஶப்3த3ம் இரு கண்கள், இரு காதுகள், இரு மூக்குதுவாரங்கள், வாய், பாயு (ஆஸனவாய்) உபஸ்த2ம் எனும் உடலின் ஒன்பது துவாரங்களையோ, பதினொரு இந்திரியங்களையோ குறிப்பதாகக் கொண்டால், 'ஜ்ஞாநம் உபஜாயதே' என்று அவற்றின்மூலம் ஞானம் வெளிப்படுவதாகக் கூறுவது பொருந்தாது. அவையனைத்தின் மூலமும் ஞானம் வெளிப்படுவதில்லையே. ஆகையால் ஞானம் வெளிப்படும் வழிகளான ஞானேந்திரியங்கள் ஐந்தும், மனமுமே ஸர்வத்3வாரஶப்3த3த்தால் குறிக்கப்படுவதாகக் கொள்ளவேண்டும். (ப்ரகாஶோ ஜ்ஞாநம் யதா3 உபஜாயதே) பொருள்கள் உள்ளபடி ப்ரகாஶிப்பதற்கு உறுப்பான அறிவு எப்போது வெளிப்படுகிறதோ. 'ப்ரகாஶ' ஶப்3த3ம் முதல் வேற்றுமை என்றுகொண்டால் ஜ்ஞாநஶப்3த3த்தோடு புநருக்தி உண்டாகும். 'ப்ரகாஶ' பத3த்தின் வியாக்கியானம் ஜ்ஞானபத3ம் என்று சிலர் உரைப்பதும் நலிந்து பொருள்கொள்வதாகும். ஆகையாலே "ப்ரகாஶோ உபஜாயதே" என்பது ஸந்தி4யில் "ப்ரகாஶ உபஜாயதே" என்று ஆகியிருப்பதாகக்கொண்டு ப்ரகாஶஶப்3த3த்தை ஏழாம் வேற்றுமையாகக் கொள்ளப்பட்டது. 'ப்ரகா3ஶோ ஜ்ஞானம்' என்றதற்கு, 'பொருள்கள் உள்ளபடி வெளிப்படுவதற்கு உறுப்பான அறிவு' என்றோ

लोभः प्रवृत्तिरारम्भः कर्मणामशमस्स्पृहा ।
रजस्येतानि जायन्ते विवृद्धे भरतर्षभ ॥ १२

12. லோப₄: ப்ரவ்ருத்திராரம்ப₄: கர்மணுமஶம: ஸ்ப்ருஹா ।
ரஜஸ்யேதாநி ஜாயந்தே விவ்ருத்₃தே₄ ப₄ரதர்ஷப₄ ॥

ப₄ரதர்ஷப₄-ப₄ரதகுலத்திலுதித்தவர்களில் சிறந்தவனே!, லோப₄:—கருமித்தனம், ப்ரவ்ருத்தி:-பயனற்ற செயல்பாடு, கர்மணும் ஆரம்ப₄:-ஒரு ப₂லனைக் குறித்துக் கர்மங்களைத் தொடங்குவது, அஶம: — இந்திரியங்களை அடக்காமை, ஸ்ப்ருஹா-விஷயங்களில் ஆசை, ஏதாநி-என்னும் இவை, ரஜஸி விவ்ருத்₃தே₄ - ரஜோகு₃ணம் மேலோங்கிநிற்கும்போது, ஜாயந்தே-உண்டாகின்றன.

'வெளிப்படுத்தப்படும் பொருள்களைப்பற்றிய உண்மையறிவு' என்றே, ப்ரகாஶ ஶப்₃த₃ம் அறிவையும், ஜ்ஞாநஶப்₃த₃ம் மநோ வ்ருத்தியையும் குறிக்கிறது என்றே பொருள்கொண்டுவிடலாம். ஆகையால், "ப்ரகாஶம் வெளிச்சத்தின் ஸ்த₂ானத்திலும், ஜ்ஞானம் கண்ணின் ஸ்த₂ானத்திலும் உள்ளது" என்று சிலர் கூறும் பொருளும் சுவையற்றது என விளங்கும். (யதா₃ அஸ்மிந் தே₃ஹே உபஜாயதே ததா₃ ஸத்த்வம் விவ்ருத்₃த₄ம் இதி வித்₃யாத்) எப்போது இந்த தே₃ஹத்தில் முற்கூறியபடி அறிவு உண்டாகிறதோ, அப்போது இந்த தே₃ஹத்தில் ஸத்வகு₃ணம் மேலோங்கி நிற்கிறது என்று அறியக்கடவன். ஸௌப₄ரிபோலே பல ஶரீரம் எடுக்கக்கூடியவர்களுக்கு ஒவ்வொரு ஶரீரத்தில் ஒவ்வொரு கு₃ணம் மேலோங்கி நிற்கலாமாகையாலும், ஒருவருடைய ஶரீரத்தில் ஒரு கார்யம் விளைவதுகொண்டு மற்றொருவருடைய ஶரீரத்தில் எந்த கு₃ணம் மேலோங்கி நிற்கிறது என்று அறிய முடியாதாகையாலும் எந்த ஶரீரத்தில் இந்தக் கார்யம் விளைகிறதோ, அந்த ஶரீரத்திலேயே ஸத்வம் மேலோங்கி நிற்கிறதென்று அறிய வேண்டும் என்று ஶ்லோகத்தின் இரு பாதிகளிலும் தே₃ஹ ஶப்₃த₃த்தைக்கூட்டிக்கொண்டு பொருள்கொள்ளப்பட்டது.

मा ॥ लोभः— स्वकीयद्रव्यस्यात्यागशीलता; प्रवृत्तिः-प्रयोजनमनुद्दिश्यापि चलनस्वभावता; आरम्भः कर्मणां-फलसाधनभूतानां कर्मणामारम्भः; अशमः— इन्द्रियानुपरतिः; स्पृहा-विषयेच्छा । एतानि रजसि प्रवृद्धे जायन्ते ; यदा लोभादयो वर्तन्ते तदा रजः प्रवृद्धमिति विद्यादित्यर्थः ॥ १२ ॥

12\. *ஈயாமை வீணுழற்றி யேய்ந்தகரு மத்தொடக்கஞ்*
சாயா புலனெழுச்சி தன்னுசை-யோயாம
லுண்டா மிவைகண்டா யுற்றிரசத் தோங்கதனுல்
வண்டாருந் தார்விசயா மற்று.

வண்டு ஆரும் தார் விசயா—வண்டு நிறைந்த மாலை சூடிய விஜயனே! *ஈயாமை*-எவருக்கும் எதுவும் கொடுக்காமையாகிற கருமித்தனம், *வீண் உழற்றி*—பயனற்ற செயல்பாடு, *ஏய்ந்த கருமத் தொடக்கம்*-ஒரு ப₄லனைக் குறித்துக் கர்மங்களைத் தொடங்குவது, *சாயா புலன் எழுச்சி* – இந்திரியங்கள் அடங்காமல் எழுவது, (புலன்) தன் *ஆசை*-விஷயங்களில் ஆசை, *மற்று இவை*-என்னும் இவை, இரசத்து ஓங்கு *அதனுல்*-ரஜோகு₃ணம் ஓங்கி நிற்பதால், *ஓயாமல் உற்று உண்டாம் கண்டாய்*—இடைவிடாமல் பொருந்தி உண்டாகும் என்று அறிவாய்.

12\. இந்த ஶ்லோகத்தில் ரஜோகு₃ணம் ஶரீரத்தில் ஓங்கி நிற்பதை அதன் கார்யங்கொண்டு அறியலாம் என்கிருன். (லோப₄:) தனது செல்வத்தைப் பிறர்க்கீயாதிருக்கும் இயல்வாகிற கருமித்தனம். பொதுவாக 'லோப₄'ஶப்₃த₃ம் ஆசையைக் குறிக்குமாயினும், மேலே 'ஸ்ப்ருஹா' என்று விஷயங்களில் ஆசையைக் குறிப்பிட்டிருக்கிறபடியால், இங்கு கருமித்தனம் 'லோப₄'பத₃த்திற்குப் பொருளாகக் கொள்ளப்பட்டது. கருமியை 'லோபி₄' என்றும், அவனது தன்மையை 'லோப₄ம்' என்றும் உலகில் பிரஸித்₃த₄மாக வழங்குவது உண்டன்றே.

अप्रकाशोऽप्रवृत्तिश्च प्रमादो मोह एव च ।
तमस्येतानि जायन्ते विवृद्धे कुरुनन्दन ॥ १३

13. அப்ரகாஶோऽப்ரவ்ருத்திஶ்ச ப்ரமாதோ$_3$ மோஹ ஏவ ச ।
தமஸ்யேதாநி ஜாயந்தே விவ்ருத்$_3$தே$_4$ குருநந்த$_3$ந ॥

குருநந்த$_3$ந! — குருகுலத்தோன்றலே! அப்ரகாஶ:— ஜ்ஞாநமுண்டாகாமையும், அப்ரவ்ருத்தி: ச — சோம்பேறித்தனமும், ப்ரமாத$_3$:—கவனமின்மையும், மோஹ: ஏவ ச — விபரீதஜ்ஞானமும், ஏதாநி—(ஆகிய) இவை, தமஸி விவ்ருத்$_3$தே$_4$ — தமோகு$_3$ணம் மேலோங்கிநிற்கும்போது, ஜாயந்தே — உண்டாகின்றன.

(ப்ரவ்ருத்தி: கர்மணாம் ஆரம்ப$_4$:) 'ப்ரவ்ருத்தி:' என்றாலும், "கர்மணாம் ஆரம்ப$_4$:" என்றாலும் செயல்புரிவதையே குறிக்கும். ஆயினும் 'ஆரம்ப$_4$' ஶப்$_3$த$_3$ம் ஒரு பயனைக்குறித்துக் காரியம் தொடங்குவதிலேயே பெரும்பாலும் வழங்கப்படுகிறது. 'கர்மணாம்' என்று விஶேஷித்திருப்பதும் இதையே வலியுறுத்துகிறது. ஆகையாலே 'கர்மணாம் ஆரம்ப$_4$:' என்னும் தொடர் கண்காணும் பயனைத்தரும் 'வேளாண்மை' முதலான செயல்களையும், மறுமையில் பயன்தரும் 'யஜ்ஞம்' முதலான செயல்களையும் குறிப்பதாகக் கொள்வதே பொருத்தமானது. அதனால் 'ப்ரவ்ருத்தி:' என்னும் மற்ற பத$_3$ம் ஒரு பலனைக்குறித்துச் செய்யப்படாமல், புல்லை நறுக்குவது, அவயவங்களை ஆட்டுவது முதலான தன்னையறியாமல் செய்யும் செயல்களைக் குறிப்பதாகக் கொள்வதே பொருத்தம். (அஶம:) ஶாந்தியின்மை என்று பொருள்படும். இப்பத$_3$மும் செயல்புரிகையையே குறிக்குமாயினும், முன் இரண்டு பத$_3$ங்களோடு புநருக்தி ஏற்படாமைக்காக இந்த்$_3$ரியங்கள் அடங்கி நிற்காமல் தத்தம் விஷயங்களில் ஈடுபடுகையைக் குறிப்பதாகக்கொள்ள வேண்டும். ஶமத$_3$மஶப்$_3$த$_3$ங்கள் இந்த்$_3$ரியங்கள் அடங்கி நிற்கையைப் பெருவாரியாகக் குறிக்கின்றனவன்றோ. (ஸ்ப்ருஹா) இந்த இந்த்$_3$ரியங்களின் ஈடுபாட்டுக்குக் காரணமான விஷயங்களில் விருப்பம். (ஏதாநி ரஜஸி விவ்ருத்$_3$தே$_4$ ஜாயந்தே) இந்தத் தன்மைகள் ரஜோகு$_3$ணம் மேலோங்கிநிற்கும்போது விளைகின்றன. முன் ஶ்லோகத்திற்போலே இங்கும் இந்தக்கார்யங்கள் விளைவது கொண்டு ரஜோகு$_3$ணம் ஶரீரத்தில் மேலோங்கியிருக்கிறது என்று அறியலாம் என்று கருத்து. (ப$_4$ரதர்ஷப$_4$) ஸாத்விகர்கள் நிறைந்த ப$_4$ரதகுலத்தில் உதித்த நீ இப்படி ரஜோகு$_3$ணம் மேலோங்காதபடி பார்த்துக்கொள்ள வேணும் என்று கருத்து. 12

भा ॥ अप्रकाशः— ज्ञानानुदयः, अप्रवृत्तिश्च —स्तब्धता, प्रमादः- अकार्यप्रवृत्तिफलमनवधानम्, मोहो-विपरीतज्ञानम् । एतानि तमसि प्रवृद्धे जायन्ते—एतैस्तमः प्रवृद्धमिति विद्यात् ॥ १३ ॥

---

13. மன்னுமுணர் வில்லாமை யொன்றின் முயல்வறுதன்
மன்னுமுயி ரோர்ப்பின்மை மாமோக – மென்னுமிவை
மீதி லுயர்தமத்தின் மேவுமவை யாகநீ
கோதில் குருமுதல்வா கொள்.

கோது இல் குருமுதல்வா! — குற்றமற்ற குருகுலத் தோன்றலே!, மன்னும் உணர்வு இல்லாமை—நிலைநின்ற அறிவுண்டாகாமை, ஒன்றில் முயல்வு அறுதல்—எதிலும் முயற்சியில்லாமை, மன்னும் உயிர் ஓர்ப்பின்மை-நிலைநின்ற ஆத்மாவின் விஷயத்தில் கவனமின்மை, மாமோகம்— விபரீத ஜ்ஞானம், என்னும் இவை—என்கிற இத்தன்மைகள், மீதில் உயர் தமத்தின்—தமோகு₃ணம் மேலோங்கிநிற்கும்போது, மேவுமவை ஆக-உண்டாகும் காரியங்கள் என்று, நீ கொள்-நீ அறிவாயாக.

---

13. இந்த ஶ்லோகத்தில் தமோகு₃ணம் ஶரீரத்தில் ஓங்கி நிற்பதை அதன் காரியம்கொண்டு அறியலாம் என்கிருன். (அப்ரகாஶ:) அறிவு உண்டாகாமை. (ப்ரமாத₃:) கவனமின்மை. இந்த ஶ்லோகத்தில் படிக்கப்படும் ப்ரமாத₃ஶப்₃த₃ம் தமோ குணத்தைப்பற்றிய எட்டாவது ஶ்லோகத்திலும் படிக்கப்படுகை யாலே அங்குபோலே இங்கும் 'செய்யவேண்டிய கடமைகளைக் காட்டிலும் வேறுபட்ட செய்யத்தகாதவற்றில் ஈடுபடுவதற்கு உறுப்பான கவனமின்மை' என்றே பொருள்படுகிறது. இது ஒரு வகையான அறிவின்மையாகும். இது தவிர்ந்த மற்ற ஆத்ம விஷயமான ஜ்ஞானம் உண்டாகாமலிருக்கை அப்ரகாஶ ஶப்₃த₃த்தால் சொல்லப்படுவதாக கோ₃பப₃லீவர்த்த₃ந்யாயத் தாலே தேறும். எட்டாவது ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட தூக்கம் முதலானவற்ருல் வருவது இது என்று கண்டுகொள்வது. (அப்ரவ்ருத்தி: ச) எட்டாவது ஶ்லோகத்தில் 'ஆலஸ்யம்' என்று

यदा सत्त्वे प्रवृद्धे तु प्रलयं याति देहभृत् ।
तदोत्तमविदां लोकानमलान् प्रतिपद्यते ॥ १४

14. யத$_3$ா ஸத்வேப்ரவ்ருத்$_3$தே$_4$ து ப்ரளயம் யாதி தே$_3$ஹ-ப்$_4$ருத் ।
தத$_3$ோத்தமவித$_3$ாம் லோகாந் அமலாந் ப்ரதிபத்$_3$யதே ॥

தே$_3$ஹப்$_4$ருத்—ஶரீரத்திலிருக்கும் ஜீவன், யத$_3$ா ஸத்வே ப்ரவ்ருத்$_3$தே$_4$ து—ஸத்வகு$_3$ணம் மேலோங்கியிருக்கும் ஸமயத்தில், ப்ரளயம் யாதி (சேத்)—மரணத்தை அடைந்தானாகில், தத$_3$ா—அந்த ஸந்த$_3$ர்ப்ப$_4$த்தில், அமலாந்— அறிவின்மையாகிற குற்றம் அற்றவையான, உத்தமவித$_3$ாம் லோகாந்— (ஆத்மாவைப்பற்றிய உண்மையறிவாகிற) மேலான அறிவைப் பெற்றவர்களுடைய ஸமூஹங்களை, ப்ரதிபத்$_3$யதே—அடைகிறான்.

14. சத்துவமிக் கோக்கந் தரும்பொழுதிற் றான்மரணத்
தொத்துடம்பு விட்ட வுயிருடையோன்—றத்துவத்தின்
மேலறிவு சேர்ந்தார் மிகவமல மாங்குலத்துச்
சாலவவன் றன்பிறக்குஞ் சார்ந்து.

சத்துவம் மிக்கு ஓக்கம் தரும் பொழுதில் தான் — ஸத்வகு$_3$ணம் மேலோங்கியிருக்கும் ஸமயத்தில், மரணத்து ஒத்து உடம்பு விட்ட உயிருடையோன் அவன்தான்—மரணத்தை

சொல்லப்பட்ட சோம்பேறித்தனமே இங்கு 'அப்ரவ்ருத்தி:' [(எச் செயலிலும் ஈடுபடாமை] என்று சொல்லப்படுகிறது என்பது தெளிவு. (மோஹ ஏவ ச) எட்டாவது ஶ்லோகத்திலும் அதன் பா$_4$ஷ்யத்திலும்போலே மோஹஶப்$_3$த$_3$ம் இங்கும் விபரீத ஜ்ஞானத்தைக் குறிக்கிறது. (ஏதாநி தமஸி விவ்ருத்$_3$தே$_4$ ஜாயந்தே) தமோகு$_3$ணம் ஶரீரத்தில் மேலோங்கி நிற்கும்போது இத்தன்மைகள் ஜீவனுக்கு உண்டாகின்றன; இத்தன்மைகள் உண்டாகும்போது தமோகு$_3$ணம் மேலோங்கிநிற்கிறது என்று அறியலாமென்று கருத்து. (குருநந்த$_3$ந) குருகுலத்தோன்றலான நீ உன் குடிப்பெருமைக்கேற்ப இந்தத் தமோ கு$_3$ணத்தை அடியோடு விலக்கியிருக்கவேண்டும் என்று பா$_4$வம்.

भा ॥ यदा सत्त्वं प्रवृद्धम्, तदा सत्त्वे प्रवृद्धे देहभृत् प्रलयम्-मरणं याति चेत्, उत्तमविदाम्— उत्तमतत्त्वविदाम्, आत्मयाथात्म्य-

---

அடைந்து உடம்பை விட்ட ஜீவனானவன், தத்துவத்தின் மேல் அறிவு சேர்ந்தார்—ஆத்மதத்துவத்தைப்பற்றிய உண்மையறிவாகிற மேலான அறிவைப் பெற்றவர்களுடைய, மிக அமலமாம் குலத்து சார்ந்து—அறிவின்மையாகிற குற்றம் சிறிதும் அற்ற குலங்களை அடைந்து, சால பிறக்கும்—நல்ல பிறவியை அடைவான்.

---

14. இந்த ஶ்லோகத்திலும் அடுத்த ஶ்லோகத்திலும் முக்கு$_3$ணங்களில் ஒவ்வொன்று மேலோங்கியிருக்கும்போது மரணமடைந்தால் உண்டாகும் ப$_2$லன் சொல்லப்படுகிறது, இந்த ஶ்லோகத்தில் சொல்லப்படும் ஸத்வகு$_3$ணமிகுதியைக் கைக்கொள்வதற்காகவும், அடுத்த ஶ்லோகத்தில் சொல்லப்படும் ரஜஸ்தமோகு$_3$ணங்களின் மிகுதியைத் தவிர்த்துக்கொள்வதற்காகவும் இந்த ஶ்லோகங்கள் அமைகின்றன. (யதா$_3$ ஸத்வே ப்ர-வ்ருத்$_3$தே$_4$ து) ஸத்வகு$_3$ணம் மேலோங்கியிருக்கும் ஸமயத்தில் ஸத்வகு$_3$ணமிகுதி கைக்கொள்ளத்தக்கது என்றும், அடுத்த ஶ்லோகத்தில் சொல்லப்படும் ரஜஸ்தமோ கு$_3$ணங்களின் மிகுதி தவிர்க்கத்தக்கது என்றும் காட்டுவதற்காக, அடுத்த ஶ்லோகத்தில் இல்லாத 'து' ஶப்$_3$த$_3$ம் இங்கு படிக்கப்படுகிறது. (தே$_3$ஹப்$_4$ருத் ப்ரளயம் யாதி) ஶரீரத்திலுள்ள ஜீவன் மரணத்தை அடைந்தானாகில்; 'சேத்' (ஆகில்) என்னும் பத$_3$த்தை வருவித்துக்கொள்ள வேண்டும். 'தே$_3$ஹப்$_4$ருத்' [தே$_3$ஹத்தையுடைய ஜீவன்] என்று விஶேஷித்திருக்கையால், இங்கு சொல்லப்படும் 'ப்ரளயம்' லோக ப்ரளயமல்ல என்றும், தே$_3$ஹப்ரளயமாகிற மரணமே என்றும் விளங்குகிறது. (தத$_3$ா) அந்த ஸந்த$_3$ர்ப்ப$_4$த்தில். அந்த ஸமயத்திலேயே மறு பிறவி எடுக்க முடியாதாகையாலே, 'அந்த ஸந்த$_3$ர்ப$_4$த்தில்' என்று பொருள்கொள்ளவேண்டும். (உத்தம வித$_3$ாம் அமலாந் லோகாந் ப்ரதிபத்$_3$யதே) ஆத்மதத்துவத்தைப் பற்றிய மேலான உண்மை அறிவையுடையவர்களுடைய, அறிவின்மையாகிற குற்றம் இல்லாத ஸமூஹங்களை அடைகிறான். ஆத்மயாத$_2$ாத்ம்ய ஜ்ஞானத்தைப்பற்றிய ப்ரகரணமாகையாலே, 'உத்

विदां, लोकान् — समूहान्. अमलान् - मलरहितान्, अज्ञानरहितान् प्रतिपद्यते - प्राप्नोति; सत्त्वे प्रवृद्धे तु मृतः आत्मविदां कुलेषु जनित्वा आत्मयाथात्म्यज्ञानसाधनेषु पुण्यकर्मस्वधिकरोतीत्युक्तं भवति ॥ १४ ॥

रजसि प्रलयं गत्वा कर्मसङ्गिषु जायते ।

*15. ரஜஸி ப்ரளயம் க3த்வா கர்மஸங்கி3ஷு ஜாயதே l

ரஜஸி (ப்ரவ்ருத்3தே4)—ரஜோகு3ணம் மேலோங்கியிருக்கையில், ப்ரளயம் க3த்வா—(ஜீவன்) மரணமடைந்தாளுகில், கர்மஸங்கி3ஷு—ப2லனின்பொருட்டுக்கர்மங்களை அனுஷ்டி2ப்பவர்களுடைய குலங்களில், ஜாயதே—பிறவியெடுக்கிருன்.

தமவித3ாம்' என்றது "ஆத்ம தத்துவத்தைப் பற்றிய மேலான உண்மையறிவை யுடையவர்களுடைய" என்று பொருள்படுகிறது. 'லோகாந்' என்றது தே3வலோகத்தையோ பரப்3ரஹ்மலோகத்தையோ கூறுவதாகக்கொள்வது இந்த ப்ரகரணத்திற்கும், அடுத்த ஶ்லோகத்தில் 'கர்மஸங்கி3ஷு ஜாயதே' 'மூட4யோநிஷு ஜாயதே' என்று ஒவ்வொரு ஸமூஹத்தில் பிறப்பதாகச் சொல்லியிருப்பதற்கும் முரண்படுமாகையாலே, "ஆத்மஜ்ஞானிகளின் ஸமூஹங்களை" என்று பொருள்படுகிறது. ஆத்ம ஜ்ஞானிகளுக்கு அறிவின்மையே குற்றமாகையாலே, 'அமலாந்' என்றது "அறிவின்மையாகிற குற்றம் அற்ற" என்று பொருள்படுகிறது. 'ப்ரதிபத்3யதே' [அடைகிருன்] என்று இங்கு சொல்லப்பட்டபோதிலும், அடுத்த ஶ்லோகத்தில் மற்ற இருவர்க்கும் 'ஜாயதே' என்று ஒவ்வொரு ஸமூஹத்தில் பிறப்பைச் சொல்லியிருப்பதையொட்டி, இங்கும் 'ஆத்ம ஜ்ஞானிகளின் ஸமூஹங்களில் பிறவி எடுக்கிருன்' என்று பொருள்கொள்ள வேண்டும். ஆக, "ஸத்வகு3ணம் மேலோங்கியிருக்கும்போது மரணமடைந்த ஜீவன், ஆத்ம ஜ்ஞானிகளின் குலங்களில் பிறந்து ஆத்மாவைப்பற்றிய உண்மையறிவுக்கு ஸாத4னமான புண்ய கர்மங்களை, அக்குடியிற் பிறந்ததனுலேயே செய்யத்தொடங்குகிருன்" என்பது ஶ்லோகத்தின் திரண்ட பொருளாகும். 14.

*15. ஶ்லோகத்தின் முற்பாதியில் ரஜோகு3ணம் மேலோங்கியிருக்கும்போது மரணமடைந்தவன் பெறும் ப2லனைக்கூறுகிருன். (ரஜஸி) ரஜோகு3ணம் மேலோங்கியிருக்கையில். 'ப்ரவ்ருத்3தே4'

भा ॥ रजसि प्रवृद्धे मरणं प्राप्य फलार्थं कर्म कुर्वतां कुलेषु जायते; तत्र जनित्वा स्वर्गादिफलसाधनकर्मस्वधिकरोतीत्यर्थः ॥

तथा प्रलीनस्तमसि मूढयोनिषु जायते ॥ १५

15* தத2ா ப்ரலீநஸ் தமஸி மூட4யோநிஷு ஜாயதே ॥

தத2ா—அவ்வண்ணமே, தமஸி (ப்ரவ்ருத்3தே4) - தமோ குணம் மேலோங்கிநிற்கும்போது, ப்ரலீநः — மரணமடைந்தவன், மூட4யோநிஷு—அறிவில்லாத (திர்யக் ஸ்தா2வர) யோனிகளில் , ஜாயதே—பிறவியெடுக்கிருன்.

15. கன்மநயந் தோர்குலத்திற் காதலுடன் ருன்பிறக்கும்
வன்மையிர சத்துயர்வின் மாய்ந்தவவ—னன்மையிலா
மூட ரிடைப்பிறக்கு முழுதுந் தமத்துயர்வில்
பீடை யுறமரித்தான் பின்.

வன்மை இரசத்து உயர்வில் மாய்ந்த அவன் — வலிமை மிக்க ரஜோகு3ணம் மேலோங்கிநிற்கும்போது மரணமடைந்தவன், கன்மம் நயந்தோர் குலத்தில்—ப2லனைக் குறித்துக் கர்மங்களை அனுஷ்டி2ப்பதில் பற்றுள்ளவர்களுடைய குலத்தில், காதலுடன் தான் — விருப்பத்துடனே, பிறக்கும்—பிறவியெடுப்பான், முழுதும் தமத்து உயர்வில்—தமோகு3ணம் மிகவும் ஓங்கி நிற்கும்போது, மரித்தான்—இறந்தவன், பின் பீடை உற—மேன்மேலும் பல துன்பங்களை

என்னும் பதத்தை முன் ஸ்லோகத்திலிருந்து வருவித்துக்கொள்ள வேண்டும். (ப்ரளயம் க3த்வா) சென்ற ஸ்லோகத்திற்போலே இங்கும் 'தே3ஹப்ரளயமாகிற மரணத்தை அடைந்தாலுகில்' என்று பொருள்கொள்ளவேண்டும். (கர்மஸங்கி3ஷு ஜாயதே) ப2லனைக்குறித்துக் கர்மங்களைச் செய்பவர்களுடைய குலங்களில் பிறவி எடுக்கிருன். பன்னிரண்டாவது ஸ்லோகத்தில் 'கர்மணும் ஆரம்ப4:' என்று ரஜோகு3ண வ்ருத்3தி4யின் கார்யம் சொல்லப் பட்டிருக்கிறதாகையாலே, இங்கு 'கர்மஸங்கி3ஷு' என்பதற்கு இப்படியே பொருள் கொள்ள வேண்டும். ஆக, "ஸ்வர்க்க3ம் முதலான ப2லன்களைப் பெறுவதற்காக ஜ்யோதிஷ்டோமம் முதலான கர்மங்களை அனுஷ்டி2ப்பவர்களுடைய குலங்களில் பிறவியெடுத்து, அக்குடிப்பிறப்பினுலேயே அத்தகைய கர்மங்களை அனுஷ்டிக்கத் தொடங்குகிருன் இந்த ராஜஸன்" என்பது முற்பாதியின் திரண்டபொருள்,

*15.

भा ॥ तथा तमसि प्रवृद्धे मृतो मूढयोनिषु-श्वसूकरादियोनिषु जायते; सकलपुरुषार्थारम्भानर्हो जायत इत्यर्थः ॥ १५ ॥

कर्मणस्सुकृतस्याहुस्सात्त्विकं निर्मलं फलम् ।
रजसस्तु फलं दुःखमज्ञानं तमसः फलम् ॥ १६

16. கர்மண; ஸுக்ருதஸ்யாஹு: ஸாத்த்விகம் நிர்மலம் ப₂லம்।
ரஜஸஸ்து ப₂லம் து₃:க்க₂ம் அஜ்ஞாநம் தமஸ: ப₂லம் ॥

ஸுக்ருதஸ்ய கர்மண: — (ஜ்ஞானிகளின் குலத்தில் பிறந்தவன் செய்த) ப₂லனில் பற்றற்ற கர்மங்களின், ஸாத்விகம் ப₂லம் — ஸத்வ கு₃ணத்தினுல் உண்டாகும் ப₂லன், நிர்மலம் ஆஹு:— துன்பம் சிறிதுமற்றது என்று (ஸத்வ கு₃ணத்தின் பெருமையறிந்தவர்கள்) கூறுகிருர்கள். ரஜஸ: ப₂லம் து—(மரண காலத்தில் மேலோங்கிநிற்கும்) ரஜோகு₃ணத்தின் ப₂லமோவெனில், து₃:க்க₂ம் (ஆஹு:)—

அனுப₄விக்கும்படியாக, நன்மை இலா மூடரிடை பிறக்கும்—நன்முயற்சி செய்யமுடியாத அறிவற்ற (திர்யக் ஸ்த₂ாவரப்) பிறவிகளில் பிறப்பான்.

15*. ஶ்லோகத்தின் பிற்பாதியில், தமோகு₃ணம் மேலோங்கியிருக்கும்போது மரணமடைந்தவன் பெறும் ப₂லனைக்கூறுகிருன். (தத₂ா) ஸத்வகு₃ணத்துக்கும் ரஜோகு₃ணத்துக்கும் சொன்ன முறையில். (தமஸி) தமோகு₃ணம் மேலோங்கிநிற்கும்போது. 'ப்ரவ்ருத்₃தே₄' என்னும் பத₃த்தை முன் ஶ்லோகத்திலிருந்து இங்கும் வருவித்துக்கொள்ளவேண்டும். (ப்ரலீந:) முன்போலவே 'மரணமடைந்தவன்' என்று பொருள் கொள்ள வேண்டும். (மூட₄யோநிஷு ஜாயதே) அறிவில் மிகக் குறைந்த நாய், பன்றி முதலான விலங்குப் பிறவிகளிலும், மரம் செடி கொடிகள் முதலான தாவரப்பிறவிகளிலும் பிறவி எடுக்கிருன். ஆக, "ஒன்றரை ஶ்லோகங்களாலே சொல்லப்பட்ட ஸாத்விகராஜஸர்களைப்போலே எந்தப்புருஷார்த்தத்தையும் பெறுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள முடியாத அறிவில் மிகக் குறைந்த பிறவிகளில் பிறக்கிருன் தா₃மஸன்" என்பது ஶ்லோகத்தின் பிற்பாதியின் திரண்டபொருள். 15.

भा॥ एवं सत्त्वप्रवृद्धौ मरणमुपगम्यात्मविदां कुले जायते तेनानुष्ठितस्य सुकृतस्य—फलाभिसन्धिरहितस्य मदाराधनरूपस्य कर्मणः फलं पुनरपि ततोऽधिकसत्त्वजनितं निर्मलं-दु:खगन्धरहितं भवतीत्याहुः

ஸாம்ஸாரிகத்துன்பத்தொடரே என்று (ரஜோகுணத்தின் தன்மை அறிந்தவர்கள்) கூறுகிறார்கள். தமஸ: பலம் (து)—(மரண காலத்தில் மேலோங்கிநிற்கும்) தமோகுணத்தின் பலமோவெனில், அஜ்ஞாநம் (ஆஹு:) — மேன்மேலே அறிவின்மையை அடைவதே என்று (தமோகுணத்தின் தன்மை அறிந்தவர்கள்) கூறுகிறார்கள்.

16. நீதி கருமத்து நின்மலமா நற்பயனைக்
கோதின் முதற்குணத்தே கூறுவரான்—மீதியலுந்
துக்க மிடைக்குணத்திற் சூழ்பயனும் பிற்குணத்திற்
றக்க வறிவின்மை தான்.

கோது இல் முதல் குணத்தே — குற்றமற்ற ஸத்வ குணத்தினாலுண்டாகும், நீதி கருமத்து நல் பயனை-பற்றற்ற புண்ய கர்மங்களுடைய பயனை, நின்மலமா கூறுவரால்-துன்பம்சிறிதும் அற்றிருக்கை என்று (ஸத்வகுணத்தின் பெருமை அறிந்தவர்கள்) கூறுகிறார்கள்; இடைக்குணத்தில்—நடுக்குணமான ரஜோகுணத்தினால், சூழ்பயன் — உண்டாகும் பயன், மீது இயலும் துக்கம் ஆ—ஸாம்ஸாரிகத் துன்பத்தொடரே என்றும், பின் குணத்தில்—கடைசியான தமோகுணத்தினால், சூழ்பயன்-உண்டாகும் பயன், தக்க அறிவு இன்மை தான்ஆ — நல்ல அறிவு இல்லாமற்போவதேயாம் என்றும் (அந்தந்த குணங்களின் தன்மையறிந்தவர்கள் கூறுகிறார்கள்.)

16. முன் இரண்டு ஶ்லோகங்களிலும் "முக்குணங்களிலும் ஒவ்வொன்று மேலோங்கியிருக்கும்போது, அதன் பயனாக ஒவ்வொரு வகையான பிறவியை அடைகிறான் ஜீவன்" என்று சொல்லப்பட்டது. அந்த குணங்களின் பயனாக மேன்மேலும் அத்தகைய பிறவிகளே உண்டாகி, மேன்மேலே அப்பிறவிகளின் பயன்களை வளரச்செய்கின்றன என்று கூறுகிறான் இந்த ஶ்லோகத்தில்.

सत्त्वगुण।रेण।मविदः । अन्त्यकालप्रवृद्धस्य रजसस्तु फलं फलसाधन कर्मसङ्गि कुलजन्म-फलाभिसन्धिपूर्वककर्मारम्भ — तत्फलानुभवपुनर्जन्म - रजोवृद्धि-फलाभिसन्धिपूर्वककर्मारम्भपरम्परारूपं सांसारिकदुःखप्रायमेवे-

---

(ஸுக்ருதஸ்ய கர்மண; ஸாத்விகம் நிர்மலம் ப$_2$லம் ஆஹு:) பதினாலாவது ஶ்லோகத்தில் 'ஸத்வகு$_3$ணம் மேலோங்கியிருக்கும் போது மரணமடைந்தவன் ஆத்ம ஜ்ஞானிகளின் குலத்தில் பிறக்கிறான்' என்றும், 'அக்குலத்துக்குரிய புண்ய கர்மங்களைச் செய்கிறான்' என்றும் உணர்த்தப்பட்டது. அவனால் அனுஷ்டி$_2$க்கப் பெற்றதாய், ப$_2$லனில் பற்று இல்லாததாய், பரமபுருஷனை எனக்கு ஆராத$_4$னரூபமாயிருக்கும் புண்ய கர்மங்களின் ப$_2$லம்— மேன்மேலும் மிகுதியான ஸத்வகு$_3$ணம் வளரப்பெற்று, சிறிதும் து$_3$;க்க$_2$ம் அற்றவனாகையே என்று ஸத்வ கு$_3$ணத்தின் பெருமை அறிந்தவர்கள் கூறுகிறார்கள். பதினாலாவது ஶ்லோகத்தில் 'ஜ்ஞானிகளின் குலத்தில் பிறக்கிறான் ஸாத்விகன்' என்று சொல்லப்பட்டது. அதிலிருந்து அவன் ப$_2$லனில் பற்றற்ற கர்மங்களை அனுஷ்டி$_2$க்கிறான் என்று தாத்பர்யார்த்த$_2$மாகத் தேறுகிறது. அவ்விஷயம் இங்கு 'ஸுக்ருதஸ்ய கர்மண:' என்று அனுவதி$_3$க்கப் படுகிறது; 'ஸாத்விகம்' என்னும் பத$_3$த்தாலே இந்தப் புண்ய கர்மங்களாலே ஸத்வகு$_3$ணம் வளருகிறது என்று உணர்த்தப்படுகிறது. இதன் ப$_2$லனாக இறுதியில் துன்பம் சிறிதுமற்றதான ஆத்மஸாக்ஷாத்காரம் விளைகிறது என்று 'நிர்மலம் ப$_2$லம்' என்பதாலே உணர்த்தப்படுகிறது. (ரஜஸஸ்து ப$_2$லம் து$_3$:க்க$_2$ம் ஆஹு:) மரணகாலத்தில் ரஜோகு$_3$ணம் மிகுந்திருக்கப்பெற்ற ராஜஸனுக்கு, அந்த ரஜோகு$_3$ணத்தின் ப$_2$லனாக ஸாம்ஸாரிகத் துன்பத்தொடர் விளைகிறது என்று கூறுகின்றனர். எப்படி? எனில்; முற்கூறியபடி அவன் ப$_2$லஸாத$_4$னகர்மங்களில் பற்றுடையவர்களது குலத்தில் பிறந்து, ப$_2$லனில் பற்றுடையகர்மங்களை அனுஷ்டி$_2$த்து அதன் ப$_2$லனை அனுப$_4$வித்தபின் அத்தகைய பிறவிகளிலேயே மறுபடியும் பிறந்து, ரஜோகு$_3$ணம் மேன்மேலே வளரப் பெற்று, மேன்மேலும் அத்தகைய கர்மங்களையே செய்து, அவற்றின் பயனாக ஸாம்ஸாரிகத் துன்பத்தொடரையே அடைகிறான் என்று ரஜோகு$_3$ணத்தின் தன்மையை அறிந்தவர்கள் கூறுகிறார்கள்.

त्याहुस्तद्गुणयाथात्म्यविदः । अज्ञानं तमसः फलम्-एवमन्त्यकाल-प्रवृद्धस्य तमसः फलमज्ञानपरम्परारूपम् ॥ १६ ॥

भा ॥ तदधिकसत्त्वादिजनितं निर्मलादिफलं किमित्यत्राह —
सत्त्वात्संजायते ज्ञानं रजसो लोभ एव च ।
प्रमादमोहौ तमसो भवतोऽज्ञानमेव च ॥ १७

17. ஸத்வாத் ஸஞ்ஜாயதே ஜ்ஞாநம் ரஜஸோ லோப₄ ஏவ ச ।
ப்ரமாத₃மோஹௌ தமஸ: ப₄வதோऽஜ்ஞாநமேவ ச ॥

ஸத்வாத்— (மிகுதியான) ஸத்வ கு₃ணத்தினுலே, ஜ்ஞாநம் - (ஆத்மஸாக்ஷாத்காரமுள்ளிட்ட) அறிவு, ஸஞ்ஜாயதே- நன்கு விளைகிறது; ரஜஸ: - (மிகுதியான) ரஜோகு₃ணத்தாலே, லோப₄: ஏவ ச—ஸ்வர்க்க₃ம் முதலான ப₂லன்களில் ஆசையே உண்டாகிறது; தமஸ:—(மிகுதியான) தமோகு₃ணத்தினுல், ப்ரமாத₃மோஹௌ — கவனமின்மையால் உண்டாகும் தீய கர்மங்களில் முயற்சியும், (அதன் விளைவாக) விபரீதஜ்ஞானமும், ப₄வத:—உண்டாகின்றன; அஜ்ஞாநம் ஏவ ச — (அதுகாரணமாக) ஜ்ஞானமின்மையும் விளைகிறது.

17. முற்குணத்தி லாகு முழுதுணர்வு தானிடையி
லற்குணத்து லோப மதுவுண்டாம்—பிற்குணத்தி
லோராமை மோக முணராமை யுண்டாகுஞ்
சீரார் புகழ்விசயா சேர்ந்து.

சீரார் புகழ் விசயா—சிறப்பு மிக்க புகழை உடைய அர்ஜுனு! முன் குணத்தில்—முதல் கு₃ணமான ஸத்வ கு₃ணத்

(அஜ்ஞாநம் தமஸ: ப₂லம் ஆஹு:) அவ்வண்ணமே மரணகாலத்தில் தமோகு₃ணம் மிக்கிருக்கையாலே மூட₄யோனிகளில் பிறந்த தாமஸனும் அறிவின்மையை அடைந்து, மேன்மேலே தாழ்ந்த பிறவிகளைப்பெறுகிருன்; அதன் விளைவாக அந்தத் தாமஸனுக்கு மேன்மேலே வளரும் தமோகு₃ணத்தின் ப₂லனுக மேன்மேலே அஜ்ஞான பரம்பரைகள் விளைகின்றன என்று தமோகு₃ணத்தின் தன்மையை அறிந்தவர்கள் கூறுகிருர்கள். 16.

भा। एवं परम्परया जातादधिकसत्त्वादात्मयाथात्म्यापरोक्ष्यरूपं ज्ञानं जायते । तथा प्रवृद्धाद्रजसस्स्वर्गादिफललोभो जायते । प्रवृद्धाच्च तमसः प्रमादः — अनवधाननिमित्तासत्कर्मणि प्रवृत्तिः ; ततश्च मोहः- विपरीतज्ञानम्; ततश्चाधिकतरं तमः, ततश्चाज्ஞानम्- ज्ञानाभावः ॥ १७ ॥

திஞல், முழுது உணர்வு தான் ஆகும்—ஆத்மாவை நேரே காண்பது வரையிலான அறிவு உண்டாகும்; இடையில் அல் குணத்து — நடுவிலுள்ள தீய ரஜோகு₃ணத்தால், லோபம் அது உண்டாம் — ஸ்வர்க்க₃ம் முதலான ப₂லன் களில் ஆசை உண்டாகும்; பின் குணத்தில் — பிற்பட்ட (தாழ்ந்த) தமோகு₃ணத்தால். ஓராமை—கவனமில்லாமை யால் விளையும் தீயகர்மங்களில் முயற்சியும், மோகம்—(அத ஞல் விளையும்) விபரீத ஜ்ஞாநமும், உணராமை—(அதஞல் விளையும்) அறிவின்மையும், சேர்ந்து உண்டாகும் — ஒன்று கூடி உண்டாகும்.

---

17. முன் ஶ்லோகத்தில் சொன்னபடி மிகுதியான ஸத்வகு₃ணம் முதலானவற்ருலே விளையும் நிர்மலப₂லம் முதலானவை யாவை என்று விளக்குகிருன் இந்த ஶ்லோகத்திலும், அடுத்த ஶ்லோகத் திலும். (ஸத்வாத் ஸஞ்ஜாயதே ஜ்ஞானம்) இவ்வண்ணமாக மேன் மேலே உண்டான மிகுதியான ஸத்வகு₃ணத்திஞலே ஆத்மாவை உள்ளபடி நேரே காண்கையாகிற ஆத்ம ஸாக்ஷாத்கார ஜ்ஞானம் விளைகிறது. இது ஸத்வகு₃ணமிகுதியாலே இம்மையில் இறுதியாக உண்டாகும் நிர்மலப₂லம் என்று கருத்து; மறுமை யில் உண்டாகும் மோக்ஷமாகிற நிர்மலப₂லம் அடுத்த ஶ்லோ கத்தில் கூறப்படுகிறது. (ரஜஸோ லோப₄ ஏவ ச) இவ்வண்ணமே மேன்மேலே உண்டான மிகுதியான ரஜோகு₃ணத்தால் ஸ்வர்க்க₃ம் முதலான ப₂லன்களில் எளிதில் மாற்ற முடியாத பேராசை உண் டாகிறது. இதன் ப₂லஞக ஸாம்ஸாரிகத் துன்பத்தொடர் உண் டாவதற்குக் காரணம் அடுத்த ஶ்லோகத்தில் கூறப்படுகிறது. (தமஸ: ப்ரமாத₃மோஹௌ ப₄வத:) இவ்வண்ணமே மேன்மேலே உண்டான மிகுதியான தமோகு₃ணத்திஞல், கவனமின்மையால் உண்டாகும் தீய கர்மங்களில் முயற்சியும், அதன் விளைவாக விபரீத

ऊर्ध्वं गच्छन्ति सत्त्वस्था मध्ये तिष्ठन्ति राजसाः ।
जघन्यगुणवृत्तिस्था अधो गच्छन्ति तामसाः ॥ १८

18. ஊர்த்₃வம் க₃ச்ச₂ந்தி ஸத்வஸ்தா₂: மத்₄யே திஷ்ட₂ந்தி ராஜஸா: ।
ஜக₄ந்யகு₃ணவ்ருத்திஸ்தா₂: அதோ₄ க₃ச்ச₂ந்தி தாமஸா:॥

ஸத்வஸ்தா₂: — ஸத்வகு₃ணமிகுதியை உடையவர்கள், ஊர்த்₄வம் க₃ச்ச₂ந்தி — (காலக்ரமத்தில்) மோக்ஷமாகிற உயர் நிலைக்குச் செல்கின்றனர்; ராஜஸா: - ரஜோகு₃ண மிகுதியை உடையவர்கள், மத்₄யே திஷ்ட₂ந்தி - (பெரும் பாலும் துன்பத்தையே தரும்) இடைநிலைப்பிறவிகளிலேயே உழல்கிறார்கள்; தாமஸா:— தமோகு₃ணமிகுதியை உடைய வர்களோவெனில், ஜக₄ந்ய கு₃ணவ்ருத்திஸ்தா₂: — மேன் மேலே தாழ்ந்த தமோகு₃ணச் செயல்களில் ஈடுபட்டவர் களாய், அதோ₄ க₃ச்ச₂ந்தி — (மேன்மேலே அறிவின்மை மிகுந்து) கடைநிலைப் பிறவிகளை அடைகிறார்கள்,

18, மேலடைவர் முற்குணத்தோர் மேவு நடுக்குணத்தோர்
சாலநடு வாமுலகிற் றுனிற்பர்—ஞாலத்துப்
பின்றுங் குணத்தியல்வோர் பீடழிவர் கீழ்மையினை
யெந்நாளுஞ் சேர விழிந்து.

முற்குணத்தோர் — முதலாவதான ஸத்வகு₃ணத்தின் மிகுதியையுடையவர்கள், மேல் அடைவர் —காலக்ரமத்தில் (மோக்ஷமாகிற) உயர்நிலைக்குச் செல்கின்றனர்; நடு மேவு

ஜ்ஞானமும் உண்டாகின்றன, பதின்மூன்றுவது ஶ்லோகத்தில் ப்ரமாத₃ மோஹஶப்₃த₃ங்களின் பொருள் இவ்வண்ணமே நிர்ணயிக் கப்பட்டதன்றோ. (அஜ்ஞாநமேவ ச) 'ப₄வதி' என்று சேர்த்துக் கொள்ள வேண்டும். விபரீத ஜ்ஞானத்தோடு நில்லாமல், அதன் விளைவாக மேன்மேலே தமோகு₃ணம் வளரப்பெற்று அது காரண மாக அறிவின்மையும் மேன்மேலே வளர்கிறது. இவ் வஜ்ஞானம் மேன்மேற் பிறவிகளில் எந்த அளவிற்கு வளர்கிறது என்பது அடுத்த ஶ்லோகத்தில் கூறப்படுகிறது. 17.

भा ॥ एवमुक्तेन प्रकारेण सत्त्वस्था ऊर्ध्वं गच्छन्ति — क्रमेण संसारबन्धान्मोक्षं गच्छन्ति । रजसस्स्वर्गादिफललोभकरत्वाद्राजसाः फल साधनभूतं कर्मानुष्ठाय तत्फलमनुभूय पुनरपि जनित्वा तदेव कर्मानु

குணத்தோர் — நடுவிலுள்ள ரஜோகு₁ணத்தின் மிகுதியை உடையவர்கள், நடுவாம் உலகில் தான் சால நிற்பர் — (பெரும்பாலும் துன்பத்தைத் தரும்) இடைநிலைப்பிறவிகளிலேயே மிக உழல்கிருர்கள்; பின் ஆம் குணத்து இயல்வோர்—கடையான தமோகு₃ணத்தின் மிகுதியை உடையவர்கள், கீழ்மையினை எந் நாளும் சேர இழிந்து—மேன்மேலே தாழ்ந்த தமோகு₃ணச் செயல்களிலேயே எப்போதும் ஈடுபட்டவர்களாய், ஞாலத்து பீடு அழிவர்—இவ்வுலகில் (மேன்மேலே) அறிவின்மை மிகுந்திருக்கும் கடைநிலைப்பிறவிகளை அடைகிருர்கள்,

---

18. பதினைருவது ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட நிர்மலப₂லம், து₃:க்க₂ப₂லம், அஜ்ஞாநப₂லம் என்னும் மூவகைப் ப₂லன்களையும் இந்த ஶ்லோகத்தில் மேலும் விளக்குகிருன். (ஊர்த்₄வம் க₃ச்ச₂ந்தி ஸத்வஸ்த₂ா:) ஸத்வகு₃ண மிகுதியை உடையவர்கள் சென்ற ஶ்லோகத்தில் சொல்லப்பட்டபடி ஆத்ம ஸாக்ஷாத்காரத்தைப் பெற்று, காலக்ரமத்தில் ப்ராரப்₃த₄கர்மம் அழியும்போது உயர்நிலையாகிற மோக்ஷத்தைப் பெறுகிருர்கள். நிலையான ஆத்ம ஸாக்ஷாத்காரமே மோக்ஷமாகையாலே இது "ஸத்வாத் ஸஞ்ஜாயதே ஜ்ஞாநம்" என்று சென்ற ஶ்லோகத்தில் சொன்னதற்கு விவரணமாகவும் ஆகிறது. (மத்₄யே திஷ்ட₂ந்தி ராஜஸா:) முன் ஶ்லோகத்தில் சொல்லப்பட்டபடி ரஜோகு₃ணம் ஸ்வர்க்க₃ம் முதலானவற்றில் பேராசையை விளைக்கையால், ரஜோகு₃ணம் மிகுந்தவர்கள் ஸ்வர்க்க₃ம் முதலான இடைநிலைப் ப₂லன்களுக்கு ஸாத₄னமான ஜ்யோதிஷ்டோமம் முதலான கர்மங்களை அநுஷ்டி₂த்து, அந்தப் ப₂லன்களை அநுப₄வித்து, மறுபடியும் இந்நிலவுலகில் பிறந்து அத்தகைய கர்மங்களையே அநுஷ்டி₂த்து ஸ்வர்க்க₃ம் முதலான ப₂லன்களைப்பெற்று மறுபடியும் மறுபடியும் பிறக்கையாலே பெரும்பாலும் துன்பத்தையே

तिष्ठन्तीति मध्ये तिष्ठन्ति । पुनरावृत्तिरूपतया दुःखप्रायमेव तत् । तामसास्तु जघन्यगुणवृत्तिस्था उत्तरोत्तरनिकृष्टतमोगुणवृत्तिषु स्थिता अधो गच्छन्ति — अन्त्यत्वम्, ततस्तिर्यक्त्वम्, ततः क्रिमिकीटादिजन्म, [ततः] स्थावरत्वम्. ततोऽपि गुल्मलतात्वम्, ततश्च शिलाकाष्ठलोष्टतृणादित्वं गच्छन्तीत्यर्थः ॥ १८ ॥

தரும் இடைநிலைப் பிறவிகளிலேயே உழல்கிறார்கள். "ரஜஸஸ்து ப₂லம் து₃:க்க₂ம்" என்று பதினான்கும் ஸ்லோகத்தில் சொல்லப் பட்டது இத்தால் விவரிக்கப்பட்டதாகிறது. (தாமஸா: ஜக₄ந்ய கு₃ணவ்ருத்திஸ்த₂ா:) தமோகு₃ணம் மிகுந்தவர்கள் முன் ஸ்லோகத்தில் கூறியபடி ப்ரமாத₃ மோஹங்களையும் அஜ்ஞானத் தையும் அடைகையாலே, மேன்மேலே தாழ்ந்த தமோ கு₃ணச் செயல்களான கொலை, களவு முதலானவற்றில் முக்கரணங்களா லும் ஈடுபடுகிறார்கள். (அதோ₄ க₃ச்ச₂ந்தி) அது காரணமாக மேன் மேலே அறிவின்மைமிகுந்த கடைநிலைப்பிறவிகளை அடைகிறார்கள் அதாவது:—

"வாசிகை: பக்ஷிம்ருக₃தாம் மாநஸை: அந்த்யஜாதிதாம் ।
ஶரீரஜை: கர்மதோ₃ஷை: யாதி ஸ்த₂ாவரதாம் நர: ॥"

[(தமோகு₃ணத்தால் விளையும்) ஈனச் செயல்களை மனத்தால் நினைத் தானாகில் மனிதன் பஞ்சம ஜாதியில் பிறக்கிறான். வாயினால் செய்தானாகில் பறவைகளாகவும், விலங்குகளாகவும் பிறக்கிறான்; உடலாலேயே செய்தானாகில் தாவரப் பிறவியை அடைகிறான்.] முதலான ப்ரமாணங்களிற் சொன்னபடியே தமோகு₃ணச் செயல் கள் வளரவளர முதலில் குலந்தாங்கு சாதிகள் நான்கிலும் கீழ் மிழ்ந்த பிறவிகளிலும், அதற்குப்பின் விலங்குகளாகவும், பறவை களாகவும், அதற்குப்பின் புழு பூச்சிகளாகவும், அதற்குப்பின் மரங் களாகவும், அதற்குப்பின் செடிகொடிகளாகவும், அதற்குப்பின் புல்பூண்டு, கல், கட்டை, மண்கட்டி முதலான உடல்களோடு கூடியவனாகவும் பிறக்கிறான். "அஜ்ஞாநம் தமஸ: ப₂லம்" என்று பதினாறுவது ஸ்லோகத்தில் சொன்னது இத்தால் விளக்கப்பட்டது. ஆக இந்த ஸ்லோகமீறாக, "கு₃ணப₃ந்த₄வித₄ா" என்று கீ₃தார்த்த₂ ஸங்க்₃ரஹத்தில்(18) அநுஸந்தி₄க்கப்பட்ட 'கு₃ணங்கள் ஜீவனை ஸம்ஸாரத்தில் பிணைக்கும் வகை' விளக்கப்பட்டதாயிற்று. 18.

भा ॥ आहारविशेषैः फलाभिसन्धिरहितसुकृतविशेषैश्च परम्परया प्रवर्धितसत्त्वानां गुणात्ययद्वारेण ऊर्ध्वगमनप्रकारमाह—

नान्यं गुणेभ्यः कर्तारं यदा द्रष्टाऽनुपश्यति ।
गुणेभ्यश्च परं वेत्ति मद्भावं सोऽधिगच्छति ॥ १९

19. நாந்யம் கு₃ணேப்₄ய: கர்த்தாரம் யதா₃ த்₃ரஷ்டாநுபஶ்யதி।
குணேப்₄யஶ்ச பரம் வேத்தி மத்₃பா₄வம்
ஸோ ऽதி₄க₃ச்ச₂தி ॥

த்₃ரஷ்டா—ஆத்மாவை நேரே கண்ட ஸத்வ நிஷ்டன், கு₃ணேப்₄ய: அந்யம் — ஸத்வாதி₃கு₃ணங்களைக்காட்டிலும் வேறுபட்ட தன் ஆத்மாவை, கர்த்தாரம் ந அநுபஶ்யதி— செயல்புரிபவனாகஎப்போது கருதுவதில்லையோ, கு ணேப்₄ய: பரம் ச (யதா₃) வேத்தி—(செயல்புரியும்) கு₃ணங்களைக் காட்டிலும் வேறுபட்டவனாக (செயல்புரியாதவனாக)வும் (தன் ஆத்மாவை) எப்போது கருதுகிறானோ (அப்போது), ஸ: —அவன், மத்₃பா₄வம்—எனது தன்மையை, அதி₄ க₃ச்ச₂தி—அடைகிறான்.

19. மிக்க குணமவற்றில் வேறுபட்ட கத்தாவைத்
தக்க வுணர்வுடையோன் தானுணரான் - றொக்ககுணந்
தன்னிற் பரமெனவுந் தன்னறிவான் சேருமே
யென்னிற் பரத்தன்மை யேய்ந்து.

தக்க உணர்வுடையோன் — ஆத்மாவை நேரே கண்ட ஸத்வநிஷ்டன், மிக்க கு₃ணமவற்றில் வேறுபட்ட கத்தாவை தான் உணரான்—செயல்புரியும் இயல்வுடைய முக்குணங்களைக்காட்டிலும் வேறுபட்ட தன் ஆத்மாவை செயல் புரி பவனாகக்கருதாதவனாய், தொக்க குணம்தன்னில் பரம் எனவும் – செயல்புரியும் கு₃ணங்களைக்காட்டிலு வேறுபட்ட (செயல்புரியாத) வன் என்றும், தன் அறிவான—தன் ஆத்மாவைக் கருதுகின்றவன், என்னில் பரத்தன்மை-எனது சிறந்த தன்மையை, ஏய்ந்து சேருமே —பொருந்தி அடைவான்.

भा॥ एवं सात्त्विकाहारसेवया फलाभिसन्धिरहितभगवदाराधनरूप-
कर्मानुष्ठानैश्च रजस्तमसी सर्वात्मनाऽभिभूय उत्कृष्टसत्त्वनिष्ठो यदाऽयं द्रष्टा

19. இனி, இந்த ஶ்லோகத்தில் "தேஷாம் கர்த்ருத்வம்" [கீ₃தார்த்த₂ 18] என்று அநுஸந்தி₄க்கப்பட்ட கு₃ணங்களின் கர்த்ருத்வத்தைக்கூறி, இது தொடங்கி இருபத்தாறுவது ஶ்லோக மீறுக. "தந்நிவர்த்தநம்" [கீ₃தார்த்த, 18] என்று அநுஸந்தி₄க்கப் பட்ட 'கு₃ணங்களைக்கடந்து நிற்கும் வகை' விவரிக்கப்படுகிறது. சென்ற ஶ்லோகமீறுக, ஸத்வாதி₃ கு₃ணங்கள் ஜீவனை ஸம்ஸாரத்தில் பிணைக்கும் வகையைச் சொல்லுகிறதெனில், "ஊர்த்₄வம் க₃ச்ச₂ந்தி ஸத்வஸ்த₂ா:" என்று சென்ற ஶ்லோகத்தில் "ஸத்வகு₃ணம் மிக்கவர்கள் மோக்ஷத்தை அடைகின்றனர்" என்று கூறியது எப்படிப் பொருந்தும்? என்னும் கேள்வியும், "இந்த ஶ்லோகத்திலிருந்து தொடங்கி குணங்களைக் கடந்து நிற்பவனே மோக்ஷமடைகிறான் என்று கூறுவதும், 'ஸத்வம் மிக்கவர்கள் மோக்ஷமடைகிறார்கள்' (18) என்று கூறியதும் ஒன்றோடொன்று முரண்படுகின்றனவே" என்னும் கேள்வியும் எழுகின்றன. "ஸாத்விகமான ஆஹாரத்தை உண்பதாலும், ப₂லனில் பற்றற்ற கர்மங்களை அநுஷ்டி₂ப்பதாலும் படிப்படியாக ஸத்வகு₃ணம் வளரப்பெற்றவர்கள் மேலே சொல்லப்போகும் கு₃ணங்கடந்த நிலையை அடைந்து அதனாலே மோக்ஷத்தை அடைகிறார்கள்" என்பதே இந்த ப்ரகரணத்தின் திரண்ட பொருளாகையாலே, முற்கூறிய இரண்டு கேள்விகளுக்கும் பதில் உரைக்கப்பட்டதாகிறது. "ஸத்வகு₃ணத்தின் மிகுதி குணங்கடந்த நிலையை விளைப்பதன் மூலம் மோக்ஷத்திற்குக் காரணமாகிறதேயொழிய நேரே மோக்ஷத்திற்குக் காரணமாவதில்லை; ஆகையாலே எவ்வித முரணுமில்லை" என்பது பதிலின் ஸாரம். (த்₃ரஷ்டா) ஆத்மஸாக்ஷாத்காரம் கைவந்தவன். ஸாத்விகமான ஆஹாரத்தை உட்கொள்வதாலும், ப₂லனில் பற்றில்லாமல் எம்பெருமானுக்கு ஆராத₄னமாகக் கர்மங்களை அநுஷ்டி₂ப்பதாலும் ரஜஸ்தமஸ்ஸுக்களை மறுபடி தலையெடுக்காதபடி அடக்கி, ஸத்வகு₃ணத்தை வளர்த்துக் கொண்டு ஆத்ம ஸாக்ஷாத்காரம் கைவரப்பெற்றவனே இங்கு "த்₃ரஷ்டா" எனப்படுகிறான் என்பது இந்த ப்ரகரணத்திலிருந்து தெளிவாகிறது. "யஜ்ஞஶிஷ்டாஶிந: ஸந்த:" [3-13] "போ₄க்தாரம் யஜ்ஞதபஸாம்" [5-29] "ரஜஸ்தமஶ்ச அபி₄பூ₄ய ஸத்வம் ப₄வதி" [14-10] "ஸத்வாத் ஸஞ்ஜாயதே ஜ்ஞாநம்" [14-17] என்று முன் ப்ரகரணங்களில் இவ்விஷயங்கள் அனைத்தும் சொல்லப்பட்டுள்ளனவன்றோ.

गुणेभ्योऽन्यं कर्तारं नानुपश्यति; गुणा एव स्वानुगुणप्रवृत्तिषु कर्तार इति पश्यति ; गुणेभ्यश्च परं वेत्ति—कर्तृभ्यो गुणेभ्यश्च परम्—

(கு3ணேப்4ய: அந்யம் கர்த்தாரம் யதா3 ந அநுபஶ்யதி) "தமக்குரிய செயல்களில் கு3ணங்களே செயல்புரிகின்றன; கு3ணங்களைக்காட்டிலும் வேறுபட்ட தான் செயல்புரியவில்லை" என்று எப்போது காண்கின்றானோ. இந்த ப்ரகரணத்தில் கு3ணங்களும் ஆத்மாவும் வெவ்வேறு என்று தெளிவாகக் காட்டியிருக்கையாலே "கர்த்தாவான ஆத்மா கு3ணங்களைக்காட்டிலும் வேறுபட்டவன் அல்லன்" என்று பொருள்கொள்ளாமல் "கு3ணங்களே தமக்குரிய செயல்புரிகின்றனவேயொழிய ஆத்மா அவற்றில் செயல்புரிவதல்ல" என்று பொருள்கொள்ளப்பட்டது. இங்கு கர்த்தா என்னும் பத3ம் முயற்சிக்கு இருப்பிடமானவனைக் குறிப்பதல்ல; செயலுக்கு முக்கியமான காரணமாயிருப்பதையே குறிக்கிறது. (கு3ணேப்4ய: ச பரம் வேத்தி) செயல்புரிபவையான கு3ணங்களைக்காட்டிலும் வேறுபட்டவனாய், அதாவது செயல்புரியாதவனாகவும் ஆத்மாவை எவன் அறிகிறானோ. தே3ஹத்தையே ஆத்மா என்று நினைப்பவர்களும் சில சமயம் "கு3ணங்களே செயல்புரிபவை" என்று காணக்கூடும். இங்கு இவன் அத்தகையவனல்லன் என்று காட்டுவதற்காக 'கு3ணங்களைக் காட்டிலும் பரனாக (வேறுபட்டவனாக) ஆத்மாவை அறிகிறான்' என்று கூறப்படுகிறது. ப்ரகரணத்தையொட்டி வேறுபாடு இந்தச் செயல்புரியும் விஷயத்திலேயேயாகையாலே "செயல்புரியும் கு3ணங்களைக்காட்டிலும் வேறுபட்டவனாக ஆத்மாவை அறிகிறானோ" என்று பொருள்கொள்ள வேண்டும். "ஆத்மாவுக்குக் கர்த்ருத்வம் இல்லை" என்று கூறும் ப்ரகரணமாகையாலே, 'பர' ஶப்3த3த்துக்கு 'மேலானவன்' என்று பொருள்கொண்டு "செயல்புரியும் கு3ணங்களைக்காட்டிலும் மேலான கர்த்தாவாயிருப்பவன்" என்று பொருள்கொள்வது பொருந்தாது, பரமாத்மோபாஸந ப்ரகரணமல்லாமையாலேயே, பரஶப்3த3த்திற்குப் பரமாத்மாவும் பொருளாக முடியாது. ஆகையால் 'பர' ஶப்3த3த்துக்கு 'வேறுபட்டவன்' என்றே பொருள்கொள்ள வேண்டும். அந்த வேறுபாடும் ப்ரகரணத்தையொட்டி, கர்த்ருத்வ விஷயத்திலேயே ஆகையாலே "செயல் புரியாதவனாயிருப்பவன்" என்றே பொருள்கொள்ளவேண்டும், "ஸத்வாதி3 கு3ணங்களால் விளையும் புண்யபாப கர்மங்களுக்கும் லௌகிக கர்மங்களுக்கும் ஜீவன் இயற்கையில் இருப்பிடமல்லன், அத்தகைய செயல்களைச் செய்யத் தகாதவன்" என்று கருத்து. "காமோऽகார்ஷீத் நாஹமகார்ஷம்" [காமம் செய்ததேயொழிய நான் செய்யவில்லை] முதலான இடங்

अन्यमात्मानमकर्तारं वेत्ति ; स मद्भावमधिगच्छति — मम यो भावस्त-मधिगच्छति । एतदुक्तं भवति — आत्मनस्स्वतः परिशुद्धस्वभावस्य पूर्वपूर्वकर्ममूलगुणसङ्गनिमित्तं विविधकर्मसु कर्तृत्वम् ; आत्मा स्वत-

---

களில் செய்தவன் தானேயாயிருந்தபோதிலும், காமத்தால் தூண்டப்பட்டே செய்கையாலே 'நான் செய்யவில்லை' என்று கூறுவது போன்றது இது. (ஸ: மத்3ப4ாவம் அதி4க3ச்ச2தி) அவன் எனது தன்மையை அடைகிறான். அதாவது -- "ஆத்மாவானது இயற்கையில் பரிஶுத்3த4மான தன்மையையுடையதாகையாலே அநாதி3 காலமாக அந்த ஆத்மா செய்துவந்த புண்யபாப கர்மங்களால் விளைந்த ஸத்வாதி3கு3ணங்களில் பற்றினாலேயே பலவகையான ஸாத்விக ராஜஸ தாமஸச் செயல்களில் அதற்குக் கர்த்ருத்வம் ஏற்படுகிறது. ஆத்மா இயற்கையில் அத்தகைய செயல்களைச் செய்யாதவனாய் எல்லையற்ற ஜ்ஞானமே வடிவாயிருப்பவன்" என்று ஆத்மாவை எப்போது காண்கிறானோ அப்போது எனது தன்மையை அடைகிறான் என்று கருத்து. இத்தால் "கர்த்தா ஶாஸ்த்ரார்த்த2வத்த்வாத்"[ப்3ரஹ்மஸூ 2-3-33] [ஆத்மா செயல் புரிபவன் என்றே கொள்ளவேண்டும்; விதி4நிஷேத4ஶாஸ்த்ரங்கள் பொருள் உடையதாவதற்காக] என்னும் ஸூத்ரத்தில் முயற்சிகளுக்கு இருப்பிடமாயிருக்கையையிட்டு ஆத்மாவைக் கர்த்தாவாகச் சொன்னதோடு முரண் இல்லை என்று விளங்குகிறது. மோக்ஷ நிலையிலும் கு3ண ஸம்ப3ந்த4த்தால் ஏற்படாத ப4க3வத் கைங்கர்யம் முதலானவற்றில் ஆத்மாவுக்குக் கர்த்ருத்வம் உண்டு என்பது குறிக்கொள்ளத்தக்கது. இங்கு 'மத்3ப4ாவம்' என்று ஜீவபரர்களுக்கு ஸ்வரூபைக்யம் சொல்லப்படுவதாகக்கொள்வது "மம ஸாத4ர்ம்யமாக3தா:" [14-2] [என்னோடு ஒற்றுமையையடைந்தவர்கள்] என்று முன்கூறியதோடு முரண்படும். "பரமம் ஸாம்யமுபைதி" [முண்ட3 3-1-3] [முக்தன் பரமாத்மாவோடு மேலான ஒற்றுமையை அடைகிறான்] என்றும்,

"யதோ2த3கம் ஶுத்3தே4 ஶுத்3த4மாஸிக்தம்
தாத்3ருகே3வ ப4வதி]
ஏவம் முநேர்விஜாநத ஆத்மா ப4வதி கௌ3தம "
[கட2 4-15]

[கௌ3தமரே! தூயநீரில் தூயநீரைக்கலந்தால் அதுபோலவே ஆவதுபோலே, ப்3ரஹ்மஜ்ஞானமுடைய முக்தனுடைய ஆத்மாவும் பரம்பொருளோடு கலக்கும்போது அதுபோலவே ஆகிறது] என்றும் வேத3வாக்யங்கள் முழங்கியதோடும் முரண்படும்.

स्त्वकर्ता अपरिच्छिन्नज्ञानैकाकार इत्येवमात्मानं यदा पश्यति, तदा मद्भावमधिगच्छतीति ॥ १९ ॥

இரண்டாவது ஶ்ருதிவாக்யத்தில் இரண்டு நீர்கள் கலக்கும்போது ஸ்வரூபைக்யம் உண்டாவதில்லை என்பதும், 'தாத்₃ருக்' [அத்தகையது] என்னும் பத₃ஸ்வாரஸ்யமும் குறிக்கொள்ளத்தக்கது. ப₄ாரதம் மோக்ஷத₄ர்மத்தில் ஜனகருக்கு வஸிஷ்ட₂ர் உபதே₃ஶம் செய்யும்போது,

"பரேண பரத₂ர்மீ ச ப₄வத்யேவ ஸமேத்ய வை ।
விஶுத்₃த₄த₄ர்மா ஶுத்₃தே₄ந பு₃த்₃தே₄ந ச ஸ பு₃த்₃தி₄மாந் ॥
விமுக்ததர்மா முக்தேந ஸமேத்ய ஹி தத₂ா ப₄வேத் ।
வியோக₃த₄ர்மிணா சைவ வியோகா₃த்மா ப₄வத்யபி ॥
விமோக்ஷிணா விமோக்ஷீ ச ஸமேத்யேஹ தத₂ா ப₄வேத் ।
ஶுசிநா ச ஶுசிஶ்சைவ ப₄வத்யமிதத்₃யுதிமாந் ॥
விமலாத்மா ப₄வத்யேவ ஸமேத்ய விமலாத்மநா ।
கேவலாத்மா தத₂ா சைவ கேவலேந ஸமேத்ய வை ॥
ஸ்வதந்த்ரஶ்ச ஸ்வதந்த்ரேண ஸ்வதந்த்ரத்வ
மவாப்நுயாத் ॥ "

[ப₄ாரதம் மோக்ஷத₄ர்மம் 318-26......30]

[பரனோடு கூடும்போது பரனின் தன்மையை அடைகிறான்; ஶுத்₃த₄னோடு கூடும்போது பரிஶுத்₃த₄த்தன்மையை அடைகிறான். அறிவுடையவனோடு கூடும்போது அறிவுடையவனாகிறான். முக்தனோடு கூடும்போது முக்தனின் தன்மையை உடையவனாகிறான். தாழ்வில்லாதவனோடு கூடும்போது தாழ்வில்லாதவனாகிறான். மோக்ஷமுடையவனோடு கூடும்போது மோக்ஷமுடையவனாகிறான். ஒளியுடைய ஶுத்₃த₄னோடு கூடும்போது ஒப்பற்ற ஒளியையுடைய ஶுத்₃த₄னாகிறான். அழுக்கற்றவனோடு கூடும்போது அழுக்கற்றவனாகிறான். ப்ரக்ருதி ஸம்ப₃ந்த₄மற்ற கேவலனோடு கூடும்போது கேவலனாகிறான். கர்மபாரதந்த்ர்யம் அற்றவனோடு கூடும்போது கர்மபாரதந்த்ர்யம் அற்றவனாகிறான்] என்று ஜீவன் மோக்ஷமடையும்போது பரமாத்மாவோடு பலவகையான ஒற்றுமைகள் அடைகிறான் என்று கூறியது இங்கு காணத்தக்கது. ஆகையால் மத்ப₄ாவம் என்றதற்கு "மம யோ ப₄ாவ: மத்₃ப₄ாவ:" என்னும் வ்யுத்பத்தியாலே பரமாத்மாவோடு ஜீவன் மோக்ஷத்தில் ஸாம்யம் அடைவதாகவே கொள்ளவேண்டும். இது அடுத்த ஶ்லோகத்தில் விவரிக்கப்படவிருக்கிறது. 19.

भा ॥ कर्तृभ्यो गुणेभ्योऽन्यमकर्तारमात्मानं पश्यन् भगवद्भाव-
मधिगच्छतीत्युक्तम्; स भगवद्भावः कीदृश इत्यत आह—

गुणानेतानतीत्य त्रीन् देही देहसमुद्भवान् ।
जन्ममृत्युजरादुःखैर्विमुक्तोऽमृतमश्नुते ॥ २०

20. கு₃ணுநேதாந் அதீத்ய த்ரீந் தே₃ஹீ தே₃ஹஸமுத்₃ப₄வாந் ।
ஜந்மம்ருத்யுஜராது₃:க்கை₂: விமுக்தோऽம்ருதமஶ்நுதே ॥

தே₃ஹீ—தே₃ஹத்தை உடையவனுன இந்த ஜீவன், தே₃ஹஸமுத்₃ப₄வாந்—தே₃ஹமாகப் பரிணமமடைந்த ப்ரக்ருதியிலுள்ளவையான, ஏதாந்—இந்த, த்ரீந் கு₃ணுந்—மூன்று கு₃ணங்களை, அதீத்ய—கடந்து நின்று (அவற்றைக் காட்டிலும் வேறுபட்ட ஜ்ஞானமே வடிவெடுத்த தன்னைக் கண்டானுகில்), ஜந்ம ம்ருத்யு ஜரா து₃:க்கை₂: விமுக்த:—பிறப்பு இறப்பு கிழத்தனம் முதலானவற்ருல் உண்டாகும் துன்பங்களிலிருந்து நீங்கியவனுய், அம்ருதம் அஶ்நுதே—மரணமற்ற தன் ஆத்மாவை அநுப₄விக்கிருன்.

20. இங்குடல மேவியம ரிக்குணங்கண் மூன்றினையு(ம்)
மங்கும் வகைகடந்து மன்னினவன்—றங்கு
பிறப்பிறப்பு மூப்புப் பிணிவிடுத்துத் தன்னுஞ்
சிறப்பமுதஞ் சேருஞ் சிறந்து.

இங்கு உடலம் மேவி அமர் இக்குணங்கள் மூன்றினையும்—தன் உடலில் பொருந்தி நிற்கும் இந்த மூன்று கு₃ணங்களையும், மங்கும் வகை கடந்து—மங்கிப்போகும்படி கடந்து, மன்னினவன்—ஜ்ஞானமே வடிவான தன் ஆத்மாவைக் காண்பவன், தங்கு பிறப்பு இறப்பு மூப்புப் பிணி விடுத்து—தே₃ஹத்தின் இயல்வான பிறப்பு இறப்பு கிழத்தனம் முதலானவற்ருல் உண்டான துன்பங்களைக் கைவிட்டு, தன் ஆம் சிறப்பு அமுதம்—தன்னைத்தானே அனுப₄விக்கும் மரணமற்ற சிறந்த நிலையை, சிறந்து சேரும்—சிறப்பாக அடைவான்.

भा। अयं देही देहसमुद्भवान् — देहाकारपरिणतप्रकृतिसमुद्भवानेतान् सत्त्वादीन् त्रीन् गुणानतीत्य तेभ्योऽन्यं ज्ञानैकाकारमात्मानं पश्यन् जन्ममृत्युजरादुःखैर्विमुक्तोऽमृतमात्मानमनुभवति; एष मद्भाव इत्यर्थः ॥ २० ॥

---

20. சென்ற ஸ்லோகத்தில்—"செயல்புரியும் கு₃ணங்களைக் காட்டிலும் வேறுபட்டு, செயல்புரியாதவனும், தன்னைத்தானே காண்பவனுமான ஜீவன் ப₄க₃வானின் தன்மையை அடைகிறான்" என்று கூறப்பட்டது. இந்த ப₄க₃வானின் தன்மையை அடைவதாவது என்ன? என்று விளக்குகிறான் இந்த ஸ்லோகத்தில். பல ஸ்ருதி ஸ்ம்ருதி வாக்யங்களோடு முரண்படும் ப₄க₃வத்ஸ்வரூபைக்யமல்ல என்றும். துன்பங்களற்ற நிலையில் தன்னைத்தானே அனுப₄விப்பதே அது என்றும் காட்டுகிறான். (தே₃ஹீ) முன் ஸ்லோகத்தில் சொல்லப்பட்ட தே₃ஹத்தோடுகூடிய இந்த ஜீவன். (தே₃ஹ ஸமுத்₃ப₄வாந் ஏதாந் த்ரீந் கு₃ணாந்) தே₃ஹமாகப் பரிணமித்து நிற்கும் ப்ரக்ருதியிலுள்ள ஸத்வம் ரஜஸ் தமஸ் என்னும் இந்த மூன்று கு₃ணங்களையும். 'தே₃ஹஸமுத்₃ப₄வாந்' என்னும் பத₃த்துக்கு ப₃ஹுவ்ரீஹி ஸமாஸங்கொண்டு "தே₃ஹோத்பத்திபீ₃ஜபூ₄தாந்" [தே₃ஹமுண்டாவதற்குக் காரணமாயிருக்கும் முக்கு₃ணங்களை] என்று சங்கரர் உரை செய்தது நலிந்து பொருள் கொள்வதாகும். ஆகையால், இவ்வத்தியாயத்தின் தொடக்கத்தில் "ஸத்வம் ரஜஸ்தம இதிகு₃ணா: ப்ரக்ருதிஸம்ப₄வா:" (5) என்ற இடத்தில் 'ப்ரக்ருதிஸம்ப₄வ'பத₃த்திற்கு 'ப்ரக்ருதியின் தன்மைகள்' என்று பொருள்கொண்டதுபோலே, இங்கும் "தே₃ஹமாகப் பரிணமித்த ப்ரக்ருதியின் தன்மைகளான இம்முக்குணங்களையும்" என்றே பொருள்கொள்ளவேண்டும். (அதீத்ய) கடந்து. முன் ஸ்லோகத்தில் சொன்னபடி கு₃ணங்களைக் காட்டிலும் வேறுபட்ட ஜ்ஞானமே வடிவெடுத்தவனாகத் தன் ஆத்மாவைக் காண்பதே கு₃ணங்களைக் கடந்து நிற்கை என்று கொள்ள வேண்டும். இந்த நிலை இவ்வுடம்போடு இருக்கும்போதே ஏற்படுவது என்று 'தே₃ஹீ அதீத்ய' என்னும் பத₃ங்களிலிருந்து விளங்குகிறது. இனி ஸ்லோகத்தின் பிற்பாதியாலே இவன் மோக்ஷ நிலையில் அடையும் ப₄க₃வத்₃பா₄வம் விவரிக்கப்படுகிறது. (ஜந்மம்ருத்யுஜராது₃:க்கை₂ர்விமுக்த;) பிறவி, இறப்பு, கிழத்தனம் முதலானவற்றால்

भा॥ अथ गुणातीतस्य स्वरूपसंचनाचारप्रकारं गुणात्ययहेतुं च पृच्छन् अर्जुन उवाच—

अर्जुन उवाच—

कैर्लिङ्गैस्त्रीन्गुणानेतानतीतो भवति प्रभो ।
किमाचारः कथं चैतांस्त्रीन् गुणानतिवर्तते ॥ २१

அர்ஜுந உவாச—

கைர்லிங்கை$_3$ஸ் த்ரிகு$_3$ணாநேதாந் அதீதோ ப$_4$வதி ப்ரபோ$_4$ ।
கிமாசார: கத$_2$ம் சைதாம்ஸ்த்ரிகு$_3$ணாநதிவர்த்ததே ॥

ப்ரபோ$_4$!— ஐயனே! ஏதாந் த்ரிகு$_3$ணாந் அதீத:—இந்த முக்குணங்களைக் கடந்து நிற்பவன், கை: லிங்கை$_3$: ப$_4$வதி— எந்த உள்ளிலக்கணங்களை உடையவனாக இருக்கிறான்? கிமாசார: (ப$_4$வதி) — எந்த வெளி ஒழுக்கங்களை உடையவனாக இருக்கிறான்? ஏதாந் த்ரீந் கு$_3$ணாந் ச — இந்த மூன்று கு$_3$ணங்களையும், கத$_2$ம் அதிவர்த்ததே — எப்படிக் கடக்கிறான்? (என்று அர்ஜுனன் கேட்டான்).

உண்டாகும் துன்பங்களிலிருந்து விடுபடுகிறான். அன்றிக்கே, பிறப்பு, இறப்பு, கிழத்தனம் முதலானவற்றிலிருந்தும், அவற்றால் உண்டாகும துன்பத்திலிருந்தும் விடுபடுகிறான் என்றும் பொருள் கொள்ளலாம். ஜன்மம்ருத்யுஜரைகளைச் சொன்னது (1) க$_3$ர்ப்ப$_4$ம், (2) ஜன்மம், (3) ஜரா, (4) மரணம், (5) க்லேசம், (6) கர்மம் என்னும் ஆறு ஊர்மிகளுக்கும் உபலக்ஷணம். (அம்ருதம் அஶ்நுதே) மரணமற்றதான ஆத்மஸ்வரூபத்தை அனுப$_4$விக்கிறான், சென்ற ஶ்லோகத்தில் "மத்$_3$ப$_4$ாவம் ஸோऽதி$_4$க$_3$ச்ச$_2$தி" என்று சொல்லப்பட்ட "மத்$_3$ப$_4$ாவம்" இதுவே என்று கருத்து. என்னைப் போலவே துன்பங்களற்றவனாய், தன் ஆத்மாவை அனுப$_4$விப்பதே இவனுக்குக் கிடைக்கும் மோக்ஷமாகிற ப$_2$லம் என்றபடி. இக் கைவல்ய மோக்ஷத்தைக் குறித்து "அற்றது பற்றெனில் உற்றது வீடுயிர்" [திருவாய் 1-2 5] "மரணம் தோற்றம் வான்பிணி மூப்பென்று இவை மாய்த்தோம்" [திருவாய் 8-3-2] "அவன் தன்னொடு ஒன்றாக அமரத்துணிய வல்லார்" [திருவாய் 3—5—9] என்று ஆழ்வார் அருளிச்செய்தது இங்கு அனுஸந்தி$_4$க்கத் தக்கது. 20.

भा ।। सत्त्वादीन् त्रीन् गुणानेतानतीतः कैर्लिङ्गैः—कैर्लक्षणैः उपलक्षितो भवति? किमाचारः — केनाचारेण युक्तोऽसौ ? अस्य स्वरूपावगतिलिङ्गभूताचारः कीदृश इत्यर्थः। कथं चैतान् — केनोपायेन सत्त्वादींस्त्रीन् गुणानतिवर्तते ।। २१ ।।

---

21. இவ்வளவிற் பார்த்த னியம்பினு னிங்கிறைவா
வவ்வகைசேர் முக்குணத்தை யாங்கன்றேன்—
எவ்வகையிற்
சேருமடை யாளத்தன் செய்தொழிலே தெங்ஙனே
சீருடனித் தைக்கடப்பான் செப்பு.

இவ்வளவில்—இந்த சமயத்தில், பார்த்தன் இயம்பினுன்—அர்ஜுனன் (பின்வருமாறு) கூறினுன். இறைவா—ஸர்வேஶ்வரனே! இங்கு அவ்வகைசேர் முக்குணத்தை—இவ்வுலகில் முற்கூறியபடி உடலோடு சேர்ந்திருக்கும் மூன்று குணங்களையும், ஆங்கு அன்றேன்—முன் ஶ்லோகத்தில் சொன்னபடி கடந்து நிற்பவன், எவ்வகையில் சேரும் அடையாளத்தன்—எந்த உள்ளிலக்கணங்களை உடையவனுக இருக்கிருன்? செய்தொழில் ஏது--எந்த வெளி அடையாளங்களை உடையவனுயிருக்கிருன்? எங்ஙனே சீருடன் இத்தைக் கடப்பான்—அவன் சிறப்பாக இம் முக் குணங்களை எப்படிக்கடப்பான்? செப்பு — இதை எனக்குச் சொல்லுவாயாக.

---

21. சென்ற ஶ்லோகத்தில் குணாதீதனைப்பற்றிக் கண்ணன் சொன்னதைக் கேட்ட அர்ஜுனன் அந்த குணாதீதனைப் பற்றிய உள்வெளி அடையாளங்களைப்பற்றியும், குணங்களைக்கடந்து நிற்பது எப்படி? என்பது பற்றியும் கண்ணனைக் கேள்வி கேட்கிருன் இந்த ஶ்லோகத்தில். (ஏதாந் த்ரிகுணாந் அதீதஃ கைஃ லிங்கைஃ ப⁴வதி) இந்த முக்குணங்களைக் கடந்து நிற்பவன் எந்த உள் இலக்கணங்களை உடையவனுயிருக்கிருன்? அடுத்த படியாக 'கிமாசார:' என்று வெளிப்படையாகக் காணப்படும் லக்ஷணங்கள் சொல்லப்படுவதால் இங்கு எல்லா அடையாளங் களுக்கும் பொதுவான லிங்கஶப்தம் உள் இலக்கணங்களைக்குறிப் பதாகக் கொள்ளப்படுகிறது. (கிமாசார:) எந்த வெளியடையாளங் களை உடையவனுக அவன் இருக்கிருன்? ஆசாரஶப்தம் வெளிப்

श्रीभगवानुवाच –
प्रकाशं च प्रवृत्तिं च मोहमेव च पाण्डव ।
न द्वेष्टि संप्रवृत्तानि न निवृत्तानि काङ्क्षति ॥ २२

ஸ்ரீப₄க₃வாந் உவாச—
22. ப்ரகாஶம் ச ப்ரவ்ருத்திம் ச மோஹமேவ ச பாண்ட₃வ ।
ந த்₃வேஷ்டி ஸம்ப்ரவ்ருத்தாநி ந நிவ்ருத்தாநி
காங்க்ஷதி ॥

பாண்ட₃வ—பாண்டுபுத்திரனே! (ஆத்மாத விர்ந்த மற்ற விஷயங்களில்) ப்ரகாஶம் ச — (ஸத்வகு₃ணகார்யமான) தெளிந்த அறிவையும், ப்ரவ்ருத்திம் ச — (ரஜோகு₃ண கார்யமான) முயற்சியையும், மோஹம் ஏவ ச — (தமோ கு₃ணகார்யமான) மயக்கத்தையும். ஸம்ப்ரவ்ருத்தாநி — (அனிஷ்டமாகவோ. அதற்கு ஸாத₄னமாகவோ) வந்தடைபவற்றை, ந த்₃வேஷ்டி—(கு₃ணாதீதன்) வெறுப்ப தில்லை. நிவ்ருத்தாநி — (இஷ்டமாகவோ அதற்கு ஸாத₄னமாகவோ வந்திருந்து) நீங்கினவற்றை, ந காங்க்ஷதி—விரும்புவதில்லை.

படையான ஒழுக்கங்களைக் குறிக்கிறது என்பது லோகப்ரஸித்₃த₄ம். உள் லக்ஷணங்களான ஶமம் த₃மம் முதலானவற்றைக் கொண்டு தனக்குத் தான் கு₃ணாதீதன் என்று தெரிந்து கொள்ளலாமே யொழிய, பிறர் தெரிந்துகொள்ள முடியாதன்றோ; அதனாலேயே வெளிப்படையான ஆசாரங்களைத் தனியாகக் கேட்கிறான். (ஏதாந் த்ரீந் கு₃ணாந் கத₂ம் ச அதிவர்த்ததே) இந்த மூன்று கு₃ணங் களையும் கடந்து நிற்பது எப்படி என்பதையும் கூறவேண்டும். மேல்ஶ்லோகங்களில் கு₃ணாதீத நிலைக்கு உபாயம் விவரிக்கப் படுகையால் இந்தக் கேள்வி உபாயத்தைப் பற்றியது என்று கொள்ளப்படுகிறது. "கத₂ம்" ஶப்₃த₃ம் சில இடங்களில் செய்ய இயலாமையையும் காட்டும்; சில இடங்களில் ப₂லத₃ஶையைப் பற்றிய கேள்வியாகவும் இருக்கக்கூடும். இங்கு பதிலிலிருந்து அப் பொருள்கள் பொருந்தாது என்றும், 'கத₂ம்' ஶப்₃த₃த்தை உபா யத்தைப் பற்றிய கேள்வியாகவே கொள்ளவேண்டும் என்றும் விளங்குகிறது. (ப்ரபே₄ா) என் ஸ்வாமியான நீயே என் ஐயங் களுக்கு பதில் அருளவேண்டும் என்று கருத்து. 21.

भा ॥ आत्मव्यतिरिक्तेषु वस्तुष्वनिष्टेषु संप्रवृत्तानि सत्त्वरजस्तमसां कार्याणि प्रकाशप्रवृत्तिमोहाख्यानि यो न द्वेष्टि, तथा आत्मव्यतिरिक्तेष्विष्टेषु वस्तुषु तान्येव निवृत्तानि न काङ्क्षति ॥ २२ ॥

22. ஈண்டவனுக் கண்ண லியல்பின் றகவுரைத்தான்
பாண்டவனே முந்திப் பரந்தவொளி—மூண்டியற்றி
மோகமுள வற்றை முனியான்முன் மூண்டத்து
வேக நசையிலான் மிக்கு.

ஈண்டு—இப்படிக்கேட்டவுடன், அண்ணல்—கண்ணன், அவனுக்கு — அந்த அர்ஜுநனுக்கு, இயல்பின் தகவு—(குணங் கடந்தவனுடைய) லக்ஷணத்தின் தன்மைகளை, உரைத்தான் — (பின் வருமாறு)கூறினன். பாண்டவனே!—பாண்டுபுத்திரனே! முந்தி பரந்த ஒளி—முற்பட்டு வெளிப்பட்ட (ஸத்வகுணகார்யமான) அறிவு, மூண்டியற்றி—(ரஜோகுணகார்யமான) பெருமுயற்சி, மோகம்— (தமோகுணகார்யமான) மயக்கம் (ஆகியவை), உளவற்றை—(அநிஷ்டமாகவோ அதற்கு ஸாதநமாகவோ) வந்தடைந்திருக்கும்போது, முனியான் — (குணங் கடந்தவன் அவற்றை) வெறுக்க மாட்டான்; முன் மூண்டத்து— (இஷ்டமாகவோ அதற்கு ஸாதநமாகவோ) முதலில் வந்திருந்து நீங்கினவற்றை, மிக்கு வேக நசை இலான்—மிக அதிகமாக ஆசைப்படுவதுமில்லை.

22. ஸாமான்ய ஜனங்கள் முக்குண கார்யங்களில் அநிஷ்டமாகவோ, அதற்கு ஸாதநமாகவோ எவையேனும் வந்தடைந்திருந்தால் அவற்றை வெறுக்கிறார்கள்; இஷ்டமாகவோ அதற்கு ஸாதநமாகவோ வந்திருந்து நீங்கினால், அவற்றைத் திரும்பிப்பெற விரும்புகிறார்கள். இந்த வெறுப்பும் விருப்பும் இல்லாதவனே குணாதீதன் என்கிறான் இந்த ஶ்லோகத்தில். முக்குணங்களைக் கடந்து நிற்பவனைப்பற்றிய ப்ரகரணமாகையாலே, ஆத்மாவைக் காட்டிலும் வேறுபட்ட ப்ராக்ருத விஷயங்களே இங்கு விருப்பின்மைக்கும் வெறுப்பின்மைக்கும் விஷயமாவதாகக் கொள்ளவேண்டும். (ப்ரகாஶம் ச) ஸத்வகுணத்தின் கார்யமான தெளிந்த அறிவையும். (ப்ரவ்ருத்திம் ச) ரஜோகுணத்தின் கார்யமான முயற்சி

उदासीनवदासीनो गुणैर्यो न विचाल्यते ।
गुणा वर्तन्त इत्येव योऽवतिष्ठति नेङ्गते ॥ २३

23. உதா₃ஸீநவதா₃ஸீநோ கு₃ணைர்யோ ந விசால்யதே |
கு₃ணா வர்த்தந்த இத்யேவ யோऽவதிஷ்ட₂தி நேங்க₃தே ||

ய:— எவனொருவன், உதா₃ஸீநவத் ஆஸீந:— (ஆத்மாவைத்தவிர்ந்த விஷயங்களில் முற்கூறிய விருப்பு வெறுப்புகள் விளையாதபடி அவற்றைப்) பொருட்படுத்தாமலிருப்பவனாய், கு₃ணை:— முக்குணங்களாலே, ந விசால்யதே—

யையும். (மோஹம் ஏவ ச) தமோகு₃ணத்தின் கார்யமான மயக்கத்தையும். (ஸம்ப்ரவ்ருத்தாநி ந த்₃வேஷ்டி) அனிஷ்டமாகவோ அதற்கு ஸாத₄னமாகவோ வந்தடைந்திருப்பவற்றை ஸாமான்ய ஜனங்கள் வெறுப்பதுபோலே கு₃ணங்கடந்தவன் வெறுப்பதில்லை. 'வந்தடைந்திருப்பவற்றை வெறுப்பதில்லை' என்றே இருந்தபோதிலும் அனிஷ்டமாகவோ, அல்லது அதற்கு ஸாத₄னமாகவோ வந்தடைந்திருப்பவற்றையே வெறுப்பதற்கு இடமுண்டாகையாலே, "அனிஷ்டமாகவோ, அதற்கு ஸாத₄னமாகவோ வந்தடைந்திருப்பவற்றை" என்று விசேஷணமிடப்பட்டது. அந்தந்தச் சூழ்நிலைக்கேற்ப அறிவும், முயற்சியும், மயக்கமும் அனிஷ்டமாகவோ அதற்கு ஸாத₄னமாகவோ ஆவதைக் காண்கிறோமன்றோ, விரும்பாத விஷயங்களைப்பற்றிய அறிவும் முயற்சியும் அனிஷ்டமாகவும் அதற்கு ஸாத₄னமாகவும் ஆவதுண்டன்றோ. அதுபோலவே விரும்பும் விஷயத்தில் மயக்கம் அனிஷ்டமாகவும் அதை விளைப்பதாகவும் ஆவதையும் காண்கிறோம், (ப்ரகாஶம் ச ப்ரவ்ருத்திம் ச மோஹமேவ ச நிவ்ருத்தாநி ந காங்க்ஷதி) ஸத்வரஜஸ்தமோகு₃ணங்களின் கார்யமான அறிவு, முயற்சி, மயக்கம் என்னும் மூன்றும் இஷ்டமாகவோ இஷ்டஸாத₄னமாகவோ வந்திருந்து நீங்கினவற்றை கு₃ணாதீதன் விரும்புவதுமில்லை. இங்கும் இஷ்டமாகவோ அதற்கு ஸாத₄னமாகவோ வந்திருந்து நீங்கினவற்றையே விரும்புவதற்கு இடமுண்டாகையாலே, "இஷ்டமாகவோ அதற்கு ஸாத₄னமாகவோ வந்திருந்து நீங்கினவற்றை" என்று விசேஷணமிடப்பெற்றது. உடம்பில் பொறுக்கமுடியாத வலி இருக்கும்போது மயக்கமும் இஷ்டமாகவும், இஷ்டமான அறுவை சிகிச்சைக்கு ஸாத₄னமாகவும் இருப்பதைக் காண்கிறோம். (பாண்ட₃வ) என் உறவினனான நீ இந்த கு₃ணாதீத நிலையை அவஶ்யம் பெறவேண்டும் என்று கருத்து. 22

भा ॥ उदासीनवदासीनः — गुणव्यतिरिक्तात्मावलोकनतृप्त्या अन्यत्रोदासीनवदासीनः, गुणैर्द्वेषाकाङ्क्षाद्वारेण यो न विचाल्यते ; गुणास्स्वेषु कार्येषु प्रकाशादिषु वर्तन्त इत्यनुसन्धाय यस्तूष्णीमवतिष्ठते । नेङ्गते--न गुणकार्यानुगुणं चेष्टते ॥ २३ ॥

(விருப்பு வெறுப்புகள் உண்டாகி) விகாரமடைவதில்லையோ, 'கு3ணா: வர்த்தந்தே—முக்குணங்கள் (அவற்றின் கார்யமான ப்ரகாஶம் முதலானவற்றில்) காரணமாயிருக்கின்றன' இதி—என்று அநுஸந்தி4த்து, ய:—எவனொருவன், அவதிஷ்ட2தி ஏவ—மௌனமாயிருக்கிறானோ, ந இங்க3தே — (கு3ணகார்யங்களுக்கு அநுகு3ணமாகச்) செயல்புரிவதுமில்லையோ, (அவனே கு3ணங்கடந்தவன்)

---

23. முன் ஶ்லோகத்தில் சொன்னபடி ஶரீரத்திலிருக்கும் போதே, இஷ்டாநிஷ்டங்களுக்கு ஸாத4னங்களும் நிறைந்திருக்கும்போதே, ஒருவன் விருப்பு வெறுப்புகளில்லாமல் விகாரமற்றிருப்பது எப்படி முடியும்? என்னும் கேள்வியெழ, பதில் உரைக்கிறான் இந்த ஶ்லோகத்தில், (உதா3ஸீநவத் ஆஸீந:) முக்குணமுடைய தே3ஹத்தைக் காட்டிலும் வேறுபட்ட ஆத்மாவைக்கண்ட திருப்தியினாலே அந்த ஆத்மாவைத் தவிர்ந்த மற்ற விஷயங்களைப் பொருட்படுத்தாமலிருப்பான். இப்படி இருப்பதே முன் ஶ்லோகத்தில் சொன்ன விருப்பு வெறுப்பின்மையை விளக்கும் என்று கருத்து. (யோ கு3ணை: ந விசால்யதே) எவனொருவன் முக்குணங்களால் முற்கூறியபடி வெளி விஷயங்களில் வெறுப்பும் விருப்புமுண்டாகி வேறுபாட்டைவதில்லையோ; இந்த ஶ்லோகத்தில் சொன்ன இரண்டு 'ய:' என்னும் யச்ச2ப்3த3ங்களும் இருபத்தைந்தாவது ஶ்லோகத்தில் 'கு3ணாதீதஸ் ஸ உச்யதே' என்றவிடத்தில் உள்ள 'ஸ:' என்னும் தச்ச2ப்3த3த்தோடு அந்வயிக்கின்றன. 22, 23, 24, 25 ஶ்லோகங்களில் சொன்னபடி எவன் இருக்கிறானோ அவனே கு3ணங்கடந்தவன் என்று கருத்து. இப்படி விகாரமடையாமலிருப்பதற்குக் காரணத்தைக் கூறுகிறது இனி. (கு3ணா: வர்த்தந்தே இதி ஏவ ய: அவதிஷ்ட2தி) "கு3ணா: கு3ணேஷு வர்த்தந்தே" (3-28) என்று முன்னமே சொன்ன ரீதியில் முக்குணங்கள் தம் கார்யங்களான ப்ரகாஶம் முதலானவற்றில் ஈடுபடுகின்றன என்று அநுஸந்தி4த்து எவனொருவன் மௌனமாயிருக்கிறானோ. 'இதி' என்னும் ஶப்3த3ம் அநுஸந்தா4ன ப்ரகாரத்தைக் காட்டு

समदुःखसुखस्स्वस्थस्समलोष्टाश्मकाञ्चनः ।
तुल्यप्रियाप्रियो धीरस्तुल्यनिन्दात्मसंस्तुतिः ॥ २४

23, முன்னுக் குதாசீனன் போலிருக்கு முக்குணங்க
டன்னுற் றலேத்திடினுந் தான்சலியான் – மன்னுகுணச்
செய்தியிது வென்றிருக்குஞ் செய்தொழிலிற் சேட்டி
மெய்திருந்து நெஞ்சுடையான மேல். [யான்

மேல் மெய்திருந்து நெஞ்சுடையான் – (கு3ணங்களைக் காட்டிலும்)மேற்பட்ட ஆத்மாவில் உண்மையாகவே ஈடுபட்ட மனமுடையவனை கு3ணங்கடந்தவன், முன்னுக்கு உதாசீனன் போலிருக்கும் – முன்னே தோற்றும் ப்ராக்ருத விஷயங்களில் (முற்கூறிய விருப்பு வெறுப்புகள் விளையாதபடி அவற்றைப்) பொருட்படுத்தாமலிருப்பான்; முக்குணங்கள் தன் உற்று அலேத்திடினும் – ஸத்வம் முதலான மூன்று கு3ணங்களும் தம் வசமாம்படி இழுத்தாலும், தான் சலியான் – (விருப்பு வெறுப்புகள் உண்டாகி) தான் விகாரமடையமாட்டான்; மன்னுகுணச்செய்தி இது என்று இருக்கும் – தே3ஹத்தோடு என்றுமிருக்கும் கு3ணங்கள் அவற்றின் கார்யங்களான ப்ரகாஶம் முதலானவற்றை விளைப்பதே இது என்று அனுஸந்தி4த்து மௌனமாயிருப்பான். செய்தொழிலில் சேட்டியான் – (குணங்களின்) செயல்களுக்கு அனுகு3ணமாகச் செயல்புரிவதில்லை.

கிறது. 'ஏவ'காரம் மௌனமாயிருப்பதைக் காட்டுகிறது. 'யோऽவதிஷ்ட2தி' என்று பரஸ்மைபத3மாயிருப்பது ஆர்ஷப்ரயோக3ம்; 'அவதிஷ்ட2தே' என்றிருந்தால் நாலாம் பாதத்தில் ஐந்தாமெழுத்து நீண்டு 'ச2ந்தே3ாப4ங்க3ம்' ஏற்பட்டுவிடுமாகையாலே இப்படி ஆர்ஷப்ரயோக3ம் செய்யப்பட்டது. "கு3ணங்கள் தம் கார்யங்களில் ஈடுபட்டிருக்கும்போது நான் விகாரமடைய வேண்டிய அவச்யமில்லை" என்று மௌனமாயிருக்கிறுன் என்று கருத்து. இத்தால் முதல் பாதத்தில் உதா3ஸீனனுயிருக்கிறுன் என்று கூறியது விவரிக்கப்பட்டதாயிற்று. இனி 'ந விசால்யதே' என்றதை விவரிக்கிறது – (ந இங்க3தே) முற்கூறியபடி முக்குணங்களின் கார்யமான வெறுப்புக்கும் விருப்புக்கும் அனுகு3ணமாகச் செயல்புரிவதில்லை என்றபடி. 23.

मानावमानयोस्तुल्यस्तुल्यो मित्रारिपक्षयोः ।
सर्वारम्भपरित्यागी गुणातीतस्स उच्यते ॥ २५

24. ஸமது₃:க்க₂ஸு₂க₂ஸ் ஸ்வஸ்த₂ஸ் ஸமலோஷ்டாஶ்ம காஞ்சந: ।
துல்யப்ரியாப்ரியோ தீ₄ரஸ் துல்யநிந்தா₃த்மஸம்ஸ்துதி: ॥

25. மாநாவமாநயோஸ் துல்யஸ் துல்யோ மித்ராரிபக்ஷயோ: ।
ஸர்வாரம்ப₄பரித்யாகீ₃ கு₃ணாதீதஸ் ஸ உச்யதே ॥

ஸமது₃:க்க₂ஸு₂க₂: — (எவனொருவன்) இன்ப துன்பங்களை ஸமமாக எண்ணுகிறானோ, ஸ்வஸ்த₂:— தன் ஆத்மாவிலேயே ஈடுபட்டிருக்கிறானோ, ஸமலோஷ்டாஶ்மகாஞ்சந:— மண்கட்டியையும், கல்லையும், பொன்னையும் ஒன்றாக நினைக்கிறானோ, துல்யப்ரியாப்ரிய:— இனியதையும் இன்னாததையும் ஒன்றாக நினைக்கிறானோ, தீ₄ர: - தே₃ஹத்தையும் ஆத்மாவையும் பிரித்தறிகிறானோ, துல்யநிந்தா₃த்மஸம்ஸ்துதி:- தன்னைப்பற்றிய துதியையும் நிந்தையையும் ஒன்றாக எண்ணுகிறானோ, மாநாவமாநயோ: துல்ய: — பிறர் மதிப்பதையும், அவமதிப்பதையும் ஒன்றாக நினைக்கிறானோ, மித்ராரிபக்ஷயோ: துல்ய:—நண்பர்கள் எதிரிகளாகிற இரு தரப்பையும் ஒன்றாக நினைக்கிறானோ, ஸர்வாரம்ப₄பரித்யாகீ₃—தே₃ஹ ஸம்ப₃ந்த₄த்திற்கு அனுகு₃ணமான எல்லாக் கார்யங்களையும் கைவிட்டிருக்கிறானோ, ஸ: — அவன். கு₃ணாதீத:— குணங்கடந்தவன் என்று, உச்யதே—சொல்லப்படுகிறான்.

24. தன்சுகத்துந் துக்கத்துந் தான்சமனாய்த் தன்னமர்ந்து
பொன்கலுட னோடிதனிற் புந்தியொத்தோன் — அன்பர்
வெறுப்பரிடை யொப்போன் மிகுபழிநன் கீர்த்தி
நிறுத்தசம நிற்கு நிகழ்ந்து.

24-25. குணங்கடந்தவனுக்கு மேலுமுள்ள தன்மைகளைக் காட்டுகிறான் இவ்விரு ஶ்லோகங்களில், (ஸமது₃:க்க₂ஸு₂க₂:) தனக்கு வரும் துன்பங்களையும் இன்பங்களையும் ஒக்க நினைப்பவன். கீதை (2-15) இல் இப்பத₃ம் விவரிக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் என்ன? எனில்: — (ஸ்வஸ்த₂:) தன் ஆத்மாவில்

भा । समदुःखसुखः — सुखदुःखयोस्समचित्तः, स्वस्थः — स्वस्मिन् स्थितस्स्वात्मैकप्रियत्वेन तद्व्यतिरिक्तपुत्रादिजन्ममरणादिसुख-दुःखयोस्समचित्त इत्यर्थः । तत एव समलोष्टाश्मकाञ्चनः । तत एव

---

25. தன்னமரு மானமவ மானஞ்சா ரானண்ப [வருஞ்
றொன்னலர்தம் பக்கத்து மொத்தியல்வான் — மன்ன
செய்ம்முயற்றி யெல்லாஞ் செய்யா னவன்குணங்கண்
மெய்ம்முயற்றி யாற்கடந்தான் மிக்கு.

தன்சுகத்தும் துக்கத்தும் தான் சமனாய் — தனக்கு வரும் இன்பதுன்பங்களை ஒக்க நினைப்பவனாய், தன் அமர்ந்து — தன் ஆத்மாவிலேயே ஈடுபட்டிருப்பவனாய், பொன் கல்

ஈடுபட்டிருப்பவன். இப்படித்தன் ஆத்மாவையே இனியதாகக் கொள்கையால் தனக்குப் பிள்ளை பிறப்பது முதலானவற்றால் இன்பத்தையோ, பிள்ளை இறப்பது முதலானவற்றால் துன்பத்தையோ அடையாமையால் இன்ப துன்பங்களை 'அநுப4வித்தே தீரவேண்டிய கர்மப2லன்கள்' என்று ஒக்க நினைக்கிறான் என்று கருத்து. 'தன் ஆத்மாவிலேயே ஈடுபட்டவன்' என்று இங்கு சொன்னது கல்லையும், பொன்னையும். இனியதையும் இன்னாததையும், பழிச்சொல்லையும் துதிச்சொல்லையும், மதிப்பையும அவமதிப்பையும், மித்ரபக்ஷத்தையும் சத்ருபக்ஷத்தையும் ஒன்றாக எண்ணுபவன் என்று மேலே கூறும் அனைத்துக்கும் காரணமாகிறது. இவ்வளவு அர்த்த2ஸ்வாரஸ்யமிருக்கையாலே ஸ்வஸ்த2 ஶப்3த3த்துக்கு விகாரமற்றிருக்கை, கு3ணங்களைப் பின்செல்லாமலிருக்கை முதலான பொருள்களைக்கொள்ளாமல், "தன் ஆத்மாவில் ஈடுபட்டிருக்கை" என்று பொருள் கொள்ளப்பட்டது, (ஸமலோஷ்டாஶ்ம காஞ்சந:) ஆத்மாவில் ஈடுபட்டிருக்கையாலேயே மண்கட்டியையும், கல்லையும் பொன்னையும் ஒன்றாக எண்ணுபவன். 'லோஷ்ட' என்று மண்கட்டியை அல்லது ஓட்டாஞ்சில்லைச்சொல்லுகிறது. கீதை (6–8) இல் இப்பத3ம் விவரிக்கப்பட்டது. (துல்யப்ரியாப்ரிய:) முற்கூறிய காரணத்தாலேயே இனியதையும் இன்னாததையும் ஒன்றாக நினைப்பவன். ப்ரியாப்ரியஶப்3த3ங்களுக்கு ஸுக2து3:க்க2 ஶப்3த3ங்களோடு புநருக்தி வாராமைக்காக ப்ரியஶப்3த3ம் இன்பத்தை விளைக்கும் இனிய பொருள்களையும் அப்ரிய ஶப்3த3ம் துன்பத்தை விளைக்கும் இன்னாத பொருள்களையும் குறிப்பதாகக்கொள்ளப்படுகிறது. (தீ4ர:) ப்ரக்ருதி பரிணாமமான தே3ஹத்தைக்காட்டிலும் ஆத்மா வேறுபட்டது என்று பகுத்தறிவதில் வல்லவன்.

तुल्यप्रियाप्रियः — तुल्यप्रियाप्रियविषयः । धीरः — प्रकृत्यात्मविवेककुशलः । तत एव तुल्यनिन्दात्मसंस्तुतिः – आत्मनि मनुष्यत्वाद्यभिमानकृतगुणागुणनिमित्तस्तुतिनिन्दयोस्स्वासंबन्धानुसन्धानेन तुल्यचित्तः ।

உடன் ஓடு இதனில புந்தி ஒத்தோன் — பொன்னையும், கல்லையும், ஓட்டாஞ்சில்லையும் ஒன்றாக நினைப்பவனாய், அனபர் வெறுப்பர் இடை ஒப்போன் — அன்புடையவர்களிடத்தும் வெறுப்புடையவரிடத்தும் ஒருபடிப்பட்டவனாய், மிகு பழி நன்கீர்த்தி நிறுத்த சமன் — தன்னைப்பற்றிய மிகுந்த பழிச்சொல்லையும் நல்ல துதிச்சொல்லையும் ஒன்றாக எண்ணுகிறவனாய், நிகழ்ந்து நிற்கும் — (தே₃ஹத்தைக்காட்டிலும் வேறுபட்டவனாகத்) தன்னையறிந்து வாழ்பவனாய், தன் அமரும் மானம் அவமானம் சாரான் — பிறர் தன்னை மதிப்பதையும் அவமதிப்பதையும் பொருட்படுத்தாதவனாய், நண்பர் ஒன்னலர் தம் பக்கத்தும் ஒத்து இயல்வான் - நண்பர்கள் எதிரிகள் ஆகிய இருதரப்பையும் ஒன்றாக நினைப்பவனாய், மன்ன வரும் செய் முயற்றி எல்லாம் செய்யான் — தே₃ஹத்தொடர்பை ஒட்டி வரும் எல்லா முயற்சிகளையும் கைவிட்டிருப்பவனாய், அவன் — உள்ளவன், குணங்கள் மெய் முயற்றியால் மிக்கு கடந்தான் — முக்குணங்களையும் தனது உண்மையான முயற்சியாலே மிகவும் கடந்தவனாவான்.

முன் சொன்னபடி இனியதும் இன்னாததும் வந்தடையும்போது கலங்காமலிருப்பதற்கும், பின்னால் சொல்லவிருக்கிறபடி துதி நிந்தை முதலானவற்றில் ஒருபடிப்படவிருப்பதற்கும் காரணமாகிறதாகையாலே, இடையில் படிக்கப்பட்ட தீ₄ரஶப்₃த₃ம் இப்பகுத்தறிவைக் குறிப்பதாகக் கொள்ளுவதே பொருத்தமாகும். இதுவரையில் குணங் கடந்தவனுக்கு அர்ஜுனன் வினவிய உள் இலக்கணங்கள் சொல்லப்பட்டன. இனி 'கிமாசார:' என்று அவனால் கேட்கப்பட்ட வெளியிலக்கணங்கள் இருபத்தைந்தாம் ஶ்லோகம் ஈறாக விவரிக்கப்படுகின்றன, (துல்ய நிந்த₃ாத்மஸம்ஸ்துதி:) இப்படி தே₃ஹாத்ம விவேகமுடையவனாகையாலேயே பிறர் தன்னைப் புகழ்வதும் இகழ்வதும் தன் ஆத்மாவைத் தொடாது என்று உணர்ந்து இரண்டிலும் ஒருபடிப்பட இருப்பவன், பிறர் இவனைத் துதிப்பதும் பழிப்பதும் தே₃ஹத்திலுள்ள நன்மை தீமைகளைக் குறித்தேயாகையாலே, பிறரைத் துதிப்

तत्प्रयुक्तमानावमानयोः तत्प्रयुक्तमित्रारिपक्षयोरपि स्वसंबन्धाभावादेव तुल्यचित्तः । तथा देहित्वप्रयुक्तसर्वारम्भपरित्यागी । य एवंभूतः, स गुणातीत उच्यते ॥ २४ ॥ २५ ॥

பதிலும், பழிப்பதிலும் விகாரமற்றிருப்பதுபோலே, அவைபற்றியும் விகாரமற்றிருப்பான் இவன் என்று கருத்து. (மாநாவமாநயோ: துல்ய:) இப்படிப் பழிச்சொற்களாலும் துதிச்சொற்களாலும் விளையும் மதிப்பையும் அவமதிப்பையும் ஒருபடிப்பட நினைப்பவன். வாக்கால் விளைக்கப்படும் மதிப்பும் அவமதிப்பும் முந்தின பதத்திலேயே சொல்லப்பட்டுவிட்டபடியால், இங்கு மனத்தாலும் செயலாலும் விளைக்கப்படும் மானாவமானங்களே சொல்லப்படுவதாகக் கொள்ளவேண்டும். (மித்ர அரிபக்ஷயோ: துல்ய:) மதிக்கும் நண்பர்கள் விஷயத்திலும் அவமதிக்கும் எதிரிகள் விஷயத்திலும் ஒருபடிப்பட இருப்பவன். "மூர்க்கா2: பூஜித பூஜகா:" [பா4ர. உத்3 83-62] [மூடர்கள் பாமர மக்களால் பூஜிக்கப்பட்டவர்களையே பூஜிக்கிறார்கள்.] என்கிறபடியே உலகினர் பலரால் துதிக்கப்படுபவனை மதிக்கிறார்கள்; இகழப்படுபவனை அவமதிக்கிறார்கள். இந்த மதிப்பும் அவமதிப்பும் உலக வழக்கிலும் ஶாஸ்த்ரரீதியிலும் பலவகையாயுள்ளன. மதிப்பவர்கள் நண்பர்களாகிறார்கள். அவமதிப்பவர்கள் விரோதி4களாகிறார்கள் என்னும் கிரமத்தையொட்டி இந்த மூன்று பத3ங்களும் தொடர்ந்து அமைக்கப்பட்டுள்ளன. ஸமபு3த்3தி4யான இவனுக்கு எவனும் நண்பனாகவோ விரோதியாகவோ ஆகாவிடிலும், இவனை மதிப்பவன் நண்பனாகவும் அவமதிப்பவன் எதிரியாகவும் உலகில் கருதப்படுவதையிட்டு மித்ர அரிஶப்3த3ங்கள் வழங்கப்பட்டுள்ளன. (ஸர்வாரம்ப4பரித்யாகீ3) ஶரீரத்தோடு கூடியிருப்பதால் விளையும் எல்லாச் செயல்களையும் விட்டிருப்பவன். "ஆரப்4யந்தே இதி ஆரம்பா4:" என்னும் வ்யுத்பத்தியாலே, செய்த தீமைக்குப் பழி வாங்குவது முதலான செயல்கள் ஆரம்ப4ஶப்3த3த்தால் குறிக்கப்படுகின்றன. மோக்ஷத்தின் பொருட்டு இவன் அனுஷ்டிக்க வேண்டிய கர்மயோக3ம் முதலானவை கைவிடத்தகாதவையாகையால், தே3ஹத்தின் தொடர்பால் விளையும் கர்மங்களே இங்கு ஆரம்ப4ஶப்3த3த்தால் சொல்லப்படுவதாகக்கொள்ள வேண்டும். 'ஸாம்ஸாரிகமான எல்லாக் கர்மங்களையும் விட்டிருப்பவன்' என்று கருத்து. (கு3ணாதீதஸ்ஸ உச்யதே) முற்கூறியபடி விருப்பு வெறுப்பின்மை முதலான உள் அடையாளங்களாலும், ஸாம்ஸாரிக கர்மங்களை விட்டிருக்கை முதலான வெளி அடையாளங்களாலும் அலங்கரிக்கப்பெற்றவனே கு3ணாதீதன் (கு3ணங் கடந்தவன்) எனப்படுகிறான். இந்த லக்ஷணங்களை முயன்று விளைத்துக்கொள்வதே குணங்களைக் கடப்பதற்கு உபாயம் என்று மூன்று கேள்விகளுக்கும் பதில் உரைக்கப்பெற்றதாயிற்று. 24-25

भा ।। अथैवंरूपगुणात्यये प्रधानहेतुमाह—

मां च योऽव्यभिचारेण भक्तियोगेन सेवते ।
स गुणान् समतीत्यैतान् ब्रह्मभूयाय कल्पते ।। २६

26. மாஞ்ச யோऽவ்யபி₄சாரேண ப₄க்தியோகே₃ந ஸேவதே ।
ஸ கு₃ணாந் ஸமதீத்யைதாந் ப்₃ரஹ்மபூ₄யாய கல்பதே ॥

ய:—எவனொருவன், மாம்—என்னை, அவ்யபி₄சாரேண ப₄க்தியோகே₃ந ச—மற்ற தெய்வங்களையும் ப₂லன்களையும் கருதாத ப₄க்தி யோக₃த்தினாலும் (அதன் அங்க₃ங்களாலும்), ஸேவதே—ஆராதிக்கிறானோ, ஸ;—அவன், ஏதாந் கு₃ணாந்—(ஸத்வம் முதலான) இந்த மூன்று கு₃ணங்களையும், ஸமதீத்ய—கடந்து, ப்₃ரஹ்மபூ₄யாய கல்பதே—ப்₃ரஹ்மத்தோடு ஸமமாயிருக்கும் தன்மையைப்பெறத்தகுதியுள்ளவனாகிறான்.

---

26. என்னைப் புறம்போகா யோகமாம் பத்தியினான்
மன்னப் பயின்று மருவுமவன்—றன்னமரப்
பேசுகுணஞ் செற்றுப் பிரமமாந் தன்மையினை
மாசில்குணஞ் சேர்ந்திடுமே மற்று.

புறம்போகா யோகமாம் பத்தியினால்—வேறு தெய்வங்களையும் பயன்களையும் கருத்தில் கொள்ளாத ப₄க்தியோக₃த்தினால், என்னை—ஸர்வேஶ்வரனான என்னை, மன்ன பயின்று மருவுமவன்—நன்றாக உபாஸித்து ஆராதி₄ப்பவன், தன் அமரப் பேசு குணம் செற்று—தன் ஆத்மாவை அனுப₄விக்கலாம்படி முற்கூறிய ஸத்வம் முதலான மூன்று கு₃ணங்களையும் கடந்து, மற்று—அதற்குமேலே, மாசில் குணம் பிரமமாம் தன்மையினையே சேர்ந்திடும்—பாபமற்றிருக்கை முதலான எட்டு கு₃ணங்களையுடைய பரம்பொருளின் தன்மையையே அடைந்துவிடுவான்.

---

26. 'நாந்யம் கு₃ணேப்₄ய:' (19) என்று தொடங்கி ஏழு ஶ்லோகங்களாலே கு₃ணங்கடந்த நிலைக்குக் காரணமான அப்ரத₄ான ஹேதுக்களைச் சொல்லி, அதற்குக் காரணமான

भा ॥ * नान्यं गुणेभ्यः कर्तारम् (१९) इत्यादिनोक्तेन प्रकृत्यात्मविवेकानुसन्धानमात्रेण न गुणात्ययस्संपत्स्यते, तस्यानादिकालप्रवृत्तविपरीतवासनाबाध्यत्वसंभवात्, माम्—सत्यसङ्कल्पं परम-

---

ப்ரதா4ன ஹேதுவைக் கூறுகிறான் இந்த ஶ்லோகத்தில். அந்த ஏழு ஶ்லோகங்களிலும் தே3ஹத்தையும் ஆத்மாவையும் இவ்வுபாஸகன் பலவகையாகப் பிரித்து அனுஸந்தி4க்கும் முறைகள் சொல்லப்பட்டன. இப்படி எவ்வளவுதான் முயன்று இவன் அனுஸந்தி4த்தாலும் அநாதிகாலமாக இவனோடு பொருந்தியிருக்கும் தே3ஹாத்மாபி4மான வாஸனை இவனது முயற்சிகளைக்கெடுத்து விடும். ஆகையால் அந்த வாஸனையையும் போக்கடிக்கக்கூடிய ப4க்தியோக3த்தினால் எம்பெருமானை உபாஸிப்பதே கு3ணங்கடந்த நிலைக்கு முக்கிய காரணம் என்கிறான். (மாம்) ஸத்ய ஸங்கல்பனாய், பரமகாருணிகனாய், அடியார்கள் விஷயத்தில் வாத்ஸல்ய கு3ணக்கடலாயிருக்கும் என்னை, "பராபி4த்4யாநாத்து திரோஹிதம் ததோ ஹ்யஸ்ய ப3ந்த4விபர்யயௌ" [ப்3ரஹ்ம ஸூ-3-2-4] [பரமாத்ம ஸங்கல்பத்தாலேயே (ஜீவாத்ம ஸ்வரூபம்) மறைக்கப்பட்டுள்ளது. அந்த ஸங்கல்பத்தாலேயன்றோ இந்த ஜீவாத்மாவுக்கு ஸம்ஸாரப3ந்த4மும் மோக்ஷமும் ஏற்படுகின்றன] என்று ப்3ரஹ்ம ஸூத்ரத்தில் கூறியபடி அநாதி3 ஸம்ஸார ப3ந்த4த்தை விளைத்த ப4க3வத் ஸங்கல்பமே அந்தக்கட்டை அடியோடு அவிழ்க்க முடியுமாகையாலே, பரமன் தடையற்ற ஸங்கல்பத்தையுடைய ஸத்ய ஸங்கல்பன் என்று இப்பத3த்தில் அனுஸந்தி4க்க வேண்டும். ஸத்ய ஸங்கல்பனாயிருந்தபோதிலும், அனைவர்க்கும் பொதுவானவனாயிருக்கையாலே மோக்ஷ ஸங்கல்பத்தைச் செய்வானோ? என்று ஐயமுற வேண்டாதபடி அடியார்களிடம் பரம கருணையுடையவனாகையாலே, மோக்ஷ ஸங்கல்பத்தை அவர்கள் திறத்தில் செய்வான் என்று தேறியிருக்கைக்காக, பரம காருணிகனென்றும் இப்பத3த்தில் அனுஸந்தி4க்க வேண்டும். குற்றம் நிறைந்த ஸம்ஸாரிகள் விஷயத்தில் கருணை வெளிப்படுமோ? என்னும் ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, அடியார்கள் திறத்தில் வாத்ஸல்ய கு3ணக்கடலாயிருப்பவன் என்றும் இப்பத3த்தில் அனுஸந்தி4க்க வேண்டும். தன் அடியடைந்தவர்களுடைய குற்றங்களைக் காணாதிருப்பதோடன்றியில் குன்றனைய குற்றம் செ(ய்)யினும் கு3ணமாகக்கொள்ளும் இயல்வுடையவனாகையாலே பரம கருணையாலே அவர்கள் திறத்தில் மோக்ஷ ஸங்கல்பத்தைச் செய்வான் என்று கருத்து. இப்படி பரம கருணையும் ஆஶ்ரித வாத்ஸல்யமும் இருக்கையினாலே ப3ந்த4மோக்ஷங்

कारुणिकमाश्रितवात्सल्यजलधिम्, अव्यभिचारेण - ऐकान्त्यविशिष्टेन भक्तियोगेन च यस्सेवते, स एतान् सत्त्वादीन् गुणान् दुरत्ययान् अतीत्य ब्रह्मभूयाय— ब्रह्मत्वाय कल्पते--ब्रह्मभावयोग्यो भवति; यथावस्थितमात्मानममृतमव्ययं प्राप्नोतीत्यर्थः ॥ २६ ॥

களுக்குப் பொதுவான ஸத்யஸங்கல்பம் அடியார்கள் விஷயத்தில் மோக்ஷத்திற்குக் காரணமாகிறது என்று தாத்பர்யம். (அவ்ய பி₄சாரேண ப₄க்தியோகே₃ந) மற்ற தெய்வங்களின் ஸம்ப₃ந்த₄ மும், ப்ராக்ருத ப₂லன்களின் ஸம்ப₃ந்த₄முமில்லாத ஏகாந்த (அவனொருவனையே பற்றிநிற்கும்) ப₄க்தி யோகத்தாலே. (ப₄க்தியோகே₃ந ச) சகாரம் அனுக்தஸமுச் சயமாய், ப₄க்தியோக₃த்தின் அங்க₃ங்களாக முன்கூறப்பட்ட கர்மஜ்ஞான யோக₃ங்களைச் சொல்லுகிறது. "ஆத்மார்த்தீ₂சேத் த்ரயோSப்யேதே தத்கைவல்யஸ்ய ஸாத₄கா:||" [27] என்று கீ₃தார்த்த₂ ஸங்க்₃ரஹத்தில் கூறியபடியே, மற்ற இரண்டையும் அங்க₃மாகக்கொண்ட கர்ம ஜ்ஞாந ப₄க்தியோக₃ங்கள் மூன் றுமே கைவல்ய மோக்ஷஸாத₄நமாகையாலே சகாரம் 'வா' என் னும் விகல்பப் பொருளுடையதாய், "ப₄க்தியோக₃த்தினலாவது அதைப்போலவே ஸ்வதந்த்ரஸாத₄னங்களான கர்மஜ்ஞான யோக₃ங்களாலாவது என்றும் பொருள் கொள்ளலாம். (ய: ஸேவதே ஸ:) எவனொருவன் என்னை ஆராதி₄க்கிருனே அவன். கர்மஜ்ஞான ப₄க்தியோக₃ங்கள் ப₄க₃வானுக்கு ஆரா த₄னமாயிருப்பவை என்பதும் முன்பே நிரூபிக்கப்பட்டது. (ஏதாந் கு₃ணந் ஸமதீத்ய) கடப்பதற்கு அரியவை என்று முன் கூறப் பட்ட இந்த ஸத்வம் முதலான மூன்று குணங்களையும் நன்குகடந்து,

"தை₃வீ ஹ்யேஷா கு₃ணமயீ மம மாயா து₃ரத்யயா"
[கீ₃தை 7-14]

[என்னுடையதான இந்த முக்குணமயமான ப்ரக்ருதி தேவனுை என்னுல் படைக்கப்பட்டதாகையாலே எவராலும் (தமது முயற்சி யால் மாத்திரம்) கடக்க அரியது] என்று முன்பே கூறினு னன்ரே. (ஸமதீத்ய) அடியோடு கடந்து. முற்கூறிய முயற்சி களால் த்ரிகு₃ண வாஸனையைக் கடக்க முடியாதென்றும், தன்னை ஆராதி₄ப்பதாலேயே அதையும் கடக்கலாம் என்றும் உணர்த்து கிருன். (ப்₃ரஹ்மபூ₄யாய கல்பதே) ப்₃ரஹ்மத்தின் தன்மைகளை அடையத் தகுதிபெற்றவனுகிருன். அபஹதபாப்மத்வம் முதலான ப்₃ரஹ்மத்திற்கு உரிய எட்டு குணங்களும் ஆவிர்ப₄விக்கப்பெற்று

ब्रह्मणो हि प्रतिष्ठाऽहममृतस्याऽव्ययस्य च ।
शाश्वतस्य च धर्मस्य सुखस्यैकान्तिकस्य च ॥ २७

॥ इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु गुणत्रयविभागयोगो नाम चतुर्दशोऽध्यायः ॥ १४ ॥

27. ப்₃ரஹ்மணோ ஹி ப்ரதிஷ்டா₂ஹமம்ருதஸ்யாவ்யயஸ்ய ச ।
ஶாஶ்வதஸ்ய ச த₄ர்மஸ்ய ஸுக₂ஸ்யைகாந்திகஸ்ய ச ॥

ஹி — ஏனெனில், அஹம் - நான், அம்ருதஸ்ய - மரண மற்றதாய், அவ்யயஸ்ய ச - அழிவற்றதான, ப்₃ரஹ்மண:- ஜீவாத்ம ஸ்வரூபத்தை அடைவதற்கு, ப்ரதிஷ்டா₂ - உபாயமாவேன். ஶாஶ்வதஸ்ய த₄ர்மஸ்ய ச (ப்ரதிஷ்டா₂) - ஶாஶ்வத த₄ர்மமான ப₄க்தியோக₃த்தினல் ஸாதி₄க்கப்படும் மிகச்சிறந்த ஐஶ்வர்யத்தை அடைவதற்கும் உபாயமாவேன். ஐகாந்திகஸ்ய ஸுக₂ஸ்ய ச (ப்ரதிஷ்டா₂)- ஜ்ஞானியால் அடையப்படும் பேரின்பத்துக்கும் உபாயமாவேன்.

மரணமற்றதும் அழிவற்றதுமான தன் ஆத்மாவை ஶரீரம் நீங்கிய பின்பு (கைவல்யஸ்த₂ானத்தில்) அனுபவிக்கிருன் என்று கருத்து. "ப்₃ரஹ்மபூ₄த: ப்ரஸந்நாத்மா [18-54] முதலான இடங்களிற்போலே அழிவும் மரணமுமற்றிருக்கை முதலான ஸாம்யங்களையடைவதே இங்கு ப்₃ரஹ்மத்தின் தன்மையை அடைவதாகக் கூறப்படுகிறது. ஜீவப்₃ரஹ்ம ஸ்வரூபைக்யத்தைச் சொல்லுவது பல ஶ்ருதிஸ்ம்ருதிகளோடு முரண்படும் என்று முன்பே காட்டப்பட்டது, இவ்வத்தியாயத்திலும் "தே₃ஹே தே₃ஹிநமவ்யயம்" [14-5] என்று தே₃ஹத்திலிருக்கும் வரையில் முக்குணங்களால் கட்டப்பட்டிருக்கிருன் என்றும், "ஜந்மம்ருத்யுஜராது₃:க்கைர் விமுக்தோऽம்ருதமஶ்நுதே" [14 20] என்று தே₃ஹத்தை விட்டு நீங்கியதும் மோக்ஷத்தையடைகிருன் என்றும் சொல்லப்பட்டதன்றே. அடுத்த ஶ்லோகத்திலும் "அம்ருதஸ்ய அவ்யயஸ்ய ச" என்று அழிவும் மரணமுமற்றிருக்கையே இக்கைவல்ய நிஷ்ட₂ன் அடையும் பயன் என்று சொல்லப்பட்டது குறிக்கொள்ளத்தக்கது. ஆக, இந்த ஶ்லோகத்தால் அங்க₃ங்களோடு கூடிய ஐகாந்திக ப₄க்தியோக₃த்தால் ஆராதி₄க்கப்பட்ட நானே ஸம்ஸாரமோக்ஷத்தை விரும்பும் கைவல்ய நிஷ்ட₂னுக்கு அந்த மோக்ஷத்தை அளிப்பவன் என்று சொல்லப்பட்டதாயிற்று. 26.

27. குன்று வமுதக் குணப்பிரம மாமுயிர்க்கு(ம்)
நன்று மிருப்பிடந்தா னாவ— னின்றருந்
தன்மப் பயனுக்குந் தானொருமை சார்சுகமா
நன்மைக்கு மென்று நயந்து.

நான் - நான், குன்று அமுதக் குணப் பிரமமாம் - அழி யாமையையும் மரணமின்மையையும் குணமாகவுடைய ப்3ரஹ்மம் எனப்படும், உயிர்க்கும் - ஜீவாத்மஸ்வரூபத்தை அடைவதற்கும், நின்று ஆரும் தன்மப் பயனுக்கும்— நிலை யான த4ர்மமான ப4க்தியோக3த்தின் பயனான மிகச் சிறந்த ஐஶ்வர்யத்துக்கும், தான் ஒருமை சார் சுகமாம் நன்மைக் கும்—ஒரு மனமுடைய ஜ்ஞானிகள் அடையும் பேரின்ப மாகிற நற்பயனுக்கும், என்றும்—எக்காலத்திலும், நயந்து—விருப்பத்துடன், நன்றும் இருப்பிடம் தான் ஆவன் —நல்ல உபாயமாவேன்.

---

27. முன் ஶ்லோகத்தில் சொன்ன கைவல்ய மோக்ஷத்தை அளிப்பவன்தானே என்பதை நிலைநிறுத்துவதற்காக, மத்4யம ஷட்கத்தில் கூறியபடி ஐஶ்வர்ய கைவல்ய ப4க3வத் ப்ராப்திகள் மூன்றையும் அளிப்பவன்தானே என்னும் விஷயத்தைக்காட்டி அத்தியாயத்தை நிறைவுபடுத்துகிறான், ஶாரீரகஶாஸ்த்ரத்தில் மோக்ஷத்தை அளிப்பவன் எம்பெருமானே என்பதை நிலை நிறுத்துவதற்காக. "ப2லமத உபபத்தே:" [ப்ரஹ்மஸூ 3-2-37] [இந்தப் பரமபுருஷனிடமிருந்தே போ4க3 மோக்ஷ ப2லன்கள் கிடைக்கின்றன. (அவனுக்கே ப2லத்தைக் கொடுப்ப வனாயிருக்கும் பெருமை) பொருந்தியிருக்கையால்] என்னும் ஸூத்ரத்தில் எம்பெருமானே எல்லாப் பலன்களையும் அளிப்பவன் என்று நிரூபித்தது போன்றது இது. (ஹி) ஏனெனில்; முன் ஶ்லோகத்தில் சொன்னதற்கு இந்த ஶ்லோகம் காரணத்தைக் காட்டுகிறது என்று உணர்த்துகிறது. (அம்ருதஸ்ய அவ்யயஸ்யச ப்3ரஹ்மண: அஹம் ப்ரதிஷ்டா2 ஹி) மரணமற்றதாய் அழியாத தான ஜீவாத்மஸ்வரூபத்தை அடைவதற்கு ஏகாந்த ப4க்தி யோக3த்தாலே ஆராதி4க்கப்பட்ட நானேயன்றோ உபாயமாயிருப் பவன். இங்கு பரம்பொருளான கண்ணன் ப்3ரஹ்மத்துக்குத் தன்னை ப்ரதிஷ்டை2யாகச் சொல்லிக்கொள்வதால், ப்3ரஹ்மத்துக் கும் பரமாத்மாவுக்கும் வேறுபாடு விளங்குகிறபடியால், ப்3ரஹ்மம்

भा ॥ हिशब्दो हेतौ; यस्मादहमव्यभिचारिभक्तियोगेन सेवितोऽमृतस्याव्ययस्य च ब्रह्मणः प्रतिष्ठा, तथा शाश्वतस्य च धर्मस्य—

பரம்பொருளாக முடியாது. யாத₃வப்ரகாஶமதத்தைச் சேர்ந்தவர்கள் 'பே₄தா₃க்தாவாகவும், பே₄தா₃க்₃யமாகவும், ஈஶ்வரனுகவும் மூன்று அம்ஶமாயிருக்கும் ப்₃ரஹ்மத்திற்கு ஈஶ்வராம்ஶம் பெரிதாய் ப்ரத₄ானமாயிருக்கையால் ப்ரதிஷ்டை₂யெனப்படுகிறது' என்று கூறுவதும் பொருந்தாது. ஶாஸ்த்ரங்கள் ஈஶ்வரனையே பரம் பொருளாகக் கூறுகின்றனவாகையாலும், மற்றவையிரண்டையும் பரம்பொருளல்லாதவையாகவே கூறுகிறபடியாலும் இப்பக்ஷம் அடியோடு பொருந்தாது. ஜீவாத்மா பரமாத்மாவுக்கு ப்ரதிஷ்டை₂ யென்றே, விகல்பிதமான (பொய்யான பே₄த₃த்தோற்றமுடைய) ப்₃ரஹ்மத்துக்கு நிர்விகல்பகமான (எவ்வித பே₄த₃முமற்ற) ப்₃ரஹ்மம் ப்ரதிஷ்டை₂ என்றே பொருள்கொள்ளலாமென்று ஶங்கரர் கூறியதும் ஶாஸ்த்ரவிருத்₃த₄மென்று முன்பே நிரூபிக்கப்பட்டிருக்கிறபடியால் பொருந்தாது. மூலப்ரக்ருதியை ப்₃ரஹ்மஶப்₃த₃த்துக்குப் பொருளாகக்கொள்வதும் முன் ஶ்லோகத்தில் சொன்னதற்கு ஹேதுவாகாதாகையால் பொருந்தாது. ஆகையால், "ப்₃ரஹ்மபூ₄யாய கல்பதே" என்று முன் ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட ஜீவனுடைய மோக்ஷநிலையிலுள்ள ஸ்வரூபமே ப்₃ரஹ்மஶப்₃த₃த்தாலே ஔபசாரிகமாக வழங்கப்படுகிறது என்று கொள்ள வேண்டும். அந்த ப்₃ரஹ்ம ஸ்வரூபத்துக்குத் தன்னை ப்ரதிஷ்டை₂யாகச் சொல்லிக் கொள்வதன் மூலம், முமுக்ஷுவானவன் பரம் பொருளுக்கு ஸமானமான பரிஶுத்₃த₄ாத்ம ஸ்வரூபத்தை அடைவதற்கு ஶாஸ்த்ரங்களில் கூறப்பட்ட ஸாத₄னங்களில் தானே ப்ரத₄ானஸாத₄னம் என்று நிர்ணயிக்கிருன். ப்ரதிஷ்டை₂ என்றது ஸாத₄னமென்றபடி. அன்றிக்கே, ப்ரதிஷ்டா₂ ஶப்₃த₃த்துக்கு ஆத₄ாரமென்றும் பொருள் கொள்ளலாம். "ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரஶாஸநே கா₃ர்க்கி₃ ஸூர்யாசந்த்₃ரமஸௌ வித்₄ருதௌ திஷ்ட₂த:" [ப்₃ரு 5-8-2] [கார்க்கி₃! அழியாதவனுகையால் அக்ஷரமெனப்படும் இந்தப் பரமாத்மாவினுடைய நியமனத்தாலேயே ஸூர்யசந்த்₃ரர்கள் த₄ரிக்கப்பட்டுள்ளனர்] என்னும் வேத₃வாக்யத்தையொட்டிக்காணும்போது இந்த ஆத₄ாரத்வம் நியமனத்தை உள்ளடக்கியது என்பது "ஶா ச ப்ரஶாஸநாத்" [1-3-10] [மூலப்ரக்ருதியை தரிப்பதாகிற அதுவும் மேலான நியமனத்தாலேயாகையால் அக்ஷரம் ஜீவனுமாகமாட்டான்] என்று ப்₃ரஹ்மஸூத்ரத்தில் சொல்லப்பட்டது. ஆக இப்படி ஶுத்₃த₄ாத்ம ஸ்வரூபம் எனது நியமனத்துக்கு உட்பட்டதாகையாலே, அந்த ஸ்வரூபத்தை

अतिशयितनित्यैश्वर्यस्य, ऐकान्तिकस्य च सुखस्य — * वासुदेवः सर्वम् (७. १९) इत्यादिना निर्दिष्टस्य ज्ञानिनः प्राप्यस्य सुखस्ये-

---

அடைந்து அனுப₄விப்பது என்னிடம் ப₄க்தி செய்வதாலேயே முடியும் என்று கருத்து. (ஶாஶ்வதஸ்ய த₄ர்மஸ்ய ச) நித்யத₄ர்மமான ப₄க்தியோகத்₃திஞலே கிடைப்பதாய் ப்₃ரஹ்ம கல்பம் வரையில் அனுப₄விக்கக் கூடியதான மிகச் சிறந்ததான ஐஶ்வர்யத்தை அடைவதற்கும் நானே உபாயமாவேன். "அஹம் ப்ரதிஷ்டா₂" என்பதை மூன்ருவது நான்காவது பாத₃ங்களிலும் சேர்த்துக்கொள்ளவேண்டும். த₄ர்மவாசகமான ஶாஶ்வதத₄ர்ம ஶப்₃த₃ம் அதன் ப₂லஜீ லக்ஷணையாலே குறிக்கிறது என்று கொள்ளவேண்டும். இதற்குக் காரணத்தை இந்த ஶ்லோக வ்யாக்யானத்திலேயே மேலே காட்டுவோம். (ஸுக₂ஸ்ய ஐகாந்திகஸ்ய ச) "வாஸுதே₃வஸ்ஸர்வம்" [7-19] என்னுமிடத்தில் ஜ்ஞானிக்கு ப்ராப்யமாகக் காட்டப்பட்ட பேரின்பத்துக்கும் நானே உபாயமாவேன். ஏகாந்திக்குக்கிடைக்கும் ஸுக₂ம் 'ஐகாந்திகம்' எனப்படுகிறது.

"நிரஸ்தாதிஶயாஹ்லாத₃ ஸுக₂ப₄ாவைக லக்ஷணு ।
பே₄ஷஜம் ப₄க₃வத் ப்ராப்தி: ஏகாந்தாத்யந்திகீ மதா ॥"
[வி. பு, 6-5-59]

[தனக்கு மேலில்லாத ஆனந்த₃ரூபமான ஸுக₂மாயிருக்கையையே லக்ஷணமாகக்கொண்டதாய், துன்பம் சிறிதுமற்றதாய். நித்யமானதான பரமபுருஷ ப்ராப்தியே ஸாம்ஸாரிக தாபங்களுக்கு மருந்தாகும்] என்று சொல்லப்பட்ட பேரின்பமே இது என்று விளங்குகிறது. இத்தால், கல்போலே ஜ்ஞாநானந்த₃ங்களற்றுப்போவதே மோக்ஷம் என்னும் நையாயிக மதம் முதலான து₃ர்மதங்கள் தள்ளப்படுகின்றன. "இச்ச₂ா த்₃வேஷ: ஸுக₂ம் து₃:க்க₂ம்" [கீதை 13-6] என்று இந்த கீ₃தையிலேயே ஸுக₂ம் க்ஷேத்ரமாகிற ஶரீரத்தின் காரியமே எனச் சொல்லப்பட்டிருக்கிறதேயெனில்; அங்கு ப்ராக்ருதமான சிற்றின்பம் சொல்லப்பட்டபோதிலும், இங்கு ஐகாந்திகஸுக₂ம் என்று ஏகாந்திகளால் அடையப்படுவதாய், து₃:க்க₂ம் சிறிதுமற்றதான ஸுக₂ம் எனப்படுகையாலே "ரஸம் ஹ்யேவாயம் லப்₃த்₄வா ஆநந்தீ₃ ப₄வதி" [தை ஆன 7] [ரஸஸ்வரூபனை பரமாத்மாவை இந்த ஜீவன் அடைந்து ஆனந்தமுடையவஞகிருன்] முதலான வேத₃வாக்யங்களில் சொல்லப்பட்ட பேரினபமே இது என்று கொள்கிருேம்.

"அஶரீரம் வாவ ஸந்தம் ந ப்ரியாப்ரியே ஸ்ப்ருஶத:"
[ச₂ாந் 8-12 -1]

स्यर्थः। यद्यपि शाश्वतधर्मशब्दः प्रापकवचनः, तथाऽपि पूर्वोत्तरयोः प्राप्यरूपत्वेन तत्साहचर्यादयमपि प्राप्यलक्षकः। एतदुक्तं भवति—

[ஶரீரமற்ற மோக்ஷ நிலையில் ஸுக2து3:க்க2ங்கள் இவனைத் தொடமாட்டா] என்று சில ஶ்ருதிவாக்யங்களில் மோக்ஷநிலையில் தள்ளப்படும் ஸுக2மும் து3:க்க2த்தோடு தோள்தீண்டியாய், ஶரீரகார்யமான சிற்றின்பம் என்று கொள்ளவேண்டும். இனி ஶாஶ்வத த4ர்ம ஶப்3த3த்தின் பொருளைப் பற்றிப் பின்வரும் ஆக்ஷேபம் எழுகிறது:— இங்கு "ஶாஶ்வதஸ்ய த4ர்மஸ்ய" என்று தர்மத்தைப்பற்றிச் சொல்லியிருக்கும்போது அதன் ப2லனை சிறந்த ஐஶ்வர்யத்தை லக்ஷணையாலே பொருள்கொள்வது, எப்படிப் பொருந்தும்? "நாராயண: ஶாஶ்வதத4ர்மகோ3ப்தா" [ப4ார-மோக்ஷ 343-5] முதலான இடங்களில் க்ருதயுக3த4ர்மமாகப் பாஞ்சராத்ரத்தில் சொல்லப்பட்ட த4ர்மத்தையே இங்கு கூறுகிறது என்று கொண்டு, முக்2யார்த்த2த்தையே கொள்ளலாமே. யுக3ம் மாறுகையில் அந்த த4ர்மம் பாஷண்டிகளால் நலிவடையும்போது "யதா3 யதா3 ஹி த4ர்மஸ்ய க்3லாநி:" [கீ3தை 4-7] "த4ர்ம ஸம்ஸ்தா2பநார்த்தா2ய" [கீ3தை 4-8] முதலான இடங்களில் அந்த த4ர்மத்தை நிலைநிறுத்துவதாக கீ3தையில்தானே சொல்லுகிறானாகையாலே, ஶாஶ்வத த4ர்மத்துக்குத் தானே ப்ரதிஷ்டை2 என்று கூறுவதும் பொருந்துகிறது — என்பது அவ்வாக்ஷேபம். இதற்கு ஸமாத4ாநம் பின்வருமாறு:— இந்த ஶ்லோகத்தின் முற்பாதியில் ப்ரகரணத்தையொட்டிக் கைவல்ய மோக்ஷம் சொல்லப்படுவதாகக் கொண்டே தீரவேண்டும். நாலாவது பாத3த்தில் "ஸுக2ஸ்ய ஐகாந்திகஸ்ய" என்று ப4க3வத் ப்ராப்தியாகிற பேரின்பம சொல்லப்படுகிறது என்பது தெளிவு. ஏழு, எட்டாவது அத்தியாயங்களில் சொல்லப்பட்ட ஐஶ்வர்ய கைவல்ய ப4க3வத் ப்ராப்திகளில், நித்யமாயிருந்தபோதிலும் ப4க3வத3நுப4வத்தைக் காட்டிலும் அல்பமான கைவல்ய ஸுக2ம் முற்பாதியிலும், பேரின்பமான ப4க3வத3நுப4வஸுக2ம் நாலாவது பாத3த்திலும் சொல்லப்பட்டிருக்கும்போது, இந்த்3ரன் ப்ரஜாபதி முதலானவர்களுடைய போ4க3த்தைக்காட்டிலும் சிறந்ததாயினும் அல்பமும் அஸ்தி2ரமுமான ஸமக்3ரைஶ்வர்யஸுக2த்தை மூன்றுவது பாத3த்தில் சொல்லுவதாகக் கொள்வதே உசிதம், முன்னும் பின்னும் ப்ராப்யங்களைச் சொல்லுபோது இடையில் ப்ராபகத்தைச் சொல்லுவது பொருத்தமாகாது. ஆகையால் ஶாஶ்வத த4ர்மமான ப4க்தி யோக3த்தால் அடையப்படும் ஐஶ்வர்ய ஸுக2மே மூன்றுவது பாத3த்தில் சொல்லப்படுவதாகக் கொள்ளவேண்டும். க்ருதயுக3த4ர்மத்தைச் சொல்லுவதற்கு இங்கு ப்ரகரணத்தில் இடமில்லை. நாலாவது பாத3த்தில் சொல்லப்பட்ட ப4க3வத் ப்ராப்திக்கு ஸாத4னமாக அனுஸந்தி4க்கத்தக்கது அது.

पूर्वत्र * दैवी ह्येषा गुणमयी मम माया दुरत्यया । मामेव ये प्रपद्यन्ते (७-१४) इत्यारभ्य गुणात्ययस्य तत्पूर्वकाक्षरैश्वर्यभगवत्प्राप्तीनां च भगवत्प्रपत्त्येकोपायतायाः प्रतिपादितत्वादेकान्तभगवत्प्रपत्त्येकोपायो गुणात्ययस्तत्पूर्वकब्रह्मभावश्चेति ॥ २७ ॥

॥ इति श्रीभगवद्रामानुजविरचिते श्रीमद्गीताभाष्ये चतुर्दशोऽध्यायः ॥१४

இங்கு மற்றும் சில கேள்விகள் எழுகின்றன — (1) இங்கு கைவல்யநிஷ்டை$_2$யைப்பற்றியே ப்ரகரணத்தில் பேச்சு வந்திருக்கும் போது, ப்ரகரணத்தில் இல்லாத ஐஶ்வர்யார்த்தி$_2$யைப்பற்றியும் ஜ்ஞானியைப்பற்றியும் இந்தக் கடைசி ஶ்லோகத்தில் சொல்லக் காரணமென்ன? (2) இந்த மூன்று ப$_2$லத்துக்கும் எம்பெருமான் ப்ரதிஷ்டை$_2$யாயிருப்பது முன் ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட அர்த்த$_2$த்துக்கு எப்படிக் காரணமாகும்? (3) ஏற்கனவே ஸித்$_3$தி$_4$த்திருப்பதன்றோ மற்றொன்றுக்குக் காரணமாகும்; மூன்று ப$_2$லத்துக்கும் ப்ரதிஷ்டை$_2$யாயிருப்பவன் என்பது எங்கு ஸித்$_3$தி$_4$த்தது? (4) கு$_3$ணங்களைக் கடந்தாலன்றோ ஏகாந்த ப$_4$க்தி யோக$_3$ம் ஸித்$_3$தி$_4$க்கும். அந்த ப$_4$க்தியோக$_3$த்தினால் கு$_3$ணங் கடந்தநிலை ஸித்$_3$தி$_4$க்குமென்று முன் ஶ்லோகத்தில் சொல்லுவது அந்யோந்யாஶ்ரய தோ$_3$ஷத்துக்கு இலக்காகிறதே என்பவை அக்கேள்விகள். இவற்றுக்கு பதில் பின்வருமாறு — (1) ஏழாமத்தியாயத்தில் "தை$_3$வீ ஹ்யேஷா கு$_3$ணமயீ மம மாயா து$_3$ரத்யயா | மாமேவ யே ப்ரபத்$_3$யந்தே மாயாமேதாம் தரந்தி தே || [கீ$_3$தை 7—14] [என்னுடையதான இந்த முக்குணமயமான ப்ரக்ருதி தே$_3$வனான என்னால் படைக்கப்பட்டதாகையாலே எவராலும் தம் முயற்சியால் மாத்திரம் கடக்கவரிதாயுள்ளது. எவர்கள் என்னையே ஶரணமடைகிறார்களோ, அவர்கள் இந்த ப்ரக்ருதியைக் கடக்கிறார்கள்] என்று தொடங்கி எம்பெருமானிடம் ப்ரபத்தி செய்வதாலேயே கு$_3$ணங்கடந்தநிலை ஏற்பட்டு, அதன்மூலம் ஐஶ்வர்ய அக்ஷர ப$_4$க$_3$வத் ப்ராப்திகள் உண்டாகுமென்று முன்பே கூறப்பட்டது. ஆகையால் ப்ரகரணத்தில் இல்லாததைப் பற்றி இங்கு பேசப்படவில்லை. (2) மூன்று ப$_2$லன்களுக்கும் தானே காரணமென்று கூறுவதிலிருந்து மூன்றிலொன்றான கைவல்யத்துக்குத் தானே உபாயம் என்று தேறுமாகையால் இரண்டாவது கேள்விக்கும் இடமில்லை. (3) மூன்று ப$_2$லன்களுக்கும் நான் காரணமாயிருப்பவன் என்பது ஏழு எட்டு அத்தியாயங்

பகவத் கீதை வெண்பா

(பதினாலாமத்தியாயத்தின் ஸாரத்தைக் கூறும் பாசுரம்)

கட்டுதலுங் கர்த்தாவாந் தன்மையுமக் கட்டவிழ்ப்பும்
விட்டுத் திகழமுதின் மேவுதலுந் - தொட்டுவரு
முக்குணத்தின் சார்வா முயன்றுபதி னாலாமோத்
துக்குமுரை யோரு முணர்ந்து.

வாதிகேஸரி ஜீயர் அருளிய பகவத் கீதை வெண்பாவின்
பதினாலாமத்தியாயம் முற்றிற்று.

தொட்டு வரும் முக்குணத்தின் சார்வா — (அநாதி₃காலமாக உம்மோடு) தொடர்பு கொண்டிருக்கும் முக்குணங்களைப் பற்றிய, கட்டுதலும் — (அவை ஜீவனைக்) கட்டும் முறையும், கர்த்தாவாம் தன்மையும் — (அவற்றுக்குள்ள) செயல் புரியும் தன்மையும், அக்கட்டவிழ்ப்பும் — அந்தக் கட்டு நீங்கும் முறையும், விட்டு திகழ் அமுதின் மேவுதலும் - அக்கட்டு விட்டவுடன் ஒளிவிடும் மரணமற்ற ஆத்மாவை அடைதலும், முயன்று உரை — நன்கு விளக்கப் படும், பதினாலாமோத்துக்கும் — பதினாலாமத்தியாயத்துக்குப் பொருளை, உணர்ந்து ஒரும் — ஆராய்ந்து அறிவீர்களாக.

களிலேயே நன்கு ஸித்₃தி₄த்திருப்பதால் மூன்றுவது கேள்விக்கும் இடமில்லை. (4) முன் எடுத்த [7-14] ஶ்லோகத்தில் "எம்பெருமானிடம் ப்ரபத்திசெய்வது கு₃ணங்கடந்த நிலைக்கும், அதை முன்னிட்டுக்கொண்டு விளையும் ப₄க்தியோக₃த்தால் ஸாதி₄க்கப்படும் மூன்று ப₂லன்களுக்கும் காரணம்" என்று சொல்லப்பட்டது. ப₄க்திக்கு அங்க₃மான அந்த ப்ரபத்தியே முன் ஶ்லோகத்தில் 'ஏகாந்தப₄க்தியோக₃ம்' என்று கூறப்படுகிறது. அந்த ப்ரபத்தியாலேயே கு₃ணங்கடந்த நிலை விளைகிறது; அந்த நிலையால் ஸாத₄ன ப₄க்தியுண்டாகி மூன்று ப₂லன்களும் விளைகின்றன என்று தேறுகிறபடியால் அந்யோந்யாஶ்ரய தோ₃ஷமில்லை ஆக, இந்த ஶ்லோகத்திற்கு இவ்வண்ணமே பொருள்கொள்ளவேண்டும் என்று தேறிற்று.

ஸ்ரீ க்ருஷ்ணஸ்வாமித₃ாஸன் இயற்றிய கீ₃தார்த்த₂
விவரணத்தில் பதினாலாமத்தியாயம் நிறைவுற்றது.

கீதார்த்த ஸங்கிரகம்

(ஸ்ரீவேதாந்த தேசிகர் அருளியது)
பதினைலாமத்தியாயத்தின் ஸாரப் பொருள்

முக்குண மேயுயிர் முற்றவுங் கட்டிட மூண்டமையு
முக்குண மேயனைத் தும்வினை கொள்ள முயன்றமையு
முக்குண மாயை கடத்தலு முக்கதி தந்தளிப்பு
முக்குண மற்ற பிரான்மொழிந் தான்முடி யோன்ற
னக்கே.

முக்குணம் அற்ற பிரான் — (ஸத்வம் முதலான) மூன்று குணங்களுமில்லாத எம்பெருமான், முடியோன் தனக்கு — கிரீடமணிந்த அர்ஜுநனுக்கு, முக்குணமே — (ஸத்துவம் ரஜஸ் தமஸ் என்னும்) மூன்று குணங்களுமே, உயிர் முற்றவும்—ஜீவாத்மாக்கள் அனைத்தையும், கட்டிட— (ஸம்ஸாரத்தில்) அகப்படச்செய்வதற்கு, மூண்டமையும்— காரணமாவதையும், முக்குணமே-அந்த மூன்று குணங்களுமே வினை அனைத்தும் கொள்ள — செய்கை முழுவதையும் (தம்மால் செய்யப்படுவனவாகக்) கொள்ள, முயன்றமையும் — முயற்சி கொண்டிருப்பதையும், முக்குண மாயை — மூன்று குணங்களோடு கூடிய ப்ரக்ருதியின் ஸம்பந்தம், கடத்தலும்-நீங்குவதையும், முக்கதி-(ஐச்வர்யம் கைவல்யம் பகவத்ப்ராப்தி ஆகிய) மூன்று கதிகளையும், தந்து அளிப்பும்-கொடுத்துக் காக்கும்விதத்தையும், மொழிந்தான் — உபதேசித்தான்.

கீதாச்லோகார்த்தச் சுருக்கம்

பதினைலாமத்தியாயம்

ச்லோ. அர்த்தம்

1–2. இவ்வத்தியாயத்தில் கூறப்படும் அறிவைப் புகழ்தல்.

3–4. ஜீவனுக்கு சரீரஸம்பந்தம் ஸ்ருஷ்டியின் தொடக்கத்திலும் அதற்குப் பின்பும் தன்னாலேயே செய்யப்படுகிறது என்று கண்ணன் உரைத்தல்.

5. முக்குணங்களே பிறவிகள் தொடர்வதற்குக் காரணம்.

6-8. ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் மூன்று குணங்களின் தனித்தன்மையையும் அவை ஜீவனைக் கட்டும் முறையையும் விளக்குதல்.

9. இக்குணங்கள் ஜீவனைக் கட்டுவதற்குக் காரணங்களில் முக்கியமானதைக் காட்டுதல்.

10. ஒவ்வொரு ஶரீரத்தில் இக்குணங்களில் ஒவ்வொன்று மேலோங்கியிருப்பதால் அதன் விளைவுகளே அந்த உடலில் உண்டாகின்றன எனக் கூறுதல்.

11-13. முறையே முக்குணங்களும் மேலோங்கி நிற்பதை அவற்றின் கார்யங் கொண்டு அறியலாம் என்று விளக்குதல்,

14-15 முக்குணங்களில் ஒவ்வொன்று மேலோங்கியிருக்கும் போது மரணமடைந்தால் உண்டாகும் பலம்.

16-18. மிகுதியான ஸத்வ குணம் முதலானவற்றாலே விளையும் பலன்களை விளக்குதல். (இதுவரை குணங்கள் ஜீவனைக் கட்டும் முறை விளக்கப்பட்டது)

19. குணங்களின் கர்த்ருத்வம் (செயல் புரியும் தன்மை) அவசியம் அறியத்தக்கது.

20. குணங்களைக் கடந்து நிற்பவன், மரணம், தோற்றம், வான்பிணி, மூப்பு முதலானவை நீங்கப்பெற்று, மரணமற்ற தன் ஆத்மாவை அனுபவிக்கிறான்.

21. குணங்கடந்தவனுடைய உள் வெளி அடையாளங்களைப் பற்றியும், குணங்களைக் கடந்து நிற்பது எப்படி? என்பது பற்றியும் அர்ஜுனனின் கேள்வி.

22-25 அந்தக் கேள்விக்குப் பதிலாக குணங்கடந்தவனின் உள் வெளி அடையாளங்களை விளக்குதல்.

26. குணங்கடந்த நிலைக்குத் தன்னிடம் செய்யப்படும் ஏகாந்த பக்தியே முக்கிய காரணம் என்று விவரித்தல்.

27. ஐஶ்வர்ய கைவல்ய பகவத் ப்ராப்திகள் தன்னாலேயே விளைபவை என நிரூபித்தல்.

பதினாலாமத்தியாயத்தின்
கீதாஶ்லோகார்த்தச் சுருக்கம் நிறைவுற்றது.

ஆளவந்தார் அருளிய

கீதார்த்த ஸங்க்ரஹம்

[பதினைந்தாம் அத்தியாயத்தின் சுருக்கம்]

अचिन्मिश्राद्विशुद्धाच्च चेतनात्पुरुषोत्तमः ।
व्यापनाद्भरणात्स्वाम्यात् अन्यः पञ्चदशोदितः ॥ १९ ॥

19. அசிந்மிஶ்ராத்விஶுத்தாச்ச சேதநாத் புருஷோத்தம :|
வ்யாபநாத்பரணாத் ஸ்வாம் யாத்அந்ய:பஞ்சதஶோதித: ||

அசிந்மிஶ்ராத் (சேதநாத்) — அசேதனமான ப்ராக்ருத ஶரீரத்தோடு சேர்ந்திருக்கும் பத்த ஜீவனைக்காட்டிலும், விஶுத்தாத் சேதநாத் ச — ப்ராக்ருதஶரீரத்திலிருந்து விடுபட்டுப் பரிஶுத்தியடைந்த முக்த ஜீவனைக் காட்டிலும், வ்யாபநாத் — (அவர்களை) வியாபித்திருக்கையாலும், பரணாத் — (அவர்களைத்) தாங்குகையாலும், ஸ்வாம்யாத் — (அவர்களை) உடையவனாயிருக்கையாலும், அந்ய:— வேறுபட்டவனான, புருஷோத்தம:—புருஷோத்தமனான நாராயணன், பஞ்சதஶோதித:— (கீதையின்) பதினைந்தாம் அத்தியாயத்தில் சொல்லப்பட்டான்.

வாதிகேஸரி ஜீயர் அருளிய

பகவத்கீதை வெண்பா— அத்தியாயம்-15.

புருஷோத்தமயோகம்

அத்தியாயப்பொருளின் சுருக்கம்

மன்னு மசித்தின் மருவியமர் சித்தினுமா
றுன்னு முயிர்வகையி லுத்தமனா மன்னியவை
மீதுள் பரந்து பரித்திறையாய் மேவினனை
யோதும் பதினைந்தா மோத்து.

மன்னும் அசித்தின் மருவி அமர் சித்தினும் — அனாதிகாலமாகச் சேர்ந்திருக்கும் அசேதனமான ப்ராக்ருத ஶரீரத்தோடு கூடிய பத்த ஜீவனைக்காட்டிலும், மாறு

॥ अथ पञ्चदशोऽध्यायः ॥ १५ ॥

भा ॥ क्षेत्राध्याये क्षेत्रक्षेत्रज्ञभूतयोः प्रकृतिपुरुषयोः स्वरूपं विशोध्य विशुद्धस्यापरिच्छिन्नज्ञानैकाकारस्यैव पुरुषस्य प्राकृतगुणसङ्गप्रवाहनिमित्तो देवाद्याकारपरिणतप्रकृतिसंबन्धोऽनादिरित्युक्तम् । अनन्तरे चाध्याये पुरुषस्य कार्यकारणोभयावस्थप्रकृतिसंबन्धो गुणसङ्गमूलो भगवतैव कृत इत्युक्त्वा गुणसङ्गप्रकारं सविस्तरं प्रतिपाद्य

உன்னும் உயிர் வகையில் — அவ்வசித்தை விட்டு நீங்கியதாக அறியப்படும் முக்தாத்மாவைக்காட்டிலும், உத்தமனு மன்னி — மேற்பட்டவனுக விளங்கி, அவை மீது உள் பரந்து — அவ்விரண்டையும் வியாபித்து, பரித்து — அவற்றைத்தாங்கி, இறையாய் — அவற்றை உடையவனுய், மேவினனை — பொருந்தியிருக்கும் புருஷோத்தமனை நாராயணனை, பதினைந்தாம் ஓத்து — (கீ$_3$தையின்) பதினைந்தாம் அத்தியாயம், ஓதும் — கூறும்.

ஸ்ரீக்ருஷ்ண ஸ்வாமித$_3$ாஸன் இயற்றிய

கீ$_3$தார்த்த$_2$ விவரணம்

பதினைந்தாம் அத்தியாயம்

முன் அத்தியாயத்தோடு ஸங்க$_3$தியும், இவ்வத்தியாயார்த்த$_2$ச் சுருக்கமும்.

அசேதனமான ஶரீரத்தைப் பற்றி முக்கியமாகச் சொல்லுகையாலே க்ஷேத்ராத்$_4$யாயமெனத்தக்க பதின்மூன்றும் அத்தியாயத்தில் ஶரீரமாகப் பரிணமித்த ப்ரக்ருதி, அந்த ஶரீரத்தோடு கட்டுப்பட்டிருக்கும் ஜீவன் ஆகிய இரண்டு தத்துவங்களினுடைய ஸ்வரூபத்தையும் நன்கு ஆராய்ந்து, இயல்வாக இந்த ஶரீர ஸம்ப$_3$ந்த$_4$மற்றவனுய், அளவற்ற ஜ்ஞானத்தையே வடிவாகக் கொண்டவனுன ஜீவனுக்கு ப்ரக்ருதியின் முக்குணங்களின் சேர்த்தி அனுதி$_3$காலமாக இருந்தபடியாலேயே தே$_3$வ மனுஷ்ய திர்யக் ஸ்த$_2$ாவர ரூபமான ஶரீரங்களோடு தொடர்பு அனுதி$_3$ காலமாகத் தொடர்ந்து வருகிறது என்று சொல்லப்பட்டது. ஜீவனைப் பற்றி முக்கியமாகச் சொல்லும் அடுத்த பதினுலாம் அத்தியாயத்தில் ஜீவனுக்கு முற்கூறிய கு$_3$ண ஸங்க$_3$த்தினுல்

गुणसङ्गनिवृत्तिपूर्वकात्मयाथात्म्यावाप्तिश्च भगवद्भक्तिमूलेत्युक्तम् । इदानीं भजनीयस्य भगवतः क्षराक्षरात्मकबद्धमुक्तविभूतिमत्ताम्, विभूतिभूतात् क्षराक्षरपुरुषद्वयात् निखिलहेयप्रत्यनीककल्याणैकतानतया अत्यन्तोत्कर्षेण विजातीयस्य भगवतः पुरुषोत्तमत्वं च वक्तुमारभते । तत्र तावत्

கார்யநிலையிலும், காரண நிலையிலும் உண்டாகும் ப்ரக்ருதி ஸம்ப$_3$ந்த$_4$ம் எம்பெருமானாலேயே உண்டாக்கப்பட்டது என்று கூறி, கு$_3$ணஸங்க$_3$ம் ஜீவனுக்கு உண்டாகும் முறையை விரிவாக விளக்கி, அந்த கு$_3$ணஸங்க$_3$ம் நீங்கப்பெற்று ஆத்மாநுப$_4$வத்தை உள்ளபடி அடைவது ஏகாந்த ப$_4$க$_3$வத்$_3$ப$_4$க்தியை ஸாத$_4$னமாகக் கொள்வதாலேயே உண்டாகும் என்று சொல்லப்பட்டது. ஈச்வரதத்துவத்தைப் பற்றி முக்கியமாகச் சொல்லும் இந்தப் பதினைந்தாம் அத்தியாயத்தில், "ப$_4$க்தி செய்யத்தக்க எம்பெருமானுக்கு க்ஷரபுருஷனாகிற ப$_3$த்$_3$த$_4$ஜீவனும், அக்ஷர புருஷனாகிற முக்த ஜீவனும் செல்வங்களாயிருப்பவர்கள்; அந்த க்ஷராக்ஷரபுருஷர்களைக் காட்டிலும், எல்லாத்தாழ்வுகளுக்கும் எதிர்த்தட்டாய், நல்ல கு$_3$ணங்கள் அனைத்துக்கும் கொள்கலமாயிருக்கையாலே மிகவும் மேலானவனாய், வேறுபட்டிருக்கும் எம்பெருமானே புருஷோத்தமனாகிறான்" என்று சொல்லத் தொடங்குகிறான். மூன்றாவது ஷட்கம் (கடைசி ஆறு அத்தியாயம்) முதலிரண்டு ஷட்கங்களில் சொல்லப்பட்ட அர்த்த$_2$ங்களை விவரிக்க வந்தது. அதில் முதல் இரண்டு அத்$_4$யாயங்களாலே முதல் ஷட்கத்தில் சொல்லப்பட்ட ப்ரக்ருதிபுருஷர்களைப் பற்றியும், அவற்றின் தன்மைகளைப் பற்றியும் விரிவாக விளக்கப்பட்டது. "அந்த ப்ரக்ருதியும் அதன் கு$_3$ணங்களும் எம்பெருமானாலே உண்டான ஸத்தாஸ்தி$_2$தி ப்ரவ்ருத்திகளையுடையவை. அந்தப் புருஷனும் அநாதி$_3$காலமாக எம்பெருமானிடம் அபசாரப்பட்டிருக்கையாலே ப$_3$த்$_3$த$_4$ நிலையிலிருக்கிறான். அவன் அருளாலேயே மோக்ஷத்தை அடைவான்" என்னும் விஷயங்கள் மத்$_4$யம ஷட்கத்தில் சொல்லப்பட்டன. அந்த ஷட்கத்தில் சொல்லப்பட்ட பரமாத்மாவைப் பற்றி இந்தப் பதினைந்தாம அத்தியாயத்தில் விளக்கப்படுகிறது என்றும் கண்டு கொள்வது. பதினாலாமத்தியாயத்தின் இறுதி ஶ்லோகங்கள் இரண்டாலும் "அவ்யபி$_4$சாரிப$_4$க்தியோக$_3$த்தாலே ஆராதி$_4$க்கப்பட்ட எம்பெருமான் ப$_2$லனை அளிக்கிறான்" என்று கூறப்பட்டது, அந்தப்பரமபுருஷனைப் பற்றி இவ்வத்தியாயம் விளக்குகிறது என்றும ஸங்க$_3$தி (தொடர்பு) காணத்தக்கது. முன் இரண்டு அத்தியாயங்களில் சொல்லப்பட்ட

असङ्गरूपशस्त्रच्छिन्नबन्धमक्षराख्यविभूतिं वक्तुं छेद्यरूपबन्धाकारेण विततमचित्परिणामविशेषमश्वत्थवृक्षाकारं कल्पयन् श्रीभगवानुवाच —

श्रीभगवानुवाच —

ऊर्ध्वमूलमधश्शाखमश्वत्थं प्राहुरव्ययम् ।
छन्दांसि यस्य पर्णानि यस्तं वेद स वेदवित् ॥ १ ॥

ஸ்ரீ ப₄க₃வாநுவாச—

1. ஊர்த்₄வமூலம் அத₄ஶ்ஶாக₂ம் அஶ்வத்த₂ம்
ப்ராஹுரவ்யயம் ।
ச₂ந்த₃ாம்ஸி யஸ்ய பர்ணாநி யஸ்தம் வேத₃ஸ வேத₃வித் ॥

(யம்) அஶ்வத்த₂ம்-யாதொரு ஸம்ஸாரமாகிற அரசமரத்தை, ஊர்த்₄வமூலம்—மேலே வேருடையதாகவும், அத₄ஶ்ஶாக₂ம் கீழே பரவியுள்ள கிளைகளையுடையதாகவும், அவ்யயம்— (ப்ரவாஹரூபமாயிருக்கையால்) அழியாததாகவும், யஸ்ய ச₂ந்த₃ாம்ஸி பர்ணாநி—வேத₃வாக்யங்களை இலைகளாக உடையதாகவும், ப்ராஹு:-(வேத₃ங்கள்) கூறுகின்றனவோ, தம்—அந்த அரசமரத்தை, ய: வேத₃—எவன் அறிகிறானோ, ஸ: வேத₃வித்—அவனே வேத₃த்தை அறிந்தவனாவான்.

ப₃த்₃த₄ முக்தர்கள் எம்பெருமானால் வியாபித்துத் தாங்கப்படும் செல்வங்களாயுள்ளனர் என்று இங்கு கூறப்படுகிறது என்னும் ஸங்க₃தியும் அறியத்தக்கது.

இனி, இவ்வத்தியாயத்தின் தொடக்கத்தில், கேட்போர்கள் எளிதில் புரிந்து கொள்வதற்காக வேத₃வாக்யத்தையொட்டி ஸம்ஸாரமானது ஓர் அரசமரமாகக் கல்பிக்கப்படுகிறது. பற்றின்மையாகிற ஆயுத₄த்தைக் கொண்டு, எங்கும் பரவியிருக்கும் அசித்பரிணாமரூபமான இந்த அரசமரமாகிற ஸம்ஸாரத்தின் ப₃ந்த₄த்தை வெட்டிய பின்பே க்ஷரபுருஷனாகிற ப₃த்₃த₄ ஜீவன் அக்ஷரபுருஷனாகிற முக்த ஜீவனாகிறான் என்று காட்டுவதில் நோக்குடையது இந்த உருவகம்.

மீது முதலாய் மிகுசாகை கீழாக
வோது முலகா முயரரசைப்—போதுந்
தளிர்கள் மறையாகத் தானுணர்வா னந்த
வொளிகொண் மறையுணர்ந்தா னுற்று.

மீதுமுதலாய்—மேலே வேர் உடையதாய், மிகுசாகை கீழாக - பரவியுள்ள கிளைகளைக் கீழே உடையதாய், போதும் தளிர்கள் மறையாக - (பூர்வப4ாக3த்திலுள்ள) வேத3வாக்யங்களைத் தளிர்க்கும் இலைகளாக உடையதாக, ஓதும் - வேத3ங்களில் ஓதப்படும், உலகாம் உயர் அரசை- (ப்ரவாஹரூபமாயிருக்கையால்) அழியாதிருப்பதான ஸம்ஸாரமாகிற அரசமரத்தை, தான் உணர்வான் - அறிகின்ற மனிதன், அந்த ஒளிகொள் மறை உற்று உணர்ந்தான் - மூலப்ரமாணமாய், நித்யமாயிருக்கை முதலான சிறப்புகளை உடையதான வேதத்தை நன்கு அறிந்தவனாவான்.

---

1. ஸம்ஸாரமாகிற அரசமரத்தை அறிந்தவனே வேத3த்தை நன்கு அறிந்தவன் என்கிறான். நன்கு புரிந்து கொள்வதற்காக, வேத3வாக்யங்களை ஒட்டி இங்கு ஸம்ஸாரம் அரசமரமாக உருவகப்படுத்தப்படுகிறது. பரதத்துவமாகிற எம்பெருமானை அறிய விரும்புவதற்குக் காரணமான ஸம்ஸாரவிரக்தி உண்டாவதற்கு இந்த உருவகம் பயன்படுகிறது. எம்பெருமானுடைய விபூ4தியான இதை அறிந்தால், உடையவனான எம்பெருமானை அறியலாம் என்று உணர்த்துவதற்கும் இவ்வுருவகம் பயன்படுகிறது. (யம் அஶ்வத்த2ம்) ஸம்ஸாரமாகிற யாதொரு அரசமரத்தை. 'தம்' என்று பிற்பாதியில் இருப்பதற்குச்சேர 'யம்' என்னும் பத3ம் வருவித்துக்கொள்ளப்படுகிறது. மூன்றாவது ஶ்லோகத்தில் ''ஏநம் அஶ்வத்த2ம் அஸங்க3ஶஸ்த்ரேண த்3ருடே4ந சி2த்வா'' என்று இந்த அரசமரம் பற்றின்மையாகிற ஆயுத4த்தால் வெட்டப்படுவதாகக் குறிக்கையாலே, பற்றுக்கு விஷயமான ஸம்ஸாரமே இங்கு அரசமரமாகக் கற்பிக்கப்படுகிறது என்று நிர்ணயிக்கிறோம். உலகத்தில் காணும் அரசமரத்தைக்காட்டிலும் இந்த அரசமரம் வேறுபட்டதாகவும் ஆஶ்சர்யமாகவும்

இருப்பது என்பதைக் காட்டுவதற்காக இதன் வேர் மேல்நோக்கியும் கிளைகள் கீழ்நோக்கியும் இருப்பதாக உருவகப்படுத்துகிருன். "கு₃ணப்ரவ்ருத்₃த₄ா விஷயப்ரவாளா: ஶாக₂ா:" [ஸத்வாதி₃கு₃ணங்களால் வளர்ந்தவையாய், ஶப்₃த₃ாதி₃ விஷயங்களைத் தளிர்களாக உடையவையான கிளைகள்] என்று அடுத்த ஶ்லோகத்தில் இந்த மரத்தின் கிளைகளை எடுக்கையாலே மூலப்ரக்ருதியே இங்கு அரசமரமாகக் கற்பிக்கப்படுவதாகக் கொள்ளலாமே எனில்: அழியாததாகிற மூலப்ரக்ருதியைப் பற்றின்மையாகிற ஆயுதத்தால் வெட்டப்படுவதாகக் கூறுவது பொருந்ாதாகையாலும், மூலப்ரக்ருதியின் கார்யமான லீலாவிபூ₄தியாகிற ஸம்ஸாரமே பற்றுக்கு நேரே விஷயமாகிறதாகையாலும், மூலப்ரக்ருதியைக் கொள்வதைவிட அதன் கார்யமான ஸம்ஸாரத்தை அரசமரமாகக் கற்பிப்பதாகக் கொள்வதே பொருத்தமானது. இவ்வர்த்த₂மே மஹாப₄ாரதத்திலும் [ஆஶ்வ 35-20] நாரஸிம்ஹபுராணத்திலும் [16-5] விளக்கப்பட்டுள்ளது.

"அவ்யக்தமூலப்ரப₄வ: தஸ்யைவாநுக்₃ரஹோச்ச்₂ரித: |
பு₃த்₃தி₄ஸ்கந்த₄மயஶ்சைவ இந்த்₃ரியாந்தரகோடர: ||
மஹாபூ₄தவிஶாக₂ஶ்ச விஷயை: பத்ரஶாக₂வாந் |
த₄ர்மாத₄ர்மஸுபுஷ்பஶ்ச ஸுக₂து₃:க்க₂ப₂லோத₃ய: ||
ஆஜீவ்ய: ஸர்வபூ₄தாநாம் ப்₃ரஹ்மவ்ருக்ஷஸ் ஸநாதந: |
ஏதத்₃ப்₃ரஹ்ம வநம் சைவ ப்₃ரஹ்மவ்ருக்ஷஸ்ய தஸ்ய தத் ||
ஏதச்சி₂த்வா ச பி₄த்வா ச ஜ்ஞாநேந பரமாஸிநா |
ததஶ்சாத்மரதிம் ப்ராப்ய யஸ்மாந்நாவர்த்ததே புந: ||

[மூலப்ரக்ருதியை மூலகாரணமாக உடையதாய், அதிலிருந்து பரவி வளர்ந்ததாய், மனமாகிற அடிமரத்தை உடையதாய், மற்ற இந்த்₃ரியங்களாகிற பொந்துகளையுடையதாய், பஞ்சமஹாபூ₄தங்களாகிற பெரிய கிளைகளை உடையதாய், ஶப்₃த₃ாதி₃ விஷயங்களாகிற இலைகளையுடைய சிறு கிளைகளை உடையதாய், த₄ர்மம் அத₄ர்மம் ஆகிய மலர்களை உடையதாய், இன்பதுன்பங்களாகிற பழங்களைக் கொண்டதாய், எல்லா ஜீவராசிகளுக்கும் வாழுமிடமாயிருப்பதாய், பழையதாய் ப்₃ரஹ்மாத்மகமான தே₃ஹமாகிற மரம் உள்ளது. இந்த ப்₃ரஹ்மமே இத்தகைய மரங்களடங்கிய ஸம்ஸாரமாகிற வனமாகவும் உள்ளது. இந்த மரத்தை அறிவாகிற பெரிய ஆயுத₄த்தால் வெட்டிப்பிளந்து, திரும்பி வருதல் இல்லாத ப்₃ரஹ்மாநுப₄வமாகிற மோக்ஷத்தை அடைகிருன் ஜீவன்] என்னும் ஶ்லோகங்கள் காண்க. ஒவ்வொரு மனித ஶரீரத்திலும் தலை மேல் பகுதியில் வேர்போலேயும், கைகால் முதலானவை

भा ॥ यं संसाराख्यमश्वत्थम् ऊर्ध्वमूलमधश्शाखमव्ययं प्राहुः श्रुतयः, * ऊर्ध्वमूलोऽवाक्छाख एषोऽश्वत्थस्सनातनः (क. ६-१)

கீழ்ப்பகுதியில் கிளைகள் போலேயும் இருப்பதையிட்டு ஒவ்வொரு மனித ஶரீரத்தையுமே அரசமரமாகக் கற்பிப்பதாகக் கூறினர்கள் சிலர். மற்றும் சிலர் "இந்த ப்₃ரஹ்மாண்ட₃ம் முழுவதும் ஹிரண்ய க₃ர்ப்ப₄ன் எனப்படும் ப்₃ரஹ்மாவுக்கு ஶரீரமாய் 'விராட்' எனப்படுகிறது, அந்த விராட்புருஷனுக்கு த்₃யுலோகம் தலையாகவும், சந்த்₃ர ஸூர்யர்கள் கண்களாகவும், திக்குகள் காதுகளாகவும், ஆகாஶம் இடையாகவும், பூ₄மி பாத₃ங்களாகவும் இருப்பதால், அந்த விராட்டாகிற ப்₃ரஹ்மாண்ட₃மே அரசமரமாக இங்கு கற்பிக்கப்படுகிறது" என்று கொண்டனர். வேறு சிலர் "ஜீவ ராசிகளே அரசமரம்; அவற்றுக்கு வேராக உயரே இருப்பவன் பிரமன்" என்றும் இந்த ஶ்லோகத்துக்குப் பொருள்கொண்டார்கள்; "அத₄ஶ்சோர்த்₄வம் ச" என்னும் அடுத்த ஶ்லோகத்தில் மூல ப்ரக்ருதி தொடக்கமாக, பஞ்சபூ₄தங்கள் ஈறாக உள்ள உலகனைத்தும் மரமாகக் கற்பிக்கப்படுவதாகவும் இவர்கள் கொண்டார்கள். இந்த எல்லா நிர்வாஹங்களும் ஸம்ஸாரம் மிகத் தாழ்ந்தது என்னும் கருத்தைத் தெரிவிப்பவையாகும். இப்படி தாத்பர்யார்த்த₂த்தைக் கொள்வதைவிட ஸம்ஸாரத்தையே நேரே மரமாக உருவகப்படுத்துவதாகக்கொள்வது சிறந்தது. இரண்டாவது ஶ்லோகத்தில் "தஸ்ய" என்றும் மூன்றாவது ஶ்லோகத்தில் "நருபமஸ்ய" என்றும் முதல் ஶ்லோகத்தில் எடுக்கப்பட்ட மரமே அனுவதிக்கப்படுவதால், மூன்று ஶ்லோகங்களிலும், ஸம்ஸாரமாகிற ஒரே மரம் கூறப்படுகிறது என்று கொள்வது மிகப்பொருத்தம். (ஊர்த்₄வ மூலம் அத₄:ஶாக₂ம் அவ்யயம் ப்ராஹு:) மேலே வேரையுடையதாகவும், கீழே கிளைகளையுடையதாகவும், அழிவற்றதாகவும் வேத₃வாக்யங்கள் கூறுகின்றனவோ, இங்கு 'ப்ராஹு:' (கூறுகின்றன) என்றதற்கு 'கர்த்தா'வாக (எழுவாயாக) இருள் துயக்கு மயக்கு மறப்புக்களையுடைய மற்றவர்களைக் கூறுவதைக் காட்டிலும் அபௌருஷேயங்களாய், முற்கூறிய எந்த தோ₃ஷங்களுமில்லாத வேத₃ங்களைக் கொள்வதே மிகப்பொருத்தமானது. வேத₃ங்கள் அப்படி எங்கே கூறுகின்றன? எனில்; ஊர்த்₄வ மூலோऽவாக்ச₂ாக₂ ஏஷோऽஶ்வத்த₂ஸ் ஸநாதந:" [கட₂6-1]

* ऊर्ध्वमूलमवाक्छाखं वृक्षं यो वेद संप्रति (यजु आ १. ११. ५.) इत्याद्याः । सप्तलोकोपरिनिविष्टचतुर्मुखादित्वेन तस्योर्ध्वमूलत्वम् । पृथिवीनिवासिसकलनरपशुमृगक्रिमिकीटपतङ्गस्थावरान्ततया अधश्शाखत्वम् । असङ्गहेतुभूतादासम्यग्ज्ञानोदयात् प्रवाहरूपेणाच्छेद्य-

---

[மேலே வேருடையதாய், கீழே கிளைகளையுடையதாய், பழமையதாயிருக்கும் அரசமரம போன்றது இது] "ஊர்த்$_4$வமூலமவாக்சா$_2$க$_2$ம் வ்ருக்ஷம் யோ வேத$_3$ ஸம்ப்ரதி" [யஜு ஆர 1-11-5] [மேலே வேருடையதாய், கீழே கிளைகளையுடையதான மரம்போல் உள்ள இதை எவன் இப்போது அறிகிருனே] என்னும் இரு வாக்யங்கள் காணலாம். முதல் வாக்யத்தில் "ஏஷ." என்று ஜீவனைக் கூறுகையால் அங்கு ஸம்ஸாரம் குறிக்கப்படவில்லையே எனில்; ஶரீரத்தோடு கூடிய ஜீவனே தலையாகிற வேரை மேலேயும், கைகால்களாகிற கிளைகளைக் கீழேயும் உடைய அரசமரமாகக் குறிக்கப்படுகிருன் ஆகையாலே ஜீவனுடைய ஶரீரம்ஶமும் அதனல் விளையும் ஸம்ஸாரமும் அரசமரமாகக் குறிக்கப்படுவதாகவே கொள்ள வேண்டும். முதல் வாக்யத்தில் "ஶ்வோ ந ஸ்த$_2$ாஸ்யதி இதி அஶ்வத்த$_2$" என்னும் வ்யுத்பத்தியாலே மறுநாளைக்கு இருக்கும் என்று உறுதி சொல்ல முடியாத ஸம்ஸாரமே அஶ்வத்த$_2$மாகக் கூறப்படுகிறது, 'மோக்ஷமடைய விரும்புகிறவனுல் இது வெட்டப்படவேண்டும்' என்ற கருத்துத்தோன்ற இரண்டாம் வாக்யத்தில் பொதுவாக வ்ருக்ஷம் (மரம்) என்று இந்த ஸம்ஸாரம் குறிக்கப்படுகிறது என்று கண்டுகொள்வது. (ஊர்த்$_4$வ மூலம்) இந்த ஸம்ஸாரமாகிறமரம்—ஏழுலகங்களில் உயரே இருப்பதான ஸத்யலோகத்தில் வாழ்பவனுய், வ்யஷ்டிஸ்ருஷ்டிக்குக் காரணமாயிருப்பவனை நான்முகனை மூலமாகக் கொண்டதாகையாலே இதனுடைய வேர் உயரேயுள்ளது என்று கூறப்படுகிறது. (அத$_4$:ஶாக$_2$ம்) பூமியிலும் அதற்குக் கீழேயுள்ள உலகங்களிலும் வாழும் மனிதர், பசுக்கள், மிருகங்கள், புழுப்பூச்சிகள். பறவைகள், தாவரங்கள் முதலான அனைத்துமாக இந்த ஸம்ஸாரம் கீழ் நோக்கிப் பரவியிருப்பதால் இது கீழ் நோக்கிப் பரவிய கிளைகளையுடையதாகச் சொல்லப்படுகிறது. (அவ்யயம்) அழிவற்றது. மூன்றுவது ஶ்லோகத்தில் இது பற்றின்மையாகிற ஆயுத$_4$த்தால் வெட்டப்படுவதாகக் கூறியிருக்கையில்,

श्वेनाऽप्ययत्वम् यस्य चाश्वत्थस्य छन्दांसि पर्णान्याहुः छन्दांसि-श्रुतयः। * वायव्यं श्वेतमालभेत भूतिकामः (यजु. २ १. १.)* ऐन्द्राग्नमेकादश-कपालं निर्वपेत्प्रजाकामः (यजु २ २. १.) इत्यादिश्रुतिप्रतिपादितैः

இங்கு அழிவற்றது என்று சொல்லுவது எப்படி ஒட்டும்? எனில்: பற்றின்மையாகிற ஆயுத$_4$த்தால் ஒரு சிலர் இந்த ஸம்ஸாரத்தை வெட்டி மோக்ஷமடைந்தாலும், அனந்த ஜீவர்கள் ஸம்ஸாரத்தில் வாழ்கிறபடியாலும், உட்ருங்காலத்தில் வாழப்போகிறபடியாலும், ப்ரளய காலத்தில் ஸூக்ஷ்ம நிலையாகிற அழிவை அடைந்தாலும் மறுபடி ஸ்ருஷ்டி காலத்தில் ஸ்தூ$_2$ல நிலையையடைந்து இது உண்டாகப் போகிறபடியாலும், இப்படி ப்ரவாஹரூபேண நித்யமாயிருக்கையைவிட்டு அழிவற்றது என்று சொல்லப்படுகிறது. பற்றின்மை காரணமாக உண்டாகும் நல்லறிவு விளைந்த பின்பே பல கோடியில் ஒருவரால் இந்த ஸம்ஸாரம் தம்மைப் பொறுத்த வரையில் வெட்டப்படுகிறதேயொழிய எம்பெருமானுக்கு விளையாட்டுக் கருவியான இந்த ஸம்ஸாரத்தை அடியோடு அழிக்க முடியாதன்றோ. (ச$_2$ந்த$_3$ாம்ஸி யஸ்ய பர்ணநி) வேத$_3$த்தின் பூர்வ ப$_4$ாக$_3$த்திலுள்ளவாக்யங்கள் இந்த ஸம்ஸாரமாகிற அரச மரத்துக்கு இலைகளாயுள்ளன என்று கருத்து, எப்படியெனில்: இலைகளே மரத்தின் உண்மை வடிவத்தை மறைத்து மரங்களுக்கு ஸூர்யனின் ஒளியைப் பெற்றுப் பயன்படச் செய்வதன் மூலமும், ம்வாஸத்துக்கு (மூச்சுவிடுவதற்கு) உறுப்பாயிருப்பதன் மூலமும், மரங்கள் வளர்வதற்குக் காரணமாகின்றன. இலைகள் உதிர்ந்து விட்டால் மரம் பட்டுப்போவதையும் பார்க்கிறோம். இதுபோலவே- வேத$_3$த்தின் பூர்வப$_4$ாக$_3$த்திலுள்ள "வாயவ்யம் ம்வேதமாலபே$_4$த பூ$_4$திகாம:" [யஜுர் 2-1-1] [செல்வத்தை விரும்புகிறவன் வாயு தேவதையைக்குறித்து ம்வேதயாக$_3$த்தைச் செய்யக்கடவன்] "ஐந்த்$_3$ராக்$_3$நமேகாத$_3$ம கபாலம் நிர்வபேத் ப்ரஜாகாம:" [யஜுர் 2-2-1] [குழந்தையை விரும்புகிறவன் இந்த்$_3$ரன் அக்$_3$னி ஆகிய இருவரையும் தே$_3$வதையாகக் கொண்ட ஏகாத$_3$ம கபாலயாக$_3$த்தைச் செய்யக்கடவன்.] முதலான வேத$_3$ வாக்யங்களில் சொல்லப்பட்ட காம்ய கர்மங்களாலேயே இந்த ஸம்ஸாரமாகிற மரம் வளர்கிறது. இந்த வாக்யங்கள் 'ஸம்ஸாரமாகிற மரம் பற்றின்மையால் வெட்டத்தக்கது' என்னும் உண்

काम्यकर्मभिर्वर्धतेऽयं संसारवृक्ष इति छन्दांस्येवास्य पर्णानि । पर्णैर्हि

மையை மறைக்கையாலும் இலைகளோடு அவற்றுக்கு ஒற்றுமை யுள்ளது. அதனாலேயே "ச2ாத3யதி இதி ச2ந்த3:" [மறைக்கையாலே 'ச2ந்த3ஸ்' (மறை) எனப்படுகிறது வேத3ம்] என்னும் வ்யுத்பத்தியாலே மறைப்பது என்னும் பொருளையுடைய ச2ந்த3ஶ்ஶப்3த3ம் இங்கு வழங்கப்பட்டது. இலைகளோடு உள்ள இந்த ஒற்றுமைகளைக் கருதி, "வேத3வாத3ரதா:" [கீ3தை 2:42] முதலான இடங்களிற்போலே, ச2ந்த3ஶ்ஶப்3த3ம் இங்கு ஸம்ஸாரத்தின் உண்மை நிலையை மறைப்பவையாய், அதை வளர்ப்பவையான பூர்வபா4க3வாக்யங்களைக் குறிப்பதாகவே கொள்ளவேண்டும். (தம் ய: வேத3 ஸ: வேத3வித்) இத்தகைய ஸம்ஸாரமாகிற அரச மரத்தை எவன் அறிகிறானோ, அவனே வேத3த்தை அறிந்தவனாவான். இங்கு ஓர் ஆக்ஷேபம் பின்வருமாறு எழுகிறது:— ஸம்ஸாரமோ அரசமரமோ வேத3ங்களாகமாட்டா. ஆகையால், 'ஸம்ஸாரமாகிற அரசமரத்தை அறிந்தவன் வேத3த்தை அறிந்தவன்' என்று கூறுவது பொருந்தாது. ஆகையால், "ஆத்3யம் யத் த்ர்யக்ஷரம் ப்3ரஹ்ம த்ரயீ யஸ்மின் ப்ரதிஷ்டி2தா । ஸ கு3ஹ்யோऽந்யஸ்த்ரிவ்ருத்3வேதோ3 யஸ்தம் வேத3 ஸ வேத3வித் ॥" [மநு 11-265] [வேத3ஸாரமாய் அகார உகார மகாரங்களாகிற மூன்று அக்ஷரங்கள் கொண்டதான ப்ரணவம் (பிரமனால்) முதலில் உச்சரிக்கப்பட்டது. மூன்று வேத3ங்களும் அதில் நிலை நிற்கின்றன. அது பரமரஹஸ்யம்; மூன்று வேத3ங்களும் அப்படியல்ல; அந்த ப்ரணவத்தை அறிந்தவன் வேத3த்தை அறிந்தவனாவான்] என்னுமிடத்தில் சொல்லப்பட்ட வேத3 ஸாரமான ப்ரணவமே இங்கு அரசமரமாகக் கற்பிக்கப்படுகிறது என்று கொள்ளலாம். 'ப்ரணவத்தின் அர்த்த4 மாத்திரை ஜக3த்காரணமான பரமபுருஷனைச் சொல்லுவது' என்று வேத3ம் கூறுகையால், அது உயரேயிருக்கும் வேரையுடையது என்று சொன்னது பொருந்துகிறது. முதல் மூன்று மாத்திரைகளைக் கீழேயிருக்கும் கிளைகளாகக் கொள்ளலாம். அன்றிக்கே, க்ருதயுக3த்தில் நடையாடிவந்ததாய், பாஞ்சராத்ரத்துக்கு மூலமானதான மூல

वृक्षो वर्धते । यस्तमेवंभूतमश्वत्थं वेद, स वेदवित् । वेदो हि

வேத3ம் எனப்படும் ஏகாயநஶாகை2யே இங்கு அரசமரமாகக் கற்பிக்கப்படுவதாகவும் கொள்ளலாம். ஆதி3யான மூல வேத3மாகையாலே அதை வேரை உயரே கொண்டதாகவும், அதிலிருந்து பரவிய மற்ற வேத3ங்களைக் கீழே கிளைகளாகக் கொண்டதாகவும் உருவகப்படுத்துவதும் பொருந்துகிறது. 'ஊசியானது பல இலைகளைக் கோத்துத் தைப்பது போலே ப்ரணவம் எல்லா வேத3ங்களையும் கோத்து இணைக்கிறது' என்று ஒரு வேத3வாக்யம் கூறுகையாலே, "ப்ரணவமாகிற அரச மரத்துக்கு வேத3 வாக்யங்கள் இலைகள்" என்றதும் ப்ரணவ விஷயத்தில் பொருந்துகிறது. ஏகாயநவேத3ம் நாராயணனையே சொல்லும் வேதாந்த ரூபமாயிருப்பதால், பூர்வபா4க3வாக்யங்கள் அதை இலைகள் போல் வளர்ப்பதாகவும் மறைப்பதாகவும் இருக்கின்றன என்று கூறுவதும் பொருந்தும்.

"மஹதோ வேத3வ்ருக்ஷஸ்ய மூலபூ4தோ மஹாநயம் |
ஸ்கந்த4பூ4தா ருகா3த்3யாஸ்தே ஶாகா2 பூ4தாஸ்ததா2 பரே ||"

[இதிஹாஸஸமுச்சயம் 1-24] [வேத3மாகிற பெரிய மரத்துக்கு இந்த மூல வேத3ம் பெரிய வேராயிருப்பது. ருக் முதலான வேத3ாந்த பா4கங்கள் அடிமரமாயுள்ளன; பூர்வபா4க3ங்கள் கிளைகளாயுள்ளன] என்னும் வசனமும் இந்த கீ3தா ஶ்லோகத்தை மூலவேத3 பரமாகக் கொள்வதற்கு ஆதா4ரமாயுள்ளது. ஆகையால் 'ப்ரணவத்தையோ அல்லது மூல வேத3த்தையோ அறிந்தவனே வேத3மனைத்தையும் அறிந்தவன்' என்று பொருள்கொள்வதே பொருந்தும், ('வேத3த்தோடு எத்தொடர்பும் இல்லாத) ஸம்ஸாரத்தை அறிந்தவன் வேதத்தை அறிந்தவனாவான்' என்று பொருள் கொள்வது சிறிதும் பொருந்தாது — என்பது அவ்வாக்ஷேபம். இதற்கு ஸமாதா4னம் பின்வருமாறு :— இங்கு வேத3 ஶப்3த3ம் இந்த ஸம்ஸாரமாகிற மரத்தை வெட்டுவதற்கு உபாயத்தைக் கூறும் வேத3ாந்த பா4க3த்தைக் குறிக்கிறது. வெட்ட வேண்டிய மரத்தைப் பற்றி அறிவது, வெட்டுவதற்கு உபாயத்தை அறிவதற்கு

संसारवृक्षच्छेदोपायं वदति; छेद्यवृक्षस्वरूपज्ञानं छेदनोपायज्ञानोपयोगीति वेदविदित्युच्यते ॥ १ ॥

உதவுமாகையாலே அவ்வுபாயத்தைக் கூறும் வேத3ாந்தபா4க3த்தை அறிந்தவனாக மரத்தை அறிந்தவன் கூறப்படுகிறான். ஆக்ஷேபத்தில் சொன்ன பொருள்கள் பொருந்தமாட்டா என்பதைப் பின் வரும் காரணங்களால் அறியலாம்:— (1) மூன்றாவது ஸ்லோகத்தில் இந்த மரம் பற்றின்மையாகிற ஆயுத4த்தால் வெட்டப்படுவதாகக் கூறுவது ப்ரணவத்தையோ அல்லது மூல வேத3த்தையோ மரமாகக் கொண்டால் பொருந்தாது என்பது வெளிப்படை. (2) அந்த மரத்தை வெட்டிவிட்டுப் பரமபத3ம் தேடத் தக்கது என்று நாலாவது ஸ்லோகத்தில் கூறியிருப்பதும் பொருந்தாது. "ஶப்3த3ப்3ரஹ்மணி நிஷ்ணாத: பரம்ப்3ரஹ்ம அதி4க3ச்ச2தி" [வி. பு. 6-5 64] என்னும் வசனமும் "ஶப்3த3 ப்3ரஹ்மமான ப்ரணவம் முதலானவற்றில் ஈடுபடுபவன் பரப்3ரஹ்மத்தை அடைகிறான்" என்று கூறிற்றேயொழிய 'அதை வெட்டுபவன் பரப்3ரஹ்மத்தை அடைகிறான்' என்று கூறவில்லையே. ஆகையால், ஸம்ஸாரத்தையே இங்கு மரமாகக் கூறுவதாகக் கொள்ளவேண்டும்; ப்ரணவம், மூலவேத3ம் முதலானவற்றை மரமாகச் சொல்லுவது பொருந்தாது. வெட்ட வேண்டிய ஸம்ஸாரத்தைப் பற்றி அறிவது, வேத3ாந்தங்களில் சொல்லப்படும் மோக்ஷோபாயஜ்ஞானத்துக்கு உதவுகையால் அதை அறிந்தவன் வேத3ாந்தத்தை அறிந்தவனாக இங்கு புகழப்படுகிறான். ஸம்ஸாரமாகிற மரத்தை உள்ளபடி அறிவது அதில் வைராக்3யத்தை உண்டாக்கி மோக்ஷத்திற்கு உறுப்பாகிறது. எம்பெருமானுடைய செல்வமான ஸம்ஸாரத்தை அறிவது அதை உடையவனான அவனை அறிவதற்கும் உறுப்பாகிறது. இக்கருத்தைத் திருவுள்ளத்திற்கொண்டே நம்மாழ்வாரும் "யாதானும் ஒன்றறியில் தன்னுக்கில் என்கொலோ" [பெரிய திருவ 33] என்று அருளிச்செய்தார். இப்படி வேதாந்தத்தால் சொல்லப்படும் மோக்ஷோபாயத்தையும், பரம்பொருளையும் அறிவதற்கு உறுப்பாகையால் ஸம்ஸாரமாகிற மரத்தை உள்ளபடி அறிந்தவன் வேத3ாந்தத்தை அறிந்தவன் என்று கூறுவது மிகப்பொருத்தமேயாகும். 1,

अधश्चोर्ध्वं च प्रसृतास्तस्य शाखा गुणप्रवृद्धा विषयप्रवालाः ।

*2 அத₄ஶ்சோர்த்₄வம் ச ப்ரஸ்ருதாஸ்தஸ்ய ஶாகா₂
கு₃ணப்ரவ்ருத்₃தா₄ விஷயப்ரவாளா: ।

தஸ்ய—அந்த அரசமரத்தினுடைய, ஶாகா₂:—(மேலும் சில) கிளைகள், கு₃ணப்ரவ்ருத்₃தா₄:—ஸத்வம் முதலான கு₃ணங்களால் வளர்கின்றவையாய், விஷயப்ரவாளா:—ஶப்₃த₃ம் முதலான விஷயங்களைத் தளிர்களாகவுடையவையாய், அத₄ஶ் ச ஊர்த்₄வம் ச ப்ரஸ்ருதா:— கீழும் மேலும் பரவியுள்ளன.

भा ॥ तस्य - मनुष्यादिशाखस्य वृक्षस्य तत्तत्कर्मकृता अपराश्चाधश्शाखाः पुनरपि मनुष्यपश्वादिरूपेण प्रसृता भवन्ति ; ऊर्ध्वं च

---

*2. சென்ற ஶ்லோகத்தில் பிரமன் செய்யும் நைமித்திக ஸ்ருஷ்டியை அனுஸரித்து ஸம்ஸாரம் ஒரு அரசமரமாக உருவகப்படுத்தப்பட்டது. இந்த ஶ்லோகத்தில் நித்ய ஸ்ருஷ்டியை அநுஸரித்து அந்த உருவகம் மேலும் நீட்டிக்கப்படுகிறது (தஸ்ய) முன் ஶ்லோகத்தில் சொல்லப்பட்டபடி மனுஷ்யர் முதலான கிளைகளையுடைய அந்த ஸம்ஸாரமாகிற அரசமரத்துக்கு. (ஶாகா₂:) அந்த மனுஷ்யர்கள் முதலானவர்களுடைய கர்மங்களால் ஏற்பட்ட மற்றும் சில கிளைகள். முன் ஶ்லோகத்தில் சொன்ன ஶாகா₂ஶப்₃த₃த்தோடு புநருக்தி ஏற்படாமைக்காக இங்கு வேறு சில கிளைகள் சொல்லப்படுவதாகக் கொள்ளவேண்டும். சென்ற ஶ்லோகத்தில் "அத₄ஶ்ஶாக₂ம்" என்று கீழே கிளைகள் உள்ளதாகக் கூறியதற்கு மாறாக "அத₄ஶ் சோர்த்₄வம் ச ப்ரஸ்ருதாஸ் தஸ்ய ஶாகா₂:" என்று இங்கு அம்மரத்தின் கிளைகள் கீழும் மேலும் பரவியுள்ளன என்று கூறுகையால், அங்கு சொல்லப்பட்ட நைமித்திக ஸ்ருஷ்டியைக் காட்டிலும் வேறுபட்ட நித்ய ஸ்ருஷ்டி இங்கு சொல்லப்படுவதாகக்கொள்ள வேண்டும். (அத₄ஶ்ச ஊர்த்₄வம் ச ப்ரஸ்ருதா;) நித்ய ஸ்ருஷ்டியில் பாபம் காரணமாக மனுஷ்யர், பசு, முதலான மேலும் தாழ்ந்த பிறவிகளை அடைய இடமுள்ளது; புண்யம் காரணமாக க₃ந்த₄ர்வர், யக்ஷர், தே₃வர் முதலான உயர் பிறவிகளை எடுக்கவும் இடமுண்டு. இந்தத் தாழ்ந்த பிறவிகள் இங்கு கீழ்நோக்கிப்

गन्धर्वयक्षदेवादिरूपेण प्रसृता भवन्ति। ताश्च गुणप्रवृद्धाः गुणैः सत्त्वादिभिः प्रवृद्धाः, विषयप्रवालाः — शब्दादिविषयपल्लवाः ॥ *२ ॥

கீழ்தனிலு மேலுங் கிளைகளதுக் குப்பரந்து
தாழ்வில் குணத்துயருஞ் சார்புலன்கள்—சூழ்துளிரா
மூலங்கீ ழும்பரக்கு முன்னை வினைத்தொடர்பாய்
ஞாலத்தின் மேலமர்ந்து நன்கு. 2.

பரவும் கிளைகளாகவும், உயர் பிறவிகள் மேல்நோக்கிப் பரவும் கிளைகளாகவும் உருவகப்படுத்தப்படுகிறது. ஆலமரமானது உயரே பரவும் கிளைகளை உடையதாயிருந்தபோதிலும் விழுதுகள் மூலம் மறுபடி கீழேயும் பரவுதைக் காண்கிறோம். அந்த மரத்தின்மேல் பறவைகள் எச்சமிட்டு விதைகள் விழும்போது மறுபடி அதற்குமேலேயும் கிளைகள் பரவுவதைக் காண்கிறோம். அதுபோலவே கீழ்நோக்கிப்பரவிய கிளைகளையுடைய ஸம்ஸாரமாகிற அரசமரத்துக்கும் மறுபடியும் கீழ்நோக்கியும் மேல்நோக்கியும் கிளைகள் வளர்ந்து பரவுகின்றன என்று கருத்து (கு₃ண ப்ரவ்ருத்₃த₄ா:) முன் அத்தியாயங்களில் சொன்ன ரீதியில் ஸத்வ ரஜஸ்தமோ கு₃ணங்கள் மேன்மேலே பிறவிகளை விளைக்கின்றன வாகையாலே, தே₃வர், மனிதர் முதலான கிளைகள் இங்கு கு₃ணங்களால் வளர்வதாகக் கூறப்படுகிறது. கு₃ணங்கள் வளர்ச்சிக்குக் காரணமான நீரின் ஸ்த₂ானத்திலோ, அல்லது அடிமரத்தின் ஸ்த₂ானத்திலோ உள்ளதாக இங்கு கொள்ளலாம். (விஷய ப்ரவாளா:) ஶப்₃த₃ ஸ்பர்ஶ ரூப ரஸ க₃ந்த₄ங்களாகிற விஷயங்களைத் தளிர்களாகவுடையவை அக்கிளைகள் என்கிறது. ஸம்ஸாரமாகிற அரசமரத்தின் தளிர்களாகச் சொல்லப்படுகையாலே, இங்கு விஷயங்கள் என்று ஸம்ஸாரத்தில் அனுப₄விக்கப்படும் ஶப்₃தா₃தி₃ விஷயங்களைச் சொல்வதாகக் கொள்வதே பொருத்தம். ஆத்மா பரமாத்மா அறிவு முதலான மற்ற விஷயங்களைக் கொள்வது பொருத்தமல்ல, கிளைகளில் தளிர்கள்போலே, ஶப்₃தா₃தி₃ விஷயங்களே ஸம்ஸார வ்ருக்ஷக்கிளைகளில் அனுப₄விக்கத்தக்க இனிய விஷயங்களாயிருக்கின்றனவன்றோ. ப்ரவாள ஶப்₃த₃ம் பவழத்தையும் குறிக்குமாறலும் பவழம் மரத்தில் முளைப்பதல்லாமையாலே அப்பொருள் பொருந்தாது. ஆகையால் ப்ரவாள ஶப்₃த₃த்துக்கு மரத்தில் முளைக்கும் தளிர் என்றே பொருள்கொள்ள வேண்டும். *2.

भा ॥ कथमित्यत्राह —

अधश्च मूलान्यनुसन्ततानि कर्मानुबन्धीनि मनुष्यलोके ॥ २ ॥

2.* அத₄ஶ்ச மூலாந்யநுஸந்ததாநி
கர்மநுாப₃ந்தீ₄நி மநுஷ்யலோகே ।

(ஸம்ஸாரமாகிற அந்த அரசமரத்துக்கு) அத₄: மநுஷ்யலோகே ச — கீழுள்ள மனிதர்களின் உலகிலும், கர்மாநுப₃ந்தீ₄நி—கர்மக்கட்டுகளாகிற, மூலாநி—வேர்கள், அநுஸந்ததாநி – பரவியுள்ளன.

भा ॥ ब्रह्मलोकमूलस्यास्य वृक्षस्य मनुष्याग्रस्य, अधः मनुष्यलोके च, मूलान्यनुसन्ततानि । तानि च कर्मानुबन्धीनि - कर्माण्येवानुबन्धीनि

அதுக்கு—ஸம்ஸாரமாகிற அந்த மரத்துக்கு கிளைகள்—(பல்வகைப்பிறவிகளாகிற) கிளைகள், கீழ்தனிலும் மேலும்—கீழேயும் மேலேயும், பரந்து—(மறுபடியும்) பரவி, தாழ்வு இல் குணத்து உயரும் – என்றும் குறையாத ஸத்வரஜஸ் தமோகு₃ணங்களாலே வளர்கின்றன; சார்புலன்கள்சூழ் தளிராம்—அனுப₄விக்கத்தக்க ஶப்₃த₃ம் முதலான விஷயங்கள் அக்கிளைகளைச் சூழ்ந்து முளைத்திருக்கும் தளிர்களாகின்றன; கீழும்—கீழேயுள்ள, ஞாலத்தின்மேல்—பூ₄மியின் மேல்; முன்னை வினைத்தொடர்பாய் – பூர்வகர்மப₃ந்த₄ங்களாகிற, மூலம்—அம்மரத்தின் வேர்கள், நன்கு அமர்ந்து பரக்கும்—உறுதியாக ஊன்றிப் பரவுகின்றன.

2*. "ஸத்ய லோகத்திலுள்ள நான்முகனையே வேராகவும், கீழுலகங்களைக் கிளைகளாகவுங்கொண்ட அரசமரமாக இந்த ஸம்ஸாரத்தை வர்ணித்தது பொருந்துகிறது. இரண்டாவது ஶ்லோகத்தின் முற்பாதியில் 'மறுபடியும் இம்மரத்துக்கு மேலும் கீழும் கிளைகள் பரவிநிற்கின்றன' என்று கூறுவது எப்படிப் பொருந்தும்?" என்னும் கேள்விக்கு பதிலுரைக்கிறது இனி. (அத₄: மநுஷ்யலோகே ச) ப்₃ரஹ்மலோகத்தில் வேரை உடையதாய், மநுஷ்யலோகத்தில் கிளைகளையுடையதான இந்த ஸம்ஸாரமாகிற அரசமரத்துக்கு, கீழேயுள்ள மனுஷ்ய

मूलानि, अधो मनुष्यलोके च भवन्तीत्यर्थः; मनुष्यत्वावस्थायां कृतैर्हि कर्मभिः अधो मनुष्यपश्वादयः, ऊर्ध्वं च देवादयो भवन्ति ॥ २॥

லோகத்திலும்; 'மூலாநி அநுஸந்ததாநி' [வேர்கள் பரவிநிற்கின்றன] என்று அந்வயம், உயரே வேர்களும் கீழே கிளைகளுமுள்ள மரத்துக்கு மறுபடி கீழே எப்படி வேர்கள் அமையமுடியும்? எனில்: மாடியின்மேல் முளைத்திருக்கும் ஒருகொடி கீழே படர்ந்து பூமியில் ஊன்றியபின்பு மறுபடியும் உயர்நோக்கிப் படர்வது போன்றது இது என்று கொள்ளவேண்டும். அந்த வேர்கள்தான் எவை? எனில்: (கர்மாநுப$_3$ந்தீ$_4$நி) கர்மங்களாகிற அநுப$_3$ந்த$_4$ங்களாய் (கட்டுக்களாய்) இருப்பவையே அந்த வேர்கள். 'புருஷம் அநுப$_3$த்$_4$நந்தி அநுப$_3$ந்தீ$_4$நி' [ஜீவனைக் கட்டுகையாலே அநுப$_3$ந்தி$_4$கள் எனப்படுகின்றன] என்னும் வ்யுத்பத்தியாலே, அநுப$_3$ந்தி$_4$ஶப்$_3$த$_3$ம் கட்டைக்குறிக்கிறது, ப$_3$ஹுவ்ரீஹிஸமாஸம் கொள்வதைக் காட்டிலும் கர்மத$_4$ாரய ஸமாஸம்கொள்வது சிறந்ததாகையாலே, "கர்மத்தைக் காரணமாகக்கொண்ட வேர்கள்" என்று பொருள் கொள்ளாமல், "கர்மமாகிற கட்டாயிருக்கும் வேர்கள்" என்று பொருள்கொள்ளப்பட்டது. 'ஊர்த்$_4$வமூலம்' என்று சொல்லப்பட்ட சதுர்முக$_2$ லோகத்திலும் நான்முகனுடைய ஸ்ருஷ்டிக்கும் காரணமாக இக் கர்மங்களே அமைவதால் அங்கும் இவையே ப்ரத$_4$ானமான வேர்களாய் அமைகின்றன. மனுஷ்யலோகத்திலும் அவையே வேர்களாய் அமைகின்றன. கர்மங்களைக் காரணமாகக்கொண்ட கு$_3$ணங்கள் முதலானவற்றைக்காட்டிலும் கர்மங்களே முக்கிய காரணமாகையாலே, இவற்றையே வேராகக்கொள்வது தகும். ஆத்மாவை உறுதியாகப் பற்றிநிற்கும் கர்மங்களை மனுஷ்ய லோகத்திலுள்ள வேர்களாகக் கூறுவதற்குக் காரணமென்ன? எனில்: மனிதனுயிருக்கும் நிலையில் செய்யப்பட்ட கர்மங்களில் பாபம் மிகுதியாயிருக்கும்போது தாழ்ந்த மனுஷ்யர்களாகவும் பசு முதலானவையாகவும் பிறக்கிறான் ஜீவன்; புண்யம் மிகுதியாயிருக்கும்போது மேலுலகில் உயர்பிறவிகளான தே$_3$வர் முதலானோராக ஆகிறான், இப்படி ஜீவன் மனுஷ்ய லோகத்திலேயே புண்யபாபங்களைச் சேர்ப்பது மிகுதியாயிருக்கிறபடியால், ஜீவனைப் பற்றியிருந்தபோதிலும் கர்மங்கள் மனுஷ்ய லோகத்திலுள்ள வேர்களாகச் சொல்லப்படுகின்றன.

न रूपमस्येह तथोपलभ्यते नान्तो न चादिर्न च संप्रतिष्ठा।

*3. ந ரூபமஸ்யேஹ ததோ₂பலப்₄யதே
நாந்தோ ந சாதி₃ர் ந ச ஸம்ப்ரதிஷ்ட₂ா ।

அஸ்ய —இந்த அரசமரத்துக்கு, ரூபம் — முன்கூறப்பட்ட உருவம், இஹ—இந்த மனுஷ்ய லோகத்தில் ஸம்ஸாரிகளாலே, தத₂ா ந உபலப்₄யதே—முன் ஶ்லோகங்களில் சொல்லப்பட்டபடி அறியப்படுவதில்லை. அந்த: ச—(அந்த மரத்தின்) அழிவும், (முன்கூறப்பட்டபடி கு₃ணங்கடந்த நிலையாலே விளைவது என்று) ந—அறியப்படுவதில்லை. ஆதி₃; ச – (இந்த மரத்தின்) காரணமும், ந (கு₃ணங்களில் பற்றே என்று) அறியப்படுவதில்லை, ஸம்ப்ரதிஷ்ட₂ா ச — (இந்தஅரசமரம்) நிலைநிற்கும் ஆத₄ாரமும், ந — (அஞ்ஞானமே என்று) அறியப்படுவதில்லை.

भा ॥ अस्य—वृक्षस्य चतुर्मुखादित्वेनोर्ध्वमूलत्वम्, तत्सन्तान-परम्परया मनुष्याग्रत्वेनाधश्शाखत्वम्, मनुष्यत्वे कृतैः कर्मभिर्मूलभूतैः

---

*3. "இந்த ஸம்ஸாரம் அனைவருக்கும் ப்ரத்யக்ஷமாகக் காட்சியளிக்கிறது. அப்படியிருக்கையில், இதை எவனே ஒருவன் தான் அறிவான் என்றும், அவனே வேதமறிந்தவன் என்றும் முதல் ஶ்லோகத்தில் புகழ்வது எப்படிப் பொருந்தும்?" என்னும் கேள்விக்கு பதிலுரைக்கிறது மூன்ருவது ஶ்லோகத்தின் முற்பாதி. (அஸ்ய ரூபம் இஹ தத₂ா ந உபலப்₄யதே) இந்த ஸம்ஸாரமாகிற அரசமரத்தின் உருவம் இங்கு முற்கூறியபடி நான்முகனை முதலாகக் கொண்டதாகையாலே வேரை மேலே உடையது என்றும், அவனால் படைக்கப்பட்ட தேவர் முதலாக மனிதர் ஈருக உள்ள ஜீவர்களைக் கீழே பரவியிருக்கும் கிளைகளாகக் கொண்டது என்றும், மனித நிலையில் செய்யப்பட்ட புண்ய பாப கர்மங்கள் காரணமாக அம்மரத்துக்குக் கீழேயுள்ள கிளைகளிலிருந்து மறுபடியும் கீழும் மேலும் கிளைகள் பரவுகின்றன என்றும் இவ்வுலகிலுள்ள ஸம்ஸாரிகளால் அறியப்படுவதில்லை. ஸம்ஸாரிகள் அனைவரும் ஸம்ஸாரத்தை நேரே கண்டபோதிலும் முதலிரண்டு ஶ்லோகங்களில் சொன்ன ரீதியில் இந்த ஸம்ஸாரமரத்தை

पुनरप्यधश्चोर्ध्वं च प्रसृतशाखत्वमिति यथेदं रूपं निर्दिष्टम्, न तथा संसारिभिरुपलभ्यते, मनुष्योऽहं देवदत्तस्य पुत्रो यज्ञदत्तस्य पिता तदनुरूपपरिग्रहश्चेत्येतावन्मात्रमुपलभ्यते । तथाऽस्य वृक्षस्य अन्तः— विनाशोऽपि गुणमयभोगेष्वसङ्गकृत इति नोपलभ्यते । तथाऽस्य

அவர்கள் காண்பதில்லை என்பது 'தத2ா' என்னும் சொல்லின் கருத்து. 'இஹ' என்னும் சொல் இவ்வுலகிலுள்ள ஸம்ஸாரிகளைக் குறிக்கிறது. அதாவது — மோக்ஷத்துக்கு உறுப்பான அறிவு இல்லாதவர்களைக் குறிக்கிறது. அவ்வறிவுடையவன் பெரும்பாலும் 'முக்தன்' என்றே கூறத்தக்கவனன்றோ. "இவ்வுலகிலும் ஆதி முன்னோராயிருப்பவரை வேராகவும், பாட்டன் தந்தை முதலானவர்களைக் கிளைகளாகவும், பிள்ளை பேரன் முதலானவர்களைத் தளிர்களாகவும் கொண்டதாக இந்த ஸம்ஸார வ்ருக்ஷம் காணப்படுகிறதே" எனில்: "நான் மனிதன், என் தந்தை தே3வத3த்தன், என்பிள்ளை யஜ்ஞத3த்தன், தாழ்ந்ததான மனைவி வீடு முதலான பரிக்3ரஹங்களையுடையவன்" என்று ஸம்ஸாரத்தைக் கைக்கொள்வதற்குறுப்பான இதன் உருவத்தை அறிகிறார்களேயொழிய இதைக் கைவிடுவதற்குறுப்பான முற்கூறிய உருவத்தை இவர்கள் அறிவதில்லை என்பது இத்தொடரின் திரண்ட பொருள். (அஸ்ய அந்த: தத2ா இஹ ந உபலப்4யதே) "அந்த:" "ஆதி3:" "ஸம்ப்ரதிஷ்டா2" என்ற மூன்று பத3ங்களோடும் "அஸ்ய இஹ தத2ா ந உபலப்4யதே" என்னும் தொடரைக் கூட்டிக்கொள்ளவேண்டும். இந்த மரத்தின் அழிவும் ஸத்வாதி3 கு3ணமயமான போ4க்3யப் பொருள்களில் பற்றின்மையால் விளைவதென்று முன் அத்தியாயங்களில் கூறியபடி ஸம்ஸாரிகளால் அறியப்படுவதில்லை என்பது இத்தொடரின் திரண்ட பொருள். 'அந்த' ஶப்3த3த்துக்கு 'நிர்ணயம்' முதலான வேறு பொருள்கள் உண்டாயினும், அடுத்துள்ள ஆதி3ஶப்3த3த்துக்கு ப்ரதிகோடியாயிருக்கையாலும், இந்த ஶ்லோகத்தின் பிற்பாதியில் "அஸங்க3ஶஸ்த்ரேண த்3ருடே4ந சி2த்வா" என்று இதை அழிக்கும் வழி கூறப்படுகையாலும், 'அந்த' ஶப்3த3ம் இங்கு அழிவையே குறிக்கிறது. சரீரம் அழிவதாகிற நித்ய ப்ரளயத்தை ஸம்ஸாரிகள் தினந்தோறும் கண்டுகொண்டிருந்தபோதிலும், இது அடியோடு அழிவது மோக்ஷமடையும்போதே என்றும், அவ்வழிவு விளைவது பற்றின்மையாலேயே என்றும் அவர்கள் அறிவதில்லை என்பது

गुणसङ्ग एवादिरिति नोपलभ्यते। तस्य प्रतिष्ठा चानात्मन्यात्माभिमान-रूपमज्ञानमिति नोपलभ्यते ; प्रतितिष्ठत्यस्मिन्नेवेति ह्यज्ञानमेवास्य प्रतिष्ठा ॥ *३ ॥

இத்தொடரின் கருத்து. (அஸ்ய ஆதி₃: ச இஹ தத₂ா ந உபலப்₄யதே) இந்த அரசமரத்துக்கு ஆதி₃காரணம் கு₃ணமயமான பொருள்களில் பற்றே என்பதையும் ஸம்ஸாரிகள் முன் அத்தியாயங்களில் கூறியபடி காண்பதில்லை என்பது இத்தொடரின் திரண்ட பொருள். க₃ர்ப்ப₄ம் முதலான இடையிலுள்ள காரணங்களை ஸம்ஸாரிகள் அறிந்த போதிலும், கு₃ணங்களில் பற்றே ஆதி₃காரணம் என்பதை அவர்கள் அறிவதில்லை என்று கருத்து. (அஸ்ய இஹ ஸம்ப்ரதிஷ்டா₂ ச தத₂ா ந உபலப்₄யதே) இந்த ஸம்ஸாரமாகிற அரசமரம் ஆத்மா அல்லாததான தே₃ஹத்தில் ஆத்மா என்னும் நினைவைச் செய்வதாகிற அஜ்ஞானத்திலேயே நிலைநிற்கிறது என்பதையும் ஸம்ஸாரிகள் முன் அத்தியாயங்களில் கூறியபடி அறிவதில்லை என்பது இத்தொடரின் திரண்ட பொருள். "ஸம்யக் ப்ரதிதிஷ்டத்யஸ்மிந் இதி ஸம்ப்ரதிஷ்டா₂" என்னும் வ்யுத்பத்தியாலே மரம் உறுதியாக பூ₄மியில் நிற்பது போலே, இந்த ஸம்ஸாரமாகிற அரசமரமும் இதன் ஆதியான கு₃ணங்களில் பற்றுக்கும் காரணமான அஜ்ஞானத்திலேயே நிலையாக நிற்கிறது என்று கருத்து. இதனாலேயே 'ஸம்ப்ரதிஷ்டா₂' என்னும் சொல்லுக்கு 'அடிமரம்' என்று சிலர் பொருள் கூறுவதும் பொருந்தாதென்று விளங்குகிறது. பற்றின்மையாகிற ஆயுத₄த்தால் வெட்டத்தக்கதாக இம்மரத்தைப் பிற்பாதியில் கூறுகையால் 'ஸம்ப்ரதிஷ்டா₂' என்னும் சொல்லுக்குப் பரமாத்மாவைப் பொருளாகச் சிலர் கூறுவதும் பொருந்தாது இவ்விஷயங்களில் பற்றிலார் பற்ற நின்றவனை அவனை, பற்றின்மையாகிற ஆயுத₄த்தாலே வெட்டத்தக்க மரம் நிலைநிற்கும் இடமாகக் கூறுவது பொருந்ாதன்றோ. அஜ்ஞானத்தை, 'ஸம்ப்ரதிஷ்டா₂'ஶப்₃த₃த்துக்குப் பொருளாகக் கூறுவது மிகப்பொருத்தமானது. எப்படியெனில்: மரங்களின் வேர்கள் ஊன்றிநிற்கும் பூ₄மியே மரத்துக்கு ஆத₄ாரமாய் (ஸம்ப்ரதிஷ்டை₂யாய்) உள்ளது, கர்மம் ஸம்ஸாரமாகிற மரத்துக்கு வேராகச் சொல்லப்பட்டது. "அவித்₃யாஸஞ்சிதம்

अश्वत्थमेनं सुविरूढमूलमसङ्गशस्त्रेण दृढेन छित्वा ॥ ३
ततः पदं तत्परिमार्गितव्यं यस्मिन् गता न निवर्तन्ति भूयः ।

3* அஶ்வத்த₂மேநம் ஸுவிரூட₄மூலம்
அஸங்க₃ஶஸ்த்ரேண த்₃ருடே₄ந சி₂த்வா ॥

*4 தத: பத₃ம் தத் பரிமார்க்கி₃தவ்யம்
யஸ்மிந் க₃தா ந நிவர்த்தந்தி பூ₄ய: ।

ஏநம்—முன்கூறப்பட்டதாய், ஸுவிரூட₄மூலம் — நன்கு பலவிதமாக ஊன்றி நிற்கும் வேரையுடையதான, அஶ்வத்த₂ம் — (ஸம்ஸாரமாகிற) அரசமரத்தை, த்₃ருடே₄ந — (நல்லறிவைக்காரணமாகக் கொண்டிருக்கையாலே) உறுதியாயிருப்பதான, அஸங்க₃ஶஸ்த்ரேண — (கு₃ணமயபோ₄காக₃ங்களில்) பற்றின்மையாகிற ஆயுத₄த்தாலே, சி₂த்வா—வெட்டி, தத:—அந்தப் பற்றின்மை காரணமாக, யஸ்மிந் க₃தா:பூ₄ய:ந நிவர்த்தந்தி தத்பத₃ம் மறுபடியும் ஸம்ஸாரத்துக்குத் திரும்பி வருதலில்லாத அந்த ப்ராப்யம், பரிமார்க்கி₃தவ்யம்—தேடத்தக்கது.

கர்ம'' [வி. பு. 2-13-70] [அஜ்ஞானத்தால் ஏற்பட்டவை புண்ய பாபகர்மங்கள்] என்னும் வசனத்திலிருந்து அஜ்ஞானத்தினாலேயே புண்யபாபகர்மங்கள் விளைகின்றன என்று விளங்குகையால், அக்கர்மங்கள் அஜ்ஞானத்திலே ஊன்றியிருக்கின்றன என்று தெளிவாகிறது. கர்மத்துக்கு மற்றொரு காரணமான மமகாரமும் அஹங்காரமாகிற அஜ்ஞானத்திலேயே பிணைப்புண்டிருக்கிறது. ஆக இவ்வண்ணமாக ஸம்ஸாரமாகிற மரத்துக்கு அஜ்ஞானம் ஆத₄ாரமாயிருக்கிறது என்று கண்டுகொள்வது. ''இந்தஸம்ஸாரமாகிற அரசமரத்தின் உருவமும் அழிவும் ஆதி₃யும் ஆத₄ாரமும் முற்கூறியபடி ஸம்ஸாரிகளால் உணரப்படுவதில்லை'' என்று இங்குகூறுகையால், ''ஸம்ஸாரம் பொய், இதற்கு அந்தம் ஆதிமுதலானவை உண்மையில் கிடையாது' என்னும் அத்₃வைதமதம் கண்ணனால் ஏற்கப்படவில்லை என்று விளங்குகிறது. *3.

भा ॥ एनम्-उक्तप्रकारं सुविरूढमूलम्- सुष्टु विविधंरूढ मूलं

இத்தி னுருவு மிதின்முடிவு மாதியுமற்
றத்தி னிருப்பு மறிவரிதாம்—மொய்த்தமர்ந்த
மூலவர சாமிதனை முற்று மறுத்தறவாங்
கோலவலிச் சத்திரந்தான் கொண்டு. 3

இத்தின் உருவும்—இந்த அரசமரத்துக்கு (முன் கூறப்பட்ட) உருவமும், இதின் முடிவும் — இந்த மரத்தின் அழிவும், (இதின்) ஆதியும்—(இந்தமரத்தின்) காரணமும், மற்று அத்தின் இருப்பும்—அம்மரம் நிலைநிற்கும் ஆத₄ாரமும், அறிவு அரிதாம் — (முன் கூறப்பட்டபடி ஸம்ஸாரிகளால்) அறியப்படுவதில்லை. மொய்த்து அமர்ந்த மூல அரசாம் இதனை—முன் கூறப்பட்டதாய், நன்கு பலவிதமாக ஊன்றி நிற்கும் வேரையுடையதான (ஸம்ஸாரமாகிற) இந்த அரசமரத்தை, அறவாம் கோலவலி சத்திரம் தான் கொண்டு—பற்றின்மையாகிற மிக உறுதியான ஆயுத₄த்தைக் கொண்டு, முற்றும் அறுத்து—அடியோடு வெட்டி;

3*-*4. முற்கூறிய ஸம்ஸாரமாகிற அரசமரத்தை விஷயங்களில் பற்றின்மையாகிற உறுதியான கோடரியால் வெட்டிய பின்பே ஸம்ஸாரத்துக்குத் திரும்பி வருதலில்லாத ஆத்மாவைத் தேடலாம் என்கிறான். (ஏநம் அஶ்வத்த₂ம்) விஷயங்களில் பற்றை விளைக்கும் விசித்ரமான ப்ராக்ருதப் பொருள்கள் அடங்கியதாக முன் கூறப்பட்ட ஸம்ஸாரமாகிற இந்த அரசமரத்தை. இதை வெட்டுவது மிகவும் செயற்கரிய செயல் எனக்காட்டுகிறான் மேலே—(ஸுவிருட₄மூலம்) நன்றாகவும் விதவிதமாகவும் ஊன்றிய கர்மங்களாகிற வேர்களையுடையது இம்மரம் என்கை. 'ஸு' என்னும் உபஸர்க்கம் 'ஸுஷ்டு₂' (நன்றாக) என்னும் பொருளிலும், 'வி' என்னும் உபஸர்க்கம் 'விவித₄ம்' [விதவிதமாக] என்னும் பொருளிலும் வந்துள்ளன. இந்தக் கர்மங்களாகிற வேர்கள் அனாதி₃காலமாக உறுதிபெற்றிருக்கும் வாஸனாப₃லத்தாலே மிக நன்றாக ஊன்றியிருக்கின்றன என்று கருத்து. இந்தக் கர்மங்களின் ஸ்வரூபத்தை ஆராய்ந்தால், ஶாஸ்த்ரங்

अश्वत्थं सम्यग्ज्ञानमूलेन दृढेन गुणमयभोगासंगाख्येन शस्त्रेण छित्वा, ततो—विषयासंगाद्धेतोस्तत्पदं परिमार्गितव्यम्—अन्वेषणीयम्; यस्मिन् गता भूयो न निवर्तन्ते ॥ ३॥-॥४॥

களில் காணப்படும் விதி₄நிஷேத₄ங்களை ஜீவன் மனோவாக்காயங் களாலே பு₃த்₃தி₄ பூர்வகமாகவும் அப்படியல்லாமலும் அனாதி₃ காலமாக மீறுவதனாலே உண்டாகின்றவையாய், எண்ணமுடியாத படி பலவகைப்பட்டிருப்பவையாயிருப்பவை இவை என விளங்கும். ப்ராயஶ்சித்தம் முதலானவற்றால் இவற்றில் ஒவ்வொன்றை அறுக்க முயன்றாலும், ஒன்றையறுத்து முடிவதற்குள் பலபல கர்மங்கள் புதிதாக விளையும்படி இருக்கும். ஆகையால் இக்கர்மங்கள் என்றுமே விதவிதமானவையாய் எண்ணமுடியாதவையாகவே யிருக்கும், இப்படி நன்றாக விதவிதமாக உறுதிபெற்று ஊன் றியிருக்கும் கர்மங்களாகிற வேர்களையுடையதாகையாலே, இந்த அரசமரத்தை வெட்டுவதற்கு மிக உறுதியான ஆயுத₄ம் வேண்டு மென்கிறது மேலே. (அஸங்க₃ஶஸ்த்ரேண) ஸத்வாதி₃கு₃ணமயமான இனிய பொருள்களில் பற்றின்மையாகிற ஆயுத₄த்தாலே. விஷயங் களில் பற்றின்மையானது சில சமயம் வியாதி முதலானவற்றா லும் விளைவதுண்டு; ஆயினும் அப்பற்றின்மை உறுதியாய் நிலை நிற்காமல் வியாதிமுதலானவை நீங்கியவுடன் மறுபடி கிளைத்து விடும்; அதனாலே இவ்வாயுத₄ம் உறுதியானதாயிருக்க வேண்டும் என்கிறது (த்₃ருடே₄ந) என்னும் பத₃த்தால். அதாவது — "இந்த விஷயங்கள் உண்மையில் அற்பமாகவும் நிலைநில்லாதவையாகவும், இம்மையிலும் மறுமையிலும் துன்பத்தை விளைப்பவையாகவும் உள்ளன" என்னும் நல்ல அறிவை முன்னிட்டுக்கொண்டு விளைந்த பற்றின்மையே இம்மரத்தை வெட்டக் கூடிய உறுதியான ஆயுத₄ மாகும் என்று கருத்து. (சி₂த்வா) முற்கூறிய அரசமரத்தை உறுதி யான பற்றின்மையாகிற ஆயுத₄த்தாலே வெட்டி. இனி, ஶ்லோகத் தின் பிற்பாதியாலே 'விஷயங்களில் பற்றைவிட்ட பின்பு, திரும்பி வருதலில்லாத ஆத்மதத்வம் தேடத்தக்கது' என்று விதி₄க்கிறான்:- (தத:) விஷயங்களில் பற்றின்மையாகிற காரணத்தை முன்னிட்டுக் கொண்டு. விஷயங்களை விடும் த₃ஶையிற்போலே ஆத்மாவைத் தேடும் த₃ஶையிலும் பற்றின்மை தொடரவேண்டும் என்று கருத்து. இப்படிச் சிறந்த பொருளைத்தருகையாலே, "தத:' என்பதற்கு சங்க ரரைப் போல் 'அதற்குப்பின்' என்று பொருள் கொள்ளாமல்

भा ॥ कथमनादिकालप्रवृत्तो गुणमयभोगसंगस्तन्मूलं च विपरीतज्ञानं निवर्तत इत्यत आह —

तमेव चाद्यं पुरुषं प्रपद्ये[य]द्यतः प्रवृत्तिः प्रसृता पुराणी ॥ ४

4* தமேவ சாத்₃யம் புருஷம் ப்ரபத்₃யேத்₃ யத: ப்ரவ்ருத்தி: ப்ரஸ்ருதா புராணீ ॥

ஆத்₃யம்—அனைத்துக்கும் ஆதி₃யாய், யத: புராணீ ப்ரவ்ருத்தி: ப்ரஸ்ருதா—எவனிடமிருந்து அனாதி₃காலமாக கு₃ணமய விஷயங்களில் ஈடுபாடு (ஜீவர்களுக்குத்) தொடர்கின்றதோ, தம் புருஷம் ஏவ-அத்தகையவனை பரமபுருஷனையே, ப்ரபத்₃யேத்— (அஜ்ஞானம் முதலானவை நீங்குவதற்காக) ஶரணமடையக்கடவன்.

'அப்பற்றின்மை காரணமாகவே' என்று ப₄ாஷ்யமிடப்பட்டது. (தத்பத₃ம் பரிமார்க்கி₃தவ்யம்) ப்ராப்யமான அந்த ஆத்மா தேடத்தக்கது. "ஆத்மாநமந்விச்சே₂த்" [ஜாபா₃ல 6] [ஆத்மாவைத் தேடவேண்டும்] என்று உபநிஷத்தில் ஆத்மாவானது தேடத்தக்கதாகச் சொல்லப்பட்டதன்றோ. 'தேடத்தக்கது என்று சொல்லலாம்படி அதற்குள்ள சிறப்பென்ன?' எனில்— (யஸ்மிந் க₃தா ந நிவர்த்தந்தி பூ₄ய:) எந்த ஆத்மாவை அடைந்தவர்கள் ஸம்ஸாரத்துக்கு மறுபடி திரும்பி வருவதில்லையோ, அத்தகைய பெருமையுடைய ஆத்மா தேடத்தக்கது என்று கருத்து. ஐந்தாவது ஶ்லோகத்தில் "தத்பத₃ம்"—என்று இங்கு தேடத்தக்கதாகச் சொல்லப்பட்ட ப்ராப்யத்தையே அடையத்தக்கதாக அநுவதி₃த்து, ஆறுவது ஶ்லோகத்தில் அது தன்னைக்காட்டிலும் வேறுபட்டது என்று ப₄க₃வான் கூறுகையாலே, இங்கு "தத்பத₃ம்" என்றது ப்ராப்யமான ஆத்மாவே என்று கொள்ள வேண்டும். "வைஷ்ணவம் பத₃ம்" என்று சங்கரர் பொருள் கொண்டது ப்ரகரணத்துக்கு முரண்படும். இதன் விரிவு ஐந்தாவது ஶ்லோகத்தின் வ்யாக்₂யானத்தில் காணலாம். "நிவர்த்தந்தே" என்று ஆத்மநேபத₃மாக இருக்க வேண்டியது ஶ்லோகத்தில் ச₂ந்த₃ஸ் ஒட்டுவதற்காக "நிவர்த்தந்தி" என்று பரஸ்மைபத₃மாக ஆர்ஷப்ரயோக₃ம் செய்யப்பட்டது என்பது "நிவர்த்தந்தே" என்னும் ப₄ாஷ்யபத₃த்தால் உணர்த்தப்படுகிறது. 3*-*4

ஆங்கதனு லிப்பதந்தா னுராய்தற் காகுமே
வீங்கதனிற் சென்று ரினிமீளார்—பாங்கதற்குப்
பற்றுவா னுகப் பரனையெவ னுன்மன்னு
முற்றுமியல் வுண்டா முயன்று. 4

ஆங்கு—விஷயங்களில் பற்றை விட்டபின்பு, அதனுல்—அந்தப்பற்றின்மையை முன்னிட்டுக் கொண்டே, இப்பதம் தான்—ப்ராப்யமான இந்த ஆத்மாவானது, ஆராய்தற்கு ஆகுமே - தேடத்தக்கதாகும்; ஈங்கு அதனில் சென்ருர்—இங்கிருந்து சென்று ஆத்மாவை அடைந்தவர்கள், இனி மீளார்—ஸம்ஸாரத்திற்கு மறுபடியும் திரும்பிவரமாட்டார்கள். பாங்கு அதற்கு—விஷயங்களில் பற்றும், அதற்குக் காரணமான விபரீதஜ்ஞானமும் நீங்குவதற்காக, எவனுல்—எந்தப் பரமாத்மாவால், முயன்று முற்றும் இயல்வு (விஷயங்களில்) ஈடுபடுகைக்கு உறுப்பான அனுதி₃காலமாக உள்ளபற்று, உண்டாம்—உண்டாகிறதோ, மன்னு பரனை—அனைத்துக்கும் ஆதியான அந்தப்புருஷனை, பற்றுவானுக—ஶரணடைவானுக.

4* 'விஷயங்களில் பற்றின்மையாகிற உறுதியான ஆயுத₄த்தால் ஸம்ஸாரமாகிற மரம் வெட்டத்தக்கது' என்று இதுவரை சொல்லப்பட்டது. இனி, "கு₃ணமயமான பொருள்களில் பற்று அனுதி₃காலமாக இருந்து வருவது; அதற்குக் காரணமான விபரீத ஜ்ஞானமும் அனுதி₃காலமாய் இருந்து வருகிறது. அப்படியிருக்கும்போது ஸம்ஸாரிகள் பற்றின்மையாகிற உறுதியான ஆயுத₄த்தை எப்படி அடைந்து நன்கு வேரூன்றிய ஸம்ஸார மரத்தை வெட்டமுடியும்?" என்னும் கேள்விக்கு "என்னை ஶரணமடைவதன் மூலம் பற்றின்மையாகிற ஆயுத₄த்தைப் பெற்று ஸம்ஸாரமரத்தை வெட்டி வீழ்த்தலாம்" என்று பதில் உரைக்கிருன். (தமேவ சாத்₃யம் புருஷம் ப்ரபத்₃யேத்) அனைத்துக்கும் ஆதி₃ காரணமான பரமபுருஷனுன என்னையே ஶரணம் அடையக் கடவுன். (ஆத்₃யம் புருஷம்) "மயாத்₄யக்ஷேண ப்ரக்ருதி: ஸூயதே ஸசராசரம்" [கீ₃தை 9-10] [(என்னுடையதான) மூல ப்ரக்ருதி தலைவனுன என்னுல் (தூண்டப்பட்டதாய்), அசைவனவும் அசையாதனவும் அடங்கிய உலகை ஸ்ருஷ்டிக்கிறது]

भा ॥ अज्ञानादिनिवृत्तये तमेव चाद्यम् — कृत्स्नस्यादिभूतं. * मयाऽध्यक्षेण प्रकृतिस्सूयते सचराचरम् (गी. ९. १०.) * अहं सर्वस्य प्रभवो मत्तस्सर्वं प्रवर्तते (१०. ८.) * मत्तः परतरं नान्यत्किञ्चिदस्ति धनञ्जय (७. ७) इत्यादिपुक्तमाद्यं पुरुषमेव शरणं प्रपद्येत् — तमेव शरणं प्रपद्येत । यतो — यस्मात् कृत्स्नस्य सृष्टिरियं गुणमयभोगसङ्गप्रवृत्तिः, पुराणी -- पुरातनी प्रसृता । उक्तं हि मयैतत् पूर्वमेव * दैवी ह्येषा गुणमयी मम माया दुरत्यया । मामेव

"அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்த: ஸர்வம் ப்ரவர்த்ததே" [கீதை 10-8] [நான் எல்லா உலகமும் உண்டாவதற்குக்காரண மாகிறேன். என்னாலேயே பொருள்கள் அனைத்தும் செயல்படு கின்றது.] "மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சிதஸ்தி தநஞ்ஜய" [கீதை 7-7] [அர்ஜுனா! என்னைக்காட்டிலும் வேறானது எது வும் குணங்களில் மிகவும் மேலானதாயில்லை] என்று முன் ப்ர கரணங்களில் தன்னையே அனைத்துக்கும் காரணமான புருஷனாகக் கூறியிருக்கிறானகையாலே, இங்கு 'ஆதிபுருஷனான அவனையே' என்று படர்க்கையாகக் கூறியிருந்தபோதிலும், இப்பதம் கண்ணனையே குறிக்கிறது. ஏவகாரமானது 'எவன் ஸம்ஸார மாகிற சிறையில் கர்மாநுகுணமாக நம்மை இட்டு வைத்திருக்கி றானோ அவனையே ஶரணமடையவேண்டுமேயொழிய ஸம்ஸாரச் சிறையில் நம்மோடு அடைபட்டுக்கிடக்கும் பிரமன் உருத்திரன் முதலான மற்ற ஜீவர்களை ஶரணமடையக்கூடாது' என்று காட்டு கிறது. இதையே இரண்டாவது பாதம் விவரிக்கிறது- (யத: ப்ரவ்ருத்தி: ப்ரஸ்ருதா புராணீ) அனைத்தையும் படைத்த எந்தப் பரமபுருஷனால், குணமயமான பொருள்களில் ஈடுபட்டு ஜீவர்கள் செயல் புரிவது அனாதிகாலமாகத் தொடர்ந்து வருகிறதோ, அந்தப் பரமபுருஷனையே ஶரணமடையவேண்டும் என்று கூட்டிப் பொருள் கொள்ளவேண்டும். இந்த விஷயம் "தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா | மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே ||" [கீதை 7-14] [என்னுடையதான இந்த முக்குணமயமான ப்ரக்ருதி தேவனான என்னால் படைக்கப்பட்டதாகையாலே (எவராலும் தன்முயற்சி

ये प्रपद्यन्ते मायामेतां तरन्ति ते ॥ (७. १४) इति । * प्रपद्येयतः प्रवृत्तिरिति वा पाठ ; तमेव चाद्यं पुरुषं प्रपद्य— शरणमुपगम्य, इयतः – अज्ञाननिवृत्त्यादेः कृत्स्नस्यैतस्य साधनभूता प्रवृत्तिः पुराणी-

---

யால் மாத்திரம்) கடக்க அரிதாயுள்ளது. எவர்கள் என்னையே ஶரணமடைகிருர்களோ, அவர்கள் இந்த மாயையாகிற ப்ரக்ருதியைத் தாண்டுகிருர்கள்] என்று கண்ணனுல் முன்பே சொல்லப்பட்டதன்ரே. “தேஷாமேவாநுகம்பார்த்த2ம் அஹம் அஜ்ஞாநஜம் தம: | நாஶயாம்யாத்மபா4வஸ்தோ2: ஜ்ஞாநதீ3பேந பா4ஸ்வதா ||” [கீ3தை 10-11] [அந்த ப4க்திநிஷ்டா2ர்களிடம் அருளினுலேயே, அவர்களுடைய நெஞ்சுக்கு விஷயமானவனுய், என்னைப்பற்றிய ஜ்ஞானமெனும் ஒளிவிளக்காலே கர்மங்களாலுண்டான விஷயங்களில் பற்ருகிற இருளை நானே அழிக்கிறேன்] என்று முன்ப்ரகரணங்களிலும், “மச்சித்தஸ் ஸர்வது3ர்க்கா3ணி மத்ப்ரஸாதா3த் தரிஷ்யஸி” [கீ3தை 18-58] [என்னிடம் நெஞ்சு செலுத்திக் கர்மங்களை அனுஷ்டி2க்கும் நீ என் அருளாலே எல்லாத்தடைகளையும் தாண்டுவாய்.] “மாமேகம் ஶரணம் வ்ரஜ” [கீ3தை 18-66] [என்னை ஒருவனையே உபாயமாகப்பற்று] என்று பின் ப்ரகரணங்களிலும் பலவிடங்களில் இவ்வண்ணமே சொல்லப்பட்டது அனுஸந்தி4க்கத்தக்கது. (யத: ப்ரவ்ருத்தி; ப்ரஸ்ருதா புராணீ) என்று அனாதி3காலமாக ப3த்3த4 ஜீவர்களுக்கு விஷயங்களில் பற்று எம்பெருமானுலேயே தொடர்கின்றது என்று கூறுகையாலே, ஸம்ஸாரம் அனாதி3காலமாக உண்மையாகவே உள்ளது என்று விளங்குகிறது. ஆகையால் “இது இந்த்3ரஜாலம்போலே பொய்யானது” என்று சங்கரர் உரையிடுவது பொருந்தாது. அவ்வுரை ப்ரத்யக்ஷம் முதலான மற்ற ப்ரமாணங்களுக்கும் முரண்பட்டது. “ப்ரபத்3யேத்” என்னும் பரஸ்மைபத3ம் ஆர்ஷமென்பதை “ப்ரபத்3யேத” என்று பா4ஷ்யத்திலுள்ள ஆத்மநேபத3ப்ரயோக3ம் காட்டுகிறது. இங்கு “ப்ரபத்3யேயத:” என்றும் பாட2ம் காண்கிறது. “ப்ரபத்3ய இயத:” என்று பத3ம் பிரிக்கவேண்டும். கண்ணன் அர்ஜுனனுக்கு உபதே3ஶிக்கும் ப்ரகரணத்தில் “ப்ரபத்3யே” (ஶரணம் அடைகிறேன்) என்று உத்தமபுருஷனுக (தன்மையாக) பத3ம் பிரிப்பது ஒட்டாதன்ரே. “ப்ரபத்3ய—ஆதி3புருஷனை ஶரணமடைந்து, இயத:—அஜ்ஞானம் நீங்குவது முதலான இவ்வனைத்

पुरातनी प्रसृता ; पुरातनानां मुमुक्षूणां प्रवृत्तिः पुराणी ; पुरातना हि मुमुक्षवो मामेव शरणमुपगम्य निर्मुक्तबन्धास्संजाता इत्यर्थः ॥ ४

निर्मानमोहा जितसङ्गदोषा अध्यात्मनित्या विनिवृत्तकामाः ।
द्वन्द्वैर्विमुक्तास्सुखदुःखसंज्ञैर्गच्छन्त्यमूढाः पदमव्ययं तत् ॥ ५

5. நிர்மாநமோஹா ஜிதஸங்க3தோ3ஷா அத்4யாத்மநித்யா விநிவ்ருத்தகாமா:|
த்3வந்த்3வைர் விமுக்தா: ஸுக2து3:க்க2 ஸம்ஜ்ஞை:
க3ச்ச2ந்த்யமூடா4: பத3மவ்யயம் தத் ||

(இவ்வண்ணமாக என்னை ஶரணமடைந்து) நிர்மாந மோஹா:—தே3ஹாத்மாபி4மானமாகிற மயக்கம் நீங்கப் பெற்றவர்களாய், ஜிதஸங்க3தோ3ஷா:—கு3ணமயப்பொருள்களில் பற்றுகிற தோ3ஷத்தை வென்றவர்களாய், அத்4யாத்ம நித்யா:—ஆத்மஜ்ஞானத்தில் எப்போதும் ஈடுபட்ட

துக்கும், புராணீ ப்ரவ்ருத்தி:—ஸாத4னமாயிருக்கும் அனாதி3கால மான ப்ரவ்ருத்தி, ப்ரஸ்ருதா-"தொடர்கிறதோ" என்று பதவுரை. இப்படிக்கொள்ளும்போது அவதாரிகையில் கேட்கப்பட்ட கேள்விக்கு இது நேரே பதிலாகிறது. "இயத:" என்று—அவதாரிகையில் ஐயத்துக்கு விஷயமான அஜ்ஞான நிவ்ருத்தி முதலான அனைத்தையும் குறிக்கிறது. "இயத: ப்ரவ்ருத்தி:" என்ற இடத்தில் 'தஸில்' ப்ரத்யயம் ஆறுவது வேற்றுமைப் பொருளில் வந்துள்ளது. பொதுவாக எந்த ஸம்ப3ந்த4த்தையும் குறிக்கக்கூடிய ஆறுவது வேற்றுமை இங்கு ப்ரகரணத்தையொட்டி ஸாத்4ய ஸாத4னப4ாவரூபமான ஸம்ப3ந்த4த்தைக் குறிக்கிறது. ஆகையால், இத்தொடருக்கு "ஆதி3புருஷனை ஶரணமடைந்தபின்பே அஜ்ஞானம் நீங்குவது முதலானவற்றுக்கு ஸாத4னமாயிருக்கும் செயல்கள் அனாதி3 காலமாகத் தொடர்கின்றன." என்று பொருள் கொள்ளவேண்டும். "முன்னோர்களான முமுக்ஷுக்கள் என்னை ஶரணமடைந்த பின்பு அதனால் அஜ்ஞானம் முதலானவை நீங்கப் பெற்று ஸாத4னங்களை அனுஷ்டி2த்து ஸம்ஸாரக் கட்டிலிருந்து நீங்கப்பெற்றார்களன்றோ" என்று ஶிஷ்டாசாரத்தைக் காட்டுகிறான் கண்ணன். 4.

வர்களாய், விநிவ்ருத்தகாமா:—மற்றவிஷயங்களில் விருப்பம் நீங்கப்பெற்றவர்களாய், ஸுக2து:க2ஸம்ஜ்ஞை: த்3வந்த்3வை: — இன்பதுன்பங்களாகிற இரட்டைகளிலிருந்து, விமுக்தா:—விடுபட்டவர்களாய், அமூட4ா:—(தே3ஹாத்மாக்களைப்பற்றிய) அனைத்து மயக்கங்களும் நீங்கப்பெற்றவர்களாய், அவ்யயம் — ஜ்ஞானத்தில் ஏற்றத்தாழ்வற்ற, தத் பத3ம்—ஸ்வரூபாவிர்ப4ாவம் பெற்ற ப்ராப்ய வஸ்துவான ஆத்மாவை, க3ச்ச2ந்தி—அடைகிறார்கள்.

மானமோ கங்களின்றி மற்றுநசைக் குற்றமற்
றானவுயிர்த் தன்மையமர்ந் தாசையது — தானகன்றே
இன்பமிகு துன்ப விருமைவிட் டிங்குணர்வோர்
மன்பதமே தாமடைவர் வாய்ந்து. 5

மானமோகங்களின்றி — தே3ஹாத்மாபி4மானமாகிற மயக்கம் நீங்கப்பெற்றவர்களாய், **மற்று நசை குற்றமற்று**-கு3ணமயப்பொருள்களில் பற்றுகிற தோ3ஷம் நீங்கப்பெற்றவர்களாய், **ஆன உயிர்தன்மை அமர்ந்து**—ஆத்ம ஜ்ஞானத்தில் எப்போதும் ஈடுபட்டவர்களாய், **ஆசை அது தான் அகன்றே**—மற்ற விஷயங்களில் விருப்பம் அகலப்பெற்றவர்களாய், **மிகு இன்பதுன்ப இருமை விட்டு**—மிகுந்த இன்பதுன்பங்களாகிற இரட்டைகளிலிருந்து விடுபட்டவர்களாய், **இங்கு உணர்வோர்**—(தே3ஹாத்மாக்களைப்பற்றிய அனைத்து மயக்கங்களும் நீங்கப்பெற்று) தே3ஹாத்மாக்களின் தன்மைகளை அறிபவர்களாய், **மன்பதமே**—ஜ்ஞானத்தில் ஏற்றத்தாழ்வற்ற முக்தி நிலையிலுள்ள தம் ஆத்மாவை, **வாய்ந்து தாம் அடைவர்**—பரிபூர்ணமாகத் தாம் பெறுவார்கள்.

---

5. சென்ற ஸ்லோகத்தில் சொன்ன அர்த்த2த்தை விவரிக்கிறான். சென்ற ஸ்லோகத்தில் "இயத:" என்ற பாட2த்தின் விவரணமாயிருப்பது இந்த ஸ்லோகம். (நிர்மாந மோஹா:) தே3ஹாத்மாபி4மானமாகிற மயக்கம் நீங்கப்பெற்றவர்கள். விஷயங்களில் பற்றுக்கு தே3ஹாத்மாபி4மானமே முக்2யகாரணமாகையால், அந்தப்பற்று நீங்குகைக்கு உறுப்பானவற்றில் தே3ஹாத்மாபி4மானம் நீங்கப்பெறுவதை முதன்முதலில் எடுக்கிறது.

भा ॥ एवं मां शरणमुपगम्य निर्मानमोहाः - निर्गतानात्मात्माभिमानरूपमोहाः, जितसङ्गदोषाः — जितगुणमयभोगसङ्गाख्यदोषाः, अध्यात्मनित्याः,—आत्मनि यत् ज्ञानं तदध्यात्मम्, आत्मज्ञाननिरताः,

---

"அமூடா₄:" என்று மற்ற மயக்கங்கள் நீங்குவதைத் தனியாகச் சொல்லுகையாலே, இங்கு "நிர்மாநமோஹா:" என்பதற்கு 'தே₃ஹாத்மாபி₄மானமும் மற்ற மயக்கங்களும் நீங்கப்பெற்றவர்கள்' என்று பொருள் கொள்ளாமல் "தே₃ஹாத்மாபி₄மானமாகிற மயக்கம் நீங்கப்பெற்றவர்கள்" என்று பொருள் கொள்ளப் பட்டது. (ஜிதஸங்க₃தோ₃ஷா:) ஸத்வாதி₃ கு₃ணமயமான இனிய பொருள்களில் பற்றுகிற குற்றத்தை வென்றவர்கள். முன் பத₃த்தில் சொன்னபடி தே₃ஹாத்மாபி₄மானமில்லாமையாலே இவர்களுக்கு ஶப்₃த₃ாதி₃விஷயங்களில் பற்றும் இல்லாமல் போகிறது என்று கருத்து. இங்கு 'ஸங்க₃ம்' என்று பொதுவாகச் சொல்லியிருந்தபோதிலும் அதை தோ₃ஷமாகக் கூறுகையாலும் ஆத்மாவிடம் ஸங்க₃ம் (பற்று) இவர்களுக்குத் தேவையானதாகையாலும், இவர்களால் வெல்லப்படுவதாகச் சொல்லப்படும் ஸங்க₃ம் ஶப்₃த₃ாதி₃ விஷயங்களில் பற்றே என்று கொள்ள வேண்டும். இனி விஷயங்களில் பற்றை வென்றதனால் விளையும் பயனைக் கூறுகிறது — (அத்₄யாத்ம நித்யா:) "அத்₄யாத்ம ஜ்ஞாந நித்யத்வம்" [13-11] என்று இது முன்னமே கூறப் பட்டது. ஆத்ம விஷயமான ஜ்ஞானம் 'அத்₄யாத்மம்' எனப் படுகிறது. அதில் எப்போதும் ஈடுபட்டிருக்கை 'அத்₄யாத்ம(ஜ்ஞான) நித்யத்வ'மாகிறது. யோக₃ம் செய்யும் காலத்தில் இடைவிடாமலும், யோக₃த்தை விட்டு எழுந்தபோதும் பெரும்பான்மையான காலங்களிலும இவன் ஆத்மாவிலேயே ஈடுபட்டிருக்கவேண்டும் என்று கருத்து. இதன் விளைவைக் கூறுகிறது மேலே — (விநிவ்ருத்த காமா:) மிக இனியதான ஆத்ம ஜ்ஞானத்தில் ஈடுபட்டிருக்கையால் மற்ற விஷயங்களில் விருப்பம் நீங்கப்பெற்றவர்கள் இவர்கள் என்று கருத்து. 'நிவ்ருத்தகாமர்கள்' என்னாமல் 'விநிவ்ருத்தகாமர்கள்' என்கையாலே, இதர விஷயங்களில் சிறப்பான வைராக்₃யமுடையவர்கள் என்று உணர்த்தப்படுகிறது. அதாவது — விஷயங்கள் எதிரேயிருந்தாலும் அவற்றை உபேக்ஷிக்கலாம்படியான வைராக்₃யமுடையவர்கள் என்று

विनिवृत्तकामाः - विनिवृत्ततदितरकामाः, सुखदुःखसंज्ञैर्द्वन्द्वैश्च विमुक्ताः, अमूढाः - आत्मानात्मस्वभावज्ञाः, तदव्ययं पदं गच्छन्ति - अनव

கருத்து. "ஸங்க3ாத் ஸஞ்ஜாயதே காம:" [கீ3தை 2-62] என்னுமிடத்தில் விஷயங்களில் பற்றின் முற்றின நிலையே காமம் எனக்காட்டப்பட்டது. இங்கு "ஜிதஸங்க3தோ3ஷா:" என்று விஷயங்களில் பற்றில்லாமையும், "விநிவ்ருத்தகாமா:" என்று விஷயங்களில் காமமில்லாமையும் சொல்லப்படுகிறதாகையாலே புநருக்தியில்லை. (ஸுக2து3:க்க2 ஸம்ஜ்ஞைர் த்3வந்த்3வை: விமுக்தா:) விஷயங்களில் பற்றும் விருப்பமும் அற்றுப்போகையாலே அந்த ஸங்க3காமங்களால் விளையும் இன்பதுன்பங்களாகிற இரட்டைகளிலிருந்தும் இவர்கள் விடுபடுகிறார்கள். ஸாத4னத3சையைச் சொல்லும் போது, இன்ப துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுகிறார்கள் என்று கருத்து. ப2லத3சையான முக்தி நிலையை இப்பத3ம் குறிப்பதாகக் கொண்டால் 'இன்ப துன்பங்கள் அடியோடு அற்றவர்களாகிறார்கள்' என்று பொருள். (அமூட4ா:) ஆத்மாவைப் பற்றியும் ஆத்மாவல்லாததைப் பற்றியும் அறிவின்மை முழுதும் நீங்கப்பெறுகையாலே, அவைகளின் தன்மைகளை நன்கு அறியப்பெறுகிறார்கள். ச்லோகத்தின் முற்பாதி மட்டும் ஸாத4னத3சையைச் சொல்லும்போது 'நிர்மாநமோஹா:' என்னும் பத3த்தால் 'தே3ஹாத்மாபி4மானமாகிற மயக்கம் இல்லாதவர்களாயுள்ளனர்' என்று காட்டப்பட்டது. "அமூட4ா:" என்று ப2லத3சையில் தே3ஹாத்மாக்களைப்பற்றிய மற்ற எல்லா மயக்கங்களும் நீங்கப்பெற்று அதனால் தே3ஹாத்மாக்களின் தன்மைகளை நன்கு அறிகிறார்கள் என்று காட்டப்படுகிறது. "த்ரிபி4ர் கு3ணமயைர் பா4வை: ஏபி4ஸ்ஸர்வமித3ம் ஜக3த் | மோஹிதம் நாபி4ஜாநாதி மாமேப்4ய: பரமவ்யயம் ||" [கீதை 7-13] [இவ்வுலகிலுள்ள ஜீவர் அனைவரும் இந்த முக்குண மயமான பொருள்களாலே மயக்கப் பெற்றவராய், இவற்றைக் காட்டிலும் மிக உயர்ந்தவனாய், எப்போதும் ஒருபடிப் பட்டவனான என்னை அறிவதில்லை] என்று முன் கூறியபடியே முக்குணமயமான பொருள்களால் பலவித4மான மயக்கங்கள் இவர்களுக்கு விளைகின்றன. அவற்றில் 'தே3ஹமே ஆத்மா' என்னும் மயக்கத்தை இவர்கள் ஸாத4னத3சையிலேயே போக்கிக் கொள்ளவேண்டும். இது 'நிர்மாநமோஹா:' என்னும் பத3த்தாலே சொல்லப்பட்டது. 'அமூட4ா:' என்னும் இப்பத3ம் தே3ஹாத்

च्छिन्नज्ञानाकारमात्मानं यथावस्थितं प्राप्नुवन्ति ; मां शरणमुपगतानां मत्प्रसादादेवैतास्सर्वाः प्रवृत्तयस्सुकरास्सिद्धिपर्यन्ता भवन्तीत्यर्थः ॥ ५

மாக்களைப் பற்றிய மற்ற எல்லா மயக்கங்களும் முக்தி நிலையில் நீங்கிவிடுவதைக் கூறுகிறது. அன்றிக்கே, 'அமூடா4:' என்னும் இப்பத3மும் ஸாத4னத3சையில் விளைவதைக் கூறுவதாகவே கொள்ளலாம். "அமூட4" ஶப்3த3ம் மோஹத்துக்குக் காரணம் நீங்குவதை லக்ஷணையாலே காட்டுகிறது. தே3ஹாத்மாக்களுக்குள்ள தனித்தன்மைகளை அறிவதனாலேயே தே3ஹாத்மாக்கள் ஒன்றென்னும் மயக்கம் நீங்குகிறது. ஆகையால் 'நிர்மாநமோஹா:' என்று அந்த மயக்கம் நீங்குவதையும், 'அமூடா4:' என்று அதற்குறுப்பாக தே3ஹாத்மத்தன்மைகளை நன்கு அறிவதையும் சொல்லுகையாலே புநருக்தியில்லை என்றும் கொள்ளலாம். (அவ்யயம் தத் பத3ம் க3ச்ச2ந்தி) எல்லையற்ற ஜ்ஞானத்தையே வடிவாகக் கொண்ட இயல்பான நிலையிலுள்ள ஆத்மாவை அடைகிறார்கள். (அவ்யயம்) ஆத்மாக்கள் ஸ்வரூபத்தால் விகாரமற்றவர்களாகையாலே ஸ்வரூபத்துக்கு 'வ்யயம்' எனப்படும் அழிவைச் சொல்ல இடமில்லை. ஆகையால், ஆத்மாவின் த4ர்ம பூ4தஜ்ஞானத்திற்கு ஸம்ஸாரமண்ட3லத்தில் இருக்கும்போது உண்டாகும் ஏற்றத்தாழ்வுகளே இங்கு 'வ்யயம்' எனப்படுகின்றன என்றும், 'அவ்யயம்' என்று முக்தி நிலையில் இந்த ஏற்றத் தாழ்வு நீங்கப்பெற்று எல்லையற்ற ஜ்ஞானத்தையே வடிவாகக் கொண்டதாக ஆத்மா ஆகின்றது என்று காட்டுகிறது என்றும் கொள்ள வேண்டும். 'தத்' என்று ப்ரகரணத்தில் ப்ரஸித்3த4மா யிருக்கும் ஆத்ம ஸ்வரூபத்தைக் குறிக்கிறது. "பத்3யதே இதி பத3ம்" [அடையத்தக்கதாகையாலே பத3ம் எனப்படுகிறது] என்னும் வ்யுத்பத்தியாலே பத3ஶப்3த3ம் அடையத்தக்கதான ப்ராப்ய வஸ்துவைக் குறிக்கிறது. "ப்ராபணீயஸ் ததை2வாத்மா ப்ரக்ஷீணாஶேஷபா4வநா:" [வி பு 6-7-93] [ப்3ரஹ்மபா4வநை, கர்மபா4வநை, உப4யபா4வனை என்னும் மூன்று விதமான பா4வனைகளும் நீங்கப்பெற்ற உபாஸகனின் ஆத்மாவும் அடையத் தக்கதாகிறது] என்று சொல்லப்பட்ட ரீதியில் ஆத்ம ஸ்வரூபமும் முக்தி நிலையில் ப்ராப்யமாகிறதன்றோ. இங்கு பத3ஶப்3த3த்தால் பரமாத்மாவைக் குறிப்பது பொருந்தாது; அடுத்த ஶ்லோகத்தில் இதையே 'தத்' என்னும் பத3த்தால் எடுத்து "மம தா4ம" என்று தன்னுடையதாகக் கூறுகின்றானன்றோ. இந்த ஶ்லோகத்தில்

न तद्भासयते सूर्यो न शशाङ्को न पावकः ।
यद्गत्वा न निवर्तन्ते तद्धाम परमं मम ॥

6. ந தத்₃ ப₄ாஸயதே ஸூர்யோ ந ஶஶாங்கோ ந பாவக: ।
யத்₃க₃த்வா ந நிவர்த்தந்தே தத்₃தா₄ம பரமம் மம ॥

யத்₃க₃த்வா— எதை அடைந்த பின்பு, ந நிவர்த்தந்தே- (அதை அடைந்தவர்கள் ஸம்ஸாரத்துக்குத்) திரும்புவது இல்லையோ, தத்—அந்த ஜீவாத்ம ஜ்யோதியை, ஸூர்ய: ந ப₄ாஸயதே—ஸூர்யன் பிரகாஶிக்கச் செய்வதில்லை; ஶஶாங்க: ந (ப₄ாஸயதே)— சந்திரனும் பிரகாசிக்கச் செய்வதில்லை; பாவக: ந (ப₄ாஸயதே) — அக்₃னியும் பிரகாசிக்கச் செய்வதில்லை. தத்—அந்த, பரமம் தா₄ம— மேலான சோதி, மம—என்னுடைமையாகும்.

பத₃ஶப்₃த₃மும், அடுத்த ஶ்லோகத்தில் "தா₄ம" ஶப்₃த₃மும் பரமபத₃த்தைக் குறிப்பதாகக் கொள்வதும் பொருந்தாது; நாலாவது ஶ்லோகத்தில் "தத்பத₃ம் பரிமார்க்கி₃தவ்யம்" என்று அந்தப் பத₃த்தைத் தேடத்தக்கதாகக் கூறுகிறபடியால் ப்ராப்யமாக அறியத்தக்க பரமபத₃த்தைத் தேடத்தக்கதாகக் கூறுவது பொருந்ாதன்றோ. ஆத்மாவே ஸமாதி₄ பர்யந்தமான நிலைகளில் தேடத்தக்கதாக ஆகிறபடியால், இங்கு பத₃ஶப்₃த₃ம் ஆத்மாவைக் குறிப்பதாகவே கொள்ளவேண்டும். மேலும் அடுத்த ஶ்லோகத்தில் 'மம தா₄ம' என்று சொல்லப்பட்ட வஸ்துவின் ஸம்ஸாரி நிலையே அதற்கடுத்த ஶ்லோகத்தில் "மமைவாம்ஶ: ஜீவபூ₄த:" என்று எடுக்கப்படுகையால், "மம தா₄ம" என்று சொல்லப்படுவது முக்தி நிலையிலுள்ள ஜீவாத்மா என்று கொள்வதே பொருந்தும். "மம தா₄ம" என்று பரமபத₃த்தைக் குறித்து விட்டு உடனே "மமைவாம்ஶ:" என்று ஸம்ஸாரி ஜீவனைக் குறிப்பதில் அவ்வளவு பொருத்தமில்லையன்றோ. ஆக, இந்த ஒன்றரை ஶ்லோகங்களால் "என்னை ஶரணமடைந்தவர்களுக்கு தே₃ஹாத்ம மயக்கம் நீங்குகை முதலானவை அனைத்தும் எளிதாகி, ஆத்மாநுபவ₄வமாகிற ப₂லமும் ஸித்₃தி₄க்கிறது" என்று சொல்லப்பட்டதாயிற்று. 5.

भा ॥ तदात्मज्योतिर्न सूर्यो भासयते, न शशाङ्कः, न

அந்தவுயிர்ச் சோதியினை யாதித்தன் சந்திரனுஞ்
செந்தழலுந் தாம்விளக்கஞ் செய்யார்க—ளெந்தவுயிர்
தானடைந்தார் மீளார்க டாம மஃதெனக்கே
யானவகை நீதா னறி. 6.

எந்த உயிர்தான் அடைந்தார்—எந்த ஜீவாத்மாவாகிற சோதியை அடைந்தவர்கள், மீளார்கள்-(ஸம்ஸாரத்துக்குத்) திரும்பமாட்டார்களோ. அந்த உயிர்ச்சோதியினை — ஜீவாத்மாவாகிற அந்தச் சோதியை, ஆதித்தன் — சூரியனும், சந்திரனும்—சந்திரனும், செந்தழலும் தாம் — சிவந்த அக்$_3$னியும் கூடிநின்றாலும், விளக்கம் செய்யார்கள் — பிரகாசிக்கச் செய்யமாட்டார்கள்; தாமம் அஃது-சிறந்த சோதியான அந்த ஜீவாத்மா, எனக்கே ஆனவகை — எனக்கே உடைமையாயிருப்பதை, நீ தான் அறி — நீ தான் அறிவாயாக.

6. முன் ஶ்லோகத்தில் சொன்ன பரிஶுத்$_3$த$_4$ாத்மஸ்வருபத்தின் பெருமையைப் பேசுகிறான் இந்த ஶ்லோகத்தில். (தத்) முன் ஶ்லோகத்தில் "தத் அவ்யயம் பத$_3$ம்" என்று சொல்லப்பட்ட அந்த ஶுத்$_3$த$_4$ாத்மஸ்வருபத்தை. தச்ச$_2$ப்$_3$த$_3$ம் சற்று முன் சொல்லப்பட்டதையே காட்டும், "அவ்யயம் தத் பத$_3$ம்" என்று இங்கு பரிஶுத்$_3$த$_4$ாத்மஸ்வருபமே சற்று முன் சொல்லப்பட்டுள்ளது. அடுத்த ஶ்லோகத்திலும் "மமைவாம்ஶோ ஜீவலோகே ஜீவபூ$_4$த:" என்று அந்தப் பரிஶுத்$_3$த$_4$ாத்மஸ்வருபமே சொல்லப்படுகிறது. இந்த ஶ்லோகத்திலும் உபநிஷத்துக்களில் சொல்லப்பட்டபடி ஜீவாத்மஸ்வருபம் தானே பிரகாஶிப்பதாயிருப்பது என்னும் விஷயம் 'த$_4$ாம' ஶப்$_3$த$_3$த்தைப் பிரயோகி$_3$ப்பதன் மூலம் உணர்த்தப்படுகிறது. ஆகையால், இந்த ஶ்லோகம் ஜீவாத்மஸ்வருபத்தைப் பற்றியதே என்றும், 'தத்' என்று ஶுத்$_3$த$_4$ாத்மஸ்வருபத்தையே குறிக்கிறது என்றும் கொள்ளவேண்டும். (ஸூர்ய: ந ப$_4$ாஸயதே, ஶஶாங்க: ந, பாவக: ந) சூரியனோ சந்திரனோ அக்$_3$னியோ பிரகாஶிக்கச் செய்வதில்லை. மூன்றையும் சேர்த்து எடுக்கையாலே, "மூன்றும் கூடினாலும் ஶுத்$_3$த$_4$ாத்மஸ்வருபத்தைப்

पावकश्च । ज्ञानमेव हि सर्वस्य प्रकाशकम्; बाह्यानि तु ज्योतींषि विषयेन्द्रियसंबन्धविरोधितमोनिरसनद्वारेणोपकारकाणि । अस्य च प्रकाशको योगः, तद्विरोधि चानादिकर्म, तन्निवर्तनं चोक्तं भगवत्प्रपत्तिमूलमसङ्गादि । यद्गत्वा पुनर्न निवर्तन्ते, तत्परमं धाम परं

பிரகாசிக்கச் செய்வதில்லை" என்றும் உணர்த்தப்படுகிறது. அதாவது—ஜ்ஞானமே அனைத்தையும் பிரகாசிக்கச் செய்வது என்றும், வெளியிலிருக்கும் சோதிகளான சூரியனும் சந்திரனும் அக்3னியும், விஷயங்களோடு இந்த்3ரியங்கள் தொடர்பு கொள்வதற்குத் தடையாயிருக்கும் இருளைப்போக்குவதற்கு உதவி செய்வதன்மூலமே வெளிப்பொருள்களைப் பிரகாசிக்கச் செய்பவையாக வழங்கப்படுகின்றன என்றும் கருத்து. அந்த ஸூர்யன் முதலானவற்றால் காட்டப்படுபவையாகத் தோன்றும் வெளிப்பொருள்களோடு அந்த சூரியன் முதலானவற்றோடு வாசியற அனைத்தும் ஜ்ஞானத்தாலன்றோ உண்மையில் ஜீவாத்மாவுக்கு அறிவிக்கப்படுகின்றன; ஜ்ஞானமானது இந்த்3ரியங்கள் மூலமாக விஷயங்களைச் சென்றடையும்போது, அது அவற்றை க்3ரஹிக்க முடியாதபடி தடை செய்யும் அங்குள்ள இருளைப்போக்குவதன் மூலமே சூரியன் முதலானவை ஜீவாத்மா வெளிப்பொருள்களை அறிவதற்கு உதவி புரிகின்றனவேயொழிய அவை நேரே அவ்வெளிப் பொருள்களை ஜீவாத்மாவுக்கு அறிவிப்பதில்லையே. இனி, "அப்படியானால், இந்த அனைத்தையும் பிரகாசிக்கச் செய்யும் சோதியுருவான ஆத்மா ஏன் உலகில் தானே பிரகாசிப்பதில்லை? எதனால் அதைப் பிரகாசிக்கச் செய்ய முடியும்?" என்னும் கேள்விகள் எழுகின்றன. இதற்கு பதில்:— "தானே பிரகாசிக்கும் இந்த ஆத்மா அந்தந்த ஜீவாத்மாவுக்கு ஓரளவு பிரகாசிக்கவே செய்கிறது. இதனுடைய எல்லாத்தன்மைகளையும் உள்ளபடி பிரகாசிக்கச்செய்யக்கூடியது யோக3மேயாகும்" என்பது, "இந்த யோக3ம் ஏன் அனைவருக்கும் ஸித்3தி4ப்பதில்லை?" எனில்: அநாதிகாலமாகப் பாபங்களை மிகுதியாகச் செய்திருக்கும் பலர்க்கு அப்பாபங்கள் யோக3ம் கைகூடாதபடி தடுக்கையால், அவர்களுக்கு யோக3ம் கைகூடுவதில்லை. "அப்படியானால், யோக3ம் கைகூடுவதற்கு வழியே இல்லையோ?" எனில்; எம்பெருமானை சரணமடைவதை முன்னிட்டுக்கொண்டு விஷயங்களில் பற்றின்மையை விளைத்துக்கொண்டால் அந்தப் பாபங்கள் நீங்கி யோக3ம்

ज्योतिः, मम — मदीयं ; मद्विभूतिभूतो ममांश इत्यर्थः । आदित्यादीनामपि प्रकाशकत्वेन तस्य परमत्वम् । आदित्यादीनि हि

கைகூடும் என்பது முன்னமே சொல்லப்பட்டது. இனி, ஶ்லோகத்தின் பிற்பாதியில் இந்த ஶுத்₃த₄ாத்மஸ்வரூபம் தன் உடைமை என்று காட்டுகிறான். (யத்₃க₃த்வா ந நிவர்த்தந்தே) எந்த ஶுத்₃த₄ாத்மஸ்வரூபத்தை முக்தி நிலையில் அடைந்தவர்கள் இந்த ஸம்ஸார மண்ட₃லத்துக்குத் திரும்பி வருவதில்லையோ. (தத் பரமம் த₄ாம) அந்த மேலான சோதி. த₄ாம ஶப்₃த₃ம் முன் ஶ்லோகத்தில் உள்ள பத₃ஶப்₃த₃ வ்யாக்₂யானத்தில் சொன்னபடி பரமபத₃த்தைக் குறிக்கமாட்டாது. மேலும் ஶ்லோகத்தின் முற்பாதியில் சூரியன் முதலானவற்றாலும் பிரகாசிக்கச் செய்ய முடியாததாய், அவற்றையும் பிரகாசிக்கச் செய்யும் சோதியாயிருப்பது ஜீவாத்மஸ்வரூபம் என்று உணர்த்தப்படுகையால், இங்கு த₄ாம ஶப்₃த₃த்துக்குச் 'சோதி' என்று பொருள் கொள்வதே தக்கது. 'பரமம் த₄ாம' என்கையாலே முற்பாதியில் ஸூர்யசந்த்₃ராதி₃களைக் காட்டிலும் மேலானதாகச் சொல்லப்பட்ட ஆத்மச் சோதியே இது என்று உணர்த்தப்படுகிறது. "தத் மம பரமம் த₄ாம" என்று அன்வயித்து "அது என்னுடைய மேலான சோதி" என்று பொருள் கொள்வதில் ஸ்வாரஸ்யம் அதி₄கமில்லை. "தத் பரமம் த₄ாம மம" என்று அன்வயித்து "அந்த மேலான சோதி என்னுடைமையாகும்" என்று பொருள் கொள்வதில் "முக்தி நிலையிலும் ஜீவாத்மஸ்வரூபம் எம்பெருமானுக்கு உடைமையாகவே இருக்கிறது" என்னும் பொருட்சிறப்பு ஸித்₃தி₄க்கிறது. முக்திநிலையில் எம்பெருமானோடு பரமஸாம்யத்தை அடைந்தாலும் இவன் அவனைப்போலே ஸ்வதந்த்ரனாவதில்லை என்பதும், அவனுக்கு உடைமையாகவே இருக்கிறான் என்பதும் தெளிவுபடுத்தப்படுகிறது. அடுத்த ஶ்லோகத்தில் "மமைவாம்ஶ:" என்று சொல்லுகிறபடியால், இந்த முக்தாத்மஸ்வரூபம் தனக்குச் செல்வமாயிருக்கும் தன் அம்சமே என்பதை "மம" என்னும் சொல்லால் காட்டுகிறான் என்று ப₄ாஷ்யத்தில் உரையிடப்பட்டது. 'உலகிலுள்ள செல்வங்களைப்போலே உடையவனை விட்டுப்பிரிந்திருப்பதன்று இந்தச் செல்வம், உடையவனை விட்டுப்பிரியாமல் அவனுடைய ஶரீரரூபமான அம்ஶமாகவே இருப்பது இச்செல்வம்' என்று கருத்து. இங்கு 'அம்ஶ' ஶப்₃த₃த்தின் பொருளைப் பற்றிய பின்வரும் விசாரம் குறிக்கொள்ளத் தக்கது:— ப₄க₃வானுடைய ஸ்வரூபம் ஒன்றாகவும் அவயவமற்றதாகவும் இருக்கிறது. ஆகையால் ஜீவன் ப₄க₃வானு

ज्योतींषि न ज्ञानज्योतिषः प्रकाशकानि ; ज्ञानमेव सर्वस्य प्रकाशकम् ॥ ६ ॥

டைய ஸ்வரூபத்தின் அம்ஶமாக (பகுதியாக) முடியாது. ஒருவஸ்துவின் ஒரு பகுதியே அம்ஶமெனப்படுகிறதாகையால் அம்ஶமும் அம்ஶத்தையுடைய அம்ஶியும் வேறுபட்டது என்று கொண்டே தீரவேண்டும். 'ஒரு பொருளில் அம்ஶமெது, அம்ஶியெது?' என்னும் கேள்வியெழுந்தால் 'அம்ஶியே அம்ஶம்' என்று மயங்கியவன் கூடச் சொல்லமாட்டான். 'அம்ஶத்துக்கும் அம்ஶிக்கும் பே4த3முமுண்டு அபே4த3முமுண்டு' எனில்: இது முன்னுக்குப்பின் முரணாகவும், எல்லா ஶ்ருதிகளுக்கும் முரண்பட்டதாகவும் ஆகும். "பாதோ3ஸ்ய விஶ்வா பூ4தாநி" [பு.ஸூ] [லீலா விபூ4தி முழுவதும் பரம்பொருளின் கால்பகுதியாகும்.] "தஸ்யாவயவ பூ4தைஸ்து வ்யாப்தம் ஸர்வமித3ம் ஜக3த்" [ஶ்வே-4-10] [அப்பரமாத்மாவின் அவயவமாயிருக்கும் ஜீவாத்மாக்களால் இவ்வுலகனைத்தும் வியாபிக்கப்பட்டுள்ளது]. "யதா2 அக்3நே: க்ஷுத்3ரா விஸ்பு2லிங்கா3 வ்யுச்சரந்தி ஏவமேவாஸ்மாதா3த்மந: ஸர்வ ஏவாத்மாநோ வ்யுச்சரந்தி" [ப்3ருஹ 4-1-20] [நெருப்பிலிருந்து சிறிய தீப்பொறிகள் பறப்பது போலே, பரமாத்மாவிடமிருந்து ஜீவாத்மாக்கள் வெளிவருகின்றன] முதலான ஶ்ருதிவாக்யங்களில் பரமாத்மாவின் அம்ஶமாக ஜீவாத்மாவைச் சொல்லியிருப்பது 'பல விஶேஷணங்களோடு கூடியிருக்கும் பரமாத்மாவுக்கு ஜீவாத்மா ஒரு விஶேஷணமாயிருக்கிறான்' என்னும் கருத்துடையதே என்னும் விஷயம் "அம்ஶோ நாநாவ்யபதே3ஶாத் அந்யதா2 ச" [2-3-42] [(ஜீவன் ப்3ரஹ்மத்தின்) அம்ஶமாயிருப்பவனே. (சில ஶ்ருதிகளில்) ஜீவன் ப்3ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்டவன் என்றும், (மற்றும் சில ஶ்ருதிகளில்) ப்3ரஹ்மத்தோடு ஒன்றுபட்டவன் என்றும் உபதே3ஶிக்கையால்] என்று தொடங்கும் ப்3ரஹ்மஸூத்ரத்தின் அம்ஶாதி4கரணத்தில் "ப்ரகாஶாதி3வத்து நைவம் பர:" [2-3-45] [(ஜீவன்) ஒளி முதலானவை (மணி முதலானவற்றுக்குப்) போலே (பரமாத்மாவுக்கு அம்ஶமெனப்படுகிறான்); பரமாத்மா (ஸ்வரூபஸ்வபா4வங்களில்) ஜீவனைப்போன்றவனல்லன்] என்னும் ஸூத்ரத்தில் நிர்ணயிக்கப்பட்டது. ஆகையால், "ஒரு காரணத்தால் ஒன்றாகச் சொல்லப்படும் பல வஸ்துக்களின் கூட்டத்தின் ஒரு பகுதியே அம்ஶம் எனப்படுகிறது" என்று கொள்ளவேண்டும்.

ममैवांशो जीवलोके जीवभूतस्सनातनः ।
मनष्षष्ठानीन्द्रियाणि प्रकृतिस्थानि कर्षति ॥ ७ ॥

7. மமைவாம்ஶோ ஜீவலோகே ஜீவபூ$_4$தஸ் ஸநாதந: ।
மநஷ்ஷஷ்ட$_2$ாநீந்த்$_3$ரியாணி ப்ரக்ருதிஸ்த$_2$ாநி கர்ஷதி ||

ஸநாதந: — அநாதி$_3$காலமாயிருப்பவனாய் மம அம்ஶ: ஏவ (ஸந்) — என் அம்ஶமாகவே இருக்கும் ஜீவர்களில் ஒருவன், ஜீவபூ$_4$த: — (கர்மங்களால் சூழப்பட்ட) ப$_3$த்$_3$த$_4$ ஜீவனாயிருந்துகொண்டு, ஜீவலோகே — ப$_3$த்$_3$த$_4$ ஜீவர்கள் வாழும் லீலாவிபூ$_4$தியிலிருப்பவனாய், ப்ரக்ருதிஸ்த$_2$ாநி — ப்ரக்ருதியின் பரிணாமமான ஶரீரத்திலிருக்கும், மநஷ்ஷஷ்ட$_2$ாநி இந்த்$_3$ரியாணி — மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து ஜ்ஞானேந்த்$_3$ரியங்களையும் (இவற்றை நியமிக்கும்) ஆறாவது இந்திரியமான மனஸ்ஸையும், கர்ஷதி—(கர்மாநுகு$_3$ணமாகச்) செயல் புரியச் செய்கிறான்.

பல நூல்களின் கூட்டமாயிருக்கும் ஒரு வஸ்திரத்தின் அம்ஶமாக அதிலுள்ள நூல்கள் சொல்லப்படுவது இப்படியேயாகும். சில விஶேஷணங்களோடு கூடியிருக்கும் விஶிஷ்டப் பொருள் ஒன்றாயிருக்கும் இடங்களில் விஶேஷணங்கள் இந்த நியாயத்தாலே விஶிஷ்டப் பொருளின் அம்ஶங்களாகக் கருதப்பட்டு ‘விஶேஷணாம்ஶங்கள்’ என்று வழங்கவும் படுகின்றன. ஆக, மிகவும் வேறுபட்டிருக்கும் உடைமையான ஜீவாத்மாவும், உடையவனான பரமாத்மாவும் ஒருவரோடொருவர் விஶேஷண விஶேஷ்ய ப$_4$ாவத்தாலே பிரிக்க முடியாதபடி பிணைந்திருக்கையாலே, விஶிஷ்டனான பரமாத்மாவின் அம்ஶமாக விஶேஷணமாயிருக்கும் ஜீவன் பிரித்து வழங்கப் படுகிறான் என்று கண்டுகொள்வது. (பரமம் த$_4$ாம மம) ஒப்பற்ற சோதியான பரமாத்மாவின் உடைமையாக ஜீவாத்மா இங்கு சொல்லப்படுகையாலே, இங்குள்ள பரமஶப்$_3$த$_3$ம் ‘ஸூர்யன் முதலான மற்ற சோதிகளையும் பிரகாஶிக்கச் செய்வதாலே ஜீவாத்மா அவைகளைக் காட்டிலும் மேலானதாயிருக்கிறது’ என்னும் கருத்துடையது. ஸூர்யன் முதலான சோதிகள் ஸ்வயம் ப்ரகாஶமான ஜீவாத்மாவைப் பிரகாசிக்கச் செய்வதில்லை என்பதையும், ஜீவாத்மாவின் ஜ்ஞானமே ஸூர்யன் முதலான சோதிகளையுள்ளிட்ட எல்லாப் பொருள்களையும் பிரகாசிக்கச் செய்கிறது என்பதையும் முன்னமே சொன்னோம். 6.

भा ॥ इत्थमुक्तस्वरूपस्सनातनो ममांश एव सन् कश्चिदनादि-कर्मरूपाविद्यावेष्टितो जीवभूतो जीवलोके वर्तमानो देवमनुष्यादि-

என்னுரு மமசமா யிவ்வுலகிற் சீவனாய்
முன்னுர நின்று முயலுமுயிர் — தன்னுரு
மைமபுலனு நெஞ்சு மவையாறை யும்வலிக்கும்
வெம்புலத்துச் சேர விரைந்து. 7.

என் ஆரும் அம்சமாய்—எனது பகுதியான அம்சமாய், முன் ஆர நின்று முயலும் உயிர் — அனாதி$_3$காலமாக நித்யமாக இருந்து கொண்டு செயல் புரியும் ஜீவர்களில் ஒருவன், இவ்வுலகில்—இந்த லீலாவி$_4$பூதியில், சீவனாய்—ப$_3$த்$_3$த$_4$ ஜீவனாயிருந்துகொண்டு, தன் ஆரும் — தன்னுடைய உடலில் இணைந்திருக்கும், ஐம்புலனும் — மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஞானேந்திரியங்கள் ஐந்தும், நெஞ்சும—(இவற்றை நியமிக்கும்) நெஞ்சுமாகிற, அவை ஆறையும் — ஆறு இந்திரியங்களையும், வெம் புலத்து சேர — துன்பத்தை விளைக்கும் ஶப்$_3$த$_3$ம் முதலான விஷயங்களில் ஈடுபடும்படியாக, விரைந்து வலிக்கும் — விரைவாகச் செயல்படுத்துவான்.

7. "முன் ஶ்லோகத்தில் சொன்னபடி ஜீவர்கள் அனைவரும் உனக்குச் செல்வமாயிருக்கும் உன் அம்ஶமேயானால், நித்ய ஸூரிகளான ஜீவர்களைப்போலே இவ்வுலகிலுள்ள ஜீவர்கள் அனைவருமே பரிஶுத்$_3$த$_4$மான ஜ்ஞானத்தையுடையவர்களாய் விளங்காமலிருப்பது ஏன்?" என்னும் கேள்வியெழ, ப$_3$த்$_3$த$_4$ ஜீவனும் தன் செல்வமாயிருப்பவனே என்று மறுபடியும் உறுதிப் படுத்திக் கொண்டு, ப$_3$த்$_3$த$_4$ர், முக்தர் முதலான வேறுபாடுகள் ஜீவர்களுக்கிடையே உண்டாவதற்குக் காரணத்தையும் அத்தியாயத்தின் எஞ்சிய பகுதியாலே விளக்குகிறான் அதில் இந்த ஶ்லோகத்தில், ப$_3$த்$_3$த$_4$ ஜீவனும் தனது செல்வமே என்று வலியுறுத்திக்கொண்டு, அநாதி$_3$காலமாக அந்த ப$_3$த்$_3$த$_4$ஜீவன் தான் ஸம்பாதி$_3$த்து வைத்திருக்கும் புண்யபாபரூபமான விலங்குகளாலே கட்டப்பட்டு, தன் சரீரமாகிற சிறையில் அடைபட்டிருக்கிறான் என்று கூறுகிறான். (ஜீவலோகே மமைவாம்ஶ: ஸநாதந:

प्रकृतिपरिणामविशेषशरीरस्थानि मनःषष्ठानीन्द्रियाणि कर्षति । पूर्वोक्तेन मार्गेणास्या अविद्यायाः मुक्तः स्वेन रूपेणावतिष्ठते ; जीवभूतस्त्वतिसंकुचितज्ञानैश्वर्यः कर्मलब्धप्रकृतिपरिणामविशेषरूपशरीरस्थानामिन्द्रियाणां मनःषष्ठानामीश्वरः तानि कर्मानुगुणमितस्ततः कर्षति ॥ ७ ॥

ஜீவபூ₄த:) முன் ஶ்லோகங்களில் சொன்னபடி இயற்கை நிலையில் ஜ்ஞானமயனுயிருக்கும் ஜீவர்களில் ஒருவனுன ப₃த்₃த₄ஜீவன்—ப₃த்₃த₄ஜீவர்கள் நிரம்பியிருக்கும் இந்த லீலா விபூ₄தியில் என்னுடைய அம்ஶமாயிருந்துகொண்டே அனுதி₃காலமாகத் தான் சேர்த்துவைத்திருக்கும் புண்ய பாப கர்மங்களாகிற அவித்₃யையாலே கட்டுப்பட்டவனுய் வாழ்கிருன். "மமைவாம்ஶ:" என்றவிடத்தில் ஏவகாரத்தாலே இவன் சென்ற ஶ்லோகத்தில் சொன்னபடி தன்னுடைய செல்வமாயிருக்கும் அம்ஶமே என்பதை வலியுறுத்துகிருன். 'ஜீவலோக:' என்று லீலா விபூ₄தியைக் குறிக்கிறது. 'ஜீவபூ₄த:' என்றது ஜாத்யேக வசனம். லீலா விபூ₄தியிலுள்ள ப₃த்₃த₄ ஜீவர்கள் அனைவரையும் குறிக்கிறது. 'ஸநாதந:' என றதால் ஈஶ்வரனைப்போலே இவனும் அனுதி₃யானவன் என்று உணர்த்தப்படுகிறது. 'ஜீவபூ₄த:' என்றதாலே அனுதி₃காலமாக இவன் செய்த புண்ய பாப கர்மங்களாலே ஜ்ஞானத்தில் ஏற்றத்தாழ்வுடையவனுய், கட்டுப்பட்டிருக்கிருன் என்று காட்டப்பட்டது. (ப்ரக்ருதி ஸ்த₂ாநி இந்த்₃ரியாணி) மூலப்ரக்ருதியின் பரிணுமமாயிருக்கும் தே₃வர் மனிதர் முதலான ஶரீரங்களில் இருக்கும் இந்த்₃ரியங்களை. இந்த்₃ரியங்கள் ஶரீரத்திலேயே இருக்கிறபடியால் இங்கு ப்ரக்ருதி ஶப்₃த₃ம் மூல ப்ரக்ருதியின் கார்யமான ஶரீரத்தைக் குறிப்பதாகக் கொள்ள வேண்டும். அந்த இந்த்₃ரியங்கள் எவை? எனில் (மந: ஷஷ்ட₂ாநி இந்த்₃ரியாணி) மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஜ்ஞானேந்த்₃ரியங்கள் ஐந்தும், இவற்றை நியமிப்பதாய், ஜ்ஞானம் வெளிப்படும் வழியாயிருப்பதான மனமும் ஆகியவையே அவை என்கிறது. (கர்ஷதி) செயல் புரியச்செய்கிருன். தன் கர்மானுகு₃ணமாக ஶப்₃த₃ம், ஸ்பர்ஶம், ரூபம், ரஸம், க₃ந்த₄ம் எனும் ப்ராக்ருத விஷயங்களில் ஈடுபடச் செய்கிருன் என்று கருத்து. முன் ஶ்லோகங்களோடு சேர்த்துப் பார்க்கும்போது "இந்த ப₃த்₃த₄ ஜீவர்களில் ஒருவன் முன் ஶ்லோகங்களில் சொன்ன ரீதியில் ஶரணுக₃தியாலே ப்ரக்ருதியிலிருந்து முக்தியடைந்து ஸ்வரூப விளக்கம் பெறுகிருன்" என்னும் அர்த்த₂மும் உணர்த்தப்

शरीरं यदवाप्नोति यच्चाप्युत्क्रामतीश्वरः ।
गृहीत्वैतानि संयाति वायुर्गन्धानिवाशयात् ॥ ८ ॥

8. ஶரீரம் யத₃வாப்நோதி யச்சாப்யுத்க்ராமதீஶ்வர: ।
க்₃ருஹீத்வைதாநி ஸம்யாதி வாயுர் க₃ந்த₄ாநிவாஶயாத் ॥

ஈஶ்வர;-இந்த்₃ரியங்களை நியமிப்பவனான ப₃த்₃த₄ ஜீவன்: யத் ஶரீரம் அவாப்நோதி — (முன் ஶரீரத்தை விட்டபின்) யாதொரு ஶரீரத்தை அடைகிருனே (அந்த ஶரீரத்திற்கு), யச்ச அபி உத்க்ராமதி — எந்த ஶரீரத்திலிருந்து கிளம்புகிருனே (அந்த ஶரீரத்திலிருந்து) வாயு:- காற்ருனது, ஆஶயாத் — (மலர் முதலான மணமுடைய) பொருள்களிலிருந்து, க₃ந்த₄ாந்—மணம்மிக்க சிறுதுகள்களை, இவ—(எடுத்துச்செல்வது) போல், ஏதாநி — இந்த இந்த்₃ரியங்களை, க்₃ருஹீத்வா—(கிளம்பும் ஶரீரத்திலிருந்து) எடுத்துக் கொண்டு, ஸம்யாதி-(அடையும் ஶரீரத்துக்குச்) செல்கிருன்.

எந்தவுடல் விட்டெவ் வுடலடையு மீசனவன்
சந்தமுட னங்கிவற்றைத் தான்வாங்கிப்—பந்தமுடன்
ருனேகும் வாயுத்தன் சார்மணங்கள் வாங்கியே
பூநேர்நின் றேகுமது போல்.

ஈசனவன்—இந்த்₃ரியங்களை நியமிக்கும் அந்த ஜீவன், எந்த உடல் விட்டு — யாதொரு உடலைவிட்டுக் கிளம்பி, எவ்வுடல் அடையும் — மற்ருெரு உடலை அடையும்போது,

---

படுகிறது. "இப்படி முக்த ஜீவன் ஸம்ஸாரத்தளையிலிருந்து விடுபட்டிருக்கும்போது ப₃த்₃த₄ ஜீவன் மிகக்குறைந்த ஜ்ஞானச் செல்வத்தையுடையவனுய், கர்மத்திஞல் கிடைக்கும் ப்ரக்ருதி பரிணமருபமான தே₃வ மனுஷ்யாதி₃ ஶரீரங்களிலிருக்கும் மனம் முதலான ஆறு இந்த்₃ரியங்களை நியமிக்கும் ஈஶ்வரனுய், அவ் விந்த்₃ரியங்களைக் கர்மானுகு₃ணமாக ஶப்₃த₃ாதி₃ விஷயங்களில் மாறி மாறி ஈடுபடும்படி செய்கிருன்" என்பது ஶ்லோகத்தின் திரண்ட பொருள்.

भा ।। यच्छरीरमवाप्नोति, यस्माच्छरीरादुत्क्रामति, तत्रायमिन्द्रियाणामीश्वरः एतानीन्द्रियाणि भूतसूक्ष्मैस्सह गृहीत्वा संयाति। वायु-

---

அங்கு — அந்த விடும் உடலிலிருந்து, இவற்றை — இந்த இந்த்₃ரியங்களை, சந்தமுடன் தான் வாங்கி—விருப்பத்துடன் எடுத்துக்கொண்டு, பந்தமுடன் தான் ஏகும்—கர்ம ப₃ந்த₄த்தோடு தானே (அடையும் ஶரீரத்துக்குச்) செல்கிறான்; வாயு—காற்றானது பூநேர்நின்று—பூ முதலானமணம் மிக்க பொருள்களைத் தடவிச் செல்லும்போது, தன் ச்ரீர்மணங்கள் வாங்கியே — அந்தப் பூ முதலானவற்றிலுள்ள மணத்தோடு கூடிய துகள்களை எடுத்துக்கொண்டே, ஏகும் அது போல்— வேறிடத்துக்குச் செல்வது போன்றது இது,

---

8. இந்த ஶ்லோகத்தில் ஜீவன் ஒரு பிராக்ருத ஶரீரத்திலிருந்து கிளம்புவது, மற்றொரு பிராக்ருத ஶரீரத்தில் புகுவது முதலான துன்பங்களை அனுப₄விப்பதைக்காட்டுகிறான். (ஶரீரம் யத் அவாப்நோதி) ஒரு ஶரீரத்தை விட்ட பின்பு யாதொரு புதிய ஶரீரத்தை ஜீவன் அடைகிறானோ அந்தஶரீரத்திற்கு. (யத் சாபி உத்க்ராமதி) இங்கு 'யத்' என்னும் ஶப்₃த₃ம் 'யஸ்மாத்' என்று பொருள்படும். எந்த ஶரீரத்திலிருந்து வெளிக்கிளம்புகிறானோ, அந்த ஶரீரத்திலிருந்து. (ஈஶ்வர:) இந்த்₃ரியங்களை நியமிக்கும் ஈஶ்வரனான இந்த ப₃த்₃த₄ ஜீவன். ப்ரகரணவசத்தாலே இங்கு ஈஶ்வர ஶப்₃த₃ம் ஜீவனைக் குறிக்கிறது என்பது தெளிவு. இனி, ஶ்லோகத்தின் பிற்பாதியாலே — இந்த்₃ரியங்களையே செல்வமாக உடையவனாகையாலே இவன் ஒரு ஶரீரத்திலிருந்து மற்றொரு ஶரீரத்துக்குப் போகும்போது முன் ஶரீரத்திலிருந்த தன் செல்வமான இந்த்₃ரியங்களைப் பின் ஶரீரத்துக்கும் கொண்டு செல்கிறான் என்கிறது. (ஏதாநி) முன் ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட இந்த்₃ரியங்களை. (க்₃ருஹீத்வா) கிளம்பும் ஶரீரத்திலிருந்து எடுத்துக்கொண்டு. (ஸம்யாதி) புதிதாக அடையும் ஶரீரத்துக்குச் செல்கிறான். ஔசித்யத்தை நோக்கி இப்படிப் பொருள் கொள்ளப்பட்டது. நாலாவது பாத₃த்தில் இதற்கு ஓர் த்₃ருஷ்டாந்தம் கூறப்படுகிறது — (வாயு; ஆஶயாத் க₃ந்த₄ாநிவ)

गन्धानिवाशयात् — यथा वायुः स्रक्चन्दनकस्तूरिकाद्याशयात्— तत्स्थानात् सूक्ष्मावयवैस्सह गन्धान् गृहीत्वाऽन्यत्र संयाति, तद्वदित्यर्थः ॥ ८ ॥

भा ॥ कानि पुनस्तानीन्द्रियाणीत्यत्राह—

श्रोत्रं चक्षुस्स्पर्शनं च रसनं घ्राणमेव च ।
अधिष्ठाय मनश्चायं विषयानुपसेवते ॥ ९ ॥

9. ஶ்ரோத்ரம் சக்ஷுஸ் ஸ்பர்ஶநம் ச ரஸநம் க்₄ராண மேவ ச ।
அதி₄ஷ்ட₂ாய மநஶ்சாயம் விஷயாநுபஸேவதே ॥

அயம்—இந்த ஜீவன், ஶ்ரோத்ரம்—செவி, சக்ஷு: — கண், ஸ்பர்ஶநம் ச — மெய், ரஸநம் — நா, க்₄ராணம் ஏவ ச — மூக்கு என்னும் இந்த ஐந்து இந்த்₃ரியங்களையும், மந: ச — (இவற்றை நியமிக்கும்) மனத்தையும். அதி₄ஷ்ட₂ாய — தத்தமக்குரிய ஶப்₃த₃ம் முதலான விஷயங்களில் மேயவல்லவையாக ஆக்கி, விஷயாந் — அந்தந்த விஷயங்களை, உபஸேவதே—அநுப₄விக்கிருன்.

காற்றுனது மாலை, சந்த₃னம், கஸ்தூரி முதலான மணம் மிக்க பொருள்களிலிருந்து மணத்துடன் கூடிய சிறு துகள்களை எடுத்துக் கொண்டு வேறிடத்துக்குச் செல்வது போன்றது இது என்று கருத்து. க₃ந்த₄ம் (மணம்) என்னும் கு₃ணத்தை மணமுடைய பொருளிலிருந்து தனியே பிரித்து எடுத்து வரமுடியாதாகையாலே, இங்கு க₃ந்த₄ ஶப்₃த₃ம் மணமுடைய சிறு துகள்களைக் காட்டுகிறது. இந்த த்₃ருஷ்டாந்த ப₃லத்தாலே, மணத்தோடு அதற்கு இருப்பிடமான நுண்ணிய துகளும் வருவது போலே, தா₃ர்ஷ்டாந்திகத்திலும் இந்த்₃ரியங்களோடு அவற்றுக்கு இருப்பிடமான பூ₄தஸூக்ஷ்மங்களும் வருகின்றன என்று உணர்த்தப்படுகிறது, இதனாலேயே பா₄ஷ்யத்தில் "இந்த்₃ரியாணி பூ₄தஸூக்ஷ்மைஸ் ஸஹ க்₃ருஹீத்வா ஸம்யாதி" [இந்த்₃ரியங்களை பூ₄தஸூக்ஷ்மங்களோடு கூட எடுத்துக்கொண்டு செல்கிருன்] என்று அருளிச்செய்யப்பட்டது. 8.

भा ।। एतानि मनःषष्ठानीन्द्रियाण्यधिष्ठाय — स्वस्वविषयवृत्त्यनुगुणानि कृत्वा, तान् शब्दादीन् विषयानुपसेवते — उपभुङ्क्ते ।। ९ ।।

செவிகண் டுவக்குடன் சிங்ஙவைநா சிச்சேர்ந்
தவிவின்றி நெஞ்சோ டமர்ந்து – நவிவில்லாப்
புன்பொருள்க ளெல்லாம புசித்தியலு மிவ்வுயிர்தா
னின்புறுதல் சேர்நசையா லிங்கு. 9.

இங்கு இவ்வுயிர்தான் — இந்த லீலாவிபூ₄தியில் உள்ள ப₃த்₃த₄ஜீவன், இன்புறுதல் சேர் நசையால் — தான் இன்பம் அடையவேண்டும் என்னும் ஆசையால், செவி — செவி, கண் — கண், துவக்குடன் — மெய், சிங்ஙவை — நாக்கு, நாசி சேர்ந்து — மூக்கு என்னும் ஐந்து ஞானேந்த்ரியங்களும் சேர்ந்து, அவிவின்றி — இடைவிடாமல், நெஞ்சோடு அமர்ந்து — (இவ்வைந்தையும் நியமிக்கும்) மனத்தோடுகூடி, நவிவு இல்லா — அழிவில்லாத, புன் பொருள்கள் எல்லாம் — தாழ்ந்த ப்ராக்ருதப் பொருள்கள் அனைத்தையும், புசித்து இயலும்—அனுப₄வித்து வாழ்கிருன்.

9. முன் இரண்டு ஶ்லோகங்களிலும் சொல்லப்பட்ட அந்த இந்த்₃ரியங்கள் எவை என்பதை விளக்கிக்கொண்டு அவ்விந்த்₃ரியங்களைக்கொண்டு ப₃த்₃த₄ஜீவன் விஷம் கலந்த தேன் போன்ற ப்ராக்ருத விஷயங்களை அனுப₄வித்து உழல்கின்ருன் என்கிறது. (ஶ்ரோத்ரம்) ஶப்₃த₃த்தை நுகரும் செவி. (சக்ஷு:) ரூபத்தை க்₃ரஹிக்கும் கண். (ஸ்பர்ஶநம் ச) தொடுவுணர்ச்சியை நுகரும் த்வக் அல்லது மெய் எனப்படும் இந்த்₃ரியம். (ரஸநம்) சுவையை உணரும் 'நா' எனும் இந்த்₃ரியம். (க்₄ராணம் ஏவ ச) மணத்தை உணரும் மூக்கு ஆக ஜ்ஞாநேந்த்₃ரியங்கள் ஐந்தையும். (மந:ச) இவை ஐந்தையும் நியமிப்பதாய், நினைத்தல் முதலான செயல்களையுடைத்தான மனத்தையும். (அதி₄ஷ்டா₂ய) தத்தம் விஷயங்களில் ஈடுபடும்படி செய்து. (அயம் விஷயாந் உபஸேவதே) இந்த ப₃த்₃த₄ஜீவன் முற்கூறிய ஶப்₃த₃ம் முதலான விஷயங்களை அனுப₄விக்கிருன். விஷம் கலந்த தேன் போன்று துன்பம் மிகுந்த இன்பத்தை அளிக்கும் கணக்கற்ற ப்ராக்ருதப் பொருள்களில் மண்டித் துன்புறுகிருன் என்று கருத்து. 9.

उत्क्रामन्तं स्थितं वाऽपि भुञ्जानं वा गुणान्वितम् ।
विमूढा नानुपश्यन्ति पश्यन्ति ज्ञानचक्षुषः ॥ १० ॥

10. உத்க்ராமந்தம் ஸ்தி₂தம் வாபி பு₄ஞ்ஜாநம் வா
குணா₃ந்விதம் ।
விமூடா₄ா நாநுபஶ்யந்தி பஶ்யந்தி ஜ்ஞாநசக்ஷுஷ: ॥

கு₃ணாந்விதம்—(முற்கூறியபடி) கு₃ணமயமான சரீரத்தோடு சேர்ந்திருப்பவனாய், உத்க்ராமந்தம் — (ஒரு சரீரத்திலிருந்து) கிளம்புகிறவனாய், ஸ்தி₂தம் வாऽபி—(அல்லது) வேறொரு சரீரத்தில் இருப்பவனாய், பு₄ஞ்ஜாநம் வா — (அல்லது) கு₃ணமய விஷயங்களை அநுப₄விப்பவனாயிருக்கும் ஜீவனை, விமூடா₄: —(தே₃ஹமே ஆத்மா என) மயங்கியவர்கள், ந அநுபஶ்யந்தி—(தே₃ஹத்தைக் காட்டிலும் வேறுபட்ட ஞானவடிவினனாகக்) காண்பதில்லை, ஜ்ஞாநசக்ஷுஷ: - (தே₃ஹத்தைக் காட்டிலும் வேறுபட்டது ஆத்மா எனும்) அறிவுக்கண்ணை உடையவர்கள், பஶ்யந்தி — (முற்கூறிய எல்லா நிலைகளிலும் இவனை தே₃ஹத்திலும் வேறுபட்டவனாகவே) காண்கிறார்கள்,

---

இந்தவுடல் விட்டேக லெய்ந்து மிதிலிருந்தும்
வந்துபுசித் துங்குணத்தின் மன்னுமிவனை—வந்தறிவின்
மூட ருணர முகமறியார் முற்றுணர்வர்
நாட வுணர்வழியார் நன்கு. 10.

இந்த உடல் விட்டு ஏகல் ஏய்ந்தும்—(இருக்கின்ற) இந்த உடலைவிட்டுப் புறப்படத்தொடங்கியும், இதில் இருந்தும்— (அல்லது) இதிலேயே இருந்தும், வந்து புசித்தும்—(அல்லது குணமயமான விஷயங்களை) அடைந்து அநுப₄வித்தும், குணத்தின் மன்னும் இவனை—கு₃ணமயமான தே₃வாதி₃ சரீரங்களில் சேர்ந்திருக்கும் இந்த ஜீவனை, வந்தறிவின் மூடர்—வந்தேறியான தே₃ஹமே ஆத்மா எனும் நினைவினாலே மயங்கியிருப்பவர்கள், உணர முகம் அறியார்— (தே₃ஹத்தைக் காட்டிலும் வேறுபட்ட அறிவு வடிவினனாய் இருப்பவன் ஜீவன் என) அறிய வழியும் காணார்கள்;

भा ॥ एवं गुणान्वितं सत्त्वादिगुणमयप्रकृतिपरिणामविशेष-मनुष्यत्वादिसंस्थानपिण्डसंसृष्टम्, पिण्डविशेषादुत्क्रामन्तं पिण्डविशेषेऽवस्थितं वा, गुणमयान् विषयान् भुञ्जानं वा कदाचिदपि प्रकृति

நாட உணர்வு அழியார் — (முற்கூறிய எந்த நிலையிலும் உள்ளபடி) அறியவல்ல அறிவுகெடாத ஞானிகள், நன்கு முற்றுணர்வர் — (ஆத்மா தே3ஹத்தைக்காட்டிலும் வேறுபட்டதென்றும், ஞானவடிவானதென்றும்) நன்கு முழுவதும் அறிவார்கள்.

---

10. அநாதி3காலமாகச் செய்யப்பட்ட புண்யபாபகர்மங்களாகிற விலங்கிடப்பெற்ற ஜீவன் ஶரீரமாகிற சிறையில் வாழ்வது ஏழாவது ஶ்லோகத்திலும், அந்த ஶரீரத்திலிருந்து கிளம்புவது, மற்றொரு ஶரீரத்தில் நுழைவது முதலான துன்பங்களை அனுப4விப்பது எட்டாவது ஶ்லோகத்திலும், விஷம் கலந்த தேன் போன்ற ஶப்3த3ாதி3 விஷயங்களை ஶரீரத்திலிருந்துகொண்டு அனுப4விப்பது ஒன்பதாவது ஶ்லோகத்திலும் கூறப்பட்டது. இத்துன்பங்களையெல்லாம் இவன் அனுப4விப்பதற்குக் காரணம் ஆத்மாபஹாரமாகிற திருட்டே என்று காட்டிக்கொண்டு, ஆத்மஸ்வரூபத்தைச் சிலர் காணாமலிருப்பதற்குக் காரணத்தையும் விளக்குகிறான் இந்த ஶ்லோகத்தில். (கு3ணாந்விதம்) ஸத்வரஜஸ் தமஸ்ஸுக்களாகிற கு3ணங்களோடு கூடிய மூலப்ரக்ருதியின் பரிணாமமான மனிதர் முதலான தே3ஹங்களோடு கூடியவனை. ஜீவாத்மாவுக்கு ஸத்வாதி3 கு3ணங்களோடு சேர்த்தி தே3ஹத்தின் மூலமாகவேயாகையால் இப்படியே பொருள் கொள்ளவேண்டும். இனி, இதன் விளைவுகளை முற்பாதியில் எஞ்சிய பகுதியாலே கூறுகிறான். (உத்க்ராமந்தம்) ஒரு ஶரீரத்திலிருந்து கிளம்புகிறவனை. (ஸ்தி2தம் வாபி) அல்லது ஒரு ஶரீரத்தில் வாழ்கிறவனை. (பு4ஞ்ஜாநம் வா) அல்லது முக்குணமயமான விஷயங்களை, ஒரு ஶரீரத்திலிருந்து அனுப4வித்துக் கொண்டிருப்பவனை. இந்த மூன்று நிலைகளைச் சொன்னது ஶரீரத்தோடு கூடிய ஜீவனின் எல்லா நிலைகளுக்கும் உபலக்ஷணம். இனி, பிற்பாதியாலே சிலர் ஜீவஸ்வரூபத்தை உள்ளபடி காணாமலிருப்பதற்குக் காரணத்தையும்

परिणामविशेषमनुष्यत्वादिपिण्डाद्विलक्षणं ज्ञानैकाकारं विमूढाः नानुपश्यन्ति । विमूढाः — मनुष्यत्वादिपिण्डा[कारा]त्माभिमानिनः । ज्ञानचक्षुषस्तु पिण्डात्मविवेकविषयज्ञानवन्तः सर्वावस्थमप्येनं विविक्ताकारमेव पश्यन्ति ॥ १० ॥

यतन्तो योगिनश्चैनं पश्यन्त्यात्मन्यवस्थितम् ।
यतन्तोऽप्यकृतात्मानो नैनं पश्यन्त्यचेतसः ॥ ११ ॥

11, யதந்தோ யோகி₃நஶ்சைநம் பஶ்யந்த்யாத்மந்—
யவஸ்தி₂தம் ।
யதந்தோऽப்யக்ருதாத்மாநோ நைநம் பஶ்யந்த்
யசேதஸ: ॥

யதந்த: யோகி₃ந: ச — (என்னை ஶரணமடைவதை முன்னிட்டுக்கொண்டு கர்மயோக₃ம் முதலான) முயற்சிகளைச் செய்யும் யோகி₃கள், ஆத்மநி அவஸ்தி₂தம் — தன் ஶரீரத்திலிருக்கும், ஏநம் — இந்த ஜீவாத்மாவை, பஶ்யந்தி— (யோக₃மாகிற கண்ணாலே) காண்கிறார்கள்; யதந்த:

சிலர் காண்பதற்குக் காரணத்தையும் கூறுகிறான். (விமூடா₄ : ந அநுபஶ்யந்தி) மனிதர் முதலான தே₃ஹத்தையே ஆத்மா என்று மயங்கும் அறிவிலிகள்—ப்ரக்ருதியின் பரிணாமமான மனிதர் முதலான தே₃ஹத்தைக் காட்டிலும் வேறுபட்டவனாகவும் ஞானமே வடிவெடுத்தவனாகவும் ஜீவ ஸ்வரூபத்தை அறிவதில்லை. ஆக, தே₃ஹாத்மாபி₄மானத்தால் ஆத்மாபஹாரம் செய்வதே சிலர் ஆத்மாவை அறியாமைக்குக் காரணம் என்றதாயிற்று. (நஅநுபஶ்யந்தி) பல்வேறு நிலைகளிலிருக்கும் தே₃ஹத்தை இவன் கண்டு வந்த போதிலும், அதைக்காட்டிலும் வேறுபட்டது ஆத்மா என்று அறியாமையாலே, இவன் ஆத்மாவை அறியாதவனே என்று கருத்து. ''அறிவிலிகள் காண்கிறார்களில்லையே'' என்று எம்பெருமான் தனது மனவருத்தத்தைக் காட்டுகிறான். (ஜ்ஞாந சக்ஷுஷ: பஶ்யந்தி) ஆத்மாவைப் பற்றிய அறிவாகிற கண்ணை யுடையவர்கள் ஶரீரத்தைக்காட்டிலும் ஆத்மா வேறுபட்டது என்று அறிகையாலே, முற்கூறிய எல்லா நிலைகளிலும் ஆத்மாவை ஜ்ஞானமே வடிவெடுத்ததாகவே காண்கிறார்கள். 10

भा ॥ मत्प्रपत्तिपूर्वकं कर्मयोगादिषु यतमानास्तैर्निर्मलान्तःकरणा योगिनो योगाख्येन चक्षुषा आत्मनि — शरीरेऽवस्थितमपि शरीरा-

அபி—(என்னை ஶரணமடையாமல்) முயற்சி செய்த போதிலும். அக்ருதாத்மாந:—மனத்தில் பரிஶுத்3தி4 விளையாதவர்களாய் (அது காரணமாகவே), அசேதஸ: — (ஆத்மாவைக் காணவல்ல) நெஞ்சு இல்லாதவர்கள், ஏநம் ந பஶ்யந்தி—ஆத்மாவை உள்ளபடி காண்பதில்லை.

மன்னுகரு மத்து மருவியல் யோகியர்க
டன்னுடம்பின் மேவிவனைச் சார்ந்துணர்வார்—
முன்னுணரும்
நெஞ்சமில் லாதார் நிறைவின்றித் தாமுணரா
ரெஞ்ச லறவியன்று மிங்கு. 11.

மன்னு கருமத்து மருவு இயல் யோகியர்கள் — என்னை ஶரணமடைவதை முன்னிட்டுக்கொண்டு கர்மயோக3ம் முதலான முயற்சிகளைச் செய்யும் யோகி3கள், தன் உடம்பில் மேவு இவனை — தன் ஶரீரத்தில் இருக்கும் இந்த ஜீவாத்மாவை, சார்ந்து உணர்வார — யோக3மாகிற கண்ணைக் கொண்டு காண்கிறார்கள், இங்கு இயன்றும் — (என்னை ஶரணமடையாமல்) இவ்வுலகில் முயற்சி செய்த போதிலும், நிறைவு இன்றி — (என்னை ஶரணமடையாமையாலே) மனஸ்ஸில் பரிஶுத்3தி4 இல்லாமல், முன் உணரும் நெஞ்சம் இல்லாதார் — ஆத்மாவைக் காணவல்ல நெஞ்சு இல்லாதவர்கள், எஞ்சல் அற தாம் உணரார் — ஆத்மாவைக் குறைவறத் தாம் காண்பதில்லை.

---

11. முன் ஶ்லோகங்களில் சொன்ன அர்த்த2த்தையே காரணம் காட்டி விளக்குகிறான் இந்த ஶ்லோகத்தில். (யதந்த: யோகி3ந:) முன் ஶ்லோகங்களில் சொன்னபடி என்னை ஶரணமடைவதை முன்னிட்டுக் கொண்டு கர்மயோக3ம் முதலான முயற்சிகளைச் செய்பவர்களாய், அதனாலேயே பரிஶுத்3தி4 பெற்ற மனத்தை

द्विविक्तं स्वेन रूपेणावस्थितमेनं पश्यन्ति । यतमाना अप्यकृतात्मानः—मत्प्रपत्तिविरहिणः तत एवासंस्कृतमनसः, तत एवाचेतसः—आत्मावलोकनसमर्थचेतोरहिताः, नैनं पश्यन्ति ॥ ११ ॥

भा । एवं रविचन्द्राग्नीनामिन्द्रियसन्निकर्षविरोधितमसनिरसनमुखेनेन्द्रियानुग्राहकतया प्रकाशकानां ज्योतिष्मतामपि प्रकाशकज्ञानज्योतिरात्मा मुक्तावस्थो जीवावस्थश्च भगवद्विभूतिरित्युक्तम्— * तद्धाम परमं मम * ममैवांशो जीवलोके जीवभूतस्सनातनः इति । इदानीमचित्परिणामविशेषभूतमादित्यादीनां ज्योतिष्मतां ज्योतिरपि भगवद्विभूतिरित्याह—

யுடையவர்களான யோகி₃கள். (ஆத்மநி அவஸ்தி₂தம் ஏநம்) ஶரீரத்தில் இருந்தபோதிலும் ஶரீரத்தைக் காட்டிலும் வேறுபட்டவனாய், ஜ்ஞான வடிவினனாய் இருக்கும் இவனை. இங்கு ஆத்மஶப்₃த₃ம் ஜீவாத்மாவுக்கு இருப்பிடத்தைச் சொல்லுகையாலே ப்ரக்ருதமான ஶரீரத்தையே குறிக்கிறது. (பஶ்யந்தி) ஶரீரத்திலிருந்தபோதிலும் முற்கூறியபடி கர்மயோக₃ம் முதலானவற்றால் முயன்று பரிஶுத்₃தி₄ பெற்ற மனத்தை உடையவர்களாகையாலே, யோக₃மாகிற கண்ணைக்கொண்டு ஆத்மாவை உள்ளபடி காண்கிறார்கள் என்று கருத்து. (யதந்த: அபி அக்ருதாத்மாந:) என்னை ஶரணமடையாமல் முயற்சி செய்பவர்களோவெனில், அது காரணமாகவே மனப்பரிஶுத்₃தி₄யடையாதவர்களாய் இருக்கிறார்கள். (அசேதஸ:) அது காரணமாகவே ஆத்மாவைக் காணவல்ல நெஞ்சில்லாதவர்களாயிருக்கிறார்கள். இவர்களுக்கு நெஞ்சம் இருந்தபோதிலும், அதற்கு ஆத்மாவைக் காண்பதற்கு வல்லமை இல்லாமையாலே, அது இருந்தும் இல்லாததாகவே ஆகும் என்று கருத்து. (ஏநம் ந பஶ்யந்தி) இவ்வாத்மாவை ஶரீரத்தைக் காட்டிலும் வேறுபட்டவனாய் ஜ்ஞான வடிவினனைக் காண்பதில்லை. 11.

यदादित्यगतं तेजो जगद्भासयतेऽखिलम् ।
यच्चन्द्रमसि यच्चाग्नौ तत्तेजो विद्धि मामकम् ॥ १२ ॥

12. யதா₃தி₃த்யக₃தம் தேஜோ ஜக₃த் ப₄ாஸயதேऽகி₂லம் ।
யச்சந்த்₃ரமஸி யச்சாக்₃னௌ தத்தேஜோ வித்₃தி₄ மாமகம் ॥

ஆதி₃த்யக₃தம் —ஆதி₃த்யனிடம் இருக்கும், யத் தேஜ:— யாதொரு தேஜஸ்ஸானது, அகி₂லம் ஜக₃த்—உலகனைத்தையும், ப₄ாஸயதே — ஒளிவிடச்செய்கிறதோ, சந்த்₃ரமஸி யத் — சந்த்₃ரனிடமுள்ள எந்தத்தேஜஸ் (உலகனைத்தையும் ஒளிவிடச் செய்கிறதோ), யத் ச அக்₃னௌ – அக்₃னியிலுள்ள எந்தத் தேஜஸ் (உலகனைத்தையும் ஒளிவிடச் செய்கிறதோ), தத் தேஜ: — அந்தத் தேஜஸ்ஸை, மாமகம் — என்னுடையதாக, வித்₃தி₄—அறிவாயாக.

ஆதித்தன் பானின் றனைத்துலகுந் தான்விளக்குஞ்
சோதிச் சுடர்சோமன் சூழங்கி—மீதிலகி
மன்னுமொழி தன்னின் வனப்பதுவு மன்னனே
யென்னதென வுற்றறிநீ யேய்ந்து. 12.

---

12. இதுவரையில் ஆத்மாவாகிற சோதி தன் விபூ₄தியே (செல்வமே) என்று சொல்லப்பட்டது. இனி, அதைப் பிரகாசிக்கச் செய்யமுடியாதவை என்று சொல்லப்பட்ட மற்ற ப்ராக்ருதச் சோதிகளும் தன் செல்வமே என்று கூறுகிறுன் இந்த ஶ்லோகத்தில். ஆறு ஏழாவது ஶ்லோகங்களில் "சூரியன், சந்திரன், அக்₃னி ஆகிய மூன்றும் இந்த்₃ரியங்கள் பொருள்களோடு தொடர்பு கொள்வதற்குத் தடையான இருளைப்போக்குவதன் மூலம் பொருள்களைப் பிரகாசிக்கச் செய்வதால் இந்திரியங்களுக்கு உதவும் சோதிகளாயுள்ளன. அவற்றையும் பிரகாசிக்கச் செய்யும் ஞானச்சோதியாயிருக்கும் முக்த ஜீவனும் ப₃த்₃த₄ ஜீவனும் என் செல்வமாகவேயிருப்பவர்" என்று சொல்லப்பட்டது. இந்த ஶ்லோகத்தில் அசித்தின் பரிணமமான ஸூர்யன் முதலான சோதிகளின் ஒளியும் தன் செல்வமே என்று காட்டுகிறுன்.

भा ॥ अखिलस्य जगतो भासकमेतेषामादित्यादीनां यत्तेजः, तन्मदीयं तेजः— तैस्तैराराधितेन मया तेभ्यो दत्तमिति विद्धि ॥ १२॥

மன்னனே-அரசனான அர்ஜுனா! ஆதித்தன் பால் நின்று-ஸூர்யனிடமிருந்துகொண்டு, அனைத்துலகும் தான் - எல்லா உலகையும், விளக்கும் சோதி — ஒளிவிடச்செய்யும் ஒளியும், சுடர் சோமன் — பிரகாசிக்கும் சந்திரன், சூழ் அங்கி — சூழ்ந்து எரிக்கும் அக்3னி, மீது இலகி—இவற்றில் இருந்து கொண்டு (உலகனைத்தையும் ஒளிவிடச்செய்யும் ஒளியும்) என்னது — என்னுடையது, அதுவும் — அந்த ஒளி, மன்னும் மொழி தன்னின் வனப்பு — (அந்த ஸூர்யன் முதலான தேவர்கள் என்னைக் குறித்துச் செய்த) நிலையான துதிகளாலுண்டான சிறப்பு, என — என்று, நீ ஏய்ந்து உற்று அறி — நீ பொருந்தி நன்கு அறிவாயாக.

(ஆதி3த்யக3தம் யத்தேஜ: அகி2லம் ஜக3த் பா4ஸயதே) ஸூர்யனிடமிருக்கும் யாதொரு ஒளியானது உலகனைத்தையும் பிரகாசிக்கச் செய்கிறதோ. (யத் சந்த்3ரமஸி) சந்திரனிலிருக்கும் யாதொரு ஒளியானது உலகனைத்தையும் பிரகாசிக்கச் செய்கிறதோ. (யச்ச அக்3நௌ) அக்3னியிலிருக்கும் யாதொரு ஒளி உலகனைத்தையும் பிரகாசிக்கச் செய்கிறதோ. “தேஜ: அகி2லம் ஜக3த் பா4ஸயதே” என்பதை, பிற்பாதியில் இரண்டிடங்களிலும் சேர்த்துக்கொள்ள வேண்டும். (தத் தேஜ: மாமகம் வித்3தி4) அந்த ஒளி என்னுடையது என்று அறிவாயாக. “ஒரு பொருளினுடைய ஒளி மற்றொருவருடையதாக எப்படி ஆகும்? ஆகையால் ஸூர்யன் முதலானவர்களைத் தானாகவே கண்ணன் கூறுவதாகத் தோன்றுகிறதே” என்னும் ஆக்ஷேபம் இங்கு எழுகிறது இதற்கு ஸமாதா4னம் பின்வருமாறு :— ஸூர்யன் முதலானவர்களுக்கும் கண்ணனுக்கும் ஸ்வருபைக்யம் கூறுவது பல ப்ரமாணங்களோடு முரண்படும். ஆகையால், ‘‘ஸூர்யன் முதலான சோதிகளின் அபி4மானிகளான ஸூர்யன், சந்த்3ரன் அக்3னி ஆகிய தே3வர்களால் ஆராதி4க்கப்பட்ட நான் என்னுடைய ஒளியை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறேன்’’ என்று இங்கு கருத்துரைக்க வேண்டும். அதாவது-‘என்னுடையதான ஒளியின் ஒரு துளியை ஒவ்வொரு ஜீவனுக்கும்

भा ।। पृथिव्याश्च भूतधारिण्या धारकत्वशक्तिर्मदीयेत्याह—
गामाविश्य च भूतानि धारयाम्यहमोजसा ।
पुष्णामि चौषधीस्सर्वास्सोमो भूत्वा रसात्मकः ।। १३ ।।

13. க₃ாமாவிஶ்ய ச பூ₄தாநி த₄ாரயாம்யஹமோஜஸா ।
புஷ்ணாமி சௌஷதீ₄ஸ்ஸர்வா: ஸோமோ பூ₄த்வா
ரஸாத்மக: ||

அஹம் — நான், க₃ாம் ஆவிஶ்ய—பூ₄மியினுள் வியாபித்து, பூ₄தாநி — (எல்லாப் பொருள்களையும்), ஓஜஸா —

அவனுடைய கர்மாநுகு₃ணமாக எனது ஸங்கல்பத்தால் சிறிது காலம் கொடுத்திருக்கிறேன்' என்றதாகிறது. வேத₃வாக்யங்களும் "யேந ஸூர்யஸ் தபதி தேஜஸேத்₃த₄:" [காட₂க 3-9] [எந்தப் பரமாத்மாவாகிற சோதியாலே சூரியன் சோதியாகப் பிரகாஶிக்கிருனோ] "யஸ்யாதி₃த்யோ ப₄ாமுபயுஜ்ய ப₄ாதி" [எந்தப் பரமாத்மாவின் ஒளியைப் பெற்று சூரியன் பிரகாஶிக்கிருனோ] "ந தத்ர ஸூர்யோ ப₄ாதி ந சந்த்₃ரதாரகம் நேமா வித்₃யுதோ ப₄ாந்தி குதோऽயமக்₃நி: | தமேவ ப₄ாந்தமநுப₄ாதி ஸர்வம் தஸ்ய ப₄ாஸா ஸர்வமித₃ம் விப₄ாதி ||" [முண்ட 3-2-11] [அந்தப் பரமாத்மாவிடத்தில் சூரியனோ, சந்திரனோ, நக்ஷத்திரங்களோ, மின்னல்களோ பிரகாஶிப்பதில்லை. அக்₃னியைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? பிரகாஶிக்கும் அவனைப் பின்பற்றியே எல்லாச் சோதிகளும் ஒளிவிடுகின்றன. அவனுடைய ஒளியாலே இவையனைத்தும் ஒளிவிடுகின்றன] என்று ஓதுகின்றனவன்றோ. "'ஆதி₃த்யனிடமிருக்கும் சோதி' என்று கூறியது ஆதி₃த்யனிடமுள்ள சைதன்யச் சோதியே" என்று பொருள் கொண்டார் ஶங்கரர். அப்பொருளில் 'அந்தச் சோதி உலகனைத்தையும் பிரகாசிக்கச் செய்கிறது' என்று இங்கு கூறியது பொருந்தாது. ஆதி₃த்யனிடமுள்ள அறிவு நமக்குக் குடம் முதலானவற்றைப் பிரகாஶிக்கச் செய்வதில்லையே. "எல்லாப்பொருள்களிலும் சைதன்யமிருந்த போதிலும், கண்ணாடியில் முக₂ம் தெளிவாகப் பிரகாஶிப்பது போலே, ஸத்வம் மிகுதியாயிருக்கையாலே ஆதி₃த்யன் முதலானவற்றில் சைதன்யம் சிறப்பாகப் பிரகாஶிக்கிறது" என்று அவர் கூறியதும் அஸாரம். அத்₃வைதமதத்தில் முக₂ம் கண்ணாடியிற் போலே சைதன்யம் ஒரு பொருளில் ப்ரதிப₂லிப்பது பொருந்ாதன்றோ

भा ॥ अहं पृथिवीमाविश्य सर्वाणि भूतान्योजसा – समाप्रतिहत-सामर्थ्येन धारयामि । तथाऽहममृतरसमयस्सोमो भूत्वा सर्वौषधीः पुष्णामि ॥ १३ ॥

என்னுடைய தடையற்ற திறமையாலே, த₄ாரயாமி— தாங்குகிறேன், ரஸாத்மக: ஸோம: பூ₄த்வா — அம்ருதரஸமயமான சந்திரனுகி; ஸர்வா: ஓஷதீ₄: — எல்லாப் பயிர்களையும், புஷ்ணுமி — போஷிக்கிறேன்.

பூதலத்தின் மேவியே பூதங்க ளுன்றரிப்பன்
மீதடர்த்து நின்ற மிகுமிடுக்காற்—சீதளஞ்சேர்
சோமனென நின்றமுதஞ் சோர்ந்தே பயிரெல்லாஞ்
சேம முறநிறைப்பன் சேர்ந்து. 13.

நான்—நான், பூதலத்தில் மேவியே - பூ₄மியில்நுழைந்து, மீது அடர்த்து நின்ற மிகு மிடுக்கால்—அனைத்தையும் வெற்றி கொண்டு விளங்கும் என் பெரிய திறமையாலே, பூதஙகள் தரிப்பன் — எல்லாப் பொருள்களையும் தாங்குவேன், சீதளம சேர் சோமன் என நின்று — குளிர்ந்த அம்ருதரஸத்தோடு கூடிய சந்திரனுக நின்று, பயிர் எல்லாம் சேர்ந்து — எல்லாப் பயிர்களையும் (கிரணங்களாலே) அடைந்து, அமுதம் சோர்ந்தே — அம்ருதத்தைப் பெய்து, சேமம் உற நிறைப்பன் — (அவை) வளரும்படி நிறைவு செய்வேன்.

13. பிராகிருதச் சோதிகளான ஸூர்யன் முதலானவற்றுக்குள்ளதான — பொருள்களைப் பிரகாசிக்கச் செய்யும் சக்தி தன்னுடையதே என்று சென்ற ச்லோகத்தில் சொல்லப்பட்டது இனி, பூ₄மியின் தா₄ரணசக்தியும், சந்திரனின் போஷணசக்தியும தனனுடையதே என்று இந்த ச்லோகத்திலும், ஜாட₂ராக்₃னியின் ஜீர்ணம் செய்யும் சகதி தன்னுடையதே என்று அடுத்த சலோகத்திலும கூறுவதன் மூலம், உலகிலுள்ள எல்லாப் பொருள்களுக்கும உள்ளதான ஒவ்வொரு காரியத்தைச் செய்யும் சக்திகளும் தன்னுடையவையே எனறு உபலக்ஷணமுறையாலே காட்டுகிருன் கண்ணன். பிரகரணத்தையொட்டிக் காணும்போது, இந்த ச்லோகங்கள் கண்ணனின் சக்தியைத் தெரிவிப்பதில் மாத்திரம் நோக்குடையவையல்ல என்று விளங்குகிறதன்றே.

(அஹம் கா3ம் ஆவிஶ்ய) நான் பூ4மியினுள் நுழைந்து. "யஸ்ய ப்ருதி2வீ ஶரீரம் ய: ப்ருதி2வீமந்தரோ யமயதி" [எவனுக்கு பூ4மி ஶரீரமோ, எவன் பூ4மியின் உள் நுழைந்து நியமிக்கிருனோ] "ஏஷ ஸர்வபூ4தாந்தராத்மா அபஹதபாப்மா தி3வ்யோ தே3வ ஏகோ நாராயண: " [இவனே எல்லாப்பொருள்களுக்கும் அந்தராத்மாவாய், குற்றமற்றவனுய், பரமபத3த்தில் விளங்கும் ஒப்பற்ற தே3வனுன நாராயணன்] என்று ப்3ருஹதா3ரண்யகத்திலும், ஸுபா3லோபனிஷத்திலும் அந்தர்யாமி ப்3ராஹ்மணத்தில் சொல்லப் பட்டதன்ருே. (பூ4தாநி) அசைவனவும், அசையாதனவுமான எல்லா ஜீவராசிகளையும். (ஓஜஸா தா4ரயாமி) என்னுடைய தடையற்ற திறமையினுலே த4ரிக்கிறேன். இவ்வுலகிலுள்ள திடப் பொருள்கள் தம் மீது இருக்கும் பொருள்களைக் கீழே செல்ல முடியாதபடி தடுப்பதன் மூலம் த4ரிக்கின்றன. நான் அப்படியல்லாமல் எனக்கேயுரிய ஶக்தியாலே பூ4மியிலுள்ள எல்லாப் பொருள்களையும் த4ரிக்கிறேன். நான் நுழைந்து எனது ஶக்தியாலே த4ரிக்காவிடில் பூ4மியின் த4ரிக்கும் சக்தியும் செயல் பட மாட்டாது என்று கருத்து. வேத3வாக்யங்களிலும், "யேந த்3யௌருக்3ரா ப்ருதி2வீ ச த்3ருடே4" [யஜு 4-1-8-5] [பிரகாசிக்கும் த்3யுலோகமும் பூ4மியும் எந்தப் பரமாத்மாவால் த4ரிக்கப்பட்டு உறுதியாக நிற்கின்றனவோ] "ஸ தா3தா4ரப்ருதி2வீம் த்3யாமுதேமாம்" [யஜு 4-2-8-2] [அந்தப்பரமாத்மா இந்த பூ4மியையும், த்3யுலோகத்தையும் த4ரிக்கிருன்] "கிம் ஸ்வித3த்ராந்தராபூ4தம் யேநேமே வித்4ருதே உபே4 விஷ்ணுநா வித்4ருதே பூ4மீ இதி வத்ஸஸ்ய வேத3நா" [யஜு ஆர 1-8-2] [பூ4மியும் தே3வலோகமுமாகிற இவை இரண்டும் எதனுல் த4ரிக்கப்படுகின்றனவோ, இவற்றினிடையில் (அப்படி த4ரித்துநிற்கும்) பொருள் எது? இவ்விரு உலகங்களும் விஷ்ணுவினுலே த4ரிக்கப்படுகின்றன என்பது வத்ஸர் எனும் ருஷியின் ஸாக்ஷாத்காரமாகும்] "ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரஶாஸநே கா3ர்க்கி3 த்3யாவாப்ருதி2வ்யௌ வித்4ருதே திஷ்ட2த:" [ப்3ருஹ 5-8-9] [கா3ர்க்கி3! இந்தப்பரமாத்மாவின் நியமனத்தாலேயேத்3யுலோகமும், பூ4மியும் த4ரிக்கப்பட்டு நிற்கின்றன] என்று முழங்கப் பட்டதன்ருே. இனி, பிறபாதியாலே சந்த்3ரன் பயிர்களைத் தன் அமுத கிரணங்களாலே போஷிப்பதும் நான் என் சக்தியாலே செய்வதே என்கிருன். (ரஸாத்மக: ஸோம: பூ4த்வா) அமுதரஸங்கள் நிரம்பிய சந்திரனுயிருந்துகொண்டு "கா3மாவிஶ்ய" என்ற விடத்திற்போலே சந்திரனை ஶரீரமாகக்கொண்டு என்றே பொருள் கொள்ளவேண்டும். சந்திரன் அமுத ரஸங்கள் நிரம்பியவன் என்பது சாஸ்திரங்களில் பிரஸித்3த4மாகையாலே, இப்படிப்பொருள்

अहं वैश्वानरो भूत्वा प्राणिनां देहमाश्रितः।
प्राणापानसमायुक्तः पचाम्यन्नं चतुर्विधम् ॥ १४

14. அஹம் வைஶ்வாநரோபூ$_4$த்வா ப்ராணிநாம் தே$_3$ஹ
மாஶ்ரித: |
ப்ராணாபாநஸமாயுக்த: பசாம்யந்நம் சதுர்வித$_4$ம் ||

அஹம்—நான், வைஶ்வாநர: பூ$_4$த்வா — ஜாட$_2$ராக்$_3$னியாகி, ப்ராணிநாம் — எல்லா ஜீவர்களின், தே$_3$ஹம் ஆஶ்ரித: — தே$_3$ஹத்திலும் இருப்பவனாய், சதுர்வித$_4$ம் அந்நம்—கடித்தும், உறிஞ்சியும், நக்கியும், குடித்தும் உண்ணப்படும் நாலுவகைப்பட்ட உணவை, ப்ராணாபாந ஸமாயுக்த:—ப்ராணன், அபானன் ஆகியவற்றோடு கூடியவனாய், பசாமி ஜீர்ணமடையச் செய்கிறேன்.

நானமர்ந்து நின்றுலகி னூடு முயிருடலி
லூன மறவளரு மொள்ளெரியாத்—தான்கலவா
வேல்வகைசேர் வாயு விரண்டா லறப்புசிப்ப
னால்வகைசே ரன்னத்தை நன்கு. 14.

நான்-நான், உலகில் நாடும் உயிர் உடலில் — உலகில் உள்ள ஜீவர்களின் உடலில், ஊனம் அற வளரும் ஒள் எரியா அமர்ந்து நின்று—குறைவில்லாமல் வளர்ந்துவரும் ஜாட$_2$ராக்$_3$னி எனும் நெருப்பாகப் பொருந்தி நின்று, நால் வகை சேர் அன்னத்தை — கடித்தும், உறிஞ்சியும், நக்கியும், குடித்தும் உண்ணப்படும் நாலுவகைப்பட்ட உணவை, நன்கு தான் கலவா — நன்றாகக் கலந்து. ஏல்வகை சேர் வாயு இரண்டால் — வ்ருத்தி ரூபமாகச் சேர்ந்த ப்ராணன், அபானன் ஆகிய இரு வாயுக்களோடு கூடியவனாய், அற புசிப்பன்—ஜீர்ணமாகும்படி உண்கிறேன்.

கொள்ளப்பட்டது, (ஸர்வாஶ்ச ஓஷதீ$_4$: புஷ்ணாமி) எல்லாப்பயிர்களையும் சந்திர கிரணங்களாலே அமுதரஸத்தைப் பொழிந்து போஷிக்கிறேன். "ரஸாத்மக: ஸோம:" என்று விஶேஷித்ததாலே இப்படியே பொருள் கொள்ளவேண்டும். பூமியையும் சந்திரனையும் வியாபித்து என் சக்தியாலேயே நான் ஸர்வபூ$_4$தத$_4$ாரணத்தையும் பயிர்களின் போஷணத்தையும் செய்கிறேன் என்றதாயிற்று. 13.

भा ॥ अहं वैश्वानरः -- जाठरानलो भूत्वा सर्वेषां प्राणिनां देहमाश्रितः तैर्भुक्तं खाद्यचो[चू]ष्यलेह्यपेयात्मकं चतुर्विधमन्नं प्राणापानवृत्तिभेदसमायुक्तः पचामि ॥ १४ ॥

---

14. ஜாட₂ராக்₃னியின் ஜீர்ணம் செய்யும் சக்தியும் தன்னுடையதே என்கிறான். (அஹம் வைஶ்வாநரோ பூ₄த்வா) நான் 'வைஶ்வாநரன்' என்று அழைக்கப்படும் ஜாட₂ராக்₃னியாகி. "க₃ாமாவிஶ்ய" (13) என்றவிடத்திற்போலே, 'சரீரமான ஜாட₂ராக்₃னியை வியாபித்து' என்று பொருள்படுகிறது. (ப்ராணிநாம் தே₃ஹமாஶ்ரித:) எல்லா ஜீவராசிகளின் உடல்களிலும் இருப்பவனாய். "கோஷ்டே₂க்₃நிர் பே₄க்துமிச்ச₂தி" [பா₄ர-மோக்ஷ த₄ர்மம் 245—8] [வயிற்றிலிருக்கும் ஜாட₂ராக்₃னி உணவை எரித்து உண்ண விரும்புகிறது] என்று உணவைச் சீரணிக்கச் செய்வதாய், வயிற்றிலுள்ளதாகக் கூறப்படுகின்றதன்றோ இந் நெருப்பு. (சதுர்வித₄மந்நம் பசாமி) சோறு பணியாரங்கள்போலே பல்லால் கடித்துண்ணப்படுவது, பாயஸம்முதலானவற்றைப்போலே உறிஞ்சி உண்ணப்படுவது, தேன் முதலானவற்றைப்போலே நாவால் நக்கி உண்ணப்படுவது, பால் முதலானவற்றைப்போலே பருகி உண்ணப்படுவது என்று அந்த ஜிவராசிகளால் உண்ணப்படும் நாலு வகைப்பட்ட உணவையும் சீரணிக்கச் செய்கிறேன். "த்ரேத₄ா விஹிதம் வா இத₃மந்நம் அஶநம் பாநம் க₂ாத இதி" [இவ்வுணவு நாவால் உண்ணப்படுவது, பருகி உண்ணப்படுவது, கடித்து உண்ணப்படுவது என்று மூன்று வகைப்படும்.] என்னும் வசனத்தில் உணவை மூன்று வகையாகப் பிரித்திருக்க, இங்கு நாலு வகையாகக் கூறுவது எப்படி?எனில், உறிஞ்சி உண்ணப்படும் பாயஸம் முதலானவற்றையும், நக்கி உண்ணப்படும் தேன் முதலானவற்றையும் 'அஶநம்' என்று ஒரே வகையாக்கி அங்கு சொல்லியிருப்பதை இங்கு இரண்டாகப் பிரித்திருக்கையாலே நாலாகிறதாகையால் விரோத₄மில்லை. (ப்ராணாபாநஸமாயுக்த: பசாமி) ப்ராணன் அபானன் என்னும் வ்ருத்திகளையுடைய வாயுவோடு கூடிநின்று முற்கூறிய நாலுவகைப்பட்ட உணவை ஜீர்ணமடையச் செய்கிறேன்.

भा ॥ अत्र परमपुरुषविभूतिभूतौ सोमवैश्वानरौ * अहं सोमो भूत्वा * वैश्वानरो भूत्वेति तत्सामानाधिकरण्येन निर्दिष्टौ। तयोश्च सर्वस्य भूतजातस्य च परमपुरुषसामानाधिकरण्यनिर्देश-हेतुमाह —

सर्वस्य चाहं हृदि सन्निविष्टो मत्तः स्मृतिर्ज्ञानमपोहनं च ।
वेदैश्च सर्वैरहमेव वेद्यो वेदान्तकृद्वेदविदेव चाहम् ॥ १५

"அபாநப்ராணயோர் மத்$_4$யே ப்ராணாபாநஸமாஹித: |
ஸமந்வித: ஸமாநேந ஸம்யக் பசதி பாவக: ||"

[ப$_4$ாரத-ஆநு 246-23]

[ஆஸநவாயிலிருக்கும் அபாந வாயுவுக்கும், ஹ்ருத$_3$யத்திலிருக்கும் ப்ராணவாயுவுக்கும் இடையில் (வயிற்றில்) அந்த ப்ராணாபாந வாயுக்களால் உதவப்பெற்று ஸமாநவாயுவோடும் கூடிநின்று ஜாட$_3$ராக்$_3$னி உணவைச் சரிக்கச் செய்கிறது] என்று சொல்லப் பட்டதன்றோ. ப்ராணன், அபானன், ஸமானன், உதா$_3$னன், வ்யானன் என்று ஐந்து வ்ருத்திகளை (நிலைகளை) உடையதான ஒரு வாயு விஶேஷமே இச்செயலைச் செய்கிறது என்னும் விஷயம் "பஞ்சவ்ருத்திர் மநோவத்$_3$வ்யபதி$_3$ஶ்யதே" [2-4-11] [மனம் பல செயல்களைச் செய்யும்போது பல பெயர்களால் வழங்கப் படுவதுபோலே, ஒரு வாயுவே பல செயல்களைச் செய்யும்போது ப்ராணன், அபானன் முதலான ஐந்து பெயர்களால் வழங்கப் படுகிறது.] என்னும் ஸூத்ரத்தின் ப$_4$ாஷ்யத்தில் "ப்ராணோऽபாநோ வ்யாந உதா$_3$நஸ் ஸமாந இத்யேதத் ஸர்வம் ப்ராண ஏவ" [ப்$_3$ருஹ 1-5-3] [ப்ராணன், அபானன், வ்யானன், உதா$_3$னன், ஸமானன் என்னும் இவ்வைந்தும் ப்ராணனாகிற ஒன்றேயாகும்.] என்னும் ஶ்ருதியைக்கொண்டு ஸ்ரீப$_4$ாஷ்யகாரரால் விளக்கப்பட்டது இங்கு அநுஸந்தி$_4$க்கத்தக்கது. ஆக, இவ் விரண்டு ஶ்லோகங்களிலும் பூ$_4$மியின் தா$_4$ரணஶக்தியும், சந்திரனின் போஷணஶக்தியும், ஜாட$_2$ராக்$_3$னியின் ஜீர்ணம் செய்யும் ஶக்தியும் தன்னுடையதே எனக் காட்டுவதன் மூலம், உலகில் உள்ள எல்லாப் பொருள்களுக்கும் உள்ளதான ஒவ்வொரு காரியத்தைச் செய்யும் ஶக்திகளும் தன்னுடையவையே எனக் காட்டினாயிற்று. 14.

भा ॥ तयोस्सोमवैश्वानरयोः सर्वस्य च भूतजातस्य सकल-प्रवृत्तिनिवृत्तिमूलज्ञानोदयदेशे हृदि सर्वं मत्संकल्पेन नियच्छन्

15, ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி₃ ஸந்நிவிஷ்டோ
மத்த: ஸ்ம்ருதிர்ஜ்ஞாநமபோஹநம் ச |
வேதை₃ஶ்ச ஸர்வைரஹமேவ வேத்₃யோ
வேதா₃ந்தக்ருத்₃வேத₃விதே₃வ சாஹம் ||

அஹம்—நான், ஸர்வஸ்ய ச — எல்லா ஜீவராஶிகளுடையவும், ஹ்ருதி₃ — ஹ்ருத₃யத்தில், ஸந்நிவிஷ்ட: — ஆத்மாவாக நுழைந்து நிற்கிறேன், (அனைவருடைய) ஸ்ம்ருதி:— நினைவும், ஜ்ஞாநம்— வஸ்துநிர்ணயமும், அபோஹநம் ச — மறதியும், மத்த: ஏவ — என்னிடமிருந்தே உண்டாகின்றன; ஸர்வை: வேதை₃: ச-எல்லா வேத₃ங்களாலும், அஹம் ஏவ- நானே, வேத்₃ய: — அறியப்படுகிறேன்; வேதா₃ந்தக்ருத் — வேத₃விதி₄களின் ப₂லனை அளிப்பவனும், வேத₃வித் ச — வேத₃த்தை அறிந்தவனும், அஹம் ஏவ — நானே.

---

15. முன் இரு ஶ்லோகங்களிலும் பரமபுருஷனை தன்னுடைய செல்வமாயிருக்கும் ஸோமனையும் ஜாட₂ராக்₃னியையும் எடுத்து, "அஹம் ஸோமோ பூ₄த்வா—வைஶ்வாநரோ பூ₄த்வா" என்று தானே அவ்விரண்டுமாவதாக அவர்களோடு தனனை ஒரே வேற்றுமையில் படித்தான் கண்ணன். அவர்களையும், உலகிலுள்ள எல்லாப்பொருள்களையும் பரமபுருஷனை தன்னோடு ஒரே வேற்றுமையில் படிப்பதற்குக் காரணத்தை இந்த ஶ்லோகத்தில் கூறுகிறன். (ஸர்வஸ்ய ச ஹ்ருதி₃ அஹம் ஸந்நிவிஷ்ட:) முற்கூறிய ஸோம வைஶ்வானரர்களுடையவும், மற்றுள்ள எல்லா ஜீவராசிகளுடையவும் ஹ்ருத₃யத்தில் நான் நுழைந்து நிற்கிறேன். சகாரம் உக்தஸமுச்சயமாய், முற்கூறிய ஸோமவைஶ்வாநரர்களைக் கூட்டுகிறது "ஸர்வஸ்ய ஹ்ருதி₃" என்கையாலே, இங்கு ஸர்வ ஶப்₃த₃ம் ஹ்ருத₃யமுடைய எல்லாஜீவராசிகளையும் காட்டுகிறது. "ஹ்ருதி₃" என்கையாலே அந்த ஜீவராசிகளை நியமிப்பதற்காக, அவர்களுடைய ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுக்கு மூலமான ஞானம் வெளிப்படும் இடமான ஹ்ருத₃யத்தில் நான் நுழைந்து நிற்கிறேன் என்று உணர்த்தப்படுகிறது.

अहमात्मतया सन्निविष्टः । तथाहुश्श्रुतयः * अन्तः प्रविष्टश्शास्ता जनानां सर्वात्मा (य आ. ३. ११. २) * यः पृथिव्यां तिष्ठन् (बृ ५. ७. ३) * य आत्मनि तिष्ठन्नात्मनोऽन्तरो...यमयति,

---

எல்லா ரிதயத் திருப்பேனு னென்னுலே
நல்லார் நினைவறிவு நாட்டமாஞ் — சொல்லார்ந்த
வேதங்கள் யாவைக்கும் வேத்தியனுன் மேவுபயன்
மீதந் ததுவறிவேன் மிக்கு. 15.

நான்—நான், எல்லார் இதயத்து இருப்பேன்—எல்லா ஜீவராசிகளின் இதயத்திலும் (ஆத்மாவாக) இருக்கிறேன். நல்லார் நினைவு—அறிவுடையவர்களின் நினைவும், அறிவு—வஸ்து நிர்ணயமும், நாட்டம்—ஊகமும், என்னுலே ஆம்—என்னிடமிருந்தே உண்டாகின்றன. சொல் ஆர்ந்த வேதங்கள் யாவைக்கும் — பல தே$_3$வதைகளைச் சொல்லும் வாக்கியங்கள் நிறைந்த வேத$_3$ங்கள் அனைத்துக்கும், வேத்தியன் நான் — பொருளாயிருப்பவன் நான், அது மேவு பயன் மீதந்து—வேத$_3$விதி$_4$களின் பயன்களை அளித்து, அது மிக்கு அறிவேன்—அந்த வேத$_3$ங்களை மிகவும் அறிபவனுகவும் இருப்பவன் நானே.

"ஸந்நிவிஷ்ட:" என்கையாலே, ஆகாசம்போலே வெறும் வியாப்தியாயிராமல், அனைவரையும் 'எனது ஸங்கல்பத்தாலே நியமித்துக்கொண்டு ஆத்மாவாய் நுழைந்து நிற்கிறேன் என்று சொல்லப்படுகிறது. இவ்வண்ணமாக அனைவரையும் நியமித்துக் கொண்டு ஆத்மாவாக எம்பெருமான் வியாபித்து நிற்கிறுன் என்று பல வேத$_3$வாக்கியங்கள் முழங்குகின்றன. அவையாவன;- "அந்த: ப்ரவிஷ்ட: ஶாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா" [யஜு-ஆர 3-11-2] [அனைவர்க்கும் ஆத்மாவான பரமபுருஷன் அனைவரையும் உள்நுழைந்து நியமிக்கிறுன்.] "ய: ப்ருதி$_2$வ்யாம் திஷ்ட$_2$ந்" [எவனொருவன் பூ$_4$மியில் நிற்கிறுனே] என்று தொடங்கி, "ய ஆத்மநி திஷ்ட$_2$ந் ஆத்மநோऽந்தர:......யமயதி" [ப்$_3$ருஹ-

(बृ ५. ७. २२. मा) * पद्मकोशप्रतीकाशं हृदयं चाप्यधोमुखम् (ना) * अथ यदिदमस्मिन् ब्रह्मपुरे दहरं पुण्डरीकं वेश्म (छा ८.१.१)इत्याद्याः। स्मृतयश्च * शास्ता विष्णुरशेषस्य जगतो यो जगन्मयः(वि १.१७ २०), * प्रशासितारं सर्वेषामणीयांसमणीयसाम् (मनु. १२. १२२) *यमो वैवस्वतो राजा यस्तवैष हृदि स्थितः (मनु. ८. ९२)इत्याद्याः।

[5-7—8...22] எவன் ஆத்மாவின் உள்ளும் புறமும் வியாபித்து அதை நியமிக்கிருனே] "பத்3மகோஶப்ரதீகாஶம் ஹ்ருத3யம் சாப்யதோ4முக2ம்..... தஸ்யா: ஶிக2யா மத்4யே பரமாத்மா வ்யவஸ்தி2த:" [தை-நா 11] [இதயத்தாமரையின் நடுவிலுள்ள திவ்யமங்க3ள விக்3ரஹத்தில் பரமாத்மா எழுந்தருளியிருக்கிருன்] "அத2 யதி3த3மஸ்மிந் ப்3ரஹ்மபுரே த3ஹரம் புண்ட3ரீகம் வேஶ்ம" [ச2ாந் 8-1-1] [ப்3ரஹ்மத்தின் இருப்பிடமான இந்த சரீரத்தில் ஸூக்ஷ்மமான தாமரை போன்ற இதயத்தில் பரமாத்மா எழுந்தருளியிருந்து நியமிக்கின்ருன்] முதலான பல வேத3வாக்யங்கள். வேத3த்தைவிளக்கவந்த ஸ்ம்ருதிகளும் இதையே கூறுகின்றன அவையாவன :— "ஶாஸ்தா விஷ்ணுரஶேஷஸ்ய ஜக3தோ யோ ஜக3ந்மய:" [வி-பு-1-17-20] [அனைத்துலகிற்கும் அந்தர்யாமியான விஷ்ணு அதை உள்நுழைந்து நியமிக்கிருன்.] "ப்ரஶாஸிதாரம் ஸர்வேஷாம் அணீயாம்ஸமணீயஸாம்" [மநு 12-122] [அணுவான ஜீவர்களைக்காட்டிலும் அணுவாயிருப்பவனுய் அவர்களை நியமிப்பவனுன பரமபுருஷன்] "யமோ வைவஸ்வதோ ராஜா யஸ்தவைஷ ஹ்ருதி3 ஸ்தி2த:" [மநு 8-92] [எந்தப்பரம புருஷன் உனது ஹ்ருத3யத்தில் எழுந்தருளியிருக்கிருனே அவன் மிக அழகியவனுய், ஸூர்யமண்ட3லத்தில் இருப்பவனுய், அனைவரையும் நியமிப்பவனுய் இருப்பவன்] முதலானவை. இனி, அடுத்த பாத3த்தாலே எல்லா ஜீவர்களுடைய ஹ்ருத3யத்திலும் இருந்துகொண்டு தான் செய்யும் காரியங்களைக் குறிக்கிருன்—(மத்த: ஸ்ம்ருதி: ஜ்ஞாநம் அபோஹநம் ச) என்னிடமிருந்தே அனைவருடைய நினைவும், வஸ்து நிர்ணயமும், மறதியும் உண்டாகின்றன முதல் பாத3த்தில் எல்லா ஜீவர்களுடைய ஹ்ருத3யத்திலும் தான் இருப்பதாகக் கூறுகையாலே, இங்கும் அந்த ஜீவர்கள் அனைவருடைய நினைவு முதலானவையும் தன்னிடமிருந்து உண்டாவதாகக் கூறுவதாகக் கொள்ளவேண்டும். (ஸ்ம்ருதி:) ஏற்கனவே அனுப4விக்கப்

अतो मत्त एव सर्वेषां स्मृतिर्जायते; स्मृतिः—पूर्वानुभूतविषयमनुभवसंस्कारमात्रजं ज्ञानम्। ज्ञानम्—इन्द्रियलिङ्गागमयोगजो वस्तुनिश्चयः; सोऽपि मत्तः। अपोहनं च, अपोहनम्—ज्ञाननिवृत्तिः।

பட்ட ஒருபொருளைப் பற்றி அந்த அனுப$_4$வத்தால் உண்டான ஸம்ஸ்காரத்தால் மாத்திரம் உணரும் அறிவு. ப்ரகரணத்துக்குப் பொருந்தாதாகையாலே, இங்கு ஸ்ம்ருதி ஶப்$_3$த$_3$ம் ஶ்ருதியை விளக்கும் ஸ்ம்ருதியாக மாட்டாது. "ஸோऽயம் தே$_3$வத$_3$த்த:" [அன்று நான் பார்த்த தே$_3$வத$_3$த்தன் இவனே] முதலான இடங்களில் முதலில் அனுப$_4$வித்த விஷயத்தை நினைவுபடுத்துவதில் ஸம்ஸ்காரத்தோடு ப்ரத்யக்ஷமும் உதவிபுரிகிறது. "ப்ரத்யபி$_4$ஜ்ஞை" எனப்படும் அந்த அறிவை விலக்குவதற்காக, 'அந்த அனுப$_4$வத்தால் உண்டான ஸம்ஸ்காரத்தால் மாத்திரம் உணரும அறிவு' என்று இங்கு ஸ்ம்ருதி லக்ஷணம் கூறப்பட்டது. (ஜ்ஞாநம) இந்த்$_3$ரியங்களால் உண்டாகும் ப்ரத்யக்ஷ நிஶ்சயம், ஒரு ஹேதுவால் உண்டாகும் அனுமான நிஶ்சயம், ஶப்$_3$த$_3$ப்ரமாணத்தால் உண்டாகும் ஶாப்$_3$த$_3$நிஶ்சயம், யோகி$_3$களின் யோக$_3$த்தால் உண்டாகும் யோக$_3$நிஶ்சயம் என்று நாலு வகைப்பட்ட ப்ரமாணங்களாலுண்டான வஸ்து நிர்ணயமாகிற அறிவு. ஸ்ம்ருதி ரூபமான அறிவை முதலில் சொல்லிவிட்டபடியால் கோ$_3$ப$_3$லீவர்த்$_3$த$_3$ந்யாயத்தாலே இங்கு 'ஜ்ஞானம்' என்றது ஸ்ம்ருதியைக் குறிக்காமல் முற்கூறிய நாலுவகைப்பட்ட ப்ரமாணங்களாலுண்டாகும் வஸ்து நிர்ணயத்தையே குறிக்கிறது. இந்த வஸ்து நிர்ணயமும் என்னிடமிருந்தே உண்டாகிறது என்று கருத்து. (அபோஹநம் ச) மறதியும் என்னிடமிருந்தே உண்டாகிறது. "அபோட$_4$தோ$_3$ஷ:" [தோ$_3$ஷம் நீங்கப்பெற்றவன்] முதலான ப்ரயோக$_3$ங்களில் அபோஹந ஶப்$_3$த$_3$ம் நீங்குதல் என்னும் பொருளில் வழங்கப்பட்டுள்ளது. எதினின்றும் நீங்குதல் என்னும் கேள்வி எழுந்தவளவில் சற்று முன் சொல்லப்பட்ட ஜ்ஞானத்தினின்றும் நீங்குதல் என்று கொள்வதே உசிதமாகும். ஆகையால், அபோஹநஶப்$_3$த$_3$ம் மறதியைக் குறிக்கிறது, "அபபரீ வர்ஜநே" [அஷ்டாத்$_4$யாயீ 1-4-88] என்னும் ஸூத்ரத்தை அனுஸரித்து 'அப' என்னும் ஶப்$_3$த$_3$ம் நீங்குதலை உணர்த்துகையாலே இப்படிப்பொருள் கொள்ளப்பட்டது.

अपोहनम् — ऊहनं वा, ऊहनमूहः, ऊहो नामेदं प्रमाणमित्थं प्रवर्तितुमर्हतीति प्रमाणप्रवृत्त्यर्हताविषयं सामग्र्यादिनिरूपणजन्यं प्रमाणानुग्राहकं ज्ञानम्ः स चोहो मत्त । एव वेदैश्च सर्वैरहमेव वेद्यः। अतोऽग्निसूर्यवायुसोमेन्द्रादीनां मदन्तर्यामिकत्वेन मदात्मकत्वात्तत्प्रति-

---

'அப' என்னும் சொல் பொருளற்றது என்று கொண்டு 'அபோஹந' ஶப்3த3ம் 'ஊஹனம்' எனப்படும் ஊஹத்தைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். இவ்வூஹத்தைப் பற்றி, "அத்4யாஹாரஸ்தர்க்க ஊஹ:" [அமரகோசம் 1-தீ4வர்க்க3ம்] என்று நிக4ண்டுவிலும் சொல்லப்பட்டது. ஊஹமாவது — "இந்த ப்ரமாணம் இவ்வண்ணமாகச் செயல்புரியத் தகுதியுடையது" என்று ப்ரமாணம் செயல் புரிவதற்குத் தகுதியைப் பற்றியதாய், அந்த ஜ்ஞானத்துக்கு ஸாமக்3ரீ முதலானவற்றை நிருபிப்பதால் உண்டாவதாய், அந்த ப்ரமாணத்துக்கு உதவி புரிவதான ஜ்ஞானம். உதாரணமாக, கண்ணால் ஒரு பொருளைக் காணும்போது உண்டாகும் உண்மையறிவு சாக்ஷுஷப்ரமை எனப்படுகிறது. அந்த உண்மையறிவுக்குத் தனிக்காரணமான ப்ரமாணம் கண் ஆகிற இந்த்3ரியமேயாகும். அது ஒருபொருளை அறியும்போது அப்பொருளையும் அதிலிருக்கும் அதன் உருவத்தையும் நிறம் முதலான தன்மைகளையும அறிகிறது. வெளிச்சம் முதலான ஸாமக்3ரிகள் இருக்கும் போதே இரண்டையும் அறிகிறது. அவை இல்லாவிட்டால் இரண்டையும் அறிவதில்லை. இதிலிருந்து "இந்தக் கண்ணானது அந்தப் பொருளையறியும் கணத்திலேயே அதன் தன்மைகளையும் அறிகிறது" என்று ஊஹித்து உணர்கிறோம். இந்த ஊஹம் 'அந்த ப்ரத்யக்ஷ ப்ரமாணமானது உருவம் முதலான தன்மைகளையும் அவற்றையுடைய பொருளையும் ஒரே காலத்தில் அறிகிறதா? வெவ்வேறு காலத்தில் அறிகிறதா?' என்னும் ஐயத்தைப் போக்கி, "உருவம் முதலிய தன்மைகள் பொருளிலேயே இருக்கிறபடியால் இரண்டு அறிவும் ஒரே காலத்தில் உண்டாகிறது" என்று நிர்ணயிப்பதன்மூலம் இந்த ப்ரமாணத்துக்கு உதவி புரிகிறது. இத்தகைய ஜ்ஞானமே 'ஊஹம்' எனப்படுகிறது. 'அந்த ஊஹமும் என்னால் விளைவதே' என்கிறான் கண்ணன். (வேதைஶ்ச ஸர்வைரஹமேவ வேத்3ய:) முதலில் கூறியபடி எல்லா ஜீவர்களுடைய ஹ்ருத3யத்திலும் நான் அந்தர்யாமியாயிருக்கையால், எல்லா வேத3 வாக்யங்களாலும் அறியப்படுமவன் நானே. "இப்படி ஸர்வாந்தர்யாமி

पादनपरैरपि सर्वैर्वेदैरहमेव वेद्यः, देवमनुष्यादिशब्दैर्जीवात्मेव । वेदान्तकृत् — वेदानाम् — * इन्द्रं यजेत, वरुणं यजेतेत्येवमादी-

யாயிருப்பதாலேயே, ஸூர்யன் வாயு ஸோமன் இந்த்₃ரன் முதலான தே₃வர்கள் என்னை அந்தர்யாமியாகக் கொண்டு எனக்கு ஶரீரமாயிருக்கையால், அவர்களைச் சொல்லுகிறவையாகக் காணப்படும் எல்லா வேத₃வாக்யங்களாலும் நானே முக்₂யமாகச் சொல்லப்படுகிறேன்; தே₃வர், மனிதர் முதலான ஶப்₃த₃ங்கள் அந்தந்த உடல்களை மாத்திரம் குறிக்காமல், அவ்வுடல்களிலுள்ள ஜீவாத்மாக்களையே முக்₂யமாகக் குறிப்பதுபோலே" என்று கருத்து. "நாராயணம் மஹாஜ்ஞேயம்" [தை-நா 11] [அறியத் தக்கவைகளுள் முக்₂யமானவனாயிருப்பவன் நாராயணன்] "வசஸாம் வாச்யமுத்தமம்" [ஜிதந்தா] [சொற்களுக்கு முக்₂யமான பொருளாயிருப்பவன் எம்பெருமான்] முதலான ப்ரமாணங்களிலும இவ்விஷயம் சொல்லப்பட்டதன்றோ. தே₃வர் மனிதர் முதலான சொற்களாலே அந்தந்த உடல்கள் குறிக்கப் படுகின்றன என்பது லோக ப்ரஸித்₃த₄ம். ஆகையால் "அஹமேவ வேத்₃ய:" என்ற 'ஏவ'காரத்தாலே ஶரீரமா யிருக்கும் அக்₃னி முதலானவர்களைத் தள்ளமுடியாது. அதனால் 'அக்₃னி முதலானவர்களைக் காட்டிலும் முக்₂யமாக அறியப் படுபவன் நான்' என்று ஏவகாரத்துக்குக் கருத்துரைக்கப் பட்டது. "சத்வார: பஞ்சத₃ஶராத்ரா தே₃வத்வம் க₃ச்ச₂ந்தி" என்று ஒரு யாக₃த்தைச் செய்பவர்கள் தே₃வத்தன்மையை அடைகிறார்கள் என்று கூறும் வேத₃ வாக்யத்திலும், "ஶரீரஜை: கர்மதோ₃ஷை: யாதி ஸ்தா₂வரதாம் நர:| வாசிகை: பக்ஷி ம்ருக₃தாம் மாநஸைரந்த்யஜாதிதாம் ||" [மநு 12-9] [மனிதன் உடலால் செய்த தீச்செயல்களால் மரமாகிறான்; சொல்லால் செய்த தீச்செயல்களால் பறவை, விலங்கு முதலான திர்யக்கு களாகிறான். மனத்தால் செய்த தீச்செயல்களால் தாழ்ந்த மனித ஜாதியுடையவனாகிறான்] என்று மனோவாக்காயங்களால் செய்யப் பட்ட பாபச்செயல்களால் முறையே மனுஷ்ய திர்யக் ஸ்தா₂வரங் களாகிறான் என்று கூறும் மனு ஸ்ம்ருதி வாக்யத்திலும் தே₃வ மனுஷ்ய திர்யக் ஸ்தா₂வர ஶப்₃த₃ங்கள் அந்தந்த உடல்களை மாத்திரம் குறிக்காமல் அவ்வுடல்களையுடைய ஜீவாத்மாக்களையே முக்₂யமாகக் குறிப்பதைக் காண்கிறோமன்றோ. (வேத₃ாந்த க்ருத்) "இந்த்₃ரம் யஜேத" [ஶதபத₂ 5-1-6] "வருணம் யஜேத"[ஶதபத₂ 2-3-37] "ஐந்த்₃ரம் த₃த்₄யமாவாஸ்யாயாம்" [யஜு 2-5-4-1]

नामन्तः — फलम्; फले हि ते सर्वे वेदाः पर्यवस्यन्ति ; अन्तकृत् — फलकृत ; वेदोदितफलस्य प्रदाता चाहमेवेत्यर्थः। तदुक्तं पूर्वमेव * यो यो यां यां तनुं भक्तः श्रद्धयाऽर्चितुमिच्छति (७. २१) इत्यारभ्य * लभते च ततः कामान् मयैव विहितान् हि तानिति. * अहं हि सर्वयज्ञानां भोक्ता च प्रभुरेव च (९. २४) इति च। वेदविदेव चाहं — वेदविच्चाहमेव । एवं मदभिधायिनं वेदमहमेव वेद; इतोऽन्यथा यो वेदार्थं ब्रूते न स वेदविदित्यभिप्रायः ॥ १५ ॥

"ஐந்த்₃ரம் பயோऽமாவாஸ்யாயாம்" "தாவதோ வாருணம்ஶ சதுஷ்கபாலாந் நிர்வபேத்" [யஜு 2-3-12-1] என்று இந்திரன் வருணன் முதலான தே₃வதைகளைக் குறித்து யாக₃ம் செய்ய வேண்டும் என விதி₄க்கும் வேத₃வாக்கியங்களுக்குப் ப₂லனை அளிப்பவனும நானே. 'வேத₃ாந்தம்' என்று இங்கு உபனிஷத்தையோ, வேத₃நாமத்தையோ குறிப்பது பொருந்தாதாகையால், 'அந்த' ஶப்₃த₃த்திற்கு 'முடிவு' என்று பொருள் கொண்டு, வேத₃ாந்த ஶப்₃த₃த்தாலே வேத₃ வாக்யங்களின் முடிவாகிற ப₂லத்தைக் குறிப்பதே பொருந்தும். எல்லா வேத₃வாக்யங்களும் ப₂லனில் முடிவுறுவதாயிருக்கையால், 'அந்த' ஶப்₃த₃ம் ப₂லனைக் குறிக்கக் குறையில்லை. "எல்லா வேத₃வாக்யங்களாலும் முக்கியமாக அறியப்படுபவன் நானே" என்று எல்லாக் கர்மங்களாலும் ஆராதி₄க்கப்படுபவன் தானே என்று உணர்த்தியவுடன், அக்கர்மங்களுக்குப் ப₂லமளிப்பவனும் தானே என்று கூறுவதே பொருத்தமன்றோ. இவ்விஷயம் கீ₃தையில் முன்னமே "யோ யோ யாம் யாம் தநும் ப₄க்த: ஶ்ரத்₃த₄யார்ச்சிதுமிச்ச₂தி" [7-21] என்று தொடங்கி, "லப₄தே ச தத: காமாந் மயைவ விஹிதாந் ஹி தாந்" [7-22] என்பதீருகவும், "அஹம் ஹி ஸர்வயஜ்ஞாநாம் போ₄க்தா ச ப்ரபு₄ரேவ ச" [9-24] என்னுமிடத்திலும் சொல்லப்பட்டதன்றோ. (வேத₃விதே₃வ சாஹம்) வேத₃த்தை அறிந்தவனும் நானே. ஶ்லோகத்தில் உள்ளபடி அந்வயித்து "நான் வேத₃மறிந்தவனாகவேயிருக்கிறேன்" என்று

भा ।। अतो मत्त एव सर्ववेदानां सारभूतमर्थं शृणु —
द्वाविमौ पुरुषौ लोके क्षरश्चाक्षर एव च ।
क्षरस्सर्वाणि भूतानि कूटस्थोऽक्षर उच्यते ।। १६

16. த்3வாவிமௌ புருஷௌ லோகே க்ஷரஶ்சாக்ஷர ஏவ ச ।
க்ஷரஸ்ஸர்வாணி பூ4தாநி கூடஸ்தே2ாऽக்ஷர உச்யதே ॥

லோகே — சாஸ்திரங்களில், க்ஷர ச அக்ஷர:ச த்3வௌ இமௌ புருஷௌ ஏவ — (அழியும் இயல்வுள்ள அசேதனமான உடலோடு கூடியிருக்கையால்) க்ஷரபுருஷன் எனப்படும் ப3த்3த4ஜீவனும், அழியும் இயல்வில்லாமையால் (அக்ஷரன்) எனப்படும் முக்தஜீவனுமாகிற இரண்டு (வகையான) இப்புருஷர்களே (பிரஸித்திபெற்றவர்கள்), க்ஷர: — க்ஷரபுருஷன், ஸர்வாணி பூ4தாநி — எல்லா ப3த்3த4ஜீவனுமாவான். அக்ஷர: — அக்ஷரபுருஷன், கூடஸ்த2: உச்யதே — (அசித் ஸம்ப3ந்த4மற்ற) முக்தாத்மா எனப்படுகிறான்.

ஏவகாரம் அயோக3வ்யவச்சே2த3த்தைக் கூறுவதாகக் கொள்வது பொருந்தாது; ப4க3வான் வேத3த்தை அறிந்தவன் என்பதில் எந்த ஆக்ஷேபமும் எழாதாகையால், அதை ஏவகாரமிட்டு அழுத்திக்கூற வேண்டிய அவசியமில்லை. அதனாலேயே, "வேத3விச்ச அஹமேவ" என்று கூட்டி, 'வேத3த்தின் பொருளை அறிந்தவன் நானே' என்று ஏவகாரத்திற்கு அந்யயோக3வ்யவச்சே2த3ப் பொருள் கொள்ளப்பட்டது. "யே ச வேத3விதே3ா விப்ரா:" [வேத3மறிந்த அந்தணர்கள் எவர்களோ (அவர்கள் கண்ணனைப் பழைமையான த4ர்மமாக அறிகின்றனர்)] முதலானவிடங்களில் வேத3த்தை மற்றவர்களும் அறிந்திருப்பதாகக் கூறியிருக்க' இங்கு "வேத3மறிந்தவன் நானே" என்று கூறுவது எப்படிப் பொருந்தும்? எனில்: 'இவ்வண்ணமாக ஸர்வாந்தர்யாமியாகையாலே எல்லா வேத3ங்களும் என்னையே முக்கியமாகக் கூறுகின்றன என்பதை நானே அறிவேன். இவ்வுண்மையறியாமல் அந்தந்த வேத3 வாக்யங்கள் இந்திரன் முதலான தே3வர்களை மாத்திரமே குறிக்கின்றன என்று அறிபவன் வேத3த்தை அறியமாட்டான்" என்று இவ்வாக்கியத்திற்குக் கருத்தாகையாலே பொருந்தும். 15.

भा ।। क्षरश्चाक्षरश्चेति द्वाविमौ पुरुषौ लोके प्रथितौ । तत्र

கண்ணா ருலகிற் கரனக் கரனென்றே
யெண்ணும் புருட ரிவரிருவர் — பண்ணாரும்
பூதவுயி ரெல்லாங் கரனும் பொருவில்சீர்
மீதவுயி ரக்கரனும் வேறு. 16.

கண் ஆர் உலகில் — விரிவான சாஸ்திரங்களில், எண்ணும் புருடர் — பிரசித்தமாயுள்ள புருஷர்கள், கரன் அக்கரன் என்றே இவர் இருவர் — (அழியும் இயல்வுடைய அசேதனமான உடலோடு கூடியிருக்கையால்) க்ஷரபுருஷன் எனப்படும் ப₃த்₃த₄ஜீவனும், அழியும் இயல்வில்லாமையால் 'அக்ஷரன்' எனப்படும் முக்த ஜீவனுமாகிற இருவகைப் பட்டவரே, பண் ஆரும் பூத உயிர் எல்லாம் கரன்ஆம் — வேத₃த்தில் காணப்படும் ப₃த்₃த₄ஜீவர்கள் அனைவரும் க்ஷரன் எனப்படுகின்றனர், வேறு—இவனிலும் வேறுபட்டு, பொரு இல் சீர் மீத உயிர் அக்கரன் ஆம் — ஒப்பற்ற ஞானத்தை உடைய அசித்தினின்றும் நீங்கிய முக்த ஜீவர்கள் அனைவரும் அக்ஷரன் எனப்படுகின்றனர்.

16. 'இப்படி வேத₃ங்களின் பொருளை அறிந்தவன் நானேயாயிருக்கையால் எல்லா வேத₃ங்களுக்கும் ஸாரமான அர்த்த₂த்தை என்னிடமிருந்தே கேட்பாயாக' என்று புருஷோத்தம வித்₃யையைக் கூறத் தொடங்குகிறான். (க்ஷர: ச அக்ஷர: ச த்₃வெள ஏவ இமௌ புருஷௌ) க்ஷரன் அக்ஷரன் என்னும் இந்த இரண்டே புருஷர்கள். (லோகே) ஶாஸ்திரங்களில் பிரசித்தி பெற்றவர்கள். பதினெட்டாவது ஶ்லோகத்தில் "லோகே வேதே₃" என்று கூறப்படும் ஶ்ருதிஸ்ம்ருதிகள் இரண்டும் "லோக்யதே அநேந இதி - லோக:" [அறிவதற்குக் காரணமாயிருக்கையாலே ஶாஸ்த்ரம் லோகமெனப்படுகிறது] என்னும் வ்யுத்பத்தியாலே இங்கு லோக ஶப்₃த₃த்தால் குறிக்கப்படுகின்றன. அங்கு 'ப்ரதி₂த:' என்றிருப்பதையொட்டி இங்கு 'ப்ரதி₂தௌ' என்னும் பத₃த்தைச் சேர்த்து, 'பிரசித்தி பெற்றவர்கள்' என்று பொருள் கொள்ளப்பட்டது. "அஜோ ஹ்யேகோ ஜுஷமாணோऽநுஶேதே ஜஹாத்யேநாம் பு₄க்தபோ₄கா₃மஜோऽந்ய:"[தை. நா 10-5, ஶ்வே

क्षरशब्दनिर्दिष्टः पुरुषो जीवशब्दाभिलपनीयब्रह्मादिस्तम्बपर्यन्तक्षरण-स्वभावाचित्संसृष्टसर्वभूतानि । अत्राचित्संसर्गरूपैकोपाधिना पुरुष इत्येकत्वनिर्देशः । अक्षरशब्दनिर्दिष्टः कूटस्थः अचित्संसर्गवियुक्तः स्वेन रूपेणावस्थितो मुक्तात्मा । स त्वचित्संसर्गाभावादचित्परिणाम-

---

4-5] [பிறப்பற்றவனான ஒருவன் (ப$_3$த்$_3$த$_4$ஜீவன்) மூல ப்ரக்ருதியை உகப்புடன் அனுப$_4$விக்கிறான். பிறப்பற்றவனான மற்றொருவன் (முக்த ஜீவன்) தான் அனுப$_4$வித்து வந்த இந்த மூலப்ரக்ருதியை விட்டுச் செல்கிறான்] முதலான ப்ரமாணங்கள் இங்கு லோக ஶப்$_3$த$_3$த்தாலே கருதப்படுகின்றன. இனி, ஶ்லோகத்தின் பிற்பாதியாலே க்ஷராக்ஷரபுருஷர்கள் எவர்? என்று காட்டுகிறான்— (க்ஷர: ஸர்வாணி பூ$_4$தாநி) இவ்விருவரில் பிராகிருத உடலோடு கூடியவர்களாகையாலே, ப$_3$த்$_3$த$_4$ ஜீவர்கள் என்று சொல்லப்படும் பிரமன் முதல் புல் ஈறாகவுள்ள ஏறிச்சுருங்கும் அறிவுடைய புருஷர்கள் க்ஷரபுருஷர்கள் எனப்படுகின்றனர். ஜீவாத்ம ஸ்வரூபத்துக்கு அழியும் தன்மை கிடையாதாகையாலே அசித்தான உடலோடு சேர்த்தியாலே இவர்களுடைய த$_4$ர்ம பூ$_4$தஜ்ஞானம் ஏற்றச்சுருக்கங்கள் உடையதாவதையிட்டு இவர்கள் க்ஷரபுருஷர்கள் எனப்படுகிறார்கள் என்று கண்டு கொள்வது. 'க்ஷர:' என்று ஒருமையில் சொல்லப்பட்டதை "ஸர்வாணி பூ$_4$தாநி" என்று பன்மையில் விவரிக்கிறபடியால் அசித்தோடு தொடர்பாகிற ஒருகாரணத்தையிட்டு ப$_3$த்$_3$த$_4$ ஜீவர்கள் அனைவரும் 'க்ஷரபுருஷன்' என்று ஒருமையில் குறிக்கப்படுகிறார்கள் என்று கொள்ளவேண்டும். "'க்ஷர:' என்னும் ஒருமையே உண்மையான நிலையைத் தெரிவிக்கிறது. 'ஸர்வாணி பூ$_4$தாநி' என்னும் பன்மை மாயையினால் உண்டான பொய்த்தோற்றம்" என அத்$_3$வைதிகள் கூறுவது "நித்யோ நித்யாநாம் சேதநஶ் சேதநாநாம்" [ஶ்வே6-13] என்று சேதனர்களைப் பலராக முழங்கும் ப்ரமாணங்களுக்கு முரண்பட்டதாகும். மேலும், எல்லா ப$_3$த்$_3$த$_4$ஜீவர்களும் ஒருவரேயானால் அனைவருடைய இன்பதுன்பங்களையும் அனைவரும் அனுப$_4$விக்கவேண்டிவரும். (கூடஸ்தோ$_2$Sக்ஷர உச்யதே) 'அக்ஷர:' என்று சொல்லப்படுகிறவன் 'கூடஸ்த$_2$ன்' எனச்சொல்லலாம்படி பொதுவரான ஆகாரத்தை உடையவனான முக்தாத்மா; அதாவது—அசித்தான உடலோடு தொடர்பு நீங்கப் பெற்றவனாய்,

विशेषब्रह्मादिदेहासाधारणो न भवतीति कूटस्थ इत्युच्यते । अत्रापि-एकत्वनिर्देशोऽचिद्वियोगरूपैकोपाधिनाऽभिहितः । नहीतः पूर्वमनादौ

ஸ்வரூபம் விரிவுபெற்றவனான முக்தாத்மா. 'கூடஸ்த$_2$' ஶப்$_3$த$_3$ம் பல ஸந்ததிகளுக்கு மூலபுருஷனாயிருப்பவன் விஷயத்தில் உலகில் பிரசித்தமாக வழங்கப்படுகிறது. பரம புருஷன் அனைவருக்கும் கூடஸ்த$_2$னாயிருந்தபோதிலும், அடுத்த ஶ்லோகத்தில் "உத்தம: புருஷஸ்த்வந்ய:" என்று அக்ஷரபுருஷனைக் காட்டிலும் வேறு பட்டவனாகச் சொல்லப்படுகிறபடியால் இங்கு கூடஸ்த$_2$ஶப்$_3$த$_3$த்துக்குப் பொருளாகமாட்டான். பிரமன் ப$_3$த்$_3$த$_4$ஜீவர்கள் அனைவர்க்கும் கூடஸ்த$_2$னாயிருந்தபோதிலும் அவனும் பிராக்ருதமான உடலோடு கூடியவனாயிருக்கையால் க்ஷரபுருஷர்களில் சேர்ந்தவனாகி இங்கு அக்ஷரமெனப்படும் கூடஸ்த$_2$கோடியில் அடங்கமாட்டான், ஆகையால் க்ஷரபுருஷர்களுக்கும் பரமாத்மாவுக்கும் இடையில் இருப்பவனாய் ஏற்றத்தாழ்வுகள் இல்லாமையாலே 'அக்ஷரன்' எனத்தக்கவனான முக்தாத்மாவையே இங்கு கூடஸ்த$_2$னாகச் சொல்லுவதாகக் கொள்ளவேண்டும். கூடஸ்த$_2$ஶப்$_3$த$_3$ம் முக்தாத்ம விஷயத்தில் ரூடி$_4$ உடையதல்லவாயினும், யோக$_3$வ்ருத்தியாலே அவனைக் கூடஸ்த$_2$ஶப்$_3$த$_3$த்துக்குப் பொருளாகக்கொள்ள இடமிருக்கிறது; எப்படி? எனில்; கூடஸ்த$_2$ஶப்$_3$த$_3$ம் பலபிரிவுகளுக்குப் பொதுவாயிருப்பவனைக் குறிக்கிறது. அசித் பரிணாமமான உடலோடு தொடர்புடைய பிரமன் முதலானோர் அவரவர் தே$_3$ஹஸம்ப$_3$ந்த$_4$த்தாலே அவரவர்க்கேயுரிய இன்பதுன்பங்களைக்கொண்டவர்களாய்த் தனிப்பட்டு நிற்கிறார்கள். இந்த முக்தாத்மாவோவெனில், அந்த அசித் ஸம்ஸர்க்க$_3$மில்லாமையால் "ஸ்வேந ரூபேண அபி$_4$நிஷ்பத்$_3$யதே" [ச$_2$ாந் 8-12-2] என்கிற உபநிஷத்$_3$வாக்யத்தில் சொன்னபடி சுருக்கமற்று விரிவுபெற்ற ஜ்ஞானத்தையே வடிவாகக் கொண்டிருக்கையாகிற பொதுவான ஆகாரத்தை உடையவனாயிருக்கிறான்; ஆகையால், யோக$_3$வ்ருத்தியாலே இவனைக் 'கூடஸ்த$_2$ன்' என்பது பொருந்தும். "ஏகரூபதயாது ய: காலவ்யாபீ ஸ கூடஸ்த$_2$:" [3-1-73] என்று அமரகோஶத்திலும் எக்காலத்திலும் ஒருபடிப்பட்டிருப்பவன் 'கூடஸ்த$_2$ன்' என்று சொல்லப்பட்டதன்றோ. "கூடவத்திஷ்ட$_2$தீதி கூடஸ்த$_2$:" என்னும் வ்யுத்பத்தியாலே, கொல்லன் பட்டறையில் இரும்பு சாமான்களைக் காய்ச்சி அடித்துப் பல பல விகாரங்களடையச் செய்வதற்கு ஆத$_4$ாரமாயிருக்கும் 'கூடம்' எனப்படும் இரும்புக்குண்டுபோலே, மற்றபொருள்

काले मुक्त एक एव । यथोक्तं * बहवो ज्ञानतपसा पूता मद्भावमागताः (गी. ४. १०) * सर्गेऽपि नोपजायन्ते प्रलये न व्यथन्ति च (१४. २.) इति ॥ १६ ॥

उत्तमः पुरुषस्त्वन्यः परमात्मेत्युदाहृतः ।
यो लोकत्रयमाविश्य बिभर्त्यव्यय ईश्वरः ॥ १७

17. உத்தம: புருஷஸ் த்வந்ய: பரமாத்மேத்யுத₃ாஹ்ருத :|
யோ லோகத்ரயமாவிஶ்ய பி₃ப₄ர்த்யவ்யய ஈஶ்வர: ||

ய:து — எவனொருவன், லோகத்ரயம்—அசித், ப₃த்₃த₄ ஜீவன், முக்தாத்மா என்னும் மூன்று பொருள்களேயும், ஆவிஶ்ய — வியாபித்து, பி₃ப₄ர்த்தி — (அவற்றைத்) தாங்குகிருனே, (அவன்) அவ்யய: — அழிவற்றவனுய், ஈஶ்வர:— (அனைத்தையும்) நியமிப்பவனுய், பரமாத்மா இதி உத₃ாஹ்ருத: — பரமாத்மா என்று (சாஸ்திரங்களில்) சொல்லப்படுபவனுய், உத்தம: புருஷ: — (இக்காரணங்களால்) மிக மிக மேலான புருஷனுயிருப்பவன், அந்ய: — (முற்கூறிய க்ஷராக்ஷர புருஷர்களைக்காட்டிலும்) வேறுபட்டவன்.

கள் விகாரமடையும்போது தான் மாருமல் இருக்கையையிட்டு முக்தாத்மா 'கூடஸ்த₂ன்' எனப்படுவதாகவும் கொள்ளலாம். இங்கும் 'அக்ஷர' என்று ஒருமையிருந்தபோதிலும் அசித்தினின்றும் நீங்கியிருக்கையாகிற காரணத்தையிட்டு, 'அக்ஷர' ஶப்₃த₃ம் முக்தாத்மாக்கள் அனைவரையும் குறிப்பதாகக் கொள்ளவேண்டும். இதற்குமுன் அநாதி₃காலத்தில் முக்தியடைந்தவன் ஒருவனே என்று கூறமுடியாதே. "ப₃ஹவோ ஜ்ஞாநதபஸா பூதா மத்₃பா₄வமாக₃தா: [4-10] "ஸர்க்கே₃ऽபி நோபஜாயந்தே ப்ரளயே ந வ்யத₂ந்தி ச" [14-2] என்று ஜ்ஞானத்தால் முக்தியடைந்து பிறப்பிறப்புக்களுக்கு அப்பாற்பட்டவர்களான முக்தர்கள் பலர் என்று கீ₃தையிலும் கூறப்பட்டதன்ருே. 16.

भा । उत्तमः पुरुषस्तु ताभ्यां क्षराक्षरशब्दनिर्दिष्टाभ्यां बद्ध-

ஆங்கிவரி லுத்தமனே யாம்புருட னன்னியனும்
பாங்கிற் பரமான்மா வென்றுரைத்தா—னோங்கியே
தாம்புகுந்து நின்றே தரித்துலக மூன்றிறையா
யோம்புமவன் குன்றுது மேல். 17

பாங்கில் — தன்பெருமைகளால், பரமான்மா என்று உரைத்தான்— பரமாத்மா என்று (சாஸ்திரங்களில்) உரைக்கப்பட்டவனுய், உலகம் மூன்று — அசித், ப₃த்₃த₄ஜீவன், முக்தாத்மா என்று மூன்று பொருள்களையும், ஓங்கியே தாம் புகுந்து நின்றே — நன்ருக வியாபித்து நின்று, தரித்து—(அவற்றைத்) தாங்குகிறவனுய், மேல்—அதற்கு மேல், குன்ருது — தான் அழிவற்றவனுய், இறையாய் ஓம்புமவன் — (அவற்றை) ஸ்வாமியாயிருந்து நியமிப்பவனுய், ஆங்கு — அக்காரணங்களாலே, இவரில் — இந்த க்ஷராக்ஷரபுருஷர்களைக் காட்டிலும், உத்தமனே ஆம் புருடன் — மிக மிக மேலான புருஷனுயிருப்பவன், அன்னியனும்—(முற்கூறிய க்ஷராக்ஷரபுருஷர்களைக் காட்டிலும்) வேறுபட்டவனுவான்.

17. சென்ற ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட க்ஷராக்ஷர புருஷர்களைக் காட்டிலும் பல காரணங்களால் சிறப்புற்ற பரமபுருஷன் வேறுபட்டவன் என்கிருன். (உத்தம: புருஷ: து அந்ய:) 'க்ஷரபுருஷன்' என்று சொல்லப்பட்ட ப₃த்₃த₄னையும, 'அக்ஷரபுருஷன்' என்று சொல்லப்பட்ட முக்தனையுங்காட்டிலும் மேலானவனுயிருக்கையாலே, "ஸ உத்தம: புருஷ:" [ச₂ாந்8-12-2] முதலான இடங்களில் 'உத்தமபுருஷன்' (மேலான புருஷன்) என்று ஶாஸ்த்ரங்களில் சொல்லப்படும் பரமபுருஷன் வேறுபட்டவன். சென்ற ஶ்லோகத்தில் இரண்டு புருஷர்களை எடுத்து இங்கு உத்தமபுருஷன் வேறுபட டவன் என்கையாலே, அந்த இரு புருஷர்களைக் காட்டிலும் இங்கு சொல்லப்படும் மேலான புருஷன் வேறுபட்டவன் என்று விதி₄க்கப்படுகிறது என

मुक्तपुरुषाभ्यामन्यः — अर्थान्तरभूतः परमात्मेत्युदाहृतस्सर्वासु श्रुतिषु । परमात्मेति निर्देशादेव ह्युत्तमः पुरुषो बद्धमुक्तपुरुषाभ्यामर्थान्तरभूत इत्यवगम्यते । कथम् ? यो लोकत्रयमाविश्य बिभर्ति— लोक्यत इति लोकः, तत्त्रयम्—लोकत्रयम् : अचेतनं तत्संसृष्टश्चेतनो

விளங்குகிறது இனி, ஶ்லோகத்தின் எஞ்சிய பகுதியாலே இவன் அவ்விருவரைக்காட்டிலும் வேறுபட்டவன் என்பதற்குக் காரணங்களைக் கூறுகிறான். "பரமாத்மேத்யுதா$_{3}$ஹ்ருத:" [பரமாத்மா என்று ஶ்ருதிகளில் சொல்லப்படுகிறான்] என்று கூறியது விதி$_{4}$க்கப்படுவதாகமாட்டாதாகையாலே வேறுபட்டவன் என்றதையே விதி$_{4}$க்கப்படுவதாகக் கொண்டு, இத்தொடர் அதற்குக் காரணத்தைக் காட்டுவதாகவே கொள்ளவேண்டும். (பரமாத்மா இதி உதா$_{3}$ஹ்ருத:) "தஸ்யா: ஶிகா$_{2}$யா மத்$_{4}$யே பரமாத்மா வ்யவஸ்தி$_{2}$த:" [தை-நா 11] [அந்த அக்$_{3}$னி ஶிகை$_{2}$யின் (திருமேனியின்) நடுவில் பரமாத்மா எழுந்தருளியிருக்கிறான்] "ஆத்மா நாராயண: பர:" [தை-நா 11] [நாராயணனே பரமாத்மா] முதலான ஶ்ருதிகளில் 'பரமாத்மா' என்று மேலான ஆத்மாவாகச் சொல்லப்படுகையாலே இவன் முற்கூறிய இரண்டு ஜீவாத்மாக்களைக் காட்டிலும் வேறுபட்டவன் என்று கருத்து. "பரமாத்மா என்று ஶ்ருதிகளில் கூறியிருப்பது இவன் க்ஷராக்ஷரபுருஷர்களைக் காட்டிலும் வேறுபட்டவன் என்பதை எப்படிக்காட்டும்?" என்னும் கேள்விக்கு பதில் அளிக்கிறது ஶ்லோகத்தின் பிற்பாதி. (ய: லோகத்ரயம் ஆவிஶ்ய பி$_{3}$ப$_{4}$ர்த்தி) எவனொருவன் பிரமாணங்களிலிருந்து அறியப்படும் அசேதனப்பொருள், அதனுடன் சேர்ந்திருக்கும் ஸம்ஸாரி சேதனன், முக்த சேதனன் என்னும் மூன்று தத்துவங்களையும் ஆத்மாவாய் உள் நுழைந்து தாங்குகிறானோ, அவன் தன்னால் வியாபிக்கப்படுகிறவையாய், தாங்கப்படுகிறவையாகையாலே அந்த மூன்று தத்துவங்களைக் காட்டிலும் வேறுபட்டவன் என்று கருத்து. "லோகஸ்து பு$_{4}$வநே ஜநே" என்னும் நிக$_{4}$ண்டுவையொட்டி லோக ஶப்$_{3}$த$_{3}$ம் பு$_{4}$வனங்களைச் சொல்லுவதாகக் கொண்டு, "பூ$_{4}$:, பு$_{4}$வ:, ஸுவ:" என்னும் மூன்று உலகங்களையோ, ஸ்வர்க்க$_{3}$ லோகம், மனித லோகம், பாதாள லோகம் என்னும் மூன்று உலகங்களையோ குறிப்பதாகக்

मुक्तश्चेति प्रमाणावगम्यमेतत्त्रयं य आत्मतया आविश्य बिभर्ति, स तस्माद्व्याप्याद्भर्तव्याच्चार्थान्तरभूतः । इतश्चोक्ताल्लोकत्रयादर्थान्तरभूतः;

கொள்ளலாமே எனில்: இங்கு ப்ரகரணத்தையொட்டி முன் ஶ்லோகத்தில் சொன்ன இரண்டு புருஷர்களைக் காட்டிலும் வேறுபட்டவன் பரமபுருஷன் என்று இந்த ஶ்லோகத்தின் முற்பாதியில் விதி$_4$க்கப்படுகிறதாகையாலே, பிற்பாதிக்கு அதை விளக்குவதாகப் பொருள் கொள்வதே பொருத்தமானது. இங்கு முற்கூறியபடி மூன்று லோகங்களை 'லோகத்ரய' ஶப்$_3$த$_3$ம் குறிப்பதாகக் கொண்டால், அது க்ஷராக்ஷர புருஷர்களைக் காட்டிலும் உத்தமபுருஷன் வேறுபட்டவன் என்பதற்குக் காரணமாகமாட்டாது. "க்ருதகம், அக்ருதகம், க்ருதகாக்ருதகம்" என்று நைமித்திக ப்ரளயத்தில் அழியும் பூ$_4$ர்பு$_4$வஸ்ஸ்வர்லோகங்களை 'க்ருதகலோகங்கள்' என்றும், அந்த ப்ரளயத்தில் அழியாதிருக்கும் ஜநஸ் தபஸ் ஸத்ய லோகங்களை 'அக்ருதக லோகங்கள்' என்றும், அந்த ப்ரளயத்தில் அழியாமலிருந்தும் ஆளில்லாமலிருக்கும் மஹர் லோகத்தை 'க்ருதகாக்ருதக லோகம்' என்றும் மூன்று வகையாக லோகங்களைப் புராணங்களில் சொல்லுவதுண்டு; இவற்றை நித்ய விபூ$_4$திக்கும் உபலக்ஷணமாகக் கொண்டு இவ்வுலகங்களிலிருக்கும் க்ஷராக்ஷர புருஷர்களைக் குறிப்பதாகக் கொள்ளலாமே எனில்; இப்படி லக்ஷணையாலே நலிந்து பொருள் கொள்வதைக் காட்டிலும், "லோக்யதே – இதி லோக:" என்னும் வ்யுத்பத்தியாலே ப்ரமாணங்களால் அறியப்படும் மூன்று தத்துவங்களைப் பொருளாகக் கொள்வது சிறந்தது. கண்ணுக்குப் புலப்படாவிடினும், ப$_3$த்$_3$த$_4$ முக்தர்கள் ப்ரமாணங்களால் அறியப்படுகையாலே, அவர்களையும் லோக ஶப்$_3$த$_3$த்துக்குப் பொருளாகக் கொள்ளலாம். 'ய:' என்று "அந்த: ப்ரவிஷ்ட: ஶாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா" [யஜு-ஆர. 3-11] [ஸர்வாந்தர்யாமியான நாராயணன் ஜனங்களை உள்நுழைந்து நியமிக்கிறான்.] "ப$_4$ர்த்தா ஸந் ப்$_4$ரியமாணோ பி$_3$ப$_4$ர்த்தி" [யஜு-ஆர 3-14] [(அனைத்துக்கும் அந்தர்யாமியாயிருக்கையாலே) தாங்கப்படும் வஸ்துக்களும் தானேயாயிருந்துகொண்டு, அவற்றையுடையவனாகவுமிருந்துகொண்டு தாங்குகிறான்] என்னும் ப்ரமாண ப்ரஸித்$_3$தி$_4$யை உணர்த்துகிறது. இப்படி

यतस्सोऽव्ययः, ईश्वरश्च; अव्ययस्वभावो हि व्ययस्वभावादचेतनात्, तत्संबन्धेन तदनुसारिणश्चेतनात् अचित्संबन्धयोग्यतया पूर्वसंबन्धिनो

முற்கூறிய இரண்டு புருஷர்களையும் வியாபித்து, த₄ரித்து நிற்கையாலே வியாபிக்கப்படுபவர்களாய் த₁ரிக்கப் படுபவர்களாயிருக்கும அவ்விருவரைக்காட்டிலும இவன் வேறுபட்டவன் என்று கருத்து. இனி 'ய:' என்னும பத₃ம் கடைசியிலுள்ள 'அவ்யய:' 'ஈஶ்வர:' என்னும இரு பத₃ங் களோடும் தனித்தனியே அந்வயிக்கையாலே, அவ்விரு பத₃ங்க ளும உத்தமபுருஷன் க்ஷராக்ஷரபுருஷர்களைக் காட்டிலும வேறு பட்டவன் என்பதைக் காட்டுகின்றன என விளங்குகிறது. (அவ் யய:) அழிவற்ற தன்மையுடையவன். அழிவற்ற தன்மையுடைய வனுயிருக்கையாலேயே, இவ்வுத்தமபுருஷன ஸ்வரூபஸ்வப₄ா வங்களிரண்டிலும விகாரத்தையுடைவதை இயல்வாகக் கொண்ட அசேதனத்தைக்காட்டிலும், அந்த அசித்ஸம்ப₃ந்த₄த்தாலே ஜ்ஞானமாகிற ஸ்வப₄ாவத்தில் ஏற்றச் சுருக்கங்களையுடையும் ப₃த்₃த₄சேதனனைக் காட்டிலும், அந்த அசித்ஸம்ப₃ந்த₄த்துக்குத் தகுதியுள்ளவனுய், பனனெடுங்காலம அந்த ஸம்ப₃ந்த₄த்தைப் பெற்றிருநது அதிலிருந்து விடுபட்டவனன முக்தசேதனனைக் காட்டிலும வேறுபட்டவன் எனபது தெளிவு. "ப₃த்₃த₄முக்தஜீவர் கள் இருவருக்கும ஸ்வரூபவிகாரமில்லை; ப₃த்₃த₄ஜீவனுக்கு ஜ்ஞா னத்தில் ஏற்றச்சுருக்கங்களாகிற ஸ்வப₄ாவவிகாரமும, பிறப்பு இறப்பு முதலான துனபங்களும் அசித்ஸம்ப₃ந்த₄த்தால் விளைகை யால் அவன பரமாத்மாவைப்போலே அவ்யயனுய்(அழியாதவனுய்) இராதவன் என்று கூறலாம்; இவையில்லாத முக்தஜீவனை அவ் வண்ணம் எப்படிக்கூறுவது?" எனில்:— முக்தனுக்கு இப்போது இந்த ஸ்வப₄ாவவிகாரமில்லாவிடினும், கர்மஸம்ப₃ந்த₄மிருந்த காலததில் இது இருந்தமையாலும, அந்தக் கர்மஸம்ப₃ந்த₄ம் இல் லாமையாலே இப்போது இது இல்லாமையாலும் அவனுக்கும் ஸ்வ ப₄ாவ விகாரத்துக்குத் தகுதியுண்டு. அதையிட்டு ஈஶ்வரனுக்குள்ள அவ்யயத்வம் அவனுக்கில்லை என்னக் குறையில்லை. (ஈஶ்வர:) இந்த மூன்று தத்துவங்களையும நியமிக்கும ஈஶ்வரனுயிருக்கையாலும் நியமிக்கப்படும் க்ஷராக்ஷரபுருஷர்களைக் காட்டிலும பரமபுருஷன் வேறு பட்டவனே என்று கருத்து ஆக, க்ஷராக்ஷரபுருஷர்களை வியாபித்து த₄ரித்து நியமிக்கையாலே பரமபுருஷன் தன்னுல் வியாபிக்கப்பட்டு த₄ரிக்கப்பட்டு நியமிக்கப்படும் அவ்விரு புரு ஷர்களைக்காட்டிலும் வேறுபட்டவன் என்றும், ஸ்வப₄ாவத்தில் தாழ்ந்த விகாரமோ அல்லது அதற்குத் தகுதியோ இல்லாத

मुक्ताच्च अर्थान्तरभूत एव । तथैतस्य लोकत्रयस्येश्वरः, ईशितव्यात्तस्मा-
दर्थान्तरभूतः ॥ १७ ॥

பரமபுருஷன் அவ்விகாரமுடைய ப3த்3த4னைக்காட்டிலும், அவ்
விகாரத்துக்குத் தகுதியுடைய முக்தனைக்காட்டிலும் வேறுபட்ட
வன் என்றும தேறிற்று. இப்படி வ்யாபன ப4ரண நியமனங்
கள் ஒருவகையிலும், அவ்யயஸ்வப4ாவம் மற்றொருவகையிலும்
ஜீவர்களைக்காட்டிலும் பரமபுருஷனுக்கு வேறுபாட்டை நிருபிக்
கையால், பத்தொன்பதாவது ஶ்லோகபா4ஷ்யத்தில் "க்ஷரா
க்ஷரபுருஷாப்4யாம் அவ்யயஸ்வபா4வதயா வ்யாபநப4ரண
ஐஶ்வர்யாதி3யோகே3ந ச விஸஜாதீயம் ஜாநாதி" என்று பரம
புருஷன் மற்ற இருவரைக்காட்டிலும வேறுபட்டவனாயிருக்கைக்குக்
காரணம் இருவகையாகப் பிரித்துக்காட்டப்பட்டது. கீ3தையில்
ஈஶ்வரன் முதலான ஶப்3த3ங்கள் வரும இதுபோன்ற இடங்
களில் அந்த ஶப்3த3ங்கள் ப்ரத2மபுருஷனாக (படர்க்கை
யாக) வழங்கப்பட்டிருந்தபோதிலும், அந்த ஶப்3த3த்தினால்
ப்ரஸித்3தி4பெற்ற ருத்3ரன் முதலானவர்களைப் பொருளாகக்
கொள்வதற்குச் சிறிதும் இடமில்லை "ஸர்வஸ்ய சாஹம்" என்று
முன்னுள்ள ஶ்லோகத்திலும், "யஸ்மாத் க்ஷரமதீதோ(அ)ஹம்" (18)
"யோ மாமேவமஸம்மூடா4"(19) என்று பின்னுள்ள ஶ்லோகங்
களிலும் உத்தம புருஷனாக (தன்மையாக)க் கண்ணனே வழங்கு
கையால், ஈஶ்வர ஶப்3த3ம் முதலானவை இங்கும் இதுபோன்ற இடங்
களிலும் வேறொருவனைக் குறிப்பதற்கு இடமேயில்லை. ஶங்கரரும்
இக்காரணத்தாலேயே இங்கு பா4ஷ்யத்தில் "ஈஶ்வர: ஸர்வஜ்ஞ:
நாராயணாக்2ய: ஈஶநஶீல: [ஈஶ்வர:—எல்லாமறிந்தவனாய், நியமிப்
பதையே இயல்வாகக் கொண்டவனாய், நாராயணன் என்
னும் பெயருடையவன்.] என்று பா4ஷ்யமிட்டார், இது
போன்ற பல இடங்களிலும் ஈஶ்வராதி3 ஶப்3த3ங்கள்
வரும்போது "நாராயணாக்2ய: வாஸுதே3வாக்2ய:"
என்று நியமேந அவர் பா4ஷ்யமிடுவது 'நாராயணனே ஸகு3ண
ப்ரஹ்மம், சிவனை ஸகு3ணப்3ரஹ்மமாகக் கொள்ளக கூடாது'
என்னும் அவரது உறுதியைக்காட்டுகிறது. "இங்கு ஆத்மாவின்
லக்ஷணத்தில் சேர்ந்த வ்யாப்தி, தா4ரணம், நியமனம ஆகியவை
வெளிப்படையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. தன்பொருட்டு
த4ரிப்பது முதலானவற்றைச் செய்வதினாலேயே ஶேஷித்வமாகிற
ஸ்வாமித்வமும் இங்கு உணர்த்தப்படுகிறது" என்னும் திருவுள்ளத்
தாலேயே ஆளவந்தார் இந்த அத்4யாயத்தின் ஸங்க்3ரஹ

यस्मात्क्षरमतीतोऽहमक्षरादपि चोत्तमः ।
अतोऽस्मि लोके वेदे च प्रथितः पुरुषोत्तमः ॥ १८

18. யஸ்மாத் க்ஷரமதீதோऽஹம் அக்ஷராத₃பி சோத்தம:।
அதோऽஸ்மி லோகே வேதே₃ ச ப்ரதி₂த:
புருஷோத்தம :॥

அஹம் — நான், யஸ்மாத்— யாதொரு காரணத்தினால், க்ஷரம்— க்ஷரபுருஷனை, அதீத: — கடந்து நிற்கிறேனோ, அக்ஷராத் அபி—அக்ஷர புருஷனான முக்தனைக்காட்டிலும், உத்தம: ச — மேலானவனாயுமிருக்கிறேனோ, அத: — அக் காரணத்தினாலேயே, வேதே₃ லோகே ச — ஶ்ருதியிலும் ஸ்ம்ருதியிலும், புருஷோத்தம: —புருஷோத்தமன் என்று, ப்ரதி₂த: அஸ்மி — புகழ்பெற்றவனாயிருக்கிறேன்.

ஶ்லோகத்தில் "வ்யாபநாத் ப₄ரணாத் ஸ்வாம்யாத் அந்ய: பஞ்சத₃ஶோதி₃த:" என்று ஸ்வாமித்வத்தையும் சேர்த்து அருளிச் செய்தார். இங்கு ஈஶ்வரஶப்₃த₃த்தால் சொல்லப்படும் நியந்த்ருத்வம் ஸங்க்₃ரஹ ஶ்லோகத்தில் உபலக்ஷணமுறையாலே சொல்லப்படுவதாகக் கொள்ள வேண்டும். அடுத்த அத்₄யாயத்தின் அவதாரிகாப₄ாஷ்யத்தில் "வ்யாபநப₄ரணஸ்வாம்யை:" என்ற விடத்திலும் இப்படியே கொள்ளவேண்டும் அன்றிக்கே, "பாம்புகளை நியமிக்கும் கருடனைப்பாம்புகளுக்கு ஈஶ்வரன் என்று வழங்குவதில்லை. ஆகையால், வெறும் நியமனமாத்ரத்தைக் கொண்டு ஈஶ்வரஶப்₃த₃ப்ரயோக₃ம் வருவதில்லை. ஸ்வாம்யத்தோடு கூடிய நியமனமுள்ளவிடத்திலேயே ஈஶ்வரஶப்₃த₃ம் ரூட₄மாய் (ப்ரஸித்₃த₄மாய்) உள்ளது" என்னும் திருவுள்ளத்தாலே ஆள வந்தாரும் ப₄ாஷ்யகாரரும் ஈஶ்வரஶப்₃த₃த்தின் பொருளாகவே ஐஶ்வர்யத்தைத் திருவுள்ளம் பற்றியதாகவும் கொள்ளலாம் மேலும் இங்கு 'ய:' என்று அநுவாத₃ம் செய்யப்படும் வ்யாப்தி முதலானவை ஏற்கனவே ஏழாம் அத்₄யாயத்தில் கூறிய "மயி ஸர்வமித₃ம் ப்ரோதம்" [7-7] முதலான ஶ்லோகங்களில் சொல்லப்பட்ட அர்த்த₂த்தின் அநுவாத₃மேயாகையால். "பூ₄மிராப:"[7-4]என்று அங்கு சொல்லப் பட்ட ஶேஷித்வமும் ஈஶ்வரஶப்₃த₃த்தால் கருதப்படுகிறதாகை யாலே, "பதிம் விஶ்வஸ்யாத்மேஶ்வரம்" [தை-நா-11] என்று ஶ்ருதியில் சொல்லப்பட்டபடி பதிஶப்₃த₃த்தின் பொருளை யுடையது 'ஈஶ்வர'ஶப்₃த₃ம் என்றும் கொள்ளலாம். 17.

எத்தகவால் யான்கரன்மீ தேகியே யக்கரனு
முத்தனிலு முத்தமனு வுற்றுயர்ந்தே—னித்தகவால்
வேத முலகிவற்றின் மேவுபுரு டோத்தமனு
வோத வுரைசிறந்தே னுற்று. 18.

யான் — நான், எத்தகவால் — எந்தக்காரணத்தால், கரன்மீது ஏகியே — க்ஷரபுருஷனைக்கடந்து நிற்பவனாய், அக்கரனும் முத்தனிலும் உத்தமனு உற்று உயர்ந்தேன் — அக்ஷரபுருஷனை முக்தாத்மாவைக்காட்டிலும் சிறந்தவனாக விளங்கி நிற்கிறேனோ, இத்தகவால் — இக்காரணத்தால், வேதம் உலகு இவற்றில் — ஶ்ருதி, ஸ்ம்ருதி ஆகியவற்றில், மேவு புருடோத்தமனு உற்று ஓத உரை சிறந்தேன் — புருஷோத்தமன் என்னும் பொருத்தமான பெயரை ஓதலாம் படி பிரசித்திபெற்றிருக்கிறேன்.

---

18 சென்ற ஶ்லோகத்தில் தான் க்ஷராக்ஷரபுருஷர்களைக் காட்டிலும் மேலானவன் என்பதைப் பல காரணங்களால் நிலை நாட்டி, ஶ்ருதி ஸ்ம்ருதிகளில் பிரசித்திபெற்ற "உத்தமபுருஷன்" என்னும் தன் திருநாமத்தாலும் அவ்விஷயம் நிலைநிறுத்தப்பட்டது. இந்த ஶ்லோகத்தில் "புருஷோத்தமன்" என்னும் மற்றொரு திருநாமத்தைக்கொண்டு அவ்விஷயமே நிலைநிறுத்தப் படுகிறது. "உத்தமபுருஷன் வேறுபட்டவன்" என்று அங்கு படர்க்கையில் சொல்லப்பட்டவன் தானே என்பதை, "அஹம் புருஷோத்தம: ப்ரதி₂த: அஸ்மி" [நான் புருஷோத்தமன் என்று பிரசித்திபெற்றிருக்கிறேன்] என்று தன்மையில் சொல்லுவதன் மூலம் நிலைநிறுத்துகிறான். சென்ற ஶ்லோகத்தில் தன்னை க்ஷரா க்ஷரபுருஷர்களைக் காட்டிலும் மேலானவன் என்று நிலைநாட்டி, அதை உணர்த்தும் 'உத்தமபுருஷன்' என்னும் திருநாமத்தாலே தன்னை நிர்த்தேஶித்தான். இந்த ஶ்லோகத்தில், க்ஷராக்ஷரபுரு ஷர்களைக் காட்டிலும் மிகவும் மேலானவனாயிருக்கையாலே தான் ஶ்ருதி ஸ்ம்ருதிகளில் 'புருஷோத்தமன்' என்றும் முழங்கப் படுவதாகக் கூறுகிறான்—(யஸ்மாத் க்ஷரமதீதோஹம்) முற்கூறிய

भा ॥ यस्मादेवमुक्तैस्स्वभावैः क्षरं पुरुषमतीतोऽहम्, अक्षरान्मुक्तादप्युक्तैर्हेतुभिरुत्कृष्टतमः, अतोऽहम् लोके वेदे च पुरुषोत्तम इति प्रथितोऽस्मि।

வ்யாபனம், ப₄ரணம், ஸ்வாம்யம் முதலான எனக்கேயுரிய பெருமைகளாலே நான் 'க்ஷரபுருஷன்' எனப்படும் ப₃த்₃த₄ஜீவனைக் கடந்து நிற்கும் காரணத்தாலும். 'அதீத' ஶப்₃த₃த்தாலே அந்த ப₃த்₃த₄ஜீவனின் தாழ்வுகளின் நாற்றமும் தன்னிடமில்லை என்று காட்டுகிறான். பதினைந்துவது ஶ்லோகத்தில், "த்₃வாவிமௌ புருஷௌ லோகே க்ஷரஶ்ச அக்ஷரஏவச" என்று சொல்லப்பட்ட க்ஷராக்ஷரபுருஷர்கள் இங்கு க்ஷராக்ஷரஶப்₃த₃ங்களால்அனுவதி₃க்கப் படுவதால், இங்கு க்ஷரஶப்₃த₃ம் அசேதனமான மூலப்ரக்ருதியைக் குறிக்கமாட்டாது, (யஸ்மாத் அக்ஷராத₃பி சோத்தம:) பதினைந்துவது ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட அக்ஷரபுருஷனைக்காட்டிலும் மிகவும் மேலானவனாயிருக்கையாலும். அக்ஷர ஶப்₃த₃ம் மூலப்ரக்ருதிவிஷயமாகவும், பரமாத்மவிஷயமாகவும், சாஸ்திரங்களில் வழங்கப்பட்டிருந்தபோதிலும், பதினைந்துவது ஶ்லோகத்தில் "கூடஸ்தோ₂ऽக்ஷர உச்யதே" என்று எடுக்கப்பட்ட அக்ஷரபுருஷனே இங்கு அனுவதி₃க்கப்படுவதால், இவன் முக்தாத்மாவே என விளங்குகிறது. 'க்ஷராக்ஷரபுருஷர்களைக்காட்டிலும் மேற்பட்டவன், என்பதே 'புருஷோத்தமன்' 'உத்தமபுருஷன்' என்னும் தன் திருநாமங்களுக்குப் பொருள் என்றும் இத்தால் உணர்த்தப்பட்டதாயிற்று. (உத்தம:) முற்கூறிய காரணங்களால் முக்தஜீவன் ப₃த்₃த₄ஜீவனைக்காட்டிலும் உயர்ந்தவன்; முற்கூறிய ஸர்வாந்தர்யாமியாயிருக்கை முதலான காரணங்களால் அந்த முக்தனைக் காட்டிலும் தான் உயர்ந்திருக்கையால் தான் மிக உயர்ந்தவன் என்று கருத்து. (அத:) இப்படி க்ஷராக்ஷரபுருஷர்களைக்காட்டிலும் உயர்ந்திருக்கையாலே, (அஹம் புருஷோத்தம: ப்ரதி₂த: அஸ்மி) நான் 'புருஷோத்தமன்' என்று பிரசித்திபெற்றிருக்கிறேன்; "புருஷோத்தமனான நான் பிரசித்திபெற்றிருக்கிறேன்" என்று பொதுவாகப் பிரசித்திபெற்றிருக்கையை இங்கு விதி₄ப்பதாகக் கொண்டால், 'அத:' என்று க்ஷராக்ஷரபுருஷர்களைக்காட்டிலும் உயர்ந்தவனாயிருப்பதைக் காரணமாகக் காட்டியது பொருந்தாதாகையால், "நான் புருஷோத்தமனாகப் பிரசித்தி பெற்றிருக்கிறேன்" என்றே இங்கு பொருள்கொள்ளவேண்டும்.

वेदार्थावलोकनाल्लोक इति स्मृतिरिहोच्यते। श्रुतौ स्मृतौ चेत्यर्थः।

(வேதே₃ லோகே ச) ஶ்ருதியிலும் ஸ்ம்ருதியிலும். "லோகஸ்து பு₄வநே ஜநே" என்ற நிக₄ண்டுவையொட்டி இங்கு பு₄வனத்தையோ, ஜனங்களையோ லோகஶப்₃த₃த்துக்குப் பொருளாகக் கொண்டால், உலகத்திலேயோ அல்லது பாமரஜனங்களிடையேயோ எம்பெருமானுக்குப் "புருஷோத்தமன்" என்னும் ப்ரஸித்₃தி₄ மிகுதியாக இல்லாமையால் அது பொருந்தாது. லோகஶப்₃த₃த்திற்குக் காவியம் முதலானவற்றைப் பொருளாகக் கொள்வதிலும் ஸ்வாரஸ்யம் அதிகமில்லை. கவிகள் அபி₄மானத்தாலும் எழுதியிருக்கலாமன்றோ. இதனாலும், வேத₃த்தோடு கூடப்படித்திருப்பதாலும் வேதத்தை விளக்குவதனாலே ப்ரமாணமாகும் ஸ்ம்ருதிகளே இங்கு லோகஶப்₃த₃த்தால் கருதப்படுகின்றன என்று கொள்ளவேண்டும். "லோக்யதே அநேந வேத₃ார்த்த₂: – இதி லோக:" என்னும் வ்யுத்பத்தியாலே, வேத₃ார்த்த₂த்தை அறிய உதவும் ஸ்ம்ருதிகளை லோகஶப்₃த₃த்தால் குறிப்பது பொருத்தமன்றோ. இங்கு ஶ்ருதிஸ்ம்ருதிகளை "புருஷோத்தமன்" என்னும் தன்பெயருக்கு ப்ரமாணமாக எடுத்திருப்பதற்குக் கருத்து பின்வருமாறு:— "ஶ்ரூயதே நித்யம் இதி ஶ்ருதி:" என்னும் வ்யுத்பத்தி 'எவராலும் இயற்றப்படாதவை வேத₃ங்கள்' என்று காட்டுகிறது. சொல்லுகிறவனுடைய தோ₃ஷத்தினால் அது தவறாகப்போவதற்கு இடமில்லையாகையால் அது இயல்பான ப்ரமாணமாகிறது; மேலும், எம்பெருமான் வேத₃ங்களை எப்போதும் நினைவில் கொண்டு அதைப்பிரமனுக்கு முதலில் ஓதுவிக்கிறான்; அவனிடமிருந்து ஆசார்யஶிஷ்யபரம்பரையின் மூலம் இன்றளவும் அது ஓதுவிக்கப்பட்டு வருகிறது. ஆகையால், அதில்சொல்லப்பெற்றதனைத்தும் உண்மையேயாகும். "இதிஹாஸபுராணாப்₄யாம் வேத₃ம் ஸமுபப்₃ருஂஹயேத்। பி₃பே₄த்யல்பஶ்ருதாத்₃வேத₃: மாமயம் ப்ரதரிஷ்யதி॥" [இதிஹாஸ புராணங்களைக்கொண்டே வேத₃ங்களை விளக்கிக்கொள்ளவேண்டும். இதிஹாஸபுராணங்களைக்கற்காமல் வேத₃ங்களைமட்டும் அத்₄யயனம் செய்தவனைக் கண்டு 'இவன் என்னைக்கலக்கிவிடுவானோ' என்று வேத₃ம் ப₄யப்படுகிறது] என்கிறபடியே அளவற்றதாய், பொருள் அறிய அரியதான வேத₃த்தின் எல்லா ஶாகை₂களையும் ஆராய்ந்து அர்த்த₂நிர்ணயம் செய்வது புல்லறிவாளர்களால் முடியாததாகையாலே, பரமாப்தர்களாய், வேத₃த்தின் பல ஶாகை₂களையும் கண்டவர்களாய், வேத₃த்தாலும் ஆங்காங்கு புகழப்பட்டிருப்பவர்களான மனு, வியாஸர், பராஶரர், வால்மீகி முதலான மஹர்ஷிகளால் வேத₃ார்த்

श्रुतौ तावत् *परं ज्योतिरुपसंपद्य स्वेन रूपेणाभिनिष्पद्यते, स उत्तमः पुरुषः (छा. ८-१२-२) इत्यादौ। स्मृतावपि *अंशावतारं पुरुषोत्तमस्य ह्यनादिमध्यान्तमजस्य विष्णोः (वि. ५-१७-३३) इत्यादौ ॥ १८ ॥

த$_2$த்தை ஸ்மரித்து எழுதப்பட்டதாகையாலே 'ஸ்ம்ருதிகள்' எனப்படும் ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களைக் கொண்டு வேத$_3$ார்த்த$_2$த்தை அறுதியிடுவது தக்கதாகும் என்கை; ச்ருதிஸ்ம்ருதிகள் இப்படி இவனைப் புருஷோத்தமனாக எங்கே சொல்லியிருக்கின்றன? எனில்: "பரஞ்ஜ்யோதிருபஸம்பத்$_3$ய ஸ்வேந ரூபேணாபி$_4$நிஷ்பத்$_3$யதே, ஸ உத்தம: புருஷ:" [சா$_2$ந் - 8 - 12 - 2] [பரஞ்சோதியையடைந்து முக்தாத்மா தன் ஸ்வரூபவிளக்கம் பெறுகிறான்; அப்பரஞ்சோதியே உத்தம புருஷன் எனப்படுகிறான்] என்னும் ச்ருதியில் முக்தாத்மாவால் அடையப்பெற்றவனாய், ஒப்பற்ற சோதியுருவாயிருப்பவனான பரமாத்மாவே உத்தமபுருஷன் எனப்படுகிறான். அந்த வேதவாக்கியத்தை விளக்குவதற்காகவே "உத்தம: புருஷஸ்த்வந்ய: பரமாத்மேத்யுதா$_3$ஹ்ருத:" என்று இங்கு கீ$_3$தையிலும் முந்தின ச்லோகத்தில் "உத்தம: புருஷ:" என்று அந்த சப்$_3$த$_3$த்தையே எடுத்து, இந்த ச்லோகத்தில் ஸமஸ்தபத$_3$மாக வழங்குகிறான் கண்ணன் என்று விளங்குகிறது. வேத$_3$த்தாலும் கொண்டாடப்பெற்ற பராசரரால் இயற்றப்பெற்ற ஸ்ரீவிஷ்ணு புராணமாகிற ஸ்ம்ருதியிலும் "அம்சாவதாரம் புருஷோத்தமஸ்ய ஹ்யநாதி$_3$மத்$_4$யாந்தமஜஸ்ய விஷ்ணோ:" [வி·பு 5-17-33] [பிறப்பற்றவனாய், புருஷோத்தமன் என்னும் பெயர் பெற்றவனான விஷ்ணுவினுடைய முதலும் நடுவும் முடிவுமில்லாத அம்சாவதாரமாயிருக்கும் கண்ணனை] என்று ஸமஸ்தபத$_3$மாகவே புருஷோத்தமசப்$_3$த$_3$ம் இக்கண்ணனைக் குறித்து வழங்கப்பட்டது. இங்கு 'விஷ்ணோ:' என்று ப்ரஸித்$_3$த$_4$மான பெயரைச் சொன்னபோதிலும், "புருஷோத்தமஸ்ய" என்று அதற்கு விசேஷணமிடுகையாலே, புருஷோத்தமசப்$_3$த$_3$ம் யோக$_3$ரூட$_4$ம் என்று விளங்குகிறது. இதனால், "ரூட்$_4$யா து நாமம் புருஷோத்தமோऽஸ்து" என்று வேத$_3$பா$_3$ஹ்யனான சைவன் ஒருவன் புருஷோத்தமசப்$_3$த$_3$ம் கேவல ரூடி$_4$யேதவிர யோக$_3$ரூட$_4$மன்று என்று கூறியது ப்ரமாணவிருத்$_3$த$_4$மாகையாலே தள்ளப்படுகிறது. புருஷோத்தமசப்$_3$த$_3$த்தை "புருஷச்சாஸௌ உத்தம:" என்று கர்மதா$_4$ரயஸமாஸமாகக்கொண்டால் அஷ்டாத்$_4$யாயியில் 2-1-61

यो मामेवमसंमूढो जानाति पुरुषोत्तमम् ।
स सर्वविद्भजति मां सर्वभावेन भारत ॥ १९.

19. யோ மாமேவமஸம்மூடோ$_4$ ஜாநாதி புருஷோத்தமம் |
ஸ ஸர்வவித்$_3$ப$_4$ஜதி மாம் ஸர்வப$_4$ாவேந ப$_4$ாரத ||

ப$_4$ாரத — ப$_4$ரத குலத்தில் பிறந்தவனே! ய: — எவனொருவன், ஏவம் — இம்மாதிரியாக, புருஷோத்தமம் — க்ஷராக்ஷரபுருஷர்களைக் காட்டிலும் பலகாரணங்களால் சிறப்புற்றவனாகை, மாம் — என்னை, அஸம்மூட$_4$: — கலக்கமில்லாமல், ஜாநாதி — அறிகிறானோ, ஸ: ஸர்வவித் — அவன் என்னை அடைவதற்குரிய வழியனைத்தையும் அறிந்தவனாகிறான்: மாம் — என்னை, ஸர்வ ப$_4$ாவேந ப$_4$ஜதி — (என்னை அடையும் வழியான) ப$_4$க்தி ப்ரகாரங்களனைத்தாலும் ப$_4$க்தி செய்தவனாகிறான்.

ஸூத்ரப்படி 'உத்தமபுருஷ:' என்று ஸமஸ்தபத$_3$ம் வருமேதவிர 'புருஷோத்தம:' என்று வராது. ஆகையால், தத்புருஷஸமாஸமே கொள்ளவேண்டும் என்று நிர்ணயித்து, பஞ்சமீதத்புருஷ ஸமாஸத்தைக் கொண்டு 'க்ஷராக்ஷரபுருஷர்களைக் காட்டிலும் உத்தமன்' என்றோ, ஷஷ்டீ$_2$தத்புருஷஸமாஸத்தைக் கொண்டு '(தாழ்ந்தவர்களான)க்ஷராக்ஷரபுருஷர்களுக்கு உத்தமன்' என்றோ, ஸப்தமீதத்புருஷஸமாஸம் கொண்டு 'புருஷஶப்$_3$த$_3$த்தால் சொல்லப்படும் ஜீவபரர்களுக்குள் உத்தமன்' என்றோ பொருள் கொள்ளலாம். இது விஷயமான வ்யாகரண விசாரங்கள் தாத்பர்ய சந்த்$_3$ரிகையில் விரிவாகச் செய்யப்பட்டுள்ளன. அதிலேயே கண்டு கொள்வது இப்படி இது நாராயணனிடத்தில் யோக$_3$ரூட$_4$மாயிருப்பதினாலேயே ஆதி$_3$கவியான வால்மீகியும் "ந ச தேந விநா நித்$_3$ராம லப$_4$தே புருஷோத்தம:" [ரா-ப$_3$ா 18-29] [அந்த லக்ஷ்மணன் பக்கத்தில் இராவிடில் புருஷோத்தமனான ராமன் தூங்கமாட்டான்] என்று கூறினார். இவையனைத்தையும் திருவுள்ளத்தில் கொண்டே யாமுனாசார்யரான ஆளவந்தாரும் ஸ்தோத்ரரத்னத்தில் "க: புண்ட$_3$ரீகநயந: புருஷோத்தம: க:" [ஸ்தோ-ர 12] [புண்ட$_3$ரீகாக்ஷன்யார்? புருஷோத்தமன்யார்?] என்று பரதத்வத்தை நிர்ணயிக்கும் கேள்விகளைக் கேட்டார். 18.

भा ॥ य एवम् — उक्तेन प्रकारेण पुरुषोत्तमं मामसंमूढो जानाति — क्षराक्षरपुरुषाभ्यामन्ययस्वभावतया व्यापनभरणैश्वर्यादि·

என்னையிங்கே யிவ்வண்ண மேய்ந்தபுரு டோத்தமனை
முன்னை மயர்வொழித்து முற்றுணர்ந்தான்—பின்னை
எல்லா மறிந்தே யெனையடைந்து பத்தியுடன் [யவன்
செல்வானெவ் வாறும் சிறந்து. 19.

இங்கே—இவ்வுலகில், இவ்வண்ணம் — இவ்வண்ணமாக, ஏய்ந்த புருடோத்தமனும் என்னை — பொருத்தமான பொருளுடைய 'புருஷோத்தமன்' என்று சொல்லப்படும் என்னை, முன்னை மயர்வு ஒழித்து — அனாதி₃காலமாக உள்ள அஜ்ஞானம் நீங்கப்பெற்று, முற்று உணர்ந்தான் அவன் — முழுதும் அறிகின்றவன்; பின்னை — பின்வரும் காலமெல்லாம், எல்லாம் அறிந்தே — என்னை அடைவதற்குரிய வழியனைத்தையும் அறிந்தவனாய், எவ்வாறும் பத்தியுடன் சிறந்து எனை அடைந்து செல்வான் — என்னை அடையும் வழியான ப₄க்திமுறைகளனைத்தாலும் ப₄க்திசெய்தவனாகிறான்.

19. 'புருஷோத்தம' ஶப்₃த₃த்துக்குப் பொருளுரைத்தது அப்பொருளை அனுஸந்தி₄ப்பதற்காக என்று காட்டிக்கொண்டு, 'புருஷோத்தமன்' என்று அறிவதை மிகச்சிறந்தபயனை அளிப்பதாகப் புகழ்கிறான். (ய: ஏவம் புருஷோத்தமம் மாம் அஸம்மூடோ₄ ஜாநாதி) எவனொருவன் இதுவரையில் சொன்னபடி க்ஷராக்ஷர புருஷர்களைக் காட்டிலும் அழிவற்ற தன்மையையுடையவனாயிருக்கையாலும், அவர்களை வியாபிப்பது, தாங்குவது, நியமிப்பது முதலானவற்றைச்செய்வதாலும், அவர்களைக்காட்டிலும்மிக வேறுபட்ட புருஷோத்தமனாகக்கலங்காமல் என்னை உள்ளபடி அறிகிறானோ, 'எவனொருவன் என்னைப் புருஷோத்தமனாக அறிகிறானோ' என்று அந்வயித்துப் பொருள் கொண்டால் 'அஸம்மூட₄:' (கலங்காமல்) என்னும் பத₃ம் பொருளற்றதாக ஆகிவிடும். அதனால் 'புருஷோத்தமனென என்னை முற்கூறியபடி கலங்காமல் உள்ளபடி அறிகிறானோ' என்று பொருள் கொள்ளப்பட்டது. ஸம்மூட₄த்வமாவது—ஜீவன் தன்னையும் புருஷோத்தமனையும் ஒருபடிப்பட்ட

योगेन च विसजातीयं जानाति, स सर्ववित् — मत्प्राप्त्युपायतया यद्वेदितव्यं तत्सर्वं वेद। भजति मां सर्वभावेन — ये च मत्प्रा-

---

வராக மயங்குதல். அஸம்மூட₄த்வமாவது - அந்த மயக்கமில்லாமை. முன்சொன்னபடி ஜீவன் தன்னைப்போல் புருஷோத்தமனை அழியும் தன்மையுடையவனாய், வியாபிக்கப்படுபவனாய், தாங்கப்படுபவனாய், நியமிக்கப்படுபவனாய் மயங்காமல், அழியாத் தன்மையுடையவனாய், க்ஷராக்ஷரபுருஷர்களை வியாபிப்பவனாய், தாங்குபவனாய், நியமிப்பவனாய் அனுஸந்தி₄ப்பதனால் அந்த மயக்கமற்ற உண்மையறிவு ஏற்படுகிறது என்று கருத்து. இங்கு அஸம்மூட₄ ஶப்₃த₃த்தினால் - அத்₃வைதிகள் கூறும் ஜீவேஶ்வரர்களின் ஐக்யஜ்ஞானம் மயக்கமே என்பதும், ப்ரக்ருதி, புருஷன், ஈஶ்வரன் என்னும் மூன்று தத்துவங்களின் பே₄த₃ஜ்ஞானமே உண்மையறிவு என்பதும் உணர்த்தப்பட்டதாயிற்று. இனி ஶ்லோகத்தின் உத்தரார்த்த₄த்தாலே இந்த உண்மையறிவை உடையவனுக்கு விளையும் பயனைக் கூறுகிறான்— (ஸ ஸர்வவித்) அவன் என்னை அடைவதற்கு உறுப்பான உபாயங்களைக் குறித்து அறியவேண்டுவது அனைத்தையும் அறிந்தவனாகிறான். இங்கு புருஷோத்தம ஶப்₃த₃த்தின் பொருளை அறிவதனால், "அங்கா₃நி வேதா₃ஶ்சத்வார: மீமாம்ஸா ந்யாயவிஸ்தர: | புராணம் த₄ர்மஶாஸ்த்ரம் ச வித்₃யா ஹ்யேதாஶ் சதுர்த₃ஶ|| ஆயுர்வேதோ₃ த₄நுர்வேத₃: கா₃ந்த₄ர்வஶ்சேதி தே த்ரய:| அர்த்த₂ஶாஸ்த்ரம் சதுர்த்த₂ம் ச வித்₃யா ஹ்யஷ்டாத₃ஶைவ தா: ||" [ஆறு அங்க₃ங்கள், நாலுவேத₃ங்கள், மீமாம்ஸா ஶாஸ்த்ரம், ந்யாயஶாஸ்த்ரம், புராணம், த₄ர்மஶாஸ்த்ரம் ஆகியவை பதினாலு வித்₃யாஸ்தா₂னங்கள் எனப்படுகின்றன. இவற்றோடு ஆயுர்வேத₃ம், த₄நுர்வேதம், கா₃ந்த₄ர்வ (ஸங்கீ₃த) வேதம், அர்த்த₂ஶாஸ்த்ரம் என்னும் நாலு உபவேத₃ங்களையும் சேர்த்து, பதினெட்டு வித்₃யாஸ்தா₂னங்களாகவும் கூறுவதுண்டு] என்கிற பதினெட்டு வித்₃யாஸ்தா₂னங்களின் அறிவு விளையாது. ஆகையால் அதைப்பொருளாகக் கொள்ளமுடியாது. இங்கு "ஸர்வவித்" என்று உலகிலுள்ள எல்லாப்பொருளையும் அறிகிறான் என்றும் கொள்ளமுடியாது. 'மயிர், புழு, பூச்சிகள் முதலானவற்றை அறிகிறான்' என்று கூறிப் புகழ்வதும் இங்கு பொருத்தமற்றது. மேலே 'எல்லா ப்ரகாரங்களாலும் ப₄க்தி செய்கிறான்' என்று சொல்லியதோடும் இவ்வறிவுகள் பொருத்தமற்றவை. ஆகையால், மேலே சொல்லுவதற்கேற்ப

प्युपायतया मद्भजनप्रकारा निर्दिष्टास्तैश्च सर्वैर्भजनप्रकारैर्मां भजते, सर्वैर्मद्विषयैर्वेदनैर्मम या प्रीतिर्या च मम सर्वैर्मद्विषयैर्भजनैः, उभय-विधा सा प्रीतिरनेन वेदनेन मम जायते ॥ १९ ॥

"என்னை அடைவதற்கு உறுப்பான உபாயங்களைப் பற்றி அறிய வேண்டியதனைத்தையும் அறிகிறான்" என்று இங்கு பொருள் கொள்வதே பொருத்தமானது, (மாம் ஸர்வப$_4$ாவேந ப$_4$ஜதி) என்னை அடைவதற்கு உபாயமாக என்றால் சொல்லப்பட்ட ப$_4$ஜன ப்ரகாரங்கள் அனைத்தாலும் என்னை ப$_4$க்திசெய்பவனாகிறான். ப$_4$ாவ ஶப்$_3$த$_3$த்தை 'க்ரியை' என்னும் பொருளுடையதாகவோ, 'பதா$_3$ர்த்த$_2$ம்' என்னும் பொருளுடையதாகவோ கொண்டு 'ஸர்வ ப$_4$ாவேந' என்பதற்கு ப$_4$ஜன ப்ரகாரங்கள் அனைத்தையும் பொருளாகக் கொள்ளவேண்டும். "ஸததம் கீர்த்தயந்தோ மாம் யதந்தஶ்ச த்$_3$ருட$_4$வ்ரதா:| நமஸ்யந்தஶ்ச மாம் ப$_4$க்த்யா ||" [கீ$_3$தை 9—14] "யோ மாம் ஸ்மரதி" [8—14] "மச்சித்தா:-கத$_2$யந்தஶ்ச மாம் நித்யம்"[10—9] முதலான இடங்களில் முன்சொல்லப்பட்ட கீர்த்தனம், யதனம் (முயற்சி), நமஸ்கரணம், ஸ்மரணம், சிந்தனம், கத$_2$நம் முதலான ப$_4$க்திப்ரகாரங்களே இச்சொல்லால் கருதப்படுகின்றன என்பது தெளிவு. 'ஸர்வப$_4$ாவேந ப$_4$ஜதி' என்பதற்கு "வாஸுதே$_3$வஸ் ஸர்வம்" [கீ$_3$தை7-19] என்னும் மஹாத்மாவான ஸ்வயம் ப்ரயோஜன ப$_4$க்திநிஷ்ட$_2$னின் நிலையைக்கொள்வது உபாஸக ப$_4$க்தனைப் புகழும் இந்த ப்ரகரணத்திற்குப் பொருத்தமற்றது. ஆகையால், சிறந்த கீர்த்தநாதி$_3$களையே ஸர்வப$_4$ாவஶப்$_3$த$_3$த்துக்குப் பொருளாகக் கொள்ளவேண்டும். இங்கு 'ஸர்வவித்' என்றதால் தத்த்வஹிதங்கள் அனைத்தையும் அறிதலையும், "ஸர்வப$_4$ாவேந ப$_4$ஜதி" என்றதால் ஹிதமான உபாயத்தின் அனுஷ்ட$_2$ானத்தையும் புருஷோத்தமஶப்$_3$தா$_3$ர்த்த$_2$த்தை அறிந்தவனுக்குச் சொல்லுவதாக விளங்குகிறது. இது பொருந்தாதே. புருஷோத்தமஶப்$_3$தா$_3$ர்த்த$_2$த்தை அறிந்ததினால் பரவ்யூஹ விப$_4$வ கு$_3$ணசேஷ்டிதங்கள் அனைத்தையும் அறிந்ததாகவோ, எல்லாவித$_4$மான ப$_4$க்தியைச் செய்ததாகவோ ஆகிவிடாதே. 'இங்கு ஏறிட்டுத் துதிக்கப்படுகிறது' என்று கூறினால், அது உண்மையல்லவாகையால் பயனற்றதாகிறது. "புருஷோத்தமஶப்$_3$தா$_3$ர்த்த$_2$த்தை அறிவதால் அனைத்தையும் அறிந்தவனாகிறான்; எல்லா ப்ரகாரங்களாலும் ப$_4$க்திசெய்தவனாகிறான்" என்று இங்கு புருஷோத்தமஶப்$_3$தா$_3$ர்த்த$_2$ஜ்ஞானத்துக்குப் பயனைக் கூறுவதாக்

* भा ॥ इत्येतत्पुरुषोत्तमत्ववेदनं पूजयति—

इति गुह्यतम शास्त्रमिदमुक्तं मयाऽनघ ।
एतद्बुद्ध्वा बुद्धिमान्स्यात्कृतकृत्यश्च भारत ॥ २०

इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु पुराणपुरुषोत्तमयोगो नाम
पञ्चदशोऽध्यायः ॥ १५ ॥

20\. இதி கு3ஹ்யதமம் ஶாஸ்த்ரம் இத3முக்தம் மயாSநக4 ।
ஏதத்3பு3த்3த்4வா பு3த்3தி4மாந் ஸ்யாத் க்ருதக்ருத்யஶ்சப4ாரத॥

இதி ஸ்ரீமத்3ப4க3வத்3கீ3தாஸூபநிஷத்ஸு புராண
புருஷோத்தமயோகோ3 நாம பஞ்சத3ஶோSத்4யாய: ॥ 15

அநக4—குற்றமற்றவனே! ப4ாரத—பரதகுலத்திலுதித்தவனே! இதி — இவ்வண்ணமாக, இத3ம் — இந்தப்புருஷோத்தம வித்3யையாகிற, கு3ஹ்யதமம் ஶாஸ்த்ரம்—பரம ரஹஸ்யமான ஶாஸ்த்ரம், மயா — என்னால், உக்தம் — (உனக்கு)உபதே3ஶிக்கப்பட்டது. ஏதத் பு3த்3த்4வா — இதை அறிந்து, பு3த்3தி4மாந் ஸ்யாத்-என்னை அடைவதற்கு வேண்டிய அறிவனைத்தையும் பெற்றவனாகிறான்; க்ருதக்ருத்ய: ச — அதற்குச் செய்யவேண்டியதனைத்தையும் செய்தவனாகிறான்.

கொள்ளும்போது "ஏதத்3பு3த்3த்4வா பு3த்3தி4மாந் ஸ்யாத் க்ருதக்ருத்யஶ்ச" [இதையறிந்தவன் அறியவேண்டிய அறிவனைத்தையும் அறிந்தவனாகிறான்; செய்யவேண்டியதனைத்தையும் செய்தவனாகிறான்] என்று அடுத்த ஶ்லோகத்தில் சொல்லியிருப்பதோடு புநருக்தியும் உண்டாகிறது ஆகையால் இந்த உத்தரார்த்த4த்துக்குத் தாத்பர்யம் என்ன? எனில்: "என்னை அடைவதற்குறுப்பான உபாயங்கள் அனைத்தையும் அறிவதாலும், என்னுடைய ப4க்திப்ரகாரங்கள் அனைத்தையும் அனுஷ்டிப்பதாலும் எனக்கு எந்த ப்ரீதிகள் ஏற்படுமோ, அந்த இருவகையான ப்ரீதிகளும் புருஷோத்தமஶப்3த3ார்த்த2த்தை அறிபவன் விஷயத்தில் எனக்கு ஏற்படும்" என்று புருஷோத்தம வித்3யையைப்புகழ்வதே-இங்கு தாத்பர்யமாகையாலே எக்குறையுமில்லை. (ப4ாரத) ப4ரதகுலத்தில் உதித்த நீ இந்தப்புருஷோத்தமஶப்3த3ார்த்த2த்தை அறியவேண்டியது மிகவும் அவஶ்யம் என்று கருத்து. 19.

* இந்த அவதாரிகா ப4ாஷ்யத்தை முந்தின ஶ்லோக ப4ாஷ்யத்தின் இறுதியாகக் கொள்வதுமுண்டு.

இன்னேயிச் சாத்திரமா யேய்ந்த மறைபொருளை
மன்னே யுரைத்தேனன் மற்றிதனை — நன்னெறியா
வுற்றறிந்தா னேரே யுணர்ந்தானும் பார்த்தனே
மற்றனைத்துஞ் செய்தவனும் வாய்ந்து. 20.

பார்த்தனே — குந்தீபுத்திரனே! மன்னே! — அரசனே! இன்னே — இவ்வண்ணமாக, இச்சாத்திரமாய் ஏய்ந்த மறை பொருளை — புருஷோத்தமவித்₃யையாகிற பரம ரஹஸ்யமான ஶாஸ்த்ரத்தை, நான் உரைத்தேன் — நான் உனக்கு உபதே₃ஶித்தேன்; மற்று இதனை — இந்த ஶாஸ்த்ரத்தை, நல் நெறியா உற்று அறிந்தான் — (அறிவுடையவதற்கு) நல்ல வழியாகக்கொண்டு அறிந்தவன், நேரே உணர்ந்தானும் — என்னை அடைவதற்கு வேண்டிய அறிவனைத்தையும் பெற்றவனாகிறான்; மற்று — மேலும், அனைத்தும் வாய்ந்து செய்தவனும் — அதற்குச்செய்யவேண்டிய தனைத்தையும் நன்கு செய்தவனாகிறான்.

---

20. மிகவும் ரஹஸ்யமானதாகையால் அநதி₄காரிகளிடமிருந்து மறைக்கத்தக்கதாய், சொன்னதனைத்தும் உண்மையாயிருப்பதாய், மிகச்சிறந்த பயனை விளைப்பதாயிருப்பது இந்தப்புருஷோத்தமவித்₃யை என்று கூறி இவ்வத்தியாயத்தை நிறைவுபடுத்துகிறான். "இதி கு₃ஹ்யதமம் ஶாஸ்த்ரம்" என்று இங்கு படித்திருப்பதைக் கண்டு சிலர் கீ₃தாஶாஸ்த்ரம் இத்துடன் நிறைவடைகிறது என்று கூறினார்கள். பெரும்பாலான பா₄ஷ்யகாரர்கள் பதினெட்டு அத்தியாயங்களுக்கும் பா₄ஷ்யமிட்டிருக்கையாலும், கடபயாதி₃ஸங்க்₂யையின்படி 18 என்னும் எண்ணைக்குறிக்கும் 'ஜயம்' என்னும் பெயரையுடைய பா₄ரதத்தில் பதினெட்டு பர்வங்கள், பதினெட்டு நாள்போர், பா₄ரத ஸாரமான கீ₃தையில் பதினெட்டு அத்தியாயங்கள் என்பது பிரசித்தமானதாகையாலும் கீ₃தை பதினெட்டு அத்தியாயங்கள் கொண்டது என்பதே உண்மை. "புருஷோத்தமவித்₃யையால் மட்டும் எம்பெருமானுக்கு எல்லாவிதமான ப்ரீதியும் உண்டாகுமாகில், ப₄க்தி முதலான ஸாத₄னங்களை விதி₄ப்பது பயனற்றதாகுமே" என்னும் கேள்விக்கு, "ப₄க்தி முதலான எல்லா நினைவுகளுக்கும் எம்பெருமான் புருஷோத்தமன் என அறிவதே மூலகாரணமாகையால் இப்படிக் கூறுவதில் குறையில்லை" என பதில் அளிக்கிறது இந்த ஶ்லோகம். சில அதி₄காரிகளுக்கு இந்தப் புருஷோத்தமஶப்₃தா₃ர்த்த₂ ஜ்ஞானமே மோக்ஷமீறாக எல்லாப்பலன்களையும் அளித்துவிடும் என்னும் கருத்துடையதாகவும் இந்த நிக₃மனஶ்லோகத்தைக் கொள்ளலாம்.

भा ॥ इत्थं मम पुरुषोत्तमत्वप्रतिपादनं सर्वेषां गुह्यानां गुह्यतममिदं शास्त्रं त्वमनघतया योग्यतम इति कृत्वा मया तवोक्तम् ।

(இத₃ம் ஶாஸ்த்ரம்) புருஷோத்தம ஶப்₃த₃ார்த்த₂த்தை விளக்கும் புருஷோத்தம வித்₃யையாகிற இந்த ஶாஸ்த்ரம். 'இத₃ம்' என்று 'இந்த ஶாஸ்த்ரத்தைச் சொல்லுபவரும் கிடையாது; அதைக் காது கொடுத்துக் கேட்பவரும் கிடையாது' என்று உணர்த்தப்படுகிறது. அன்றிக்கே, மற்ற ஶாஸ்த்ரங்களைக் காட்டிலும் இதன் சிறப்பை 'இத₃ம்' ஶப்₃த₃ம் உணர்த்துவதாகவும் கொள்ளலாம். "யஸ்மிந் ப்ரஸாத₃ஸுமுகே₂ கவயோऽபி தே தே ஶாஸ்த்ராண்யஶாஸுரிஹ தந்மஹிமாஶ்ரயாணி । க்ருஷ்ணேந தேந யதி₃ஹ ஸ்வயமேவ கீ₃தம் ஶாஸ்த்ரஸ்ய தஸ்ய ஸத்₃ருஶம் கிமிஹாஸ்தி ஶாஸ்த்ரம் ॥" [எவனொருவனுடைய உகப்பினாலே அந்தந்தக் கவிகள் அவனுடைய பெருமையைக் கூறும் ஶாஸ்த்ரங்களை இயற்றினார்களோ, அந்தக் கிருஷ்ணன் தன்னாலேயே இயற்றப்பெற்ற கீ₃தா ஶாஸ்த்ரத்துக்கு இணையாக வேறு என்ன ஶாஸ்த்ரம் இவ்வுலகில் உள்ளது?] என்று சான்றோர்களால் சொல்லப் பட்டதன்றோ. இந்த ஶாஸ்த்ரம் மேலும் எத்தகையது? எனில்: (கு₃ஹ்யதமம்) அநதி₄காரிகளிடமிருந்து மறைக்கத்தக்க எல்லா ரஹஸ்யங்களைக் காட்டிலும் பரம ரஹஸ்யமானது. (மயா உக்தம்) சொல்லவேண்டிய எல்லா உண்மைகளையும் அறிந்தவனாய், நீ தகுந்த அதி₄காரி என்பதை அறிந்தவனாய், உனது நண்பனானை என்னாலே சொல்லப்பட்டது. (இதி உக்தம்) வேறெவராலும் இதற்கு முன் சொல்லப்படாத இவ்வர்த்த₂ம் உன் தகுதி கருதி என்னாலே உனக்கே இப்போது சொல்லப்பட்டது என்று கருத்து. தகுதியை விளக்குகிறான் — (அநக₄) குற்றமற்றவனே! "இத₃ம் தே நாதபஸ்காய நாப₄க்தாய கதா₃சந । ந சாஶுஶ்ருஷவே வாச்யம் ந ச மாம் யோऽப்₄யஸூயதி ॥" [கீ₃தை 18-67] [இந்த கீ₃தாஶாஸ்த்ரத்தைத் தவம் புரியாதவனுக்குச் சொல்லக் கூடாது. உன்னிடமும் என்னிடமும் ப₄க்தியில்லாதவனுக்கு

एतद्बुद्ध्वा बुद्धिमान्स्यात्कृतकृत्यश्च — मां प्रेप्सुना उपादेया या बुद्धिस्सा सर्वा उपात्ता स्यात्; यच्च तेन कर्तव्यम्, तत्सर्वं कृतं

ஒருபோதும் சொல்லக்கூடாது. கேட்பதில் சிரத்தையில்லாத வனுக்கும் சொல்லக்கூடாது. என்னிடம் பொருமையுள்ள வனுக்குச் சொல்லவே கூடாது] என்று இந்த கீ₃தாஶாஸ்த் ரத்தின் முடிவில் சொல்லப்பட்ட தவம் புரியாமை, ப₄க்தியில் லாமை, சிரத்தையில்லாமை, பொருமை ஆகிய குற்றங்கள் இல்லாதவனுகையாலே உனக்கு முழுத்தகுதியுண்டு என்று கருத்து. (ப₄ாரத) ப₄ரதகுலமாகிற நற்குடியிலே பிறந்தவனு கையாலே உனக்குச் சிறப்பான தகுதியுண்டு என்று கருத்து. இனி, ஶ்லோகத்தின் பிற்பாதியாலே இந்தப் புருஷோத்தம வித்₃யையை அறிந்தவனுக்கு உண்டாகும் ப₂லனைக் கூறுகிருன்- (ஏதத்₃பு₃த்₃த்₄வா பு₃த்₃தி₄மாந் ஸ்யாத்) இந்தப் புருஷோத்தம வித்₃யையை அறிந்தவனே அறிவாளியாகிருன். அதாவது — என்னை அடைய விரும்புகிறவன் கைக்கொள்ள வேண்டிய அறிவு அனைத்தும் அவனுல் கைக்கொள்ளப்பட்டதாகிறது என்று கருத்து. "ஸா வித்₃யா யா விமுக்தயே... வித்₃யாந்யா ஶில்பநைபுணம்" [வி. பு. 1—19—41] [எந்த அறிவு மோக்ஷத்துக்குக் காரணமாகிறதோ அதுவே உண்மையான அறி வாகும். மற்ற அறிவெல்லாம் செருப்புத் தைத்தல் போன்ற கைத் தொழில் திறமையேயாகும்] "தத்₃ ஜ்ஞாநம் அஜ்ஞாநம் அதோऽந்யது₃க்தம்" [வி. பு. 6-5-87] [பரம்பொருளை அறிவதற்கும், காண் பதற்கும், அடைவதற்கும் எது உறுப்பாகிறதோ, அதுவே உண் மையான அறிவாகும். மற்ற அறிவனைத்தும் அறிவின்மையை ஒத்ததே என்று சொல்லப்படுகிறது] "ஏதஜ்ஜ்ஞாநமிதி ப்ரோக் தம் அஜ்ஞாநம் யத₃தோऽந்யதா₂" [கீ₃தை 13--11] [இங்கு சொல்லப்பட்ட 'அமாநித்வம்' முதலான கு₃ணங்களை அறிவதே உண்மையில் அறிவெனச் சொல்லப்படுகிறது. இதுக்கு மாறுபட்ட அறிவனைத்தும் அறிவுக்கு விரோதி₄யேயாகும்] என்று சொல்லப்பட்ட ரீதியில் மற்ற அறிவுகளெல்லாம் அறிவின்மையை யும் ஜ்ஞாநவிரோதி₄களையும் ஒத்தவை என்று கருத்து.

स्यादित्यर्थः । अनेन श्लोकेनानन्तरोक्तं पुरुषोत्तमविषयं ज्ञानं शास्त्रजन्यमेवैतत्सर्वं करोति, न तत् साक्षात्काररूपमित्युच्यते ॥ २० ॥
इति श्रीभगवद्रामानुजविरचिते श्रीमद्गीताभाष्ये पञ्चदशोऽध्यायः ॥ १५ ॥

(க்ருதக்ருத்யஶ்ச) என்னை அடைய விரும்புகிறவனால் அனுஷ்டி₂க்கத்தக்கது எதுவோ அது அனைத்தும் இந்தப் புருஷோத்தம வித்₃யையை அறிந்தவனால் செய்யப்பட்டதாகிறது. மோக்ஷமடைய விரும்புகிறவனைப்பற்றிய பிரகரணமாகையாலே, இங்கு க்ருத்ய ஶப்₃த₃ம் அவன் கைக்கொள்ளவேண்டிய கர்மங்களைக் குறிக்கிறது. அக்கர்மங்களே "தத் கர்ம யந்ந ப₃ந்த₄ாய" [வி. பு. 1-19-41] [எந்தக் கர்மம் ஸம்ஸாரப₃ந்த₄த்துக்குக் காரணமாகாமலிருக்கிறதோ அதுவே உண்மையில் கர்மமாகும்] என்று கைக்கொள்ளத்தக்கவையாகப் புகழப்பட்டன. "ஆயாஸாயாऽபரம் கர்ம"[வி.பு.1-19-41] [மற்ற கர்மம் அனைத்தும் தே₃ஹஶ்ரமத்துக்கே உறுப்பாகிறது] என்று மற்ற கர்மங்கள் கர்மம் எனத்தகாதவை என்று இகழப்பட்டன. ஆகையால், 'க்ருதக்ருத்ய' ஶப்₃த₃த்துக்கு இப்படியே பொருள் கொள்ளவேண்டும். இங்கு பின்வரும் கேள்விகள் எழுகின்றன:- (1) இங்கு புருஷோத்தம வித்₃யையோ அல்லது அது பற்றிய அறிவோ புகழப்படுகிறது; அப்படியிருக்கையில் 'ஶாஸ்த்ரம்' என்று கூறுவானேன்? (2) முன்ஶ்லோகத்திலும் இதே அர்த்த₂த்தைச் சொல்லியிருக்கும்போது இங்கு அதே அர்த்த₂த்தைச் சொல்லுவது புநருக்தியாகாதா? என்பதே அக்கேள்விகள். இங்கு 'ஶாஸ்த்ரம்' என்று கூறியிருந்தபோதிலும், "ஏதத்₃பு₃த்₃த்₄வா" என்கையாலே பொருளோடு கூடிய ஶாஸ்த்ர ஜ்ஞாநமே புகழப்படுகிறது. ஆகையால், அர்த்த₂ ஜ்ஞாநத்துக்கே இங்கு சிறந்த ப₂லம் சொல்லப்படுகிறது 'ஶாஸ்த்ரம்' என்று எடுத்ததற்குக் கருத்து என்ன? எனில்: ஶாஸ்த்ரமாத்ரத்தாலுண்டான புருஷோத்தம ஶப்₃த₃ார்த்த₂ ஜ்ஞானத்துக்கே இங்கு சொல்லப்படும் ப₂லம் உண்டு; ஶாஸ்த்ரத்தால் புருஷோத்தமனை அறிந்து அவனை ஸாக்ஷாத்கரிப்பதால்தான் இப்ப₂லம் கிடைக்குமென்று கொள்ளவேண்டியதில்லை என்று கருத்து. "ஸர்வவித்" (19) "ஏதத்₃பு₃த்₃த்₄வா பு₃த்₃தி₄மாந் ஸ்யாத்" (20) என்று இரண்டிடத்திலும் ஒரே அர்த்த₂ம் சொல்லப்படுகிறதாயினும், "ப₄ரதகுலத்துதித்தவனே! இதை அறிந்து நீயும் க்ருதக்ருத்யனாவாய்" என்று அர்ஜுனன் விஷயமாக முடிக்கிறதாகையாலே புநருக்தியில்லை. 20.

ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி த₃ாஸன் இயற்றிய
கீ₃தார்த்த₂ விவரணத்தில் பதினைந்தாமத்தியாயம் நிறைவுற்றது.

பகவத் கீதை வெண்பா

(பதினைந்தாம் அத்தியாயத்தின் ஸாரத்தைக் கூறும் பாசுரம்)

ஏலும் புருடோத் தமனென வேற்றத்தைச்
சால விறைவனே தானுரைத்த — மேலான
கீதை பதினைந்தா மோத்துக் கெழுமிகுசீர்ப்
போதப் பொருளுரைத்தோம் பூண்டு.

வாதி3கேஸரி ஜீயர் அருளிய பகவத்கீதை வெண்பாவில்
பதினைந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

ஏலும் புருடோத்தமனென ஏற்றத்தை — தனக்குத்தகுந்ததாயிருக்கும் 'புருஷோத்தமன்' என்னும் பொருத்தமான பெயரைப் பெற்றிருக்கும் சிறப்பை, இறைவனே தான் — ஸர்வேஶ்வரனான கண்ணன் தானே, சால உரைத்த — நன்றாகச்சொன்ன, மேலான கீதை பதினைந்தாம் ஓத்து — கீ3தையின் சிறந்த பதினைந்தாம் அத்தியாயத்தினுடைய, கெழு மிகு சீர் போதப் பொருள் — நிறைந்ததாய், சிறப்புற்றதான ஞானப்பொருளை, பூண்டு உரைத்தோம் — வெண்பாவில் இட்டுச் சொன்னோம்.

கீதார்த்த சங்கிரகம்

(ஸ்ரீவேதாந்த தேசிகர்)

பதினைந்தாமத்தியாயத்தின் ஸாரப்பொருள்

15. மூவெட் டினுமதின் மோக மடைந்த வுயிர்களினு(ம்)
நாலெட் டெழுத்தொடு நல்வீடு நண்ணின நம்பரினு(ம்)
மேலெட்டு வன்குண விண்ணோர் களினும் விசயனுக்குத்
தாவிட் டுலகளந் தான்றனை வேறென்று சாற்றினனே

தாவிட்டு உலகு அளந்தான் — (திரிவிக்கிரமாவதாரத்தில்) தாவி உலகத்தை அளந்த எம்பெருமான், விசயனுக்கு — அர்ஜுநனுக்கு, மூவெட்டினும் — இருபத்துநான்கு தத்துவங்களாகிய அசித்திற்காட்டிலும், அதில் மோகம்

அடைந்த — அந்த அசித்தின் தொடர்பால் அஜ்ஞாநத்தைப் பெற்றுள்ள, உயிர்களினும் — (ப₃த்₃த₄) ஜீவர்களைக் காட்டிலும், நா எட்டு எழுத்தொடு — நாவினால் உச்சரிக்கப்பட வேண்டிய திருவஷ்டாக்ஷரத்(தின் அநுஸந்த₄ாநத்)தால், நல் வீடு நண்ணினை — சிறந்த மோக்ஷத்தைப் பெற்ற, நம்பரினும் — உயர்ந்தவர்(களான முக்தர்) களைக்காட்டிலும், மேவு எட்டு வன்குண விண்ணோர்களினும் — பொருந்திய (பாபமின்மை முதலிய) எட்டு வலிய கு₃ணங்களையுடைய நித்யஸூரிகளைக் காட்டிலும், த(ன்)னை வேறு என்று — தன்னை வேறுபட்டவன் என்று, சாற்றினன்-உபதேசித்தான்.

கீ₃தாஸ்லோகார்த்த₂ச் சுருக்கம்

பதினைந்தாம் அத்தியாயம்

ஶ்லோ அர்த்த₂ம்

1. ஸம்ஸாரம் ஓர் அரசமரமாக உருவகப்படுத்தப்பட்டு அதை அறிந்தவனே வேத₃த்தை நன்கறிந்தவன் எனப்படுகிறது.

2. முற்கூறிய உருவகம் மேலும் நீட்டிக்கப்படுகிறது.

*3. இந்த மரத்திற்கு கு₃ணங்களில் பற்றே காரணமென்றும் குணங்கடந்த நிலையாலேயே இது அழிகிறதென்றும், அஜ்ஞானமே இதற்கு ஆத₄ாரமென்றும் ஸம்ஸாரிகளால் அறியப்படுவதில்லை.

3*-*4. நல்லறிவால் விளைந்த 'கு₃ணங்களில் பற்றின்மை'யாகிற ஆயுத₄த்தாலே இம்மரத்தைவெட்டி, ப்ராப்யமான ஆத்மா தேடத்தக்கது.

4*. எம்பெருமானை ஶரணமடைவதன் மூலமே பற்றின்மையாகிற ஆயுத₄த்தைப் பெற்று ஸம்ஸாரத்தை வெட்டி வீழ்த்தலாம்.

5. எம்பெருமானை ஶரணமடைந்தவர்களுக்கு தே₃ஹாத்மமயக்கம் நீங்குகை, கு₃ணங்களில் பற்றை வெல்லுகை, ஆத்மஜ்ஞானத்தில் எப்போதும் ஈடுபட்டிருக்கை, மற்ற விஷயங்களில் விருப்பம் நீங்கப்பெற்றவர்களாகை, இன்ப துன்பங்களாகிற இரட்டைகளிலிருந்து விடுபடுகை முதலானவை அனைத்தும் எளிதாகி ஆத்மாநுப₄வமாகிற ப₂லமும் ஸித்₃தி₄க்கிறது.

6. பரிஶுத்3த4ாத்ம ஸ்வரூபத்தின் பெருமை.

7. எம்பெருமானுடைய செல்வமாயிருக்கும் ஸம்ஸாரி ஜீவன் தான் சேர்த்து வைத்திருக்கும் புண்யபாபரூபமான விலங்குகளாலே வலியக்கட்டப்பெற்று, தன் ஶரீரமாகிற சிறையிலே அடைபட்டிருக்கிறான்.

8. அவன் ஒரு ஶரீரத்திலிருந்து மற்றொரு ஶரீரத்தில் புகுவது முதலான துன்பங்களை அனுப4விக்கிறான்.

9. இந்த்3ரியங்களைக் கொண்டு அவன் விஷம் கலந்த தேன் போன்ற ப்ராக்ருத விஷயங்களை அனுப4வித்து உழலுகின்றான்.

10. இத்துன்பங்களையெல்லாம் அவன் அனுப4விப்பதற்குக் காரணம் ஆத்மாபஹாரமாகிற திருட்டே. இவன் தன் ஸ்வரூபத்தை அறியாமைக்குக் காரணம் தே3ஹத்தையே ஆத்மா என்று மயங்குவதே. இந்த மயக்கமில்லாமல் அறிவுக்கண்ணையுடையவர்கள் ஆத்மாவை அறிவே வடிவெடுத்ததாகக் காண்கிறார்கள்.

11. முன் ஶ்லோகங்களின் விளக்கம்.

12,13 14 ஸூர்யன், சந்திரன், அக்3னி முதலானவற்றுக்குள்ளதான பொருள்களைப் பிரகாஶிக்கச் செய்யும் ஶக்தியும், பூ4மியின் தா4ரணஶக்தியும், சந்திரனின் போஷணஶக்தியும் ஜாட2ராக்3னியின் ஜீர்ணம் செய்யும் ஶக்தியும் இதுபோல் உலகிலுள்ள எல்லாப்பொருள்களுக்குமுள்ளதான ஒவ்வொரு கார்யத்தைச் செய்யும் ஶக்திகளும் எம்பெருமானுடையவையே, ஆகையால், பிராக்ருதப்பொருள்கள் எல்லாமே எம்பெருமானின் செல்வமே.

15. எல்லாப்பொருள்களையும் எம்பெருமானோடு ஒரே வேற்றுமையில் படிப்பதற்குக் காரணம் அவன் அனைவருடைய ஹ்ருத3யத்திலும் எழுந்தருளி நியமிப்பதே. வேத3ங்கள் இவ்வர்த்த2த்தைச் சொல்லுகின்றன. எல்லா வேத3 வாக்யங்களாலும் முக்கியமாக அறியப்படுபவனும் அவற்றில் சொல்லப்பட்ட கர்மங்களுக்குப் ப2லம் அளிப்பவனும் எம்பெருமானே.

16. புருஷோத்தம வித்3யையின் தொடக்கம். க்ஷரபுருஷனாகிற ஸம்ஸாரி ஜீவன் அக்ஷரபுருஷனாகிற முக்தன் என்று ஜீவர்கள் இருவகைப்படுவர்

17. அசித், ஸம்ஸாரிஜீவன், முக்தன் என்னும் மூன்று பொருளையும் வியாபித்து, தாங்கிநின்று, நியமிக்கும் பரமாத்மாவாகிற உத்தமபுருஷன் முற்கூறிய க்ஷராக்ஷர புருஷர்களைக் காட்டிலும் வேறுபட்டவன்.

18. ஸம்ஸாரி ஜீவனைக் கடந்து நிற்பதாலும் முக்தனைக் காட்டிலும் மேலானவனாயிருப்பதாலும் ஶ்ருதிஸ்ம்ருதிகளில் "புருஷோத்தமன்" என்று பெயர் பெற்றவன் எம்பெருமானே.

19. இந்தப் புருஷோத்தம வித்₃யையை அறிந்தவன் எல்லா மோக்ஷோபாயங்களையும் அறிந்தவனாகிறான். ப₄க்தி வகைகள் அனைத்தாலும் ப₄க்தியைச் செய்தவனாகிறான்.

20, "உன் தகுதியைப் பார்த்து இந்தப் பரமரஹஸ்யமான ஶாஸ்த்ரத்தை உனக்கு உபதே₃ஶித்தேன். இதை அறிந்து அறியவேண்டியதனைத்தையும் அறிந்தவனாகவும், செய்யவேண்டியதனைத்தையும் செய்தவனாகவும் ஆவாயாக" என்று அர்ஜுனனுக்குக் கண்ணன் உபதே₃ஶித்து அத்தியாயத்தை நிறைவுபடுத்துகிறான்.

பதினைந்தாமத்தியாயத்தின் கீ₃தாஶ்லோகார்த்த₂ச் சுருக்கம் நிறைவுற்றது.

ஒன்பது முதல் பதினைந்து ஈறான அத்தியாயங்களின் ஸாரப்பொருள்

[எட்டாவது அத்தியாய வியாக்யானத்தின் இறுதிப் பக்கத்தின் தொடர்ச்சி]

9. எம்பெருமானுடைய பெருமை, மனிதனாயிருக்கும் போதே மேன்மையுடையவனாயிருக்கை, ஜ்ஞானிகளுக்குள்ள சிறப்பு, ப₄க்தியோக₃மெனப்படும் உபாஸனம் ஆகியவை விளக்கப்பட்டது.

10. ஸாத₄னப₄க்தி உண்டாகி வளர்வதற்காக, தனது கல்யாண கு₃ணங்கள் அளவற்றவை என்றும், எல்லாப் பொருள்களும் தனக்கு வசப்பட்டவை என்றும் விரிவாக உபதேசிக்கப்பட்டது.

11. தன்னை உள்ளபடி காண்பதற்குரிய ஞானக்கண் அர்ஜுனனுக்குக் கண்ணனால் கொடுக்கப்பட்டதைச் சொல்லுகிறது. ப₄க்தியினாலேயே பரம்பொருளை அறிவது, காண்பது, அடைவது ஆகியவை உண்டாகும் என்று சொல்லுகிறது.

12. ஆத்மோபாஸனத்தைக் காட்டிலும் ப₄க₃வதுபாஸனமாகிற ப₄க்தியின் சிறப்பு, அந்த ப₄க்திக்கு உபாயங்கள், ப₄க்தியில் சக்தியில்லாதவனுக்கு ஆத்மோபாஸனமே கைக்கொள்ளத்தக்கது, கர்மயோக₃ம் முதலானவற்றுக்கு வேண்டிய கு₃ணங்களின் வகைகள், ப₄க்தனிடம் எம்பெருமானுக்குள்ள மிகுந்த உகப்பு ஆகியவை விளக்கப்படுகின்றன.

13, தே₃ஹத்தின் ஸ்வரூபம், ஜீவாத்ம ஸ்வரூபத்தை அடைவதற்கு உபாயம், ஆத்மாவை ஆராய்ந்து அறிதல், ஆத்மாவுக்கு அசித்தோடு தொடர்பு ஏற்படுவதற்குக் காரணம், ஆத்மாவை அசித்திலிருந்து பிரித்து அனுஸந்தி₄க்கும் முறை ஆகியவை விளக்கப்படுகின்றன.

14. ஸத்வ ரஜஸ் தமோ கு₃ணங்கள் ஸம்ஸார ப₃ந்த₄த்துக்குக் காரணமாகும் முறை, அந்த கு₃ணங்களே ஜீவனுடைய செயல்களுக்குக் காரணமாயிருக்கின்றன என்னும் விஷயம், அந்த கு₃ணங்களைச் செயலற்றதாக்கும் முறை, ஐஶ்வர்யம் கைவல்யம் ப₄க₃வத்ப்ராப்தி என்னும் மூன்று ப்ராப்யங்களும் எம்பெருமானிடமிருந்தே கிடைக்கின்றன என்னும் விஷயம் ஆகியவை விளக்கப்படுகின்றன.

15. அசேதனமான ப்ராக்ருத சரீரத்தோடு சேர்ந்திருக்கும் ப₃த்₃த₄ ஜீவனைக் காட்டிலும், ப்ராக்ருத சரீரத்திலிருந்து விடுபட்டுப் பரிசுத்தியடைந்த முக்த ஜீவனைக் காட்டிலும், புருஷோத்தமனான நாராயணன், அவர்களை வியாபித்து நிற்கையாலும், தாங்குகையாலும், உடையவனாயிருக்கையாலும் வேறுபட்டவன் என்னும் புருஷோத்தம வித்₃யை உபதேசிக்கப்பெற்று, அதற்குப் ப₂லனும் சொல்லப்படுகிறது. அத்தியாயத்தின் தொடக்கத்தில் ஸம்ஸாரம் ஓர் அரசமரமாக உருவகப்படுத்தப்பட்டு, அதை வெட்டும் முறை விளக்கப்படுகிறது.